E-ISSN: 2581-7140

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

INTERNATIONAL JOURNAL OF TAMIL LANGUAGE AND LITERARY STUDIES (Ijtlls)

A Bi-Yearly Peer-Reviewed International Journal

திருவள்ளுவர் கல்லூரி - பாபநாசம்

ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி - திருநெல்வேலி

பாத்திமா கல்லூரி - மதுரை

பாரதிதாசன் பல்கலைக்கழகம் - திருச்சி

பிரபா இலக்கியப் பதிப்பகம் - சங்கரன்கோவில்

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் - மலேசியா

இணைந்து நடத்தும் மாபெரும்

பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்

நாள் : 12.05.2019 – 16.05.2019

நிகழிடம் : சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம் - மலேசியா

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

LIFE ETHICS EVINCED IN TAMIL LITERATURE

சிறப்பிதழ் 2 : தொகுதி - 2 மே 2019

SPECIAL ISSUE II : VOL – 2, MAY 2019

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

LIFE ETHICS EVINCED IN TAMIL LITERATURE

PUBLISHER: D. Maheswari,
3/350, Veterinary Hospital Back side,
Virudhunagar – 626001.
Mobile: 8526769556
Mail: maheswari@ijtlls.com
dmakesh88@gmail.com, ijtllsetamiljournal@gmail.com

PUBLISHER'S MESSAGE

Aim & Objectives

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-Reviewed International Journal published twice in a year on July and January, which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. It also publishes **Literary Druid, for English Language and Literature (Online)** to foster research in the domain areas**.**

International Journal for Tamil Language and Tamil Studies aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of Tamil Language and Literature. Research through this medium is motivating in all aspects of main and inter-disciplines by consequent projects and e-publication. Making Internationalization of the research works in the globalized world aid the scholarly community to develop scholarly profile in research through the quality of publications. The audacity and vision of academic research on internet could foster green printing and open access nature in research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of the world.

Disclaimer

International Journal for Tamil Language and Tamil Studies is committed to research Ethics and consider plagiarism as a crime. The authors are advised to adhere academic ethics with respect to acknowledgment of quotations from other works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions ought to be original, must accompany the declaration form stating your research paper as an original work, and has not been published elsewhere for any research purpose. The contributor will be the sole responsibility for such lapses on any legal issues and publication ethics.

Contact ijtllsetamiljournal@gmail.com for submission and other information. See www.ijtlls.com for guidelines.

D. Maheswari
Publisher and Director

Message from the Editor-in-Chief

International Journal for Tamil Language and Tamil Studies is an online Peer-reviewed International Journal of Tamil Language and Literature which is committed to academic research, welcomes scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas. The journal welcomes publications of quality papers on the domain area.

Research ought to be active to create a major frontier in the academic world. It must augment the neo-theoretical frame that facilitates re-evaluation and augmentation of existing practices and thoughts. In due course, this will effect in a prime discovery and lean to the knowledge acquired. Research is to establish, substantiate facts, restate previous works ant to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal.

D. Maheswari

வாழ்த்துரை



முனைவர்.சு.சுந்தரம்

முதல்வர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

14.05.2019 - செவ்வாய்க்கிழமை திருவள்ளுவர் கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர்.அ.பாக்கியமுத்து சுல்தான் இட்ரிசு கல்வியல் பல்கலைக்கழகம் மலேசியாவில் நடத்தும் "தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்" என்ற பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கத்தை மனதார வாழ்த்துகிறேன். முயற்சி, ஆர்வம், வேகம் இவரிடம் இருப்பதைப் பார்க்கிறேன். பல நாடுகளில் உள்ள பேராசிரியர்கள் கட்டுரையாளர்கள் தொடர்பு இவருக்கு உள்ளது. இந்த கருத்தரங்கம் வழியாக வெளிவரும் ISSN- ஆய்விதழ், இலக்கியக் கட்டுரைகள் எல்லோருக்கும் பயன் உள்ளதாக அமையும் என நம்புகிறேன். சமீபத்தில் பணிக்கு வந்த பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (IJTLLS) மூலமாக கட்டுரை பதிப்பு பெறுவது என்பது சிறப்பு. முதல்வர் என்ற முறையில் கட்டுரை எழுதிய பேராசிரியர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்னும் பல நாடுகளில் நடக்கும் கருத்தரங்குகளில் பங்குபெற்று தமிழை வளர்க்க, அநேக ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுத உங்களைத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டுகிறேன். இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த எங்கள் கல்லூரியோடு இணைந்த அனைத்துக் கல்லூரி நிர்வாகம், முதல்வர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மலேசியா சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கும் நன்றி.

நன்றி

அன்புடன்

முதல்வர்.சு.சுந்தரம்

பாராட்டுரை



உயர்திரு.இரா.நடராஜன்

நிர்வாக அலுவலர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

எம் கல்லூரியில் பணியாற்றும் முனைவர்.அ.பாக்கியமுத்து, தமிழ்த்துறை இணைப்பேராசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது. பல கல்லூரிகளை இணைத்துப் "பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்" மலேசியாவில் நடத்தி ''தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்'' (IJTLLS) மூலமாக பேராசிரியர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயனுள்ள விதத்தில் கட்டுரைகளை அச்சிட்டு வெளியிடுகிற இந்தக் கருத்தரங்கம் சிறப்புக்குரியது; பராட்டுக்குரியது. பல வெளிநாட்டுக் கருத்தரங்குகள் நடத்தியவர். வெளிநாட்டுக் கருத்தரங்குகளில் பங்கு பெற்றவர். இன்னும் பல கருத்தரங்குகள், தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தி வெற்றி காண வாழ்த்துகிறேன். கட்டுரை வழங்கிய ஆய்வாளர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள். நன்றி, வாழ்க! வளமுடன்!

நட்புடன்

இரா.நடராஜன்

அணிந்துரை



முனைவர்.ச.சதாசிவம்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைகிறித்தவக் கல்லூரி
தாம்பரம், சென்னை

தாமிரபரணி நதி தவழ்ந்து விளையாடுகிற நெல்லைச் சீமையில் கல்விப்பணியில் தன் நிகரற்று விளங்கும் பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியின் தமிழ்த்துறையோடு மலேசியா சுல்தான் இட்ரிஸ் கல்வியல் பல்கலைக்கழகம், திருநெல்வேலி ராணி அண்ணா அரசினர் மகளிர் கல்லூரி தமிழ்த்துறை, பாத்திமா மகளிர் கல்லூரி தமிழ்த்துறை, பிரபா இலக்கியப் பதிப்பகம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து "தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் எனும் பொருண்மையில் பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம் நடத்த திட்டமிட்டு செவ்வனே நிறைவேற்றியிருப்பது தமிழ்கூறு நல்லுலகிற்கு மிகுந்த பயன் நல்குவதாகும்.

ஆய்வாளர்களின் தரம் மிக்க ஆய்வுக் கட்டுரைகளை "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (IJTLLS) மூலமாக முறையே வெளியிட்டு தனது ஆரோக்கியமான பயணத்தால் ஆய்வுலகிற்குப் பெருமை சேர்த்து வருகிறவர் முனைவர்.அ.பாக்கியமுத்து.

நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளைப் பெற்று நூலாக்கம் செய்து வெளியிடுவது என்பது அசாத்தியமானது. எப்போதும் இல்லாத அளவிற்குத் தற்போது ஆய்வாளர்கள் எண்ணிக்கை அதிகம். தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் பெருமை சேர்க்கும் விதமாய் இன்றைய ஆய்வுகள் வீறு நடைபோடுகின்றன. இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. அக்கண்ணாடியின் வாயிலாக நம் முன்னோர்களின் வாழ்வு பிரதிபலிப்பதைக் காணலாம். நன்மை தீமைகளை அறிந்து வாழலாம். தொன்மை எனும் ஆணிவேரில் இருந்துதான் மலர்கள் எனும் இன்றைய புதுமைகள் காட்சியளிக்கின்றன.

புதிய வாழ்க்கை கற்றுத்தந்த பாடத்திலிருந்து புதிய வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ளலாம். காலச் சூழலுக்கேற்ப பழையனக் கழிந்து புதியன புகுந்து இலக்கியத்தையும் மக்கள் வாழ்வையும் வளப்படுத்துதல் வேண்டும். இக்கருத்தரங்கின் முதன்மை அமைப்பாளர் முனைவர்.அ.பாக்கியமுத்து அவர்கள் தனது

அன்பாலும், அரவணைத்துச் செல்லும் பண்பாலும் அனைவரின் மனதிலும் இடம் பிடித்தவர். இலங்கைப் பயணத்தின் போது முனைவர் இ.பாக்கியமுத்து அவர்களின் வருகை எங்கள் அனைவருக்கும் மகிழ்வை அளித்தது. ஒவ்வொரு பணியையும் முன் நின்று திறம்படச் செய்து முடித்தல் என்பது அவருக்கு கைவந்த கலை. முனைவர் அ.பாக்கியமுத்து அவர்களின் இக்கருத்தரங்கு பணி சிறந்தோங்க நாம் அனைவரும் அவருக்கு உறுதுணையாக நிற்போம்.

இக்கருத்தரங்கில் **முனைவர் அ.பாக்கியமுத்து** அவர்களுக்கு உறுதுணையாக நின்ற முனைவர்.இரா.உமாதேவி, முனைவாசெ.வில்சன், ஜெ.சந்திரகலா, முனைவர் டயானாகிறிஸ்டி ஆகியோரின் தமிப்பணி சிறக்கட்டும்.

காலங்கடந்து நிற்கும் பணியைத் திருவள்ளுவர் கல்லூரியின் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **முனைவர் அ.பாக்கியமுத்து** அவர்கள் செய்து முடித்திருப்பது போற்றத்தக்கது அன்னாரின் தமிழ்ப்பணி மேலும் சிறக்க இறையருள் கிட்டட்டும்.

நட்புடன்

சு.சதாசிவம்
செம்மூதாய் பதிப்பம், சென்னை

வாழ்த்துரை



நந்திரவம். பா.சம்பத் குமார்
துணைத்தலைவர்
தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பாளர்கள் சங்கம் (கில்டு)
தி.நகர், சென்னை

எல்லா கல்லூரிகளிலும் வரலாற்றுத்துறை உண்டு. பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரிக்கு என சிறப்பான வரலாறே உண்டு. வற்றாத நதியாக வளம் வரும் இடமான பொதிகைச் சாரலில், இயற்கை எழில் கொஞ்ச ஒய்யாரமாய் வீற்றிருக்கிறது. மடங்கள் பொதுவாக, ஆன்மிகத் தொண்டினையே முதன்மையாக நோக்கும்.

ஆனால், தவத்திரு.குன்றக்குடி அடிகளாரின், சீர்தமிழ் பற்றினால், மக்கள் பணியே, மகேசன் பணியெனக் கொண்டு, எளியோரின் அறிவுக் கண்களைத் திறக்க, கல்லூரியை நிறுவி, பாதை வகுத்து, வழிகாட்டி இருக்கிறார். தமிழ் மணக்கும் அடிகளாரின் வழியில், தவத்திரு.பொன்னம்பல தேசிக அடிகளாரும் சமூகப் பணியில் தொடர்ந்து பயணிப்பது பாராட்டிற்கு உரியது.

அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தாகக் கொண்டு, 52 – ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் திருவள்ளுவர் கல்லூரி – தமிழ்த்துறையின் சார்பில், ஆற்றி வரும் பணிகள் ஏராளமாகும்.

“பிறப்பொக்கும்” வள்ளுவம்தனை உலகினுக்கே உணர்த்திய திருவள்ளுவர் பெயர் தாங்கிய கல்லூரி என்பதும் வெகுச்சிறப்பு. சிலர் தமிழினக் கூறுகளைத் திட்டமிட்டு புதைத்திட எண்ணிடும் வேளையில், இலக்கியங்களில் புதைந்துள்ள வைரக் கருத்துக்களை வெளிக்கொணர, பன்னாட்டுக் கருத்தரங்கம், மலேசியாவில் நடத்திடுவது மெய்யாகவே மெச்சக்கூடியது.

பன்னாட்டுக் கருத்தரங்கின் வாயிலாக, எண்ணிலா ஆய்வுக் கருத்துக்களைத் தங்களது கல்லூரி மாணவர்களுக்கும் சேர, மடைமாற்றி பயனடைய இணைத்து, உயிரெனத் தனக்குள் ஓடவிட்டு, வாழ்வியலாகவும் மாற்றலாம்.

இரண்டாவதானக் கருத்தினையே, முதன்மையாக் கொண்டு, செயல்பாட்டு நிலையில் பயனுள்ளதாக்கி, அடுத்த தலைமுறைக்கு இலகுவாகக் கொண்டுபோய் சேர்த்து இருக்கிறார்கள். தமிழரின் புதுமையான சிந்தனைகளின் வாழ்வியலை அடையாளப்படுத்தி இருக்கிறார்கள்.

உதட்டளவில் உச்சரித்துச் செல்வோர் மத்தியில், உண்மையோடு அனைவரின் வாழ்வினில் பிணைக்க, உறுதியான செயலை நிறுவியும் இருக்கிறார்கள் புரியாமலேயே, சடங்காய் போய்க்கொண்டிருக்கும் சமூகத்தின் சங்கடத்தைத் தீர்க்க முனைப்புக் காட்டியது உளப்பூர்வமான பாராட்டிற்குரியது.

திறனாளர்களுக்கு வாய்ப்பையும், பயனாளர்களுக்கு வழியையும் ஒருசேரக் காட்டியது கருத்தரங்கக் குழுவினரின் உள்ளார்ந்த திறனையும், மதிநுட்பத்தையும் வெளிப்படுத்தி உள்ளது.

இச்சீரிய முயற்சியை எடுத்த கல்லூரி நிறுவனர் தவத்திரு.அடிகளார் அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் க.சுந்தரம் அவர்களுக்கும், கருத்தரங்க அமைப்பாளரும், தமிழ்த்துறை இணைப்பேராசிரியருமான முனைவர்.அ.பாக்கியமுத்து அவர்களுக்கும் மற்றும் துணையானோர் அத்துணை பேருக்கும் பாராட்டுக்கள், மேன்மையான பணிகள் தொடர, செழிக்க வாழ்த்துக்கள்.

நந்திரவம்.பா.சம்பத்குமார்
துணைத்தலைவர்

அணிந்துரை



முனைவர் அரு உமா தேவராஜன்

இயக்குநர்

Dr.APJ.அப்துல்கலாம் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மையம், சேலம்.

'தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்' என்ற இந்த மலேசியா பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்க ஆய்வு கோவை இப்பொழுது உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்நூலின் கட்டுரைகள் 'இலக்கியம்' என்னும் இழையில் கோர்த்தமணிகளைக் கொண்ட அழகிய மாலையாகத் திகழ்கிறது.

நந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் ஒல்காப்பெரும் புகழ் பெற்றவை. இவை தமிழர் தம் அறிவுக் கருவூலம் உலக மாந்தரினம் வாழ வாழ்க்கை நெறிகாட்டி மக்களை மாக்களினின்று பிரித்து இருள் நீக்கும் காளாமணி விளக்கு ஒழுக்க உறையுள் விழுப்பெருமுழு மணிநாகரிகம், போர், குடி, படை, செல்வம், காதல் வாழ்வு, அன்புமுறை, நாடு, நகர்வளம் பிற யாவும் சுரந்து அறிவு வேட்கை ஆற்றும் வற்றாத ஊற்று, இத்தகு உயர் தனி இலக்கியங்களில் மனித வாழ்க்கை நெறிமுறைகள் என்ற ஆய்வு நோக்கை காணவேண்டும் எனும் வேட்கையே இப்பன்னாட்டுக் கருத்தரங்கின் தோற்றுவாய்.

இந்த தலைப்பைக் கருத்தரங்க குழுவினர் தேர்ந்தெடுக்கக் காரணம் வாழ்க்கையும் ஒழுக்கமும் கைக்கோர்க்க வேண்டும் என்ற அவாவே! உலக மக்கள் அனைவரும் நீடூழிவாழ நினைப்பது இயல்பே. எனினும் ஒழுக்கமும் மறந்தால் மனித மாண்பு மாறும். தொன்மம் நாடுவோர் ஒழுக்கத்தை ஏற்க மறுத்தால் வளர்ச்சி குன்றும். இவ்விரண்டும் இணைந்து பயணித்தால் மட்டுமே வாழ்வு வளம் பெறும். செய்திகளை வேட்டையாடும் ஆய்வு முறை அறிவியல் துறைக்கு ஏற்புடையது. இலக்கியத்துறைக்கு எவ்வாறு ஏற்புடையது? உணர்வு என்னும் உயர்நிலை வெளிப்பட வாய்ப்பில்லை. தமிழறிஞர்கள் உணர்வது உணர்த்த நினைப்பதும் தேவை அன்றோ? உணர்வுக்கூறுகளை வெளிப்படுத்த செய்திகள் உறுதுணையானால் இரண்டும் ஒன்றைஒன்று தழுவி நிற்குமானால் ஆய்வு வலுப்பட்டு நிற்கும். அந்த நம்பிக்கையில்

கருத்தும் காட்சியும் இணைகின்றன. சில கட்டுரைகள் செய்தியில் கவனம் செலுத்தும். சில உணர்வின் ஊற்றையே நாடும். சில இரண்டையும் இணைத்துப் பார்ப்பதற்கு இடமளிக்கும். இவற்றை ஒரு சேரக்காண்பதே கருத்தரங்க ஆய்வு நூலின் கருத்தாகும். "தமிழ் மொழிக்குயர் மொழிதரணியிலுள்ளதெனில் வெகுளியற்றிருப்பேன்". வண்ணச்சபரம் தண்டபாணி சுவாமிகள் கூறுவார். உயர்தனித் தமிழ்மொழியில் வாழ்க்கையினின்று தோன்றி வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கியங்கள் காலத்திற்கேற்பக் கோலம் கொண்டு விளங்குபவை. காலம் மாறும் பொழுது கருத்தும் மாறுவது இயல்பு. கருத்தின் மாற்றம் இலக்கியத்தைத் தோற்றுவிக்கிறது. மாறி வரும் காலத்திற்கு ஈடு கொடுக்க தமிழன்னை புதிய கவிஞர்கள், எழுத்தாளர்கள் என நவீன இலக்கியத்திற்கும் பிள்ளைகளை ஈன்று கொண்டேயிருக்கிறாள்.

ஆயிரக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டு அச்சாகின்றன.. எத்தகைய நூல்களைக்கற்க வேண்டும் என்று தீர்மானித்தல் கடினம். ''சில நூல்களை மேலோட்டமாகவும், சிலவற்றை ஆழ்ந்தும், சிலவற்றை அப்படியே மனதில் ஈர்த்தும் கற்க வேண்டும்" என்பார் பேக்கன். வள்ளுவம், 'கற்க கசடறக் கற்பவை' என்று அறிவுறுத்துவதை இங்கு நோக்கற்பாலது.

நம் வாழ்நாள் குறைவு. ஆனால் படைப்பாளர்கள் சங்க காலத்தில் படைத்த இயற்றியுள்ள இலக்கியங்களோ ஏராளம். அவை அனைத்தும் ஓதி உணர்வது அரிது. ஆனால் இது போன்ற ஓர் ஆய்வு நூலில் பன்முக இலக்கியங்களின் கருத்தையும் உணர்வையும் சுவையையும் ஆய்வுமுறையையும் புலமையையும் வெளிப்படுத்துபவை. பாராட்டத்தக்க இந்நூல் பலராலும் படிக்கப்பெறும். பாராட்டப்பெறும் என்பது என் விழைவு என் வேண்டுகோள். தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலினை ஏற்று வாழ்த்தும், போற்றும். கருத்தரங்க அமைப்பாளர் பதிப்பாசிரியர் முனைவர்.அ.பாக்கியமுத்து அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

முனைவர் அரு உமா தேவராஜன்

வாழ்த்துரை



முனைவர் கோ. உப்பிலி சீனிவாசன்
உதவிப் பேராசிரியர், தேர்வுத் துறை
சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

கல்வி சார்ந்து சமுதாயத்தின் மீது மட்டும் அக்கறை கொள்ளாமல், தமிழ் வளர்க்கின்ற சமுதாயத்தினையும் நேசித்தும், வளர்த்தும், கொண்டிருக்கின்ற நான்கு கல்வி நிறுவனங்கள் மற்றும் பதிப்பகம் - திருவள்ளுவர் கல்லூரி, தமிழ்த்துறை – பாபநாசம், மலேசியா சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம், பாத்திமா மகளிர் கல்லூரி – மதுரை – பாரதிதாசன் பல்கலைக்கழகம்- திருச்சி, பிரபா இலக்கியப் பதிப்பகம், சங்கரன்கோவில் மற்றும் “தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்” (IJTLLS) ஒரு புரட்சி இலக்கோடு இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்துவதில் பல்வேறு நன்மைகள் உள்ளன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

முதலாவதாக வேறுபட்ட அனுபவங்களின் சங்கமம் என்பதால் இக்கருத்தரங்கானது சீரும் சிறப்புமாக அமையும் என்பதைத் தொடர்ந்து மிகப் பெரிய பணியினை இவர்கள் பகிர்ந்து செய்வதால் பணிகள் பளுவின்றி தொய்வுமின்றி இனிதாகவே முடியும். வருங்காலங்களில் இது போன்ற கூட்டு முயற்சிகள் தொடர்ந்து நடைபெற இக்கருத்தானது முன்னோடியாக திகழ்ந்திருக்கிறது என்பதனைக் காணும்பொழுது மனது மட்டற்ற மகிழ்ச்சியை அடைகின்றது.

தமிழ் இலக்கியங்கள் தொன்மைகளையும், புதுமைகளையும் அக்காலம் தொட்டே இணைத்து வழிகளிலும் பல்வேறு முறைகளில் எடுத்துரைத்தன. அந்நோக்கோடு இம்மாநாட்டினை நடத்த திட்டமிட்டு செயல்பட்டு மாநாட்டுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்கள் ஒவ்வொன்றும் நம் வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள உதவும் இத்தருணத்தில் பயனுள்ள கட்டுரைகளை அளித்த பேராசிரியப் பெருமக்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு இனிதே நடைபெற்று அதன் நோக்கம் முழுமையாக நிறைவேற வாழ்த்துகிறேன்.

வாழ்த்தின் மகிழ்வில்

முனைவர் கோ.உப்பிலி சீனிவாசன்

பதிப்புரை



முனைவர். அ.பாக்கியமுத்து
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.
பதிப்பாசிரியர் - பிரபா இலக்கியப் பதிப்பகம்
ஆசிரியர் - "மருதம்" பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

"தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கத் தலைப்பை தேர்வு செய்ததில் இருந்து கருத்தரங்க நாள் வரை என்னோடு பணி செய்த இராணி அண்ணா கல்லூரிப் பேராசிரியர் முனைவர்.இரா.உமாதேவி, மதுரை பாத்திமா கல்லூரியில் பேராசிரியர் முனைவர்.இரா.டயானா கிறிஸ்டி, பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் ஜெ.சந்திரகலா, அண்ணாமலைப் பல்கலைக்கழக முனைவர்.செ.வில்சன் போன்ற ஒருங்கிணைப்பாளர்கள் என்னோடு சேர்ந்து மலேசியக் கருத்தரங்கம் சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு அளித்துள்ளார்கள். நன்றியை மனப்பூர்வமாகத் தெரிவிக்கிறேன். எம் கல்லூரி நிர்வாகம், முதல்வர், தமிழ்த்துறைத்தலைவர், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், அனைவருக்கும் நன்றி. கட்டுரை வழங்கிய தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பேராசிரியப் பெருமக்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும், வெளிநாட்டு கட்டுரையாளர்களுக்கும் நன்றி.

பிரபா இலக்கியப் பதிப்பகம், எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துதவியது. பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ் (மருதம்) 2019 மார்ச் இதழ் இந்த கருத்தரங்கத்தின் வழி வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சிறந்த இலக்கியக் கட்டுரைகள் "மருதம்" காலாண்டிதழ் பிரபா இலக்கிப் பதிப்பகம் வழியாக வெளிவர இருக்கிறது.

சங்க இலக்கிய நூல்கள், புராண நூல்கள், பக்தி இலக்கிய நூல்கள், காப்பிய நூல்கள், நாவல், சார்ந்த கட்டுரைகள் தந்துள்ளீர்கள். தரம் வாய்ந்த கட்டுரைகள் "தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்" (IJTLLS) மூலமாக வெளிவருவது சிறப்பு. அதற்காக பதிப்பாசிரியர் திருமதி. த.மகேஸ்வரி அவர்களுக்கும் நன்றி. இந்தக் கட்டுரைகள் அனைத்தும் எதிர்கால ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவும் என்பதில் ஐயம் இல்லை. மலேசியா மட்டுமல்ல பல

வெளிநாடுகளிலும் தமிழ்ப்பணி, தமிழாராய்ச்சி செய்யத் துவங்கியுள்ளேன். என்னால் இந்த தமிழுக்கு தமிழ் மக்களுக்கு, என்ன செய்ய முடியுமோ அதை எந்த வழியிலாவது செய்வதற்கு தயாராகி உள்ளேன். ஜாதி, மதம், மொழி, நாடு, தேசம் கடந்து தமிழில் தொலைதூரப் பார்வையோடு தமிழை உயர்த்த, தமிழ் வளர்க்க சிந்திப்போம். இனி, அடிக்கடி உங்களோடு நான், என்னோடு நீங்களாக மாறலாம். வாருங்கள் தமிழை வளர்க்கப் புறப்படுவோம்.

தமிழால் இணைவோம்

அறிவால் உயர்வோம்

வாழ்க தமிழ்

நன்றி

பதிப்புரை மற்றும் நன்றியுரை

திருமதி. த.மகேஸ்வரி,
இயக்குநர் மற்றும் பதிப்பாசிரியர் - IJTLLS,
தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்,
விருதுநகர் - 626 001.



தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக எமது **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS)** தம் இலக்கிய மற்றும் ஆராய்ச்சி அரும்பணியை செய்து வருகின்றது.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் என்ற பொருண்மையில் கருத்தரங்கம் நடத்தி அதை எமது ஆய்விதழ் வாயிலாக வெளிக்கொணர ஒப்புதல் அளித்த திருவள்ளுவர் கல்லூரி நிர்வாகம், முதல்வர், மற்றும் பிற பல்கலைக்கழக மற்றும் கல்லூரித் தமிழ்த்துறைத்தலைவர், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

இப்பன்னாட்டு கருத்தரங்கத்தின் ஓர் அங்கமாக **தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் (IJTLLS)** செம்மையாய் செயல்பட்டு ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் பதிப்பு செய்து உள்ளது. எதிர்காலத்தில் தமிழ் ஆராய்ச்சிகளை உலக அரங்கத்திற்கு எடுத்துச் செல்ல ஓர் ஆய்வுக்களமாக எமது இதழ் செயல்பட்டு வருகிறது. அதற்கு தமது உறுதுணை அளித்த அனைவருக்கும் நன்றி.

பன்னாட்டு கருத்தரங்கில் தமது ஆய்வை செம்மை நிறுத்தி தமிழ்மொழி, தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு மற்றும் கலாச்சாரம் போன்ற பொருண்மையில் கிடைத்த தரவுகள் கட்டுரைகளை வழங்கி சிறப்பித்த தமிழ் பேராசிரியர்கள், ஏனைய அனைத்து துறைப் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை மனதார பாராட்டுகிறோம்.

நன்றி

திருமதி. த.மகேஸ்வரி

இயக்குநர் மற்றும் பதிப்பாசிரியர் - IJTLLS

பொருளடக்கம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மொழி வளர்த்த பண்பாடு

Culture Developed by Language

முனைவர். எஸ். அலமேலுமங்காள், தமிழ்த்துறை,
உதவிப்பேராசிரியர், மீனாட்சி மகளிர் கல்லூரி, கோடம்பாக்கம், சென்னை-600024.

Abstract

The present article is an out come to decipher the role of Tamil Language in developing the Culture of the Tamils. Language is a system to communicate the feelings and emotions of among the people. Tamil Language, a rich Language of antiquity has shaped the culture of the Tamil people. Lots of literary works paved way to the existence of culture in all societies. Tamil society is no exception; it has its deep impact on the cultural development because Tamil Language is basically segregated as IYAL (Linguistics), ISAI (Music), NADAGAM (Drama). Through these trine divisions the culture was and is being spread through the language for the younger generations. Therefore, the article focuses on the related facts.

Keywords: Culture, Developed by Language, Tamil Culture

மனித நாகரிக வரலாற்றில் மொழிக்குரிய சிறப்பு வேறெதற்கும் இல்லை, மனிதனை விலங்கினின்று வேறுபடுத்துவது அவனது பகுத்தறிவாகும். இப்பகுத்தறிவை வளர்ப்பது மொழியே மனிதன் சமூகமாகக் கூடிவாழக் கருவியும் அதுவே: ஒருவரை யொருவர் புரிந்துகொண்டு வாழ்வதே பண்பாட்டு வாழ்வு. தன் கருத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தவும், பிறர் கருத்தைத் தானுணரவும் வழி வகுப்பது மொழியே, கடந்த காலத்து வாழ்க்கையின் உண்மைகளைக் காட்டுவதோடு, எதிர்கால வாழ்வுக்கும் வழிகாட்டுவது மொழியே. மனித இனத்தின் கண்டுபிடிப்புக்கள் அனைத்தையும் போற்றிக்காப்பதும் மொழியே இம்மொழி முதலில் எத்தனையோ குறைபாடுகளுடன் இருந்து காலப்போக்கில் திருத்த முற்று இன்றைய நிலையை அடைந்துள்ளது சொல்வளமும் இலக்கண வரம்பும் பெற்றுள்ளது மொழியின் வரலாறும் மனித நாகரிக வரலாறும் ஒன்றே, மொழியின் சொற்களும், வழக்குகளும், இலக்கணமும், பிற கூறுகளும் பண்பாட்டை விளக்க வல்லவனவாக அமைந்துள்ளன.

தமிழர் எழுத்துக்கட்கு உயிர் என்றும் மெய்யென்றும் பெயரிட்டனர். இ∴து அவர்களது அறிவு வளர்ச்சியைக் காட்டுவதாகும் உயிர் வேறு உடம்பு வேறு என்றும், உயிரே தனித்தியங்கக் கூடியது என்றும் பண்டையோர் உணர்ந்தனர் என்பதனை இது விளக்கும். உடம்பின் அடிப்படையில் தான் உயிர் தோன்றுகிறது. உடம்போடு உயிர் வந்து ஒன்றுகிறது. வாழ்வு தொடங்குகிறது. மொழியிலும் அப்படியே. உயிர் எழுத்திற்கு தனி வடிவம் உண்டு என்றாலும் மெய்யோடு சேரும்போது தன்வடிவம் கெடுகிறது உயிர் உடலோடு பொருந்தும் இயல்பினது என்பதனை “உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவதியல்பே” என்றார் தொல்காப்பியர். மேலும், “மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே” என்றும் கூறினார் எவ்வுடலில் இருப்பினும் உயிர் தனது இயல்பை இழக்காது என்பது நூலார் கொள்கை. இதனை “மெய்யோடியையினும் உயிரியல் திரியாது” என்றார். உயிர் கண்ணால் காணமுடியாத நுண்பொருள். உடலே உலகில் கட் புலனாவது மொழியிலும் இதே நிலை தான் “மெய்யின்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இயற்கை புள்ளியொடு நிலையல்'' ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' என்று கூறுவது காண்க.

உயிரும் மெய்யும் கூடினால் இயக்கம் ஏற்படுகிறது உடலோடு கூடிய உயிர் ஒரு நாள் நீங்குவது உலகியல். அவ்வாறு பிரியும் பொழுது உயிர் தனது இயல்போடு நிற்கிறது. ஐந்து பூதங்களின் கூட்டால் அமைந்த உடம்பும் அவ்வாறே அவ்வப்பூதத்தோடு சேர்கிறது ''மெய் உயிர் நீங்கின் தன் உருவாரும்'' என்ற நூற்பா இவ்வுண்மையை உணர்த்துகிறது உயிர் தானும் இயங்கி, தன் சேர்க்கையால் மெய்யையும் இயக்குகிறது. உயிர்களில் அடிப்படையானது அகரம் இ∴து எல்லா எழுத்துக்கட்கும் உயிராவதுபோல, இறைவன் தானே தனிப் பொருளாய் நிற்பதோடு அனைத்திலும் கலந்துள்ளான். இதனையே ''அகரமுதல எழுத்தெல்லாம்'' என்றார் நாயனார்.

மனிதருள் சாதி, சமயம், செல்வம், நாடு மொழி முதலியவற்றால் எத்தனையோ வேற்றுமைகள் உண்டு. இவர்கள் நாம் அடிப் படையில் மனிதரே என்ற உண்மையை உணராது இடர்ப்படுகின்றனர். தமக்குள் சண்டைகள் செய்து உழல்கின்றனர். தமிழ் மொழி எழுத்துக்கள் இனவேறுபாட்டைக் கடந்து வேற்றுமையில் ஒற்றுமைகாண வழிகாட்டுகின்றன க, ச, ட, த, ப, ற என்ற ஆறு வல்லினமும் ங, ஞ, ண, ந, ம, ன என்னும் ஆறு மெல்லினத்தைக் கொண்டுள்ளன. வலியார் மெலியாரை அணைத்துச் செல்ல இவை வழிகாட்டுகின்றன போலும்! தாழ்ந்தோரை அணைத்துச்செல்ல உயர்ந்தோரிடம் விட்டுக்கொடுக்கும் நிலை வேண்டும் தாம் அவர் நிலைக்குத் தாழ்ந்து வரல்வேண்டும். வல்லொலிகள் மெல்லலொலிகளோடு இணையும் பொழுது தாமும் மெலிந்துவருதலைக் காணலாம். தச்சன் - பஞ்சம், சுக்கு - சுங்கம், பத்து - பந்து என்னும் சொற்களை ஒலித்துக்காண்க.

சமூகத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். பிடிவாதப்போக்கு அறவே கூடாது. ஒருவரையொருவர் மதித்து விட்டுக் கொடுக்காவிட்டால் சமூக உறவுகள் ஏற்பட முடியாது எழுத்தின் புணர்ச்சி இவ்வுண்மையைக் காட்டுகிறது. தோன்றல், திரிதல், கெடுதல் என்ற புணர்ச்சி விகாரங்களை அறிவோம். தன்னை மறந்து சமூக நலனைக் கருத்திற்கொண்டு தன்னுடைய நலனில் ஒருபகுதியை இழந்தாவது தொண்டுசெய்ய இது வழிகாட்டுகிறது. சமூகத்தின் தேவைக்கு ஏற்பத் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ளக் கற்றுக் கொடுப்பதே கல்வி என்பர் ''Education is the superior adjustment of a conscious human being to the environment'' என்பர்.

உயர்வுப் பன்மை

படர்க்கைச் சொல்லமைப்பில் ஒரு பண்பாடுள்ளது ஒருவன், ஒருத்தி, அவன், அவள் என்பன படர்க்கைச் சொற்கள். இவ்வாறு குறிக்கப்படுவோர் நம்மினும் உயர்ந்தவர் எனின் அவர்களை எவ்வாறு சொல்வது? எல்லாரையும் போல் அவர்களையும் கூறுவது பண்பாடன்றே. எனவே, ஒருவர் என்ற பன்மைச் சொல்லால் குறித்தனர். அவ்வாறே அவர் என்றும் குறிப்பிட்டனர். இது இருபாலரையும் குறிக்கும்.

''ஒருவர் என்ற பெயர் நிலைக் கிளவி
இருபாற்கு முரித்தே தெரியுங் காலை'' - சொல்லதிகாரம்

இவ்வாறு ஒருவர், அவர் என்னும் பலர்பாற் சொல் ஓராளைக் குறிக்கப் பயன்பட்டபோது பலரைக் குறிக்க வேறு சொல் தேவைப்பட்டது. எனவே, அ∴றிணைக்கே கூறப்பட்ட'கள்' விகுதியைச் சேர்த்து அவர்கள் என்று கூறவேண்டிய நிலையேற்பட்டது.

அதுபோன்றே முன்னிலையிலும் உயர்வு காட்டினர் நீ- நீர்- நீங்கள்: நீங்கள் நீங்கள் என்று மரியாதையாகக் கூறும் வழக்கமும் ஏற்பட்டது. இதற்கும் மேலே தாங்கள் என்று கூறும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வழக்கமும் வந்தது. ஒருவர் என்ற சொல்லைத் தன்னைக் குறிக்கப் பயன் படுத்தக்கூடாது என்றார் தொல்காப்பியர். ஏன்? தன்னைத்தானே பாராட்டிக் கொள்வது பண்பாடன்றே!

'தன்மை சுட்டில் பன்மைக்கும் ஏற்கும்'

என்பது காண்க.

திணை வேற்றுமை

உயர்ந்தவர்களை உயர்ந்தோர் என்று பாராட்டும் நாம் தாழ்ந் தோரை அவ்வாறு வெளிப்படையாகக் கூற, அஞ்சுகிறோம். பிறருள்ளத்தைப் புண்படுத்துவது பண்பாடன்றே!---

"பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்"

என்பதன்றோ நம் பண்பாடு. உயர்திணை அஃறிணை என்று பாகுபாடு செய்தார் தொல்காப்பியர். உயர்திணையென்மனார் மக்கட் சுட்டே என்றார் - அதற்கு மாறானதைத் தாழ்திணை என்று கூற விரும்பாமல் உயர்வு அல்லாத திணை என்று கூறினார்.

மக்கட் சுட்டையே உயர்திணை என்றார். அதாவது மக்கட் பண்பு மிக்கவர்களே மனிதர். அவர்களே உயர்திணை பண்பாடற்றவர் உருவத்தால் ஒத்திருப்பினும் மாக்களே என்பது அவர் துணிவு. கயவரும் மக்களே போல்வரன்றோ! உறுப்பொத்தல் மக்கள் ஒப்பனறே!

இடைச்சொல்

நால்வகைச் சொற்களில் இடைச் சொல்லுச் ஒன்று. இவற்றுக்கெனத் தனி வாழ்வில்லை இவை பெயரோடும். வினையோடும் கூடி நிற்கும். இவற்றுடன் சேர்ந்து பொருள் தொடர்பைக் காட்டிப் பொருளை விளக்குகின்றன. இவை தமக்கென வாழாத - பிறர்க்கென வாழும் சான்றோரை நினை வூட்டுகின்றன. இடைச் சொல்லுக்குத் தனியே வாழ்வில்லை ஆனால் அவையின்றேல் மொழிக்கும் வாழ்வில்லை 'இது பண்புடையார் பட்டுண்டுலகம்' என்ற உண்மையைக் காட்டுகிறதன்றோ!

இயல்பு வழக்கும் தகுதி வழக்கும்

சில சொற்களை அவைகளில் சொல்லுவது நாகரிகமன்று, இதற்கென்று தனி வாய்பாடுகளை அமைத்தனர் சான்றோர் சான்றோர் முன்னிலையில் 'மலங்கழுவி வருகிறேன்" என்றல் பண்பாடன்று. என்வே, கால்கழுவி வருகிறேன் என்றனர். இதுவே இடக்காரடக்கல் எனப்பட்டது. அவ்வாறே சாவு முதலிய வற்றைப் பற்றிய வெறுப்பையும் அச்சத்தையும் அடிப்படையாகக் கொண்ட வழக்குண்டு செத்தாரைச் துஞ்சினார் என்பதும் சாவோலையைத் திருமுகம் என்பதும் வழக்கமன்றோ! இல்லாமை கொடுமையானது அதுவும் ஏற்பார்க்கு ஈயமுடியாத வறுமை மிகக்கொடிது. சாதலின இன்னாததில்லை என்றும் ஈகை செய்ய இயலாதவழி அதுவும் இனியது என்றும் கூறுவார் வள்ளுவர். இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண் உண்டு என்றார். இல்லாதவர்கள் என்ன செய்வது? இல்லை யென்பதனை 'மிஞ்சி விட்டது' என்று கூறவேண்டும் என்றனர். சுடுகாட்டை நன்காடு என்றனர். தாலி அறுந்தது என்பதனைத் தாலி பெருகிற்று என்றனர். தீமையின் பால் தமிழர்க்கு இருந்த வெறுப்பை இவ்வழக்குகள் காட்டுகின்றனவன்றோ!

புலம்பே தனிமை

கூடிவாழ்வதே சமூகம்: கூடிவாழ்வதால் கோடி நன்மை தனிமரம் தோப்பாவதில்லை தனிமையிலே இனிமையில்லை இதனைத் தொல்காப்பியம் 'புலம்பே தனிமை' என்றார் எனவே, கூடிவாழ்வதனை தமிழர் விரும்பினர் என்றுணரலாம்.

எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே

பயனில் சொல்லைப் பேசுபவனைப் பதர் எனறார் வள்ளுவர் பயனுடைய

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சொற்களையே பேசவேண்டுமென்றார். தமிழர் வீண் சொற்களை - வேண்டாத சொற்களைப் பயன்படுத்திடவில்லை. 'எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற நூற்பாவைக்காண்க.

சொற்கள் காட்டும் பண்பாடு

தமிழர் எந்தெந்தப் பொருள் எவ்வெவ்வாறு இருக்கவேண்டுமென்று விரும்பினரோ அது முழுமையாகத் தெரியும் வகையில் சொற்களைப் படைத்தனர். விருந்து என்னும் சொல் புதுமை என்னும் பொருளுடையது. எனவே, முன்பின் அறியாதாரை அன்போடு பேணுதலையே தமிழர் அறமெனக்கொண்டமை தெளிவு ஆடு என்ற சொல்லுக்கு வெற்றி, பெருமை என்று பொருள். ஆடவர் என்னும் பெயர் இதனடியாகத் தோன்றியது. எனவே, ஆடவர் பெருமைதரும் வகையிலும், வெற்றிதரும் வகையிலும் வாழவேண்டும் என்பது பெறப்பட்டது.

மனைவி, இல்லாள் என்னும் சொற்களை எண்ணிப் பார்த்திடுக. மனைக்கு உரிமையுடையவள் பெண் என்பதால் அவ்வாறு கூறினர். பெண்ணுக்கு இல்லறத்தில் முதன்மை கொடுத்தனர் என்பதனை இதனால் உணரலாம். இன்னும், வீடு, இல், மனை என்னும் சொற்களே ஆகுபெயராய் மனைவியைக் குறிக்கும். உழவுத் தொழில் செய்வோரை வேளாளர் என்றனர். வேளாண்மை செய்தல் என்றால் பிறர்க்கு உதவி செய்தல் என்றே பொருள். இதனால் இல்லறமேற்றலும், வயலில் உழைத்துப் பொருளைச் சேர்த்தலும் பிறதர்க்கு உதவுவதற்கே என்ற தமிழர் பண்பாடு தெளியப்படும்.

> "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
> வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்பதனைக் காண்க

சான்றேர் என்றால் நிறைந்தோர் என்று பொருள். பண்பால் நிறைந்தோரையும் வீரத்தால் சிறந்தோரையும் சான்றோர் என்றே அழைத்தனர். இதனால் அன்று அகப்பகையோட்டும் அறிஞரையும, புறப்பகை கடியும் வீரரையும் ஒப்ப மதித்தொழுகிய பண்பாடு விளங்கும், இவ்வாறு எத்தனையோ சொற்களைக் காட்ட முடியும்.

இதுகாறும் கூறியவற்றால் தமிழ் மொழியின் எழுத்தும் புணர்ச்சியும், சொற்பாகுபாடும், தீணைப்பாகுபாடும், உயர்வுப் பன்மையும், இயல்பு வழக்கு, தகுதி வழக்கு முதலியனவும் பண்பாட்டைக் காட்டுகின்றன என அறியலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. தொல்காப்பியம். முனைவர் ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ) மணிவாசகர் பதிப்பகம் 2006.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஐங்குறுநூற்றின் அன்னாய் வாழிப் பத்து கூறும் வாழ்வியல் சிந்தனைகள்

Thoughts of Life as Told by "Annaai Vaali Pathu" of "Iynkurunooru"

முனைவர். பெ. அனந்தசயனம், இணைப் பேராசிரியர் (பணி நிறைவு),
வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர் - 626001.

Abstract

The present article focuses on the rich Tamil tradition lived by aur ancestors. The society's glory can be estimated by the moral virtues followed by them. Literature is the mirror of the society. In Tamil literature, Sangam Literature is considered as the greatest one showing ethical way of living. The people of those times followed the virtues very stoicly. If the present generation, the ridiculed one tries to follow these benevolent traits, the society will be uplifted with great respect. The purpose of the article solely concentrates to trigger out the life oriented good habits from Iynkurunooru's "Annaai Vaali Pathu" of Kurunchi Thinai.

Keywords: Thoughts of Life, "Annai Vaali Pattu", "Iynkurunooru"

முன்னுரை

ஒரு சமூகத்தின் பண்பாடு, பெருமை குறித்து அவர்தம் இலக்கியங்களின் வழி அறிந்து கொள்ளலாம். எக்காலமும் போற்றும் சிறந்த பண்பாட்டினையும், ஒழுக்கங்களையும் பேணி நடைமுறைப்படுத்தி வந்ததால் சங்க காலம் பொற்காலமெனப் போற்றப்பட்டது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில், அக்கால மக்களின் அக, புற வாழக்கையை வெளிப்படுத்தும் வகையில் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எட்டுத்தொகை நூல்களில் அகம் பற்றியதாக ஐந்து தொகை நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஐங்குறுநூறு ஐந்திணை ஒவ்வொன்றும் மூன்றடி முதல் ஆறடி வரையிலான.அடிகளைக் கொண்டு அமைந்த குறுகிய நூறு பாடல்களால் உருவாக்கப்பட்டுள்ளன. ஐங்குநுறூற்றுப் பாடல்களை இயற்றிய நல்லிசைப் புலவர்கள் முதல், கரு, என்னும் பொருட்களால் காலமும் இடமாகிய அரங்கினை அமைத்து, அதில் அகமாந்தர்களான தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகியோருக்கிடையே கூற்றுகளாலான உரையாடலை நிகழ்த்திப் படிப்பவர் கண் முன்னர் ஒரு நாடகக் காட்சியைத் தோற்றுவித்துள்ளனர்.

அகமாந்தர்களான ஒவ்வொருவரின் கூற்றும் வெளிப்படையான ஒரு கருத்தை உணர்த்துவதுடன் உள்ளார்ந்த குறிப்பையும் கொண்டுள்ளது. இக்கூற்றுகள் அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் சிறக்க அவர்கள் கடைப்பிடித்த நெறிமுறைகளை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக அக்காலககட்ட தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகள் வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிமுறைகளை இன்றும் பெண்கள் பின்பற்றி நடந்தால் அவர்களின் வாழ்வும் சீரடையும், அவர்கள் வாழும் நாடும் முன்னேறும். இத்தகைய மேன்மை மிக்க வாழ்வியல் பண்புகளை ஐங்குறுநூற்றின் குறிஞ்சித் திணையின் "அன்னாய் வாழிப் பத்து" பாடல்களின் வழி இக்கட்டுரை ஆராய்கிறது

"ஒன்றே வேறே எனறிரு பால்வயின்
ஒத்த தலைவனும் தலைவியம் காண்ப

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மிக்கோனாயினும் கடிவரையின்றே”

என்ற தொல்காப்பிய நூற்பா (1039) சுட்டுவதைப் போன்று “ஆகூழ்” காரணமாக ஒன்றுபட்ட தலைவன் தலைவி களவு வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர்.

தலைவியின் நுழைமாண் நுண்புலம்

தலைவியின் தலைமகனோடு கொண்ட காதலை அறியாமல் செவிலி முதலியோர், தன் சுற்றாத்தாரிடம் பிறர் தன்னை மணம் பேசி வருவதை அறிந்த தலைவி தான் யாரும் அறியாத வகையில் தலைமகன் ஒருவனைக் காதலித்து வரும் மறை செய்தியைச் செவிலிக்குக் கேட்கும் வகையில் தோழியிடம், தன் தலைவன் அணிந்தது மட்டுமல்லாமல் தன்னையும் அணிய தந்த மணி அன்ன அரும்பினாலும் பொன் போன்ற மலரினாலுமான தழையாடை எந்த மரத்திற்குரியது எனத் தனக்குத் தெரிந்தும் தெரியாததைப் போல தோழியிடம் வினவுகிறாள்..செவிலியும் இம்மரம் எம்மலையிலுள்ளது என்று அறிய முற்படுகையில் அந்த மலையின் தலைவனையும் அறிந்துக் கொள்கிறாள்.தலைவி அவன் மேல் கொண்ட காதலையும் புரிந்துக்கொள்கிறாள்.மேலும் தலைவி தழையாடையின் சிறப்பைக் கூறி அவனுடைய செல்வ வளத்தினைக் குறிப்பிடுவதனுடன் தலைவனை “என்னை” எனச் சுட்டுவதன்வழி, அவனையே தன் கணவனாக வரித்த நிலையினையும் ஒருவனுக்கு ஒருத்தி எனும் தன் கற்பு நெறியையும் செவிலிக்குப் புலப்படுத்துகின்றாள். (201) செவிலி மற்றும் தன் பெற்றோர் விரும்பும் வண்ணமே தலைவி காதலித்த தலைவனும் செல்வ வளம் மிக்கவன் என்பதைத் தழையாடையின் சிறப்பைக் கூறியதன் வழியும் அதனைத் தான் ஏற்று அணிந்துக் கொண்டதாலும், அவனை “என்னை” எனக் குறிப்பிட்டதாலும்,அவனையே கணவனாக வரித்துக்கொண்ட தன்மையினையும் புலப்படுத்தியது தலைவியின் நுழைமாண் நுண்புலத்தைக் காட்டுகிறது.

தோழியின் அறிவாற்றல்

இற்செறிப்பின் காரணமாக தலைவனைக் காணாததால் உடல் மெலிந்த தலைவியைக் கண்ட செவிலி இப்பிணி தெய்வத்தால் ஏற்பட்டது என்று கருதி வெறியெடுப்பு நேர்ந்தனர்.தலைவி நலம் பெற புழைக்கடையிலுள்ள துறுகல்லின்மேல் விலங்குகளைப் பலி கொடுப்பதைவிட அக்கல்லின்மேல் நின்று பார்த்தால் தெரியும் மலைக்குரிய தலைவனுக்கு மணம் செய்வித்தலே போதும் இவள் மிகவும் நலமடைவாள் எனத் தோழி, செவிலிக்கு அறத்தொடு நின்றாள். (210) மகளுக்கு நேரிட்ட துன்பம் எதனால் ஏற்பட்டது என்பதை அறிந்துக்கொள்ளாமலேயே அவளுக்குத் துன்பம் கொடுக்கும் பெற்றோரைச் சாடுகிறது இப்பாடல் மேலும் விலங்குகளைப் பலி கொடுத்தால் மட்டும் இவளது துயரம் தீராது. இவள் காதலித்த தலைவனுடைய மார்பைத் தழுவுவதால்தான் தீரும் என்பதைத் தோழி உணர்த்துகிறாள்.

தன் காதல் நெறியை அறியாது பிறர் தன் மணம் குறித்து தமரிடம் பேசுவதை அறிந்த தலைவி மகிழாமல் வருத்தம் அடைகிறாள். இதனைக் கண்ணுற்ற செவிலி தோழியிடம் இதற்கான காரணத்தைக் கேட்க, தலைவி, செவிலியிடம் கொண்ட அச்சத்தின் காரணமாகவும் பெண்மைக்குரிய நாணத்தினாலும் அவளிடம் தன் காதலைச் சொல்லவியலாத நிலையில் வேற்று மணத்தினால் தனது கற்பு நிலைக்குக் களங்கம் ஏற்படுவதனுடன் தன் குடும்பத்திற்கும் கேடு விளையுமே என வருந்துவதால் உடல் மெலிந்து காணப்படுகிறாள். இவளது காதல் தெய்வத்தால் ஏற்பட்டது என்றும் தான் இதற்குக் காரணமில்லை என்பதைத் தெரியப்படுத்தி இதன் பொருட்டு இனி செவிலி செய்யும் செயற்பாடுகளையும் உணர்த்துகின்றாள். (205). இப்பாடலில் தலைவியின் பொறுப்புணர்ச்சியும், தோழியின் சொல்லாற்றலும் செவிலியின் கடமை உணர்வும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தோழியின் பாராட்டு மொழி

தலைவி தலைவனைக் காணாத போது, பகலில் அவனது மலையைப் பார்த்து மனமகிழ்வாள். துன்பம் விளைவிக்கும் இரவுப் பொழுதிலே அம்மலையைக் காணவியலாத

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

காரணத்தால் மனமடிந்து அழுவாள். மேலும் அவளது துன்பம் மேலோங்கும் வகையில் அவளது களவுக் அவளது அலராயிற்று. இத்தருணத்தில் அவளது காதலைத் தோழி செவிலியிடமும், செவிலி நற்றாயிடமும் நற்றாய் தந்தை, தனயனிடமும் கூறி அறத்தொடு நின்றதன் வழி, அத்தலைவனுக்கே அவளை மணம் செய்வித்தனர். இதனால் பெரிதும் மகிழ்ந்தவள் தோழிதான். கானவர் கிழங்குகளை அகழ்ந்தெடுத்த குழிகளில் வேங்கை பொன்னிற மலர்களால் நிரம்புவதைப் போல தலைவியின் களவொழுககம் அலராகும் போதே செவிலி அவளுக்கு மணம் செய்வித்தாள் எனத் தோழி, செவிலியை மனமார்ந்து பாராட்டுகின்றாள் களவு மணம் கற்பாக மாற செவிலியும் அறதோடு நிற்றல் துறையும் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன.

புறம் பேசும் மகளிர்

சங்காலத்தில் புறம் பேசும் மகளிர் ஏதின் மகளிர் எனப்பட்டனர். புறம் பேசும் பெண்டிரின் செயல்பாட்டினைச்

"சிலரும் பலரும் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்ற"

என்று (நற்றிணை 149) குறிப்பிடும். ஒரு தலைவி, தலைவன் சிறைப்புறத்தானாக இருக்க, தன் தோழியிடம் தான் விளையாடப் போகும்போதெல்லாம் அங்குள்ள மலையில் வாழும் சூரர மகளிரைப் போன்ற ஏதிலராகிய பெண்டிர் தன்னை "இவள் மிகவம் நல்லவள் நல்லவள்" எனக் குறிப்பமொழியினால் தன் களவினைக் கேலி செய்கின்றனர். என்று வருத்தம் அடைகிறாள். ஏதிலராகிய இப்பெண்டிருக்கு நல்லவளாகத் தெரியும் அவள் தன் தலைவனுக்கு மட்டும் தீயவளாகக் காணப்படுவதால் அவளைக் கேலிப் பொருளாக ஆக்கி விட்டானே என்ற தன் உள்ளக் கிடக்கையைத் தலைவி வெளிப்படுத்துகிறாள் இதனைக் கேட்கும் தலைவன் அவள் படும் துன்பத்தை உணர்ந்தும், அலரும் தோன்றிவிட்டால் அவள் உயிர் துறந்திடுவாளே எனக் கருதும் தலைவன் மணம் பேச வருவான் என்று தலைவி அறத்தொடு நின்றாள். (204)

தலைவியின் இயற்கை மீதுள்ள ஈடுபாடு

கதிர் முற்றும் முன் மழையின்மையால் வாடும் தினைப் பயிரினைக் கண்டு மனம் வருந்தும் தலைவி அதனோடு தன் வாழ்வும் பிணைந்துள்ளதை எண்ணி, மழை வந்தால்தான் தினையும் தழைக்கும் அதனால் பெற்றோர் தன்னைக் காவலுக்கு அனுப்புவர். அங்கு தன் காதலனையும் காணவியலும் என மனமறுகும் தலைவிக்குத் தோழி, தலைவனுடைய மலையில் மேகம் திரண்டுள்ளதால் மழையும் பொழியும். அவள் நினைத்ததும் நடக்கும் என ஆறுதல்படுத்தினாள். மலையில் உருவாகும் மழைக்குள்ள அளித் தன்மையைப் போல அம்மலைக்குரிய தலைவனும் அவளுக்கு இரங்குவான் எனும் உள்ளுறைப்பொருள் பெறப்படுகிறது. (207)

தலைவியின் புகுந்த வீட்டுப் பெருமை

தோழியும், செவிலியும் அறத்தோடு நின்றதன் வழி, தலைவி தான் விரும்பிய தலைவனை மணம் புரிந்து புக்ககம் சென்று சில காலம் கழித்து பிறந்த வீட்டிற்கு வருகிறாள். அவளிடம் தோழி, அவனுடைய ஊரிலுள்ள நன்னீர் குடிக்க இயலாது என்பரே. அதற்கு அவள் என்ன செய்தாள் என வினவ அதற்குத் தலைவி,

"அன்னாய் வாழி வேண் டன்னை நம் படப்பை
தேன் மயங்கு பாலினுமினிய வவர் நாட்டு
வலைக்கூவற் கீழ் மானுண் டெஞ்சிய கலுழி நீரே"

எனப் பதிலுரைக்கிறாள். தன் வீட்டுப் புழக்கடைத் தோட்டத்திலுள்ள தேனும் பாலும் கலந்தது போன்ற இனிய நீரைக் காட்டிலும் அவளது தலைவன் நாட்டில் கிடைக்கும் மான் குடித்த எச்சில் நீரே இனிமையாக உள்ளதாக கூறுவதிலிருந்து தன் காதல் கணவனுடைய

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வீட்டின் குறைகளைக் கூட நிறைவாகக் கூறும் மாண்பினை அறிய முடிகிறது. பிறந்தகத்தின் பெருமையை மட்டும் பேசி புக்ககத்தைக் குறை சொல்லியே வாழும் பெண்டிருக்கு இத்தலைவியின் பதிலை ஒரு சாட்டையடியாகக் கருதலாம். (203)

களவுக் காலத்தில் தலைவியைத் திருமணம் செய்ய பொருளீட்டுவதற்காக தலைவன் பிரிகிறான். இதனால் தலைவி. மிகவும் ஆற்றொணாத் துயரம் கொள்கிறாள் இந்நிலையில் தோழி

"வினையே ஆடவருக்குயிரே.- வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்" (குறுந்தொகை (-135)

என்ற கருத்தை வலியுறுத்தி வினை பொருட்டாகச் சென்ற தலைவன் குறித்து வருந்தாமல் அவன் வரும்வரை ஆற்றியிருக்கவேண்டும் என்று ஆறுதல்படுத்திய தோழிக்குத் தலைவி யான் ஆற்றியிருக்க எண்ணினாலும் தான் தலைவனை முதன் முதலில் சந்தித்த மலையைக் காணும்போதெல்லாம் அவனது நினைவே உள்ளத்தில் நிறைகிறது. ஆனால் அவனுடைய பிரிவு அவளை மெலியச் செய்கிறது.இந்நிலையில் பொருளீட்டுவதற்காகச் சென்ற தலைவன் பொருளீட்டி அவளை மணம் பேச தேரில் அவளுடைய ஊருக்கு வருகிறான். தலைவன் தேரில் கட்டப்பட்ட குதிரைகளின் குளம்பொலியைக் கேட்ட தோழி அதனைத் தலைவியிடம் அவர்களின் ஊரில் வாழும் பார்ப்பனச் சிறார் வைத்துள்ள முன் குடுமியைப்போன்றுதலைவனது தேரில் கட்டப்பட்ட குதிரைகள் அணிந்துள்ள குஞ்சம் அமைந்துள்ளதைக் காண தலைவியை மகிழ்ச்சியுடன் அழைக்கிறாள். (202) தன்னுடைய திருமணத்திற்கான பொருளை ஈட்ட தலைவன் மேற்கொண்ட முயற்சியையும் அதனால் தலைவி பெற்ற மகிழ்ச்சியையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

நிறைவுரை

தலைவன், தலைவியர் இருவருமே ஒருவர் மீது ஒருவர் முழு நம்பிக்கை கொண்டிருந்தனர்.களவு வாழ்க்கை திருமணத்தில் நிறைவு பெற்றுள்ளது..பெண்கள் புகுந்த வீட்டினைப் பெருமைப்படுத்தினர். இயற்கையின் மீது பற்று கொண்டிருந்தனர் அக்காலத்தில் பாரப்பனச்சிறுவர்கள் தலையில் முன் குடுமி வைத்திருந்தனர். வேலன் வெறியாடல் நிகழ்த்தப்பட்டுள்ளது. தலைவியின் களவு வாழ்க்கை குறித்துப் புறம் பேசிய பெண்கள் பற்றிய செய்தி காணப்படுகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை - பொ.வே சோமசுந்தரனார். (உ.ஆ) கழக வெளியீடு, சென்னை. 2009.
2. தொல்காப்பியம். முனைவர் ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ) மணிவாசகர் பதிப்பகம் 2006.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வேதாகமம் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

The Ethics of Life Revealed by the Bible

ஜெ.ப.ஆணந்தி, உதவி பேராசிரியர், அரசு கல்வியியல் கல்லூரி, புதுக்கோட்டை

Abstract

The purpose of the article is deciphering the noble ideas revealed in the Bible. The Bible is a rich source of spiritual wisdom. It is the voice if the Almighty. In our world, it is one of the biggest religions and has deep impact in all ethnic groups regardless of any prejudices. The base of the Bible is to create a moral society. It also gives much more respect to the other religions and takes the one dear to the Almighty. The main idea propagates to decode the secrets of reading and chanting of Bible, going to church, helping others, humility, leadership, submission perseverance and so many virtues of life. Consequently, this article, gives an open way to understand the ethics recealed through the Bible.

Keywords: The Ethics of Life, Revealed by the Bible

முன்னுரை

மனித வர்க்கம் சிறப்பாக மேலும் வழமாக வாழ்வதற்கு இலக்கியங்கள் மற்றும் சமயங்கள் பல்வேறு வகையான நெறி முறைகளை வகுத்துள்ளது. அதன் அடிப்படையில் வாழ்க்கையை தீர்மானிக்கும் போது சமுதாயம் சிறப்பான முறையில் வளர்ச்சி பெறுகின்றது. சமுதாயம் என்று குறிப்பிடும் போது அது தனிமணித வாழ்வை மையமாக கொண்டுள்ளது. பல வகையான மனிதர்களின் கூட்டு முயற்ச்சியே சமுதாயம் என்பதாகும். ஒரு தனிமனிதனின் தவறுதல் அல்லது மீறுதல் அந்த மொத்த சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு காரனமாக பல நேரங்களில் அமைகின்றது.

திருவிவிலியத்தின் தொடக்க நூலான ஆதியாகமதின் துவக்கத்தில் ஏவாள் செய்த தவறானது அனைத்து மனுக்குலமும் கடவுளின் சாபத்தை ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத்தள்ளப்பட்டது. கிறிஸ்தவமானது ஒவ்வொறு கிறிஸ்தவனும் ஒரு நல்ல சமுதாய அமைப்பை உருவாக்குவதற்கும் பிற சமயத்தவர்களை மதித்து அனைவருக்கும் உதவுவதற்கும் பல நெறிகளை திரு விவிலியம் கூறுகின்றது.

தினமும் வேதாகமத்தை வாசித்தல்

தனி மனித ஒழுக்கம் என்பது மிகவும் முக்கியமன ஒன்றாகும். குழந்தை பருவத்தில் இருந்து ஒழுக்க நெறியுடன் வாழ்வதற்கு பலவகையான அறிவுரைகள் சிறப்பான முறைகளில் கதைகள் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கற்றுக்கொடுக்கப்படுகின்றது. கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிசுத்த வேதாகமம் நல்ல சமுதாயத்தை உருவாக்க பல்வேறு போதனைகளை கொண்டுள்ளது.

யோசுவா என்ற புத்தகத்தில் 1ஆம் அதிகாரம் 8 ஆவது வசனத்தில்- இந்த நியாயப்பிரமான புத்தகம் உன் வாயை விட்டு பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக்கவனமாய் இருக்கும்படி இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பன்னுவாய் அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய். என கூறப்பட்டுள்ளது.தனி மணித வாழ்வில் புத்திமானாக நடந்துகொள்ள திருவிவிலியத்தை தினந்தோறும் வாசிக்க வேண்டும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ரோமர் என்ற புத்தகத்தில் 10ஆம் அதிகாரம் 17 ஆம் வசனத்தில் "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என கூறப்பட்டுள்ளது. நம்பிக்கை என்பது மிகவும் அவசியமான ஒன்று. அந்த நம்பிக்கை வளரதற்கு திரு விவிலிய அறிவு மிகவும் அவசியம் ஆகும்.

தீமோத்தேயு எழுதிய இரண்டாவது புத்தகம் 3ஆம் அதிகாரம் 16ஆவது வசனம் முதல் 17 ஆம் வசணத்தில் "வேத வாக்கியனங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. விவிலிய வசனமானது ஒரு மனிதனை அவன் செய்யும் குறைகளை சுட்டிக்காட்டி நல்ல செய்கை செய்வதற்கு தகுதியுள்ளவனாக மாற்றுகின்றது. மேலும் ஒருவன் கடவுளுக்கு எதிராக பாவம் செய்யாமல் இருக்க வேதாகம உதவுகின்றது என தாவீதின் சங்கீதம் 119 ஆம் அதிகாரம் 11ஆம் வசனத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது "நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்.

ஜெபத்தின் இரகசியத்தை கற்றுக்கொள்ளுதல்

ஜெபம் என்பது இறைவனோடு தொடர்பு கொள்ளும் ஒரு முறையாகும். நாம் செய்யும் ஒவ்வொரு வேண்டுதலுக்கும் இறைவன் பதில் தருகின்றார். பொதுவாக இறைவன் மூன்று வகையான பதிலை தருகின்றார், அந்த பதில் சில நேரங்களில் ஆம் என்றோ, இல்லை என்றோ அல்லது காத்திரு என்றோ இருக்கும்.

ஆலயத்திற்கு தவறாமல் செல்லுதல்

தனி மனித வாழ்வில் ஒழுக்கத்துடன் வாழ வேண்டுமானல் அனுதினமும் ஆலயத்திற்கு செல்ல வேண்டும். வழி பாடுகளின் கலந்து கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். இந்த பூலோகத்தில் இறைவனின் சன்னிதானமாக கருதப்படுவது ஆலயம் மட்டுமே. பூலோகத்தை சுற்றிக்கொண்டிருக்கும் செயற்க்கை கோள் மனித வர்க்கத்திற்கு வல வகைகளில் பயன்படுகிறது. அது கட்டுப்பாட்டு வளையத்திற்குள் இருக்கும் வரைதான் அதன் செயல்பாடு சரியாக இருக்கும் , இல்லையெனில் அது முழுவதும் பயனற்றதாகி விடும். அது போல்தன் மனிதனும் கடவுளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரை சரியான மனிதனாக இருப்பான்.

மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்தல்

சமுதாயத்தில் நாம் எப்பொழுதும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். மற்றவர்கள் நம்மிடம் எவ்வறு நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கின்றோமோ அவ்வாறு நாமும் நடந்துகொள்ள வேண்டும்.

மற்றவர்களிடம் பரிவு காட்டுதல்

"இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்று மத்தேயு 5 ஆம் அதிகாரம் 7 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிவிலியமானது மனித சமுதாயமனது சிறப்பானதாகவும் ஏற்ற தாழ்வுகள் மற்றும் பகை இல்லமல் இருக்க இந்த அறிவுரையை வேதாகமம் குறிப்பிடுகின்றது.

கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை வாழுதல்

எந்த சூழ்நிலையிலும் தூய இறைவனை முன்னிறுத்தி வாழவேண்டும் அது தனிமனிதனின் வாழ்வில் ஏற்படும் வழிவிலகலை தவிற்க்கும்.

சோதனைகளை சந்திக்க கற்றுக்கொள்ளுதல்

மனித வாழ்வில் சோதனைகள் பல வகைகளில் ஏற்படுகின்றது. சோதனைகளின் விளைவாக மனிதனின் சிந்தனை பலவகைகளில் மாறுபடுகின்றது. சில நேரங்களில் தவறான முடிவுகளுக்கு செல்லும் சூழ் நிலை உருவாகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

முழுமையான கிறிஸ்தவ ஆளுமையுடன் வாழ்தல்

கிறிஸ்தவம், கிறிஸ்தவன் என குறிப்பது கிறிஸ்து அவனில் இருக்கிறார் என்பது பொருள் ஆகும். கிறிஸ்துவில் காணப்பட்ட குணாதிசயங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் காணப்பட வேண்டும். அவனது தோற்றத்தில், செயல்களில் கிறிஸ்தவ தன்மை வெளிப்பட வேண்டும். மற்றவர்களிடத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவனாக இருத்தல் வேண்டும். அவனது நல்ல செய்கைகள் மற்றவர்களை ஈர்ப்பதாக அமைய வேண்டும். 2 கொரிந்தியர் 9 ஆம் அதிகாரம் 8ஆவது வசனத்தில் "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூர்ணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."

கடவுளின் துணைகொண்டு சூழ்நிலைகளை எதிர்கொள்ளுதல்

மனித வாழ்க்கையில் ஒருவனுடைய குணாதிசயங்களை தீர்மானிப்பதில் சமூகச் சூழல் முக்கிய பங்காற்றுகின்றது. நம்மை சுற்றியுள்ள நபர்களின் செயல்கள் நமது வளர்ச்சியை, நமது உயரிய சிந்தைகளின் செயல்பாடுகளை குறைப்பதாக இருக்கக் கூடது, அதற்கு நாம் இடம் கொடுக்க கூடாது. எப்பொழுதும் கடவுளின் துணை கொண்டு சூழ் நிலைகளை மேற்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். நம் ஆழ்மணதில் கடவுள் என்னுள் இருக்கிறார் என்ற சிந்தனை எப்பொழுதும் இருக்க வேண்டும்.

முடிவுரை

கிறிஸ்தவர்களின் புனித நூலான திருவிவிலியம் 66 புத்தகங்களை கொண்டுள்ளது. பல்வேறு புனிதர்களை இறைவன் பயன்படுத்தி ஆவியானவரின் வழி நடத்துதலால் பல நூறு ஆண்டுகள் இடைவெளியில் எழுதப்பட்டது. ஒரு தனிமனிதனோ, குடும்பமோ அல்லது ஒரு குழுவினரோ இந்த நெறிமுறைகளை பின்பற்றினால் ஒரு சிறந்த சமுதாயம் உருவாகும். எங்கே ஒரு கிறிஸ்தவனின் கல்லறை இருக்கின்றதோ அங்கு ஒரு பெரிய மறுமலர்ச்சி இருக்கும் எனக்கூரலாம்.

பயன்பட்ட மறை

1. வேதாகமம்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சா. கந்தசாமியின் புதினங்களில் சமுதாயம்

Society in the Novels of Sa. Kandhasamy

முனைவர் வ. கணபதிராமன், உதவிப்பேராசிரியர்
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

Abstract

The present article evinces the portrayal of society in the novels of Sa. Kandhasamy. He is an eminent Tamil writer showing the very sensitive issues in a peculiar manner. His depiction of stories tells of the decaying society full of betrayal and immoral life lead by the present society. The worst outcomes of polygamy, vicious friendship, betrayal, prostitution, dowry and its evil consequences are culled out from his select novels. Therefore, the article focuses on the themes in the chosen novels.

Keywords: Society, Novels of Sa. Kandhasamy, Forgotten Life Ethics

முன்னுரை

சமுதாயம் இல்லையெல் இலக்கியம் இல்லை. சமுதாயம் என்பது மக்களின் கூட்டுக் குடும்ப இயக்கங்களையே குறிக்கிறது. மனித வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலும் இயக்கங்களிலும், அழகுணர்வுகள் அல்லது அவலவுணர்வுகள் வெளிப்படுதல் இயற்கை. இத்தகைய உணர்வுகளைப் படைப்பாளன் தன் அனுபவத்தையும், பட்டறிவையும் கலந்து இலக்கியம் ஆக்குகின்றான். அனுபவம் போன்றவற்றை அழகிய கலை வடிவங்களின் மூலமும் பகிர்ந்து கொள்கிறான். இலக்கியங்கள் சமுதாயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சங்ககால இலக்கியங்கள் காதல், வீரம், கொடை போன்ற கருத்துக்களை எடுத்துக்காட்டுபவையாக விளங்குகின்றன. வாழ்க்கையோடு நேரடியானத் தொடர்பு நாவலுக்கு உண்டு. ஏனெனில் அது மனிதர்களைப் பற்றியே பேசுகின்றது. மனிதர்களுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், தாபங்கள், குறிக்கோள்கள் இவற்றையும் அம்மனிதர்களின் இன்பதுன்பங்கள் பற்றியுமே கூறுகின்றது. மனித வாழ்வின் அடிப்படையான உணர்ச்சிகளைப் பற்றியே புதினம் பேசுவதால் அது வாழ்க்கையின் வாழ்க்கையாய் அமைகின்றது. அவ்வகையில் சா. கந்தசாமியின் அவன் ஆனது, சூரியவம்சம், விசாரணைக்கமிஷன் ஆகிய மூன்று புதினங்கள் சுட்டும் சமுதாய நிலையை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பலதார மணம்

ஆண்களுக்கும், பெண்களுக்கும் கற்பு என்பது ஒன்றுதான். இருப்பினும் சமுதாயத்தில் பெண்ணின் கற்பொழுக்கமே பெரிதும் பேசப்படுகிறது. ஆண்கள் கற்பு நெறியிலிருந்து தவறினாலும் சமுதாயம் குறையேதும் கூறுவதில்லை. இதனாலேயே பல பெண்களை மணம் செய்து கொள்கிறார்கள் என்பதைப் புதின ஆசிரியர் சா. கந்தசாமி இங்குக் குறிப்பிடுகிறார்.

> "அப்பா கொச்சியில் இன்னொரு குடும்பம் வைத்துக் கொண்டு மூன்று குழந்தைகளைப் பராமரித்துக் கொண்டிருந்தார்"

என்ற வரிகளில் மூலம் பத்மநாபனின் தந்தையின் பலதார மணத்தைப் பற்றி இங்கு அறிய முடிகிறது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கூடா நட்பு

கூடா நட்பு என்பது ஒரு நல்ல மனிதனை முற்றிலும் தீய வழிக்கு அழைத்துச் செல்லும் நட்பாகும்.

> "பருகுவார் போயினும் பண்பிலார் கேண்மை
> பெருகலிற் குன்றல் இனிது" (குறள்.)

எனக் கூடா நட்பைப் பற்றித் திருவள்ளுவர் தம் குறளில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

> "செல்லையா - டில்லியிடம் நட்பு கொண்டிருக்கிறான். அவனோ செல்லையாவை புகைப்பிடிக்க வற்புறுத்துகிறான். செல்லையா மறுத்துவிட்டு பின்பு வற்புறுத்தலினால் புகைப் பிடிக்க சம்மதிக்கிறான்"

என்று புதின ஆசிரியர் குறிப்பிடுகிறார். கூடா நட்பு தவறான பழக்கங்களில் ஈடுபடச் செய்யும் என்பது இதன் மூலம் புலனாகிறது.

துரோகச் செயல்

நட்பு என்பது ஒரு மகத்தான உறவு. அது கடவுள் மீதுள்ள நம்பிக்கைக்கு ஒப்பானது. இவ்வுறவு மீது சில நேரங்களில் வெறுப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வுறவு மீது சில சமயம் களங்கம் ஏற்படுவதும் உண்டு. சிவசண்முகமும், பத்மநாபனும் நண்பர்கள். பத்மநாபனுக்குத் திருவனந்தபுரத்தில் ராகவலு என்பவருடன் நட்பு ஏற்பட, அவருடைய லாரியில் ஓட்டுனராகப் பணிபுரிகிறான். அவ்வப்போது ராகவலுவின் வீட்டுக்கு வருவதும் உண்டு. இந்நிலையில் ராகவலுவின் மனைவி ராஜலெட்சுமியுடன் தகாத தொடர்பு வைத்துக் கொள்கிறான். ஒருநாள் அவளை கூட்டிக்கொண்டு சென்று விடுகிறான். இதை ராகவலு சிவசண்முகத்திடம் சொல்லிப் புலம்புகிறான்.

> "என் பொண்டாட்டி மனச கலச்சி, உங்க பிரண்ட் அபகரிச்சிட்டு போயிட்டான் சார்"

என்ற கூற்றின் மூலம் மனிதர்களின் முறையற்ற ஒழுக்கத்தையும், துரோகச் செயலையும் புதின ஆசிரியர் இங்குச் சுட்டிக்காட்டுகிறார்.

பரத்தமை

பெண்களின் ஆதரவற்ற வாழ்க்கை, கணவனால் ஒதுக்கப்படுதல், காதலனால் ஏமாற்றப்படுதல், பாலுணர்வு வேட்கை, நோயுள்ள கணவனைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை, வறுமை ஆகியன பெண்களின் பரத்தமைக்குக் காரணங்களாக இருக்கின்றன.

> "பரத்தையர் என்பவர் யாவரெனின் அவர் ஆடலும் பாடலும் வல்லராகி அழகும் இளமையும் காட்டி இன்பமும், பொருளும் வெஃகி ஒருவர் மாட்டும் தங்காதார்"

என்று இளம்பூரணார் உரையெழுதியுள்ளார்.

சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை பரத்தமையொழுக்கம் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளது. "விசாரணைக் கமிஷன்" எனும் புதினத்தில் அரசுப் பேருந்து ஓட்டுநர் சங்கரலிங்கம் விபச்சாரம் செய்யும் ரத்னமாலா என்ற பெண்ணின் வீட்டிற்குச் சென்று வருகிறான். அவன் கொடுக்கும் பணத்தை வைத்து சுகபோக வாழ்க்கை வாழ்கிறாள் என்பதைப் புதின ஆசிரியர் இங்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆண்கள் தங்கள் வேட்கையினை நிறைவு செய்து கொள்வதற்காக அத்தகு பெண்களை நாடுகின்றனர். பெண்களோ தங்கள் வயிற்றுத் தேவையினையும் வாழ்வுத் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தொழிலை மேற்கொள்கின்றனர். தாங்கள் செய்யும் தவறுகளுக்கு மனிதர்கள் பொறுத்தமான ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் கொள்வது வழக்கமாகிவிட்டது.

வரதட்சணை

சமூகத்தில் பெண்களுக்கு மிகப்பெரிய சிக்கலாக அமைவது வரதட்சணையாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வரதட்சணையை எதிர்த்துப் பெண்களே குரல் எழுப்புகின்றனர். இருப்பினும் இது பெண்களின் திருமண வாழ்க்கைக்கு ஒரு தடையாக அமைகிறது.

> "திருமணமின்றி ஒரு பெண்ணுக்குச் சமூகத்தில் மதிப்பில்லை என்பதால் பெற்றோர் கடன்பட்டேனும் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர்"

என்ற திறனாய்வாளரின் கூற்று நோக்கத்தக்கது.

சா. கந்தசாமி தமது புதினங்களில் வரதட்சணைக் கொடுமையை மனம்போன போக்கில் எழுதாமல் தாம் கண்டது, கேட்டது, உணர்ந்தவற்றை மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் எடுத்துரைக்கிறார்.

சரோஜினி ஆசிரியர் தனது திருமணத்திற்கு வரதட்சணை கொடுத்திருக்கிறாள். அதில் சிறிது குறைத்துக் கொடுத்ததால் கணவனுடன் மாமியார் சேர விடவிலலை என்பதை,

> "வைரத் தோட்டுல அரைகாரட்டு குறைஞ்சு போய்ச்சின்னு என் மாமியார் புருஷன்கிட்ட ரெண்டு மாசம் படுக்க விடல"

என்ற கூற்றின் மூலம் அறிய முடிகிறது. இவ்வரதட்சணை ஒரு பெண்ணின் தாம்பத்ய வாழ்க்கை பாதிப்படைவதைப் புதின அசிரியர் இங்கு வெளிப்படுத்துகிறார்.

முடிவுரை

இவ்வாறு சா. கந்தசாமியின் புதினங்களில் பலதார மணம் பற்றிய சிக்கல்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கூடா நட்பினால் உண்டாகும் சிக்கல்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலும் வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் பாதிக்கப்படுவதையும் கந்தசாமியின் புதினங்கள் வழி உணர முடிகின்றது.

துணைநூற் பட்டியல்

1. கந்தசாமி, சா. *அவன் ஆனது.* நற்றிணை பதிப்பகம், பிரைவேட் லிமிடெட், எண். 6-84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005
2. கந்தசாமி. சா. *சூர்ய வம்சம்.* நற்றிணை பதிப்பகம், பிரைவேட் லிமிடெட், எண். 6-84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005
3. கந்தசாமி. சா. *விசாரணைக் கமிஷன்.* நற்றிணை பதிப்பகம், பிரைவேட் லிமிடெட், எண். 6-84, மல்லன் பொன்னப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005
4. சுப்பிரமணிய பிள்ளை கா. *திருக்குறள் பொழிப்புரை.* திருநெல்வேலி, தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கோவிலன் சரித்திரமும் சிலப்பதிகாரமும்

"Kovilan Sarithiram" and "Silappathikaram"

ச. கல்பனா, நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி கலை
மற்றும் அறிவியல் கல்லூரி, மேடவாக்கம், சென்னை.

Abstract

The article tries to jot down the story of "Kovilan Sarithiram" with comparison to the epic "Silappathikaram". There are many versions of the stories of Kannagi and Kovalan. The chief version is the epic "Silappathikaram" but another one is the "Kovilan Sarithiram". When comparing these two stories are having the same plot but both varies in depiction of thye ccharacters and it is the purpose of the study to bring down the differences. Consequently, this article contemplates on the versions of the stories and the traits of the characters and of the writers of their cultural perspective.

Keywords: Kovilan Sarithiram, Silappathikaram, Tamil Epic, Different Modes

ஐம்பெருங் காப்பியங்களுள் முதலில் வைத்துப் போற்றப்படுவது சிலப்பதிகாரமாகும். சிலம்பின் சிறப்பை "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் சுட்டிக்காட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவிற்கு குன்றக்குறவர்கள் வேங்கை மரநிழலில் ஒருமுலை இழந்த பத்தினியொருத்தி நின்றாள். தேவர்கள் அவள் கணவனோடு வந்து அவளை அழைத்துச் சென்றனர். அதை நாங்கள் கண்ணாரக் கண்டோம் என்று அறிவித்தனர். இதன் விளைவே சிலப்பதிகார உருவாக்கத்திற்கு வித்திட்டது எனலாம். சிலப்பதிகாரக் கதை முன்பு வாய்மொழியாக வழங்கி வந்திருக்க வேண்டும். இன்றும் சிலப்பதிகாரக் கதைத் தமிழகத்தில் பல இடங்களில் திருவிழாக்களின் போது கூத்தாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. கேரள மாநிலத்தின் ஒரு மாவட்டமாகத் திகழும் இடுக்கி மாவட்டத்தில் மன்னான் இனப் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். அம்மக்களிடையே சிலப்பதிகாரக் கதையைப் போன்று கோவிலன் சரித்திரம் என்னும் கதை இன்றளவும் கூத்தாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. இக்கூத்தானது முழுமையான வடிவில் சிதையாமல் உள்ளது. இக்கதையானது சிலப்பதிகாரக் கதையோடு ஒற்றுமையுடையதாகவே காணப்படுகிறது.

வாய்மொழியாக வழங்கி வந்த இக்கதையை இளங்கோ சில நிகழ்ச்சியில் மாற்றஞ் செய்தும் சில புதிய செய்திகளைச் சேர்த்தும் காப்பியத்தை உருவாக்கியுள்ளாரோ என்று தோன்றுகிறது. காரணம் மன்னான் பழங்குடியினரிடையே வழங்கப்பட்டு வரும் "கோவிலன் சரித்திரத்தில்" கோவலன் கண்ணகிக்கு திருமணம் நடைபெறுகிறது. கோவலன் மாதவியிடம் தன் பொருட்களை இழக்கின்றான். இறுதியில் கண்ணகியின் சிலம்பைக் கொண்டு தென்மதுரை செல்கின்றான். அங்கு கள்வனெ முத்திரை குத்தப்பட்டு மரணப்படுகின்றான். சிலம்பிலும் இந்நிலை காணப்படுகிறது. ஆனால் சிலம்பில் கதை ஒட்டத்திற்காக சில நிகழ்வுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பது (மன்னான் கதை - சிலம்பு) இருகதையை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது புலனாகிறது.

சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் முப்பது கதைகளாகவும் உரைநடை கலந்த பாடலாகவும் எழுதியுள்ளார். கோவலன் சரித்திரத்தில் கதைகள் காணப்படவில்லை. மாறாக பாடல்களும், உரைநடைகளும், உரையாடல் முறையும் காணப்படுகிறது. ஆனால் இரண்டு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கதைகளிலும் கதைக்கரு ஒன்றாகவே உள்ளது. ஆனால் சிலம்பில் குறிப்பிடப்பட்டுள்ள கண்ணகி, கோவலனிடம் எதிர்த்து பேசாத, பெண்ணாக, வஞ்சனை இல்லாத பெண்ணாகக் காட்டப்பட்டுள்ளாள். மாறாக கோவிலன் சரித்திரத்தில் கண்ணகி, கோவலனிடம் கேள்விகள் கேட்பவளாகவும், வஞ்சனை மிக்கவளாகவும் இடம் பெற்றுள்ளாள். இந்நிலைக்கான காரணத்தை நோக்குமிடத்து மன்னான் பழங்குடியினரின் (பெண்களின்) இயல்பான நிலை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது எனலாம். ஆனால் இளங்கோ தமிழ் மரபுப்படி பெண் கணவனுக்கு பணிவிடை செய்பவளாக இருக்க வேண்டுமே தவிர கணவனை எதிர்ப்பவளாக இருக்கக்கூடாது என்று கருதி சிலம்பு கண்ணகியை இவ்வாறு படைத்தாரோ என்று தோன்றுகிறது.

சிலம்பு - கோவிலன் சரித்திரம்

கண்ணகி
கோவலன்
மாதவி
வசந்தமாலை (கண்ணகியின் தோழி)
தாய் பெயர் குறிப்பிடப்படவில்லை
மாநாய்கன் (கண்ணகியின் தந்தை இடம் பெறவில்லை)
பாண்டிமாதேவி (பாண்டியனின் மனைவி)
நெடுஞ்செழியன் (பண்டியன்)
மாதரி (இடைச்சி)
பொற்கொல்லன்
கண்ணகை, கண்ணகி கன்னகை
கோவிலப்பெருமாள்
மாதேவி
வசந்தமால (மாதவி தாய்)
வரணமாலை (கோவிலன் தாய்)
பாண்டியமன்னன் (கண்ணகியின் தந்தை)
கோவிலிங்கி (பண்டியன் மனைவி)
பாண்டிய மன்னன்
(மோர் விற்கும் பெண்) சிற்றடிசி
வன்னியதட்டான்

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் மிகுதியும் மாற்றம் பெற்றுள்ளது. மேலும் வரணமாலை கோவிலனின் தாய் எனும் செய்தி மன்னான் கதைப்பாடலில் இடம்பெற்றுள்ளது. மேலும் கண்ணகி காளியின் மறுரூபமாகப் பிறப்பதாகக் கதைப்பாடல் கூறுகின்றது. கதைப்பாடலில் கோவலன் கண்ணகியின் தாய் தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, சிலம்பில் கோவலன் கண்ணகியின் தாய், பெயர் குறிப்பிடப்படவில்லை. மேலும் வசந்தமாலை என மாதவியின் தாய் பெயரை கோவிலன் சரித்திரம் முன் வைக்கின்றது. ஆனால் சிலம்பில் வசந்தமாலை கண்ணகியின் தோழியாகச் சுட்டப்பட்டுள்ளால். மேலும் கோவிலன் சரித்திரத்தில் குறிப்பிட்ட பெயர்களைத் தவிர பட்டர், குலவேடர், சித்திரக் குறத்தி, சோமலிங்கம், சுந்தரலிங்கம். போன்ற கதைமாந்தர்களே இடம் பெற்றுள்ளனர். மாறாக சிலம்பில் 53 கதைமாந்தர்கள் இடம்பெற்றுள்ளனர். பெயர்களில் இருகதைகளும் வேறுபட்டாலும் கதை கருவாக இருக்கும் கோவலன், கண்ணகி, மாதவியின் செயல்களில் எந்த மாற்றமும் இல்லை என்றே கூறலாம், காரணம் இருகதையிலும் கோவலன் கண்ணகிக்கு திருமணம் நடைபெறுகிறது. பின் கோவலன் மாதவியை தேடி செல்கின்றான். இறுதியில் துன்பமடைகின்றான் என்ற கருத்தே கூறப்பட்டுள்ளது..

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கதைபோக்கு

கதைப்போக்கில் இருகதைகளுமே வேறுபடுகின்றன. சிலம்பில் இலக்கிய நடை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலம்பு கதை, கோவலன், கண்ணகி திருமணத்தில் தொடங்குகிறது. ஆனால் கோவிலன் சரித்திரத்தில் கோவிலனின் தாய் தந்தையர் திருமணம் முதல் கூறப்பட்டுள்ளது. மேலும் சிலம்பில் கோவலன், கண்ணகியின் இல்லற வாழ்வு கூறப்பட்டுள்ளது. கதைப்பாடலில் கோவலன் திருமணம் முடிந்த அன்றே மாதவியின் கூத்து பார்க்கச் செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாதவியுடனும் அவன் நீண்ட நாட்கள் இன்புற்றிருந்த செய்தி மன்னன் கதைப்பாடலில் இடம்பெறவில்லை மாதவி கேவலமாக கோவலனை நடத்திய முறையே இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சிலம்பில் கௌந்தியடிகள் மாடலமறையோன் போன்றோர்கள் கதை நகர்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ள போதும் கதைப்பாடலில் இந்நிலை காணப்படவில்லை. இளங்கோ தன் கதையை மெருகூட்டுவதற்காக சில கதைமாந்தர்களை படைத்துள்ளார் என்று தோன்றுகிறது. மாதவியுடன் சென்ற கோவலன், கண்ணகியிடம் மீண்டு வருவது இருகதைகளிலும் ஒரே மாதிரியாகவே உள்ளன. மாதவியின் கடனை மீட்டவே இருகதைகளிலும் கோவலன் கண்ணகியின் சிலம்பை கேட்பதான நிலை கூறப்பட்டுள்ளது. ஆனால் இதற்கிடையில் கோவிலன் சரித்திரத்தில் சிறு சிறு உதிரிப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிலம்பில் இளங்கோவடிகள் அவ்விடத்தை நிரப்ப உட்கதைகளைப் புகுத்தியுள்ளார்.

கதை முடிவுகள்

கதையின் முடிவை நோக்கும் பொழுது, கோவலன் சிலம்பு கொண்டு மதுரைக்குச் செல்லுவதற்கு முன் கண்ணகியை (இடையப்பெண்) அடைக்கலமாக விட்டுச் செல்வது இருகதையிலும் ஒரே போன்றே உள்ளது. மேலும் கோவலன் வன்னியத்தட்டானின் (பொற்கொள்ளன்) சூழ்ச்சியில் ஏமாற்றப்படுதலிலும் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் கதைப்பாடலில் கோவலன் இறந்த செய்தியை கண்ணகியே மாதவிக்குக் கூறுவதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும் கதைப்பாடலில் கோவலனே தன் தலையைப் பிளந்து இறந்துபடுவதாகச் சுட்டப்பட்டுள்ளது கோவலனின் சிதைக்கு தீயூட்டும் செய்தியும் கூறப்பட்டுள்ளது இங்கு குறிப்பிட்ட மூன்று நிகழ்வுகளுமே சிலம்பில் அதே செய்தி சிறுசிறு மாற்றம் செய்யப்பட்டு தமிழ் மரபுக்கு ஏற்றார் போல் கூறப்பட்டுள்ளது. இறுதியில் பாண்டிய மன்னனே தன் தவறை உணர்ந்து இறந்துபடுவதாக சிலம்பு சுட்டிக் காட்டுகின்றது. கதைப்பாடலில் கண்ணகி மன்னனிற்குத் தண்டனைக் கொடுப்பதான முறை கூறப்பட்டுள்ளது. மேலும் கோவலனை ஏமாற்றியவர்களில் அனைவருமே கண்ணகியால் கொள்ளப்படுகின்றனர். முடிவில் மதுரை மாநகர் தீக்கு இறையாகிறது. இந்நிகழ்வும் சில மாற்றங்கள் பெற்றாலும் மதுரை தீக்கு இறையாவது ஒரே போலவே உள்ளது.

இருகதைகளிலும் இடைச்சொருகல்கள்

மன்னான்களின் கதைப்பாடலில் சொல்லு பாட்டு என்ற நிலையில் கதைப்பாடல் பாடப்படுகிறது. இதில் சொல்லு எனும் பகுதியின் வழி கோவிலன் கதை சிறப்பாகக் கூறப்படுகிறது. சொல்லும் பாட்டும் மாறி மாறியே பாடப்படுகிறது. பாடலில் தொய்வு ஏற்படாமலிருக்க இடைஇடையே சிறுசிறு பாடல்கள் பாடப்பட்டுள்ளது.

> “தன்னே தன தந்தனனானே .... னானே
> தன்னே தன தந்தனானோ னானே...
> …..முடித்தாலொரு செப்பகப்பூவே
> முடிமேலே காணலய்யா
> அரளிப்பூ சூடலாச்சோ
> வாளாச்சிய பேசெடுத்தே.........” (மன்னான் க.பாடல்)

இதைப்போன்றே அதிகமான பாடல்கள் மன்னான் கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளது. ஆனால் இளங்கோவடிகள் தன் எழுத்துத் திறத்தை மெருகூட்டவும் கதையைச் சுவாரசியமாகக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கூறவும் பல உத்திகளை மூன்று காண்டங்களிலும் கதைகளின் வழி குறிப்பிட்டுள்ளார். மேலும் இளங்கோ கதை தோய்வுறாமல் இருக்க பல கதைமாந்தர்களின் வழி அடுத்து எண்ணி நிகழும் எனும் எதிர்பார்ப்பைத் தூண்டும் உத்திகளை வெளிகாட்டி கதையை அமைந்துள்ளார்.

இளங்கோ கதைப்பாடலையே கதையாகப் படைத்துள்ளாரோ என்று தோன்றுகிறது. ஏனென்றால் பல நிகழ்வுகள் மாற்றிக் கூறப்பட்டுள்ளது. (எ.டு) பாண்டிய நெடுஞ்செழியன் தன் தவறை உணர்ந்து

"தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பததை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென ஆயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்" (சிலம்பு, 3110-3120)

தானே தன் உயிரை மாய்த்தக் கொள்வதாக பாடல் இடம்பெற்றுள்ளது. ஆனால்

"கோவிலன் சரித்திரத்தில்"
சூலம் தான் கய்யிலெடுத்துவிட்டேன்
பாண்டியராசன் குடலெகுத்தி உருவி
மால தரிச்சு விட்டே..........'' (மன்னான் க.பாடல்)

இப்பாடலில் கண்ணகியே சூலம் எடுத்து பாண்டியனைக் கொல்வதான நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பெண் மன்னனை பழிவாங்குதல் என்பதும், ஒரு ஆண் பெண்ணால் கொள்ளப்படுதலும் தமிழ் மரபுக்கு மாறானது என்று கருதி இளங்கோ இதில் மாற்றல் செய்துள்ளார் என்று தோன்றுகிறது.

மேலும் சிலம்பில் கண்ணகி தன் இடதுமுலையைக் கையால் திருகிச் சுற்றி எறிகின்ற செய்தியும் பின் தீக்கடவுள் வெளிப்பட்டு கண்ணகியின் ஏவற்படி நல்லுயிர்களைச் சாராது கூடல்நகரைக் கொளுத்தின செய்தி கூறப்பட்டுள்ளது.

''இடமுலை கையாற்றிருகி மதுரை
வலமுறை மும்முறை வாரா அலமந்து..." (சிலம்பு 3160)

ஆனால் மன்னான் பழங்குடியினரின் பாடலில்,

''கன்னகயும் தன்னெ அந்துரமாகெ
நின்றுவிட்டெ...........
தன்னோடெ வலதுமார்வெ பிடிச்சு
வலிச்செறியும் போதோ
அதும் தான் பால்ப்பெட்ட இடங்களெல்லாம்
அக்கினியாதெ பொருந்திக் கொண்டுமே
இறுக்கக் கண்டேன்...........'' (மன்னான் க.பாடல்)

இருகதைகளையும் ஒப்பிட்டதன் வழி இடைச்செருகல்கள் மட்டுமே இருகதைகளிலும் வேறுபடுகிறதே தவிர கதை கரு ஒன்றாகவே உள்ளது புலனாகிறது. மேலும் கதை மாந்தர்களையும், கதையின் ஓட்டத்தையும் நோக்கும் பொழுது இளங்கோ இவ்வாய்மொழி கதையையே காப்பியமாக உருவாக்கியுள்ளார் என்று தோன்றுகிறது. தமிழகத்தல் நிகழ்த்தப்பட்டும், பாடப்பட்டும் வரும் கோவலன் கண்ணகி கதைகளில் கதை ஓட்டம் ஒற்றுமையுடையதாகவே காணப்படுகிறது. "கூத்தும் சிலம்பும்" எனும் நூலிலும் முனைவர் அறிவு நம்பி "சிலம்பதிகாரக் கதைக்கு மூலவித்து, நெருக்கூத்துக்கதையே" என்னும் கருத்தை நிறுவ பல ஒப்புமைகளை "கோவலன் வட்டப்பாறையில் வதைப்பட்ட கோவலன் கண்ணகி நாடகம்" எனும் தெருக்கூத்துக் கதையின் வழி நிறுவியுள்ளார். ஒட்டுமொத்தத்தில் இளங்கோ

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வாய்மொழியாக வழங்கி வந்த 'கோவலன் கண்ணகி' கதைகளை திரட்டி அதை சாராம்சமாகக் கொண்டு சிலம்பு காவியத்தை ஒவியமாக்கியுள்ளார் என்பது தெளிவாகிறது..

பயன்பட்ட நூல்கள்

1. *கோவிலன் சரித்திரம்*
2. *சிலப்பதிகாரம்*
3. *மன்னான் கதைப் பாடல்*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிற்றிலக்கியங்களில் மன்னர்களின் மாண்புகள்

The Qualities of the Kings in "Sittrilakiyam"

கா. கவிப்பிரியா, தமிழ் ஆர்வலர்,
சவுடம்மன் கோவில் சந்து, போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.

Abstract

The present article gives details on the benevolence and valour of the kings found in the "Sittrilakkiya" collection. These works were mainly written in the 16th Century. They are totally ninety six books. These books have the concepts based on the internal and external life of the people. The present paper focuses on the works such as "Kalingathuparani", "Nandhikalambagam" and "Kailayathasar Sathakam" to bring down the qualities of the kings as portrayed in these works. They live a life of valour and virtue and so that their lives are spoken today. Therefore, the article focuses on the facts registered in the select works.

Keywords: Quality of Kings, *Sittrilakiyam, Valour*

தமிழ் இலக்கியங்கள் நற்சிந்தனைகளையும் அறநெறிகளையும் எடுத்துக்கூறும் சிறப்பினவாகும். தமிழ் இலக்கியக் களம் பரந்து விரிந்தது. காலம் தோறும் தோன்றி வளர்ந்த சிறப்பு வாய்ந்த இலக்கியங்களைக் கொண்டது. அவற்றுள் சிற்றிலக்கியங்களுக்கு சிறப்பான இடம் உண்டு. கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் என்ற பாட்டியல் நூலின் கூற்றுப்படி சிற்றிலக்கிய வகைகள் தொண்ணாற்றாறு ஆகும்.

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணாற் றாறுஎன்னும்
தொகையதுஆம்"

சிற்றிலக்கியம் அளவில் சுருங்கிய அமைப்பு உடையது. பல சிற்றிலக்கியங்கள் அகப்பொருள் அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும். பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப் பட்டிருக்கும். அறம். பொருள். இன்பம். வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம் ஆகும்.

சிற்றிலக்கியங்கள் வடமொழியில் பிரபந்தங்கள் எனப்படுகின்றன. சமஸ்கிருதத்தில் பிரபந்தம் என்னும் சொல், "கட்டப்பட்டது" எனப்பொருள்படும்.

"இயல்புளிக் கோலாச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு"

என்ற வள்ளுவரின் கூற்றுப்படி செங்கோல் முறை தவறாது ஆட்சி செய்யும் மன்னனின் நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைச்சலும் ஒரு சேர ஏற்படும். அத்தகைய நாட்டில் மக்கள் நலனும் கால்நடைகள் நலனும் செல்வ வளமும் பேணப்படும். அத்தகைய மன்னர்களின் ஆட்சி செய்யும் சிறப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கலிங்கத்துப் பரணியில் மன்னரின் போர் செய்யும் சிறப்புகள்

சயகொண்டரால் கலிங்கத்துப் பரணி இயற்றப்பட்டது. இவர். இந்நூலின் பாட்டுடைத் தலைவனாகிய விசயதரனது அரண்மனைப் புலவர் ஆவார். சோழமன்னர் விசயதரன் ஆணையை ஏற்று கருணாகரத் தொண்டைமான் தலைமை ஏற்று சென்ற சோழர்படை கலிங்கரை வெற்றிக் கொண்டு வாகைசூடியது. இவ்வெற்றி காரணமாகக் கங்கைகொண்ட சோழபுரத்துப் பரணி விழா பெருஞ் சிறப்போடு கொண்டாடப் பெற்றது. தம் வேந்தனின் புகழ் என்றும் நிலைத்து நிற்க விருப்பம் கொண்ட சயகொண்டார், இவ்விழாவினை ஏற்ற தருணமாகக் கொண்டு, கலிங்கத்துப் பரணி என்னும் நூலை அனைவரும் போற்றும் வகையில் இயற்றி மன்னர் விசயதரன் முன்னிலையில் பாடியருளினார். இந்நூலின் சிறப்பினை புலவர் ஒருவர், “பரணிக்கோர் சயகொண்டார்” எனப் புகழ்ந்து கூறினார்.

போரிலே ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி பெறும் வீரர்கள் மேல் பாடப்படுவது பரணி இலக்கியமாகும். போரில் தோற்ற மன்னன் நாட்டில் போர்க்களம் அமைத்துப் போர் செய்து, வெற்றி பெறுவதால் தோற்ற நாட்டுப பெயரால் நூலை வழங்குவது மரபு. பரணி என்னும் சொல்லானது, காடுகிழவோன், பூதம், அடுப்பு, தாழி, பெருஞ்சோறு, தருமன் நாள், போதம் என்னும் பல பொருள்களைத் தரும்.

சோழரின் கீழ் அரைச்சராகவும் படைத்தலைவராகவும் அதிகாரியாகவும்இருந்ததோடு தொண்டை நாட்டில் மட்டுமின்றிச் சோழ நாட்டிலுள்ள சிறிய மற்றும் பெரிய ஊர்களில் தலைவர்களாக இருந்தவர்களுள் கருணாகரனும் ஒருவர். கருணாகரன்,விசயதரனது முதன் மந்திரியும் அவனது சக்கரமாகப் படைத்தலைமை பூண்டு கலிங்கத்தே சென்று போர் நிகழ்த்திக் கலிங்கரை முறியடித்து,கலிங்க வேந்தனையும் பிடித்துக் கொண்டு அவர்களின் யானை, குதிரை, செல்வம் முதலியவற்றோடு சோழ நாடு திரும்பினான்.

சோழமன்னர் விசயதரன் தன் அரசவையில் அனைவரும் கூடியிருக்கும் பொழுது திருமந்திர ஓலை நாயகன் மன்னன் முன் வந்து வணங்கி “வேந்தர் பெருமானே, தம் திறையைச் செலுத்துவதற்கு வாயிற்புறத்தே நிற்கின்றனர்” கூறி நின்று மன்னனின் நோக்கினான்மன்னன் குறிப்பறிந்து அவர்களை உள்ளே புகுத்தினான்.

> “தென்னவர் வில்லவர் கூவகர்
> சாவகர் சேதிபர் யாதவரே
> கன்னடர் பல்லவர் கைதவர்
> காடவர் காரிபர் கோசலரே.”[1]

எனத் தொடங்கும் பாடலில் பல தேசத்து அரசர்களெல்லாம், விசயதரன் மன்னனை வணங்கி தங்களுக்கு செலுத்த வேண்டிய திறைகளை எல்லாம் தவறாமல் கொண்டு வந்து இருக்கின்றோம் ஏற்றருள்க எனக்கூறி

> “ஆரமிவை யிவை பொற்கல மானை யிவையிவை யொட்டக
> மாடமியலவை மற்றிவையாதி முடியொடு பெட்டக
> .... புவையு முவையு மிலக்கணமுடைய பிடியுவை புட்பக
> முயர்செய் கொடியிவை மற்றிவை யுரிமை யரிவையர் பட்டமே.” [2]

தாங்கள் கொண்டு வந்திருந்த கப்பங்களை எல்லாம் கொண்டு முன் நின்றனர். திறைகளை எல்லாம் செலுத்திய அரசர்களுள் சிலர் தாங்கள் கொண்டு வந்திருந்த கப்பங்களின் சிறப்புகளைக் கூறி செலுத்தினர். அவர்களுள் திறை செலுத்தாத கலிங்கரை தம் நாட்டு யானைப் படைகனைக் கொண்டு மதியூக மந்திரியும் தலைமை சேனாதிபதியுமான கருணாகரத் தொண்டைமானிடம் வென்று வருக என்று கட்டைளையிட்டான். சேனாதிபதியும் மன்னனை நோக்கி “வேந்தர் வேந்தே! யானைப் படை எடுத்துச் சென்று ஏழு கலிங்கங்களையும் அழித்து வருவேன்” என்று கூறினார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மண்ணோரும் விண்ணோரும் அதிசயிக்கும் வண்ணம் நாற்றிசைகள் எங்கும் நால்வகைப் படைகளும் திரண்டு பரந்து நின்றன. போர்முனையில் யானைகளும் குதிரைகளும் முழங்கி நின்றன.

"...........போர்
எடுமொடு மெடுமென வெடுத்தோ
ரிகலொலி கடலொலியிகக்கவே
விடுவிடு விடுபரி கரிக்குழாம்
விடும்விடு மெனுமொலி மிகைக்கவே.
.... குருதியி னதிவெளி பார்க்கவே
குடர்நிரை நுரையென மிதக்கவே"
கரையென விருபடை கிடக்கவே." [3]

படை எடும் எடும் என எழுந்த ஓசை கடலொலியைக் கடந்தது. பரிகளை விடும் விடும், யானைகளை விடும் விடும் என இருதிறபடைகளும் கூவுமோசை மிகுந்தது. வரிந்து கட்டிய வில்லின் நாணை அச்சந்தரும்படி தெறிக்கும் ஓசையால் வெடித்தன. பரந்து விரிந்த கடலைப்போல் இருபடைகளும் இருந்தன. திரையோடு திரை எதிர்த்தது போல் பரியோடு பரி பொருந்தின. மலையோடு மலை மலைவதுபோல் மதயானைகள் மலைந்தன. முகிற் கூட்டத்தோடு முகிற் கூட்டம் எதிர்ப்பதுபோல் இரதமும் இரதமும் எதிர்த்தன. வலிய புலியோடு புலி எதிர்ப்பதுபோல வீரரோடு வீரர் எதிர்த்தனர். சிங்கத்தோடு சிங்கம் எதிர்த்தது போல் அரசரும் அரசரும் எதிர்த்தனர். இரத்த ஆறுகள் பெருகின. களிறுகளின் கொம்புகளிடையே நெருப்பு பொறிகள் பறந்தன. ஒப்பிலாத விற்படை அக்கினிசட்டி போன்று எரியும் நெருப்பு போன்று இருந்தது. எதிர்த்தவர்களை உடல் இரு வகிர்படும்படி வாளால் வெட்டினர். வீரர் ஏவிய சக்கரப் படைகள் மறித்தெறிந்த தண்டுகளுள் நுழைந்து கையில் ஏந்திய கூர் மழுக்கள் போன்றன. அம்பில்லாத சில வீரர்கள் மார்பில் தைத்த அம்பைப் பிடுங்கிச் சாபத்திற்றெடுத் தெய்தனர்இப்போரைக்காண தேவர்களும் முந்தினர். இருதிறபடைகளும் விடாதும் இளைக்காதும் தங்கள் அதிவீர செயல்களைக் காட்டினாலும்இப்போரில் சிலர் சிதைந்து ஓடினர், சிலர் ஓடுமிடத்து தமது நிழலைக் கண்டு, தம்மை துரத்தி வரும் சோழ வீரரென்று அஞ்சினர். ஒத்த பலத்தோடு போர் புரிந்தாலும் சோழர் படை போரை வென்று வாகை சூடியது.

இப்போரில் தப்பியோடியவர்களே பிழைத்தனர். கடல் போன்ற கலிங்கரது படையை வென்று வெற்றிக்கொடியை நாட்டி மதயானைகளையும் வலிய குதிரைகளையும் வீழ்த்தும் வாளுடைய அபயன் அடியன் வண்டையர்க்கு அரசனாகிய தொண்டைமான் அருளோடு சூடினான்.

நந்திக் கலம்பகத்தில் மன்னரின் வீரச் சிறப்புகள்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் தோன்றிய இலக்கியம் நந்திக் கலம்பகம். கலம்பகம் நூல்களில் நந்திக் கலம்பகம் தலைமை இடம் கொண்டது. தொள்ளாற்றில் நடைபெற்ற போரில் பகைவர்களை வென்று வாகைசூடிய தொண்டை மண்டலத்தைச் சிறப்புடன் ஆண்ட மூன்றாம் நந்திவர்மனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. இந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை. நந்திக் கலம்பகத்தில் நந்திவர்மனின் புகழ், கொடை,வீரம், கல்வி முதலியவற்றை மிக இனிமையான அகப்புறக் கருத்துக்கள் வாயிலாக எளிதாக அறியலாம். பல்வேறு பூக்களைத் தொடுத்து மாலையாக்கிக் கதம்பம் எனக் கூறுவது போல, பல்வேறு கலம்பக உறுப்புகளும் பா வகைகளும் கலந்து வர யாக்கப்படுவது கலம்பகமாகும்.

நந்திவர்மனிடம் இருந்து அரசைக் கவரும் எண்ணத்தில் நந்திவர்மனின் தம்பியால் ஒழுங்குசெய்யப்பட்டு அறம் பாடுதல் என்னும் முறையில் இப்பாடல்கள் பாடப்பட்டன. அறம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வைத்துப்பாடிய நூலின் பாடலைத் தற்செயலாகக் கேட்ட நந்திவர்மன் அப்பாடலின் சிறப்பில் மனம் பறிகொடுத்து பாடல் முழுவதையும் பாட விரும்பினான். நூல் முழுவதயும் கேட்டால் மன்னன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும் தமிழன் மீதுள்ள தனியாத காதலால் உயிரையும் பொருட்படுத்தாது, எரியும் பந்தலின் கீழிருந்து கேட்டு உயிர் இறந்தான் என்று கூறப்படுகிறது.

"ஒருபெருங் கடவுணிற் பரவுதும் எங்கோன்
மல்லை வேந்தன்: மயிலை காவலன்:
பல்லவர் தோன்றல்: பைந்தர் நந்தி:
வடவரை அளவும் தென்பொதி அளவும்
விடையுடன் மங்கல விசையமும் நடப்ப
ஒரு பெருந் தனிக்குடை நீழல்
அரசுவீற் றிருக்க அருளக எனவே." [4] (பா.எ. 1)

மாமல்லபுரத்து மன்னன், மயிலாப்பூருக்குக் காவலன், பசியமாலை அணிந்த பல்லவர் குலத்தில் உதித்த நந்திவர்மன் வடக்கே இமயமலை வரையும் தெற்கே பொதியமலை வரையும் ஒரே வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்து ஆள்வதற்கு எதனினும் ஒப்புமை சொல்ல இயலாத தனிப்பெரும் கடவுளாக விளங்குகின்ற சிவபெருமானே இடபக்கொடியோடு மங்கலமான வெற்றியை வழங்கி அருள் செய்ய வேண்டும் எனப்பாடுகிறார்.

செலுத்த வேண்டிய திறைப் பொருளை கொடுக்காமல் விடுத்த மன்னர்களிடம் நந்திவர்மன் கோபம் கொண்டு எதிர்த்துப் போரிட்டால், அப்போரில் தோல்வியடைந்து, நாட்டை இழந்து,நந்திவர்மனின் ஐராவதம் என்னும் யானையிடம் இறக்க நேரிடும்.

"ஆட்குலாம் கடற்படை அவனி நாரணன்
.... மீட்கலாம் மடல்கையில் விரவும் ஆகிலே." [5] (பா.எ. 18)

என்ற பாடலில் அதிக போர் வீரர்களையும் கப்பல் படைகளையும் கொண்ட நந்திவர்மன் பெரும் எண்ணிக்கையுடன் போர் புரிந்ததை வாள் போன்ற கண்களை உடைய அழகிய மகளிரினால் ஏற்பட்ட மயக்கம் தரும்காதல் நோயிலிருந்து மீள, பனைமடலால் ஆன தேரில் ஏறினால் தான் முடியும் என்ற அகப்புறக் கருத்துக்கள் வாயிலாக அவனுடைய படைகளையும் அடிக்கடி போர் புரிந்ததையும் விளக்குகிறார்.

நந்திவர்மனின் கண்கள் சிவந்தால் பகை நாடுகள் தீயினால் சிவக்கவும் அவனது வாள் உறையில் இருந்து நீக்கப்பட்டால் பகை மன்னர்களின் தலை உருளவும் அவனது சங்கு முழங்கினால் பகை மன்னர்களின் மனம் அச்சத்தால் துன்புறவும் அவனது மதயானை அலங்கரிக்கப்பட்டால் பகை மன்னர்களின் உடலில் இருந்து இரத்தம் பெருகும். மேலும் பகைவர்கள் படைவலிமையினால் கைப்பற்றிய நிலம் முழுவதையும் நந்திவர்மன் தன்னுடைய தோள்வலிமையினால் மீட்டவன்.

"கொம்புயர் வாம்மைநாகம் எதிர்வந்த நந்தி
.... வளைகொண்ட தென்ன வலமே? [6] (பா.எ. 81)

என்ற பாடலில் இளம் பெண்கள் நந்திவர்மன் மீது காதல் கொண்டு மெலிந்து அவர்கள் கையில் அணிந்திருந்த வளையல்கள் பகைவர்களை அழித்து, தான் தோற்க வேண்டும் என்ற தம்பியரின் எண்ணத்தினைப் பொய்யாக்கி, சேர, சோழ, பாண்டியர்கள் இறந்து போகும்படி வெற்றி கொண்ட கொடை வழங்கும் பாரியை ஒத்தவனாகிய நந்திவர்மனைக் கண்டவுடன் கழன்று விழுகின்ற செயல் முறையானதோ? என்ற அகப்புறக் கருத்துக்கள் மூலம் நந்திவர்மனின் வீரத்தை விளக்குகிறார்.

கயிலாசநாதர் சதகத்தில் மன்னரின் ஆட்சி செய்யும் சிறப்புகள்

தமிழ் இலக்கயத்தில் சொல்லப்படும் அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு நூறு பாடல்களால் பாடப்படுவதே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சதகம் என்பது பாட்டியல் நூல்களில் சொல்லப்படும் இலக்கணம். சதம் என்பது நூறு எனப் பொருள்படும் வடமொழிச்சொல். ஆகவே நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் சதகம் எனப்பட்டது.சதகம் இலக்கியம் என்பது சொற்செறிவும் கற்பனை வளமும் மக்கள் பண்பாடும் கலந்து கால ஓட்டத்தை அரவணைத்துச் செல்லும் வாழ்க்கை இலக்கியமாக அமைவது ஆகும்.

கயிலாசநாதர் சதகம் சிதம்பரபிள்ளையால் இயற்றப்பட்டது. இராசிபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானாகிய கயிலாசநாதரைப் பாட்டுடைத் தலைவானாகக் கொண்டு இயற்றப்பட்டது.

“அரசர்சிறப்பு
நீதிநெறி வழுவாது செங்கோ னடாத்துவது
நிலைமையது கோடாமலு
நிறைகுடியி லபிமான மொடுமந்திரி யோசனையு
நீள்சத்திய மிகுதானமுஞ்
சாதிமுறை யவரவர்க் கேற்றமரி யாதையுஞ்
சதுர்வித வுபாயங்களுஞ்
......கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (பா.எ. 4)

இப்பாடல் மூலம் நாட்டில் நீதிநெறி வழுவாமல், செங்கோல் வழுவாமல் நடுவுநிலைமையுடன் நீதி முறைப்படி ஆட்சி செய்தலும், நாட்டிலுள்ள மக்களிடம் அன்பும் கருணையும் கொண்டு இருத்தலும்,அறிவு நிறைந்த மந்திரிகளையும் ஆலோசனை கூறும் ஐம்பெருங்குழு, எண்பேராயம் ஆகிய குழுக்களைக் கொண்டிருத்தலும் சொல் தவறாமையும் தானம் வழங்குதலும் சாதிக்கேற்ற நடைமுறையுடன் எல்லா உயிர்களையும் தன் உயிர் போல் எண்ணம் கொண்டிருத்தலும் நான்கு வகை படைகளை கொண்டிருத்தலும் நடுநிலையோடு வழக்கில் நீதி வழங்குதலும் வீரமிக்க தளபதி, திறன்மிக்க ஊர்த்தலைவர்கள் கூடியிருத்தலும் உரிமை மகளிரிடம் அன்புடையவனாகவும் அவர்களின் அன்புக்குரியவனாகவும் இருத்தல் நாடாளும் மன்னனுக்குச் சிறப்புத் தருவனவாகும் என்று கூறி கைலாசநாதரை வணங்குகிறார்.

மன்னனின் சிறப்பான ஆட்சியினால் நாட்டில் சிறக்கும் நீதியும் வீரர்களின் வீரச்செயலும் பகை நாட்டை வெற்றி கொள்ளும் வலிமையும் அதிகரிக்கும்.மன்னன் வீற்றிருக்கும் அரசவை இலட்சுமி வாழும் இடமாக கூறுகிறார். நீதியுடன் நாடாளும் மன்னன் தம் உடலால் இறந்தாலும் புகழால் பூவுலகில் என்றைக்கும் நிலைபெற்று வாழ்வார்கள்.

குறிப்புகள்

1. கலிங்கத்துப் பரணி வசனம்,பக்கம் - 56, திரு. ந. சி. கந்தையர் பிள்ளை.
2. கலிங்கத்துப் பரணி வசனம், பக்கம் - 57, திரு. ந. சி. கந்தையர் பிள்ளை.
3. கலிங்கத்துப் பரணி வசனம், பக்கம் - 67, திரு. ந. சி. கந்தையர் பிள்ளை.
4. நந்திக் கலம்பகம் (மூலமும் உரையும),சீதை பதிப்பகம், ப-12, முனைவர். கதிர்முருகு.
5. நந்திக் கலம்பகம் (மூலமும் உரையும),சீதை பதிப்பகம், ப-33, முனைவர். கதிர்முருகு.
6. நந்திக் கலம்பகம் (மூலமும் உரையும்), சீதை பதிப்பகம், ப-112, முனைவர். கதிர்முருகு.
7. கயிலாசநாதர் சதகம் (மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம், ப-4, முனைவர். கதிர்முருகு.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சுஜாதாவின் "எப்போதும் பெண்" புதினத்தில் மொழிநடை உத்தி

Writing Style in Sujatha's Novel "Eppothum Pen" (Always Woman)

முனைவர். S. கிரேசிராணி, உதவிப்பேராசிரியர்,
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, பெரம்பலூர்.

Abstract

The article focuses on the way of writing in the eminent novelist Sujatha's novel "Eppothum Pen". There must be backdrop in every writing and that can be easily estimated through the writing style of the writer. The quality of the fine words chosen apt to the situation of the plot is the art of writing in an individual way. This is seen evident Sujatha's writing. Different types of writing techniques are used by the writer and to find and discuss is the purpose of the study.

Keywords: Writing Style, Sujatha's Novel "Eppothum Pen"

முன்னுரை

மொழி நடை என்பதற்கு சிலர் "சொற்களை தொக்கும்முறை என்று கூறுகிறார்கள். எழுத்தாளர்களின் பல்வேறு வகையான படைப்புகளைப் படிக்கும் நிலையில் படிப்போரைக் கவர்ந்து வயப்படுத்தும் கருவி, கவிஞனின் தனித்தன்மை, கவிஞன் உணர்த்தும் உத்தி, இலக்கிய உச்ச நயம், பொது மொழியினை இலக்கிய மொழியாக மாற்றும் போது ஏற்படும் மரபுப் பிறழ்ச்சிகளே மொழி நடையில் சிறப்புக் கூறுகள்" என பொன்னுத்துரை, கிப்பன், எட்வர்ட், மர்ரே, ஷாலிடே போன்றோர் மொழி நடைக்கு விளக்கம் கூறினாலும் மொழி நடை என்பது இதுதான் என யாரும் வரையறை செய்ய முடியாது மொழி. இலக்கியப் படைப்பாளி தான் கூறவரும் கருத்தைத் தன் அனுபவம் தோன்ற தனக்கேயுரிய முறையில் வெளிப்படுத்தும் பாங்கு" மொழி நடையாகும்.

ஒரு மொழியின் நடையமைப்பு விளக்கத்தில் நடையியல் உத்திகளும் முக்கியப்பங்கினைப் பெறுகின்றன. இவ்வுத்திகள் யாவும் மொழியமைப்பையும், பொருளையும், மொழிப் பயன்பாட்டையும், அடிப்படையாகக் கொண்டவையாகும். மேலும் மொழியானது வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் சில கோட்பாடுகளின் அடிப்படையிலும் சில உத்திகள் இடம் பெற்றுள்ளன. ஒரு மொழியின் நிறைவான மற்றும் தெளிவான நடையமைப்பு விளக்கத்திற்கு இவ்வுத்திகள் மிகவும் தேவைப்படுகின்றன. எனவே நடையமைப்பு விளக்கமானது நடையியற் கூறுகளை இவ்வுத்திகளின் மூலம் விளக்கும் பொழுது நிறைவும் தெளிவும் பெறுகிறது. இதன் அப்படையில் ஒலிக்கட்டமைப்பு, சொல்லாட்சி, தொடரமைப்பு, நிலைகளில் சுஜாதாவின் விருப்பக்கூறுகள், திரும்பத் திரும்ப பயன்படுத்தும் கூறுகள் என்ற அடிப்படையில் இப்புதினத்தில் சுஜாதாவின் நடை கீழ்க்கண்டவாறு ஆராயப்படுகிறது.

1. ஒலிநிலை உத்தி
2. சொல்நிலை உத்தி
3. தொடர்நிலை உத்தி

1. ஒலிநிலை உத்தி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இப்புதினத்தில் வேற்றுமொழிச் சொற்கள் கலந்துள்ளதால் தமிழ் ஒலியன்கள் தவிர ஸ (ளு), ஷ (ளு), ஜ (து), ஹ (ர்) என்ற ஒலியன்கள் இடம் பெறுகின்றன. கஷ்டம், அவஸ்தை, சிருஷ்டி, ஜோடி போன்ற சொற்கள். பயன்படுத்தப்படுவதன் மூலம் -ளவ-இ -ளவ- போன்ற தமிழில் இல்லாத மெய் மயக்கங்கள் காணப்படுகின்றன.

சே, சீ, ம், உம், சேச்சே, விராட், சீ, ஓ, பச் போன்ற தமிழ் ஒலியன்கள்தனி சொல் போன்று பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓ (மு) என்ற ஒலிக்குறிப்புச் சொல் உற்சாகம், தனக்குத் தெரியும், என்ற சூழலிலும் ம், உம், ம்ஹீம் என்ற ஒலி குறிப்புச் சொற்கள் குழந்தையின் முனங்கல் சூழவிலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டளது சேச்சே, ம்ஹீம், என்பது மறுப்புச் சூழலிலும் பச், ச் என்பது எரிச்சல் சூழலிலும் அதீதமான எரிச்சலின் போது 'சீ' என்ற ஒலியன் தொடர்ச்சியாகவும் பயன்படுத்தப்படுகிறது விராட் என்பது குழந்தையின் அழுகையாகவும் பயன்படுத்தப்படுகிறது.

2. சொல்நிலை உத்தி

ஒரு படைப்பாளன் தனது கதைக்கருவை விளக்கத் தோந்தெடுக்கும் சொற்தேர்வு முறையில் சிறப்பாளனாக விளங்க வேண்டும். அப்பொழுது தான் படைப்பாளனின் புலமை ஆற்றல் அச்சொற்களில் வெளிப்படும். மேலும் ஆசிரியர் பயன்படுத்தும் சிறப்புச் சொற்கள் அவரின் விருப்பக் கூறுகள் வாயிலாகவும், படைப்பாளனின் தனிநடையை கண்டறிந்து கொள்ளலாம். பாரதியார் தான் சொல்ல வந்த கருத்து மக்களிடம் சென்று சேர வேண்டும்மென்பதற்காகவும் கருத்து விளக்கம் பெறுவதற்காகவும் திருப்பிக்கூறல் உத்தியை கையாண்டுள்ளார். சுஜாதாவும் இப்புதினத்தில் தேவைகருதி "அம்மா அம்மா" ஒன்றுமில்லை ஒன்றுமில்லை (ப.157) இட்டேச்சு இட்டேச்சு" (பக்.56) "அக்சச்சோ அச்சச்சோ" (பக்.34) கடன்காரா கடன்காரா (பக்.26) பாரத்தியா பார்த்தியா (பக்.149) என்று சொற்களை இரண்டு முறை பயன்படுத்துகிறார். கடன்காரா நெளிந்து திருதிரு என்ற சொற்கள் திரும்பத்திரும்ப பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதால் இவை சுஜாதாவின் விருப்பக் கூறுகளாக அமைகின்றன.

கதை நடுத்தரவ ர்க்கமாக வாழும் பிராமணக் குடும்பத்தைச் சுற்றியே அமைவதால் மொழிப்பயன்பாடு மற்றும் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ப மனுஷப' பிரஜை, சந்தோஷம், சிருஷ்டி, விஷமம், அவஸ்தை, கஷ்டம், புஜம், வாஸ்தவம், ராஸ்கல், ஜலம், மைழுக்காளம், போன்ற வடமொழிச் சொற்களும், டெஸ்ட், யூரின், ஹஸ்பெண்ட், மிஸ்டர், காம்ப்ளிகேஷன், ஆபரேஷன், ஆஸ்பத்திரி, ரிஸ்க், பீளிடிங், டெத், ஸ்டாப், ஹால், லைப்ரரி, பொசிஷன், போன்ற ஆங்கிலச் சொற்களும், இடம் பெற்றுள்ளன. சுஜாதா கருத்துத் தெளிவிற்காகவே பிறமொழிச் சொற்களை பயன்படுத்தியுள்ளரா? என்பது மேலும் ஆய்விற்குரியது பிறமொழிச் சொற்கள் கதைமாந்தர். கூற்றுக்களில் இடம்பெறுவது இயல்பே, குறிப்பாக ஆசிரியரின் கூற்றுக்களிலும் அதிகமாக இடம் பெறுவதால் தனித்தமிழ் பற்றி சுஜாதா அவர்கள் அதிகக் கவனம் எடுத்துக் கொள்ளவில்லையோ என்ற எண்ணத்தை தமிழ்மொழிப் பற்றாளர்கள் உள்ளத்தில் ஏற்படுத்துகிறது.

நமச்சிவாயத்தின் மனைவி பத்மாவை விவரிக்கும்போது ஆசிரியர் நமச்சிவாயத்தின் வயது நாற்பத்திநாலு. அவருடைய மனைவி அவரைவிட தாட்டியாக ஏராளமாக இருந்தாள். முப்பது வயதில் ஒடிசலாக இருந்தால் என்பதற்குச் சாட்சியாகப் போட்டோ படங்கள் இருந்தன." (பக்.45) எனக் கூறுவதின் மூலம் தாட்டியாக ஏராளமாக என்ற சொற்களின் மூலம் நமச்சிவாயத்தின் மனைவி எவ்வளவு குண்டாக இருக்கிறாள் என்பதைப் படிக்கும் வாசகரின் மனதில் ஏற்படுத்தி விடுகிறார்.

சொற்களில் சிலவற்றை மாற்று உருபன் என்ற நிலையிலும் பயன்படுத்துகிறார். எசகுபிசாகாக எங்கேயோ காலை வைத்து என்பதற்சு மாறாக எசகேடாக எங்கேயோ காலை வைத்து (பக்.18) என்றும் நொண்டி நொண்டிக் கிட்டாவது என்பதற்கு மாறாக "தேச்சு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தேச்சுண்டுக்கிட்டாவது" (பக்.23) "தக்தக்கா பித்தக்கா என்று நடக்க என்பதற்கு மாறாக தக்காபிக்கா என்று நடக்க என்றும்" (பக் 101) உருபன்களைக் கையாண்டுள்ளார்.

3. தொடர்நிலை உத்தி

"திருமந்திரத்திலே சொல்வதைப்போல நாம எல்லோருமே போகப்போறம்னு வெச்... இத்தாங்க சாக்லெட்டு பழம்" (பக்.47) என எச்சத் தொடர்களும் எங்கேயோ இதுக்கு மூக்கில வோக்கிறது என்ற மரபுத் தொடர்களும், "காரில் ஒரு கண்ணாடிப் பொருள்போல் கிடத்தப்பட்டாள்" (பக்.61) என்ற உவமைத் தொடர்களும் இடம் பெற்றுள்ளன. சொள்களை இரண்டுமுறை கூறுவது போன்று தெடர்களையும் தேவை கருதி இரண்டுமுறை கூறிச் செல்கிறார்.

எ.கா. "அம்மா எழுந்திருக்க மாட்டா. அம்மா எழுந்திரக்க மாட்டா" ஓடிப்பிடித்துக் கொண்டு சூரிய ஒளியில் கரைகிறார்கள். எதற்கு, அன்று பார்த்த ஒரு காட்சிக்காகவா? அதுதான் லட்சியமா? அவ்வளவு அசிங்கமா? எல்லாமே எத்தனை வேஸ்ட்" (பக்.184) என்பது போன்ற வினாத்தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் சில உத்திகள்

- வரப்போகிற பிரசவத்தில் அவள் இறந்து விடப்போவது அவளுக்கு தெரிந்திருக்கவில்லை" (பக்.26) என முன்னோக்கி உத்தி கையாளப்பட்டுள்ளது. சுஜாதாவின் 'எப்போதும் பெண்' புதினத்தில் மொழிநடை உத்தி:
- அம்மாவின் இறப்பின்போது அப்பா அம்மாவை பெண்பார்க்கப் போன நிகழ்ச்சியினை நினைத்துப் பார்ப்பதற்காக பின்னோக்கு உத்தி கையாளப்பட்டுள்ளது.
- இறப்பின்போது திருமண நிகழ்வினை நினைத்துப் பார்ப்பது போன்று முரண் உத்தியை கையாண்டுள்ளார். இப்புதினத்தின் தொடக்கத்திலும் முடிவிலுமே இவ்வுத்தியை சுஜாதா கையாண்டுள்ளார்.
- சொற்களை, தொடர்களை விரும்பக்கூறாக பயன்படுத்துவது போன்று ஆசிரியர் இப்புதினத்தில் ஒரு பத்தியையே விருப்பக் கூறாக அமைத்துள்ளார். பக்.31-ல் இதுவரை சிக்கலில்லாமல் சென்று கொண்டிருந்த பிரசவம் இப்போது பாதை மாறியது" என்று தொடங்கி "திஸ் இஸ், நார்மல், என்று சொல்லிப் போய் விட்டாள்" என பக்.32-ல் முடிகிறது. இதுபோலவே பக்.253-லும் ஒரு சொல் கூட மாறாமல் அப்படியே அமைந்துள்ளது.

முடிவுரை

காலச்சூழலுக்கு ஏற்பட நடை மாறுபடுவது போன்று ஒரு ஆசிரியரின் நடையும் உத்தி மாற்றமும் கதைத் கருவிற்கு ஏற்ப பல்வேறு நிலைகளில் மாறுபடும். சுஜாதாவின் எல்லாபடைப்புகளிலும் சில தனித்தன்மைகள் காணப்படுவதை அறிய முடிகிறது. மேற்கண்டவை யாவும் சுஜாதா இப்புதினத்தில் பயன்படுத்தியுள்ள உத்திகளே தவிர இவையே இவரின் முழுமையான நடையியல் உத்திகளாகா. இப்புதினத்தில் பயன்படுத்தியுள்ள உத்திகள் அவரது பிழற படைப்புகளிலும் காணப்படுகின்றன.

குறிப்புகள்

1. வ. ஜெயா, பாரதி மொழிநடை ப.4.
2. தமிழியல் ஆய்வு, 1994, அ. ஆவிஸ், ப. 259.
3. வ. ஜெயா, பாரதி மொழிநடை, ப. 225.
4. மேலது. ப.225.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தொல்காப்பியத்தில் வாழ்வியல் விழுமியங்கள்

Life Ethics in "Tholkappiam"

முனைவர் மா.சங்கீதா, உதவி பேராசிரியர்,
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி- 2

Abstract

The present article examines on the moral codes elicited in the world's ancient grammar book "Tholkappiam". It is not a mere a book of linguistics but a source of moral codes also. In one instance it deals with the segregation of the five types of land where they lived close to. The classification are combined into whole and called as 'Mupporul'. As told earlier, the divisions are 'Mutharporul' (Time and Land), 'Karupporul' (matter in Land and Time) and 'Uripporul' (having the events from the Mutharporul and Karupporul). These are the logical and rational identification of the Tamil people's lives seen in the famed work "Tholkappiam". 'Therefore, the article focuses on the related facts in the classic work.

Keywords: Tamil Culture, Life Ethics, *Tholkappiam*

உலகில் பல இடங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை முறையைப் பகுத்தும் வகுத்தும் பாகுபாடு செய்வது இன்றியமையாததாகிறது. அவை, மனித சமுதாயத்தின் அடிப்படை நியதிகளைக் கற்பிப்பதற்காகத் தோன்றியது எனலாம். இன்றும் தமிழ்இலக்கிய இலக்கணங்களில் வாழ்வியல் பற்றிய பல கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. ஏன் வாழ்வியல் குறித்த கருத்துக்கள் இல்லாத இலக்கியங்கள் இல்லை என்று கூட சொல்லாம். இத்தகைய சிறப்புமிக்க தொன்மையான இலக்கண நூலாக தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியம் தமிழுக்கு கிடைத்துள்ள முதல் இலக்கண நூல். இதில் காணப்படும் இலக்கண மரபுகள் பற்றி அறியும் முன்பு அந்நூல் பற்றிய அறிஞர்களின் கருத்துக்களை ஆராய்ந்து தெளிவு செய்தல் நலம் பயக்கும் எனலாம். தொல்காப்பியம் வாழ்க்கைக்குரியது என்று ஒரு சாரரும் இலக்கியத்திற்குரியது என்று மற்றொரு சாரரும் இயம்பி வருகின்றனர். அத்தகைய தொல்காப்பியத்திலிருந்து வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

இலக்கியமும் வாழ்வியலும்

வாழ்க்கையினின்று தோன்றுவது இலக்கியம், இலக்கியத்தினின்று எடுபடுவது இலக்கணம், பாலும் அமுதும் இணைந்து தயிரும், தயிரிலிருந்து மோரும், மோரிலிருந்து வெண்ணையும், வெண்ணையிலிருந்து நெய்யும் பிறப்பது போல இது ஒரு தொடர் நிகழ்ச்சியே தவிர, சுழல் நிகழ்ச்சி அல்ல என்பது பெறப்படுகின்றன. இதிலிருந்து வாழ்க்கைக்கு உரியதாகவும், இலக்கியத்திற்கு உரியதாகவும் திகழ்கின்றது. "பொருளதிகாரம் வெறும் மொழிக்கும், மொழியாலாகிய இலக்கியத்திற்கு மட்டும் இலக்கணம் வகுக்கவில்லை, அம்மொழியை பேசும் மக்களுக்கும் அவர்கள் வாழ்க்கை முறைக்கும் கூட இலக்கணம் வகுத்தது" அ.ச.ஞான சம்பந்தம்பதிவு செய்துள்ளார். இலக்கியம் வாழ்க்கைப் பற்றியது என்பதால் இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணத்தையும் வாழ்க்கைக்குரியது என்று குறிப்பிடுகிறார். "தமிழ் இலக்கணம் பொருளுக்கு விளக்கம் தருகின்றது. ஆம் வாழ்க்கைக்கு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

விளக்கம் தருகிறது. பொருள் எனினும் வாழ்க்கை எனினும் ஒக்கும்.... வாழ்க்கைக்குரிய இலக்கணத்தைச் சொல்லும் பகுதி தமிழில் பொருள் இலக்கணம் எனப்படும்'' ஈகோ. பாஸ்கரதாஸ் குறிப்பிடுகிறார். இவ்வாறு தொல்காப்பியத்தை இலக்கியமாகவும், வாழ்க்கைக்குரியதாகவும் அறிஞர் பெருமக்கள் கருதுகின்றனர்.

முப்பொருள் விளக்கம்

உலகத்தை ஐந்திணைகளாக தமிழர்கள் அன்றேப் பிரித்தன. ஐந்திணைகளே இலக்கியத்திற்கு உரியன. பாட்டென்பது இவ்வாறு அமைய வேண்டும் எனத் தொல்காப்பியம் முறை வகுக்கின்றது. அம்முறைப்படி அமைந்தப் பாட்டில் கருத்துச் செறிவு இருக்கும். இயற்கை வனப்பிருக்கும் பொருள் ஆழம் இருக்கும் என்பதை,

"முதல் உரிப்பொருள் என மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை'' (தொல்-அகம் -3)

இவை தொல்காப்பியர் சுட்டும் அக இலக்கண நெறியாகும். இவற்றுள் நில அறிவும், கால அறிவும் தோன்றும் தமிழர்கள் இயற்கையோடு இரண்டற கலந்து வாழ்ந்தவர் ஆதலின் கருப்பொருள் ஆட்சி இயற்கையில் இரண்டற கலந்துவிட்டன. முதற்பொருள், கருப்பொருள் இரண்டையும் உரிப்பொருளின் உயர்வுக்காகவே படைத்துள்ளன. இம்முப்பொருளும் இல்லை யெனில் இலக்கியத்தில் எப்பொருளும் சிறக்காது என்பது வெளிப்படை, ஒரு பெரும் புலவன் இறந்தகாலத் தளத்தின் மேல் நிகழ்காலக் கண்கொண்டு நாட்டின் எதிர்கால வாழ்வை உருவாக்குகின்றான். மண்ணின் ஒவ்வொரு அணுவும் இம்மண்ணில் உயிர்த்துள்ள உயிர் பொருள் அத்தனையும் அவன் எண்ணத்தில் இடம் பெறுகின்றன. நிலமும், பொழுதும் கருப்பொருளும் முறைப்படியமையுங்கால் உரிப்பொருள் சிறப்புற அமைகிறது. இவ்வியற்கைப் பிரிவுகளைப் பற்றி புவி இயற்செய்திகள் நிறைய இடம் பெற்றுள்ளது. நிலமும் காலமும் இயற்கை ஒருவரால் ஆக்கப்படுவதுமன்று அழிக்கப்படுவதுமன்றும் என்றும் உள்ள ஒன்றாகும். இயற்கை என்பது 'செய்து கோடல் பெறாமை' என்பர். இயற்கை நிலத்தையும் இயற்கை பொழுதையும் முதல் பொருள் என்றார்.

முதல் பொருள் விளக்கம்

முதல்பொருள் நிலம், காலம் என இருவகைப்புடம். என்பதை தொல்காப்பிய அகத்தணையியலில்,

முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே''

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இன்றைய காலக்கட்டத்தில்,

> "செயற்கை நிலனும், செயற்கைப் பொழுதும் உள்ளன என்றார் அவை இன்னவென்று நன்கு விளங்கவில்லை, இரண்டல்லது மூன்று திணைக்குரிய கருப்பொருட்கள் கலந்த நிலத்தை செயற்கை நிலமென்றும் இயற்கைத் தன்மை மாறிய பொழுதை செயற்கைப் பொழுதென்றும் கூறுதல் கூடும். செய்குன்றினைச் செயற்கைக் குறிஞ்சியென்றும், சமவெளியில் வளர்க்கப்படும் செடிப் பரப்பினையும், புல்தரைகளையும், செயற்கை முல்லையென்றும், நகர மாடங்களைச் செயற்கை மருதமென்றும் அலை வீசும் பெருங்குளத்தை செயற்கை நெய்தல் என்றும் செயற்கை மணற்பரப்பைச் செயற்கை பாலை யென்றும் கூறுதல் கூடும். இருண்ட பொழுதை இருள் - இரவு என்றும் ஒளியுள்ளப் பொருளை பகல் என்றும் கூறுவது செயற்கையே'' (பழந்தமிழர் நாகரிகம் பக்-40-41)

என கா.சுப்ரமணியபிள்ளை குறிப்பிடுகிறார். உலக நிகழ்ச்சிகளுக்கு இன்றியமையாதவை நிலமாகும். நிலமின்றேல் மக்கள் வாழ்வே இல்லை மக்கள் இயக்கம் இல்லையெனில் பிற

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிறப்புகளால் பயனில்லை. காலமாறுபாடு இல்லையெனில், உலக இயக்கத்தை மக்கள் இயங்கும் நிலையை உணர்தல் இயலாது என்ற வாழ்வியல் உண்மைகளை வலியுறுத்துகிறார்.

கருப்பொருள் விளக்கம்

இடத்திலும் காலத்திலும் தோன்றுகின்ற பொருளை கருப்பொருள் என்பர். தேவர், மக்கள் முதலானோரின் உணவு, செயல் முதலானவற்றையும், பறை, யாழ் போன்றவற்றையும் இவை போன்ற பிறவற்றையும் கருப்பொருளாகக் கொள்வர். இப்பொருள்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகையாக இருக்கும். இவற்றைப்பற்றி தொல்காப்பியர் குறிப்பாகச் சுட்டிச் செல்கிறார்.

> "தெய்வம், உணாவே மாமரம், புள் பறை
> செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப"

தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், பண் முதலானவையும், இவை போல்வன பிறவும், கருப்பொருள் என்பது ஆன்றோர் கருத்து எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஆனால், இன்னின்ன நிலத்திற்கு இன்னின்ன கருப்பொருள் என்ன என்ன என்பதை தெளிவாகக் கூறவில்லை. இளம்பூரணர் ஐந்து வகையான நிலத்திற்கு உரிய கருப்பொருள்கள் எவை எவை என்பதையும் தெளிவுப் படுத்துகிறார். தொல்காப்பியர் காலத்திற்கும், உரையாசிரியர் இளம்பூரணர் காலத்திற்கும் இடையேயுள்ள காலவளர்ச்சியின் விளக்கமே, கருப்பொருள் பெருக்கத்திற்கு காரணம் எனலாம். கருப்பொருள் வளர்ச்சியை ஆராய்கின்றபொழுது தொல்காப்பியர் கருப்பொருட்கள் எட்டு என்றும் அதோடு பிறவும் தோன்றும் என்று இயம்புகிறார். அவருக்கு பின் வந்தோர் கருப்பொருள் பதினான்கு என விரித்துரைத்துள்ளனர்.

உரிப்பொருள் விளக்கம்

உரிப்பொருள் சிறக்க, முதற்பொருளும், கருப்பொருளும் பின்னணியாக அமைகின்றன. அகப்பொருள் பாடல்களில் ஐந்திணை வகையாகிய முதல், கரு, உரி ஆகிய முப்பொருளும் சிறப்பாக அமைந்திருத்தல் காணலாம். இவற்றுள் முதற்பொருளினும், கருப்பொருளும், கருப்பொருளினும் உரிப்பொருளும் சிறப்புடையனவாகும். ஒருப்பாடலில் உரிப்பொருள் இல்லையாயின் அவை பொருள் பயனற்றவையாகக் கருதப்பெறும். கருப்பொருள்கள் மட்டும் பாடல்களில் அமைந்தால், அப்பாடல்கள் அடுத்தப்படி சிறப்புடையதாக கருதப்பெறும். மூன்றுவகைப் பொருள்களும் ஒரு பாடலுள் அமைத்துப் பாடப்பெறுமாயின் அது பொருட் சிறப்புடன் விளக்கமுற்று திகழும் என்பர்.

> "முல்லை நறுமல ரூதி யிருந்தும்பி
> செல்சார் உடையார்க் கினியவாய் நல்லாய் - மற்
> றியாருமில் நெஞ்சினே மாகி யுறைவேமை
> யீரு மிகுண் மாலை வந்து"

ஒரு வெண்பாவில் மூன்று வகைப் பொருள்களும் வந்துள்ளன. இது பருவங்கண்டு வருந்திய தலைமகளுக்குத் தோழிக் கூறுவதாக அமைந்துள்ளது. வண்டுகள் முல்லை மலரை ஊதும்படி இருண்டு வரும் மாலைக் காலமானது கணவருடன் உறையும் மகளிருக்கு இன்பம் தருவதாயினும், அவரைப் பிரிந்து வாழும் தமக்கு துன்பம் தருவதாக உள்ளது எனத் தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

களவுக் காலத்தில் வாழ்வியல்

தலைவியுடன் களவுக்கூட்டம் கூடி வந்த தலைமகன் அவளை மணந்து கொள்வதில் இருமுறைகள் உள்ளன. அவை, களவு வெளிபடுவதற்கு முன் வரைதல், களவு வெளிபட்ட பின் வரைதல்,

> "வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று
> ஆயிரண்டென்ப வரைத லாறே"

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்ற நூற்பாவால் அறியலாம். களவு வெளிப்பட்ட பின்றை வரைதல் விகற்பமின்று எனக் கொள்ளவேண்டும். களவு வெளிப்பட்ட பின்றை வரைதல் என்பது அறத்தொடு நிலை நிகழ்ந்த பின்றை வரைதல் நிகழும் என்கின்றனர். களவு வெளிபடுவதற்கு முன் வரைதல் என்பது தலைவன் தலைவியை மணம் பேசி அவன் சுற்றத்தாரை வேண்டுவான். அவர்கள் மிகுந்த பரிசம் கேட்பர். அதை நிறைவேற்றுவதற்காகத் தலைவன் தலைவியை விட்டு பிரிவான். இப்பிரிவு ‘வரைப் பொருட் பிரிவு’ என வழங்கப்பெறும். இங்ஙனம் பிரிந்து சென்றவன் தனக்கு வேண்டிய பொருளை ஈட்டிக் கொண்டு மீண்டு, தன் உறவினரை மேற்கொண்டு, தலைவியின் இல்லம் அணுகி மணமுரசு ஒலித்து பெண் கேட்பான். களவொழுக்க நிலையில் தலைவனிடம் பொருள் வயிற்பிரிவும், வேந்தர்க் குற்றுழி பிரிதலும், காவற் பிரிதலும் நிகழுமேயன்றி ஏனைய பிரிவுகள் நிகழாது.

கற்புக் காலத்தில் வாழ்வியல்

அன்புரிமை பூண்ட தலைமகன் தன்பால் அன்புடைய தலைவியைப் பெற்றோர் கொடுப்ப பலரறிய மணந்து வாழும் மனை வாழ்க்கையே கற்பென வழங்கப் பெறும். கற்பு களவொழுக்கத்தின் கனியாகவும், அன்பின் வெற்றியாகவும் திகழ்கிறது. கணவனைவிடச் சிறந்த தெய்வம் மனைவிக்கு இல்லை என்றும், அவனை இன்னவாறு வழிபடுதல் வேண்டும் எனவும், தலைமகளுக்குப் பெற்றோர் கற்பிக்கின்றனர். அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், விருந்தினர் முதலியவர்களிடம் இன்னின்னவாறு நடந்துக் கொள்ள வேண்டும் என்று தலைமகனுக்குப் பெற்றோர் கற்பிக்கின்றனர். இதனைத் தொல்காப்பியர்

“அந்தணர் ஓம்பலும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பில் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கங் காட்டிய குறிப்பினும்”

என்று குறிப்பிடுகின்றார். ‘நின் மனைவியை இவ்வாறு பாதுகாப்பாயாக’ என்று தலைவனுக்கும், ‘நின் கணவனுக்கு இவ்வாறு பணிவிடை செய்து ஒழுகுவாயாக’ எனத் தலைவிக்கு சான்றோர் கற்பிக்கின்றனர். இது வதுவை சடங்காகிய கரணம் நிகழுங்கால் கற்பிக்கபெறும் என்று நச்சனார்க்கினியர் விளக்கம் தருகிறார். திருமண ஏற்பாடுகளை வரைபொருட் பிரிவின் பின்னர் பெண் பேசுங்கால் நிகழும் என்பர். அப்பொழுது தலைவனுடைய சுற்றத்தார், அறநிலை சான்றோர் அன்றி வேறு சான்றோரும் இருப்பர். மணம் பேச செல்லுங்கால் முரசொலிக்கச் செய்வர். அச்சமயம் தலைவியின் சுற்றத்தாரும் தமது இல்லத்தை தோரணம் முதலியவற்றை சாற்றி, அழுகுபடுத்திப் பொற்குடங்களும், ஐந்தலை விளக்குகளும் ஏற்றி, பிறவற்றையும் அழகுபடுத்தி நிரல்பட அமைத்து, எதிர்முரசு ஒலித்துத் தலைவன் சுற்றத்தாரை வரவேற்பர். இதனையே மாணிக்கவாசகப் பெருமான் தமது திருக்கோவையாரில்

“பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொறித்த
தோரணம் நீடுக தூரியம் ஆர்க்கதொன் மாலயற்குங்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல் தில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென் றேங்கு மணமுரசே”

என்று வரவேற்பர். பின்னர் அவர்கள் விரும்புமாறு பணிந்தொழுகி அவரவர்க்கு வேண்டிய இருக்கையும் சிற்றுண்டி முதலியனவும் இனிது கொடுத்தூட்டி அவரவர் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர். தங்கள் வழிபடு கடவுளை வேண்டி பரிசம் போடுவர். அதன் பிறகு திருமணம் முறைப்படி நடைபெறும் அதாவது பலர் முன்னிலையில் தம் பெண்ணைப் பெற்றோர் உடன்பட்டுக் கொடுக்க வேண்டும். இதனைத் தொல்காப்பியர் ‘கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வது’ என்கின்றார். திருமணம் நடை பெறும் காலமாக மழை, மிகுகுளிர், மிகுபணி இல்லாத காலமே மணவினைக்கு ஏற்றது. மேலும் உழவர்களுக்கும் அக்காலத்தில் ஓய்வு கிடைக்கும். அவர்கள் கையில் பொருளாதாரமும்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தன்னிலையில் இருக்கும். பெரும்பாலும், திருமணம் வளர்பிறையிலேயே நடைபெற்றன என்பதையும் தொல்காப்பியர் பதிழவு செய்கிறார்.

சமுதாய வாழ்வியல்

தொல்காப்பிய காலத்திற்கு முன்னரே மக்களிடையில் பல பிரிவுகள் இருந்தன. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் இருந்தன. இவையாவும் அவர்கள் செய்யும் தொழிலினால் ஏற்படும் பிரிவுகளாகும். இவர்களைத் தவிர பாணர், கூத்தர், பொருநர், பார்ப்பார், அடிமை வேலை செய்வோர், தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் போன்ற பல பிரிவுகள் இருந்தனர். அறிவு, ஆராய்ச்சி, நல்லொழுக்கம், தன்னலமற்ற தன்மை, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டி அறநெறியில் வாழ்வோர் அந்தணர் எனப்பட்டனர். அவர்கள் அரசர்களை அறநெறிப் படுத்தல், நாட்டு மக்களுக்கு நல்லுரை வழங்கல், மக்கள் நல்வாழ்விக்காக இறைவனை வேண்டுதல் போன்றவை அந்தணர்களின் கடமையாகும். இவர்கள் ஆட்சி செய்வதற்கும் உரியவர்கள் என்பதை, 'அந்தணா ளர்க்கு அரச வரைவின்றே' என்ற நூற்பா உணர்த்துகிறது. தமிழகத்தை மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டிய மன்னர்கள் ஆட்சிப் புரிந்தனர். பெருநில மன்னருக்குட்பட்ட குறுநில மன்னர்களும் இருந்து வந்தனர். பேரரசர்களால் சிறப்புப் பெற்ற வணிகர்களும், வேளாளர்களும் சிற்றரசர்களாவர். சங்க கால சிற்றரசர்கள் பெரும்பாலும் வேளாளர்களாகவே இருந்து வந்தனர். படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், தார், முடி போன்றவை அரசருக்கு சிறப்புடையவையாகும். இச்செய்தியை

"படையும் கொடியும் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோள் அரசர்க்குரிய"

என்ற மரபியல் நூற்பாவால் அறிய முடிகிறது. பழந்தமிழ் வணிகர்கள் 'கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதும் குறை கொடாது' நேர்மையுடன் வாணிகம் செய்யும் பண்புடையவர்கள். வாணிகம் செய்யும் தொழிலை வைசியன் பெறுவான் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. 'வைசியன் பெறுமே வாணிப வாழ்க்கை' என்று தொல்காப்பிய மரபியல் நூற்பா குறிப்பிடுகிறது. வணிகர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெரு வணிகமும், கூல வணிகமும் செய்தனர். கடல் கடந்த வாணிகமும் இவர்களிடம் இருந்தது. இவர்கள் வணிகத்துடன் தானியங்களையும் விளைவித்தனர். இதுவும் வணிகத்துடன் தொடர்புடைய தொழிலாதலின் நிலக்கிழாராகவும் இருந்தனர். பெருவணிகர்கள் அரசரால் படை, கண்ணி முதலிய சிறப்பு பெற்றுச் சிற்றரசர்களாக திகழ்ந்தனர். 'கண்ணியுந் தாரும் எண்ணினர் ஆண்டே' என்ற நூற்பாவால் அறியபடுகிறது. வேளாளர்கள் தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தனர்.

"வேளாண் மாந்தருக்கு உழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

இந்நூற்பா விளக்குகிறது. பலவகை தொழிலாளர்களும் வேளாளரே ஆவார். தலைமை பற்றி உழவுத்தொழில் ஒன்றே கூறப்பட்டது. இவர்கள் சில சமயம் அரசர்களால் படைக்களம் பெற்று, மாலை பூண்டு போர் வீரர்களாகத் தொண்டாற்றவும் உரிமை பெற்றிருந்தனர்.

"வேந்து விடு தொழிலின் படையும் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர் பெறும் பொருளே"

என்ற நூற்பாவால் இதனை அறியலாம். இப்பிரிவுகள் யாவும் தொல்காப்பியர் காலத்தில் பிறப்பினால் ஏற்பட்டவை அல்ல. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை காரணமாகவே இப்பிரிவுகள் அமைந்தனர். 'சாதி' என்ற சொல் தொல்காப்பியத்தில் காணப்பெறினும், அ∴து

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஓரிடத்திலேனும் மக்களைக் குறித்த சொல்லாக வழங்கப் பெறவில்லை. 'நீர் வாழ் சாதியும் அறு பிறப்பு உரிய' 'நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே' என்ற நூற்பாவில் 'சாதி' என்ற சொல் நிரில் வாழும் உயிரினங்களைக் குறிக்கின்றது. இவர்களைத் தவிர தமிழ் நாட்டில் அடிமைகளும், நடனமாடுவோரும், யாழ் வாசிப்போரும், நாடகம் நடிப்போரும் ஆகிய வகுப்பினர் நாட்டில் இருந்தனர் என்று புறத்திணையியல் வாயிலாக அறிய முடிகிறது.

சமய வாழ்வியல்

முல்லை நிலத்தில் மாயோன் வழிபாடும், குறிஞ்சி சேயோன் வழிபாடும், மருதநிலத்தில் இந்திரன் வழிபாடும், பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலத்தில் வருணன் வழிபாடும் தோன்றி நிலைபெற்றனர். இந்த வழிபாட்டு முறைகளை

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

என்ற நூற்பா வாயிலாக அறிய முடிகிறது. நானிலத்தவர்களும் தாம்தாம் வாழும் சூழ்நிலைகேற்ப வகுத்துக் கொண்டனவே வழிபாடு முறைகளாகும். இவ்வாழ்வியல் முறைகளை நோக்கும்போது முல்லை நிலத்தவராகிய கோவலர்கள் ஆநிரைகள் நிறைய பால் கொடுக்க வேண்டும் என்று காயாம் பூ வண்ணனாகிய திருமாலை வேண்டி பரவி, குரவை பாடுவர் குறிஞ்சி நிலத்துக் குறவர் நறுமலர்எழுதரு நன்மணம் போன்று விளங்குகின்ற வேலனை அழைத்து வெறியாட செய்து செங்காந்தல் நிறமுடைய முருகனை வழிபட்டனர். மருதநிலத்து வாழும் உழவர் நாடு செழிக்கவும் காமச் சிறப்பு வேண்டி எழிலுக்கும் இமையோர்க்கும் இறைவனாகிய இந்திரனுக்கும் விழா எடுத்தனர். நெய்தல் நிலத்துப் பரதவர் வலை வளஞ் சுரக்க வேண்டி சுறவுக்கோடு நட்டுத் தம் மகளிர் கிளையுடன் குழுமி வருணனைப் பரவுவர். நாநில மக்களின் இவ்வழிபாடுகளேயன்றி வெற்றியை விளைவிக்கும் கொற்றவை மற்றும் பழையோன் போன்ற தெய்வங்களையும் தமிழ் மறவர்கள் வழிபட்டனர். நாநிலத்திற்கு மட்டுமின்றி எல்லா நிலத்திற்கும் உரிய நிலையில் எங்கெங்கும் வியாபித்து இருக்கின்ற முழுமுதற் பொருளை கடவுள் என்று அழைத்து சிறப்பித்துள்ளனர். தொல்காப்பியர் காலத் தமிழர்கள் மந்திரத்தில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இன்றும் மக்கள் மந்திர சொற்களின் பொருளை அறியார். அக்காலத்தில் பெரியோர்களால் சொல்லப்பட்ட பொருள் தெரியாத சொற்களை மந்திரங்கள் என்று மக்கள் நம்பினர். என்பதை,

"நிறைமொழி மாநதர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்பர்" (செய்யுளியல் -நூ.171)

இந்நூற்பா வாயிலாக அறிய முடிகிறது. எச்செயல் செய்வதாக இருந்தாலும் நல்ல நாள், கெட்ட நாள் பார்க்கும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. வெட்சி மறவர்கள் நிரைக் கவர செல்லும்போது நற்சொல் கேட்டல் வழக்கம் இருந்ததை 'விரிச்சி' என்றனர். மன்னர் போருக்கு செல்வதற்கு முன்னர் நல்ல நாள் பார்த்து குடையையும் வாளையும் அனுப்பி வைப்பான். இதனை 'குடையும் வாளும் நாள்கோள்' என்பர். சகுனம் பார்ப்பதை 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' என்பர். தாம் நினைத்த காரியம் நிறைவேறிவிட்டால், 'இன்னது தருவேன்' என்று வேண்டுவதை தொல்காப்பியர் 'தெய்வக்கடம்' என்கின்றார். மனைவி மக்களை துறந்து துறவறம் மேற்கொள்வது தமிழர்களிடம் இல்லை. ஆனால் இறுதி காலத்தில் மக்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு துறவு வாழ்க்கையை மேற்கொள்வர் என்று குறிப்பிடப்படுகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நிறைவுரை

தொல்காப்பியத்தில் வாழ்வியல் விழுமியங்கள் என்ற இக்கட்டுரையில் தொல்காப்பிய இலக்கியம் மற்றும் வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கியதாக இயம்புகின்றனர். இதில் குறிப்பிடுகின்ற முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய முப்பொருளும் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து நிகழ்வுகளையும் எடுத்துரைக்கிறது. களவுக்காலத்தில் தலைவன், தலைவி நடந்து கொள்ளும் முறையும், கற்புக் காலத்தில் தலைவிக்கு பெற்றோர்களும் தலைவன் தலைவியிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும், தலைவனுக்கும், தலைவிக்கும் சான்றோர்கள் கற்பிக்கின்ற முறைகளும், பரிசம் போடுதலும், திருமணமுறைகளும், இல்லற மாண்புகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், சமுதாய வாழ்வியலில் நால்வகை பிரிவினரிடம் நடந்து கொள்ளும் வாழ்வியல் ஒழுகலாறுகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் சமய வாழ்வியல் குறித்த செய்திகளும் இக்கட்டுரையின் வாயிலாக ஆராயப்பெற்றுள்ளன.

துணை நின்ற நூல்கள்

1. சுப்பிரமணியம். ச.வே, தொல்காப்பிய தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-2003,
2. தொல்காப்பியம் பொருளதிகாரம், வெள்ளைவாரணார்.க, பதிப்புத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், - 1985.
3. சிவநேசன்.பா, தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கை, சீதை பதிப்பகம், முதல் பதிப்பு – 2016.
4. சுப்பு ரெட்டியார்.ந. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்பா பிரதர்ஸ், 25. பீட்டர்ஸ் ரோடு, சென்னை – 14,
5. ஞானசம்பந்தம். அ.ச. இலக்கியக் கலை, சாரதா பதிப்பகம், ஜி.4. சாந்தி அடுக்ககம், 3. ஸ்ரீ கிருஷ்ணராயபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை -14 ஐந்தாம் பதிப்பு -2010.
6. சீனிவாசன்.துரை, திணைக்கோட்பாடு, நிறு செஞ்சுரி புக் ஹவுஸ், 41.டீ,சிப்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட், இம்பத்தூர், சென்னை. 600096.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உளவியல் நோக்கில் பெரியபுராண மகளிர்

Women of "Periyapuranam" in Psychological Perspective

முனைவர் கோ.சந்தனமாரியம்மாள், தமிழத்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி 628 503.

Abstract

The present article tries to show the sort of women's life as depicted in "Periyapuranam". It is a book of morals. It deals mostly the divine comedies of the Lord Shiva and his acceptation of his devotees. Women were burdened with untold chaos. It is evident in all places. Even it is seen in the stories of the Nayanmars, they are also glorified women. Women like Isaignaniyar, Mangayarkarasiyar ans Karaikalammaiyar are the glorified women and has been given the title as Nayanmars. Hence, the study decodes the state of these three women in psychological perspective.

Keywords: Women of "Periyapuranam", Psychological Perspective

ஒவ்வொரு இலக்கியப்படைப்பும் அவ்வக்கால சமூக நீதியை, அதற்கு எதிரான முரண்களை உள்ளடக்கியதாக அமைகின்றன. காலத்திற்கேற்ற அறத்தைத் தாங்கி நிற்கும் அத்தகைய படைப்புகளே நின்று நிலவும் தன்மையைப் பெறுகின்றன. சாதிபேத வேறுபாடுகளை மதங்கொண்டு களைய முற்பட்டவர் சேக்கிழார். பொருளாதார ஏற்றதாழ்வுகள், அடிமைச் சமூக அமைப்பு, பெண்ணடிமை இவற்றையெல்லாம் சமய மரபுக்குட்பட்டு படைத்துக் காட்டியுள்ளார். பெண்ணடிமைத்தனம் நாயன்மார்களின் வரலாற்றினிடையில் சுட்டப்பட்டிருந்தாலும் அடியவர்களின் வரிசையில் பெண்களையும் இணைத்துப் பெருமைப்படுத்தவும் செய்துள்ளார். சுந்தரரின் தாயார் இசைஞானியார், மங்கையர்க்கரசியார், காரைக்காலம்மையார் மூவரும் பெண் நாயன்மார்களாக காட்டப்படுகின்றனர். இவர்கள் தவிர பெரியபுராணத்தில் அடியவர்களின் மனைவிகள் என்ற முறையில் சிறப்பிக்கப்படும் பெண்களும் உள்ளனர். நாயன்மார் வரிசையில் இடம்பெறாவிட்டாலும் சிவத்தொண்டாற்றி சகோதரனை சமணத்திலிருந்து சைவத்துக்கு மாற்றிக்காட்டிய திலகவதியாருக்கு பெரியபுராணத்தில் சிறப்பிடம் உண்டு. தாயார் என்கிற நிலையில் மட்டுமே நாயன்மார் வரிசையில் இடம்பெற்றமையால் இசைஞானியாரை விடுத்து மற்ற மூன்று பெண்களின் நிலையை உளவியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணிய உளவியல்

பெண்களுக்கு விதிக்கப்பட்ட சமூகக்கட்டமைப்பினையும் பால் வேறுபாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயும் உளவியல் பெண்ணிய உளவியல் ஆகும். பெண்களால் உணரப்படும் பெண் மன இயல்புகள் பற்றிய கூறுகளை உள்ளடக்கியது பெண்ணிய உளவியல். உயிரியல் அடிப்படையில் படைத்தல் தொழில் பெண்களின் தனித்த அடையாளமாக விளங்குகிறது. இந்த மாபெரும் சக்தி அவளிடம் இருந்தும் பெண் ஒடுக்கப்படுகிறாள். ஆணையும் பெண்ணையும் படைப்பவள் அவளாக இருந்தாலும் சமூக மதிப்பென்பது ஆணுக்குப் பின்னால் மறைந்து கொண்டு இருக்கிறது. பெண்ணின் பங்கு இல்லையென்றால் குடும்பம் மட்டுமல்ல சமுதாய முன்னேற்றமும் தடைபடும். ஆயினும் ஆண்களின் கண்ணோட்டத்தினைக் கொண்டே பெண்களின் நடத்தை மதிப்பீடு செய்யப்படுகிறது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

பெண் என்பவள் தான் வாழுகின்ற சமூகம் சார்ந்தும் மணம் முடித்த கணவன் சார்ந்தும் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவளாகின்றாள். காலங்காலமாய் இம்மரபு தொடர்ந்து வந்துகொண்டே இருக்கிறது. சுய விருப்பத்திற்கு வாழாமல் தன்னைச் சார்ந்தவர்களின் விருப்பத்திற்காகவே வாழ்கிறாள். நாகரிகம் வளர்ச்சியடைந்த இன்றைய காலச் சூழலிலும் பெண் அடிமைத்தனம் குறையவில்லை. அப்படியிருக்க பல நூறாண்டுகளுக்கு முன் பெண் அடிமைத்தனம் மேலோங்கியிருந்திருக்குமே ஒழிய குறைய வாய்ப்பில்லை. பெண் மதிக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் அவளின் உணர்வுகள் மதிக்கப்படாமலேயே காலங்காலமாய் தொடர்ந்திருக்கிறது. பெண் தனக்கான ஒழுகலாறுகளை ஏற்றுக் கொண்டு சமூகம் கட்டமைத்துள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு வரம்புமீறாமல் இன்றளவும் வாழ்ந்து வருகிறாள். குடும்ப அமைப்பில் தன்னை இரண்டாம் நிலையில் இருத்தி வாழப்பழகிக் கொண்டபடியால் உரிமைகள் தந்தாலும்கூட அதை அந்த வரம்பிற்குள்ளிருந்தே காண விழைகிறாள். பெரியபுராணத்தில் சமூகம் கட்டமைத்த விதிமுறைகளுக்குட்பட்டு வாழ்ந்த மகளிர்களைப் பற்றிக் காண்போம்.

திலகவதியார் - மங்கையர்க்கரசி

நாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார், திலகவதியாருக்கும் மங்கையர்க்கரசியாருக்கும் பெரியபுராண அமைப்பில் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இருவரும் சைவசமய வழிபாட்டாளர்கள். தங்கள் குடும்ப நபர்களை சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றிக் காட்டிய பெருமைக்குரியவர்கள். திலகவதியார் தன்னுடைய சகோதரர் திருநாவுக்கரசரை சமணத்திலிருந்து மீட்டு சைவ நெறிக்குள் ஈடுபடுத்துகிறார். மங்கையர்க்கரசி தன் கணவனாகிய பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனை சமணத்திலிருந்து சைவத்துக்கு மாற்றுகிறார். திலகவதியார் இல்லற சுகம் பெறாமலே விதவைக் கோலம் கொண்டவர். இல்லறத்திற்குள்ளிருந்தபடி குடும்ப அறம் பேணிக் கொண்டே கணவனை சைவத்துக்கு மாற்றிக் காட்டியவர் மங்கையர்க்கரசியார். சைவநெறியைப் பின்பற்ற வைப்பதற்கு இரண்டு ஆண்களுக்கும் இறைவன் தீராத வயிற்றுவலியையே வரவழைக்கிறார். சிவத்தொண்டு புரியும் ஞானசம்பந்தன் நீறு பூச மன்னனுக்கு வெப்பு நோய் சரியாகிறது. இதனால் கூன் பாண்டியன் நின்ற சீர் நெடுமாறனாகின்றான். திலகவதியாரே இறைவனை வேண்டி சகோதரனுக்கு நீறு பூசிவிடுகிறார். அவருடைய சூலை நோய் குணமடைகிறது. இறைவனைப்பாடி நாவுக்கரசராகி இறைத்தொண்டு புரிகிறார்.

தாய், தந்தை இறந்தபின் தம்பிக்கு தாயாய் இருந்து அன்பு காட்டி வளர்த்தவர் திலகவதியார். தனக்கு மணம் பேசிய கலிப்பகையார் போரில் இறந்த செய்தி கேட்டு தன் உயிரை மாய்த்துக் கொள்ளச் சென்றபோது தம்பிக்காக முடிவை மாற்றிக் கொண்டார்.

"எந்தையும் எம்அனையும் அவர்க்கு
எனைக் கொடுக்க இசைந்தார்கள்
அந்த முறையால் அவர்க்கே
உரியது நான் ஆதலினால்
இந்த உயிர் அவர்உயிரோடு
இசைவிப்பன் எனத்துணிய
வந்து அவர்தம் அடி இணைமேல்
மருள் நீக்கியார் விழுந்தார்" (பெ.பு.பாடல் 1302)

அன்னையும் அத்தனும் அகன்ற பின்னும் நான் உன்னை வணங்கியதால் உயிர்தரித்தேன். என்னைத் தனியே விட்டு செல்வீராயின் உனக்கு முன் உயிர் நீப்பேன் (1303) என்று நாவுக்கரசர் கேட்டுக் கொண்டதால் சாவைக் கைவிட்டு விதவைக் கோலம் பூண்டு வாழ்கிறார்.

கணவன் இறந்ததும் மனைவியும் அவனுடன் உடன்கட்டை ஏறும் வழக்கம் சமூகத்தில் இருந்திருக்கிறது. திலகவதியார் தாய் மாதினியார் புகழனார் இறந்ததும் உடன் இறந்து போகிறார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

“பிரியாத உலகு எய்தும்
கற்பு நெறி வழுவாமல்
கணவனாருடன் பென்றார்” (பெ.பு.பாடல் 1298)

என்று பெரியபுராணம் குறிப்பிடுகிறது. தன் தாய் தந்தையுடன் விண்ணுலகம் அடைந்ததை நேரிடையாகக் கண்டு வளர்ந்த பெண் திலகவதி. சமூக வழக்கம் என்னவோ அதைத் தானும் செய்யத் துணிகிறாள். ஒருவனுக்கு மணம்பேசி முடித்தாலே அவனைக் கணவனாகப் பெண்கள் மதித்து வாழ்ந்த காலச்சூழலைப் பெரியபுராணம் சுட்டுகிறது. இந்து மதத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒரு நம்பிக்கை சார்ந்த சடங்காகப் பின்பற்றப்பட்டிருக்கிறது.

இறந்துபோன ஒருவருக்காக அவர் மீது மாறா அன்பும் பற்றும் கொண்ட ஒருவர் உண்ணாமல் அவரையே நினைத்து உயிர் விடுவது அனுமரணம் ஆகும். தன்னைத் தண்டித்துக் கொண்டு அல்லது தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு அல்லது காயப்படுத்திக் கொண்டு இறப்பது நவகண்டம் எனப்படுகிறது. சமூகத்தில் இருக்கும் நடைமுறைக்காக அதை மதித்தோ அல்லது எதிர்க்க முடியாமலோ பெண்கள் உயிரைத் துறந்திருக்கின்றனர். மாதினியார் புகழனாருடன் இறந்ததைக் குறிக்கும் சேக்கிழார் ‘கற்பு நெறி வழுவாமல் கணவனாருடன் சென்றார்? என்று சுட்டுகிறார்.’ உடன் இறக்காத நிலையில் கற்பு நெறி தவறியதாகக் கருதப்படும் எதிர் பொருண்மையையும் இத்தொடர் சுட்டி நிற்கிறது. இப்படிப்பட்ட சமூகச் சூழலில் வாழும் திலகவதியாரும் ‘எந்தையும் எம்அனையும் அவர்க்கு எனைக் கொடுக்க இசைந்தார்கள். அந்த முறையால்’ தான் உயிர்விடப் போவதாக கூறுவது சிந்தித்தற்குரியது. அவர்மேல் (கலிப்பகையார்) இருக்கும் அன்பு பிரியம் என்பதாக திலகவதியார் சுட்டவில்லை. அன்பு மீதூற இருவர்க்குமான தொடர்பு ஏதும் இல்லை. இருவரும் பேசிக்கொண்டதில்லை. இன்றைய காலம் போல் அன்றில்லை. ஆயினும் சமூக வழக்கத்தை ஏற்றுக் கொண்டவராக இருந்திருக்கிறார். உயிர் துறப்பது என்பது கற்புச் செயலாக இருக்கின்ற நிலையில் இழுக்காகி விடுமோ என்று பெண்கள் சமூகத்திற்கு அஞ்சி இச்செயலை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உயிர்விடவில்லையே தவிர விதவைக்கோலம் பூண்டு தவ வாழ்க்கையை திலகவதி மேற்கொள்கின்றார். சமணசமயத்திற்குச் சென்ற நாவுக்கரசரை சைவத்திற்கு மாற்றி சைவ சமயமே சிறப்புடையது என்று நிரூபித்துக் காட்டிய பெண்மணி. அவ்வாறிருக்க பெண்நாயன்மார்களில் திலகவதியார் ஏன் இடம்பெறவில்லை என்ற கேள்வி எழுகிறது. இசைஞானியார் சுந்தரரைப் பெற்றெடுத்த காரணத்திற்காகவும் மங்கையர்க்கரசி மன்னனை சைவத்திற்கு மாற்றியமைக்காகவும் பக்தியின் சிறப்பினால் கணவன் தீண்டாத உடலை பேய் உடலாக மாற்றிக் கொண்டு கடவுளைத் தேடிப் போன காரைக்காலம்மையாருக்கும் நாயன்மார் வரிசையில் அமர வைத்த சேக்கிழார் திலகவதியாருக்குச் சிறப்புச் செய்யாதது வியப்பாக உள்ளது.

நாவுக்கரசரைச் சொல்லும் சேக்கிழார் திலகவதியாரின் பெருமையையும் சேர்த்தே சொல்லுகிறார். மறுபடி சொல்வதற்கு இல்லை என்று எண்ணியிருந்தாலும் இசைஞானியார் (சடையனார், சுந்தரர்) மங்கையர்க்கரசியார் (நின்றசீர் நெடுமாற நாயனார், குலச்சிறையார்) திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறார்கள். இம்மூவரும் இல்லற மகளிர் என்பதற்காக சேக்கிழார் முன்னுரிமை கொடுத்திருப்பதாக எண்ணுவதற்கு இடமுண்டு. பக்தியென்ற நிலையில் பார்த்தாலும் கூன்பாண்டியனின் வெப்பு நோயைத் தணிக்க மங்கையர்க்கரசி ஞானசம்பந்தனையே நாடினார். ஆனால், திலகவதியாரின் பக்தியே நாவுக்கரசரை குணமடையச் செய்கிறது. இந்நிலையில் சிந்திப்பதற்கான இடத்தை பெரியபுராணம் காட்டுகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

காரைக்காலம்மையார்

மூன்று பெண் நாயன்மார்களில் இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பட்ட பெருமைக்குரியவர் புனிதவதியார். காரைக்கால் சொந்த ஊர் என்பதால் காரைக்காலம்மையார் என்றும் அழைக்கப்படுகிறார். அந்தாதி இலக்கிய வகையை முதன்முதலில் பாடியவர். தனதத்தன், தர்மவதி தம்பதியரின் மகள். சிறுவயதிலிருந்தே சிவபெருமான் மீது பக்தி கொண்ட பெண்ணாகத் திகழ்ந்தார். பரமதத்தன் என்கிற வணிகருக்குப் பெற்றோர் இவரைத் திருமணம் செய்து வைத்தனர். ஒருநாள் பரமதத்தன் கடையிலிருக்கின்றபோது வியாபாரி ஒருவர் இரண்டு மாங்கனிகளைத் தர அதை வீட்டிற்குக் கொடுத்தனுப்புகின்றார். சாப்பாட்டு வேளையில் வீட்டிற்கு வந்த பரமதத்தனுக்கு புனிதவதியார் உணவு படைக்கிறார். மாம்பழத்தை அரிந்து வைக்கிறார். அதைச் சாப்பிட்டும் மாம்பழத்தின் மீது ஆசை தீராத கணவன் இன்னொன்றையும் கேட்கிறார். ஒன்றை சிவனடியார் ஒருவர்க்கு அளித்ததைக் கணவனிடம் கூறாமல் மறைக்கிறாள். கணவன் கேட்டதை இல்லை என்று சொல்ல மனம் வராத புனிதவதியார் சமையலறைக்குள் சென்று இறைவனை வேண்ட கண்திறக்கும் வேளையில் கையில் மாம்பழம் இருக்கிறது. இறைவன் அருளால் பெற்ற மாம்பழத்தைக் கணவனுக்குக் கொடுக்கிறார். கனியின் சுவையில் மாற்றம் தெரிகிறது. முன்னைய கனியைவிட இது சுவை மிகுதியாக இருக்கிறதே என்று கேட்கிறார்.

இக்கனி உலகில் கிட்டுதற்கு அரிது. 'பெற்றது வேறு எங்கு' என்கிறான். உடல் நடுக்குற்றவராய் செய்தபடி சொல்லுவதே நல்லது என்று எண்ணி ஈசன் அருளால் கிடைத்ததைச் சொல்கிறார். மனத் தெளிவுக்கு வரமுடியாமல் உண்மையில் சிவனின் அருளால் கிடைத்தது எனின் 'இதனைப் போன்று மற்றொரு கனியை அவர் அருளால் பெற்று அளிப்பாயாக' என்கிறான். இறைவனை வேண்டி கனியைப் பெற்றதும் கணவனிடம் தர வாங்கிய உடனே அது மாயமானது கண்டு அச்சம் கொண்டு மனைவி மானுடப் பெண் அல்லள் தெய்வப்பிறவி என்று எண்ணுகிறான். அதன்பிறகு நடந்த செயல்களை புராணத்தின் வழி நாம் அறிவோம்.

காரைக்காலம்மையாரின் புராணத்தைக் கேட்டதும் எல்லோரும் கேட்கக்கூடிய வினாக்கள் பரமதத்தனை நோக்கியதாகவே அமைகின்றன. ஒரு பெண்ணாய் இல்லத்தரசியாய் சமூகம் விதித்த கட்டுப்பாட்டிற்குள் வளர்ந்த பெண்ணாய் இல்லறம் பேணிய புனிதவதியின் எதார்த்தச் சமூகச்சூழலை நாம் மறந்து விடுகிறோம்

இரண்டு மாங்கனிகளில் ஒன்றைத்தான் உண்ட பிறகு மற்றொன்று மனைவிக்கானது என்று பரமதத்தன் ஏன் எண்ணவில்லை?

ஆசையில் மற்றொன்றைக் கேட்கும் கணவனிடம் சிவனடியாருக்குக் கொடுத்ததை ஏன் புனிதவதி சொல்லவில்லை? மறைப்பதற்கான காரணம் என்ன?

கேட்டதும் இன்னொன்றையும் எப்படியோ பெற்றுத் தந்தவளிடம் ருசியின் மிகுதியை வைத்து எப்படி வந்தது என்று கேட்கக் காரணம் என்ன?

இறைவன் அருளால் கிடைத்தது என்று சொல்லியதை பரமதத்தன் ஏன் நம்பவில்லை?

தெய்வப்பிறவி என்று மனைவியை ஒதுக்கி வைத்தது ஏன்?

இதுபோன்று இன்னும் பலப்பல உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு காரைக்காலம்மையாரின் வரலாறு இடமளிக்கிறது. இந்த வினாக்களுக்கு உளவியல் சார்ந்து விடைகளைக் காணலாம்.

மனைவிக்கு வேண்டும் என்று நினைத்து உண்ணும் கணவன்மார் குறைவு. உண்ணுகின்ற வேளையில் உண்ணும் பொருளின் சுவையறிந்து இன்னும் கொண்டுவா என்று கேட்டது இயல்பு. அப்படிப் பரமதத்தன் கேட்காமல் இருந்தாலும் குறிப்பறிந்து இன்னொன்றையும் புனிதவதியார் அறிந்து வைத்திருப்பார். குடும்ப அறம் பேணும் பெண்கள் செய்யும் செயல்தான். அங்கே அக்கனி இல்லாமல் போனதுதான் மற்றைய வினாக்களுக்கு இடம் கொடுத்துவிட்டது.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

'இனிதென கணவன் உண்டலின் மகிழ்ந்தன்று ஒள்நுதல் முகனே' என்று சங்ககாலத்திலிருந்து கணவன் உண்பதை மகிழ்ச்சியோடு கண்டு களிப்பது மரபாய் வரக்கூடிய வழக்கமாய் பெண்ணுக்கு அமைந்து விட்டது. மனைவிக்குப் பின்னர் வாங்கிக் கொடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்திருக்கலாம். அல்லது ஆசையைக் கட்டுப்படுத்த முடியாமல் உண்ணும் வேட்கையில் கேட்டிருக்கலாம்.

'மதுரம் மிக வாய்ந்த கனிதனை நுகர்ந்த இனிய சுவை ஆரா'. கணவன் இன்னொன்றை ஆசையின் மிகுதியில் கேட்டபோது புனிதவதி சிவனடியார்க்கு கொடுத்ததை மறைத்ததற்கு சமூக உளவியல் காரணம் இருக்கின்றது. கணவன் இல்லாத நேரத்தில் வேற்று ஆடவரை வீட்டிற்குள் வரவழைப்பது தவறான மரபாகக் கருதப்பட்டது. இதற்கு பெரியபுராணத்தில் சான்று இருக்கிறது. சிறுதொண்டர் சிவனடியாரைத் தேடிச் சென்ற நிலையில் அடியவர் ஒருவர் மனைக்கு வருகிறார். அவரின் மனைவி சிவனடியாரைத் தேடிக் கணவன் சென்றதை எடுத்துரைத்து விரைவில் வருவார் என்று கூறி இங்கேயே இருக்கும்படியாகச் சொல்கிறாள்.

"ஒப்புஇல் மனையறம் புரப்பீர்
உத்தராபதி உள்ளோம்
செப்புஅரும் சீர்ச் சிறுதொண்டர்
தம்மைக் காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவர் ஒழிய
இங்கு இரோம் என்று அருளி" (பெ.பு.3704)

அவர் ஒழிய இங்கு இரோம் என்று சொல்லி சிவனடியார் சென்றுவிட்டார். ஆனால், காரைக்காலம்மையார் வீட்டிற்குள் அமர வைத்து அமுது படைத்து தொடுகறி தயாராகாத நிலையில் மாம்பழத்தை அரிந்து வைத்து பசியமர்த்தி அனுப்புகிறாள். கணவன் வீட்டிலில்லாத நேரத்தில் வேற்று ஆடவர் வீட்டுக்குள் செல்வதும் தங்கியிருப்பதும் தவறென சிவனடியார் கூறும்போது இன்னொரு அடியவர் வீட்டிற்குள் அமர்ந்து உணவருந்தியிருக்கிறார். புராணத்தின் தன்மைப்படி இரண்டு இடங்களிலும் வந்தது சிவனடியார் வேடத்தில் சிவபெருமான் என்றே அறியப்படும் நிலையில் புனிதவதிக்கு நிகழ்ந்தது மரபு மீறலாக அமைகின்றது. எது எப்படியாயினும் புனிதவதி மற்றொரு கனியைக் கேட்ட மாத்திரத்தில் சிவனடியார்க்குக் கொடுத்த விஷயத்தைச் சொல்லாததற்கு இந்த சமூக உளவியல் காரணமாகக் கூட இருந்திருக்கலாம்.

கணவனின் மனம் எப்படிப்பட்டது என்பதும் சூழல் அறிந்து அவனிடம் பேச வேண்டும் என்கிற திறமும் மனைவிக்கு நன்கு தெரியும். வேற்று ஆடவருக்கு அமுது படைத்தது மட்டுமல்லாமல் தனக்காகக் கொடுத்தனுப்பிய கனியை மற்றவருக்கு அளித்ததையெல்லாம் பரமதத்தன் மனம் ஏற்காது என்பதை அறிந்து புனிதவதியார் அமைதியாய் இருந்திருக்கக் கூடும். இன்றைய காலச்சூழலிலும் இதுபோன்ற நிகழ்வுகளை தவறாய்ப் புரிந்து கொள்ளும் கணவன்மார்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பல நூறாண்டுகளுக்குமுன் புனிதவதி சொல்லாமல் இருந்தது குற்றமாகப்படவில்லை. சமூகம் விதித்த கட்டுப்பாட்டிற்குள் கணவனுக்கு உகந்த நல்ல மனையாளாக இருக்க விரும்பியிருக்கிறாள்.

முந்தை பழத்தினும் சுவை மிகுதியாக இப்பழம் இருக்கிறதே எங்கு பெற்றாய்? என்று பரமதத்தன் கேட்டதும் புனிதவதியின் உடல் நடுங்குகிறது. இந்த நடுக்கம் செய்வினை மறைப்பினால் உள்ளத்தின் வெளிப்பாடாக புறத்தே புலப்படுகிறது. செய்தபடி சொல்லுவதே கடன் என எண்ணி,

"எய்தவரும் கனி அளித்தார் யார் என்னும் கணவனுக்கு
மொய்தரு பூங்குழல் மடவார் புகந்தபடிதனை மொழிந்தார்" (பெ.பு.1749)
"ஈசன் அருள் எனக் கெட்ட இல் இறைவன் அது தெளியான்" (பெ.பு.1749)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பரமதத்தன் கேட்டதும் புனிதவதியின் உடல் நடுக்கமுறுவதாக சேக்கிழார் காட்டுகிறார். நடுக்கம் மேலும் மறைத்தற்கியலாது என்பதை வெளிப்படுத்துகிறது. சிவனடியாருக்குக் கொடுத்ததை மறைத்தது, இறைவன் அருளால் கனியைப் பெற்றது. இந்த இரண்டு செயல்களும் கணவனின் முகத்தைச் சந்திக்கும் திறனைப் புனிதவதிக்குக் குறைக்கின்றது. அதே நேரத்தில் அந்தக் குற்ற உணர்வை (Guilty Consiouness) நீடிக்கவிடாமல் அதற்குத் தீர்வாக இறைவன் அருளால் பெற்றதைச் சொல்லிவிடுகிறாள். 'இல்இறைவன் (கணவன்) அது தெளியான்' என்று குறிப்பிடுகிறார் சேக்கிழார். பரமதத்தன் எதார்த்த மனிதனாக இருப்பதில் ஐயமில்லை. நம்பாமல் 'அப்படியான இன்னொரு கனியைப் பெற்றுத் தருக' என்கிறான். இறைவனிடம் வேண்டிப்பெற்றேன் என்று புனிதவதி சொல்லைத்தான் கேட்டார் கண்ணால் காணாததால் நம்பமுடியவில்லை. பரமதத்தின் நிலையில் எந்த ஆடவன் இருந்தாலும் இக்கேள்வி எழுவது நியாயமே. தன் கண்முன் இறையருளால் பெற்ற கனி தன் கைக்கு வந்ததும் காணாமல் மறைந்து போகவே அவனுக்கு அச்சமும் மனைவியின்பால் தெய்வசக்தி இருப்பதையும் உணர்கிறான்.

தெய்வசக்தி கொண்ட ஒரு பெண்ணிடம் இயல்பாக குடும்பம் நடத்த இயலாது என்பதை அறிந்தே புனிதவதியை விட்டுவிட்டு பிறர் அறியாமல் மதுரையில் ஒரு பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்துகிறான்.

பரமதத்தன் தொடர்ந்து புனிதவதியோடு இல்லறம் நடத்தும்பட்சத்தில் அவனுக்கு தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) மேலோங்கியிருக்கும். "தன்னுடைய வளர்ச்சியின் போதாமையை அல்லது குறையை ஒருவன் உணரும் போது அவனிடம் தாழ்வு மனப்பான்மை உணர்ச்சிகள் தோன்றுகின்றன. ஒருவன் தான் எதிர்கொள்ள வேண்டிய ஒரு சிக்கலை ஏற்கவோ சமாளிக்கவோ தன்னால் இயலாது என நம்பும்போது தாழ்வு மனப்பான்மைச் சிக்கல் தோன்றுகிறது." வாழ்க்கையில் சிக்கல்கள் ஏற்படும்பொழுது அதை எதிர்நோக்கும் ஆற்றல் இல்லாதவர்கள் உளச்சிக்கலுக்கு ஆளாகின்றனர். உள்ளத்தில் சிக்கல் இல்லாதவர்களே இந்த உலகத்தில் இல்லை. சிக்கலைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர் இயல்பான மனிதர்களாக வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர்.

புனிதவதியைப் பார்க்கும்போதெல்லாம் பரமதத்தனுக்கு தாழ்வு மனப்பான்மை மேலோங்கும் இந்த மன உளச்சலிலிருந்து விடுபட எண்ணுகிறான். மேலும், புனிதவதியுடன் இல்வாழ்வில் ஈடுபட மனம் இடம் கொடுக்காத நிலையில் தனக்கான இல்லற சுகத்திற்கு ஒரு பெண்ணையும் மணந்து கொள்கிறான். அவன் எண்ணப்படி அது சரியென்று செய்து கொண்டாலும் மனைவி இருக்கும்போது இன்னொருத்தியைத் திருமணம் செய்வது சமூகத்தில் தவறு என்று உணர்ந்த நிலையில் ஊரார் அறியாத வகையில் தொலைதூரம் சென்று வாழ்கிறான்.

புனிதவதியாருடன் இல்லறத்தில் ஈடுபட பரமத்தனின் மனம் இடங்கொடுக்காமல் உற்றார் உறவினர் அறியா வகையில் வேறொரு பெண்ணை மணந்து வாழ்க்கை நடத்தினாலும் இரண்டாம் மனைவி மூலம் பிறந்த குழந்தைக்கு புனிதவதி என்றே பெயர் சூட்டியிருந்தான். உறவினர் மூலம் தெரிந்து பெற்றோருடன் புனிதவதி மதுரைக்கு வந்தபோது மனைவி குழந்தையுடன் அவள் காலில் விழுந்து வணங்குகிறான். அவன் மனதில் அவள் தெய்வநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தாள்.

கணவனுக்குப் பயன்படாத அழகு கெட்டொழிய வேண்டுமென்று நினைத்து புனிதவதியார் பேய் உருவம் கொண்டது எத்தன்மையது என எண்ணுதல் வேண்டும்

"ஈங்கு இவன் குறித்த கொள்கை
இது இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப் பொதிகழிந்து இங்கு உன்பால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியேனுக்குப்
பாங்குற வேண்டும் என்று
பரமர் தாள் பரவி நின்றார்'' (பெ.பு.1770)

கணவனுக்கு ஆகாத வனப்பு கெடுக என காரைக்காலம்மையார் பேய் உருவம் கொண்டது உளச்சோர்வு கோளாறு (Depressive disorder) ஆகும்.

"நெருங்கிய ஒருவரது இழப்பு ஒரு மனிதனை உளச் சோர்வடையச் செய்யும். அப்படிப்பட்டவர்கள் இழந்தவரைப் பற்றிய தம் விருப்பு வெறுப்புகளுக்கிடையே வருத்தம் அடைவதோடு தம்மைத் தனிமைப்படுத்திச் சென்று விட்டார் என சினம் கொள்வர். பிரிந்தவர்களின் குணங்களைத் தங்கள் நனவிலி நிலையில் (ருெஉழெஉைழரள ளவயபந) இணைத்துக் கொண்டு வருத்தங்களை வெளிக்காட்டாமல் சில வேளைகளில் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குத் துணிந்து விடுவர் (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 5, ப.405) "ஒருவர் மனநோய்க்கு ஆட்படும்போது அவருக்குள் மாய ஒலிகள் கேட்கின்றன. யாருமே அருகில் இல்லாவிடினும் யாரோ ஒருவர் பேசுவது போல் கேட்கும். இக்குரல்கள் அவர்களிடம் திட்டுவது போலவும் கட்டளை இடுவது போலவும் குறை கூறியோ அல்லது விமர்சனம் செய்வது போலவும் கேட்கும்." மனதிற்குப் பிடிக்காத அல்லது விரும்பாத சில சூழ்நிலைகள் அமையும் போது இந்நோய்க்கு ஆளாகின்றனர். பெரும்பாலும் பெண்களே இந்நோய்க்கு ஆளாகின்றனர். பாலுணர்வில் ஏற்படும் சிக்கல்களும் ஏமாற்றங்களும் இதற்கு முக்கியக் காரணங்களாக அமைகின்றன. மனிதனின் மனம் ஆழ்கடல் போலவே நீண்ட நெடிய அமைதி கொண்டது. இதில் கொந்தளிப்பு ஏற்படுமேயானால் மனித வாழ்வில் புயல், கொந்தளிப்பு என தீவிர சிதைவுகள் ஏற்பட்டுவிடும். இதிலிருந்து முற்றிலும் விடுபட மடைமாற்றமாக (Sublimation) வேறு தளத்தில் தன்னை இயக்கிக் கொள்வது இயல்பு.

கணவனுக்காக மட்டுமே மனைவி அலங்காரம் செய்து கொண்ட காலகட்டத்தில் புனிதவதியார் வாழ்ந்திருக்கிறார். சங்க காலத்தில் பெண்ணின் அழகு அனைத்தும் ஆணைச் சுற்றியே புனையப்பட்டிருப்பதைக் காண்கிறோம். கணவன் இறந்த பிறகு உடன் சாவதற்கும் இந்தப் பெண்மை நலமே காரணமாக இருந்திருக்கின்றது. திலகவதியாரின் தவக்கோலமும் மாதினியார் கணவனுடன் இறந்து போன நிகழ்வும் காரைக்காலம்மையாரின் பேய் உருவமும் ஆணை மையமிட்டதாக அமைகின்றன. அன்பு என்று இந்த இடத்தில் சொன்னோமானால் பெற்றோருக்காகவோ மற்ற உறவுகளுக்காகவோ எந்தப் பெண்ணும் சாவதில்லை. கணவன் இறந்தால் அழகு நலம் கெடுத்து மொட்டையடித்து வீட்டிற்குள் முடக்கி வைப்பதையும் சமூகம் ஆதரித்து இருக்கிறது. பெண் என்பவள் ஆணுக்கென்றுப் படைக்கப்பட்டவள். ஆணின் பாலுணர்வு இச்சைக்கு இணங்கிப் போக வேண்டியவள் என்பதை பக்தி இலக்கியங்களும் மறவாமல் பதிவு செய்துள்ளன. எந்த இலக்கியமாயினும் சமூக உளவியலறிந்து படைக்கப்பட்டவை என்பதை மறுக்க இயலாது. ஏனெனில் படைப்பாளன் சமூகத்தில் ஒரு அங்கம். சமூக கட்டமைப்பிற்கு இணங்கியவளாக பெண் இருந்திருக்கிறாள் இருந்து கொண்டும் இருக்கிறாள். பெண்களுக்கான சமூகக் கொடுமைகள் நிறையவே தகர்த்தெறியப்பட்டுவிட்டன. ஆயினும் குடும்ப அறம் பேணுதலில் மரபாய் சில விஷயங்கள் தொர்ந்துவருகின்றன.

பார்வை நூல்கள்

1. பெரியபுராணம்
2. The Teachings of Sigmund Freud

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மலேசியச் சிறுகதைகள் காட்டும் வாழ்வியல்
Depiction of Life in Malaysian Short Stories

முனைவர் ஜெ. சந்திரகலா, உதவிப்பேராசிரியர்
தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

Abstract

The article tries to show life in the select short stories of Tamil people in Malaysia written by the Malaysian Tamil writers. Tamil people are one of the ethinic groups in Malaysia. They went there as coffee planters and tea estate labourers and rubber tree cutters. Historically many of the Chola kings took refuge there. It shows the long back connection of the Tamil people's migration over there. After the colonization of the Europeans; especially Britishers, many ethnic group people became paupers or pressured under created poverty. Malaysia is a place of rich culture and Tamil people live there happily and also in unhappiness. The life is both the two we have to accept. Hence, the article traces down the way of life in the select short stories.

Keywords: Life Depicted in Malaysian Short Stories, Way of Life

தமிழ் இலக்கியம் என்பது ஒரு பரந்துபட்ட எல்லையை உடையது. இவ்விலக்கியங்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியம், சங்கமருவிய இலக்கியம், காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம் என்று நிலையில் அமைந்துள்ளன. தற்போது தமிழ் இலக்கியம் தமிழ்நாட்டில் மட்டும் படைக்கப்படுவதோ, படிக்கப்படுவதோ அல்ல. பல்வேறு நாடுகளில் வாழக்கூடிய தமிழ் மக்கள் தங்கள் கலாச்சார பண்பாட்டுச் சூழலுக்கேற்ப தாங்கள் கண்டதையும் கேட்டதையும் அனுபவித்ததையும் படைப்புகளாய் படைக்கிறார்கள்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழ்மக்களில் சிலர் படைப்பாளர்களாக உருவெடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய படைப்புகளை ஒன்று திரட்டி அயலகத் தமிழ் இலக்கியம் என்ற பெயரில் சாகித்திய அகாதெமி நிறுவனம் வெளியிட்டிருக்கின்றது. அத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள மலேசியச் சிறுகதைகளின் வெளிப்படும் வாழ்வியல் செய்திகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டுக்கு வெளியே தமிழ் அதிகமாகப் பேசப்படும் நாடுகளுள் ஒன்று மலேசியா. தென்னிந்தியாவிலிருந்து தமிழர்கள் பிரிட்டீஷ் காலனித்துவ அரசினால் ஒப்பந்தக் கூலிகளாக 1883-ல் மலாயாவுக்குக் கொண்டு போகப்பட்டனர். அங்கு காடுகளை அழித்து காப்பி தேயிலைத் தோட்டங்களையும், ரப்பர் தோட்டங்களையும் அமைத்து அந்தத் தொழில்களுக்கு ஏற்ற சாலை அமைப்பு, நகர அமைப்பு வேலைகளிலும் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

இவர்களைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக எழுத்தர், மேலாளர் போன்ற பணிகளுக்கும் வர்த்தகம் செய்வதற்கும் தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாமல் இலங்கையிலிருந்தும் தமிழர்கள் குடியேறினார்கள். படிப்பறிவு பெற்ற இவர்களே மலேசியாவில் இலக்கியத்திற்கு வித்திட்டார்கள்.

மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள்

மலேசியச் சிறுகதைகள் வரலாறும், தமிழ்நாட்டில் சிறுகதையின் வரலாறும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஏறக்குறைய ஒரே காலக்கட்டத்தில் தான் தொடங்குகின்றன என்று ந.பாஸ்கரன் குறிப்பிடுகிறார். பாஸ்கரன் அவர்கள் சிறுகதைகளைப் பற்றி கூறும்போது,

மாதவையாவின் 'குசிகர் குட்டிக்கதைகள்' (1924) தொகுப்பிற்குப் பிறகு 1927-ல் வந்த 'மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்' தமிழ்ச்சிறுகதையின் பொருள் பொதிந்த தொடக்கமாகக் கருதப்படுகிறது. இக்காலத்தை ஒட்டி 1930-ல் சிங்கப்பூரில் பதிப்பிக்கப்பட்ட 'நவரச கதாமஞ்சரி' என்னும் நூல் தான் மலேசியச் சிறுகதை வரலாற்றின் தொடக்கமாகக் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு இலக்கியத்திற்கு இலக்கியநோக்கம் என்பதுதான் பிரதானமானது என்ற கருத்து வலுப்பெறச் சிறுகதைகள் தனித்தன்மைப் பெற ஆரம்பித்தன. சிறுகதைகளை மலேசியாவில் பத்திரிக்கைகளும், பத்திரிக்கை ஆசிரியர்களும் ஊக்கப்படுத்தினார்கள். இவ்வாறு வளர்ந்த சிறுகதை இன்று பல்வேறு படிநிலைகளைத் தாண்டி வளருகிறது.

அயலகத் தமிழ் இலக்கியம் என்ற நூலில் மலேசியச் சிறுகதைகள் மொத்தம் ஆறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் வெடித்த துப்பாக்கிகள், மாணிக்கம் காணாமல் போகிறான், மூலதனம், நடப்பு என்ற நான்கு கதைகளில் காணலாகும் வாழ்வியல் செய்திகளை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வெடித்த துப்பாக்கிகள்

இராணுவ வீரர்களின் வாழ்வியல்நிலை இச்சிறுகதையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. எதிரிகளைத் தாக்கச்செல்லும் போது உண்ண உணவு இல்லாமல், உறங்குவதற்குச் சரியான இடம் இல்லாமல் அவர்கள் படும் துன்பங்கள் இச்சிறுகதையில் இடம்பெற்றுள்ளது. "எல்லோரும் தேனீரைத் தயாரிக்கத் தொடங்கினார்கள் கொம்போரேசனில் வைக்கப்பட்டிருந்த டின்களை உடைத்து பிஸ்கட் காயா, சீனி, பால், தேத்துாள் முதலியவற்றை வெளியே எடுத்து தேனீரைத் தயாரிக்கத் தொடங்கினார்கள். எல்லோரும் சாமான்களைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள். புறப்படுவதற்கு முன்பு தாங்கள் அங்கே தங்கி உணவருந்தியதற்கான எந்த அடையாளமும் இல்லாமல் எல்லாவற்றையும் குழித்தோண்டிப் புதைத்தார்கள். அதன்மேல் சருகுகளைக் கொட்டினார்கள்" என்ற செய்தி உணவு சாப்பிட்ட இடம் தெரிந்தால் எதிரிகளுக்கு காட்டிக்கொடுத்துவிடும் என்ற ராணுவ நுட்பம் புலப்படுகிறது.

இதேபோல் இராணுவ வீரர்கள் வெளியில் செல்லும்போது எப்படி துாங்குகிறார்கள் என்பதை "நான்கு அடி ஆழமும் -இரண்டடி அகலமும், நான்கு அடி நீளமும் கொண்ட குழிகளை இருவர் இருவராகத் தோண்டத் தொடங்கினார்கள். அந்தச் சிறிய குழியில் தான் இருவர் துாங்க வேண்டும். அதுவும் உட்கார்ந்து கொண்டு துாங்க வேண்டும்" என்ற செய்தியின் மூலம் அறியலாம்.

மேலும் அவர்கள் செல்லக்கூடிய வழி எவ்வளவு கடுமையானது என்பதை "மாலை மங்கிய நேரம், கொசுக்கள் படையெடுக்கத் தொடங்கின, காட்டுப்பூச்சிகளின் அதி பயங்கர ஓசை, மழை இலேசாகத் துாறத் தொடங்கியது, காட்டுக்குள் அதிகமாக இருட்டத் தொடங்கியது.

எல்லோரும் ஆற்றில் இறங்கினார்கள் குளிர்வாட்டியது. துப்பாக்கிகளைத் தலைக்குமேல் துாக்கிக்கொண்டு நீரைக்கிழித்துக்கொண்டு முன்னேறினார்கள்" என்ற செய்திகள் எத்தகைய துன்பங்களை அனுபவித்துக்கொண்டு இராணுவ வீரர்கள் வேலை செய்கிறார்கள் என்பதை அறியமுடிகின்றது.

மாணிக்கம் காணாமல் போகிறான்

இச்சிறுகதையில் மதிப்பெண் குறைவாகப்பெற்றதால் மாணிக்கம் காணாமல் போகிறான். இதனால் அவருடைய குடும்பத்தினரிடயே ஏற்படக்கூடிய பிரச்சனைகள் எதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதை வாழ்வியல் செய்தியாகக் கூறலாம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மாணிக்கம் என்பவன் தன் அண்ணன் வீட்டில் வளர்கிறான். அப்பா,அம்மா ஆற்றவேண்டிய அத்தனை கடமைகளையும் அவன் அண்ணன் முத்துசாமி செய்கிறான். ஆனால் மாணிக்கம் காணாமல் போய்விட்டான் என்று கேள்விபட்ட அம்மா அப்பா ஆகிய இருவரும்கடமையாற்றிய முத்துசாமியைச் சந்தேகிக்கிறார்கள்.

"அய்யோ பாவி மகனே! ஏன் புள்ளைய கண்ணுக்குக்கண்ணா வளத்து உங்கிட்ட ஒப்படச்சேன்! என்னடா பண்ணுன என் மாணிக்கத்த? என் புள்ளைய!" என்று அம்மா கூறுவதையும் அப்பா வெளியிலிருந்து கத்தினர், "என்னமோ பட்டணத்தில கவர்மெண்டு உத்தியோகம் பாக்கிறானேன்னு என் புள்ளைய காப்பாத்துவான்னு அனுப்புனேன். புள்ளக்கி ஒழுங்காகச் சோறுபோட்டானா, துணிவாங்கிக் குடுத்தானா தெரியல! கஷ்டத்த தாங்கமாட்டாம்ப்புள்ள எங்க ஒடினானோ எங்க செத்தானோ யாருக்குத் தெரியும்", என்று அப்பா கூறுவதையும் காணமுடிகின்றது.

தன் பையனை நல்லமுறையில் வளர்த்து கடமையாற்றவேண்டிய நிலையில் உள்ள தாய் தந்தையார் தன்னுடைய பொறுப்புகளை மகனிடம் ஒப்படைத்துவிட்டு தன் மகனின் கடமையைச் சந்தேகிப்பதுபோல் இக்கதை அமைந்துள்ளது.

மூலதனம்

மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களுள் மிகமுக்கியமானது பத்திரிக்கை. ஆனால், பத்திரிக்கையை நடத்துபவர்கள் சமூகத்தில் நடக்கக்கூடிய அவலங்களை மக்களுக்கு படம்பிடித்துக்காட்டுவதை விட தன்னுடைய இதழ் விற்பனையாக வேண்டும் என்பதற்காக, ஒன்றுமில்லாத செய்தியை பெரிதாக்குகிறப் போக்கை இக்கதை விளக்குகின்றது. இந்த போக்கு இன்றையநிலையிலும் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கர் ஒரு வித்தியாசமான ரிப்போர்ட்டர். தலைவர்களில் ஒருவரை விமானநிலையத்தில் சந்திக்கிறான். மானம், அவமானம் போன்ற சொல்லை அவன் மேடையில் நிறையப் பயன்படுத்துபவன். ஆதலால், அச்சொல்லைப் பயன்படுத்தியே கேள்விகேட்கின்றான். அதனை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உடனே அவர் "பதவிக்காகவோ பணத்துக்காகவோ நான் கட்சியில் இல்லை, பொருத்திருந்து பாருங்கள்" என்று அவர்கூறியது பத்திரிக்கைக்குச் சூடுபிடித்துவிட்டது போன்ற உணர்வு. அடுத்து கட்சித்தலைவரைச் சந்தித்தார். அப்பொழுது கதை ஆசிரியராக கூறுகிறார், "இந்தப் பத்திரிக்கை ஆசிரியரின் பிரதானநோக்கம் பத்திரிக்கை விற்பனைதான்".

பத்திரிக்கை ரிப்போர்ட்டர் ஒவ்வொரு கேள்வியாகக் கட்சி தலைவரைப் பார்த்துக்கேட்கின்றான். சூடு தணிந்துவிடும் போல் தெரிந்தவுடன் சூடு ஏத்துவதற்காக திரியைக் கொஞ்சம் தள்ளிவிடுகிறான். "இந்தச் சமுதாயமே தங்களுடைய உயிர்நாடியாக நினைத்து உழைக்கிறீர்கள். இதில் மற்றவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பதற்குப் பதிலாகக் கட்சியையே உடைத்துவிடுவார்கள் போலிருக்கிறதே என்று கேட்டான். உடனே தலைவரின் முகத்தில் தணல்கொட்டியது. உடனே அவர், "நான் நடத்துவது அரசியல்கட்சி. தெண்டச்சோறு தின்னு கொண்டிருப்பதற்கு இது அனாதை இல்லம் இல்லை. உழைப்பவருக்கும், விசுவாசமுள்ளவருக்கும் தான் இங்கே இடமுண்டு. காலம் எல்லோருக்கும் பொதுவானது. அது காட்டுகின்ற உண்மையைப் பொறுத்திருந்து பாருங்கள். எனக்கு நேரமாகிறது நான் வருகிறேன்" என்று தலைவர் சொன்னவுடன் உள்கட்சி பூசலை உண்டுபண்ண வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்த ரிப்போர்ட்டருக்கு செய்தி கிடைத்துவிட்டது என்று கதை முடிவடைகிறது. இதன்மூலம் ஒரு பத்திரிக்கையாளர் சமூகக்கடமையாற்றாமல், சமூகச்சீரழிவிற்குக் காரணமாக இருக்கிறார் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நடப்பு

ஒருவர் வாழ்க்கையில் மேம்பாடு அடையும்போது புகழ்வதும், தோல்வி அடையும் போது இகழ்வதும் இச்சமூதாயத்தில் நிகழ்வாக அமைகிறது. இக்கதையில் நல்லசாமி நடைவீரர் அவருக்கு மூன்று குழந்தைகள். அதில் மூத்தமகன் குணசேகரன். குணசேகரனை நினைத்துப் பார்க்கின்றான். தந்தை வெற்றிப்பெற்ற போது விமானநிலையத்தில் பல பேர் நின்று வரவேற்றனர். ஆனால், தோல்வி அடைந்தபோது குணசேகரனைத் தவிர யாரும் வரவில்லை. இதுதான் வாழ்க்கை என்று பக்குவமாகப் புரிந்து கொள்கின்றான்.

நல்லசாமி நடைவீரராக இருந்தாலும் பொதுநலம் என்பது குறைவாகவே இருக்கின்றது. நல்லசாமி குடியிருப்பிற்கு அருகாமையில் ஜப்பானியக் கம்பெனி வாங்கியதால் குடியிருப்பை இடிப்பதற்கு புல்டோசர்கள் வந்துவிட்டது. அந்தத் தெருவில் வசிப்பவர்கள் எல்லோரும் நல்லசாமியை அழைத்தபோது அவன் நிராகரிக்கின்றான். இச்சம்பவம் குணசேகரனைப் பாதிக்கிறது. நல்லசாமியின் நடைப்போட்டி மணிலாவில் நடக்கிறது. ஆனால், குணசேகரன் படிப்பதற்காக நண்பன் வீட்டிற்குச் செல்கிறான். 'இன்று அப்பாவின் போட்டி இங்கு இரு' என்று கூறுகிறாள் அம்மா. அப்போது அவன் "அப்பா அவருடைய எதிர்காலத்துக்காக நடக்கிறார். நான் என்னுடைய எதிர்காலத்துக்காகப் படிக்கிறேன். நீங்க வீட்டை பாத்துக்குங்க. புல்டோசர் விட்டு இடிச்சாறாம்" என்று கூறுவதன் மூலம் தன் தந்தை தன் வளர்ச்சியில் காட்டுகிற அக்கறை பொதுநலத்தில் இல்லையே என்று ஏங்குகிற நிலை குணசேகரனிடம் காணப்படுவதை அறிய முடிகின்றது.

- இராணுவ வீரர்களின் வாழ்வியல் நிலையும், அவர்களின் பணிக்கடினத்தையும் விளக்கக்கூடிய வகையில் வெடித்த துப்பாக்கிகள் கதை அமைந்திருப்பதை அறியமுடிகின்றது.
- ஒவ்வொருவருக்கும் குடும்பத்தில் ஆற்ற வேண்டிய கடமை இருக்கிறது. அதேபோல் தாய்-தந்தையர் குழந்தைகளை வளர்த்து ஆளாக்காமல், தன் சுமையை தன்னுடைய மூத்த மகன் முத்துசாமியிடம் ஒப்படைத்திருப்பது, எதிர்பாரது ஒரு சம்பவம் நடைபெறும்போது கடமையாற்றியவனைச் சந்தேகப்படும் போக்கு இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.
- பத்திரிக்கைகள் சமூக சேவை புரியாமல், பத்திரிக்கை விற்பனையை பிரதான நோக்கமாகக் கொண்டு செயல்படும் போக்கை பத்திரிக்கை ஆசிரியர் மற்றும் ரிப்போர்ட்டர் மூலம் இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.
- தன்நலத்தோடு பொதுநோக்கம் இருக்கவேண்டும். பொதுநலம் இல்லாதபோது தந்தையை இழிவாகப் பாக்கக்கூடிய மகனின் மனநிலையை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

பார்வை நூல்கள்

1. மாதவையாவின் 'குசிகர் குட்டிக்கதைகள்'
2. *நவரச கதாமஞ்சரி*. 1930-ல் சிங்கப்பூரில் பதிப்பிக்கப்பட்ட*து*
3. *வெடித்த துப்பாக்கிகள்*
4. *மாணிக்கம் காணாமல் போகிறான்*
5. *மூலதனம்*
6. *நடப்பு*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிறுபாணாற்றுப்படையின் சாயலில் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப்பாடலா திருமுருகாற்றுப்படை?

Was that *Thirumurugattruppadai* an Invocation Song of God alike *Sirupanaatruppadai*?

முனைவர் ஆ. சந்திரன், உதவிப்பேராசிரியர்
தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்.

Abstract

The main purpose of the article is to bring down the doubt clear that whether "Thirumurugattruppadai" is an invocation song of God alike "Sirupanaatruppadai"? There are lots of doubts based on its original construction but the idea is to spread spirituality of the Shiva sect and to create the divine consciousness in the individual. To find out the theme the paper extends to find the correlation between "Thirumurugattruppadai" and the grammatical structure of "Aatruppadai" books, then compares it with Sangam songs, genral atructure of "Patthuppattu" and deciphers "Thirumurugattruppadai" seems alike "*Sirupanaatruppadai" Hence the article traces the origin and evaluate it.*

Keywords: *Thirumurugattruppadai*, An invocation song of God alike *Sirupanaatruppadai*?

நெறிப்படுத்துதல் அல்லது வழிபடுத்துதல் என்பதை நோக்கமாகக் கொண்டது ஆற்றுப்படை. வறுமையிலிருந்து மீண்டு வளம்பெற்ற ஒர் இரவலன் வறுமையுடன் இருக்கும் மற்றோர் இரவலனைத் தான் வளம்பெற்று வாழக் காரணமான வள்ளல் அல்லது மன்னனிடம் சென்று பெருஞ்செல்வம் பெற்று வளமுடன் வாழுமாறு நெறிப்படுத்துவதாய் இது அமையும்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீ,ச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்" (தொ.பொ.91:3-6)

எனத் தொல்காப்பியர் கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகிய நால்வர் மட்டுமே ஆற்றுப்படுத்த உரியவர்கள் என்று கூறுகிறது. அப்படி இருக்க அடியவரை இறையருள் வேண்டி ஆண்டவனிடத்தே (முருகன்) ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படை ஆற்றுப்படை என்ற பெயருடன் பத்துப்பாட்டுத் தொகுப்பில் எப்படி இடம்பெற்றது? சில கூறுகள் சிறுபாணாற்றுப்படையுடன் நெருக்கமாய் அமைந்திருப்பதால் அப்பாடலின் சாயலில் பாடப்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடலா என்பன போன்ற வினாக்களுக்கான விளக்கங்களைத் தேட முயல்கின்றது இக்கட்டுரை.

திருமுருகாற்றுப்படையும் ஆற்றுப்படை இலக்கணமும்

திருமுருகாற்றுப்படையைத் தொல்காப்பியர் கூறியுள்ள ஆற்றுப்படை இலக்கணத்திற்கு ஏற்புடைய பாடலாகக் கொள்ள முடியுமா? என்ற வினா நெடுங்கலாமாகவே இருந்து வருகின்றது. பத்துப்பாட்டிற்கு உரையெழுதிய நச்சினர்க்கினியர், கூத்தரும் பாணரும்... என்ற தொல்காப்பிய நூற்பாவில் இடம்பெற்றுள்ள "பக்கமென்றதனானே அச்செய்யுட்களைக் கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, முருகாற்றுப்படையென வழங்குதலும் ஆற்றினருமையும் அவனூர்ப் பண்பு முதலியனவுங்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கொள்க" 1 எனப் பொருள் விரித்து முருகாற்றுப்படையும் அவ்விலக்கணத்திற்குப் பொருந்தும் என்று விளக்கம் அளித்துள்ளார். அத்துடன், "முருகாற்றுப்படை என்பதற்கு வீடு பெறுவதற்குச் சமைந்தானோர் இரவலனை, வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துவதென்று பொருள் கூறுக" 2 எனவும் விளக்கம் அளித்துள்ளார். அவரைப் போன்றே "கவிப்பெருமாள் (பரிப்பெருமாள்), பெயர் புலப்படாத உரையாசிரியர், பரிமேலழகர், பரிதியார்" 3 ஆகியோரும் பொருள் கொண்டுள்ளனர். உரையாசிரியர்களின் மேற்கண்ட விளக்கங்கள் தொல்காப்பியத்தில் ஆற்றுப்படைக்குக் கூறப்படும் விளக்கங்கள் திருமுருகாற்றுப்படைக்கும் பொருந்தும் என்பதாகவே உள்ளன.

ஆனால், தற்காலத்தில் மாறுபட்ட விளக்கங்களை அறிஞர் கூறுகின்றனர். "திருமுருகாற்றுப்படை தொல்காப்பியம் கூறாத ஒன்றாகும்" 4 என்கிறார் டாக்டர்.மா. இராசமாணிக்கனார். "அன்பரை ஆண்டவனிடத்தே ஆற்றுப்படுத்துதல் தொல்காப்பிய இலக்கணத்திற்கு வேறானது" 5 என்கிறார் டாக்டர்.மு. கோவிந்தசாமி. "..சென்று பயனெதிர ஆற்றுப்படுத்தற்குரியர் கூத்தர் முதலிய நாற்பாலரேயன்றி வேறு யாருமிலர் என்று தொல்காப்பியர் வரையறுத்து ஓதாமையானும், பெற்ற பெருவளம் பெற்றார்க்கு அறிவுறுத்தலே அந்நூற்பாப் பகுதியிற் சிறப்புடைத்தாகலானும், பேரின்ப வீட்டினும் சிறந்த பெருவளம் பிறிதின்மையானும், புதிது புனையப்பட்ட இத்திருமுருகாற்றுப்படை முன்னை நூல் வழக்கொடு மேற்கூறியாங்கு சற்றே வேறுபாடுடையதாயினும் மற்று மாறுபாடுடைய தன்று" 6 என்கிறார் புலவர் இலக்குவனார். அவரது கருத்திற்கு உடன்படுவது போலவே க. வெள்ளைவாரணரும், "திருமுருகாற்றுப்படை, தொல்காப்பியனார் கூறிய ஆற்றுப்படை இலக்கணத்தின்படி அமைந்ததே என்கிறார்" 7.

மேற்கண்ட விளக்கங்களை ஒப்பிட்டு நோக்க திருமுருகாற்றுப்படைக்கு ஏற்ற வரையறையைத் தொல்காப்பியர் கூறவில்லை என்பதும், ஆனால் அதேநேரம் அது தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படை இலக்கணத்தின்படி அமைந்துள்ளது என்பதும் புலனாகிறது.

திருமுருகாற்றுப்படையும் சங்கப்பாடல்களும்

எட்டுத்தொகையில் உள்ள பதிற்றுப்பத்தும் புறநானூற்றில் பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப்படையில் அமைந்த பாடல்களும், பத்துப்பாட்டில் கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்டை என்ற பெயர்களில் தனித்தனிப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களில் அடியவரை ,றைவன்பால் அவன் அருள் வேண்டி ஆற்றுப்படுத்தும் திருமுருகாற்றுப்படை போன்ற பாடல் எதுவும் இல்லை.

அத்துடன், இருக்கும் ஆற்றுப்படைப் பாடல்கள் பரிசில் பெறுபவன் பொன், பொருள் உள்ளிட்ட பொருட்களை வள்ளலிடம் பரிசிலாகப் பெறுவதைப் பற்றியனவாகவே உள்ளன. அவற்றின் அடிப்படை நோக்கங்கள் உலக இன்பங்களைப் பற்றியனவாகவே உள்ளன. "இவ்வாறான லௌகிக நோக்கங்களின் பொருட்டே ஆற்றுப்படைகள் தோன்றியிருத்தல் வேண்டும். வேறு நோக்கங்கள் தொடக்கத்தில் இல்லை." 8 ஆனால் காலப்போக்கில் புதிய ஆக்கம் பற்றிய சிந்தனை உருவாகியிருக்கும். அதன் தொடக்கமாகப் பத்துப்பாட்டிலுள்ள பாடல்களில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூறலாம்.

பத்துப்பாட்டின் பொது வடிவம்

எட்டுத்தொகையிலுள்ள *ஐங்குறுநூறு, புறநானூறு, அகநானூறு* முதலிய தொகுப்புகள் போல் இல்லாமல், அகப்பாடல்கள், ஆற்றுப்படைப் பாடல்கள் புறப்பாடல் என்ற பன்முகத் தன்மையுடைய (பாகுபாடுடைய) பாடல்களைக் கொண்டது பத்துப்பாட்டு. என்றாலும், அதில் இடம்பெற்றுள்ள பாடல்களில் சில பொதுத் தன்மைகள் உள்ளன. உதாரணமாகச் சொல்வதென்றால், அப்பாடல்களில் ஏற்பட்டுள்ள உருவ, உள்ளடக்க மாற்றங்களைக் கூறலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அம்மாற்றங்கள் பத்துப்பாடல்களிலும் ஒரே விதமாக நிகழ்ந்திருக்கின்றன. இந்த மாற்றங்கள் எப்படி நிகழ்ந்துள்ளன என்பதைப் பட்டினப்பாலைக்கும் பெரும்பாணாற்றுப்படைக்கும் ,டையிலான உறவை வைத்து நாம் எளிமையாகப் புரிந்துகொள்ளலாம். அகமாக்கப்பட்ட புறம், ஆற்றுப்படை என்ற இரு வேறு பண்புகளைக் கொண்டுள்ள அவை பின்வரும் மூன்று ஒத்த செய்திகளையே உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. அவை, “1. அரசனின் சிறப்புகள், 2. நாட்டு வளம் மற்றும் மக்களின் செயல்பாடுகள், 3. உத்திமுறை” 9 ஆகியனவாகும். இவற்றில் முதல் செய்தி எட்டுத்தொகைப் பாடல்களில் உள்ளதைப் போன்றே இருப்பதுடன் அளவில் சற்று நீண்டதாகவும் உள்ளது. இரண்டாவது, மூன்றாவதாக அமைந்துள்ளவை திணை, துறை ஆகியவற்றினைத் தளர்த்தி (உடைத்து) ஒரு நீண்ட இலக்கியத்திற்கான வாயிலை ஏற்படுத்தியுள்ளன. பட்டினப்பாலையின் இப்பண்பு முற்றிலும் புறத்திணைக்குரிய ஒரு பாடாண் பாடல் கற்பனை சேர்ந்த ஓர் உத்தி முறைமையால் வேண்டுமென்றே அகத்திணை ஆக்கப்படுகின்றது” 10 என்பதும், “அகப்பாடலின் முதல் கரு உரி மரபு அதாவது அகப்பாடலின் தன்னியல்பான உணர்வெழுச்சி (spontaneity) செயற்கையாக்கப் படுகின்றது” 11 என்பதும் கவனிக்கத் தக்கன. அத்துடன், “சங்க ,லக்கியங்களினுள்ளே கதைப்பாடல்கள் இல்லாத இன்றைய நிலையில் முல்லைப்பாட்டு, நெடுநல்வாடையில் குறிப்பாக நெடுநல்வாடையில் ஏற்படும் இந்நெகிழ்வு சங்கத் தமிழ்க் கவிதையியலிற் காணப்படும் வளர்ச்சியாகவே கொள்ளப்படவேண்டும். இந்த வளர்ச்சி நிலையிலிருந்து சிலப்பதிகாரத்திற்கான வளர்ச்சி அதிக தொலைவில் இல்லை. இந்த வளர்ச்சி வெறுமனே பாடல் அடிகளின் பெருக்கத்தினால் ஏற்படுவதன்று. இது கவிதையியலில் ஏற்படும் வளர்ச்சியாகும்” 12

இந்த வளர்ச்சி முற்றிலும் மாறுபட்டதாகவும் இருக்க வாய்ப்பில்லை. ஒன்றின் தாக்கம் இன்னொன்றில் பிரதிபலிக்கும் அல்லவா? இலக்கியத்தின் தாக்கமும் அப்படித்தான். அடுத்தடுத்துத் தோன்றும் இலக்கியங்களில் தொடரும். ஏனெனில் படைப்பு படைப்பாளனின் உள்ளத்தில் இருந்து உருவாகிறது. சிறந்த படைப்பு என்பது படைப்பாளனின் படைப்புச் சூழலில் இருந்து உருவாகின்றது. இங்குச் சூழல் என்பது உள்ளதை உள்ளவாறு பிரதிபலிப்பது அல்லது உள்ளதைக் கொண்டு புதியதை உருவாக்குவது என்ற இரு நிலைகளில் அமையலாம். “தனக்கும் தான் படித்து ரசித்த கலைக்கும் உள்ள தொடர்பு, உறவு இது ஒரு தளம். அது போல ‘தன்’ னுக்கும் சமூகம் என்கிற பொருள் வகை Non –I என்ற ஒன்றுக்கும் உள்ள உறவு ஒரு தளம். மொத்தமாய் வரும் முடிவு, இத்தளங்களின் ஒருமித்த இணைப்பே படைப்பு” 13 அதாவது பழமையின் தொடர்ச்சியையும் புதுமையின் வரவேற்பையும் உள்ளடக்கங்களாய்க் கொண்டமையும்.

திருமுருகாற்றுப்படை மற்ற ஆற்றுப்படைப் பாடல்கள் போல ஆற்றுப்படுத்துதல் என்ற அமைப்பைப் பெற்றிருந்த போதிலும் இரவலனை வள்ளலிடம் ஆற்றுப்படுத்துவது என்ற “இச்சிறு பயன்பெறுதற் பொருட்டுத் தம்மையும் தமிழையும் ,ழிவுபடுத்திக் கொள்ளுதல் பெருமக்கள் வெறுக்கத்தக்கதாகவே இருக்கும். இதனை நக்கீரர் உணர்ந்து ஆற்றுப்படையின் நோக்கத்தையே முழுதும் வேறு கொண்டு அவ்வகை நூல்களுக்குப் புதியதொரு கௌரவத்தைக் கொடுத்தனரென்றுதான் நாம் கொள்ளவேண்டும். இங்ஙனம் இயற்றிய புதுநூல் முருகாற்றுப்படையாகும்” 14

சிறுபாணாற்றுப்படையின் சாயலா திருமுருகாற்றுப்படை?

என்னதான் மற்ற ஆற்றுப்படைப் பாடல்களில் இருந்து திருமுருகாற்றுப்படை விலகி இருப்பினும் அப்பாடல் மற்ற ஆற்றுப்படைப் பாடல்களின் குறிப்பாகச் சிறுபாணாற்றுப்படையின் சாயல் அதிகம் காணப்படுவதை அறிய முடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அதாவது, சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான நல்லியக்கோடனைப் புகழும் புலவர் அவன் அளிக்கும் பரிசிலானது வஞ்சி, மதுரை உறந்தை ஆகிய மூன்று தலைநகரங்களில் அரசாளும் மூவேந்தர்கள் அளிக்கும் பரிசிலைவிடச் சிறந்தது என்கிறார். அத்துடன் அவன் பேகன், பாரி, காரி, ஆய், அதியன், நள்ளி, ஓரி ஆகிய கடையெழு வள்ளல்களை விடக் கொடையில் சிறந்தவன் என்றும் கூறுகின்றார் (சிறுபாண். 41-115). இவ்வாறு பிற மன்னர்களை ஒப்பிட்டுப் பிற ஆற்றுப்படைப் பாடல்களில் கூறப்படவில்லை. ஆனால் திருமுருகாற்றுப்படையில் திருமால், சிவன், இந்திரன் முதலிய முப்பத்து மூன்று தேவர்களும் தம்முடைய குறையினை நீக்குமாறு முருகனிடம் வேண்டி அவன் அருளைப் பெற்று முன்பு போல் வாழ்ந்தனர் (முருகு.148-176)" என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன், சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனைப் புகழ சேரநாட்டின் வளத்தையும் வஞ்சி மாநகரின் சிறப்புகளைப் பற்றி விரிவாகக் (சிறுபாண்.41-50) கூறி இறுதியில்,

"வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே - அதாஅன்று" (சிறுபாண். 50)

என்றும், பாண்டிய நாட்டின் பல்வேறு வளங்களையும் மதுரை மாநகரின் சிறப்புகளையும் பற்றி விரிவாகக் (சிறுபாண்.50-67) கூறி,

"மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே - அதாஅன்று" (சிறுபாண்.67)

என்றும், செம்பியனின் காவிரி நீரால் வளங்கொழிக்கும் சோழ நாட்டின் வளத்தையும் உறந்தை மாநகரின் சிறப்புகளைப் பற்றி விரிவாகக் (சிறுபாண்.67-83) கூறி,

"ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே - அதாஅன்று" (சிறுபாண்.83)

என்று பிற வள்ளல்கள் அளிக்கும் ஈகையை விட அதிகமான ஈகையளிப்பவன் என்பதை உணர்த்த "அதாஅன்று" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு சொல்லாட்சி பிற ஆற்றுப்படைப் பாடல்களில் இல்லை. ஆனால் திருமுருகாற்றுப்படையில் முருகனின் இருப்பிடங்களைக் கூறுமுகமாக,

"அலைவாய்ச் சேரலும் நிலைஇய பண்பே - அதாஅன்று" (திருமுருகு.125)

என்றும், "ஆவினன்குடி அசைதலும் உரியன் - அதாஅன்று" (திருமுருகு. 176) என்றும்,

"ஏரகத்து உறைதலும் உரியன் - அதாஅன்று" (திருமுருகு.189) என்றும்,

"குன்றுதொரு ஆடலும் நின்றதன் பண்பே - அதாஅன்று" (திருமுருகு.217)

என்றும் முருகனின் இருப்பிடங்களைப் பற்றி கூறும் போது "அதாஅன்று" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சிறுபாணாற்றுப்படையின் மேற்கண்ட கூறுகளின் சாயல் திருமுருகாற்றுப்படையில் காணப்படுவதால் இப்பாடல் *சிறுபாணாற்றுப்படை* அடியொற்றிப் பாடப்பட்ட ஒன்றோ? என்று எண்ணத் தோன்றுகிறது. இதை உறுதிப்படுத்துவது போல அமைகின்றன. ஆற்றுப்படைப் பாடல்களின் அமைப்பு முறை பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் "பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படைப் பாடல்கள் 12 பொதுக்கூறுகளால் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 7 பொருட் கூறுகள் திருமுருகாற்றுப்படை முதலிய ஐந்து ஆற்றுப்படைப் பாடல்களிலும் பொதுவாய் அமைந்துள்ளன. 12 கூறுகளை முழுமையாகப் பெற்ற பாடல்களாகச் சிறுபாணாற்றுப்படையும் கூத்தராற்றுப்படையும் விளங்குகின்றன." 15 இந்த 12 கூறுகளில் "யாழ்வருணனை, இரவலன் பெற்று வந்த பரிசில் அரசனின் உபசரிப்பு என்ற மூன்று கூறுகள் இடம்பெறவில்லை" 16. அத்துடன் "பிற ஆற்றுப்படைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள விறலி வருணனை என்ற கூறுக்கான இடத்தில் அதை ஒத்த சூரரமகளிர் வடிவ வருணனை இடம்பெற்றுள்ளதும்"17. பிற பாடல்களைப் போன்றே மலைவளத்தைக் கூறுவதுடன் பாடலை நிறைவு செய்வதும் எனப் பிற ஆற்றுப்படைப் பாடல்களின் அமைப்பை ஒத்த பாடலாகவும் இது அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருமுருகாற்றுப்படை - பத்துப்பாட்டின் கடவுள் வாழ்த்தா?

திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியப் பாடல்களுள் ஒன்றாகவே கருதப்பட்டுவருகிறது. எனினும் இப்பாடல் சங்க காலத்திற்குப் பிற்பட்ட ஒன்று என்பது தற்கால ஆய்வுகளின் முடிவாகும். அப்படியிருக்க இப்பாடல் சங்கப் பாடல்களுள் ஒன்றாக (பத்துப்பாட்டுள்) எவ்வாறு சோர்ந்தது என்று அறிய முடியவில்லை. அதற்குக் காரணம் பத்துப்பாட்டுப் பாடல்களின் தொகுப்பு எப்போது நிகழ்ந்தது? அப்பாடல்களைத் தொகுத்தவர் யார்? என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்காமையே ஆகும்.

அத்துடன், பத்துப்பாட்டிலுள்ள திருமுருகாற்றுப்படையைத் தவிரப் பிற ஒன்பது பாடல்களும் எட்டுத் தொகைப் பாடல்களுடன் ஒப்பிட அவை அளவில் மட்டுமல்ல பொருள் நிலையிலும் மாற்றமடைந்துள்ளதை அறிய முடிகிறது. அதாவது அவை அகம்-புறம் என்ற இரண்டினையும் பிரிக்க இயலாத ஒரு நிலைக்குச் செல்கிறதே ஒழியத் திருமுருகாற்றுப்படையைப் போல் பக்தி நிலைக்கு அவை செல்லவில்லை. அப்படியிருக்க இத்திருமுருகாற்றுப்படையை எப்படி இப்பாட்டுகளுள் ஒன்றாக நம் முன்னோர் சேர்த்தனர் என்பது புரியவில்லை. பத்துப்பாட்டினை ஆராய்ந்துள்ள பேராசிரியர் எஸ்.வையாபுரிபிள்ளை, 18 க.கைலாசபதி, 19 டாக்டர்.மு.கோவிந்தசாமி, 20 ஆகியோர் திருமுருகாற்றுப்படையை எட்டுத்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் போல் தொகுத்தவர்களால் சோர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருத்துக் கூறியுள்ளனர். ஆனால், இக்கருத்துப் பொருந்தாது என்று மறுக்கும் மு. ராமசாமி, அதற்குப் பின்வரும் காரணத்தைக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள காரணம், “நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை ஆகிய தொகை நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடல்களை நீக்கியே பாடல்களின் எண்ணிக்கை கணக்கில் கொள்ளப்படுகிறது. அவ்வாறு நோக்க ஒன்பது பாடல்களே உள்ள நூலிற்குப் பத்துப்பாட்டு என்னும் பெயர் எங்ஙனம் பொருந்தும்” 21 என்பதேயாகும்.

அவர் கூறியுள்ள மேற்கண்ட காரணம் சாரியான ஒன்றா என்பது கேள்விக்குறி? காரணம், பாட்டு - பத்துப்பாட்டு என்ற சொற்களிடையே உள்ள கால இடைவெளியே ஆகும். அதாவது, பத்துப்பாட்டுப் பாடல்களைத் தொகுத்தோர் தொகுப்பித்தோர், தொகுக்கப்பட்ட காலம் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைக்காமல் போனாலும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்களில் ஒருவரான பேராசிரியரின் உரையில்தான் முதன் முதலில் பத்துப்பாட்டுப் பாடல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. அத்துடன் அதில் ‘பத்துப்பாட்டு’ என்று கூறப்படாமல் “பாட்டு” 22 என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதைவிட இன்னொரு முக்கியமான செய்தி சங்கம் பற்றியும் அதில் இடம் பெற்றிருந்த நூல்கள் பற்றியும் கூறும் ‘களவியல்’ உரையில் பத்துப்பாட்டிலுள்ள பாடல்கள் பற்றி ஏதும் கூறப்படவில்லை.

ஆனால், இளம்பூரணர் உரையிலும், 23 நன்னூல் மயிலைநாதர் விளக்க உரையிலும்24 ‘பத்துப்பாட்டு’ என்று இன்று அழைக்கப்படும் பெயர் முழுமையாக நமக்குக் கிடைக்கிறது. இவற்றையெல்லாம் நோக்க, பத்துப்பாட்டிலுள்ள பாடல்களை முதலில் ‘பாட்டு’ என்றே பல ஆண்டுகள் அழைத்துள்ளமையும் அதன் பிறகே ‘பத்துப்பாட்டு’ என்று அழைக்கப்பட்டுள்ளமையும் நன்கு புலனாகிறது. ஆக, திருமுருகாற்றுப்படை பிற நீண்ட பாட்டு என்றழைத்த பாடல்களின் கடவுள் வாழ்த்துப் பாடலாக இருந்திருக்கலாம் என்றே தோன்றுகின்றது. ஏனெனில் எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு தொகுப்பில் உள்ள பாடல்களுக்கும் தனித்தனியாக ஒவ்வொரு கடவுள் வாழ்த்துப் பாடல் உள்ளது. அதுபோலவே திருமுருகாற்றுப்படையும் தொடக்கத்தில் பிற பாடல்களுக்கு கடவுள் வாழ்த்துப் பாடலாக இருந்திருக்கலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எட்டுத்தொகையிலுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள்

எட்டுத்தொகையிலுள்ள பரிபாடல், பதிற்றுப்பத்து நீங்கலான பிற ஆறு பாடல்களிலும் ஒவ்வொரு கடவுள் வாழ்த்துப் பாடல் உள்ளது. அதன் விவரம் வருமாறு.

வ.எ	நூல்	கடவுள் அளவு	பா	வகை	பாடியவர்
1.	நற்றிணை	திருமால்	7	ஆசிரியம்	பாரதம்பாடிய பெருந்தேவனார்
2.	குறுந்தொகை	முருகன்	6	"	"
3.	ஐங்குறு நூறு	சிவன்	3	"	"
4.	அகநானூறு	சிவன்	16	"	"
5.	புறநானூறு	சிவன்	13	"	"
6.	கலித்தொகை	சிவன்	17	கலிப்பா	"

மேற்கண்ட பாடல்கள் அனைத்தும் அத்தொகுப்பிலுள்ள பாடல்களின் (அளவிலும் பா வகையிலும்) அமைப்பினைப் போன்றே உள்ளன. இவ்வாறே திருமுருகாற்றுப்படையும் பத்துப்பாட்டிலுள்ள பாடல்களின் அமைப்பினை (அளவிலும் பா வகையிலும்) ஒத்தே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திருமுருகாற்றுப்படையும் நக்கீரரும்

சங்க இலக்கியங்களில் ஒன்றாக உள்ள திருமுருகாற்றுப்படை பன்னிரு திருமுறைகளில் பதினோராம் திருமுறையிலும் இடம்பெற்றுள்ளது. அத்துடன் அத்தொகுப்பில் நக்கீரர் பெயர் "நக்கீர தேவநாயனார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கபில தேவனார், பரணதேவணார் என்ற பெயர்களைக் கொண்ட அடியவர்கள் இருவரின் பெயர்களும் அத்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன" 25. இவை சங்கப் புலவர்களான பரணர், கபிலரின் பெயர்களை ஒத்திருப்பது கவனிக்கத்தக்கது.

மேலும், நக்கீரர் என்ற பெயர் "சங்க நக்கீரர்: கி.பி.250 நெடுநல்வாடை, எட்டுத் தொகையில் சில பாடல்களைப் பாடியவர், 2. முருகாற்றுப்படை- நக்கீரர்: கி.பி.450 சைவ சமயத்தைச் சார்ந்தவர். 3. இறையனார் களவியலுரை கி.பி.650 (அடிநூல், களவியலுரை, நாலடிநானூறு), 4. நக்கீர தேவநாயனார் கி.பி. 850, 11ஆம் திருமுறைப் பிரபந்தங்கள், சைவசமயத்தைச் சேர்ந்தவர். இவ்வாறு நம் வசதிக்கு ஏற்பப் பிரித்து அறிவதோடு 'நக்கீரர்' எனும் பெயர் தொன்மைத் தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்றில் ஆதிக்கம் செலுத்தியிருப்பது" 26 இங்கு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய ஒன்று. இது ஒருபுறமிருக்க நக்கீர தேவனார் என்ற பெயரில் பாடியதாகப் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள "பத்துப்பாட்டினுள் திருமுருகாற்றுப்படைக்கு ஒரு தனி நிலை உள்ளது. ஏனைய ஒன்பதும் மற்றொரு தனி நிலையில் உள்ளன" 27. இப்படிப்பட்ட மாறுபாடுகொண்ட இந்நூலைச் சைவர்கள் நாள்தோறும் ஓதும் மந்திர நூலாகவும் போற்றுகின்றனர்.

"நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப் படையைத்
தற்கோல நாள் தோறும் சாற்றினால் – முக்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும்" 28

என்பது அதை உறுதிசெய்கிறது.

இவற்றுடன் பத்துப்பாட்டிற்கும் திருமுருகாற்றுப்படைக்கும் இடையிலான பதிப்பில் உள்ள இடைவெளியும் இங்குச் சுட்டவேண்டிய ஒன்று. உ.வே.சாமிநாதையர் பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் என 1889 இல் தான் பதிப்பித்தார். ஆனால் அவருக்கு முன்னரே சரவணப்பெருமாளையரால் 1834 இல் திருமுருகாற்றுப்படை தனி நூலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அவருக்குப் பின்னர் வேதகிரி முதலியார் (1850), சுப்பராய முதலியார்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

(1852), ஆறுமுகநாவலர் (1853), சண்முக ஐயர் (1864), அ. இராமசாமி (1886) முதாலனோர் தனி நூலாகப் பதிப்பித்துள்ளனர். “ஆறுமுக நாவலர் பதிப்புகள் வரை திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியப் பத்துப்பாட்டில் ஒன்று என்ற விபரத்துடனோ, பதினோராம் திருமுறையில் ஒன்று என்ற தகவலோடோ பதிப்பிக்கப்பட வில்லை” 29. 1870 இல் சுப்பராய செட்டியார் பதிப்பித்த ‘பதினொரந்திருமுறை’ எனும் நூலிலும் நக்கீரர் தோத்திரங்களுள் திருமுருகாற்றுப் படையும் இடம்பெற்றிருக்கிறது.

இவ்வாறு திருமுருகாற்றுப்படையை “மூலமாகவும், நச்சினார்க்கினியர் உரையுடனும், தோத்திரப் பாடலாகவும், பதினொராம் திருமுறையில் ஒன்றாகவும் பதிப்பித்திருக்கின்றனர். ஆனால் உ.வே.சா. மட்டும்தான் பத்துப்பாட்டில் ஒன்றாகப் பதிப்பித்திருக்கின்றார். 19ஆம் நூற்றாண்டில் வெகுவாக வளர்ந்த பதிப்பு வரலாற்றில் திருமுருகாற்றுப்படைக்கெனத் தனி வரலாறு உண்டு. ‘சைவ பக்திப் பனுவல்’ என்கிற ஒரே ஒரு பின்புலத்தில் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் ‘சங்க இலக்கியம்’ என்கிற புரிதலை இழந்திருக்கிறது. சங்க இலக்கியங்களில் திருமுருகாற்றுப்படைக்கு மட்டுமே பலர் உரை யெழுதியிருப்பதாக அறியமுடிகிறது” 30. அவை ஒரு உண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றன. பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படை உரையாசிரியர்களின் காலம் முதல் இன்றுவரை பத்துப்பாட்டில் ஒன்றாகவும், அதிலிருந்து விடுபட்ட ஒன்றாகவும் வைத்துப் பார்க்கும் பார்வைதான் அது.

முடிவுரை

ஆக, மேற்கண்ட தரவுகளை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்க, திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டில் ஒன்றாகவும், சைவ சமய நூலாகவும் என்ற இரு நிலைகளில் வாசித்தவர்களால் தொடர்ந்து பார்க்கப்பட்டு வருகின்றது. என்றாலும், பன்னிரு திருமுறையில் உள்ள பாடல்களில் இருந்து அமைப்பு நிலையில் மாறுபடுவதுடன் ஆற்றுப்படைப் பாடல்களின் சாயலில் குறிப்பாகச் சிறுபாணாற்றுப்படையின் சாயலில் பாடப்பட்டுள்ள பாடல் என்பதைத் தெளிவாக அறிய முடிகின்றது. எனவே இப்பாடல் பொருநராற்றுப்படை முதலிய ஒன்பது பாடல்களுக்குக் கடவுள் வாழ்த்துப்பாடலாகப் பாடப்பட்ட பாடல் என்பது தெளிவாகிறது. தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தாகக் கருதப்பட்ட அது பின்னர் அப்பாடல்களுள் ஒன்றாகப் பின்வந்தோரால் (தொகுத்தோரால் இருக்கலாம்) சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மாற்றம் இளம்பூரணர், பேராசிரியர் (தொல்காப்பிய உரையாசிரியர்) மயிலைநாதர் (நன்னூல் உரையாசிரியர்) காலத்திற்கும் இடையே நடைபெற்றிருக்கலாம் என்று அறிய முடிகின்றது. அத்துடன், பத்துப்பாட்டு என்ற பெயர் உருவாகிய அக்காலத்திற்குப் பின்னரும் திருமுருகாற்றுப்படை தனியாவும், பதினோராம் திருமுறையிலும் எனத் தனியாக வாசிக்கும் ஒரு போக்கு தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டு வரை நிலவியிருப்பது அதன் தனித்தன்மையை உறுதி செய்கிறது. அதாவது, அப்பாடல் கடவுள் வாழ்த்துப் பாடல்தான் என்பதுதான் அது.

சான்றெண் விளக்கங்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, 1955 (2ஆம் பதிப்பு), திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி, சென்னை, ப.259.
2. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், 1974 (பதிப்பு 7), உ.வே.சா. நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை, ப.79.
3. துரையரங்கனார். டாக்டர் மொ. அ., 1960, அன்பு நெறியே தமிழர் நெறி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ப. 63.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

4. இராசமாணிக்கனார். மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970, சென்னைப் பல்கலைக் கழகம், பக்.38-47.
5. கோவிந்தசாமி. டாக்டர்.மு., தமிழ் ,லக்கிய வரலாறு – ,லக்கியத் தோற்றம், 1969 (2 பதிப்பு), வாசுகி பதிப்பகம், அண்ணாமலை நகர், ப.61.
6. இலக்குவனார். புலவர்., ஆற்றுப்படையும் ஆறுபடைவீடும், 1979 (ஆகஸ்ட்), செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 53, பரல் 12, ப.579.
7. வெள்ளைவாரணன். க., பன்னிரு திருமுறை வரலாறு, 1969, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ப.671.
8. வையாபுரிபிள்ளை. எஸ்., இலக்கிய தீபம், 1952 (முதற்பதிப்பு), பாரிநிலையம், 59. பிராட்வே, சென்னை, ப.16.
9. சந்திரன். முனைவர் ஆ., இலக்கிய வளர்ச்சியில் உருத்திரங்கண்ணனாரின் பங்களிப்பு, தமிழ் இலக்கியங்களில் பன்முக ஆளுமை (ஆய்வுக் கட்டுரைகள்), 2013, செம்மூதாய்ப் பதிப்பகம், 17, தாகூர் தெரு, சிட்லாப் பாக்கம், சென்னை, ப.142-45.
10. கார்த்திகேசு சிவத்தம்பி, தொல்காப்பியமும் கவிதையியலும், 2007, குமரன் புத்தக ,ல்லம், வடபழனி, சென்னை, ப.18.
11. மேலது
12. மேலது, ப.20
13. தமிழவன், படைப்பும் படைப்பாளியும் (திறனாய்வுக் கட்டுரைகள்), 1989 (முதற்பதிப்பு), காவ்யா, 16,17, கிராஸ், இந்திரா நகர், பெங்களூர், ப.17
14. வையாபுரிப்பிள்ளை, எஸ்., இலக்கிய தீபம், 1952 (முதற்பதிப்பு), பாரிநிலையம், 59. பிராட்வே, சென்னை, ப.16.
15. சந்திரன். ஆ., பத்துப்பாட்டு அமைப்பு முறை ஓர் ஆய்வு (முனைவர்பட்ட ஆய்வேடு), 2012, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், (ப.136)
16. மேலது ப.137
17. மேலது ப.135
18. வையாபுரிப்பிள்ளை, பேராசிரியர் எஸ்., வையாபுரி நூற்களஞ்சியம் (முதல் தொகுதி), 1989, இலக்கியச் சிந்தனைகள், நூற்றாண்டு நினைவு வெளியீடு, பக்.142-183.
19. கைலாசபதி. க, தமிழ் வீரநிலைக் கவிதைகள், 2006, குமரன் புத்தக இல்லம், வடபழனி, சென்னை, ப.54.
20. கோவிந்தசாமி. டாக்டர் மு., தமிழ் இலக்கிய வரலாறு – இலக்கியத் தோற்றம், 1969 (2 பதிப்பு), வாசுகி பதிப்பகம், அண்ணாமலை நகர், பக்.61,62.
21. இராமசாமி. மு.பொரி.மு., நக்கீரர் ஓர் ஆய்வு, 1983, பாரி நிலையம், ப.87.
22. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் செய்யுளியல் (உரைவளம்), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1989, ப. 233.
23. மேலது ப.816
24. நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், 1995 (மூன்றாம் பதிப்பு), உ.வே.சா.நூல் நிலையம், சென்னை, ப.212.
25. பன்னிரு திருமுறைகள் (தொ. 17), 2009, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பக்.6,7.
26. http://www.keetru.com/visai/apr09/aiyyappan.php
27. அருணாசலம். மு., தமிழ் இலக்கியவரலாறு (பத்தாம் நூற்றாண்டு), பார்க்கர், இராயப் பேட்டை சென்னை, ப.217
28. சேதுராமன். முனைவர் சி., தமிழ் இலக்கிய வரலாறு, நியூசெஞ்சுரி புக் வுஸ் (பி) லிட், சென்னை, ப.40
29. http://www.keetru.com/visai/apr09/aiyyappan.php
30. மேலது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கணக்கதிகாரம் காட்டும் தொழில்கள்

Occupation Shown by "Kanakkathikaram"

மா.சரவணப்பாண்டி, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - 24

Abstract

The article finds out the way of occupation shown in the literary work "Kanakkathikaram". It was written in the 15th Century, it unfolds the social life, people's life, and occupation and calculating methods prevailed on those times. Basically, it is a mathematical treatise but without life any study proves futile. So, the traces of occupation in the work affirm that arithmetic is used on those days by the people. Hence, the article traces down the related events of occupation in the literary work.

Keywords: Occupation shown in "Kanakkathikaram", Tamil Literature

முன்னுரை

இலக்கியங்கள் அவை தோன்றிய காலத்தின் வரலாற்றையும் சமூகத்தையும் பிரதிபலிப்பன. அவற்றில் சமூகத்தில் வாழும் மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, தொழில்கள், சமூகப் பாகுபாடு இன்ன பிறவற்றையும் எடுத்துக்காட்டுகின்றன. இக்கூற்று சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள் வரை பொருந்துவனவாகும். இவற்றைப் போன்றே கி.பி.15ஆம் நூற்றாண்டில் தோன்றிய *கணக்கதிகாரம்* என்னும் நூலானது அக்காலச் சூழலில் நிலவி வந்த சமூக நிலை, மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் அவர்கள் மேற்கொண்டு வந்த தொழில்கள், பயன்படுத்திய கணித முறைகள் ஆகியவற்றை நமக்கு உணர்த்துகின்றது. அடிப்படையில் கணக்கதிகாரம் நூலானது தமிழ்க்கணித நுலாகும். அதிலுள்ள கணக்குகளின் மூலம் நாம் முற்கூறியவற்றை பிரித்துணர்ந்து இதில் தொழில்கள் பற்றி இக்கட்டுரையின் வழியாக ஆராய முயல்கிறோம்.

கணக்கதிகாரம் - நூற்குறிப்பு

கணக்கதிகாரம் என்பது செவ்வியல் இலக்கியம் போன்றதன்று. மேற்சொன்னது போல் இது ஓர் தமிழ்க்கணித நூலாகும். தமிழ்க்கணித முறையையும் கணக்குகளையும் வெண்பா வடிவில் இந்நூலில் கொடுத்துள்ளார் ஆசிரியர். இந்நூலில் கூறப்பட்டுள்ள அளவை முறைகளும் கணித முறையும் குறியீடுகளும் தமிழர்களுக்கே உரியவையாகும்.

இந்நூலை இயற்றியவர் காரிநாயனார். இதில் பாயிரம், அவையடக்கம், நூல்வகை, ஆக்கியோன் பெயர், கணிதவகை முதலாக மொத்தம் 130 பாடல்கள் உள்ளன. இவை வெண்பா (79), விருத்தப்பா (40), கலிப்பா (3), அகவற்பா (1) ஆகிய பாவடிவங்களில் உள்ளன. இவையோடு வாய்மொழிக் கணக்குகள் (45) விடுகதை வடிவில் அமைந்துள்ளன. இந்நூலில் உள்ள கணக்குகள் யாவும் 'நிலம், பொன், நெல், அரிசி, கல், கால்' என ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்நூலின் காலம் கி.பி.15ஆம் நூற்றாண்டு என வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

தொழில்கள்

அக்காலத்தில் பயிர்த்தொழில் முதன்மை பெற்றுள்ளதை இந்நூல் காட்டுகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கணிதத்தின் தொடக்கம் உழவினை அடிப்படையாகக் கொண்டது என்பதை இந்நூலின் மூலம் அறியலாம்.

இந்நூலின் அறுவகை கணித வகைப்பாட்டில் இருந்து தமிழ்க்கணித முறையானது பயிர்த்தொழில் மற்றும் அது சார்ந்த வாணிபத்தை மையமாகக் கொண்டது என்பதை அறியலாம். மேலும் முகத்தல் அளவையில் ‘நெல்வாய்த்தானம்’ என்ற அளவுகள் கொடுக்கப்பட்டுள்ளது. முகத்தல் அளவைகளில் ஒவ்வொரு அளவையிலும் உள்ள நெல்லின் எண்ணிக்கை அறியப்பட்டிருக்கிறது. இதனால் நெல் அக்காலத்தில் அதிகமாகப் பயன்பாட்டில் இருந்ததையும் மிகவும் நுண்ணிய நிலையில் கணக்கிடப் பயன்பட்டதையும் உணரலாம்.

மேலும் இதில் காணப்படும் தொழில்களைச் செய்வோரின் சமூகநிலை மற்றும் வாழ்க்கை முறையும் நன்கு புலப்படுகின்றன. அக்காலச் சமூகத்தையும் தொழில்களையும் பிரதிபலிக்கும் இந்நூலில் அக்காலத்தில் வாழ்ந்த மன்னர், அரசியர், அவர்களின் குழந்தைகள், சமுதாயத்தில் அவர்களுக்கு அடுத்த நிலையிலுள்ள செட்டியார்,வாணிகர், தேவதாசி, கூத்தாடும் பெண்கள் மற்றும் சமூகத்தின் தேவைகளுக்கும் அடிமட்ட வேலைக்கும் பயன்படுவோர்களான உழவன்,குடியானவன், ஊரில் மற்றும் குப்பத்தில் வாழும் குடிகள், இடையன், தலையாரி, சேவகன், மற்றும் கள்ளர்கள் போன்றவர்களைக் குறிப்பிடுகிறது.இவர்களுக்கான தொழில் சார்ந்த கணக்குகள் தனித்தனியே உள்ளன. அவை இவர்களின் தொழில், அதற்கான கூலி மற்றும் தொழிலின் பண்புகளை பிரதிபலிக்கின்றன. இவற்றை நோக்கும்போது அவர்களுக்குச் சமூகத்தில் உள்ள மதிப்பு மற்றும் அன்றைய கால சமூக நிலையினை அறியமுடிகிறது.

கணக்கதிகாரத்தின் மூலம் அறியப்படும் முதன்மைத் தொழில்களான உழவிலும் வாணிபத்திலும் உள்ள பல்வேறு வேலைகளை இந்நூலின் நூற்பாக்கள் மற்றும் கணக்குகளின் வழி அறியலாம். உழவினை அடிப்படையாகக் கொண்டு செய்கின்ற நெல் பயிரிடுதல், தோட்டம் வைத்துப் பராமரித்தல், பழங்கள் விற்றல் இன்னபிற தொழில்களும் வாணிபத்தில் எண்ணெய் வாணிபம், விலையுயர்ந்த நவரத்தினக் கற்கள் விற்பனை செய்தல் போன்றவையும் சுட்டப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர்த்து உலோகம் செய்தல்(வெண்கலம்,பித்தளை), காலத்தைக் கணக்கிடுதல், கட்டடம் கட்டுதல், காவல் செய்தல், கூத்தாடுதல் போன்ற தொழில்களையும் அறியமுடிகின்றது.

உழவுத்தொழில்

உலகில் உழவுத்தொழிலே முதன்மையானது. இன்று பல்வேறு தொழில்கள் இருந்தாலும் உழுதுண்டு வாழும் வேளாண்மையே முதன்மையானது.இதனை வள்ளுவரும்,

“உழுதுண்டு வாழ்வோர் வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.” (குறள் - 1033)

என்று கூறுகிறார்.

உழவுத்தொழிலை அடிப்படையாகக் கொண்டது நம் தமிழ்ச் சமூகம். உழவினை அடிப்படையாகக் கொண்டே பிற தொழில்களும் வாணிபமும் தோன்றி வளர்ந்தன. தமிழர்களின் கணித அறிவைப் பிரதிபலிக்கும் கணக்கதிகாரத்தின் மூலம் நம் முன்னோர் கணிதத்தின் அடிப்படையிலேயே ஒவ்வொரு தொழிலையும் மேற்கொண்டனர் என்பது விளங்குகின்றது. மேலும் உழவுத் தொழிலின் ஒவ்வொரு அங்கமும் கணிதத்தைப் பயன்படுத்தியது என்பதை இந்நூலின் வழி அறிய முடிகின்றது.

இந்நூலின் நெல், எள், துவரை, மிளகு, வெற்றிலை, மிளகு போன்றவை பயிரிட்டது விளங்குகின்றது. மேலும் வேளாண்மைக்கான நிலத்தின் அமைப்பு, தன்மை, உழுதல், மண்வெட்டுதல், நிலம் தூர்த்தல், குழி மாறுதல், நெல் பயிரிடுதல், நீர் பாய்ச்சுதல், பராமரித்தல், அறுவடை செய்தல், ஏற்றமிறைத்தல், நெல் கணக்கிடுதல், நெல் விற்பனை போன்ற தொழில்களும் புலப்படுகின்றன.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மேலும் உழவு செய்யும் நிலத்தினை அளத்தல், அந்நிலத்தினை அளந்து அதில் விளையும் நெல்லின் அளவினை அறிதல், உத்தமம், மத்திமம், அதமம் ஆகிய நிலங்களின் விளையும் தன்மையினை அறிதல்,மோதிரம், துடி, முழவு, தோரை, சுளகு, எறும்பு, சூலம் போன்ற நிலத்தின் பரப்பினை அறிதல்,ஒரு குழி நிலத்திற்கு எவ்வளவு நெல் கிடைக்கும் என்பதை அறிதல், நிலத்தை உழுததற்கு எவ்வளவு பொன் செலவு ஆகும் என்று அறிதல், விளைந்த நெல்லின் மதிப்பு, பயிரிட்ட நிலத்திற்கு நீர் பாய்ச்சுதல், ஒரு மரக்கால் நெல் மற்றும் வேலி நிலம் நெல் ஆகியவற்றிற்கு வாங்கும் நெல் மற்றும் விற்கும் நெல் எவ்வளவு என்றறிதல், நெல்லுக்கீடான பணத்தின் மதிப்பு, வயலினை காவல் செய்த காவலாளிக்கு கொடுக்கப்படும் பொன் எவ்வளவு என்றறிதல் ஆகிய உழவு சார்ந்த வேலைகளை கணித வழியாக இந்நூலில் அறிந்துகொள்ள முடிகின்றது.

நிலத்தினை உழுதல்

உழவுத்தொழிலின் இன்றியமையாதத் தொடக்கக் கூறு உழுதல். இச்செயல் முறைப்பட செய்யவில்லையென்றால் விளைச்சல் பெருகாது. இந்த உண்மையை நம் முன்னோர் அறிந்திருந்ததை,

“தொடிப்புழுதி கஃசா உணக்கின்பிடித்து எருவும்
வேண்டாது சாலப் படும்.” (குறள் - 1037)

என்று திருக்குறள் பகர்கின்றது. ஒருபலம் புழுதி கால் பலம் புழுதி ஆகும்படி உழுது காயவிட்டால் அந்நிலத்தில் பயிர் நன்கு செழித்து வளரும்.

“கடையுங் தலையுங் கருதியே தாக்கி
வடிவுடைய மாதே வகுக்கில் - இடையதனுக்
கீந்து பெரும் பயனை யேபொன் னிறுப்பாற்கு
வாய்ந்தநிலம் ஆகும் வகை” (கண.நூ.53)

முதலும் இறுதியுமாகிய அளவுகளைப் பெருக்கி இடையிலுள்ள அளவால் வகுக்க கணக்கில் கேட்டுள்ள நிலத்தின் அளவு கிடைக்கும் என்னும் கணக்கின் வழி $\frac{3}{4}$ நிலம் உழுதவனுக்கு $\frac{1}{5}$ பொன் கூலி என்றும் $\frac{3}{4}$ பொன் கூலி பெறுபவன் $2\frac{13}{16}$ நிலம் உழுவான் என்றும் அக்காலத்தில் உழவுக்கூலி வழங்கப்பட்டுள்ளது.

நெல் பயிரிடுதல்

நிலத்தை நன்கு உழவுசெய்து பண்படுத்திய பிறகு விதைவிதைப்பர். சேற்று நிலத்தில் நாற்றுக்களைப் பரவலாக ஊன்றும் செயலை நடுதல் என்பர். நடவு செய்தல் குறித்த செய்தி பெரும்பாணாற்றுப்படையிலும் “முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்” என்று சுட்டப்படுகிறது.

“நன்னிலத்தில் நட்டமுடி நானூறு மாமதனில்
எண்ணுமுடி யொன்றில்முதல் எண்ணான்காம்.” (கண.நூ.52:1-2)

இவ்வரிகள் ஒரு குடியானவன் ஒரு கழனியில் நானூறு முடி நட்டான். ஒரு முடி முதல் 32 கொண்டது என்று விளக்குகின்றது.

நெல் குத்துதல்

நெல் குத்துதல் மற்றும் அப்பணியைச் செய்பவர்களுக்கு கொடுக்கும் கூலியைப் பற்றியும் கணக்கதிகாரம் பகர்கின்றது. ‘நெற்கொட்டணம் போடும் கணக்கு’ என்ற நூற்பாவில் பதக்கு நெல் அரிசி குத்தினால் 7 படி அரிசி கிடைக்கும் என்றும் 100 நெல் லளத்திற்கு 43 கலம் மற்றும் 9 மரக்கால் அரிசி கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. நெல் குத்தும்பணியைச் செய்பவர்களுக்கு 6 நாழி நெல் குத்தினால் 3 நாழி அரிசி வரும். 8 நாழிக் காவிலே நெல்லு 20 கலம் பெறுவான் என்றும் 5 நாழி நெல் குத்தினால் 2 நாழி அரிசி வரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மேலும் மண்வெட்டுதல், ஏற்றமிறைத்தல், நெல் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு தனித்தனிக் கணக்குகள் இடம்பெற்றுள்ளன. உழவுத்தொழிலில் விவசாயப் பெருங்குடி மக்களே அதிகம் ஈடுபட்டுள்ளனர். நிலம், நெல் அளத்தல் தொடர்பான கணிதமுறைகளை அவர்கள் நன்கறிந்துள்ளனர் என்பது இந்நூலில் உள்ள கணித முறைமைகளின் வழி அறியலாம்.

பயன்படும் அளவைகள்

உழவுத்தொழிலில் நெற்பயிர் மிகவும் முக்கிய இடத்தினைப் பெறுகிறது. இந்நூலில் உழவுத்தொழில் சார்ந்த பணிகளுக்கு அளவைகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் நூலின் அறுவகைக் கணக்குகளில் நிலம், நெல், அரிசி ஆகிய மூவகைக் கணக்குகள் உழவுத்தொழிலை குறிப்பிடுபவை.

அக்காலத்தில் நெல்லினை அளக்க செவிடு, ஆழாக்கு, உழக்கு, படி, பதக்கு, குறுணி, தூணி, மரக்கால், கலம், பறை, கரிசை போன்ற அளவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலத்தினை அளக்க முழக்கோல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் குழி, மா, வேலி போன்றவற்றை நில அளவைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

நெல்லிலக்கத்தில் 1 செவிடு (360 நெல்) முதல் 20 மரக்கால் வரை கொடுக்கப்பட்டுள்ளது.தமிழகத்தில் வேளாண்மையில் அதிகப்படியான அளவையாக 'கரிசை' அளவையை பயன்படுத்தியுள்ளனர். 1 கரிசை என்பது 400 மரக்கால் ஆகும். இதன்மூலம் இன்றைய மெட்ரிக் அளவைகளுக்கு முன்பே தமிழர்கள் மிகச்சிறந்த அளவை முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை நாம் அறியலாம்.

வாணிபம்

உழவினை மையமாகக் கொண்டு தோன்றியதே வாணிபம். விவசாயத்தில் ஈட்டும் பொருட்களை விற்றதன் மூலம் வாணிபம் பல்வேறு பரிணாமங்களாக வளர்ச்சியுற்றது. இதனை கணக்கதிகார வெண்பாக்களின் மூலமும் அறியலாம்.

இந்நூலில் வாணிபக் கணக்குகள் தனியே இடம்பெற்றுள்ளது. எள், நெல், அரிசி, துவரை இவைகள் ஒரு நாழியில் எவ்வளவு எண்ணிக்கையில் அமையும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் நாழியில் அளந்த மண், மணல், உப்பு, தண்ணீர் போன்றவற்றின் எடை காணுதல், வாழை, சந்தனம் முதலிய பலசரக்கு, வைக்கோல், புற்கட்டு, மிளகாய், விளாம்பழம், முத்து (கணக்கு எண் : 52, 54, 78, 80, 81, 82), எண்ணெய் (கணக்கு எண்: 59), மிளகு (கணக்கு எண் :60, 74), வெற்றிலை (கணக்கு எண ் : 49) ஆகியவற்றை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் விற்பனை செய்ததை வாணிபக்கணக்குகளின் வழி அறியமுடிகிறது. முத்துக் கணக்குகள் பங்கீட்டுக் கணக்காகவும் சக்கரக் கணக்காகவும் காணப்படுகிறது.

வாணிகத்தில் முகத்தல் அளவைகளும் நிறுத்தல் அளவைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வளவைகளைக் குறிப்பிடுவதற்கு தனிக் குறியீடுகள் உள்ளன. மேலும் அரிசி, பொன், பணம், நெல், வராகன் போன்றவை விற்பனைப் பொருட்களுக்கு ஈடாகப் பெறப்பட்டுள்ளன.

நூலில் இவை வெண்பாக்களாகவும் வினாயெழுப்பி விடைசொல்லும் கணக்குகளாகவும் உள்ளன. இக்கணக்குகளை பின்னப்பங்கு 1, கூட்டுத்தொகை 7, பங்கிடுதல் 3, வணிகக்கணக்கு 2, பிரித்துக் கொடுத்தல் 2, சக்கரக் கணக்கு 5, தனிக்கணக்கு 19, பங்குக்கணக்கு 2, பொன்மாற்றுக் கணக்கு 11 ஆகியவாறு பகுக்கலாம்.

உலோகம் செய்தல்

தமிழர் உலோகத் தொழிலிலும் மேம்பட்டிருந்தனர். இரும்புசெய் கொல்லரும் பொன்செய் கொல்லரும் தனித்தனியே சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். அக்காலத்தில் இரும்பு, செம்பு, வெண்கலம், பித்தளை போன்ற உலோகங்கள் அதிகப்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பயன்பாட்டில் இருந்தன. இத்தகைய உலோகங்களை உருவாக்கும் முறைமை பற்றி கணக்கதிகாரம் செப்புவிக்கின்றது.

“எட்டெடை செம்பில் இண்டெடை ஈயமிடில்
திட்டமாய் வெண்கலமாம் சேர்ந்துருக்கில் - இட்டமுடன்
ஓரேழு செம்பில் ஒருமூன்று துத்தமிடில்
பாரறியப் பித்தளையாம் பார்.” (கண.நூ.11)

எட்டு பலம் செம்பில் இரண்டு பலம் ஈயம் இட்டு உருக்கினால் வெண்கலம் கிடைக்கும். ஏழு பலம் செம்பில் மூன்று பலம் துத்தம் இட்டு உருக்கினால் பித்தளை கிடைக்கும். இப்பாடலின் வழி பித்தளை, வெண்கலம் ஆகிய உலோகங்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன, அதன் மூலப்பொருட்களாக எவற்றைப் பயன்படுத்தினர் என்று அறிய முடிகிறது.

கூத்தாடுதல்

கூத்தாடுதல் தொழில் அக்காலத்தில் சிறப்புநிலை பெற்றிருந்தது. அவர்கள் சமூகத்திலும் உயர் நிலையைப் பெற்றிருந்தனர். வராகன் அவர்களுக்கு கூலியாக வழங்கப்பட்டது. இந்நூலில் வெவ்வேறு வயதுடைய பெண்களுக்கு மாறுபாடுடைய கூலி வழங்கப்பட்டது தெரிவிக்கப்பட்டுள்ளது. 10 வயதுடைய கூத்தாடும் பெண்ணுக்கு 50 வராகனும் 8 வயதுடைய கூத்தாடும் பெண்ணுக்கு 30 வராகனும் கொடுக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

- கணக்கதிகாரம் என்னும் தமிழ்க் கணித நூலில் அக்காலத்தில் செய்த முதன்மைத் தொழில்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- உழவுத்தொழில் முதன்மையான தொழிலாக இந்நூலின் வழி அறியலாகிறது.
- உழவினை அடியொற்றிய பிற தொழில்கள் அனைத்தும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அதற்குத் தனித்தனியே கணக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- வாணிபம் உழவினை அடியொற்றியே தோன்றி பல்வேறு விதமாக வளர்ந்துள்ளது.
- இந்நூல் குறிப்பிடும் தொழில்கள் யாவும் அவற்றிற்கான கணக்குகளிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளது.
- வெண்கலம், செம்பு ஆகியவை செய்யும் முறையைப் பற்றி கணக்கதிகாரம் குறிப்பிடுகிறது.

பார்வை நூல்கள்

1. காரிநாயனார் - கணக்கதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.1957
2. காரிநாயனார் - கணக்கதிகாரம், ஆசியவியல் நிறுவனம்,சென்னை.2007
3. மா. சரவணப்பாண்டி - கணக்கதிகாரம் காட்டும் தமிழ்க் கணிதமுறை, பல்லவி பதிப்பகம்,2017
4. திருக்குறள் - தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,1988

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இலக்கியம் இயம்பும் நலம் - நன்றி - நட்பு

Wellhood – Gratitude – Friendship Evinced in Literature

திருமதி. சாந்தகுமாரி எத்துராசன், கல்வி ஆலோசகர்,
டாக்டர். எஸ். இராமகிருஷ்ணன் ஞானம்மாள் கல்வி நிறுவனம், திருவள்ளூர்

Abstract

The article plans to decode the valuable ethics of life which would keep life happily. Wellhood, Gratitude and Friendship are considered as the prime virtues to be inculcated within and followed to get a life of eternity. Today, people suffer from many unwanted problems; that are because of the lack in keeping the aforesaid traits. Tamil people once lived with such virtues and now living are very sparse. It is a vital need to understand the power of wellhood- gratitude- friendship in one's lives. Hence, the article finds out through the literary evidences.

Keywords: Wellhood – Gratitude – Friendship, Evinced in Literature

முன்னுரை

“இலக்கியம்” காலத்தின் கண்ணாடி என்பது தொல்காய்பிபயத்தின் கூற்று. இலக்கியம் சமுதாயத்தை அடித்தளமாகக் கொண்டது. அவை தாங்கள் தோன்றிய காலத்தின் முத்திரையை தாங்கி நிற்கின்றது. “வையத்து வாழ்வாழ்வாங் வாழ்தல்” எதுவென சித்தரித்தல் இலக்கியம்.

புதிய இலக்கியகள் படைப்பதைவிட பழைய இலக்கியச் செறிவுகளை சமூகத்தினரிடம் கொண்டு சேர்க்கவும் இத்தகு ஆய்வுச் சிந்தனைகள் வேண்டும். இதன் பொருட்டே கல்வி நிலையங்களில் ஆய்வுக் கருத்தரங்கம் நடைபெறுகிறது. கல்வி நிலையங்கள் இலக்கியம் வளர செழிக்க காக்க உதவும் அறநிலையங்கள்.

நலம்

ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும் போது முதல் சொல்லே நலமா? ஆம்! இந்த வார்த்தை சொல் அல்ல! நலமா என்ற கேள்வியில் அத்தனை சங்கமங்கள் உண்டு. வீட்டு நலம், நாட்டு நலம், எல்லா நலமும் அடங்கியது. உளிக்கு அஞ்சிய கல் சிற்பமாக முடியாது. துளைக்கப்படாவிட்டால் மூங்கில் புல்லாங்குழலாக முடியாது. அனலுக்கு அஞ்சினால் தங்கம் ஆபரணமாகாது. அடிக்கப்படாவிட்டால் இரும்பு ஆயுதமாகாது.

திரிகூடராசப்பகவிராயர்

இருநூறு வருஷங்களுக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவில் மேலகரம் என்ற ஊரில் 50 கூரை வீடுகள் உள்ள பகுதியில் வாழ்ந்த புலவரின் நாட்டு நலம், ஓசை நயம் மிக்க குறவஞ்சி பாடல் ரசிக்கத் தக்கது. குற்றால அழுகும் குற்றால நாதனின் இறையருளும் வரிதோறும் வசப்பட வைக்கும்.

“திரிகூட ராசப்பக் கவிராயர் குற்றாலக் குறவஞ்சி
ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூல் உளைச் சங்கு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி
திருக்குற்றாலர் தென் ஆரிய நாடே!"

பொருள்

மக்கள் அஞ்ச வேண்டாம் வெள்ளம் தான் அஞ்சி ஓடும். மக்கள் ஒடுங்குவதில்லை தவம் செய்வோரின் உள்ளம் ஒடுங்கும் நோய் வறுமையில் வாடுவதில்லை. தூக்கிப் போடப்படுவது விதைகள் மட்டுமே. மக்கள் துன்பத்தில் புலம்புவது இல்லை. குழந்தைகள் காலில் அணியும் கிண்கிணி புலம்பல் ஒலி எழுப்பும். செல்லங்களைத் தேடி அலைவதில்லை. அறம் பெருமை இரண்டை மட்டுமே தேடுவார்கள்ஈ குறத்தியர் மனநலம் எந்த அளவு மேன்மையாக இருந்தால் இந்த நா நயம் பாடலில் வரும்.

கருத்து

ஒவ்வொரு மானுடனின் நலமும் சமூகத்தோடு தொடர்புடையது. மக்கள் நலமே வீட்டு நலம். வீட்டு நலமே நாட்டு நலம்.

"தனிஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை
அழித்திடுவோம்!.
காக்கை குருவி எங்கள் ஜாதி
கடலும் மலையும் எங்கள் கூட்டம் - பாரதி
உறவாக நேசிக்கும் பாங்கு அவனைத் தவிர யாருக்கு வாய்க்கும்!
சித்தம் சலியாத திறன் வேண்டும்
மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில் ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலைத் தேடல் வேண்டும் - புரட்சிக்கவி பாரதிதாசன்

சித்தத்தின் நலம் சிந்தையில் வேண்டியவன் நட்பு

புறநானூறு பாடல்கள் நட்பின் பெருமையை பறை சாற்றுகிறது. சங்க கால சான்றோர் நட்பு சிறப்புடையது. மேன்மை தங்கியது. அத்தகைய நட்பை இன்றைய இளைய சமுதாயம் அவசியம் உணர வேண்டும்.

"நெருக்கமாய் இருக்கும்போது தெரியாது நண்பனின் நற்பண்புகள் அவன் விலகியிருக்கும் போது தான் விளக்ககமாய் புரியும்". கலீல் ஜிப்ரான்.

"The love of man to woman is a thing common but true friendship between man and man is infinite and immortal" – Plato

"நட்பை மூன்று வகையாக இனம் பிரித்துக் காட்டுகிறது. நாலடியார்.
கீழ்மைக்குணங்கள் பாக்குமரம்" - கடை நட்பு.
"நல்லதும் கெட்டதும் கலந்து நிற்பவர் தென்னைமரம். இடை நட்பு
உயர்ந்தோர் நட்பு பனைமரம். தலையாய நட்பு"

நாள்தோறும் பாராமரிப்பு தேவை பாக்கு மரம். தென்னை வளரும் வரை பாதுகாத்தால் போதும் பனைமரம் நட்டுவிட்டால் போதும் நெடிதுயர்ந்து அனைத்தையும் தரும்.

"கடையாயார் நட்பின் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயர்
எண்ணரும் பெண்ணை போன்று இட்ட ஞான்று இட்டதே
தொன்மையுடையார் தொடர்பு - நாலடியார் -216.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கண்ணதாசன் தன் அனுபவத்தில் நான்காம் அனுபவத்தில் நான்காம் வகை நண்பர்களை குறிப்பிடுகின்றனர். நான் கண்ட நண்பர்கள் மூன்று வகையல்ல.

"நாலாம் வகையழயோ ! அவர்
வாங்கிக் கொள்வார் ஒரு
நன்றி சொல்லார் ! அது
வாழும் முறையடியோ ! நன்னெஞ்சே
வாழும் முறையடியோ !"

கண்ணதாசன் - நட்பை வழிபாடுவோம் நாம் - தமிழருவிமணியன். அடுத்தவரிடமிருந்து அனைத்தையும் பெற்றுக் கொண்டு தன்னிடமிருப்பதில் எதையும் தராமல் நன்றியற்ற உணர்வுடன் நண்பர்களைப் போல நடிக்கும் மனிதர்களின் பொய்யான உறவைத்தான் இன்று நம் சமூக வாழ்வில் பரவலாகப் பார்க்க முடிகிறது.

வள்ளுவம் வலியுறுத்தும் நட்பு

மனித உறவுகளில் நட்பு எவ்வளவு உன்னதமானது என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியம் மிகத் தெளிவாக உணர்த்துகிறது - நட்பியல். 17 அதிகாரங்களை வழங்கியுள்ளார். - வள்ளுவர்.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" - குறள் -788
"தெளிவும் தெளிந்தவன் கண் ஐயுருவும்
தீரா இடும்பை தரும" - குறள் - 510.
"அன்பே கடவுள்"
"Love is God"
"அறத்தினுள் அன்பு நீ" - பரிபாடல்
"தேயச் சந்து சிறந்து மணம் பெறும்
பாயநீர் வயல் நன்கு பயன் தரும்
தோய மேலவர் நண்பு சுகம் புகும்
ஆய நூலின் அருஞ்சுவை ஓ்குமால் - இனியவை நாற்பது.

சந்தனக்கட்டை தேய தேய மணம் பெறும், பாயப் பாய வளம் பெருகும் அதே போன்று நற்பண்புடையார் நட்பு தோயத் தோயத் சுகம் வளரும் என்கிறது இனியவை நாற்பது.

கபிலர் - பாரி நட்பு

பாண்டி வள நாட்டில் திருவாதவூரில் தோன்றியவர் கபிலர். கடையெழு வள்ளல்கள் : ஏழினி, காரி, ஓரி, நள்ளி, பேகன், மலையன், பாரி. மக்களிடையே பெரும்புகழ் பெற்ற பாரியின் அரசவைப் புலவர் கபிலர்.

மூவேந்தர் சூழ்ச்சியால் பாரி போரில் மடிந்ததர். பாரி மகளிரை காக்கும் பொருட்டு உயிர் வாழ்ந்தார். பாரியைத் தவிர யாரையும் போற்றாத வாய் பாரி மகளிருக்கக சேரன் செல்வக் கடுங்கோ வாழியதனைப் புகழ்ந்து பாடி குன்றேறி கண்ணில் பட்ட நிலப்பரப்பு முழுதும் காணிக்கையாக பெற்றான்.

அங்கவை – சங்கவை – பாரி மகளிரை மலையமான் திருமுடிக்காரின் மக்களுக்கு மணமுடித்தார். பாரியின் பிரிவாற்றமையால் நடைபிணமாக வாழ்ந்த கபிலர் வடக்கிருந்து உயிர் நீத்தார். தீப்பாய்ந்து உயிர் துறந்தார் என்பாரும் உண்டு.

நாடாண்ட மன்னனுக்கும் தமிழாண்ட ஒரு புலவருக்கும் இடையில்இருந்த நட்பு மேன்மையானது. இதில் பேதமில்லை இருப்பவர், இல்லாதவர் என்ற பேதமில்லை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கருத்து

நட்பின்றி வாழ்தல் நடைப்பிணத்திற்குச் சமம் என்பதால் நட்பை வழிபடுவோம்.

நன்றி.

வலிமை மிக்க வளமை வாட்டம் போக்கும் வாழ்வு செழிக்கும் நம்பிக்கைதரும் சொல் "நன்றி" மாண்பு மிக்க சொல்.

யானை உருவத்தில் பெரியது வலிமையில் திறமையானது எனினும் பாகனை கொல்லும் பண்பு உடையது. ஆனால் "நாய்" எச்'சிலை உண்டு "எசமான்" காலடியில் கடைசிவரை இருக்கும்.. அதனால்தான் கவியரசர் கண்ணதாசன் "நன்றி " கெட்ட மகனை விட நாய்கள் மேலடா" என்றார்.

வள்ளுவத்தில் நன்றி : 11 செய்ந்நன்றி அறிதல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு - 110.

ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு இவ்வுலக வாழ்வே இல்லை.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பது செயல" - 67, 7- மக்கட்பேறு.
"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல" - 70- 7 மக்கட்பேறு

கருத்து

தந்தை மகனுக்கு ஆற்றுவதை "நன்றி" என்றும் மகன் தந்தைக்கு ஆற்றுவதை "உதவி" என்றும் ஏன் வலியுறுத்துகிறார் என நோக்குங்கால்.

"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்" - 63- 7 மக்கட்பேறு.

பழியில்லாத பண்புடை மக்களைப் பெறுதல் அவரவர் வினைப்பயன். நன்மக்களைப் பெற ஒவ்வொரு பெற்றோரும் முயன்றால் இச்சமூகம் நன் மக்களால் நலம் பெறும்.

மகாபாரதத்தில் நன்றி

செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்தவன் கர்ணன். "நட்பு" க்காகவும் "நன்றி"க்காவும் சொந்த சகோதரர்களை எதிர்த்து உயிர் துறந்தவன். "கர்ணன்" நட்பு நானிலம் உளநாள் மட்டும் போற்றுதலுக்கு உரியது.

இராமயாணத்தில் நன்றி

பிறர்க்கென வாழ்தல் தலையாய கடமை, சக மனிதனின் துயர் துடைக்க சற்றும் சளைக்காமல் இருக்க மனம் வேண்டும். "தன் மகன் பரதன் அரசாள கோசலை மகன் காடு போகட்டும்" என சொன்னவள் - கைகேயி சுயநலத்தின் உச்சம்.

"பரதன் நின்னினும் நல்லவன் நிறை குணத்தவன் தந்தை சொல் தலைமேல் கொள் " சொன்னவள் - கோசலை - கணவன் சொல் மீறாதவள்.

"இராமன் பின் செல் தம்பி என்னும் படி அன்று
அடியாரின் ஏவல் செய்தி வேலைக்காரனாகப் போ" இலக்குவனிடம் சொன்னவள்.

சுமத்திரை – மனநலம் காப்பவள்.

"மன்னும் நகர்க்கு அவன் வந்திடில் வா
அப்படி நடக்காவிட்டால் நீ உயிரை முன்னம் முடி"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

என்று மேலும் சொல்கிறாள். உண்மைத் தாய் தாய்மையின் சிகரம் குடும்பத்தை குலையாமல் காக்கும் உத்தமி.

புறநானூற்றின் நன்றி

"வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற முதுரை அர்த்தம் செரிந்தது. பாண்டி நாட்டின் பேரரசர் அறிஞனாய் இருப்பினும் அரசியலறத்தை முறையாக பின்பற்றத் தவறினான். குடிமக்கள் மீது வரிச்சுமையைப் பெருக்கினார். மக்களின் துயர் துடைத்தலும் மன்னனின் தவறைத் திருத்தலும் தமது கடமை, நன்றி என்பதை உயர்ந்த பிசிராந்தையார் அரசவை அடைந்ததார்.

வேந்தே! களிருக்கு கொடுக்கும் நெல்லை விளைநிலத்திலிருந்து கொண்டு வந்து கவளம்கவளமாக கொடுத்தால் விளை நிலம் சிறியதாயினும் யானைக்கு வேண்டிய உயவை அந்த விளைநிலம் மீண்டும் மீண்டும் விளைந்:து கொடுக்கும். தவிர்த்து யானையை விளைநிலத்தில் மேய விட்டால் நெற்கள் கால்களால் மிதிபட்டு வீணாகும்.

"நல்லாட்சி நடத்த விரும்பும் நாயகன் யானை புகுந்த விளைநிலமாக மக்களை மாற்றி விடலாகாது" என்ற தமிழ் தந்த தறுகண் ஆண்மையுடன் அரசனுக்கு அறிவுறுத்தினான். ஆட்சியாளர்களை திருத்துவதில் அஞ்சா நெஞ்சுடன் திருத்த முனைந்தனர் சங்கப்புலவர்கள். ஆனால் "இச்சகம்" பேசித் தங்கள் வாழ்வை வளமாக்க வழிகளை பெருக்க ஆள்பவர் முன் அடிபணிந்து நின்ற பொய்யான புகழுரைகளை அவர்மீது அள்ளி வீசும் இழிந்த பண்புக்கு இரையாகி விட்டார். இக்காலக் கவிஞர்கள் சிலர்.

> "காய் நெல் அறுத்துக் கவளங் கொளினே
> மாநிறைவி இல்லதும் பன்னாட்டு ஆரும்
> நூறு செறு ஆயினும் தமித்துப்புக்கு உணிளே
> வாய்ப்புகு வதனினும் கால் பெரிது கெடுக்கும்
> அறிவுடைவேந்தன் நெறியறிந்து கொளினே
> கோடியாத்து நாடு பெரிது நந்தும்" – புறம் - 184.

ஆட்சியாளர் கற்க வேண்டிய அரிச்சுவடி

முடிவுரை

நலம், நட்பு. நன்றி ஆம்! தமிழோடு உறவு கொண்டு அதன் நலம் காத்து. நட்பு பாராட்டி, நன்றியோடு வாழ்ந்த இலக்கியச் செம்மல்கள் இருந்த பூமி இது. அவர்கள் வாய் திறந்த வார்த்தைகளும் எழுதிய எழுத்துக்களும் நாடு. மொழி, மக்கள் என்ற உணர்வுடன் பொருந்தியிருந்தது. வாய் திறந்து வார்த்தைகளை வாரி இறைப்பதில் எந்தப்பயனும் ஏற்படாது. வெற்றுத் சொற்களை வெல்லும் சொற்களாக மாற்றும் மந்திரம் அறிந்து பண்புநிலம் கெடாமல் பாதுகாத்து வந்த இலக்கியம் பண்படவும், பயன்படவும் இன்றைய தலைமுறைகள் முன்வர வேண்டும்.

"விடுகின்ற மூச்சும் விதைக்கின்ற கருத்துக்களும் நாட்டின் "நலம்" "நட்பு" "நன்றி" காக்க வேண்டும்.

வாழ்க தமிழ்!

பயன்பட்ட நூல்கள்

1. *திருக்குறள்*
2. *இனியவை நாற்பது*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உளவியல் நோக்கில் சிறுவர் நீதி நூல்கள்

Children Moral Books in Psychological Perspectives

இரா.சாந்தி, இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை, மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), தஞ்சாவூர்-613005

Abstract

India is a country having large number of children and youngsters in the world. This young power is the life of the country. A Tamil saying says that if a child is not mended in a ggood manner; it cannot be mended. So the morals ought to be taught to them in a very yound age becomes vital. Then only, the child could have noble aspirations. To create a very fine order among the society, moral books should be introduced to them in the very early ages. So, that one can frame the psyche of the child in a gradual and fulfledged manner. Therefore, the present article decodes the famous children books in psychological perspective.

Keywords: Children Moral Books, Psychological Perspectives

உலகில் குழந்தைகளும் சிறுவர்களும் இளைஞர்களும் நிறைந்த நாடு இந்தியா. இன்றைய சிறுவர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' எனும் பழமொழிக்கேற்ப இளம்வயதில் பண்பட வைத்தலே பிற்கால தனிமனித, சமூக வாழ்க்கைக்குப் பயனாக அமையும். இளம்வயதில் கற்பிக்கப்படும் நற்கருத்துக்களே அவர்களை நன்னெறிப்படுத்தும். நன்னெறியில் வாழவேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை நோக்கி இட்டுச் செல்லும். நல்லறிவும் நல்லொழுக்கமும் குறைந்து வருகின்ற இக்காலச் சூழலில் சிறுவர்களுக்கு முதல் நீதி போதனைகளைச் செய்து நீதிநூல் பயிலச் செய்வதன் மூலமே வன்மமற்ற சமூகச் சூழலை உருவாக்கும். நல்லறிவு 'நல்லொழுக்கம்' சான்றாண்மை உடைய பெரியோர் தம்மைப் போலவே பின்வருகின்ற இளையோரும் மதிப்புடை வாழ்க்கையை வாழவேண்டும் எனும் விழுமியங்களை இலக்கியங்களாகப் பாடிவைத்தனர்.

மனிதர்கள் சிறப்புடனும் செம்மையுடனும் வாழ்வதற்கு அடிப்படையாக விழுமியங்கள் அமைகின்றன. மனித வாழ்வின் மதிப்புகள் (ர்ரஅயெ எயடரநள) விழுமியங்களாகின. மனித செயல்களில் ஒழுங்கமைவை ஏற்படுத்த கடந்த கால வாழ்வு நெறிகள் பேருதவியாய் அமைகின்றன. இந்த நெறிமுறைகளுக்குட்பட்டு மனித மதிப்புகளுடன் வாழ்பவன் மனிதனாக மதிக்கப்படுகிறான். மனித வாழ்வை முழுமைப் படுத்துவதும் இம்மதிப்புகள் சார்ந்த விழுமியங்கள்தாம்.

இத்தகைய மதிப்புகளைத் தமிழ் இலக்கியங்கள் அறம் எனப் போற்றி வளர்த்தன. மனத்தை வளப்படுத்தும் அறத்தைத் தமிழ் இலக்கியங்கள் பொன்போல் காத்தன. அவ்வறமே பிற்காலத்து நீதிநூல்களாக மலர்ந்து வளர்ந்தன. முற்கால நீதிநூல்கள், பிற்கால நீதி நூல்கள் எனப் பல்கிப் பெருகின. அறத்தேவையே பெருக்கத்திற்குக் காரணம். பிற்கால நீதிநூல்களின் தொடக்கத்தை ஏற்படுத்திய ஔவையாரின் ஆத்திசூடி சிறுவர் நீதி நூலுக்குத் தொடக்கமாக அமைகிறது. அவ்வாறு, பிற்கால நீதிநூல்களில் சிறுவர்க்கு உகந்தவையாகக் கருதப்பட்ட, அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுவர்களுக்குப் பாடநூல்களில்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கற்பிக்கப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி போன்ற சிறுவர் நீதிநூல்களை சிறுவர் உளவியல் கருத்துக்கள் சிலவற்றோடு இக்கட்டுரை ஆராய முயல்கிறது.

நீதி நூல்கள் காலத்தின் தேவையாக மலர்பவை, பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு நிலவிய குழப்பமான அரசியல் சூழல், அயல் மதத்தார் வருகை, மேலை நாட்டார் வருகை ஆகியவற்றால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் மக்கள் வாழ்வில் தொய்வை ஏற்படுத்தின. இத்தகைய சூழல்களில் எழுந்த நீதி நூல்கள் தொய்வைப் போக்கி நேரிய நெறியில் சமுதாயத்தை நெறிப்படுத்தின. குறிப்பாக, இக்கட்டுரை சிறுவர்களுக்கான நீதிநூல்கள் இளம் வயதிலேயே அவர்களை நெறிப்படுத்தி உயர்ந்த சமுதாயம் மலரத் துணை செய்தன என்பதனைக் கருதுகோளாகக் கருதுகிறது.

சிறுவர் இலக்கியம் தமிழ் இலக்கிய வகைகளில் தனிப்பட்ட வகையாகும். பெரியவர்களுக்கான இலக்கியங்களோடு ஒப்பிடும்போது சிறுவர்க்கான இலக்கியங்கள் குறைவாகும். பண்டைய இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் செம்மையான அறவாழ்வினைக் காட்சிப்படுத்துவது போல பிற்கால நீதிநூல்களும் முற்கால நீதிநூல்களைத் தழுவிப் புதிய வடிவத்தில், கருத்தில் அறம் போதித்தன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சிறுவர்-சிறுவர் இலக்கியம்

சிறுவர் என்போர் குழந்தைப் பருவம் முதல் பதினேழு வயது வரையுள்ள பருவம் கொண்டோரை சிறுவர் என்கிறது இந்தியச் சட்டம்.

சிறுவர் இலக்கியங்கள் என்றால் சிறுவர்கள் பாடியவையல்ல. சிறுவர் இன்பமுற சிறுவர் மனநிலையில் அவர் விருப்பிற்கேற்பப் பெரியோர் இயற்றுவது ஆகும். குழந்தைப் பாடல்களில் இடம்பெறும் குழந்தைக்கு விருப்பமான பொருள்களைக் கொண்டு பாடுபொருள் அமைதல் ஒருவிதம். அதேவேளையில் வளரும் பருவநிலையில் அவர்கள் நற்பண்புகளுடன் பயிலப் பெரியோர் இயற்றிய நூல்கள் சிறுவர் இலக்கியம் ஆகலாம். பெரியோர்க்குரிய பாடு பொருளாக இருப்பினும் பழகப் பயிற்சி கொடுத்து நல்ல மனிதர்களாக்குவது சிறுவர் இலக்கியத்தின் குறிக்கோளாக அமைகிறது.

சிறுவர் இலக்கியத் தோற்றம்

தாய் இலக்கியங்களான சங்க இலக்கியம் பின்வந்த பல நூல்களுக்கும் தாயாக விளங்குகின்றது. ஔவையின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நூல்கள் பிற்கால நீதி நூல்களுக்குத் தோற்றுவாயாகும். ஔவையின் நீதி நூல்கள் தனிமனித ஆளுமைப் பண்பை வளர்ப்பன. ஔவையின் முதல் முயற்சி பிற்காலத்தில் தொடர்ந்து ஆத்திசூடிகள் உருவாகவும் வரலாற்றின் மிக முக்கிய நூலாகவும் அமைந்தன.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது முதுமொழி. குழந்தைகள் பருவத்திற்கேற்றவாறு வீடு, பள்ளி, சமூகம் மூன்றிலும் தொடர்ந்து கற்று வருகின்றனர். சிறிய வயதில் தோன்றும் அல்லது கற்றுக் கொள்ளும் பழக்கம், குணம் காலம் முழுவதும் தொடர்ந்து வரும். இக்காலச் சூழலில் அனைத்தும் மாறிவிட்டன. இந்நிலையில் சாதி, மத, இன பேதமின்றி வாழக் கற்றுத்தரவும் சிறந்த பண்பு நலன்களை வளர்த்துவிடவும் அவர்களுக்குள் ஒளிந்து கிடக்கும் உண்மையான திறன்களைக் கண்டறிந்து கொண்டு வரவும் சிறுவர் இலக்கியங்கள் துணைசெய்ய இயலும். சிறுவர்கள் பெரும்பாலான நேரம் பள்ளிக்கூடக் கல்வி, கணினி விளையாட்டு, செல்லிடைபேசி விளையாட்டு என வாழ்கின்றனர். உளமும் உடலும் விரிவடைந்து விசாலமாக்க அவர்களைச் சாதனங்களிலிருந்து திசை திருப்ப சிறுவர் நூல்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவது பெரியோர் கடமையாகும்.

தாய் குழந்தையைத் தாலாட்டத் தொடங்கிப் பாடிய அந்த வாய்மொழிப் பாடல்களிலிருந்து குழந்தைகளுக்கான இலக்கியம் தோன்றின. ஏட்டில் எழுதா வாய்மொழிப் பாடல், கதைகள் இயற்றியவரே குழந்தை இலக்கியத் தோற்றுவாயாவார். காட்டாக தமிழ்நாட்டில் ஒரு தலைமுறைக்கு முன்பு சிறுவர்களுக்குப் பாட்டும் கதையும் ஊட்டி வளர்க்கும் முறை வீடுதோறும் இருந்து வந்தது. நீதிபோதனைகளைப் பள்ளிகள் கற்றுத்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தந்ததைக் காட்டிலும் பாட்டி, தாத்தாக்கள் நிரம்பக் கற்றுக் கொடுத்தனர். கற்றலின் கேட்டல் நன்று என்றனர். இன்றைய காலச்சூழலில் தாத்தா பாட்டி அருகில் இல்லாத, பெற்றோர் இருவரும் பணிக்குச் செல்லும் நிலையில் குழந்தைகளுக்கு மேற்கண்ட வாய்ப்புகள் குறைந்து போயின. குழந்தைகள் குற்றங்களில் சிக்கிக் கொள்ளும் பெருக்கத்திற்கு குணநலன் காக்கப்படாததே காரணமாகிறது.

குழந்தை உளவியல்

குழந்தை பிறந்த நாளிலிருந்து குமரப் பருவம் அடையும் நாள் வரையில் குழந்தையிடம் நடைபெறுகின்ற ஒவ்வொரு வகையான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் பல்வேறு முறைகளின் மூலம் ஒழுங்குமுறையாக அறிவதுதான் குழந்தை உளவியலின் நோக்கம் (உளவியல் நெறிகள், ப. 3) என மு.இராசமாணிக்கம் குறிப்பிட்டுள்ளார். வளர்ச்சி ஒரு குழந்தைக்கு ஓர் இடத்தில் மட்டும் நடைபெறுவதில்லை. குழந்தையின் வளர்ச்சி பல்வேறு இடங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு மனிதர்களால் ஏற்படுகிறது. சிறுவர்களின் வளர்ச்சியில் வீடும் பள்ளிக்கூடமும் பெரும்பங்கு வகிக்கின்றன. அதிகம் உரையாடப்படும் இடங்கள் இவை இரண்டு மட்டுமே. இவற்றின் நெறிப்படுத்துதலில் பிறழ்வு ஏற்படுகிறபோது சிறுவர்களின் உள்ளுணர்வும் பிறழ்கிறது. நடத்தைகளும் பிறழ்கின்றன. எனவே, சிறுவர் உளவியல் பல்வேறு நடத்தைகளில் கவனமாகக் கையாள்கிறது.

பெற்றோரும் ஆசிரியர்களும் சிறுவர்களின் நல்ல நடத்தைகளை வளர்த்துப் பாராட்டு வழங்கும்போது, மீள மீள வலியுறுத்தும்போது சிறார்களிடத்துச் சமூக நடத்தைகள் நெறிப்படுத்தப்படுகின்றன. சிறுவர்களின் ஆரம்ப காலச் சமூகமயமாக்கல் நிகழ்கிறது. சமூகத்தோடு இசைந்து பழகும்போது கிடைக்கும் ஏற்புடைமை சமூகமயமாக்கலின் உள்ளமைந்த வெகுமதியாகின்றது. சமூகமயமாக்கல் அறிகை அடிப்படையிலும் குறியீட்டு அடிப்படையிலும் உள்ளத்திலே பதிவுகளை ஏற்படுத்துகின்றது. தவறான நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்வதற்குக் கற்றுக்கொள்ளுதல் சமூகமயமாக்கலின் மிக முக்கியத் தேவையாகிறது.

அறம் (நீதி)

உலகில் அனைத்தும் நலமுற அமைய வேண்டுமெனில் சிறுவர்கள் நலமுடன் இருக்க வேண்டும். ஏனெனில், இன்றைய குழந்தைகள் நாளைய மன்னர் ஆவார். தமிழ் இலக்கியங்கள் மனித மனத்திற்கு நல் மருந்தாவனவற்றை அதிகம் பாடின. உலகில் நின்று விளங்கும் எந்த நூலும் அறத்தை விட்டுவிட்டுப் பாடவில்லை. அதன் சிறப்பை யாண்டும் புறக்கணிக்கவில்லை. வாய்ப்புக் கிடைக்கும் இடமெல்லாம் மன்னும் அறத்தை ஒல்லும் வகையால் சிறக்கச் செய்தன. எல்லோர்க்கும் நன்மை பயப்பது எதுவோ அதுவே விதியாகவும் சட்டமாகவும் மாறுகிறது. பொய் மட்டுமே பேசும் பொய்யன் தன்னிடத்தில் யாரும் பொய் சொல்லக்கூடாது என எதிர்பார்க்கிறான். ஒழுக்கக் கேடுகளில் நிறைந்த ஒருவன் தன் மனைவி, மக்கள் ஒழுக்கமாக வாழவேண்டும் என எதிர்பார்க்கிறான். திருடன் ஒருவன் தன் பொருளை யாரும் திருடிவிடக்கூடாது என எண்ணுகின்றான். ஆகவே, அறம் எனும் கோட்பாடு நல்லவர்களால் மட்டுமல்ல தீயோராலும் கடைப்பிடிக்கும் பொதுச்சட்டடமாக விளங்குகிறது. அறம் பற்றிக் கூறும் மு.வ., “அறத்தை எதுவும் வெல்லமுடியாது. அறம் என்பது ஆற்றல்மிக்கது. அதை எதிர்த்து வாழமுடியாது இருக்கிற அளவைவிட அறம் வளர்ந்துவிடப் போவதுமில்லை குறைந்துவிடப் போவதுமில்லை. உலகம் தோன்றிய காலம் முதல் இப்படி ஒரே அளவாக அறமும் பாவமும் கலந்துதான் இருந்து வருகின்றன. நாம் கவலைப் படுவதெல்லாம் வீண் மனிதன் மனத்தில் உணர்வு உள்ள வரையில் அறத்தை அழிக்க முடியாது. உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும்” என்கிறார் (மு.வ.வின் மணிமொழிகள், ப.2).

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிறுவர்க்கு அறவியலின் தேவை

இன்றைய சிறுவர்களின் மனத்தில் எப்பொழுதும் பரபரப்பையும் அமைதியின்மையும் காணமுடிகின்றன. காரணம் எண்ணற்ற சவால்களால் அவர்களின் திறமை மதிப்பிடப்படுகிறது. முன்பு கல்வியை விளையாட்டாகக் கற்றுத் தேர்ச்சிபெற்று நல்ல பணியில் அமரமுடிந்தது. ஆனால், இன்று விளையாட்டையே மறந்து ரோபோக்களைப் போன்று கல்வி கற்பதோடு பன்முகத் திறமைகளை வளர்த்துக் கொள்ளப் பெற்றோர்களால் உந்தப்பட்டுப் பந்தயக் குதிரைகளைப் போல் ஓடிக் கொண்டிருக்கின்றனர். மேலும், மன அமைதியின்றி மன அழுத்தம் கொண்டவர்களாகச் சிறுவர்கள் ஆக்கப்பட்டிருக்கின்றனர். ஒற்றைக் குடும்பம் ஒற்றைப் பிள்ளை எனும் நிலையில் போட்டி மனப்பான்மை மேலோங்கி மதிப்பெண் எடுத்தால்தான் சாதனை எனும் பதற்றத்தோடு கல்விக் கூடங்களில் அலையும் நிலைக்குச் சிறுவர்கள் தள்ளப்பட்டுவிட்டனர்.

பெற்றோர் ஆசிரியர் இருவரும் சிறுவர்களை நெறிப்படுத்துவதைக் காட்டிலும் தொடர்புச் சாதனங்கள் நிரம்ப நெறிப்படுத்துகின்றன. ஊடகங்கள் மூளையை மழுங்கடிக்கச் செய்யும் நிகழ்ச்சிகளையே காட்டுகின்றன. குறைந்து வருகின்ற மனிதநேய. ஒழுக்க. பண்பாட்டுக் கலாச்சாரத்தை எடுத்தியம்ப அறத்தின் மேன்மையைத் தூக்கிப் பிடிக்கும் எத்தகைய நிகழ்வையும் ஊடகங்கள் காட்டவில்லை. இவ்வாறு இருக்கும் இன்றைய சூழலில் அற இலக்கியங்களைவிடச் சிறந்தது ஒன்றும் இல்லை. சிறுவர்கள் அவற்றைக் கற்றுக் கடைப்பிடிப்பது ஒன்றே அவர்கள் சிறந்த முறையில் வளர்வதற்கு ஒரே வழியாகும். சமீப காலமாகத் திருக்குறளைச் சிறுவர்களுக்குக் கட்டாய மனப்பாடமாக்க எழுப்பும் குரல்கள்கூடச் சமூக அறப்பிறழ்வின் காரணத்தால் விளைந்ததாகும்.

எனவே, வளரும் தலைமுறை அறிவுவளம் பெறுகிறார்களோ இல்லையோ நல்ல மனவளம் பெறவேண்டும். நற்சிந்தனைகள் நல்ல மனவளத்தை அளிக்கவல்லது. நற்சிந்தனைகளை நல்ல நூல்கள் வழங்குவன. நல்ல நூல்கள் எனப்படுவன பெரியோரின் நற்கருத்துக்களால் ஆனவை. நற்கருத்துக்கள் என்பன அறச்சிந்தனைகள் நிறைந்தன. எனவே, பெரியோரின் அறச்சிந்தனைகளை நற்கருத்துக்களைச் சிறுவர்கள் ஏற்று வாழ்வதன் மூலம் நல்வாழ்க்கை வாழலாம்.

நற்சிந்தனைகளும் நற்செயல்களும் தீய எண்ணம் வளராமல் பார்த்துக் கொள்கின்றன. ஆண், பெண், பெரியோர், சிறியோர் என அனைவரும் நற்பயனை அடையக்கூடிய நல்லறங்களைக் காலந்தோறும் தோன்றிய அனைத்து இலக்கியங்களும் போதித்தன. நீதிநூல்கள் அறத்தை எடுத்துரைத்ததன் மூலம் தனித்த இடத்தைப் பெற்றுள்ளன.

ஒரு காலத்தில் வழங்கப்பட்ட நீதி வேறோர் காலத்தில் தவறானதாகக் கருதப்படலாம். ஆகையால் அக்காலத்து எழுதப்பெற்ற நீதிநூல்கள் அவ்வக் காலத்து வாழ்வியல், சமூகப் பண்பாட்டுத் தளங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் நீதி போதனைகளைச் செய்துள்ளன. அவ்வக்கால நீதிகளைச் சொன்னாலும், எல்லாக் காலத்தும் கடைப்பிடிக்கும் தனிமனித சமூக நீதிகளைச் சொல்லத் தவறவும் இல்லை. காலத்திற்கேற்பக் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படை அறங்களைப் பின்பற்றி இம்மை, மறுமை இரண்டிலும் நற்பயனை அடையக்கூடிய வழிகளைத் திறக்கும் திறவுகோல்களாய் நீதி இலக்கியங்கள் திகழ்கின்றன.

சிறுவர்களின் மொழிக்கல்விச் சிந்தனைகள்

மனிதன் பயன்படுத்தும் கருத்துப் பரிமாற்றக் கருவியே மொழியாகும். கருத்துக்கள், உணர்வுகள், தகவல்கள் முதலியனவற்றைப் பிறர் அறிந்து, புரிந்து கொள்ளச் செய்ய உரையாடல் அவசியம். உரையாடலுக்கு மொழி அவசியமாகிறது. சைகைகள், அடையாளங்கள், நிறங்கள், பேச்சு, எழுத்து போன்ற பலவகையான ஊடகங்கள் தொடர்புக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை அனைத்தும் மொழியாகும். ஆனால், பேச்சு, எழுத்து இரண்டை மட்டுமே மொழி என்ற ஒரு சொல்லில் அடக்குவதைக் காணமுடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எண்ணங்களையும் கருத்துக்களையும் பேச்சிலும் எழுத்திலும் வெளியிடுகின்ற ஆற்றலை வளர்த்தல் மொழிக் கல்வியின் நோக்கமாகும். மொழிக்கல்வி மூலம் சிறுவர்களின் மனமகிழ்ச்சிக்கு உதவமுடியும் இலக்கியச் சுவை வளர்க்க முடியும். தமிழில் எண்ணற்ற உயர்தரமான ஒலிநயம், சொல்நயம், இசைநயம் மிக்க கவிதைகள் நிரம்ப உள்ளன. சொற்சுருக்கப் பொருட்பெருக்கப் பாடல்கள் தமிழில் நிறைய உண்டு. ஔவையார், உலகநீதி, அதிவீரராம பாண்டியன், பாரதி, பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், அழ.வள்ளியப்பா என எண்ணற்றோர் பாடிய எளிமையான பாடல்கள் ஆரம்ப வயது பிள்ளைகளுக்குப் பெரிதும் பொருத்தமானவை. சிறுவர்க்கு இலக்கியக் கல்வி இன்பமூட்டுவதோடு உள்ளம் சோர்ந்து வாடுகின்றபோது சுவை மிகுந்த கவிதையினைப் படிப்பதனால் உள்ளத் தளர்ச்சி நீங்குகின்றது.

ஒரு நாட்டை ஆளும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் முதலில் நீங்கள் என்ன செய்வீர்கள் எனக் கேட்கப்பட்டபோது, 'மொழியறிவை மேம்படுத்த ஆவன செய்வேன்' என்றாராம் சீனத் தத்துவஞானி கன்பூஷியஸ். செய்தித் துணுக்கில் எப்போதோ படித்த வாசகம் குழந்தை மொழி கற்றலின் தேவையை இன்றும் உணர வழிசெய்கிறது. மொழியறிவு என்பது மொழி மட்டுமல்ல. சிந்தனை, கருத்து, செயல், பண்பாடு ஆகியன கலந்த கூறாகும். மொழியறிவுப் போதாமை சிந்தனையாற்றலைச் சீரழிக்கும் அச்சீரழிவு கருத்து, செயல் ஆகியவற்றிலும் ஏற்படும். இதனால் அநீதி தலைதூக்கும். மக்களின் நிலைமை மோசமடையும். கன்பூஷியசின் தொலைநோக்குத் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாமல் இப்போதைய தலைமுறை தாய்மொழிக் கல்வியைப் பயிலாமலேயே வளர்கின்றது.

சிறுவர் நீதி நூல்கள்

சிறுவர் நூல்கள் தமிழில் தொல்காப்பியந் தொட்டு காணப்படினும் சிறுவர் நீதி நூல்களாகப் பிற்காலத்தில் வெளிவந்த சில நூல்களை உறுதியாகச் சொல்லலாம். பூவண்ணன், வ.சுப.மாணிக்கம், ம.பொ.சிவஞானம் போன்ற அறிஞர்களின் கூற்றுக்கள்படி ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை, உலகநீதி போன்றவற்றைக் கூறலாம். "இவை குழந்தைகள் படித்துச் சுவைப்பதற்கான இலக்கியங்களாக மட்டுமின்றிப் படிக்கும் குழந்தைகளை நாட்டின் வருங்காலத் தலைவர்களாக, சான்றோர்களாகச் செய்யும் நீதிபோதனை நூல்களாகவும் அமைந்துள்ளன" (ஔவை-யார்?, ம.பொ.சிவஞானம், ப. குழந்தைக் கவிஞர்கள், பூவண்ணன்).

சிறுவர்களுக்குச் சொல்லப்படாத கருத்துக்கள் பல இருப்பதை எடுத்துக்காட்டி இந்நூல்களை குழந்தைகளுக்கானவை அல்ல என்றோரும் உண்டு. அக்காலச் சூழலுக்கு ஏற்ப அவை சிறுவர் இலக்கியங்களாகக் கொள்ளத்தகும் என்பதும் காலங்காலமாகப் பள்ளிப்பருவச் சிறுவர்களுக்குத் தாய்மொழிக் கல்வியில் கற்றுக் கொடுக்கப்பட்டு வந்த வரலாற்றின் அடிப்படையிலும் இவை சிறுவர்களுக்கானவை எனக் கொள்ளத்தகும். அக்காலத்தில் திண்ணைப்பள்ளியில் மீண்டும் மீண்டும் மனனம் செய்வதன் மூலம் சொல்லுவதன் மூலம் நினைவாற்றலைப் பெற்று இளவயதில் மனவலிமை மிக்கவராக ஆகமுடிந்தது. மனப்பாட முறை என்பது வெறுமனே போலச்செய்தலோ தகவல்களைத் தேக்கி வைத்தலோ இல்லை. நல்ல நினைவாற்றல் திறன் உள்ள மனிதன் நல்ல புத்திக்கூர்மை உள்ளவனாக விளங்க முடியும் என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

நெட்டுரு செய்வதன் மூலம் நினைவாற்றலைப் பெருக்குவது மட்டுமின்றிப் பாடநூல்கள் மனனம் செய்வதற்கும் உறுதுணையானது. மனத்தைப் பண்படுத்துவது மட்டும் அல்லாமல் எழுத்துக்களின் அமைப்பு, எண்ணிக்கை, வடிவம் ஆகியவற்றை மனதில் தேக்கி வைக்கும் முறையாகவும் அமைந்தது. அச்சுக்கலை இல்லாத சூழலில் மனன முறை சிறந்ததாக இருந்தது. எழுத்துக்களைக் கற்ற சிறுவர்கள் அகர வரிசைப்படி வாக்கியங்களைப் பழகினர். மேலும் பல்வேறு ஒலிகளைக் கற்றல், நாவினைப் பழக்குதல் எனப் புலன்களை நெறிப்படுத்தும் பழக்கத்திற்கு வந்தனர். மேற்கண்ட முறைகளைப் பின்பற்றிச் சிறுவர்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நீதிநூல்கள் பாடப் புத்தகங்களில் இடம்பெறலாயின. பொருள் புரியாது இருப்பினும் ஒன்றைத் தொடர் பயிற்சியின் மூலம் குழந்தை அறியும் ஆற்றல் பெறும் எனும் உளவியல்படி தொடர்ந்து பயிற்றுவிக்கப்படுகிறது.

ஔவையின் *ஆத்திசூடி*

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஔவையார் *ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி* ஆகிய நான்கு நீதி நூல்களைப் படைத்துள்ளார். ஆத்திசூடி அமர்ந்த தேவனை எனக் கடவுள் வாழ்த்தோடு ஆத்திசூடி தொடங்குகிறது. இந்நூல் காரணப் பெயரோடு அமைந்தாலும் ஔவையாரைப் பின்பற்றிப் பலர் ஆத்திசூடிகள் பாட இந்நூல் காரணமாகியது.

ஆத்திசூடி அகரநிரலில் அமைந்து, ஒவ்வோர் அறக்கருத்தும் ஓரடியால் அமைந்துள்ளது. இந்நூலில் 109 அடிகள் அமைந்திருந்தாலும் ஒவ்வோர் அடியும் ஒவ்வொரு தனிப்பாட்டாகும். எளிமையானவற்றிலிருந்து கடினமானவற்றைப் பழக்குதல் என்பது உளவியல் ஆகும். ஒவ்வொரு பாட்டிலும் இரண்டு அல்லது மூன்று சொற்களாக அமைந்திருப்பினும் அவை இரண்டு சீர்களுக்குள் அமைந்து உடன்பாட்டுத் தொடராகவும், எதிர்மறைத் தொடராகவும் அமைந்துள்ளன. அறம் செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், ஈவது விலக்கேல், உடையது விளம்பேல், ஊக்கமது கைவிடேல், எண்ணெழுத்து இகழேல், ஏற்பது இகழ்ச்சி, ஐயமிட்டு உண், ஒப்புரவு ஒழுகு, ஓதுவது ஒழியேல், ஔவியம் பேசேல் என 12 உயிர்களும் 12 அறப்பண்புகளாக மொழிக்கு முதலில் நின்று சிறுவர் உள்ளத்தில் பதியுமாறு செய்கின்றன.

தமிழ் நெடுங்கணக்கு வரிசையில் உள்ள எழுத்துக்களைப் பயில்வதன் மூலம் எழுத்துக்கள் மனனம் ஆவதோடு சொற்கள் பயிற்சிக்கும், அருஞ்சொற் பொருள் உணர்வதற்கும் ஏதுவாக ஆத்திசூடிகள் அமைகின்றன. மேலும், மொழிக்கு முதலாக வரும் மெய்யெழுத்துக்களையும் கூறுகின்றார். தமிழ் நெடுங்கணக்கில் க, ங, ச, ஞ இவற்றை அடுத்து ட, ண வருகின்றன. ட, ண மொழிக்கு முதலில் வாரா. ஆகையால், ஔவையார் ட, ண வை இரண்டாம் எழுத்தாக்கித் தொடர் அமைக்கிறார்.

இடம்பட வீடு எடேல், இணக்கம் அறிந்து இணங்கு எனப் பாடும் பாடலில் நெடுங்கணக்கில் மொழிக்கு முதலில் வராத தமிழ் எழுத்துக்களுக்கு இரண்டாம் எழுத்தாக்கிப் பாடல் பாடியிருப்பது சிறுவர்களின் மன வளர்ச்சிக்கு மொழி அறிவு எத்துணை அவசியம் என்பதை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளன. எழுதக் கற்பித்தலில் மிக முக்கிய அம்சம் தெளிவாகப் பொருளுணரச் செய்து பொருளுள்ள வாக்கியங்களைப் பழக்குதல் ஆகும்.

அரும்பும்போது மொழியறிவு மட்டும் போதாது. அவர்கள் மனம் நல்லெண்ணங்கள் கொண்டவர்களாக வளரும் நோக்கில் ஆத்திசூடிகள் அமைவதைக் காணலாம். அவ்வாறு பாடினாலும் உயிர், மெய், உயிர்மெய், மொழிமுதல் எழுத்துக்கள், மொழிக்கு முதலில் வராதவை என மொழிக்கட்டமைப்பைப் படைத்திருப்பது சிறப்பிற்குரியது. பண்பாடு இல்லா மொழியறிவு யாது பயன் தரும்.

கொன்றைவேந்தன்

ஔவையாரின் மற்றுமொரு நீதிநூல் கொன்றைவேந்தன். தொடக்கப் பள்ளிச் சிறுவர்கள் மனனம் செய்த மற்றுமொரு நூல். நாப்பயிற்சி, மனனம் செய்யும் எளிமை, பயனுள்ள நீதிக்கருத்துக்களை இளமையிலேயே மனத்தில் பதியவைத்துக் கடைப்பிடிக்கும் வண்ணம் ஔவையின் பாடல்கள் அமைகின்றன. இரண்டு சீர்களில் அமைந்த ஆத்திசூடிக்குப் பின், நான்கு சீர்களைக் கொண்ட கொன்றைவேந்தன் உயிர்-12, ஆய்தம்-1, ககர வர்க்கம்-12, ச, த, ந, ப, ம, வ என்பன ஔ தவிர ஏனைய எழுத்துக்களோடு வரும் என நெடுங்கணக்கு வரிசையை அமைத்துக் காட்டுகின்றார்.

சிறுவர்கள் இருசீர் கொண்ட ஆத்திசூடியை மிக எளிதாகப் படித்து, அறிவும், உடலும் வளரவளர மூன்று சீர்கள், நான்கு சீர்கள் கொண்ட கொன்றைவேந்தன் படிக்கவும், பொருள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

புரிந்து கொள்ளவும் மனனம் செய்யவும் எளிதாக அமைகிறது. சிறுவர் உளவியல்படி ஔவையார் மேற்குறித்த சீர் அளவில் இருசீரடி, முச்சீரடி, நாற்சீரடி எனப் படியாகக் கொன்றைவேந்தனில் கூட்டிப் பாடுவதைக் காணமுடிகிறது. இப்பாடல் அமைப்பு முறை சிறுவர்களின் அறிகைக் கோட்பாட்டுடன் பொருந்திக் காணப்பெறுகின்றது.

அறஞ்செய விரும்பு, ஆறுவது சினம் என இரண்டிரண்டு சீர்களால் நற்குணங்களைப் பாடிய ஔவையார்,

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் (1)
ஆலயம் தொழுவது சாலவும் நன்று (2)
இல்லறம் அல்லது நல்லறம் அன்று (3)

உளவியல் அறிஞர் ஜுன் பியாசே குறிப்பிடுவதுபோல், "அறிகைக் கோட்பாடானது உளச் செயல்பாட்டிற்கும் சிந்தனைச் செயல்பாட்டிற்கும் முதன்மை நிலைகளைக் கொடுக்கின்றது. குழந்தைகளின் நுண்மதிச் செயற்பாடானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரண்டு செயல்முறைகளிலே தங்கியுள்ளது (மேற்கோள் : சபா.ஜெயராஜா, குழந்தை உளவியலும் கல்வியும், ப.4) என்று கூறுகூது உற்றுநோக்கத்தக்கது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதில் தாயும் தந்தையும் இறைவனுக்குச் சமமானவர்கள். அவர்கள் இருக்கும் இடம் ஆலயம் அவற்றைத் தொழவேண்டும் எனும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. வைதீக உருவ வழிபாட்டின் நிலை நிராகரித்துப் பெற்றோரை (மனிதரை) மதி, வழிபடு எனும் சமண பௌத்தக் கோட்பாட்டை நிலைநிறுத்தும் நோக்கில் கூறப்படுகிறது. இல்லறத்தைப் பேணாது எத்துணை அறம் செய்தும் பயன் இல்லை என்று வைதீகத்தைச் சாடுவது அறியமுடிகிறது. மேலும், சிறுவயதில் மனிதனை மதிக்காத சிறுவர்கள் பக்தி வசப்படுதல் தவறு என்று சிந்திக்க வைப்பதாக அமைவதைக் கொன்றைவேந்தன் காட்டுகிறது.

வெற்றிவேற்கை அல்லது நறுந்தொகை

பாண்டியன் அதிவீரராமன் எழுதியது *வெற்றிவேற்கை.* இவர் பாடிய நூல் எழுத்துப் பயிற்சியில் அமையாமல் பொருள் அளவில் அமைந்துள்ளது. அறம், பொருள், இன்பம் மூன்றும் உணர்த்தப்படுகிறது. இம்மூன்றையும் ஒருவன் தம் கடமையாகச் செய்தால் வீடுபேறு என்னும் நிலைக்கு உயரலாம் எனும் நோக்கில் கருத்துக்கள் கூறப்படுகின்றன. மனித வாழ்வியல் அறங்களாகிய கல்வி, சுற்றந்தழுவுதல், செங்கோலாட்சி, பொருளீட்டுதல், உழவுத்தொழில்புரிதல் என ஒருபொருள் குறித்த அறக்கருத்துக்களை ஓரிடத்தில் தொகுத்துக் காட்டுகின்றார்.

எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும் (1) கல்விக்கு அழகு கசடற மொழிதல் (2) செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் (3) மன்னவர்க்கு அழகு செங்கோன் முறைமை (5) உழவர்க்கு அழகு இங்கு உழுதூண் விரும்பல் (7) மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைத்தல் (8).

இவ்வாறு பள்ளிப் பாடங்களில் அறக்கருத்துக்களைக் கற்கும் சிறுவர்கள் மனம், உடல் வளர்ச்சி பெற்றுப் பேசும் திறன் முதிர்ச்சி பெற்றவர்களாகி, மனவெழுச்சியின் முதிர்ச்சியால் சமூக, சமயம் தொடர்பான செய்திகளின் பெருக்கத்தைப் பெற வெற்றிவேற்கை போன்ற நீதி நூல்கள் துணைநிற்கின்றன. இவ்வாறான கருத்துக்களை அறிவதன் மூலமாக சிறுவர்களின் ஆளுமைத்திறன் வளர்ச்சி பெறுவதனைக் காணமுடியும்.

உலகநாதரின் *உலகநீதி*

உலகநாதர் இயற்றியது *உலகநீதி.* பதின்மூன்று பாடல்கள் மட்டுமே இடம்பெறும் இந்நூல் 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. 13 பாடல்களும் எண்சீர்க்கழிநெடிலடியில் அமைந்திருந்தாலும் தனிமனித ஒழுக்கங்களை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு பாடலின் ஒவ்வோர் அடியிலும் 'வேண்டாம்' எனும் சீர் இயைபுத் தொடையால் அமைந்துள்ளது. இயைபுத் தொடையான சந்த நயத்தைக் குழந்தைகள் விரும்பிப் படிப்பர். மேலும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எதிர்மறையாக ஒன்றைச் சொல்லுதல் ஓர் உத்தி. குழந்தைகள் செய்யாதே என்றால் செய்யும் செய் என்றால் செய்யாது. இது குழந்தைகளிடத்தில் காணப்படும் பொதுப் பண்பாகும்.

ஆனால், உலகநீதிப் பாடல்களில் கருத்து உடன்பாட்டில் அமைந்து செயலைக் கூறும்போது வேண்டாம் என எதிர்மறையில் அமையுமாறு படைத்துள்ளது சிறப்பு.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

"ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்" (உலகநீதி, 1)

எனப் பாடல்கள் அனைத்தும் இவ்வாறு அமைவதைக் காணலாம். தன் கால அனுபவங்களை அறமாக்கினாலும் சிறுவர்களுக்கு மனதில் பதியும் வண்ணம் அறமுரைத்த பாங்கு சிறப்பிற்குரியதாகும். குழந்தைகள் புரியாத பல விசயங்களைப் பார்த்து எண்ணத்தில் இருத்தி நாளடைவில் அச்செயல்களைச் செய்கையில் வியப்படைவதைப் போல புரியாத பல சொற்கள், புரியாத கருத்துக்கள், வயதுக்கு மீறிய போதனைகளாகக் கருதப்பட்டாலும் மூளை அவற்றை உள்வாங்கி பின்னர் சிறுவர்கள் செயலாக்கம் புரிகையில் சமூகத்திற்கு நலம் பயப்பவையாக அமையும்.

மேற்கண்ட செய்திகளைக் கொண்டு பார்க்கும்போது சிறுவர்களின் உளவியலைப் புரிந்து கொள்வது கடினம் எனினும் நடத்தை பற்றிய தீர்வுகளை இலக்கியங்களின் மூலம் பெறமுடியும். அவ்வகையில் பிற்காலத்து நீதி நூல்களில் சில சிறுவர் கல்விப் பாடத்திட்டத்தில் கற்பிக்கப்பட்டதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. நீதி போதனைகள் எவ்வெவ் காலத்திலும் குழந்தைகளுக்கு முறையாக வழங்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இக்காலக்கட்டத்திற்கு சிறுவர்களுக்கு இன்றியமையாக் கல்வியாக அறக்கல்வி அமைதல் தேவையாகிறது.

தொகுப்புரை

- மனித சமூகம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்கங்களின் ஒட்டுமொத்த வடிவமாக அறம் திகழ்கிறது. மனித வரலாற்றோடு தொடர்புடையது.
- அறவழிப்பட்ட வாழ்வே பயனுள்ள இன்ப வாழ்வு எனும் தமிழ் நெறி போற்றுதற்குரியதாகிறது.
- குழந்தை, சிறார், சிறுவர் எனும் சொல் கட்டுரையில் ஒரே பொருளிலும் அறம், நிதி ஒருபொருட்சொற்களாகவும் கையாளப்பட்டன.
- பள்ளிச் சிறுவர்களுக்கு எழுத்தைப் படிக்குமுன் அறக்கருத்துக்களைப் பாட்டாகவும் தொடராகவும் கற்றுக் கொடுத்து பொருள் (கருத்து), தொடர், சொல், எழுத்து என மொழியியல் வல்லுநர் போன்று சிறுவர்களுக்குப் பழக்கப்பட்டது.
- சிறுவர்கள் மொழித்திறன்களைக் கற்கும்போது கேட்டல் , பேசுதல் , படித்தல் , எழுதுதல் என்னும் வரிசைமுறைதான் பின்பற்றப்படுகிறது.
- கேட்டல், பேசுதல் இரண்டு திறன்களும் இசையோடு அமையும்போது சிறுவர்கள் விரும்பிக் கற்பர். இம்முறையே அறிவியல், உளவியல் முறையுமாகும். இக்குழந்தை உளவியலை ஔவையார் முதலான புலவர்கள் தம் பட்டறிவால் உணர்ந்தனர் போலும். ஆகவே இம்முறை பின்பற்றி அறமுரைத்தனர்.
- எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்ல வேண்டும் எனும் உளவியல் கருத்தை உணர்ந்த புலவோர் ஆத்திசூடியிலிருந்து தொடங்கி நல்வழி, மூதுரை, நீதிநெறி விளக்கம் போன்ற நூல்களைக் கற்றுக் கொடுக்கின்றனர்.
- சிறுவர்கள் தமக்கான இலக்கியத்தைத் தாமே படைப்பதில்லை. அவர்களுக்கான இலக்கியத்தை அவர்கள் மனம் கவரும் வண்ணம் பெரியோரே இயற்றுகின்றனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

- சிறிய உள்ளங்களில் எளிய சொற்களால் நேர்த்தியான, தரமான விதைகளைத் தூவுவதை நோக்கமாகக் கொண்டதாகையால் மேலே குறிப்பிட்ட நூல்கள் சிறுவர்க்கானவை என்பது பொருத்தமுடையதாகிறது.
- பாட்டு, தொடர், நெடுங்கணக்கு வரிசை முறை ஆகியன கற்றுக் கொடுக்கும் முறை சிறுவர்க்கான நீதிநூல்கள் என்பது சாலப்பொருந்தும்.
- உலகமயம் நுகர்வுக் கலாச்சாரத்தை நாட்டில் கொண்டு வந்து சேர்த்தது. வணிகக் கல்வியும் குழந்தை உள்ளத்தைச் சீரழித்தது. இச்சூழல் மொழி, கல்வி, குடும்பம், சமூகம் என எல்லா அமைப்பையும் சிதைக்கிறது. மனித வாழ்வு புரட்டிப் போடப்படுகின்றது. மனித வாழ்வின் பன்முகப்பண்புகள் நெருக்கடிக்குள்ளாகின்றன. அனைத்துத் துறையும் மரபுக்குத் திரும்புவது போல் மரபுவழி நீதிபோதனை வாயிலாக மதிப்புக்கல்விக்குச் செல்லும் தேவை உணரப்படுகிறது.
- குழந்தைகளைப் பெற்றெடுத்து சத்துள்ள உணவு ஊட்டி, விலை உயர்ந்த ஆடை, அணிகலன் பூட்டி அழகு செய்து யாது பயன்? நற்பண்பு மிக்கவராய், மனித விழுமியத்தைத் தாங்கிப் பிடிக்கின்ற பண்பாடு மிக்கவர்களாய் விளங்க மதிப்புமிக்க அறக்கல்வியால் மட்டுமே முடியும் என்பது திண்ணம்.

பயன்பட்ட நூல்கள்

1. உலகநாதரின் *உலகநீதி*
2. பாண்டியன் அதிவீரராமன். *வெற்றிவேற்கை*
3. ஔவையார். *ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

பத்துப்பாட்டு உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகள்

Life Ethics Instructed by "Pathuppattu"

முனைவர். ம. சித்ராகண்ணு, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்,
பாரத் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், கலை மற்றும் அறிவியல் புலம் - தமிழ்த் துறை
திருவெஞ்சேரி, சேலையூர், சென்னை- 73

Abstract

The purpose of the article is to cater down the instruction of ethical life in "Pathuppattu". It was written in the Sangam period. The people's life is all portrayed in the collection of "Pattupattu". The inner and the outer life of the people are dealt with it. Most of the themes are agriculture, hospitality, relatives, love, charity and valour. These all are the principal traits of the Sangam people. Hence, the people lived a moral life with concern on others. Therefore, this article, paves way to understand the ethics instructed in "Pattuppattu".

Keywords: Life Ethics, Instructed by "Pathuppattu"

சங்க கால மக்களின் வாழ்க்கை முறையானது இயற்கையமைப்பை அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. அம்மக்களின் வாழ்க்கையை விளக்கிக் காட்டும் கருவியாக இலக்கியங்கள் திகழ்கின்றன. ஒவ்வொரு காலகட்டத்தில் தோன்றிய இலக்கியங்களும் வாழ்க்கையை நெறிப்படுத்துகின்ற வகையில்தான் அமைந்து காணப்படுகின்றன.

"முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறை சிறந்தனவே" - தொல்காப்பியம், புறத்திணையியல், 3

மக்கள் நிலத்தையும், பொழுதையும் வாழ்க்கைக்கு முதற்பொருளாக்கி அகம், புறம் என நெறிப்படுத்தியே வாழ்ந்தனர். இந்நிலவுலக வாழ்க்கையில் மக்கள் எல்லோரும் அடைதற்குரிய உறுதிப்பொருள்களை அறம், பொருள், இன்பம், வீடு என உலகத்தோரும் சமயத்தோரும் பாகுபடுத்திக் கூறுவர். எல்லா உயிர்களாலும் விரும்பி நுகரப்படுவது இன்பம். அவ்வின்பத்திற்குக் காரணமாக அறிவுடைய மக்களால் ஈட்டப்படுவது பொருள். பிறர்க்குத் தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் பொருள் செய்தொழுகும் முறை அறம். நுகர்தல் வேட்கைமுறைபற்றி இன்பம் - பொருள் - அறம் எனவும், செய்கை முறை பற்றி அறம் - பொருள் - இன்பம் எனவும் எண்ணுதல் மரபு என்பதே பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிமுறை யாகும்.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" -தொல்காப்பியம், களவியல், நூற்பா, 1 என்கிறது தொல்காப்பிய நூற்பா.

மிக உயர்வான வாழ்க்கை என்பது மன அமைதியோடு வாழுவதே. இத்தகைய வாழ்வு கலையினால் மட்டுமே உண்டாகும். தாம் கற்ற கலையினைத் தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்திய இக்கலைஞர்களை கூத்தர், பாணர், பொருநர், கிணைவன், கிணைமகள், ஆடுமகள், விறலி, பாடினி, கண்ணுளர், வயிரியர், கோடியர் எனப் பல பெயர்களால் அழைத்தனர். கூத்தர் என்பவர் கதை தழுவி வரும் கூத்திலும், தனிக்கூத்திலும் வல்லவராகவும், பாணர் என்பவர் குழல், யாழ் முதலிய இசைக் கருவிகளோடு பாடுபவராகவும், பொருநர் என்பவர் ஏர்க்களம், போர்க்களம் சென்று பாடும் கூத்தராகவும், நடிப்பிலும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வல்லவராகவும் இருந்தனர். இசையில் வல்ல அக்கலைஞர்கள் ஊர்ஊராகச் சென்று ஆடல் பாடல் நிகழ்த்தியும், விழாக் காலங்களில் தமது கலைத்திறனை வெளிப்படுத்தியும், மக்கள் ஆதரவையும், மன்னர்களின் ஆதரவினையும் பெற்று, ஓர் இடத்தில் நிலைத்து வாழாது நாடோடி வாழ்க்கை வாழ்ந்ததையும்,

"அறாஅ யாணர் அகன்தலைப் பேரூர்
சாறு கழி வழிநாள் சோறு நசை உறாது
வேறு புலம் முன்னிய விரகு அறி பொருந" - பொருநராற்றுப்படை, 1-3

பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவைகள் போலத் தமக்கு ஆதரவு கிடைக்கும் இடங்களை நாடிச் சென்றதையும்,

"பழுமரம் தேரும் பறவை போல
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண" - பெரும்பாணாற்றுப்படை, 19-21

ஒரு பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்தும்போது சுற்றத்தினருடன் கூடிப் பிழைப்பதற்கு ஏற்ற இடம் நாடிச் செல்லுதலை இவர்களது வாழ்வியலாக காட்டுகின்றன. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது இவர்களின் குறிக்கோளாக அமைகின்றது. "தமக்கென வாழா நோன்தாள் பிறர்க்கென முயலுநர்" என்னும் புறநானூற்றுக் கோட்பாடானது இவர்களுக்கு முற்றிலும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது.
அன்றைய பழந்தமிழர் விருந்தோம்பல் என்பதை கொள்கையாகக் கொண்டிருந்தனர்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து." - திருக்குறள், 90

அவ்விருந்து அகமும், முகமும் மலர வரவேற்று பரிமாறப்படும் விருந்தாயிருந்ததையும்,

"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்" - சிறுபாணாற்றுப்படை, 175-177
"தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவீர் நில்லாது" - மலைபடுகடாம், 565-566

பசி தணியுமாறு படைத்ததையும், முதல் நாளில் இருந்ததைப் போலவே எல்லா நாள்களும் அவ்விருந்து உபசரிக்கப்பட்டமையையும்,

"காலில் ஏழடிப் பின் சென்று" - பொருநராற்றுப்படை, 166

விருந்தினர் செல்ல விரும்பின், அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தி, வழியனுப்பும் பொழுது ஏழு அடி நடந்து சென்று வழியனுப்பியதையும் காண முடிகிறது. பழந்தமிழர்கள் விருந்தோம்பலையும், உணவு கொடுத்துப் பசிப்பிணியைப் போக்குவதையும், அவர்களை பிரிய மனமின்றி வழியனுப்பிவைத்ததையும் தாம் வாழ்வியலில் அறநெறியாகக் கொண்டிருந்தனர்.

"வியன் மேவல் விழுச் செல்வத்து
இரு வகையான் இசை சான்ற
சிறு குடிப் பெருந் தொழுவர்" - மதுரைக்காஞ்சி, 120-122

உலகில் உயர்ந்தது உழவுத் தொழில். உயிர் காக்கும் அவ்வுழவுத் தொழில் செய்யும் பலர் சிறப்பாக வாழ்ந்ததையும்,

"தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய" - மதுரைக்காஞ்சி, 11
"புண்ணியம் முட்டாத் தண் நிழல் வாழ்க்கை
கொடு மேழி நசை உழவர்" - பட்டினப்பாலை, 204-205

ஒரு விதைப்பில் விதைத்த விதை ஆயிரமாக விளைந்திருந்ததையும், அறவொழுக்கம் பிறழாது யாருடைய மனமும் புண்படாதவாறு இன்சொல் கூறி, அன்புடன் வாழும் நெறியுடையவராக அவர்கள் வாழ்ந்தனர் என்பதையும் காண முடிகிறது.

"நெடுநுகத்துப் பகல்போல

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நடுவுநின்ற நன்நெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப காடிக்
கொள்வதூஉ மிகை கொளாது
கொடுப்பதுதூ உங் குறைகொடாது" - பட்டினப்பாலை, 206-210

வணிகத்தினை மேற்கொண்டிருந்த பெரு மக்கள் உண்மையே பேசும் நற்பண்பு மிக்கவர்களாகவும் தமக்குக் கிடைக்கும் இலாபத்தை வெளிப்படையாகக் குறிப்பிடுவராகவும், பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும், தாம் விற்கும் பண்டங்களைக் குறைத்துக் கொடாமலும் நடுவு நெறியுடன் வாணிக வாழ்வியலை நடத்தினர் என்பதை எடுத்துரைக்கின்றது.

"நள் இருள் விடியல் புள் எழப் போகி
புலிக் குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வால் முகை அன்ன கூம்பு முகில்
உறை அமை தீம் தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர் வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள் மோர் மாறும் நல் மா மேனி
சிறு குழை துயல்வரும் காதின் பணைத்தோள்
குறு நெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி
நெய் விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை, நல்ஆன் கருநாகு, பெறுஉம்" - பெரும்பாணாற்றுப்படை, 155-165

காய்ச்சிய நெய்யை விற்றுப் பெற்ற தொகை கொண்டு, பசும்பொன் வாங்கவில்லை. மாறாக பால் எருமை, பசுங்கன்று, எருமைக்கன்று வாங்குகிறாள். ஒரு வாணிபம் செய்து அதன் வாயிலாகக் கிடைக்கின்ற வருவாயை மேலும் வளர்த்தற்குரிய முறையில் முதலீடு செய்கிறாள். பெருங்கல்வி அறிவில்லாத ஓர் இடைக்குல மடந்தை இத்துணைச் சிறந்த காரியத்தைச் செய்கிறாள் என்பதனால் அது அவர்களுடைய வாழ்க்கை முறையை மிக விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது என்று அறிய முடிகிறது.

"மண வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களைப் பெற்று இன்பவாழ்வு வாழ்ந்ததும், தலைவனும் தலைவியும் கடவுளைப் பற்றி எண்ண முற்பட வேண்டும். அதுவே வாழ்க்கையின் குறிக்கோளாகும்" எனத் தொல்காப்பியம் கூறுவதற்க்கேற்ப,

"பரவியும் தொழுதும் வரவு மலர்தூவியும்
வேறுபல் உருவின் கடவுள் பேணி.
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி" - குறிஞ்சிப்பாட்டு, 5-8

தங்களுக்கு ஏற்பட்ட நோய் நீங்குவதற்கு, மலர்களையும், நறுமணப்பொருள்களையும் கொண்டு மக்கள் கடவுளை வழிபட்டனர். இறைவன் ஒருவனே, அவரே பல்வேறு உருவங்களில் பல்வேறு தெய்வங்களாக காட்சி தருகிறார். இவற்றிலிருந்து பழந்தமிழர்கள் கடவுட்கொள்கை உடையவர்கள் என்பதும், எல்லாவற்றையும் கடந்து நின்ற முழுமுதற் கடவுள் ஒருவனை என " ஓர் இறைக்கொள்கை" யுடன் வாழ்ந்தனர் என்பதும் பெறப்படும்.

"பண்டை இயற்கை வளங்கள் எல்லாம் - பத்துப்
பாட்டின் வளத்திற் கண்டறிந்து
மண்டல மெங்கும் புகழும் அருந்தமிழ் - வாசம்
நுகர்ந்து மகிழ்வோமே"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் கருத்தின்படி பண்டைய மக்களின் வாழ்வியலை பத்துப்பாட்டினை பயின்று நன்கு உணர முடியும் என்பது இக்கட்டுரையின் மூலம் ஐயமின்றி புலப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

பயன்பட்ட நூல்கள்

1. *தொல்காப்பியம்*
2. *சிறுபாணாற்றுப்படை*
3. *பொருநராற்றுப்படை*
4. *மதுரைக்காஞ்சி*
5. *பெரும்பாணாற்றுப்படை*
6. *குறிஞ்சிப்பாட்டு*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

புறநானூற்றில் வாழ்வியல் சிந்தனைகள்

Thoughts of Moral Codes in "Purananooru"

முனைவர் செ. சிவகாமி சுந்தரி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,தூத்துக்குடி - 3.

Abstract

The notion of the paper is to estimate the life ethics enunciated in the Sangam work "Purananooru". Tamil Tradition is a lofty one and has numerous ethical treatises and "Purananooru" is basically a book of glorifying feats of the war done by the Sangam kings but in the same manner it also caters awesome diadactic principles to lead life happily. Hence, this article tries to bring forth the norms and life style portrayed in the Sangam treatise.

Keywords: Life Ethics, *Purananoo*ru, Tamil People, Tamil culture

ஒவ்வொரு மனிதனும் தம்முடைய வாழ்வினைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்கும், மதிப்புள்ளதாய் மாற்றிக் கொள்வதற்கும் பெரிதும் துணை நிற்பன இலக்கியங்கள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு வாழ்க்கையை வளம்பெறச் செய்ய குறிக்கோளை அடைய புறநானூற்றுப்பாடல்கள் வழி காட்டுகின்றன பணிடைத்தமிழ் மக்களின் வாழ்வினைச் சித்தரித்துக்காட்டும் சங்க இலக்கிய படைப்புகளால் ஒன்றான புறநானூற்றிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய வாழும் முறைகள் நிறைய இருப்பினும் சிலவற்றைக் கட்டுரையில் காணலாம். சங்க இலக்கியங்கள் செறிவான கருத்துக்களை தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. அந்த வகையில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் வாழ்வியல் கருத்துக்கள் மேலோங்கி இருப்பதைக் காணமுடிகிறது.

மனிதன் தன் வாழ்க்கையில் எத்தனையோ இன்பதுன்பங்களைக் கடந்து வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. அவன் வாழும் இடைப்பட்ட காலங்களில் எவ்வாறு சிறப்பாக வாழ முடியும் என்பதைப் படம் பிடித்துக்காட்டும் கண்ணாடியாக புறநானூறு என்னும் புற இலக்கியம் திகழ்கிறது. மக்கள்வாழ வழிகாட்டும் அறவுரைகளாகவும் உலக நிலைகளை எடுத்துக்காட்டி உண்மைவழி இதுதான் எனக்காணும் வேதாந்தக் கருத்துக்களையும் காணமுடிகிறது. இந்நூலின் பாடல்கள் பெரும்பாலும் கருத்தையும் கொள்கைகளையும் கொண்டவைகளாக இருப்பதைக் காண முடிகிறது. அதில் வாழ்வியல் தொடர்பான சிந்தனைகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

இன்று வாழும், மனிதர்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்கிறார்கள். உண்மைகளை மறைத்துப்பேசி பொய் சொல்லி ஏமாற்றுகிறார்கள். மனிதர்களை மனிதர்கள் அடிமைப்படுத்துகிறார்கள். சிறுமைப்படுத்துகிறார்கள் மதவெறியும் சாதிவெறியும் கொண்டு வன்முறையை வளர்க்கிறார்கள். மொத்தத்தில் மனிதர்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டுத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். வாழும் அர்த்தம் தெரியாமல் வகை தெரியா வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 'உள்ளொன்று வைத்துப், புறமொன்று பேசாத உறவு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கலவாமை வேண்டும்' என்று இராமலிங்க அடிகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்றுப் பேசாத மனிதர்களைத் தேடுகிறார். இப்படிப்பட்ட வாழ்க்கைச் சூழலில்தான் பாரதி

"செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று பதினெட்டுமொழி பேசக்கூடிய மக்களாக இருப்பினும் ஒன்றுபட்ட சிந்தனையுடன் வாழவேண்டம் என்று பாடியுள்ளார்...! யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார். கணியன் பூங்குன்றனார் எந்த ஊராக இருப்பினும் அது எம்முடைய ஊர்தான் மனிதர்கள் யாரைாக இருப்பினும் அவர்கள் எமக்கு உறவினர்கள் தான் என்று எண்ணி வாழவேண்டும் என்று கூறிய உயரிய மனப்பாண்மைதான் மனிதர்களின் புனிதத் தன்மையை வெளிப்படுத்தும் உன்னதமாக திகழ்கிறது. யாவரும் உறவினர்களாக வாழும் போது அன்பு செலுத்துதலும் விட்டுக் கொடுத்தலும் மன்னித்தலும் இயல்பாகிறது. பொறாமையும் காழ்ப்புணர்வும் வன்முறையும் மறைகிறது. அன்பு ஆட்சி செய்யும் இடமாக இவ்வையகம் மலரும்.

தீதும் நன்றும் பிறர்தரவாரா

நாம் துன்பத்தை அனுபவிப்பதும் இன்பத்தை அடைவதும் நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்பவைதான் தீமையும் நன்மையும் மற்றவர்களால் வருவதில்லை. 'நல்லது செய்தால் நல்லது நடக்கும்' 'தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்பது போன்ற கருத்துக்களும் இந்த உண்மையை மையமிட்டவையே

'நன்னிலைக் கண் தன்னை நிறுப்பானும்
தன்கை நிலை கலக்கிக் கீழிடுவானும்
நிலையினும் மென்மேல் உயர்ந்து நிற்பானும்
தன்னைத் தலையாகச் செய்வானும் தான்"

என்ற நாலடியார் பாடல் கூறும் கருத்து ஒப்புநோக்கத் தக்கதாக உள்ளது.

"கேடும் ஆகிகமும் கெட்ட திடுவினார்
ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவர்"

என்கிறார் சேக்கிழார். இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகவே எண்ணும் உயரிய மனப்பான்மை வாய்த்துவிட்டால் எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனவலிமை வந்துவிடும். கோடீஸ்வரராகவேண்டும் என்ற வித்தையை வழிமுறையை அன்றைக்கே ஔவையார் கூறியுள்ளார். ஆகவே ஏழை என்று சொல்லி கோழையாக மாறிவிடாதே உனக்குள் மிகப்பெரிய வசந்தம்வரும் திறந்து வைத்தோம் என்றால் வசந்தக்காற்று வீசும் என்ற நம்பிக்கை வேண்டும். இதைச் சொன்னது யார்? இன்றைய கம்யூட்டர் இன்ஜீனியரோ, படித்த மேதாவிங்களோ இல்லை - இரண்டாயிரம் ஆண்களுக்கு வீதி விதியாக ஊர் ஊராகச் சென்று பாடிய ஔவையார் பாடியது.

வியத்தலும் இகழ்தலும் கூடாது

ஊழின் வழியே செல்லும் வாழ்க்கை என்பதை வலியுறுத்திக் கூறும்போது கல்வியில் செல்வத்தில், புகழில் சிறந்தோரைக் கண்டு வியத்தலும் தேவையில்லை கல்வியறிவற்றவர்களை ஏழைகளைக் கண்டு இகழ்தலும் தேவையில்லை.

'பெரியோரை வியத்தலும் இலமே
சிறயோரை இகழ்தல் அதனினும் இலமே'

என்று பாடியுள்ளார். வியத்தலும் இகழ்தலும் மனித மனத்தின் இயல்பான வெளிப்பாடுகள் சர்வகாலமும் பிறரையேற்றியே சிந்தித்து கொண்டிருக்கும் நம் மனது நம்மைவிட உயர்ந்து இருப்பவரைக் கண்டு நம் மனம் வியந்து நிற்கிறது. நமக்கு இந்த ஆற்றல் இல்லையே நாம் வசதியாக இல்லையே என்ற நம்மனம் சிறுமைப்படுத்திக் கொள்கிறது. நம்மினும் கீழான நிலையில் இருப்பவர்களைக் காணும் போது நம்மனம் நம்மை எண்ணிக் கர்வம் கொள்கிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அவர்களைச் சிறுமைப்படுத்துகிறது எண்ணத்தாலும் செயலாலும் நாமும் சிறுமை அடைகிறோம். ஆகவே யாரையும் வியத்தலும் இகழ்தலும் கூடாது என்ற உறுதிப் பொருளை உறுதியாகக் கூறியுள்ளார். கணியன் பூங்குன்றனார்.

செல்வத்துப் பயனே ஈதல்

'எத்துணை ஆயினும் ஈதல் நன்று
செல்வ வாழ்வு வாழும்' (புறம் 142 : 1)

மனிதன் செய்ய வேண்டியது வறியவாக்கு ஈதல்

'செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே' (புறம் 189)

என்ற நக்கீரர் பாடலின் வழியாக பொருள் ஈட்டுவதன் பயனே ஈதல் என வலியுறுத்தப்படுகிறது.

தான் ஈட்டிய பொருளை தானே வைத்து அனுபவிக்க நினைத்தால் இழக்கக்கூடியன பலவாகும். எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

'ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று' (புறம் 204)

என ஒருபுறம் ஈகையை வலியுறுத்தும் புறநானுறு கூடவே ஒரு மாற்றுச்சிந்தனையையும் மறக்காமல் தருகின்றது. கொடுப்பது உயர்வானதுதான் ஆனால் கொள்ளேன் என்ற சொல் அதனினும் உயர்வானது என்று குறிப்பிடுகின்றது.

'இன்னோருக்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே' (புறம் 163 1-7)

குமணவள்ளலிடம் பாடிபோசில் பெற்றுவந்த பெருஞ்சித்திரனார் தன்மனைவியிடம் பொருளைக் கொடுத:து எல்லோருக்கும் கொடுப்பாயாக என்று வள்ளல்கள் கொடுக்கும் பரிசினை தனக்கென வைத்துக் கொள்ளாமல் புலவர்கள் புரவலர்களாக கொள்ளெளை கொடுக்கும் தன்மை உடையவர்களாக விலங்கியமையை அறியமுடிகிறது.

அல்லது செய்தல் ஓம்புமீன் (மனிதநேயம்)

நரிவெரூவத்தலையார் என்னும் புலவர்நம் பாடலில் நாம் பிறர்க்கு நன்மை செய்யவில்லையாயினும் பரவாயில்லை தீமை செய்யாதீர்கள். அவ்வாறு தீமை செய்யாதிருப்பதே மனித நேயம்.

'நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லோரும் உவப்பதன்றியும்
நலலாற்றுப் படூஉம் நெறியுமா அதுவே' (புறம் 195)

இவ்வாறு மனிதன் நன்னெறியில் வாழ்வைச் செம்மைப்படுத்தி வாழ்வதற்கான சிறந்த கருத்துக்களை தாங்கி உள்ளது புறநானூறு.

இரக்க உணர்வு

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வடலூரார் மனிதன் மனம் என்ற ஒன்றைப் பெற்றது நெஞ்சில் ஈரமும், இதயத்தில் இரக்கமும் கொண்டு வாழவே என்ற நோக்கோடு பாடியிருப்பனப் பின்வரும் பாடல் கருத்துக்கள் விளக்குகின்றன படரத் தயங்கி நின்ற முல்லைக் கொடிக்கும் தாம் பயணஞ்செய்து வந்த தேரையே ஈந்து மனமகிழும் பாரியின் செயலைக் கபிலர் காட்டுமிடத்து

'................. புனைகொடி முல்லை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்க எனக் கொடுத்த'

என்ற பாடல் வரிகளும் குளிரால் நடுங்கி உடல் ஒடுங்கி நின்ற மயிலின் நிலைகண்டு மனமிரங்கி தனது கம்பளத்தை எடுத்துப் போர்த்திவிட்ட பேகனின் செயலும், பரத்தமைக் கொண்டு வாழும் பேகனிடம் கபிலரும் பரணரும், அரிசில் கிழாரும், 'இரந்து வந்த யாம் கண்ணீர் விட்டழும் உன தலைவியைக் கண்டோம், எம்மிலும் நின்னால் உடனே அருள் செய்யப்பட வேண்டியவள் உன் மனைவியே! அவளது பிளவு நோயைத் தீர்ப்பாயாக இதுவே யாம் நின்னிடம் விரும்பும் பெரிய பரிசில் (143, 144, 146) எனது கொடைக கோரிக்கையை மறந்து மனிதநேயத்தோடும் கருணையோடும் வேண்டுவதைக் காணமுடிகிறது.

வாழ்வியலில் அங்கமாகும் கல்வி

கல்வி நமது பிறப்புரிமை. கல்வி கொடுப்பதையாரும் மறுக்க முடியாது. இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி 14 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கப்படவேண்டும். இதற்கு ஏற்றாற்போல் மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு முறைகளில் நடவடிக்கை எடுத:து வருகின்றன. அரசனுக்கு தன் நாட்டில் மட்டும் சிறப்புண்டு ஆனால் கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பாம் உறவுகளில் கல்வியின் அடிப்படையில் பாசம் வேறுபடும் என்பதை

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
..................கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கட்படுமே' (புறம் 183 : 1 – 10)

என்கிறது புறநானூறு

வாழ்வியற்சிந்தனை

சங்ககாலப் புலவர்கள் கல்வியில் சிறந்த கலைவாணர்கள் பலநாடுகளுக்கும் சுற்றித்திரிந்து இயற்கைப் பொருட்களையும் உலகியற் பொருட்களையும் அறிந்து அவற்றைத் தாம்பாடிய செய்யுள்களில் விளக்கி உள்ளனர்.

அறிவுடைய வேந்தனிடம் சென்று நீ நெறியில்லாமல் கொடுங்கோல் ஆட்சி புரிந்தால் 'யானை புக்க புலம் போலத் தானும் உலகமும் கெடுமே' என்று கூறி திருத்தியும் உள்ளனர். மன்னர்களின் புகழைப்பாடி பரிசில் பெறுவதோடு நின்றுவிட்டாமல் உலக இயல்புகளையும் தம்பாடல்களில் கூறியிருக்கின்றனர். இந்திரர் உண்ணும் அமிழ்தம் கிடைத்தாலும் அதைத் தனியே உண்ணக்கூடாது அனைவரும் பகிர்ந்து உண்ண வேண்டும். புகழுக்காக உயிரையும் கொடுக்கலாம். பழிச்சொல் வருமாயின் உலகமே கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்ற உயர்ந்த ஒழுகலாறுகள் உடையவர்கள்தான் பிறர்நலம் பேணும் பெரியோர் அவர்களால் தான் இவ்வுலகம் இயங்குகிறது. பிறர்நலம் பேணும் பெரியோர் போல் எல்லோரும் வாழவேண்டும் என்ற பண்பாட்டுச் சிந்தனையை இப்புறப்பாடல் தருகிறது.

'உண்டாலம்மஇவ் வுலக மிந்திரர்
அமிழ்த மாயைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழொ னின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறாக்கென முயலுந ருண்மை யானே' (புறம் 182)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தமிழின் வீரயுகக்காப்பியம் என்ற பெயரைப்பெற்ற புறநானூற்றைப்பாடிய சங்கச் சான்றோர்கள் மக்கள் சமுதாயம் மகிழ்வுடனும் ஒழுக்க நெறியினைக் கடைபிடித்து வாழவேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் பாடியிருப்பதை அப்பாடல்களின் உண்மைத் தன்மையைக் கொண்டே நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

தற்காலச் சூழலில் தனிஉடைமைக் கோட்பாடுகளும் சுயநலப்போக்கும் பொருளின் மேல் கொண்ட பற்றின் காரணமாக இயந்திரத் தனமாக வாழ்க்கை நடத்தும் மனிதர்களையும் காணமுடிகிறது. அத்தகைய சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் காலம்கடந்தும் இப்புறநானூற்றுப் பாடல் கருத்துக்கள் எல்லா காலத்திலும் வாழும் மனிதர்களுக்கு ஏற்றம் தரும் வகையில் கருத்துக் கருவூலமாக விளங்குகிறது.

துணைநூற்பட்டியல்

1. பரிமணம்.அ.மா - *புறநானூறு*
பாலசுப்பிரமணியன்.கு.வ
முதற்பதிப்பு, ஏப்ரல் -2004,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை – 600 098.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சுடுமணல் நாவல் காட்டும் வாழ்க்கை முறை

Life Style as Portrayed in the Novel *Sudumanal*

பே.சீதாலட்சுமி (தமிழ்த்துறை) முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

Abstract

The paper tries to estimate the life style portrayed in the novel 'Sudumanal' The novel tells of the Tamil family dwells in a place where Tamil is not spoken. The novel centeres around the young chap Mahendra, a man without job who suffers by the water scarcity problem exists in the state. Their parents suffer too much to solve the crisis but immune and sufers for him. Hence, this article tries to elicit the problems endured by the protagonist and the sufferings of his family members.

Keywords: Life Style, Portrayal, Novel *Sudumanal, Water crisis, Tamil Literature*

முன்னுரை

தமிழில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் யாவும் அந்தக்காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளன. சங்ககால இலக்கியங்கள் மக்களிடையே காணப்பட்ட காதல், வீரம், கொடை போன்றவற்றினை எடுத்துக் கூறுவதாக உள்ளன. சங்ககாலத்திற்கு அடுத்து வந்த இடைக்காலத்தில் தோன்றிய தோன்றிய இலக்கியங்கள் சமூகத்தில் மேலோங்கியிருந்து பக்தி உணர்வினை பிரதிபலிப்பதாக இருந்தன. அதற்கு அடுத்து வந்த பிற்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் பக்தி உணர்வினையும் காதல் உணர்வினையும் சேர்த்து பிரதிபலிக்கின்றன. இவ்வாறே நாவல் இலக்கியமானது நாவலாசிரியரின் எந்தக் காலத்தில் வாழ்ந்தானோ அந்தக்காலத்தில் சமுதாயத்தில் மக்களிடையே நிலவி வந்த மக்களின் வாழ்வியலை படம்பிடித்துக்காட்டுவதாகவே அமைந்துள்ளன எனலாம். இந்த வகையில் சுப்ரபாரதிமணியன் தான் எழுதிய சுடுமணல் நாவலில் மொழி தெரியாத மாநிலத்தில் வாழும் தமிழ் குடும்பத்தின் வாழ்வையும் அம்மாநிலத்தில் அடிக்கடி ஏற்படும் சிக்கல் என்ன என்பதினையும் வேலையில்லா இளைஞனின் நிலை, அவ்விளைஞனால் பெற்றோர் படும் மனப்போராட்டத்தினை படம்பிடித்துக்காட்டுகின்றார். எனவே அந்நாவல் காட்டும் வாழ்வியல் நெறியை கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சுடுமணலும் கதைப்பின்னணியும்

மொழி தெரியாத ஒரு மாநிலத்தில் வாழும் தமிழ் குடும்பத்தின் வாழ்வினை சுடுமணல் நாவல் சித்தரிக்கின்றது. அந்நாவலில் முக்கிய கதாபாத்திரமான மகேந்திரன் ஒரு வேலையில்லாத இளைஞன் தனக்கு வேலை இல்லாததின் காரணமாக மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றான். அடிக்கடி தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. தான் வாழும் மாநிலத்தில் அடிக்கடி தண்ணீர் பிரச்சினை காரணமாக பந்த் ஏற்படுகின்றது. காலவரத்தின் போது அப்பாவி மக்கள் சுட்டுக்கொல்லப்படுகின்றன. அவ்வேளையில் தனக்கும் அதைப்போல சாவு வரக்கூடாத என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றுகிறது. வேலையில்லாததின் காரணமாக மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகின்றான்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இதனைப் பார்த்த அவனது பெற்றோர் மகேந்திரனுக்கு வேலை கிடைத்தால் சரியாகிவிடுவான் என்ற எண்ணத்தில் அவனை தாங்கள் வாழ்ந்த ஊருக்கு மகேந்திரனின் தந்தை வெங்கட்டய்யா அனுப்புகின்றார்.

தன் மகனை அனுப்பிய பின்பு தான் வாழும் மாநிலத்திலும் வெங்கட்டய்யா வாழ்ந்த தமிழ் பகுதியிலும் தண்ணீர் பிரச்சினை காரணமாக கலவரம் ஏற்படும்போது தன் மகனின் நிலை என்னவாக இருக்கும் என்று வெங்கட்டய்யாவும் அவனின் மனைவி லட்சுமியும் மிகுந்த மன போராட்டத்தில் வாழ்கின்றனர்

வேலையில்லா இளைஞனின் நிலை

சுடுமணல் நாவலாசிரியர் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞன் மனதில் எவ்வாறெல்லாம் எண்ணம் தோன்றும் என்பதினை படம்பிடித்துக்காட்டுகின்றார். சுடுமணல் நாவலில் வரும் மகேந்திரன் தான் சமையல் வேலை செய்யும் சூழ்நிலைக்கு தள்ளப்படும்போது இவ்வாறு நினைக்கின்றான்.

> “பேப்பர் போடுகிற வேலையில்லாத இளைஞர்களை அவனும் பார்த்திருக்கின்றான். பால் பாக்கெட் போடும் வேலையில்லாத இளைஞர்களும் இருப்பார்கள். நொண்டி வாத்துக் கிழவிகளைவிட அவர்கள் இன்னும் முன்னதாகவே அழைப்புக் குரல்களுடன் காலை நேரத்து பால் பாக்கெட்டுகளைக் கொண்டு வரக்கூடும் தானும் அப்படி ஓர் இளைஞனாகி இருந்தால் இப்படி சமையல் கட்டுக்குள் அடைந்து கிடக்க வேண்டியதில்லை என்றிருந்தது” (சு.ம.ப.3)

என்று தான் சமையல் வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்ட சூழ்நிலையினையும் அதனால் மகேந்திரனின் மனப் போராட்டத்தினையும் எடுத்துக்காட்டுகின்றார்.

தற்கொலைக்கான முடிவு

சுடுமணல் நாவலில் படைக்கப்பட்டுள்ள பாத்திரமான மகேந்திரன் தனக்கு வேலையில்லாததின் காரணமாக தற்கொலை தான் அதற்கு முடிவு என்று பல கட்டங்களில் எண்ணுகின்றார்.

> “கேஸ் ஸ்டவ்வுகள் வெடித்துக் சிதறி மரணம் விளைவிப்பது பெண்களை மட்டுமே தானா வேலையில்லாத இளைஞர்களின் தற்கொலைக்குமான உபாயமாகிவிடவில்லையே என்றிருந்தது மகேந்திரனுக்கு” (சு.ம.ப.1)

தனக்கு வேலை இல்லாத சூழ்நிலையில் வீட்டில் சமையல் செய்வது மகேந்திரனுக்கு ஒரு வேலையாக அமைந்துவிடுகின்றது. அப்போது பெண்களுக்குத்தான் கேஸ் ஸ்டவ்வுகள் மூலம் மரணம் ஏற்படுமா தனக்கும் ஏற்படாத என்ற எண்ணம் மகேந்திரன் மனதில் தோன்றுவதாக ஆசிரியர் சித்திரிக்கின்றார்.

சமுதாய சூழலில் ஏற்படும் தற்கொலைக்கான எண்ணம்

சுடுமணல் நாவலில் காட்டப்படும் மகேந்திரனின் குடும்பமானது தான் வாழ்ந்த ஊரில் அம்மாநிலத்தில் அடிக்கடி போராட்டம் அதனால் ஏற்படும் துப்பாக்கிச் சூடு அதனால் ஏற்படும் மரணம் போன்றவை அடிக்கடி நிகழ்கின்றது. அந்நிகழ்வைப் பார்க்கும் மகேந்திரன் தனக்கும் இதுபோல சாவு ஏற்படாத என்ற எண்ணம் வலுப்பெறுகின்றது.

> “தான் செத்துப்போனால் இதெல்லாம் கூட இருக்காது. வலிந்து சாவை வரவழைத்துக்கொண்டல் செய்தியாவோம் இல்லையெனில் சாதாரண பிணம் அவ்வளவுதான்” (சு.ம.ப.12)

என்று வராத என்று ஒரு சமூக நிகழ்வின் போதும் கூட தனக்கு அதனைப்போல சாவு வராத என்று ஒரு வேலையில்லாத இளைஞன் எண்ணும் மன ஓட்டத்தினை எடுத்துக்காட்டுகின்றார் இந்நாவலாசிரியர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

“ஒரு ஆள் அல்லது பிணம் விழுந்து கிடந்ததன் அடையாளமாக சாக்பீஸ் வெளிக்கோடுகள் பிணமான கணத்தின் உடம்பு விரவிக் கிடந்த பரப்பைக் காட்டிக் கொண்டிருந்தது. அந்தக்வெளிக்கோடுகளுக்குள் தன்னை பொருத்தில் பார்த்தான். சரியாகத்தான் அடைபடும் இந்தக்கோடுகளுக்குள் இன்று அடைப்பட்டிருந்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும் என்று நினைத்துப்பார்த்தேன்” (சு.ம.ப.) இவ்வாறு ஒவ்வொரு நிகழ்வின் போதும் ஒரு இளைஞன் கொல்லப்படுகின்றார். அப்போது மகேந்திரன் அந்த இளைஞனைப் போல தனக்கும் சாவு என்று வந்து சேராத என்று எண்ணும் மனநிலைக்குத் தள்ளப்படுகின்றான் மகேந்திரன்.

தன்னை அடையாளப்படுத்தி கொள்ளல்

சுடுமணல் காட்டும் மகேந்திரமனின் பாத்திரப் படைப்பு எந்த வகையிலாவது தன்னை வீட்டில் உள்ளவர்களுக்கும் வெளி உலகமான சமுதாயத்திற்கும் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் நிலவுவதை இந்நாவலின் ஆசிரியர் குறிப்பிட்டுச்சொல்கின்றார்.

> “என்ன செய்யலாம்? ஜேம்ஸ் வீதி குடிதண்ணீர் தொட்டியின் மேல்நின்று தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டலா? வேலை கொடுக்க அரசாங்கம் ஒத்துக்கொண்டாலும் தரமாட்டார்கள். குடிதண்ணீரில் விஷம் கலந்ததாய் சொல்லலாமா? ரயில்வே பாலத்தின் மேல் ஏறி நின்று கொண்டு போய் வந்து கொண்டிருக்கும் காவல்துறை வாகனங்களை நிறுத்தி கெக்கலிக்கலாமா? உரக்க சத்தமிடலாமா? எதுவாக இருந்தாலும் குற்றம்தான் உடம்பு காயம்பட்டுப் போகும் ஆனாலும் ஏதாவது செய்யத்தான் வேண்டும் தன் இருப்பை மற்றவர்களுக்கு எப்படிக்காட்டுவது என்று புரியவில்லையாம்”(சு.ம.ப.39)

இவ்வாறு ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு வகையில் தன்னை அடையாளப்படுத்த நினைக்கும் ஒரு வேலையில்லாத இளைஞனின் மனஓட்டத்தை இந்நாவலாசிரியர் பதிவு செய்கின்றார்.

பெற்றோர்களின் தவிப்பு

சுடுமணல் நாவலாசிரியர் சுப்ரபாரதியமணியன் வேலையில்லா இளைஞனின் நிலைப்பற்றிக் கூறுவதோடு நின்றுவிடாமல் அவ்வேலையில்லா இளைஞர்களின் பெற்றொர் படும் மனவேதனையை தன் நாவலில் குறிப்பிடுகின்றார். தனக்கு வேலையில்லாமல் தடுமாறும் சூழ்நிலையில் ஒரு இளைஞன் தவறான பாதைக்கும் செல்லும்போது பெற்றோர் மனஉளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

> “எதுமே அவனுக்கு அமஞ்சு வரமாட்டீங்குது தினம் தினம் வேதனையா இருக்கு நடுராத்திரிக்கு வர்றான் அவனோட தள்ளாட்டந்தா பயமாக இருக்கு புதுசா இருக்கு அதெல்லா இது எங்க கொண்டு போயிவுடுமோ தெரியலோ எப்படியோ சீரழிஞ்சு போறதுக்கு முன்னயே அவன எடம் மாத்திரனும்”(சு.ம.ப.66).

ஒரு இளைஞன் தனக்கு வேலை இல்லை என்று கருதி தனக்கு தவறான பாதைக்குச் செல்லும் நிலைதான் சமூகத்தில் நிலவி வரும் சூழ்நிலையை தன் நாவலில் நாவலாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஒரு தாயும் தந்தையும் தனக்கு ஒரே பிள்ளையாக இருந்து அவனை பிரியக்கூடிய சூழ்நிலையில்தான் பெற்றோர் இருக்கின்றனர். அதே போல தன் பிள்ளை வேலை கிடைத்துவிட்டால் இச்சமுதாயத்தால் மதிக்கப்படும் சூழ்நிலைக்கு வந்துவிடுவான் என்று தன் பிள்ளைமேல் கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றார். ஒரு தாய் தன் ஒரே மகனை பிரியும் நிலையில்படும் மனத்துயரை இவ்வாறு கூறுகின்றார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

> "வேற என்ன பண்றது. அவன் சீரழியறதெ பாத்துட்டு இருக்க முடியுமோ? அவனுக்கு எந்தெந்த மாதிரி சினேகம் இப்ப இருக்குன்னே தெரியலே சட்டுன்னு ஒடுங்கி வீட்டோட இருந்தவனுக்கு என்னாச்சுன்னு புரியலே ஆன ரெம்பவும் மோசமாயிட்ட இருக்ககுங்றது மட்டும் தெரியும் அனுப்பிடறது நல்லது" (சு.ம.ப.67)

> "இந்த எடத்தை வுட்டு கொஞ்சநாள் எங்காச்சும் போயி வெளியே இருந்தா போதும் அவனுக்கு ஒரு மாறுதலா இருக்கும் சம்பாதிக்காட்டியும்போகுது. நாமாளாச்சும் அவன் செலவுக்குப் பணம் அனுப்பலாம். ஆனால், அவன் மனசு மாறனும் நடவடிக்கை மாறணும் அதுபோதும்" (சு.ம.ப.71)

தன் பிள்ளை வேலைபார்த்து பணம் கொடுக்காவிட்டாலும் தன் பிள்ளைகளில் வாழ்க்கை நன்றாக அமைய வேண்டும் என்று எண்ணும் பெற்றோர்களின் மனநிலை படம் பிடித்துக்காட்டப்படுகிறது. ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கோ அல்லது வேறு நாட்டிற்கோ செல்ல நேரிடும்போது அந்நாட்டு மக்களால் இவர்கள் அகதிகளாகவே பார்க்கப்படுகின்றார். இன்றைக் காலக்கட்டத்தில் இடம்பெயர்வு என்பது சமூகத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

வேலை நிமித்த மாகவோ அல்லது வேலை தேடியோ ஒரு மாநிலம் விட்டு ஒரு மாநிலம் ஒரு நாடுவிட்டு ஒரு நாடு கண்டம்விட்டு கண்டம் என்று செல்லும் சூழ்நிலை உள்ளது அவ்வாறு செல்லும் சூழ்நிலையில் வைத்து அம்மாநிலத்து மக்கள் அகதிகளாகவே பார்க்கும் சூழ்நிலை உள்ளது. அதனையே சுடுமணல் நாவலாசிரியர் சுப்ரபாரதிமணியன் சுட்டுகின்றார். "நம்மகூட பேசறப்போ வளர்ந்தவன், எங்கிருந்தோ வந்த வாடகைக்குக் குடியிருக்கிற உனக்கு இந்த அதிகாரமல்லா வேண்டியது இல்லே" (சு.ம.ப.52) வேறொரு மாநிலத்தில் குடியிருக்கும் சூழ்நிலை ஏற்படும்போது அம்மாநிலத்து மக்களால் அடக்கப்படும் நிலைதான் இது எனலாம். "நம்ம கூட பேசறப்போ உள்ளுர் பாஷையோ பேசு. நம்ம பாஷை வேண்டா. நிலமை சரியில்லே அதுதா" (சு.ம.ப.22) தனக்கு உரிமையான தாய்மொழியைக்கூட பேச உரிமை இல்லாத ஒரு சூழ்நிலைக்கு மக்கள் தள்ளப்படும் உரிமை மறுக்கப்படும் நிலை சுட்டப்படுகின்றது.

> "எதுக்கும் கொஞ்சம் ஜாக்கிரதயாத்தா இருக்கனும் பிரச்சினை வந்தப்புறம் நம்மள யாரொன்று பிரிச்சுக்காட்ட ஆரம்பிச்சுட்டாங்க வெளியிலே கூட தமிழ் பேசறதே வுட்டுருங்க லோக்கல் லாங்கேஜ்ல பேசிட்டு இருக்கிறது நல்லது இதுக்கு பயந்துட்டு ஊரைவிட்டு போறதில்லே பேபோன்னு துரத்த ஆரம்பிச்சாங்கன்னா போகாமெ இருக்க முடியாது உசிரெக் காப்பாத்திக்கவாச்சும் போய்த்தா ஆகணும்" (சு.ம.ப.77).

தன் உயிருக்கு பயந்து சுதந்திரமில்லாத ஒரு சூழலில் வாழும் தமிழக மக்களின் சமூகச் சிக்கலை இவ்வாறு பதிவு செய்கின்றார் இந்நாவலாசிரியர்.

> "வந்து பல வருஷங்களாச்சு பசங்களையும் படிக்க வெச்சாச்சு இங்கேயே அவங்க வேலை கெடைக்கணும்னு இப்படி அலையறோம் ஆனா என்ன மரியாதை நமக்குன்னு சட்டுன்னு பயம் வருது"(சு.ம.77)

எப்போது என்ன நடக்கும் எந்தச்சூழ்நிலையிலும் சனங்களுக்கும் ஆபத்து ஏற்படும் நிலைதான் உள்ளது என்பதை குறிப்பிடுகின்றார். "அவங்களுக்கு என்ன? நம்ம ஜனங்க நடமாடதுன்னதா கஷ்டம் ஜனங்கன்னு சுலவமா கண்டுகிடிச்சர்றாங்க டெய்ஸிகிட்ட சொல்லி விடலாம்"(சு.ம.ப.0) தன் சொந்த மாநிலத்தை விட்டு வேறொரு மாநிலத்தில் வாழும் சூழ்நிலையில் தங்களுக்குத் அன்றாடம் தேவைப்படும் அத்தியாவசியப்பொருட்களைக் கூட

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சென்று வாங்கிவர முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருப்பதை நாவலில் விவரிக்கின்றார் ஆசிரியர். “பொங்கல் வாழ்ந்துன்னு அனுப்ப வேண்டாம்னு உடனே எல்லோர்க்கும் எழுதிடு” (சு.ம.ப.95)

> “அங்கிருந்து நமக்கெல்லாம் பொங்கல் வாழ்த்தெல்லாம் வராம இருக்கிறது நல்லதுன்னு தோணுது இங்க வர்ற பொங்கல் வாழ்த்துக்களை வச்சிட்டு போஸ்ட் ஆபிஸ்ல இதையெல்லாம் வெச்சு நம்மாளுக யார்யார்னு சுலபமா கண்டுபிடிக்கப் பொறான்கன்னு ஒரு வதந்தி இருக்கு. நம்மள அடிக்கவோ ஒதைக்கவோ முடியும் அவங்களாலே” (சு.ம.ப.96)

தான் பிறந்து வளர்ந்த தாய் நாட்டில் வாழும் தன் உறவுகளுடன் தன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள முடியாத அவல நிலைக்கு உட்பட்டு வாழும் நிலைதான் மற்ற மாநிலத்தில் தம் மக்களும் நிகழக்கூடிய ஒன்றாக உள்ளது என்பதினை தன் நாவல் மூலம் புலப்படுத்துகின்றார் ஆசிரியர் சுப்ரபாரதிமணியன்.

பிறந்த நாட்டில் அகதியாக்கப்படும் நிலை

ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு செல்லும் பல வருடங்கள் அடர்ந்த நிலையில் பேசும் மொழியானது சாதி மாறும் போது தனது தாய் மொழியே சரியாக பேசமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. அச்சூழ்நிலையில் தனக்கு சொந்தமான இடமானாலும் அகதியாகவோ பார்க்கப்படும் ஏற்படுகின்றது.

> “எப்படி இருந்தாலும் என்னை நானே பரிசீலித்துக்கொள்ள இது நல்ல சந்தர்ப்பம் என்று தோன்றுகிறது. என தமிழ்தான் இவர்களுக்கு கேலிக்குரியதாக இருக்கிறது. கொச்சையாக நான் பேசுவதாக நினைக்கிறார்கள்”(சு.ம.ப.93)

தனக்கு சொந்தமான ஊராக மாநிலமாக இருந்தாலும் பேசும் மொழி கலப்படமாக மாறும்போது அந்த இடத்தில் அவர்கள் அகதிகளாகவே பார்க்கப்படுகின்றனர். தாங்கள் எந்த மாநிலத்திற்குரியவர் தன்னுடைய நாடு எது என்று தெரியாத ஒரு கேள்விக் குறியான வாழ்க்கை வாழும் சூழ்நிலையை சித்திரிக்கின்றார். “என்ன அகதியா பேரை பதிவு பண்ணிக்கப்போ”(சு.ம.ப.110) “இங்கிருந்து போறவங்கன்னா அவங்களுக்கு முகாம் இன்னொரு எடத்திலே இருக்கு. வெளியிருந்து வர்ரவங்க முகாம்தா இது நீ எந்த அகதி”(சு.ம.110)

சுடுமணல் நாவலில் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்களான மகேந்திரனும், அவனின் தந்தை வெங்கட்டய்யவும், தான் பிறந்த மண்ணிலேயே தாங்கள் பேசும் கலப்படமான மொழியை கண்டு அகதியாக்கப்படும் சூழ்நிலை அழகாக படம்பிடித்துக் காட்டுகின்றார் சுப்ரபாரதிமணியன்.

முடிவுரை

வேலை நிமித்தமாக அல்லது பிழைப்புத்தேடியோ வேறு மாநிலத்திற்கு செல்லும் சூழ்நிலையில் மக்களின் நிலை பரிதாபத்திற்குரிய ஆறாத சுடுமணலாகவே தொடரும் நிலையினை இந்நாவலாசிரியர் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

நூற்பாட்டியல்

1. சுப்ரபாரதிமணியன். *சுடுமணல்*, சென்னை, நியுசெஞ்சுரி புக்ஹவுஸ் வெளியீடு, 2016.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

Thoughts of Life Ethics in "Thirumanthiram"

பா.சீனிவாசன், உதவிப்பேராசிரியர் தமிழ்,
சுதர்சன் கல்வியியல் கல்லூரி, பெருமநாடு, புதுக்கோட்டை.

Abstract

The article gives details on the ethics enunciated by the holy treatise "Thirumanthiram". It is full of spiritual ideas and the union of the soul with the Almighty. Very noble and the secrets of leading good life is the notion of Thirumoolar and he noted down as "Thirumanthiram". Education, IQ, mental equilibrium, evils of jealousy, mentor advice, friendship, desire, truth, non gossip, immorality, family life, blessing, married life, intercourse, benevolent children and destiny are the main focus of "Thirumanthiram" and the present paper scrutinizes the noble ideas related to them.

Keywords: Thoughts of Life Ethics, *Thirumanthiram*, Thirumoolar

அறிமுகம்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்பது அவ்வை வாக்கு. அவ்வாறு பிறத்தலுக்கு அரிதான மானிடப்பிறவியில் பிறந்தவர்கள் சில நன்நெறிகளை பின்பற்ற வேண்டும். குறிக்கோள் இல்லாது கேட்டேன் என்ற நாவுக்கரசரின் வாக்கை அறிந்து இவ்வுலகில் குறிக்கோளுடன் வாழ்தல் வேண்டும். அவ்வாறு குறிக்கோளுடன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு பல நூல்கள் அறிஞர்கள் சான்றோர்கள் என உதவிகள் புரிந்தாலும் மூவாயிரம் வருடத்திற்கு முன்னர் திருமூலர் எழுதிய தமிழ் வேதம் என்றழைக்கப்படக்கூடிய திருமந்திரத்தில் இன்றய வாழ்விற்கு தேவையான செய்திகள் கண்ணாடி போல மிகத் தெளிவாக காணப்படுகின்றன. அச்செய்திகளை வெளிக் கொணர்தல் வேண்டும் என்பதே நோக்கம்.

வாழ்வியல் சிந்தனைகள்

கல்வி

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றார் அவ்வை. அவ்வளவு இன்றியமையாதது கல்வி. ஒருவரின் வாழ்க்கையை தீர்மானிக்கக்கூடியதும் நல் அறங்களை பெற வழி ஏற்படுத்தி தருவதும் தான் கல்வி ஆகும். ஆனால் இன்று கல்வி வியாபார பொருளாக வெறும் மதிப்பெண் பெறுவது மட்டுமே என்ற நிலையில் உள்ளது. இதனை உணர்ந்து தான் திருமூலர் உயிரினில் உள்ளத்தில் நிற்கின்ற கல்வி என்பதே நிலையானது என

"குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்
மதிப்பறி யாதவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகும் கல்வி கற்றேனே" (திருமந்திரம்-290)

இப்பாடலின் வழி எடுத்துரைக்கின்றார். நாலடியாரும் திருமூலரைப் போல கல்வி என்பது நெஞ்சத்தில் நிற்கும் வண்ணமாக அமைந்திருப்பதும் நடு நிலையாக இருப்பதும் தான் கல்வி என்று

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு". (நாலடி-131)

இப்பாடல் வழி அறியலாம். மனிதர்கள் இவ்வுலக நிகழ்வுகளை புறக்கண்ணால் பார்த்து சிற்றின்ப வாழ்கையை வாழ்கின்றனர். மனிதர்களுக்கு முன்றாவது கண் அகத்திலே உண்டு. அவ்அகத்துக் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம் ஆகும். அந்த அகத்துக்கண்ணால் பார்க்க உதவுக்கூடியது கல்வி. எனவே அக்கல்வியை பெறுங்கள் என

"கற்றி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றிவாளர் கருதி உரை செய்யும்
கற்றிக் காட்டக் கயலுள வாக்குமே." (திருமந்திரம்-291)

திருமூலர் எடுத்துரைக்கின்றார். இதே கருத்தினை நீதிச்சாரம்

"கண் இரண்டே யாவருக்கும் கற்றோருக்கு மூன்று வழி" (நீதிச்சாரம்-1991)

இப்பாடல் வழி கூறுவதிலிருந்து அறியலாம்.

கேள்வி

ஒருவன் எவ்வளவு கல்வி அறிவினை பெற்றாலும் கேள்வி ஞானத்தால் பெறக்கூடிய அறிவு என்பதே வாழ்க்கைக்கு துணை புரியும். அதனால் தான் ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்றார்கள். இதனை வள்ளுவர்

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை." (குறள்-411)

என்று கேள்விச் செல்வ சிறப்பை எடுத்துரைக்கின்றார். இதனை திருமூலர்

"அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும். (திருமந்திரம்-300)

என உலக நிகழ்வுகளை அழகாக உணர்த்தும் நீதி நூல்களை படித்து அறிவதை விட சிறந்த அறிஞர்கள் வாயிலாக கேட்டு உணர்தலே சிறந்தது என்பதோடு அதன் வழி ஞானத்தை அடையலாம் எனக் கூறுகின்றார்.

நடு நிலைமை

இன்றய காலகட்டத்தில் மனிதன் பின்பற்ற வேண்டியது நடுநிலைமை. மனதில் எவ்வித சலனும் ஏற்படாமல் மாறுபாடு இல்லாமல் உடைய மனிதனே சிறந்து விளங்குகின்றான்.நியாயமான வழியில் செல்பவர்களிடத்தே நன்மைகள் வந்து சேருகின்றன.நடுவு நிலையில் இருந்து விலகி செல்பவர்களுக்கு ஞானம் என்பது கிடைக்காது. நேர்மையை கடைப்பிடிப்பது நீதியை நிலைநாட்டுவது நடுவு நிலைமை ஆகும்.அவர்களுக்கு நரகம் இல்லை என்று

"நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்." (திருமந்திரம்-320)

என இப்பாடல் வழியாக விளக்கி கூறுவதை காணலாம். வள்ளுவர்

"தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.'' (குறள்-111)

பகுத்தறிவால் ஆராய்ந்து நல்லவற்றை அடைவதே நடுவு நிலைமை எனக் கூறுகின்றார்.

பொறையுடைமை

திருமூலர் பொறையுடைமை என்பதனை கமை என்று கூறுகின்றார். பிங்கல நிகண்டும் கமை என்பதற்கு "சமித்தலும் நோன்றலும் கமித்தலும் பொறுத்தல்" (பிங்கல - சூ - 1790) என பொறுமை என்ற பொருளையே கூறுகின்றது. திருமூலர் உலக போகங்களை பற்றி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இருப்பவர்கள் உள்ளத்தில் ஒரு பல்லி இருக்கின்றது. அது பொறாமை என்பதாகும். அப்பொறாமை கொண்டவர்களால் உலகத்தில் நல்ல நிகழ்வுகளை கவனிக்க முடியாது எவ்வாறெனில் நல்ல சுவையையும் நறுமணத்தையும் கூட நுகர முடியாதபடி ஆகும். இப்படி தடைபடுகின்ற மனத்தை காப்பது பொறுமையே என்று

"பற்றிநின் றார்நெஞ்சிற் பல்லிதான் ஒன்றுண்டு
தெற்றிக் கிடந்தது சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றாத தொழிலாவது மாகமை யாமே." (திருமந்திரம் - 539)

இப்பாடல் வழி கூறுகின்றார். கலித்தொகை "பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்" (கலி- 133-14) என்றும் சிறுபஞ்சமூலம் "பிழைத்த பொறுத்தல் பெருமை சிறுமை" (சிறுபஞ்சமூலம்-15) என்றும் விளக்கம் அளிக்கின்றன.

பெரியோரைத் துணைக்கோடல்

நம்முடைய மனமானது உலக நடப்புகளில் நாட்டம் செலுத்தி அதன் மூலம் இடர்பாடுகளில் சிக்கி வாடுகிறது. அதிலிருந்து விடுபட ஞானம் பெற்ற பெரியவர்களின் துணை கொண்டு இறை வழியில் மனதை திருப்புகள்

"தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்"
மாமனத் தங்கன்பு வைத்த திலையாகும்
போமிடத் தென்னொடும் போதுகண் டாயே." (திருமந்திரம் - 544)

என்பதோடு பெரியோரை துணையாக கொள்வது இன்பம் பயக்கும் எனவும் கூறுகின்றார். இதனைப் போன்று மூதுரையும் பெரியாரைத் துணைக் கொள்ள வேண்டும் என்பதை

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே-நல்லார்
இணங்கி இருப்பதுவும் நன்று". (மூதுரை - 8)

இப்பாடல் மூலம் எடுத்துரைக்கின்றது.

ஆசை

மனிதனின் அழிவிற்கு காரணம் ஆசை. ஆசையே அனைத்து தீமைகளுக்கும் காரணமாக அமைகின்றது. எதோ ஒன்றின் மீது ஆசை வைத்து அது நிறைவேறவில்லைனில் அதனால் துன்பம் தான் உண்டாகும். எனவே இறைவன் மீது கூட ஆசை வைக்காதீர்கள் என்று

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடும் ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசைப்படபட ஆய்வரும் துன்பங்கள்." (திருமந்திரம் - 2615)

ஆசையை விட்டால் ஆனந்தம் உண்டாகும் என இப்பாடல் வழி கூறுகின்றார். பிரபுலிங்க லீலையும்

"ஆசை அறுதல் வீட்டின்பம் நேரே அடையக் காரணமாம்
ஆசை அறுதல் அலதில்லைப் பலநூல் அனைத்தும் ஆய்ந்திடினும்
ஆசை உறுதல் என்கொண்டோ அந்தோ மனிதர் அறியேமே."

(பிரபுலிங்க லீலை-14) என்று துன்பங்களுக்கும் காரணம் ஆசை என்று கூறுகின்றது.

புறங் கூறாமை

திருமூலர் புறம் பேசுதல் என்பது அறிவற்ற செயல் என்கின்றார். அது சான்றோர்களுக்கு அழகானது அல்ல மாறாக இறைவனை மனதில் நிறுத்தி வழிபாடு செய்யுங்கள் என்று

"கருதலர் மாளக் கருவாயில் நின்ற
பொருதலைச் செய்வது புல் அறிவு ஆண்மை
தரு அலர் கேட்ட தனி உம்பர் ஆமே.'' (திருமந்திரம் -2514)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இப்பாடல் வழியாக கூறுகின்றார். வள்ளுவரும் புறம் பேசி வாழ்தலை விட இறத்தலே சிறந்தது என

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கள் தரும்." (குறள் -183)

இக்குறள் வழி கூறுவதை காணலாம்.

வாய்மை

உண்மையை பேச வேண்டும் என்பதை இறைவனோடு ஒப்பிட்டு கூறுகிறார். இறைவனானவன் பொய் திரியும் மனிதர்களிடம் நெருங்க மாட்டான் மாறாக உண்மை பேசுபவர்களிடத்து உயிரறக் கலந்து நிற்பான் என

"கை கலந்தானைக் கருத்தினுள் நந்தியை
மெய் கலந்தான் தன்னை வேத முதல்வன
பொய் ஒழிந்தார்க்கே புகல் இடம் ஆமே." (திருமந்திரம் - 2558)

கூறுவதை காணலாம். வள்ளுவப் பெருந்தகை

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்." (குறள் - 291)

கூடா ஒழுக்கம்

தம்மை யாரும் பார்க்கவில்லை என்று செய்யக் கூடாத செயல்களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். அனால் அது தவறு நம்மை இறைவன் கண்காணியாக இருந்து பார்த்து கொண்டிருக்கின்றான். எனவே அற நெறியில் செல்லுங்கள் என

"கண் காணி இல் என்று கள்ளம் பல செய்வார்
கண் காணி இல்லா இடம் இல்லை காணுங் கால்
கண் காணி கண்டார் களவு ஒழிந்தாரே. (திருமந்திரம் - 2029)

என்கின்றார். மேலும் மனிதன் தானே சிறையில் அகப்பட்டுக் கொள்கின்றான் எவ்வாறெனில் கன்னியின் வலையில், கல்வி அறிவு பெறாமல் போன்றவற்றினால் என்கின்றார். எனவே நல் ஒழுக்கத்தை கடைப்பிடியுங்கள் என

"கன்னி ஒரு சிறை கற்றோர் ஒரு சிறை
மன்னிய மா தவம் செய்வோர் ஒரு சிறை
என் இது ஈசன் இயல்பு அறியாரே." (திருமந்திரம் - 2035)

விளக்குகின்றார். இக்கருத்துக்களை வள்ளுவர்

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்." (குறள் -271)

ஒழுக்க சீலர்களைப் போல் ஏமாற்றுபவர்களை பஞ்சபூதங்களும் பார்த்து சிரிக்கும் என்கின்றார்.

அருள் உடைமை

எல்லா உயர்களிடத்தும் அன்போடும் பரிவோடும் நடக்க வேண்டும் . அவ்வாறு நடந்து கொள்பவர்களின் எண்ணம் செயல் எல்லாவற்றிலும் இறைவன் காணப்படுவான் மேலும் அவர்களுக்கு அறமும் தவமும் கிடைக்கும் என்பதை

"அவிழும் மனமும் எம் ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே" (திருமந்திரம் - 1619)

கூறுவதை காணலாம். அருளலால் மட்டுமே இறைவனை காண முடியும் என்பதை

"அருளானஆனந்தந்து ஆரமுது ஊட்டி
அருளால் என்நந்தி அதும்புகுந் தானே." (திருமந்திரம் - 1801)

இதன் அறியலாம். அருள் என்னும் ஒளியை பெற்றவர்கலுக்கு அறியாமை என்னும் துன்பம் ஏற்படாது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"ஐயம் இன்றி அறம் கடவாது அருள்
மெய்யின் நிறையின் வேள்வியும் வேண்டுமோ" (பன்னூற் பாடல் - 1010)

என பன்னூற் பாடல் திரட்டும் கூறுகிறது.

இல்வாழ்க்கை

திருமண வாளிவ்ர்க்கு பின் நிகழும் கற்பு வாழ்க்கை இல்லறம் ஆகும். தொல்காப்பியர் இல்லறம் பற்றி

"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே" (தொல் - செய்யுளியல் - 179)

என குறிப்பிடுகின்றார். அனால் திருமூலர் கற்ப்பு நெறியில் திருமணம் செய்பவனுக்கே மனைவி குழந்தைகள் செல்வம் சுற்றம் ஆகியன என்பதை "மதுவூர் குழலியும் மாடும் மனையும்" (திருமந்திரம் - 155) என்றும் "ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும" (திருமந்திரம் - 1619) என்றும் குறிப்பிடுகின்றது. மேலும் இல்வாழ்க்கை நடத்துபவன் இல்லறத்தான் என்றும் அவ்வாறு இல்லற வாழ்க்கை வாழ்பவனுக்கு பல இல்லற மாந்தர்கள் காணப்படுவர் அவர்களுள் தாயும், மகளும் முகியமானவ்ர்கள் அத்தாய் அம்மகளுக்கு இல்லற பேரின்ப உணர்வை கூறுவார் என்பதை

"மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனே" (திருமந்திரம் - 2944)

என்றும் அந்த தாய் வழியாகவே நல்ஒழுக்கங்களை அம்மகள் அறிந்து கொள்வாள் என்றும் கூறுகின்றார்.

கூடுங்காலம்

"மோகம்கெட முயங்கார் மூடர் மாந்தர்க்கே" (திருமந்திரம் - 1960)

இவ்வரிகள் வழி பெண்களின் ஆசைகளை தீர்க்காதவர்கள் மூடர்கள் என்ரு கூறும் அவர் ஆண்கள் பெண்களோடு வளர் பிறையின் முன் உள்ள ஆறு நாட்களும் தேய் பிறையின் உள்ள பின் ஐந்து நாட்களும் ஆக பதினொரு நாட்களும் பெண்களோடு கூடலாம் என

"ஆறு ஐந்து பன்னொன்றும் அன்றிச் சக மார்க்கம" (திருமந்திரம் - 1940)

என்றும் அவ்வாறு கூடுவதற்கு உரிய காலம் பொழுது விடிவதற்கு முன் உள்ள நான்கு முகூர்த்தம் (ஒரு முகூர்த்தம் ஒன்றை மணி நேரம்) ஆகும்.

"செய்யும் அளவில், திருநான் முகூர்த்தமே
எய்யும் கலை, காலம், இந்து பருதிகால" (திருமந்திரம் - 1941)

என்றும் எடுத்துரைக்கின்றார். சித்தர்கள் பூப்பெய்திய பதினாறு நாட்கள் கருக்கொள்ளும் காலம் என

"ஆண்மையென்று மங்கையர்கள் பூர்க்குங்கா
லன்றுமுதல் பதினாறு நாளுமந்த" (பதி.சி.நாடி சாத்திரம்-33)

என்று கூறுவதிலிருந்து அறியாலாம்.

மகட்பேறு

இல்வாழ்க்கையின் சிறப்பே மக்கட் செல்வம் ஆகும். அவ்வாறு நன்மை பயக்கும் மக்கட்பேறு உருவாதல் பற்றி திருமூலர்

"விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல் ஐந்தும் ஈர் ஐந்தொடு ஏறிப்
ஒழிந்த நுதல் உச்சி உள்ளே ஒளித்ததே." (திருமந்திரம் -455)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்று ஆண் பெண் கூடலின் பொது வ்ரிகின்ர யோனியில் சுக்கிலம் விழுந்து அவ்விதம் ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, பூதம் ஐந்து ஆகிய பதினைந்து கருவிகள் புதிய உயிரின் பருவுடலுக்கு காரணமாக அமைகின்றன என்கின்றார். இக்கருத்தினை

"விரையான விந்து விட கிருமியப்பா
விதமான நாதனுடன் சேர்ந்து கொண்டு
சிறையாக அதைசினைப் பிக்கும்பாரு" (அகத்தியர் குணவாடகம் - 1195)

என்று அகத்தியர் கூறுவதிலிருந்து அறியலாம்.

ஆயுட்காலம்

மனிதர்கள் தாம் நிலையாக வாழப்போவதாக எண்ணி செய்யக் கூடாத செயல்களை செய்து வருகின்றனர் ஆனால் மரணம் வரும் என்று அறியாமல் அவ்மரணம் வருவதை பற்றியும் திருமூலர்

"வைத்த கை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தமம் மிக்கிடில் ஓர் ஆறு திங்கள் ஆம்
அத்தம் மிகுத்து இட்டு இரட்டியது ஆயிடில" (திருமந்திரம் -770)

என தலை பருத்து தோன்றினால் ஆறு மாதங்களில் இறப்பு உண்டாகும் எனவும் கை இரண்டு பங்கு பருத்துக் காணப்பட்டால் ஒரு மாதத்திற்குள் இறப்பு உண்டாகும் எனவும் கூறுவதை அறியலாம்

முடிவு

இதன் வழி திருமூலர் மனித வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையையும் மிகத் தெளிவாக விளக்கி இவ்வுலகிற்கு நன்னெறியில் வாழ்வதற்கான பல அறிய கருத்துக்களை வழங்கி சென்றுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

துணை சென்ற நூல்கள்

1. திருமந்திரம் - கழக வெளியிடு .
2. நாலடியாா் - புலியூர்க் கேசிகன்இ செண்பகா பதிப்பகம்
3. நீதிச்சாரம் - திருநெல்வேலி தென்னிந்திய. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
4. குறள் - கலைஞர் உரை
5. தொல்காப்பியம் - புலியூர்க் கேசிகன்இ செண்பகா பதிப்பகம்
6. பிங்கல நிகண்டு - பக்கம் - 225
7. கலித்தொகை - புலியூர்க் கேசிகன்இ செண்பகா பதிப்பகம்
8. மூதுரை - ந.மு. வேஙகடசாமி நாட்டார், சாரதா பதிப்பகம்
9. சிறுபஞ்சமூலம் - பதினெண்கீழ்க்கணக்கு1, மாணவர் பதிப்பகம்
10. பிரபுலிங்க லீலை - பக்கம் - 225
11. பன்னூற் பாடல் திரட்டு -1010
12. பதினெண் சித்தர்கள் நாடி சாத்திரம் - கந்தசாமி முதலியார
13. அகத்தியர் குணவாடகம் - சி.பி. சாமி

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பௌத்த அறம்

Buddhist Ethics in *Pathinenkeelkanakku* Treatises

திருமதி. மு.சுகந்தி,
நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மேடவாக்கம், சென்னை.

Abstract

The research article tries to cull down the principles of life from the "Pathinenkeelkanakku" collections. Buddha is a great luminary of spiritual discipline and had great impact on very great nations of the world. He let his philosophisies to be written in the Pali language for to be his ethics to be with the lay men of his times and was decided by the scholors of those times to translate his 'Dhammapatha' in Tamil a very classic language of those times. Buddhist ethics are widely seen in the literary works of Tamil Literature. 'Pathinenkeelkanakku' is a rich literary source of morals from Buddhist philosophies. Hence, this article tries to bring forth the norms and life style portrayed in 'Pathinenkeelkanakku'.

Keywords: Buddhist Ethics, *Pathinenkeelkanakku*,Tamil Culture, Tamil Life

முன்னுரை

கி.பி. 3 முதல் 6 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலம் சங்கம் மருவிய காலம் ஆகும். இக்காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த ஆட்சி செய்த அரசா;களைப் பற்றி அறிய இலக்கிய ஆதாரங்களும் செப்பேடுகளும் சான்றாகின்றன. அதன்படி இக்காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்தவா்கள் களப்பிரா்கள் என்றறியப்படுகின்றது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வழி தமிழா்களிடம் இருந்த சிற்றின்பம் மதுவுண்ணல் பரத்தமை புலால் போன்ற பழக்க வழக்கங்களும் பெருகிக் காணப்பட்டது. இவைச் சமூக அங்கீகாரம் பெற்றுத் திகழ்ந்தன. இந்நிலையில் இருந்து அவா்களை முறைப்படுத்த ஓா் அறம் கற்பிக்கப்பட்டது. அதனடிப்படையில் தோன்றியவைகள் *பதினெண்கீழ்க்கணக்கு* நூல்கள் ஆகும். இவற்றுள் பதினொரு நூல்கள் நீதிநூல்கள் எனப்படுகின்றன.

அறம்

அறத்தை நிலைநாட்டும் பொருட்டும் அதனை வளா;த்துப் போற்றிப் பாதுகாத்து மானுடா;களின் வாழ்வை வளப்படுத்த எண்ணிறந்த இலக்கியங்கள் தோன்றின. அவ்வாறு தோன்றிய இலக்கியங்கள் அறத்தை நிலைநிறுத்தின. ஆறக்கருத்தை மையப்படுத்தி தோன்றிய நூல்களாவன *திருக்குறள், நாலடியார்; நான்மணிக்கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, பழமொழி நானூறு, ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது,* ஆகிய நூல்களாகும். இந்நூல்கள் அறத்தை வலியுறுத்துகின்றது. இது பௌத்தத் தத்துவங்களில் முதன்மையானதாகும்.

அறம் என்ற சொல் காலந்தோறும் பலவேறான பொருள்களில் வழங்கப்பட்ட போதிலும் அதற்கான பொருளை வரையறுக்க இயலாது. ஒரு மனிதன் ஒரு சமூகத்தைச் சோ;ந்து வாழ்வதற்கும் அல்லது தனியே நின்று தனிமனிதனாக இயங்குவதற்கும் அவனுடைய பண்புநலன்களை உருவாக்கிக் வைக்கும் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் செல்வாக்குகளுக்கும் நிலையங்களுக்கும்அறம் என்ற பெயா் வழங்கப்பட்டுள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அறம் - அகராதியின் பொருள்

அறம் என்பதற்கு நீதி தருமம் மதிப்பு விருந்தோம்பல் பெருந்தன்மை நல்வினை நோன்பு ஞானம் என்று பல பொருள்களில் அகராதிகள் அறத்திற்கு விளக்கம் தருகின்றன. தனிமனிதன் பிறருடன் தொடர்பு கொள்ளத் துணை செய்யும் பொது இயல்பான ஒழுக்கம் என்று Universal Dictionary அறத்திற்கு விளக்கம் தருகிறது.

பௌத்தம்

ஒரு மனிதன் இந்த நேரத்தில் இதைச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்வதும் ஒவ்வொரு நாளும் மனிதன் வாழ வேண்டிய முறையையும் வழிகளையும் கூறுவது பௌத்தம். வருணாசிரமத் தருமப் பாகுபாட்டாலும் பொருளாதாரம் சமூக நிலை ஆகிய ஏற்றத்தாழ்வுகள் நிறைந்திருந்த சமுதாயத்தை மாற்றவும் மானுட ஒருமை ஒத்திசைவு அறிவுப்பகிர்வு அறிவுப்பரவல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் பௌத்த நெறியானது புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது. அப்பௌத்த நெறியின் மூலம் நான்கு வகை உண்மைகள் கா;மவினைக் கோட்பாடு காரண காரியக் கோட்பாடு சீலங்கள் நிப்பானக் கோட்பாடு எனப் பல வழிகளில் பௌத்த அறம் நிலைநிறுத்தப்பட்டது. அவற்றுள் பஞ்ச சீலங்கள் பற்றிக் இக்கட்டுரையில் காணலாம்.

சீலங்கள்

சீலங்கள் மூன்று வகைப்படும். அவை 1. பஞ்சசீலம் 2;. அட்டசீலம 3. தசசீலம் ஆகும். இதில் பஞ்சசீலம் என்பது 1. ஏந்த உயிரையும் துன்புறுத்தவோ கொல்லவோ கூடாது. 2. பொய்யுரைக்கலாகாது. 3. பிறனில் விழையக்கூடாது. 4. திருடக்கூடாது. 5. கள்ளுண்ணாமை என்பனவாகும்.

கொல்லாமை

ஒரு மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்று பகுத்தறிந்து கூறப்பட்ட கருத்துக்கள் பௌத்தக் கோட்பாடுகளாகும். நாம் கொலைக்கும் தண்டனைக்கும் மரணத்திற்கும் அஞ்சுவதைப் போல மற்ற எல்லா உயிர்களும் அஞ்சும். நம்மை நம் உயிரை நேசிப்பது போல மற்றவர்களும் அவர்களையும் உயிரையும் நேசிக்கின்றனர். அந்த உயிர் ஒவ்வொருக்கும் உயர்வானதாகவும் விலை மதிப்பற்றதாகவும் விளங்குகிறது.. எப்படி நமது உயிர் நமக்குப் பெருமையுடையதோ அதே போல் தாம் மற்றவர்களின் உயிரும் என்றுணர்ந்த ஒருவர் எந்த உயிருக்கும் தீங்கிழைக்க மாட்டார் என்கிறது பௌத்தம்.

> "கொல்வது தான் அஞ்சான் வேண்டலும் கல்விக்கு
> அகன்ற இனம்புகு வானும" (திரி: 87)

என்ற திரிகடுகப் பாடல் எந்த உயிரையும் கொல்லுவதற்கு அஞ்சாதவனை மூடன் என்கிறது.

> "சார்பு இலோா;க்கு உறுகொலை எளிது" (மு.மொ.கா: 8: 10)

நட்பு இல்லாதவா;க்கு கொலை செய்வது எளிது என்கிறது *முதுமொழிக்காஞ்சி*. கொலை செய்தல் பாவம் என்றும் அது ஒருவனை நரகத்திற்கு அழைத்துச் செல்லும் என்று கருதிச் சான்றோா;கள் அத்தொழிலைச் செய்யார் என்கிறது *ஆசாரக்கோவை*. ஊயிர்க்கொலை பாவம் என்பதை பௌத்தம் வலியுறுத்துகிறது.

பொய்யாமை

பஞ்சசீலங்களில் இரண்டாவதாக வைக்கப்படுவது பொய்யாமை ஆகும். இதனை பௌத்த அறநெறியில் சம்மவாச்சா என்று குறிப்பிடுகிறது. இதற்குப் பொய்யுரைத்தல் புறம்கூறுதல் இன்னாச்சொல் பயனிலச்சொல் ஆகியவற்றைத் தவிா;த்து முழுநிறைவான சொற்களைப் பேசுதல் இனிமை பயன் ஆகியவற்றுடன் உரைப்பதாய் அமைதல் வேண்டும் என்பது பொருளாகும். சம்மவாச்சா பற்றித் திருக்குறளும்

> "பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீா;ந்த
> நன்மை பயக்கும் எனின்" (கு. 292)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பிறருக்கு குற்றமற்ற நன்மையை அளிக்குமானால் பொய்யான சொற்களும் கூட வாய்மை என்கிறார் வள்ளுவர். மேலும், குற்றமற்ற அறிவில் சிறந்தவர், பொய்கூறார் என்றும் பொய் பேசினால் நட்பு ஒழியும் என்றும் நான்மணிக்கடிகைப் பாடல்கள் வாய்மை இல்லாத காரணத்தினால் வரும் தீங்கு பற்றியும் கூறுகிறது.

"புகழ் செய்யும் பொய்யா விளக்கம" (நா. கடி : 24)

"தூா;ந்து ஒழியும் பொய்யிறந்த போழ்தே" (நா. கடி : 77)

மேலும் சிறுபஞ்சமூலமும் பொய் கூறுபவனின் நாக்கு அற்று விழும் என்றும் பொன்னைப் பெறுவதாயினும் பொய் கூறாமல் இருப்பது நன்மை பயக்கும் என்ற கருத்து இங்கு ஆராய்ந்து அறிதற்குரியது.

"கொடுங்கரி போவான் நாச்சாம" (சி.மூ : 8)

"பொய்யாமை பொன் பெறினும" (சி.மூ : 17)

பொய் கூறி வாழ்தல் என்பது தராது என்றும் அத்தகைய செயல் அறத்தன்மை உடையது அன்று என்றும் பௌத்தம் விளக்கியுள்ளது.

பிறனில் விழையாமை ஐவகைச் சீலங்களில் மூன்றாவதாக வைக்கக் கூடியதாகும். ஆண் பெண் இருபாலருக்கும் கற்புறுதி காக்க வேண்டியதின் இன்றியமையாமையை இவ்வறம் போதிக்கிறது. இக்கருத்தினை வலியுறுத்தி

"எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல" (கு: 144)

"வருமனை பாா;த்திருந்து ஊன் இன்னா" (இன் நா: 36)

என்னும் இப்பாடலில் பிறா் மனைவியை அடைய விரும்புவரின் வீட்டில் உணவு கொள்ளுதல் துன்பம் தரும் என்றும்

"ஓவாதான் கோலம் ஒரு பொழுதும் காவாதான்
யாா் யாா் பிறா்மனையாள் பள்ளிட்டு - இவ்ஐவரையும்
சாரார் பகைபோல் கலித்து" (சி. மூ. 40)

என்னும் பாடலானது பிறா் மனைவியைப் பகைவா் போல் எண்ணி விலகுதல் வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறது.

பிறா் பொருள் கவரல்

தனக்கென்றுத் தானமாகத் தரப்படாத பிறருடைய பொருளைக் கவா;தல் பற்றிக் கூறுகிறது.ஆள் வலிமையாலும் தோள் வலிமையாலும் பிறா; பொருளைக் கவா;தல் பழிச்செயலாகும்.

"பிறன்கைப் பொருள் வெளவான் வாழ்தல் இனி" (இனி நா : 21)

"கவ்வித் தாம் கொண்டு தாம் கொண்டது காமுற்று
வவ்வாா் விடுதல்" (இனி நா : 36)

பிறா் பொருளைக் கவராமலும் தாம் விரும்பியப் பொருளை அடைய எண்ணி அதனைக் கவரும் தீய செயலைச் செய்யாமலும் இருந்தால் வாழ்வு இனிமையைத் தரும் என்று நீதி இலக்கியங்கள் அறிவுறுத்துகின்றன.

கள்ளுண்ணாமை

ஒரு மனிதனின் வீழ்ச்சிக்கான காரணங்களைப் பற்றிக் கூறுகையில் மதுவருந்துதல் சூதாடல் போன்ற பழக்கங்கள் உடையவா்கள் வீழ்ச்சி அடைகிறாா்கள் என்பது புத்த தம்மத்தின் அடிப்படைச் சிந்தனைகளாகும்.

"கள்ளுண்பான் கூறும் கருமிபொருள் இன" (இன். நா : 35)

"கள்ளில்லா மூதூா் களிகட்கு இன்னா" (இன். நா : 9)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்பது கள் அருந்துபவனின் பேச்சு துன்பம் தரும் என்றும் அவர்களுக்குக் கள் இல்லாத ஊர் துன்பம் தரும் என்றும் கள்ளுண்பவர்களின் நிலையை இன்னா நாற்பது விளக்குகிறது.

கள் மனமயக்கம் தருவது. சீலத்தைத் தவறச் செய்வது. பகுத்தறியும் அறிவைக் கெடுப்பது போன்ற பல தீய செயல்களுக்குக் காரணமாக இருப்பதால் பௌத்தம் அத்தவறைக் கண்டிக்கிறது.

முடிவுரை

களப்பிரர் காலம் பல சமயங்களின் தொகுப்பாக விளங்குகிறது. தமிழகமும் தமிழர் பண்பாடும் களப்பிரர்களால் மாற்றம் பெற்றிருப்பதை அவர்கள் காலத்து நீதி நூல்கள் ஒழுக்கம் சார்ந்து எழுதியிருப்பதைக் கொண்டு உணர முடிகிறது. தன்னைப் போல் பிறரை நினை என்ற கூற்றுப்படி உயிர்க்கொலை கூடாது என்பதை வலியுறுத்துகிறது. மேலும், நீதி இலக்கியமானது மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை அறங்களாக பஞ்சசீலங்களைக் கூறுகிறது. அதோடு அன்பு ஒழுக்கம் குறித்து பௌத்த அறமானது நீதி இலக்கியங்கள் வழி உணர்த்துகிறது.

நூற்பாட்டியல்

1. இரா.கனகசுப்புரத்தினம் - 'திருக்குறள்', அறிவுநிதி பதிப்பகம், சென்னை, 1996.
2. கலைமாமணி . முனைவர் வி. முத்து. பேரா. இரா. ஏழுமலை. "பன்முக நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்" ஹேமப்பிரியா பதிப்பகம் திண்டிவனம். 2018.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நற்றிணையின் அகத்துறை காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்

Thoughts of Life Shown in Nattrinai's 'Akatthurai'

முனைவர். இரா. சுகந்தி ஞானம்மாள், இணைப் பேராசிரியர் (பணிநிறைவு),
கோ.வெ.நா.கல்லூரி, கோவில்பட்டி

Abstract

The present paper traces the life values as shown in the literary work "Nattrinai". In it 'Akatthurai' shows the eminence of life and the values of the classic Tamil people. In Sangam Literature, nearly 1862 songs were indicating the internal life; that is the benevolent moral life. Tamil people considered love of two types on is Love before marriage "Kalava Kaadal" and the second is love life after the success of marriage "Karpu Kaadal". The love events happened in their love is called as 'Thurai'; it is bounded to the time, place and action. Hence, the purpose of the article is to decipher the thoughts of life from Nattrinai's 'Mugampugukilavi' and 'Manaimarutchi'.

Keywords: Thoughts of Life, Life shown in Nattrinai's 'Akatthurai'

முன்னுரை

தமிழ் மக்களின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக்காட்டுகிறது.சங்க கால மக்கள் வாழ்க்கையை, அகமெனவும் புறமெனவும் பிரித்து, சிறப்பாக வாழ்ந்திருந்தனர். சங்க இலக்கியத்தின் 2381 பாடல்களில் 1862 பாடல்கள் அகத்திணையைச் சார்ந்தவையாகவிருப்பதால் அக்கால மக்கள் அகவொழுக்கத்தில் சிறந்திருந்தமை புலனாகின்றது. மக்கள் இவ்வகவொழுக்கத்தினைக் களவு, கற்பு என இரு நிலைகளில் பின்பற்றி வந்தனர். ஒரு தலைவனும் தலைவியும் நல்லூழின் பயனாக அன்பினால் பிணைக்கப்பட்டு, உலகத்தார் அறியாது மறைந்தொழுகுதல் "களவு" ஆகும். தலைவனும் தலைவியும் திருமணம் புரிந்து இல்லற வாழ்க்கையில் ஈடுபடுவது "கற்பு" எனப்படும். களவிலும் கற்பிலும் தொடர்ச்சியாக நிகழும் நிகழ்வுகள் "துறை"யாகும். இத்துறைகளில் இடம்,காலம்,சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்ப அகமாந்தர்கள் பேசுவதைக் "கூற்று" எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் இவ்வகையில் நற்றிணையில் இடம் பெற்றுள்ள "முகம்புகு கிளவி", "மனைமருட்சி" ஆகிய இரு அகத்துறைகளில் தலைவி, தோழி, நற்றாய் ஆகியோரின் கூற்றுக்களையும் அவற்றின்வழி பெறப்பட்ட வாழ்வியல் சிந்தனைகளையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

முகம்புகு கிளவி - துறை விளக்கம்

சூழ்நிலை. இடம், காலம் ஆகியனவற்றின் காரணமாகதன் மனத்தில் கருதிய பொருளைக் கேட்போர் மனமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் கூறுவதே முகம்புகு கிளவியாகும்.

''முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்'' (குறள் 708)

எனும் குறட்பாவிற்கேற்ப உள்ளத்து உணர்வுகளைப் பிரதிபலிப்பது முகமேயாதலால் இத்துறை "முகம்புகு கிளவி'' எனப்பட்டது. அகத்தின் உணரவுகள் முகத்தில் தெரிவதால்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மெய்ப்பாடு இத்துறைக்கு இன்றியமையாததாகின்றது. "புகுதல்" என்பதற்குத் தலைவி நோக்கிய நோக்கெதிர் தான் சென்று புகுதல் என்றும் "முகம்"- என்பதற்கு அங்ஙனம் தான் புகுதற்கிடமாகிய நோக்கு என்றும் நற்றிணையின் உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி பொருள் கூறுவார் (நற் .220 உரை விளக்கம்)

தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் எட்டனுள் (தொல் 1197) முகம்புகு கிளவி எனும் துறையில் எள்ளல், பேதைமையின் பொருட்டு எழுந்த நகை, தறுகண்ணினால் வந்த பெருமிதம், வருத்தத்தினால் அமைந்த இளிவரல் மற்றும் குறைவுபட்ட அறிவாற்றலினால் வெளிப்பட்ட வெகுளி ஆகியனவற்றின் வழி உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தோழியின் எள்ளல் - தலைவனது அறியாமை

முகம்புகு கிளவி சார்ந்த ஆறுநற்றிணைப்பாடல்களில், தலைவி தோழி ஆகிய இவர்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களையும் அவை உளவியல் வகையில் தீர்க்கப்படுவதையும் பாடலாசிரியர்கள் தெளிவாகக் காட்டியுள்ளனர். இவற்றுள் இரு பாடல்கள் (129, 245) நகையினையும் இரு பாடல்கள் (334, 392) பெருமிதத்தையும் ஒரு பாடல் இளிவரலையும் ̇(220) இன்னொரு பாடல் வெகுளியையும் (244) வெளிப்படுத்துகின்றன. இராமாயணத்தில் அனுமனைச்சொல்லின் செல்வன் எனப்போற்றுவதைப் போல சங்க இலக்கியத்தில் இடம்பெறும் தோழியைச் சொல்லின் செல்வி என்றுசிறப்பிக்கலாம்.

களவிலும் கற்பிலும் தலைவனுடைய செயல்பாடுகளுள் சில, தலைவிக்கு இன்பத்தையும சில துன்பத்தையும் தருகின்றன. துன்பமான சூழலை எதிர் கொள்ள தலைவிக்குத் தோழி உதவுகிறாள். களவு காலத்தில், தலைவன் தலைவியை முதற்கண் கண்டு, அவள்மீது காதல் கொள்கிறான். அவளை மீண்டும் காணாததினால் தனக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தலைவியிடம் தெரியப்படுத்த அவளது தோழியை வேண்டுகிறான். அவள் தலைவியிடம் சென்று," நீயே அவனிடம் காதல் மயக்கம் கொண்டிருக்க, இதனையறியாத அவன், உன்னிடம் தான் மயங்கிருப்பதாகத் தன் அறியாமையினால் கூறுவது எனக்கு நகைப்பைத் தருகிறது" என்று கூறுவதன்வழி தலைவனின் மீது தலைவிக்கு ஒரு பரிவை ஏற்படுத்துகின்றாள் (245) என்பதை அல்லங்கீரனார் தம் பாடலில் பதிவு செய்கிறார். துலைவி அவன் மீது கொண்ட காதலை அறியாத நிலையில் தலைவன் வருந்துகிறான்.

கற்புக் காலத்தில் தன் குடும்ப மேம்பாட்டிற்குப் பொருளீட்டுவதற்காகத் தலைவியைப் பிரிய எண்ணியதலைவன், இதனைப் பக்குவமாகத் தலைவியிடம் கூறத் அவளுடைய தோழியைப் பணிக்கின்றான். அவனுடனிருக்கும்போதே இடி, மின்னலுக்கு அஞ்சுபவள் அவள் தனித்திருக்கும் இரவில் பெய்யும் இடிக்கும் மின்னலுக்கும் அஞ்சாமல் இருப்பாளோ?, "ஒருநாள் கழியினும் உயிர்வேறுபடூஉம்" தன்மை கொண்டவள் அவன் வினை முடிந்து திரும்பி வரும்வரை உயிருடன் இருப்பாள் என்று அவன் நினைப்பது நகைப்பைத்தான் தருகிறது. (129). தான் தலைவியை விட்டுப் பிரிந்ததும் தலைவி தன் இன்னுயிர் துறப்பாள் என்பதை அறிந்திருந்தும் அவளைப் பிரிய நினைப்பது அவனது அறியாமை உணர்த்துகிறது. எனினும் தலைவன் வரும்வரை மனையில் ஆற்றியிருப்பது பெண்களின் கடப்பாடு என்பதைத் தலைவி உணரும் வகையில் எடுத்துரைக்கிறாள். இவ்விரு சூழ்நிலைகளிலும் தலைவன் தலைவியின் குணங்களை அறிநதிருந்தும் அறியாதது போல் நடக்கும் தன்மையினைத் தோழி எள்ளி நகையாடியும் அதே சமயத்தில் தலைவிக்குரிய கடமையையும் எடுத்துரைக்கிறாள்.

தலைவனின் இசைமை

களவினொழுகும் தலைவன் பகற்குறி இடையீடு பட்டுத் தோழியிடம் இரவுக்குறியை வேண்டுகிறான். ஆனால் குறிஞ்சி நிலத்தின் இரவுப் பொழுதில் உண்டாகும் இடி மின்னலால் ஏற்படும் அச்சம் மற்றும்வழியில் தலைவனுக்கு ஏற்படும் ஏதம் காரணமாகத் உயிர் நிலை என்ன ஆகுமோ எனக் கலங்கும் தலைவி இரவுக்குறிக்கு உடன்பட மறுக்கிறாள்.இவ்வருத்தத்தைப் போக்கவே தலைவன் இரவிலே வருவான் என்பதைத்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தலைவியிடம்தெரிவிக்க வந்த தோழி அங்கே ஆயம் இருத்தலைக்கண்டு மலைச் சாரலில் மந்தி ஒன்று அருவியில் நீராடி விட்டு மூங்கிலில் ஏறி ஊசலாடிய பின்னர் கடுவனோடு இன்பம் துய்க்கும் என்று அவளிடம் கூறி கண்ணசைத்து சைகையில் வெளிப்படுத்துகிறாள். மந்தி கடுவனுடன் மகிழுவதைப் போல தலைவியும் தலைவனோடு மகிழ்வாள் என்று குறிப்பாக உணர்த்துகின்றாள். இதனால் தோழி தலைவனுடைய உரனையும் பெருமையையும் பெருமிதத்தோடு எடுத்துரைக்கிறாள். (334)

பகற்பொழுதிலே தலைவியோடு இன்பம் நுகர்ந்த தலைவன் இடையீடு ஏற்பட்டதால் தோழியிடம் இரவுக் குறிக்கு வேண்டுகிறான். துலைவி, தலைவனைக் காணாது தவித்தாலும் அவன் இரவிலே வருவதை விரும்பவில்லை. அவளைக் காணாமல் மனம் கலங்கி, தாங்கள் பகலிலே இன்பம் துய்த்த இடத்திற்குத் தினம் வந்து வறிதே திரும்பும் தலைவனின் ஆதங்க நிலையினை அவளுக்கு எடுத்துக்கூறி, அவள் மனமிசைந்தால் இரவுப்பொழுதிலே அவனை மனையகத்தே அழைத்து வருவதாகத் தோழி கூறுவதன் மூலம் தலைவி படும் துன்பமும் தீரும் என்பது உணர்த்தப்படுகின்றது

பரத்தையிடமிருந்து திரும்பி வந்த தலைவனுக்குத் தோழி, தானே வாயில் நேர்கிறாள். ஆனால் தலைவியோ அவன் மீதிருந்த சினம் தணியாமல் இல்லத்திற்குள் அவனை அனுமதிக்கவில்லை. இச்சூழலில் அங்கு வந்த தோழி, களவுக் காலத்தில் தலைவன் கூறிய சூளுரையை நம்பாமல் தலைவி இகழ, அவனோ விரைவில் வந்து அவளை மணம் முடித்தபின் அவர் பொய்யுரையாரென அவள் தெளிந்ததை எடுத்துரைத்து, இத்தன்மையடைய தலைவன் முன்றிலில் நிற்கிறான். அவனை ஏற்றுக்கொள்ளுமாறு தலைவியிடம் தோழி வேண்டுவதாகமதுரை மருதனிளநாகனார்தன் பாடலில். (386) பதிவு செய்கிறார்.

தலைவியின் கற்பு நிலை

யானைக்கும் அடி சறுக்கும் என்பதைப் போல சில சமயத்தில் தோழியின் உள்ளமும் தடுமாறுவதைச் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சில பொழுதுகளில் தலைவன், தலைவியை மணம் செய்யத் தாமதிக்கும் போது அதனால் தலைவி படும் வருத்தத்தைத் தோழி காணப் பொறாமல் அவளுடைய தமரிடம் கூறியாவது இவளின் திருமணத்தை நடத்திடவேண்டும் எனக் கருதுகிறாள். இதனையறிந்த தலைவி அறத்தின்பாற்பட்டு இப்பசலை நோய்க்குக் காரணமான தலைவனிடம் கூறியோ அல்லது அணங்கினால் இந்நோய் தனக்கு ஏற்பட்டதாகக் கருதி வெறியாட்டயர எண்ணும் தன் அன்னையிடம் தெரிவிக்கவோ செய்யாமல் பயனில்லாத தன் தமரிடம் கூற எண்ணும் தோழியின் மீது வெகுளி கொள்கிறாள். (244) தலைவி தோழியின் மீது கொண்ட வெறுப்பினால் எழுந்த வெகுளியின் வழி தலைவி அறத்தொடு நிற்றல் பாங்கினைக் கூற்றங்குமரனார் தன்பாடலில் விளக்குகிறார்.

தலைவனின் துயரம்

தான் காதலித்த பெண்ணைத் தனக்கு மணம் செய்விக்க அவளுடைய தமர் மறுத்ததைக் கேட்ட தலைமகன் ஒருவன் அவளது தோழியிடம் குறை இரக்கின்றான். இக்குறை தீரவில்லையென்றால் தான் பனை மடலூர்வதாகக் கூறுகிறான். இதனைத் தோழி தலைவியிடம் அவன் மடலேறினால் ஊரார் உன்னைத்தான் அலர் தூற்றுவர். அந்த ஊராரும் எப்படி பட்டவர் என்றால் நான் உன்னுடைய தோழி என அறியாது குறுமகட்கு அயலாமென்று கூறுவதிலிருந்து (220) அவருடைய உலகியல்பு அறியாத சால்பு தெரிகிறது. இது எனக்குவியப்பைத்தான் அளிக்கிறது என்று கூறி தலைவியைத் தலைவனுடைய கருத்திற்கு உடன்பட வைக்கிறாள். தலைவன் தலைவி ஆகியோரின் துன்பத்தின் அடிப்படையில் தோழிக்குத் தோன்றிய இளிவரல் எனும் மெய்ப்பாட்டின் அடிப்படையில் இப்பாடல் உருவாக்கப்பட்டுள்ளது.

முகம்புகு கிளவி எனும் துறையில் களவு காலத்தில் தலைவன் தன் காதலைத் தலைவிக்குத் தெரிவிக்கவும் கற்பு நெறியில் வாழும் காதல் கணவன் பொருளீட்டுவதற்காக தான் பிரிவதை மனைவிக்கு உணர்த்தவும் தோழியை இரக்கிறான். தலைவிக்குத் துன்பத்தை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உருவாக்கும் இச்சூழலில் தலைவனுக்குச் சாதகமாக தலைவியை மாற்றும் வகையில் அமைந்த தோழிக் கூற்றின் மாண்பை இத்துறை விளக்குகிறது.

மனை மருட்சி - துறை விளக்கம்

உடன்போக்கு சென்ற தன் மகளுக்காக மனையில் நற்றாய் மருண்டு புலம்புதல் மனை மருட்சியாகும். இத்துறை மகளைப் பெற்ற தாய் தன்னை பிரிந்து தான் விரும்பிய காதலனுடன் உடன் போக்கு சென்ற தலைவியை நினைத்து மனம் வருந்துதலையும் அவளுடைய அறிவையும் எண்ணி வியப்பெய்தியதையும் ஒருங்கே பாலை நிலப் பின்னணியில் விளக்குகிறது. இத்துறையில் அமைந்த ஆறு பாடல்கள் உடன்போக்கு சென்ற தலைவியின் தாயின் மன நிலையினை விளக்கிக் காட்டுவதுடன் வாழ்வின் எதார்த்த தன்மையினையும் வெளிப்படுத்துகின்றன. இத்துறைப்பாடல்களை ஆய்ந்ததின் வழி அக்காலத்தில் இருந்த மகளிரின் நிலையை அறியமுடிகின்றது.

உடன் போக்கு ஓர் அறச் செயல்

பெற்றோரின் இசைவு கிட்டாத போதும் நொதுமலர் பெண் கேட்டு வரும் நிலையிலும் தலைவன் தலைவி உடன்போக்கு எனும் அறச்செயலை மேற்கொள்கின்றனர். மகளே தன் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்ததும் தவறேதுமில்லை என்று தலைவியின் தாய் கருதுகிறாள். (66) இது ஊரோடு ஒழுகுதல் என்ற பண்பினை எடுத்துக்காட்டுகிறது எனினும் ஒரு தாய் தன்னுடைய மகள் விளையாடிய பொருட்களைக் காணும் போது மனம் கலங்குகிறாள். பிறன் மனை மாதர் அவளிடம் வந்து உலகியல்பினை எடுத்துக்கூறி அவளை ஆறுதல்படுத்துவதைப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. (184)

தலைவியின் இளமை- தாயின் வியப்பு

நற்றாய்தானும் செவிலியும்நெய் கலந்த பாற் சோற்றினைக் கலத்தில் பெய்து தலைவிக்கு ஊட்டினும் அதனை உண்ணாளாய் விளையாட்டை விரும்பும் தன்மையடையாளாய் நேற்று வரை இருந்தவள் “கொண்ட கொழுநன்குடிவறன் உற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள் பொழுதுமறுத்து உண்ணும் சிறுமதுகையளாய் ''ஆவதற்கு அறிவும் ஆசாரமும் எங்ஙனம் பெற்றாள் என வியந்து போகிறாள். (110)

தலைவியின் பேதைமை தாயின் கலக்கம்

காற்றினால் நெகிழும் ஆடையையும், விரைந்து செல்லும் வேகத்தால் கழலும் அணிகலன்களைச் சரிசெய்யவும் அறியாத பேதைமை கொண்டதன்மகள் எங்ஙனம் தலைமகனோடு சுரத்தின் வழியே சென்றாள் எனத் தாய் மனம் கலங்குகிறாள் (66) ஈற்று ஆ வயலைக்கொடியை தின்றழித்ததற்காக வயிறலைத்து அழுத தன் குறுமகளைப் போல பொய்மொழிகள் பல கூறித, ஒன்றுமறியாததன் மகளை அழைத்துச் சென்ற ஏதிலாளனை நினைத்து தன் வயிற்றில் அலைத்துப் புலம்ப வைத்துவிட்டானே என்று தவிக்கும் தாயை ஒரு பாடல் விளக்க, (179) பிள்ளைமை தன்மை கொண்ட தன் மகள் ஏதிலாளனது மாய இன்பத்தை நன்றெனக் கொண்டு சென்றபின் அவனத பொய்மையை அறிய நேர்ந்தால் அவளின் நிலை என்னாகுமோ என மனம் கலங்கித் தவிக்கும் தாயைப் பிரிதொரு பாடல் எடுத்துக் காட்டுகின்றது. அறிவார்ந்த தன் மகளது அன்பான காதலனே என்றாலும் அவளை ஏமாற்றியவனை என்பதால் அவனை “ஏதிலாளன்” என்று குறிப்பிடுவதால் அவன்மீது கொண்ட கோபம் புலனாகிறது.

தலைமகன் காதலும் தாயின் சாபமும்

ஏதுமறியாது கள்ளங்கபடற்று வாழ்ந்த தன் மகளைக் காதல் எனும் பொய்மொழியினைக் கூறி ஏமாற்றியவனை ‘ஏதிலாளன்’ எனக்கூறியும் அவள் மனமடங்காது, மகளைப் பிரிந்து தான் வருந்துவதைப் போல அவனைப் பெற்ற தாயும் வருந்த வேண்டும் என்று சாபமிடுகிறாள். இதன்வழி இந்தக் காலத்தைப் போலவே பெண்கள் சாபமிடுதல் சங்க காலத்திலேயே இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நிறைவுரை

தோழியின் சொல்லாற்றலையும் நற்றாயின் மனவியல்பையும் முறையே முகம்புகு கிளவியும் மனை மருட்சி ஆகிய துறைகள் விளக்குகின்றன ஆயத்தாரோடு இருந்த தலைவியோடு பேச இயலாத தோழி கண்ணசைத்தும் சைகை மொழியிலும் தன் கருத்தைத் தெரிவிக்கிறாள் தலைவன்மீது எதிர்மறையான விமர்சனத்தைக் கூறித் தலைவியின் மனத்தில் அவனைக் குறித்து நேர்மறையான கருத்துக்களைத் தோழி உருவாக்குகிறாள். உள்ளுறையின் மூலம் தலைவியின் இயல்பு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. உடன்போக்கு ஓர் அறச்செயல். இதனை நியாயம் என நற்றாய் ஏற்றுக்கொள்கிறாள் தன்னுடைய மகள் இளமைத் தன்மை கொண்டவள். தலைவன் கூறிய பொய்ம்மொழிகளால் ஏமாறி அவனுடன் சென்றிருப்பாளோ அல்லது அவ்வாறு சென்றபின் அச்செயலுக்காக மனம் வருந்துவாளோ என மனம் கலங்குகிறாள். பெண்டிர் ஒருவருக்கொருவர் சாபமிடுதல் அக்காலந்தொட்டு வழக்காக இருந்து வந்துள்ளது.

பயன்பட்ட நூல்கள்

1. திருக்குறள்.
2. தொல்காப்பியம் உரையாசிரியர் முனைவர். ச.வே. சுபபிலமணியன் மணிவாசகர் பதிப்பகம், 2006.
3. நற்றிணை உரையாசிரியர் பின்னத்தூர் திரு. ஆ. நாராயணசாமி அய்யர், கழக வெயியீடு, 2007.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தமிழ் வளர்த்த வீரமாமுனிவர்

Veeramamunivar Raised by Tamil

முனைவர் இரா. ச. சுகிர்தா பஸ்மத், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோவில் - 4.

Abstract

The research article tries to elaborate the facts related to the eminent poet Veeramamunivar, a foreigner who got inspired by Tamil and lived like a Tamil and made him a master of Tamil genres and writing. Tamil created him to develop her that must be the truth. His service to Tamil cannot be spoken in words. Understanding his story is a chronicle ever remembering because of his service done to the society and culture through Tamil. Hence, this article draws out the facts regarding his life and literary merit.

Keywords: Veeramamunivar, Tamil

தமிழிலக்கிய வரலாற்றில் தமிழர் தம் பண்பாட்டு வரலாற்றில் சமயமும் தமிழும் கொண்டுள்ள தொடர்பு முதன்மையானது; முழுமையானது என்று கூட கூறலாம். சைவ வைணவமாகட்டும், சமண பௌத்தமாகட்டும், இஸ்லாம் கிறிஸ்தவமாகட்டும் ஒவ்வொன்றும் தத்தம் சமயக் கருத்துக்களை விதைக்க, தமிழ் இலக்கியத்தை வடிகாலாக்கின. விளைந்தவை இலக்கிய வயலைச் செழுமைப்படுத்தின. அந்த வகையில் கிறிஸ்தவத்திற்கும் தமிழுக்கும் உரிய உறவு பிரிக்க இயலாதது. கிறிஸ்தவர் தம் தமிழ்த்தொண்டு என்றதும் அனைவர் நினைவிற்கும் வரும் உன்னத பேறு பெற்றவர் தமிழ் முனிவர் எனச் செல்லமாக அழைக்கப் பெறும் வீரமாமுனிவர் ஆவார்.

வீரமாமுனிவரும் தமிழும் கொண்டிருந்த உறவு உன்னதமானது; உயர்வானது; ஆழமானது; அகலமானது. இது தொப்புள் கொடி உறவு போன்றது. “தாய் தன் பிள்ளைக்குப் புத்தாடையுடுத்தி அழகு பார்ப்பது போல், வீரமாமுனிவர் பாநடையும், உரைநடையுமாகப் பல்வேறு அணிகலன்களைத் தமது தமிழ்த்தாய்க்கு அணிவித்து மகிழ்கின்றார். தன் தாயின் புகழைத் தரணியெல்லாம் அறியச் செய்கின்றார். தமிழ்க்குடி மகனாய்த் தான் மாறியதோடு நில்லாமல், தான் வணங்கும் அன்னை மரியாளையும் ஒரு தமிழ்ப் பெண்ணாகவே பார்க்கிறார். தன்னுடைய படைப்புகள் அனைத்திலும் தமிழன்னையைப் புதுப்புது வடிவங்களில் கண்டு மகிழ்கின்றார். பிறரையும் அவ்வாறே கண்டு இரசிக்குமாறு செய்கின்றார்” எனும் அ.லூர்தின் கருத்து இதற்கு மேலும் வலு சேர்க்கிறது. இத்தாலி நாட்டில் இயேசு சபைத் துறவியான வீரமாமுனிவரின் இளமைகால வரலாறு குறித்து பெஸ் அடிகளார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். அவரது கூற்றுப்படி, வீரமாமுனிவர் இத்தாலி நாட்டில், வெனிஸ் மாநிலத்தில், மாந்துவா மாவட்டம் காஸ்திகிலியோன் எனும் ஊரில் 1680-ஆம் ஆண்டு நவம்பர் 8 - ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தை கொண்டல்போ பெஸ்கி. தாய் எலிசபெத். இவரது இயற்பெயர் கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். தொடக்கக் கல்வியைத் தமது ஊரிலும் இலக்கியக் கல்வியை உரோமை நகரிலும் கற்றவர், இயேசு சபைக் குருவாக விரும்பி, 1698-ஆம் ஆண்டு அக்டோபர் 21-ஆம் நாள் நொவலேரியா என்னுமிடத்திலிருந்த இயேசு சபையாரின் இளங்குரு மடத்தில் சேர்ந்தார்.

பதினோராண்டுகள் மறைக்கல்விப் பயிற்சியினூடே இத்தாலி, பிரெஞ்சு, போர்ச்சுகீசு, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றுப் பன்மொழி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வித்தகரானார். தொடர்ந்து 1701முதல் 1703 வரை தத்துவம் பயின்றார். பின்னர் 1706 முதல் 1710 வரை இறையியல் கற்க அனுப்பப் பட்டார். 1709-ல் இயேசு சபைக்குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட முனிவர் 1710-ஆம் ஆண்டிலும் தமது நான்காம் ஆண்டு இறையியல் படிப்பைத் தொடர்ந்தார்.

தமிழ்நாட்டில் பணிபுரியும் ஆசை கொண்ட வீரமாமுனிவர் தமது மேலாளரின் அனுமதியுடன் 1710-ல் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரிலிருந்து கோவா நோக்கி வந்த கப்பலில் புறப்பட்டார். கோவா-வில் இறங்கிய முனிவர் அங்கிருந்து அம்பலக்காடு சென்று அங்கிருந்த இயேசு சபைக் குருமடத்தில் தமது சமயப் பணியைத் தொடங்கினார். 1711-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் மதுரை மறைமாவட்டத்தில் கால் பதித்த முனிவர் தொடர்ந்து தமிழ் மக்களுக்காய்த் தமிழராய் வாழ்ந்தார். தமிழரோடு தன்னை இணைத்துக் கொண்டு அவர் தமிழை நன்கு கற்றுப் புலமை பெற்றார். தமிழ்ப்பற்றின் காரணமாகத் தமது இயற்பெயரைத் தைரியநாதர் என மாற்றிக் கொண்டார். அதுவே பின்னர் ‘வீரமாமுனிவர்’ எனும் விழுமிய தமிழ்ப்பெயராய் வழங்கலாயிற்று. முனிவர் தேம்பாவணி காப்பியத்தை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றிய போது, தமிழ்ப்புலவர்கள் அவருக்கு வீரமாமுனிவர் என்னும் பட்டத்தினை வழங்கினர் எனவும், அப்போது முனிவர், வீரன் என்பது என் இயற்பெயராகிய கான்ஸ்டண்ட் என்பதைக் குறிக்கும். முனிவர் என்பது துறவறப் பணியினைச் சுட்டும். மா என்பது மட்டுமே உங்களால் தரப்பட்டுள்ளதால் அதற்கு மட்டுமே கடப்பாடுடையேன் என்று கூறியதாகவும் வழங்குவர்.

தமிழகத்தில் கோவை, தூத்துக்குடி, மணப்பாடு, மதுரை, காமநாயக்கன்பட்டி, முதலிய ஊர்களில் தங்கி சமயப்பணியாற்றினார். தமிழ் மக்களுக்குத் தனது சேவையைச் சரியாகச் செய்ய வேண்டுமெனில் அவர்தம் மொழியைக் கற்பது மிக அவசியம் என உணர்ந்த முனிவர் தமிழைக் கற்றார். பழனி சுப்பிரதீபக் கவிராயரிடம் சங்க இலக்கியங்களையும், காப்பியங்களையும், இலக்கண நூல்களையும், தமிழ்ப் பனுவல்களையும் தெளிவாகக் கற்றார். திருக்குறள், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி முதலிய தமிழிலக்கிய நூல்களையும் கற்றார். தமிழ் மொழியை நன்கு பயின்று கவிதை இய்ற்றும் ஆற்றலும் பெற்றார். தமிழுடன் தெலுங்கு, கன்னடம், வடமொழி முதலிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார். மொழி பயிலும் அவரது திறன் எண்ணி எண்ணி வியத்தற்குரியது.

அக்காலத்தில் தென்னாட்டில் ஆண்டு வந்த சந்தாசாகிபு என்னும் இஸ்லாமிய மன்னர், வீரமாமினிவரின் ஆழ்ந்த புலமையினையும், அறிவின் பரப்பினையும், தூய வாழ்வின் பெருமையினையும், சமயத்தொண்டினையும் பாரட்டி ‘பெரும் சமயத்தொண்டர்’ எனும் பொருள்பட ‘இஸ்மாத்தி சந்நியாசி’ எனும் பட்டத்தினை வழங்கினார். அதாவது ‘இஸ்மாத்தி சந்நியாசி’ எனும் பாரசீகத் தொடருக்குத் ‘தூய துறவி’ என்பது பொருள். முனிவரின் அரும்பணிகளைப் பாராட்டி அவருக்குப் பல்வேறு பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டன. தமிழ்ப் புலமைக்காகச் ‘செந்தமிழ்த் தேசிகர்’ என அழைக்கப்பட்டார். இலக்கியச் சுவடிகளைத் தேடி சேகரித்ததால் ‘சுவடி தேடும் சாமியார்’ எனவும் அழைக்கப்பட்டார். இவை தவிர தெருட்குரு, வீர ஆரிய வேதியன், மலர்களின் தந்தை, தமிழ்மொழியின் தாந்தே எனும் பெயர்களாலும் இவர் அறியப்பட்டார்.

வீரமாமுனிவர் வந்தது சமயப்பணிக்காக எனினும் அவர் சமயப் பணியோடு, சமுதாயப்பணி, தமிழ்ப்பணி என அனைத்தையும் சேர்த்தே செய்தார். அவருடைய சமயப் பணித்தலங்கள் அனைத்தும் அவருடைய சமுதாயப் பணித்தலங்கள் ஆயின. அந்த இடங்களில் வசித்த மக்களுக்கு எல்லாமுமானார். சமயப் பணியினூடே மக்களை நாடிச் சென்று உதவிகள் செய்தார். ஏழை எளிய மக்கள் மீது அளவற்ற அன்பும் அக்கறையும் கொண்டு பணியாற்றினார். திருவழிபாட்டுக் கூறுகளைத் தமிழ்ப் பண்பாட்டுச் சாயலில் தமிழகத்தில் உருவாக்கினார். இந்தியப் பண்பாட்டுக்கு ஏற்ற வகையில் விவிலியக் கருத்துக்களைத் தேம்பாவணியிலும் பிற படைப்புக்களிலும் எளிமையாகவும் இனிமையாகவும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

எடுத்துரைத்துள்ளார். மக்கள் ஞான வாழ்வில் ஈடேற்றம் பெற நல்லொழுக்கம், இறைவேண்டல் போன்றவை பற்றிய போதனைகளைத் தமது பேச்சாலும், எழுத்தாலும், வாழ்வாலும் மக்களுக்கு ஊட்டி அவர்களை ஞான வாழ்வில் உறுதிப்படுத்தினார்.

அவர் சமயத்தொண்டு தமிழ்த் தொண்டிற்கு உதவியது போல், அவர் தமிழ்த் தொண்டு சமயத் தொண்டிற்கு உதவியாயிற்று எனும் தனிநாயகம் அடிகளாரின் கூற்று உண்மையானது. முனிவர்தம் தமிழ்ப்பணி குறித்துக் கூறும் கா.மீனாட்சி சுந்தரம், 'தமிழை மிகத் திறமையாகப் பயன்படுத்தத் தெரிந்த, கவினுறு கவிதைகள் எழுதும் புலமை படைத்த முதல் மேனாட்டு மறைப்போதகர் தந்தை பெஸ்கி அடிகளார்' என்பார். இதனை மேலும் உறுதிப்படுத்துவது போல், நட்டாப் அடிகளார் பாரிசுக்கு எழுதிய கடிதத்தில், 'தவத்திரு பெஸ்கி அடிகளார் தமிழை முழுமையாக் அறிந்துள்ளார். அழகிய கவி புனைகின்றார். இத்தகைய அருஞ்செயலை இதுகாறும் வேத போதகர் எவரும் செய்யவில்லை' எனப் பாராட்டி எழுதுகின்றார். இவ்வாறு புலத்துறை முற்றிய முனிவரின் இலக்கியப் படைப்புகளைச் செய்யுள், உரைநடை, இலக்கணம், அகராதி, மொழிபெயர்ப்பு, மருத்துவம் என வகைப்படுத்தலாம். இவற்றுடன் தமிழ் மொழியில் சில எழுத்துச் சீர்திருத்தங்களும் செய்துள்ளார். குறிப்பாக எ, ஒ ஆகிய குறில்கள் ஏ, ஓ என்று நெடில்களாக வேறுபாடு பெறுவதற்கு இவரே வழி செய்தார்.

முனிவரின் செய்யுள் படைப்புகளாகத் தேம்பாவணி காப்பியம், கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அடைக்கல நாயகிமேல் வெண்கலிப்பா, அன்னையழுங்கல் அந்தாதி ஆகிய பிரபந்தங்கள், அதோடு கருணாம்பரப் பதிகம் என்னும் தேவாரம், வண்ணக் கலைகள், தனிப்பாடல்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

தேம்பாவணிக்கான உரையை முனிவரே 1729 ஆம் ஆண்டு செப்டெம்பர் 8-ஆம் நாள் எழுதி முடித்ததாகக் கூறுவர். 'தேம்பாவணி மூலமும் உரையும் கொண்ட இலண்டன் சுவடி வீரமாமுனிவர் கையெழுத்தால் அமைந்துள்ளது என்று சென்னைத் தடயவியல் உறுதிசெய்துள்ளது. எனவே உரையை முனிவர் எழுதினார் என்பது உறுதிப்படுகிறது' என்பார் இராசமாணிக்கம் அடிகளார். கிறிஸ்தவ சமயம் சார்ந்த காப்பியம் இல்லை என்ற குறையை நிவிர்த்தி செய்ய விரும்பிய முனிவர் இயேசுவின் தந்தையான வளனின் வரலாற்றைக் கூறினாலும், திருமறை வரலாற்றையும், திருமறைக் கருத்துக்களையும் விளக்குவதே அவரின் நோக்கமாகும். இதனை,

> "சருவே சுரன்தான் தந்த திருமறை
> சருவர்க் குணர்த்தித் தகுங்கதி செலுத்துங்
> தயிரிய சாமி தவறா மொழியுடன்
> உயிரியல் பயனே உரைத்த திருக்கதை"

எனத் தம் நோக்கத்தினைக் காப்பியப் புறவுரை மூலம் தெரிவிக்கிறார் முனிவர். தேம்பாவணி மூன்று காண்டங்கள், 36 படலங்கள், 3615 பாடல்கள் இவற்றை உள்ளடக்கியது. இது முழுக்க முழுக்கத் தமிழ் இலக்கிய மரபுப்படி எழுதப்பட்டுள்ளது. தேம்பாவணியின் சிறப்புக் கருதி,

> "வீரமா முனிவர் தைரிய நாதர் விரிதமிழ் கலைமணம் கமழும்
> ஆரமா முனிவர் அகத்தியர் போலே அருளினார் அரிய நன்னூல்கள்
> சாரமந் தேம்பா வணியினைத் தொடினும் தமிழ்மணங் கமழுமென் கரமே
> ஈரமா நெஞ்சில் இடம்பெற நட்டால் இன்பமாய் மலருமென் வாழ்வே"

என விதந்து போற்றுகிறார் சுத்தானந்த பாரதியார்.

வீரமாமுனிவர் தனது இலக்கியப் படைப்புக்களைக் கற்றறிந்த மேதைகளுக்காக மட்டுமல்லாது கல்வியற்ற மக்களுக்காகவும் படைத்தார். சிற்றிலக்கியப் படைப்பான கித்தேரியம்மாள் அம்மானை பாயிரத்தில் பேதையருக்கு ஓர் அம்மானை பேதையும் நான் தந்திடுவேன் எனக் கூறுவதன் மூலம் இதனை அறியலாம். துன்பத்தில் பிறந்து, துன்பவெள்ளத்தில் வாழ்ந்து, துன்ப முடிவடைந்த கித்தேரி என்னும் சிறுமியின் வாழ்க்கை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. எளிமையும், இனிமையும் நிறைந்ததொரு சோகக் கதையாகக் கித்தேரியம்மாள் அம்மானை நிறைந்திருக்கிறது. கற்பு நெறி காத்த கித்தேரி தமிழரின் நெஞ்சத்தில் என்றும் வாழ்வாள் என்பதில் ஐயமில்லை.

திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அடைக்கல மாதாவைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டது திருக்காவலூர் கலம்பகம். தமிழில் தோன்றிய கலம்பகங்களுள் இது ஒன்று மட்டுமே பெண்பாற் கலம்பகம் என்பது பெருமை தரும் செய்தியாகும். பிற கலம்பகங்களெல்லாம் சிற்றின்பச் செய்திகளைக் கொண்டிருக்க, திருக்காவலூர்க் கலம்பகம் ஒன்றுமட்டும் பேரின்பச் செய்தி பெற்று விளங்குகிறது என்பார் ம. ஆரோக்கியசாமி. திருக்காவலூரின் தேவ அன்னைக்குத் திருக்கோவில் எழுப்பி, அதனையொரு திருத்தலமாக்கியவர் வீரமாமுனிவர். போப்பாண்டவரிடம் அனுமதி பெற்று ஆண்டுதோறும் அன்னைக்கு விழாவெடுத்துத் தாய்த் தெய்வ வழிபாடாக்கிச் சிறப்பித்தவர். அ.திரவியம் அவர்களின் மொழியில் கூறுவதானால், கற்புத் தெய்வம் கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கற்கோவில் அமைத்தும், அவன் தம்பி இளங்கோவடிகள் சொற்கோவில் அமைத்தும் அணி செய்தது போல், அடைக்கல் நாயகிக்கு ஆலயம் அமைத்து, விழாவெடுத்து, நூலியற்றி அவ்விருவர் பணிகளையும் ஒருங்கே செய்து முடித்தவர் வீரமாமுனிவர். காமம் கலந்து பாடும் கலம்பகத்திலே ஏமம் கலந்து பாடும் முனிவரது ஆற்றலுக்கு இந்நூல் சிறந்த எடுத்துக்காட்டாகும். இலக்கியச் சுவையும், சமயக் கருத்துக்களும் பின்னிக்கிடக்கும் மாண்புக்குக் காவலூர் கலம்பகம் சான்றாகும்.

முனிவரின் படைப்புக்களில் தமிழ் இலக்கியத்தின் தாக்கமும், இந்துப் புராணங்களின் தாக்கமும் மிகுதியாக உள்ளன. திருக்காவலூர்க் கலம்பகத்தின் தொடக்கம் ‘பாற்கடல்’ என்பதாகும். இது திருமால் பள்ளி கொண்டிருக்கும் திருப்பாற்கடல் அன்று. மனிதகுலமாகிய கடல் என்பதே இத்தொடருக்குப் பொருளாகும். வீரமாமுனிவரின் மாதாபக்தி குலசேகராழ்வார் திருவேங்கட நாதரிடம் கொண்டிருந்த பக்தியை நிகர்த்து விளங்குகிறது என்பார் இரா.பி.சேதுப்பிள்ளை. தேவாரம், நாலாயிரதிவ்வியப் பிரபந்தம் முதலிய பக்திப் பனுவல்களைக் கற்று அவற்றின் சொற்சுவையில் தோய்ந்த முனிவர், தானும்,

> “கோளணிந்த குழல்அணிதார் குடைவண்டாய்ப் புகழ்பாடி மதூண்ணேனோ......
> கேளணிந்த காவல்நல்லூர் கிளர்புனத்துப் பசும்புல்லாய்க் கிடவேன்நானோ?”

எனத் தேவமாதாவின் மீது தமக்கிருந்த பக்தியை வெளிப்படுத்தத் தமிழ் மணத்துடன் தெய்வ மணமும் கலந்து பாடுகின்றார். வருணனைகள், உவமை, உருவகம், சிறந்த சொல்லாட்சி, சந்தநயம், அடுக்கு மொழிகள், தொடைநயம் எனத் தமிழ் இலக்கண மரபுகளை உள்வாங்கி இலக்கியம் படைத்துத் தமிழ்ப் புலவர்களையும் ஒரோவிடங்களில் விஞ்சிவிட்ட முனிவரின் தமிழ்ப் புலமை எண்ணி வியத்தற்கும், பாராட்டுதற்கும் உரியது.

பரமார்த்தகுருவின் கதை, வேத விளக்கம், வாமன் சரித்திரம், பேதக மறுத்தல், வேதியர் ஒழுக்கம், லுத்தரினத்தியல்பு மற்றும் திருக்கடையூர் நாட்டுத் திருச்சபைக்கு எழுதிய நிருபம், ஞான உணர்த்துதல் போன்றவை முனிவரின் உரைநடைப் படைப்புகளாகும். மேலும் திருநாள் கணக்கீடாகிய திருச்சபைக் கணிதமும் முனிவரது படைப்பாகும் என்பார் பபிங்டன். சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி, இலத்தீன் - தமிழ் அகராதி, தமிழ் -பிரெஞ்சு அகராதி, பிரெஞ்சு - தமிழ் அகராதி ஆகியவை முனிவர் படைத்த அகராதிகளாகும். நீலகண்டி, வீர்மெழுகு, வைத்திய முறை, இரத்தினச் சுருக்கம், நசகாண்டம், இரண்வாகடம், மேகனாதி எண்ணெய் முதலியன முனிவரின் மருத்துவப் படைப்புக்களாகக் குறிக்கப்படுகின்றன. ஆனால் வீரமாமுனிவர் இரண்டு அல்லது மூன்று மருத்துவ நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் அச்சேறிய ஒன்றை மட்டும் நான் அறிவேன் என்று கௌசானல் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இத்தனைப் பணிகளினூடேயும் அவர் மொழிபெயர்ப்புப் பணியினையும் செய்துள்ளார். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால் இவற்றை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் 208 குறள்களுக்குப் பேச்சுத் தமிழில் இவர் எழுதியுள்ள

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

விளக்கத்தினைச் சென்னை பல்கலைக்கழகம் வெளியிட்டுளது. இவை தவிர 'வாக்கிய சித்தாந்தம்' என்னும் சொல்லாராய்ச்சி நூலை முனிவர் வடமொழியில் எழுதியதாகத் தெரிகிறது. வீரம்மாமுனிவரின் படைப்புக்கள் குறித்த பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும் அவரது மொத்த நூல்கள் 24 என உறுதியாகக் கூறமுடிகிறது என்கிறார் அ.லூர்துசாமி.

இத்தாலியில் பிறந்த வீரமாமுனிவர் தமது 30 -ஆவது வயதில் தமிழகம் வந்து 37 ஆண்டுகள் தமிழ் மண்ணில் உழைத்தார். தமிழரோடு தமிழராக வாழ்ந்தார். 1747 - ஆம் ஆண்டு பிப்ரவரி 4 - ஆம் நாள் அம்பலக்காட்டில் இறையடிசேர்ந்த நாள் வரை முனிவர் ஒரு சமயத் தொண்டராக, சமுதாயத் தொண்டராக, தமிழ்த் தொண்டராகத் திகழ்ந்தார். முழுக்க முழுக்கத் தமிழ்த் துறவிபோல் வாழ்ந்த முனிவர் சமயத் தொண்டால் மக்களை இறைவனோடு இணைத்தார்; சமுதாயத் தொண்டால் தன்னை மக்களோடு சேர்த்துக் கொண்டார். சித்பவானந்த சுவாமிகள் வீரமாமுனிவைப் பற்றிக் கூறுகையில், தமிழ் நாட்டையும் மொழியையும் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். தம் வாழ்வைத் தமிழ் மயமாக்கிக் கொண்டவர் என்கிறார். தமிழோடு தமிழாய் வாழ்ந்த முனிவர், தமிழ் உள்ளளவும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்வார். எம். எஸ். சுந்தரேச ஐயர் கூறியது போல்,

"சீர்வீர மாமுனிவர் செப்பியமுன் நூற்களையும்
ஓர்மோ உரைமோ வரைமோஇப் - பார்மீதில்
வந்திப்பாய்க் கைத்தவமே வாழ்த்துவாய் நாவகமே
சிந்திப்பாய் நெஞ்சே தினம்."

முனிவரை மறந்தால் தமிழை மறந்தவர்கள் ஆவோம்.

பயன்பட்ட நூல்கள்

1. பரமார்த்தகுருவின் கதை
2. வேத விளக்கம்
3. வாமன் சரித்திரம்
4. பேதக மறுத்தல்
5. வேதியர் ஒழுக்கம்
6. ஞான உணர்த்துதல்
7. திருச்சபைக் கணிதம்
8. சதுரகராதி
9. தமிழ் - இலத்தீன் அகராதி
10. இலத்தீன் - தமிழ் அகராதி
11. தமிழ் - பிரெஞ்சு அகராதி
12. பிரெஞ்சு - தமிழ் அகராதி
13. நீலகண்டி
14. வீர்மெழுகு
15. வைத்திய முறை
16. இரத்தினச் சுருக்கம்
17. நசகாண்டம்
18. இரண்வாகடம்
19. மேகனாதி எண்ணெய்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கோட்பாடுகள்

The Norms of Personality by Tholkappiyar

மு.சுபாஷினி, உதவிப் பேராசிரியர் (தமிழ்த்துறை),
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, பெரம்பலூர்- 621 113

Abstract

The article tries to bring us the principles of personality as enunciated by Tholkappiyar. "Tholkappiyam" is one of the classic treatise of Tamil literary sources. Very simply to say it is a pinnacle of all literary works because the facts revealed in it are highly authentic, logical and rational. It is a great boon to study such a work deals with all walks of life blended from language to all modern fields existing today. Hence, this article tries to bring forth the norms of personality portrayed by Tholkappiyar.

Keywords: Norms of Personality, Tholkappiyar, Tholkappiyam, Tamil Psychology

முகவுரை

இந்திய உளவியலின் ஊற்றுக்கண்ணாக விளங்குவது *தொல்காப்பியம்.* தொல்காப்பியரின் மெய்ப்பாட்டுக் கோட்பாடு முத்தமிழுக்கும் பொதுவானது எனினும் இயற்றமிழுக்கே பெரும்பாலும் பொருந்துவது என்றும், அது வடமொழிச் சுவைக் கோட்பாட்டிற்கும், பன்னூறாண்டுகள் முந்தியது என்றும் முடிவு கூறுகின்றனர். *உளவியல், உடலியல், உடலியங்கியல்* ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்ற இக்கால உளவியலாளர் கருத்தினைத் தொல்காப்பியர் உளவியற் செய்தி கூறும் இயலுக்கு மெய்ப்பாட்டியல் எனப் பெயர் வைத்ததன் மூலம் கூறுவதாக ஆய்வாளர் பதிவு செய்கின்றனர். இன்றைய காலத்தின் உளவியல் அறிஞர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்திய கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனித மனத்தினுள் எழும் உணர்ச்சியை அனுபவ பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் கூறியுள்ள மெய்மையை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்பது மெய்ப்பாடு. மெய் - உடம்பு, படுதல் என்பது தோன்றுதல் எனப் பொருள்படும். படு எனும் முதனிலைத் தொழிற்பெயர் 'பாடு' என நீண்டு மெய்பாடாயிற்று. மெய்யின்கண் தோன்றும் குறிப்புகள் கருத்தில் கொண்டு புலப்படுத்தவல்லன. அக்குறிப்புகள் புறத்தாரால் புலன்களின்வழி அறியப்பட்டு வெளிப்படுகின்றன. அகப்பொருள் புலப்பாட்டு நெறியில் கேட்பவரை உளப்படுத்தி மெய்ப்பாட்டியலை படைத்துள்ளார் தொல்காப்பியர். இதனைக் குறித்து பல்வேறு காலக்கட்டத்தில் வாழ்ந்த ஆய்வாளர்கள் கூறுவதாவது,

"மெய்ப்பாட்டியல் பழந்தமிழ் மக்களின் உளநூல்" (புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப.24) என்று புலவர் குழந்தை எடுத்துரைக்கிறார். மெய்ப்பாடு என்ற தமிழ் இலக்கியக் கோட்பாடு அதன் விளக்கங்கள் அனைத்தையும் ஒருசேரக் கொண்டு ஆயும்போது ஓர் உலக இலக்கியப் பொதுமைக் கோட்பாடாகக் காட்சியளிக்கின்றது.

இலக்கியம் வாய்மொழியாக இருந்தபோது ஆடலுடன் கூடிய பாடலாக இருந்தது. கூத்துக்களில் இருந்த முக உடலசைவுகள், சைகை ஆகியன உணர்ச்சியை வெளிப்படுத்திக் காட்டின. இலக்கியத்தில் சொற்களை வைத்து தான் உணர்ச்சியை வெளிப்படுத்த

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வேண்டியதாயிற்று. இவ்வாறு தோன்றிய மெய்ப்பாட்டுச் சொற்களின் விளக்கம் தொல்காப்பியர் காலத்திலிருந்தே பெறப்படுவதை அறியலாம். அகத்திற்கும், புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடுகள் மெய்ப்பாட்டியலின் 12 நூற்பாக்களில் கூறப்படுகிறது.

"மெய்ப்பாடாவது உலகத்தார் உள்ளத்து நிகழும் உணர்ச்சிகளைப்
புறத்தார்க்கு உடலின்கண் புலப்படும் வேறுபாடுகளான் எடுத்துரைத்துப்
பொருளைப் புலப்பட வைப்பது" (தமிழ் இலக்கணப் பேரகராதி, மெய், ப.11)

என்று தமிழ் இலக்கணப் பேரகராதி மெய்ப்பாட்டிற்கு விளக்கமளிக்கிறது.
மெய்ப்பாடு என்ற சொல் மெய்யின்கண் தோன்றும் அவிநயம் எனப் பொருள் கூறப்படுகிறது. மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று என்பார் இளம்பூரணர்.

"இன்சுவை என்பது காணப்படு பொருளாற்
காண்போரகத்தின் வருவதோர் விகாரம்" (இளம்பூரணர், மு.நூ.மெய்ப் -1)

எனவும் கூறுகிறார். இக்கூற்றுகளால் உலகியலிலிருந்து கூத்துக்கலை வளர்வது நமக்குப் புலனாகிறது. மெய்ப்பாடு என்பதற்கு பேராசிரியர் தரும் விளக்கம்,

"சுவைப்பொருளுஞ் சுவையுணர்வுங் குறிப்பும்
விறலுமென நான்காயின்" (பேராசிரியர், தொல். மெய்ப்.1)

எனப் பகுக்கும்போது மெய்ப்பாடு கூத்தினுள் வெளிப்படும் முறையாகக் கொள்ளப்படுகிறது. எனவே மெய் என்பது பொருட்பிழம்பு; பாடு என்பது தோன்றுவது; கவிதையானது தான் மெய்யாகிய பொருட்பிழம்பைத் தோற்றுவிக்கிறது என்பதாகும். மேலும் விளக்குமேயானால் சொல்ல வந்ததை அப்படியே கண்ணால் கண்டதுபோல், காதால் கேட்டதுபோல் உருவாக்கிக் கண்முன்னர் நிறுத்துவதே மெய்ப்பாடு. இவற்றைச் சங்க இலக்கியங்களில் நன்குணரலாம்.

மெய்ப்பாட்டின் பொது இலக்கணம்

மெய்ப்பாட்டிற்கான இலக்கணமாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவதாவது,

"பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்
கண்ணிய புறனே நானான்கு என்ப" (தொல். செய். நூ.245)

ஆடல், பாடல் போன்றவற்றைக் கண்டும் கேட்டும் நுகரும் இன்ப விளையாட்டின்வழித் தோன்றும் முப்பத்திரண்டும் அவற்றின் புறத்ததாகத் தோன்றும் பதினாறும் மெய்ப்பாடுகள் எனச் சான்றோர் குறிப்பர்.

மெய்ப்பாட்டின் இலக்கிய உத்தி

மெய்ப்பாடு என்பது உடம்பில் தோன்றும் அசைவுகளே நினைவுக்கு வருவதால் அது நாடகத் தொடர்புடையது. தொல்காப்பியர் தாம் கூறும் மெய்ப்பாடு இலக்கியத்திற்கே உரியது எனச் சுட்டுகிறார்.

"உய்த்துணர் வின்றித் தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு ஆகும்" (தொல். பொருள். செய். 509)

யாதானும் ஒன்றைக் கூறும்போதோ அல்லது ஒரு செயலை செய்யும்போதோ அதுபற்றிய விளக்கம் இல்லாமலேயே மெய்யின்கண் தோன்றும் எட்டும் மெய்ப்பாடாகும்.

மெய்ப்பாடு உணரப்படுதல்

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் தலைவன் தலைவியரிடையே இருக்க வேண்டிய ஒப்புமைகளையும் இருக்கக் கூடாத பண்புகளையும் பட்டியலிடுகிறார்.

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே" (தொல். மெய்ப். நூ-271)

என்னும் மெய்ப்பாட்டின் இறுதி நூற்பாவில் நுட்ப அறிவுடைய மாந்தர்களால் மட்டுமே கலையை நுகர முடியும் என்ற ஆழமானக் கருத்தை அழுத்தமாக எடுத்துரைக்கிறார்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தொல்காப்பியர். செய்யுளைப் பொருத்தவரை மெய்ப்பாடென்பது நல்ல நயமான பொருளைக் கொள்ளுதலே. மாந்தர்கள் மெய்ப்பாட்டின்வழி மற்றொருவர் தம் உளக்கருத்தை அறிவதென்பதாகும்.

மெய்ப்பாடு குறித்து அறிஞர் கருத்துரைகள்

மெய்ப்பாடு என்பதற்கு பல அறிஞர் பெருமக்கள் பலவாறானக் கருத்துரைகளை எடுத்து மொழிகின்றனர்.

இளம்பூரணர்

அச்சமுற்றான் மாட்டு நிகழும் அச்சம் அவன் மாட்டுச் சத்துவத்தினாலபுறப்பட்டுக் காண்போருக்குப் புலனாகும் தன்மை மெய்ப்பாடு எனக்

கொள்ளப்படும். "மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று" (தொல். பொருள். நூ-247)

நச்சினார்க்கினியர்

"மெய்ப்பாடென்பது சொற்கேட்டார்க்குப் பொருள்கட் புலனாதல் என்றே குறிப்பிடுகின்றார்"

தமிழண்ணல்

"செய்யுளைப் படித்ததுமே மெய்ப்பாடு தோன்ற வேண்டும்.
அதிகமா விசாரித்து உணர்தலின்றி மிகவும் முயன்று உய்த்துணர
வேண்டும் என்றில்லாமல் பாடலின் கருத்துணர்வு உடனே
மனத்திற்கு ஆகவேண்டும்" (தமிழண்ணல், மெய்ப்பாடு, பக்.20-21)

கா.மீனாட்சி சுந்தரம்

"உணர்வும் நிகழ்வும் மனிதனுக்கு இயற்கை தந்த சில பேறுகளுள்
சிறந்த இடம் பெறுகின்றன. மனத்தில் தட்டுப்பாடும் உணர்வுகளுக்கு
ஏற்ப உடலின் நிலையில் ஏற்படும் மிக நுணுக்கமான மாறுதல்களைத்
தமிழிலக்கண இலக்கியப் புலவர்கள் மெய்ப்பாடு என்பார்"
(தமிழரின் செம்மொழித் தன்மையும் உலக இலக்கியங்களும், ப.46

பேராசிரியர்

"உய்த்துணர்ச்சியின்றி செய்யுளிடத்து வந்து சொல்லப்படும் பொருள்தானே
வெளிப்பட்டாங்குக் கண்ணிரரும்பல் மெய்சிலிர்த்தல் முதலாக 'சத்துவம்'
படுமாற்றான் வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம்"
(ச.சுபாஷ் சந்திரபோஸ்(உ.ஆ), தொல். பொருள். நூ.249)

என்று மெய்ப்பாடு என்பதற்கு பொதுவான கருத்தாக அனைவரும் கூறுவது உள்ளத்து உணர்ச்சியின் வெளிப்பாடென்பதை திறம்பட உரைக்கின்றனர்.

எண்வகை மெய்ப்பாடுகள்

மெய்யாகிய உடம்பின் வழியாக தோன்றும் மெய்ப்பாடுகளை எட்டுவகையாகப் பிரிப்பர். உடலினுள் தோன்றும் உணர்வுகளை வெளிப்படுத்துவதே மெய்ப்பாடாகும்.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" (தொல். மெய்ப். நூ.247)

ஒரு படைப்பிற்குத் தேவையான இன்றியமையாத இருப்பத்தாறு உறுப்புகளுள் ஒன்றாக மெய்ப்பாடு தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகிறது. செய்யுளில் முதல் நூற்பா செய்யுளுறுப்புகளாகக் கூறும் 34 உறுப்புகளையும் வரிசைப்படுத்தும்போது மெய்ப்பாட்டை இருபதாவது உறுப்பாகக் கூறுகிறது. அதாவது,

"பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ" (தொல். செய்.1, வரி-7)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்பதில் பயன், கூற்றெச்சம், குறிப்பெச்சம் என்பன பாடலில் பொருள் கொள்ளும் முறை பற்றியது. தொல்காப்பியர் மூலத்தாலும் உரை விளக்கங்களாலும் பெற்ற மெய்ப்பாட்டுக் கோட்பாட்டைக் கீழ்வருமாறு தமிழண்ணல் கூறுகிறார்.

1. செய்யுள் செய்வோர் மெய்ப்பாடு தோன்றச் செய்தல்.
2. செய்யுளைப் படித்ததுமே மெய்ப்பாடு தோன்றுதல்.
3. பாடலின் கருத்து, உணர்வு உடனே மனத்திற்கு ஆகுதல்.
4. கண்ணீரரும்பல் மெய்மயிர் சிலிர்த்தல் முதலாகிய 'சத்துவம்' தோன்றுமாறு வெளிப்படச் செய்தல்.
5. சொல் கேட்போருக்குப் பொருள் கண்கூடாதல்.
6. நோக்கு உறுப்பினால் உணர்ந்த பொருட்பிழம்பினைக் காட்டுதல்.

ஒரு பாடலின் சிறு அடைமொழி முதல் அதன் முழு பொருள் வரை வடிவமும், பொருளும் ஒரு சேரக் கொண்டு நோக்கி உணர்வோருக்கு அப்பாடலின் பொருட்பிழம்பு கண்ணெதிரே தோன்றும்.

> "மெய்ப்பாடு என்பது இலக்கியத்தில் வரும்போது மெய்ம்மைப் பாடாகிறது. மனித உணர்வு அருவம்; அதனைப் பருப்பொருட்டாகித் தர இலக்கியம் முயல்கிறது. மீண்டும் படிக்கும் உள்ளம் அதனை வாங்கிக் கொண்டு அருவமாகவே உணர்கிறது. மெய்ப்பட – உருப்பட – மெய்ம்மைப்படத் தோன்றிப் படிப்பவருக்குச் சென்று சேர்தற்கு உதவுதலால் இ∴து மெய்ப்பாடு எனப்பட்டது"
>
> (தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கிய கொள்கை மெய்ப்பாடுகள், ப.53)

என்று உரையாசிரியர்கள் மெய்ப்பாட்டை பற்றிய கருத்துகளை எடுத்துரைக்கின்றனர்.

எண்வகை மெய்ப்பாடு வைப்பு முறை

தொல்காப்பியர் எண்வகை மெய்ப்பாட்டை வைத்தமுறை காரணத்தோடே என்று பேராசிரியர் விளக்கம் தருகின்றார்.

> "வாழ்க்கைக்கு இன்றியமையாத நகையை முன்னரும்
> அதற்கு மறுதலையாகிய அழுகையை அடுத்தும்,
> அழுகையுடன் இயைபுடை இளிவரலை அதனை
> அடுத்தும் தான் இளிவந்து பிறிதொரு பொருளை
> வியக்குமாதலின் வியப்பினை அதனை அடுத்தும்
> அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதனை
> அடுத்தும் வீரத்தின் பயனாகப் பிறக்கும் வெகுளியை
> அதனை அடுத்தும் வெகுளிக்கு மறுதலையாகிச்
> சுவைகளுள் நகையைப்போலச் சிறந்த உவகையை
> அதனை அடுத்து இறுதிக்கண்ணும் வைத்தார்"
>
> (தமிழ் இலக்கணப் பேரகராதி, மெய்ப்பாடு, ப.36)

மனிதனின் வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக விளங்குவது மகிழ்ச்சி என்பதை தொல்காப்பியர் உய்த்துணர்ந்து குறிப்பிட்டுள்ளதை பேராசிரியர் போன்ற உரையாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

நகை

மனிதன் வாழ்வில் மிகவும் விரும்பி ஏற்கக்கூடிய ஒன்று நகையாகும். ஆகையால் எண்வகை மெய்ப்பாடுகளுள் முதலாவதாகக் கூறப்படுவது நகை. நகை என்பது சிரிப்பு என்னும் பொருள் தருவதாகும். அச்சிரிப்பு 1. முறுவலித்தல் 2. அளவோடு சிரித்தல் 3. பெருகச் சிரித்தல் என மூவகைப்படும். உள்ளத்தில் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்து உடலின்கண்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வெளிப்படும்போது நகையாக மலர்கின்றது. எனவே மனிதனின் மகிழ்ச்சியை நகை வெளிப்படுத்துகிறது.

அழுகை

அழுகை என்பது சோகத்தின் புறப்பாடாகும். ஏதேனும் ஒரு சோக நிகழ்வு ஏற்பட்டால் கண்ணீராய் வெளிப்படுகிறது. இவ்வழுகை இரண்டு வகையாகப் பிரிகிறது. தனக்கு ஏற்பட்ட சோகத்திற்காக அழுதல்; பிறருக்கு ஏற்பட்ட சோகத்திற்காக அழுதல் என்பதாகும்.

இளிவரல்

இளிவரல் என்பது இழிவான ஒன்றை பார்ப்பதாலோ அல்லது கேட்பதாலோ உடலில் குறிப்பாக முகத்தில் அருவருப்பை உண்டாக்குவது இழிவு எனவும் குறிக்கப்படுகிறது. எனவே 'இளிவரல்' என்பது இயல்புக்கு மாறாக, சகிப்புத் தன்மையற்ற ஒரு நிகழ்வினால் உடலின்கண் வெளிப்படுவதாகும்.

மருட்கை

மருட்கை என்பது 'வியப்பு' எனப்படும். வியப்பைத் தரும் வகையில் ஒரு பொருளைக் காண்பது அல்லது ஒரு செயலை அறிவது போன்ற வகையில் உடலில் தோன்றுவதே மருட்கை எனப்படும். இவற்றை வடமொழியில் 'அற்புதம்' என்று கூறப்படுகிறது. மனிதன் தான் ஒரு பொருளை அதுவரை கண்டிராமல், அப்பொழுது புதிதாக காணும்போது ஏற்படும் அதிர்வு நிலையே 'மருட்கை' என்பதாகும்.

அச்சம்

அச்சம் என்பது பயப்படுதல் என்னும் பொருள் தரும். பயத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு பொருளைப் பார்க்கும் பொழுதும், ஒரு நிகழ்வைக் கேட்கும் பொழுதும் உடலில் ஏற்படும் மெய்ப்பாடாகும். ஒரு வகையான குழப்பத்தோடு கூடிய உடல் மாறுபாடே 'அச்சம்' என்பதாகும்.

பெருமிதம்

ஒரு நல்ல செயல் செய்யும்போது, அவை பலருக்கு பயனளிக்கும். அப்போது பிறரால் பாராட்டப்படும்போது உள்ளத்தின் வழியே உடலில் தோன்றும் மனஉறுதி, வீரம் போன்றவையே பெருமிதமாகும். இப்பெருமிதம் கற்ற கல்வியறிவினாலும், அளவு கடந்த செல்வம் ஈட்டுவதாலும் பெருமிதம் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர்.

வெகுளி

வெகுளி என்பது சினத்தைக் குறிக்கும். சினத்தைத் தோற்றுவிக்கும் பொருளைக் காணும்போது அல்லது ஒரு செயலைக் கேட்கும்போது முகம் சிவந்து, பதற்றம் அடைவதால் உடலில் தோன்றும் ஒரு வகை மெய்ப்பாடாகும். இவ்வெகுளி தன்னால் பிறர் அடையும் சினம்; பிறரால் தனக்கு ஏற்படும் சினம் என இருவகைப்படும் என்று வெகுளியை பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

உவகை

உவகை என்பது அளவு கடந்த மகிழ்ச்சியாகும். மனத்திற்குப் பிடித்தமானவற்றைக் காணும்போதும், கேட்கும்போதும் உடலில் ஏற்படும் உவகை ஒரு மெய்ப்பாடாகும்.

எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒவ்வொன்றும் நன்னான்காகக் கொண்டு 32 ஆகப் பிரிகிறது.

முடிவுரை

பண்டைக் காலம் தொட்டே இக்காலம் வரை மக்களின் உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடே மெய்ப்பாடாகும். தெருக்கூத்துகளில் உடல் பாவணைகளின் வாயிலாக கூற வரும் கருத்துகளை மெய்ப்பாடு கொண்டே மக்கள் உணர்ந்து கொண்டனர். உடலின்கண் தோன்றும் காட்சியைத் தொல்காப்பியர் எட்டுவகையாகப் பிரித்து தொல்காப்பியத்தில் தனி இயலாக காட்டியுள்ளது ஒப்பு நோக்கத்தக்கது. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் உள்ளத்தில் ஊற்றெடுத்து, உடலின்வழியே பாய்வதாகக் குறிப்பிடுவதை **மெய்ப்பாட்டியல்** என்ற இயல் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது என்பதை இதன்வழி உணர முடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பார்வை நூல்

1. ச.சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ) : *தொல்காப்பியம் - பொருளதிகாரம்*
இயல் வெளியீடு, தஞ்சாவூர் -613 001
மூன்றாம் பதிப்பு – 2018

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஐவகை நிலமக்களின் வாழ்வியல் நெறிமுறைகள்

Life Principles in the Five Land People

முனைவர் பி.செல்வக்குமாரன், தமிழாய்வுத்துறைத் தலைவர்
தூய வளனார் தன்னாட்சிக்கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2

Abstract

The paper traces the manner of life in the five different lands of the Classic Tamil Nadu. It was categorized as 'Kurunchi', 'Mullai', 'Marutham', 'Neithal' and 'Paalai'. The parts of these lands are segregated according to the natural wealth of the geographical area. Life on these lands also varies. Food cuisine, mode of life, habitual action and in all deeds of life varies to the concern of the land. Hence, the article deciphers the life principles in relation to the land area.

Keywords: Life Principles, Five Land People, Sangam Age

முன்னுரை

உலகில் தோன்றிய பழங்கால மக்கள் தங்கள் கூட்டத்தினரிடையே மேம்பட்டுத் தோன்றுவதற்கான காரணமான வீரவுணர்வு வாய்ந்த நனிநாகரிகராக வாழ்ந்தனர். பழந்தமிழர்கள் தாங்கள் வாழ்கின்ற நிலங்களை குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், (பாலை) எனப் பகுத்து அதன்படி செயல்பட்டனர். அவர்கள் தாங்கள் வாழ்கின்ற நிலத்தில் இன்னின்ன காலங்கள் சிறந்தன என்பதையும் அறிந்திருந்தனர். ஐவகை நிலங்களில் வாழ்கின்ற மக்கள் குறவர், இடையர், உழவர், பரதவர், எயினர் என அழைக்கப்பெற்றனர். அந்த நிலத்துக்குரிய தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம், பறை, செய்தி, யாழ் முதலியன வேறு வேறாக இருந்தனர். அவர்கள் காதலையும், வீரத்தையும் தூய முறையில் நுனித்தரியும் பேருணர்வுடன் வாழ்ந்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. அத்தகைய நிலங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் நெறிமுறைகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வாழ்வியல் நெறிமுறைகள்

மனிதன் தன்னோடு வாழும் பிற மனிதனைவிடச் சிறந்தவனாக வாழவேண்டும் என நினைக்கிறான். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுகிறான். இயன்ற அளவு முயற்சிகளில் வெற்றி பெற்று வாழ்க்கைத் தரத்தில் உயர்வைக் காண்கிறான். சில மனிதர்கள் வெற்றி பெற்றபோது மகிழ்ந்தும், தோல்வி கிடைக்கின்றபோது வருந்தியும் காலத்தைக் கழிக்கின்றன. இவ்வகையைச் சாராமல் தொடர்ந்து கடமைகளை செய்து அதன்வழி உயர்வைக் காண்பவர்களும் உள்ளர். அவர்கள் அறம், நேர்மை, தன்னம்பிக்கை முதலிய நல்ல எண்ணகளுக்கு மதிப்பளித்து வாழ்க்கையில் படிப்படியாக வெற்றியைப் பெறுகின்றனர். வாழ்க்கையில் நிலையான புகழையும், நிறைந்த மகிழ்ச்சியையும் பெற வேண்டும் என்று நினைப்பவர்கள் முயற்சியுடையவர்களாக இருக்க வேண்டும். இதனையே திருவள்ளுவர்,

> "ஊழையும் உப்பக்கம் காண்பவர் உலைவின்றித்
> தாழாது உஞற்று பவர்" (திருக்குறள் - 620)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அதாவது பயனை விலக்குவதாகிய ஊழினையும் காண்பர். அவ்விலக்கிற்கு இளையாது வினையை தாழ்வற முயல்பவர் என்று குறிப்பிடுகின்றார். வாழ்க்கை என்பது ஒரு போராட்டம் என்பதை எல்லோரும் உணர வேண்டும். அந்தப் போராட்டத்தில் வெற்றி காண தூய்மையான நெறியையே நாட வேண்டும். வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆற்றுநிரைப் போல சுறுசுறுப்புடன் இருக்க வேண்டும். ஐவகை நிலங்களில் வாழ்கின்ற மக்கள் முயற்சி உடையவர்களாகவும், தன்னலமில்லாதவர்களாகவும், யான், எனது என்ற செறுக்கு அற்றவர்களாகவும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கிணங்க உலகப் பற்றுடையவர்களாகவும் திகழ்ந்தனர். அஞ்சாமையும் மகிழ்வோடிருத்தலும் வீரனுக்குரிய செயலாகும் அதுவே அவனுக்கு வெற்றியைத் தேடித் தந்து சிறந்த நலனை பயக்கிறது என்பதையும், தன்னிலை உணர்தலையும், தன்னை உணர்ந்த ஒருவனுக்கு முடியாமை என்பதோ, இயலாமை என்பதோ கிடையாது என்பதை அறந்து அதற்கான செயல்களில் தங்களை ஈடுபடுத்தி அதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர் என்பதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

அக இலக்கண மரபுகள்

அகவொழுக்கம் என்பது, "இருபாலருள் ஒருவரோடொருவர் மனமொன்றிய காதலொழுக்கமாதலின், புறவொழுக்கமாயிற்றுச் சிறப்பாகப் பிறரின் மாறுபாட்டு அறமும் பொருளும் கருதி தோன்றும் போரொழுக்கமாதலின் அகவொழுக்கம் அல்லாத பிறவெல்லாம் இப்புறவொழுக்கத்தில் அடங்கும் என்கின்றனர்" அகத்துறைப் பாடல்களைப் பாடுகின்ற நெறி பற்றியும், அகஉணர்வுகளில் பாடுபொருள் ஆவதற்குரிய உணர்வுகள் பற்றியும் வரையறை வகுத்து அக இலக்கணம் கண்டமொழி தமிழ்மொழியாகும். உள்ளம் பண்பட்டு நிற்குமாயின் உயிா் ஆக்கம் பெறுதல் ஒரு தலை, இது பற்றிய முயற்சியை மேற்கொள்ளுதல் மானிட வாழ்க்கையின் உயர்ந்த நிலையினைக் காட்டுகிறது. உள்ளம் பண்படல் இலக்கியப்பயன் ஆதலின் வாழ்வினைப்பாடும் அகப்பாடல்களின் நோக்கமும் அதுவாகவே இருக்கிறது. காதலும், காமமும் பொருள் சிறப்புடையச் சொற்களாகும்.

ஐவகை நிலங்கள்

"தமிழ் நாடு வேளாண்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தா் டாக்டா் கோ.அரங்கசாமி அவா்கள் "மலையும் மலைச் சார்ந்த பகுதியும் வன, வள இயலைக் காட்டுகிறது. முல்லை என்ற காடும், காடு சார்ந்த பகுதியும் கால்நடை இயலை விளக்குகின்றது. மருதம் என்ற வயலும், வயல் சார்ந்த இடமும் விவசாயத்தைக் குறித்துப் பேசுகிறது: நெய்தல் என்ற கடலும், கடல் சார்ந்தப் பகுதியும் வன, வள இயலைக் குறிக்கின்றது. ஆகவே பண்டைத் தமிழா் வனஇயல், கால்நடை, விவசாயம், மீன்வளம் ஆகிய நான்கு துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்தனர்" என்று கூறுகிறார். திணை முதலில் இடத்தினை, நிலத்தினைக் குறித்தது. பின்னா் நிலத்தில் வேரூன்றிக் காலிட்டு மேல் வளரும் தாவர இனத்தை 'நிலத்திணை' என்றனர். முன்னோர் நீரில் நீந்தியும் நிலத்தில் தவழ்ந்தும் ஓடித்திரியும் விலங்குகளையும், வானில் பறந்து திரியும் பறவைகளையும் 'இயங்குதிணை' என்றனர். மக்களின் நல்லறிவின் பயனாய் அமைவது ஒழுக்கமாகும். ஒழுக்கம் என்பது மன உணர்வின் பாற்பட்டது அது நிலைத்து நிற்கும் இயல்புடையது. திணை (உயர்வு) அல்லாததை எதிர்மறையாக அல்திணை என வழங்கியுள்ளனர். அல்திணை, திணை அல்லாதது. எனப் பொருள் தரும் அல்திணையே காலப்போக்கில் அஃறிணையாயிற்று,

குறிஞ்சித் திணை

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்பர். இப்பெயர் வந்ததன் காரணத்தை நோக்கினால் மலையிலுள்ள ஒரு செடி குறிஞ்சி, அதன் பூவினால் குறிஞ்சி எனப் பெயர் பெற்றது. ஒரு செடியின் மணம், குணம், பயன், சிறப்பு நோக்கி அறிவியல் அறிவின் துணை கொண்டு குடியாட்சித் தேர்வு முறையில் தேர்வு செய்துள்ள திறம் வெளியாகின்றது. குறிஞ்சி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நிலம் மலைவளம் மிக்கது. தலைவன், கானவன், வேட்டுவர் எனவும், தலைவி, கொடிச்சி என்றும் அழைக்கப்படுகின்றன. திணைநிலை மக்கள் குறவன், குறத்தி என்றும், வேட்டுவர், வேட்டுவச்சி என்றும் அழைக்கப்படுகின்றன. விலங்குகள், புலி, கரடி, யானை முதலியனவாகும். இவர்களுடைய ஊர் சிறுகுடி எனவும் அழைக்கப்படும். நீர் அருவி நீர் சுனை நீர், குறிஞ்சிப்பண், குறிஞ்சி யாழ் இந்நிலத்திற்குறியது.

குறிஞ்சிச் செடி கடல் மட்டத்திற்கு மேல் ஆறாயிரம் அடியில்தான் வளரும் தன்மை வாய்ந்தது. இவ்வளவு உயரம் தேவையானால் உறுதியாக அது மலை நிலமாகத்தான் இருக்க வேண்டும். அது ஒன்பதாவது ஆண்டிலிருந்து பன்னிரண்டாவது ஆண்டு வரை மலரும் இயல்புடையது. இயற்கையில் இத்தகைய வியப்பிற்கு உரிய குறிஞ்சிப் பூவைத் தவிர வேறொரு பூ இன்மையால் அதன் தனித்தன்மை விளங்க அப்பூவின் பெயரையே குறிஞ்சியெனச் சூட்டியிருக்கலாம். அதோடு குறிஞ்சித்தேன் மணத்திற்கும், இனிமைக்கும் பெயர் பெற்றது. பல ஆண்டிற்கு ஒரு முறை அரிதாகக் கிடைக்கின்றது. தனிப் பூந்தேன் எனும் சிறப்பிற்குரியது. பூவும் தேனும் கொண்டுள்ள தனித்தன்மையினால் குறிஞ்சி எனப் பெயர் ஏற்படலாயிற்று. ஐங்குறுநூற்றில் கபிலரின் தோழி கூற்றாக இடம் பெறுகின்ற பாடலில் வரைவிடை வைத்து பிரிந்த தலைமகன் மீட்சி உணர்ந்த தோழி ஆற்றாளாகிய தலைமகட்குச் சொல்லியது.

> “பெருவரை வேங்கைப் பொன்மருள் நறுவீ
> மான்இனப் பெருங்கிளை மேயல் ஆரும்
> கானக நாடன் வரவும் இவண்
> மேனி பசப்பது எவன் கொல்? அன்னாய்!” (ஐங்குறு – 217)

தலைவியை வரைந்து கொள்வதற்கு வேண்டிய பொருளை ஈட்டி வரச் சென்ற தலைவன் மீண்டு வந்தான். அவன் வரவினை தெரிந்து கொண்ட தோழி, பிரிவாற்றாத தலைவியை ஆற்றும்படி கூறியது. இப்பாடலில் கருப்பொருளாக 1. பொன்னிற வேங்கைப் பூக்கள் 2. மானினம் உண்ணுதல் ஆகும். இதில் இறைச்சியாக வருபவை 1. தலைவனின் பெருஞ்செல்வம் 2. தலைவியுடன் தோழியும் கிளையும் இனிமேல் துய்ப்பர் என்பதாகும். இவ்வாறு குறிஞ்சி நிலமக்கள் ஒவ்வொரு செயலிலும் வாழ்வியல் உண்மைகளையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் கடைப்பிடித்தனர் என்பது புலனாகிறது.

முல்லைத் திணை

முல்லைநிலம் செம்மை நிறங்கொண்டு விளங்குவதால் செந்நிலம் செஞ்சுவல் எனப் பெயர் பெற்றுள்ளது. முல்லைநிலம் தண்ணறுமுடைத்தாய் விளங்குவதால் தண்ணறும் புறவு எனப் புலவர்கள் குறிக்கின்றனர். நீல மணியினிடையே செம்பவளம் போலக் காட்சித் தருவதை,

> “மணிமிடைப் பவளம் போல அணிமிகக்
> காயாஞ் செம்மல தாஅய்ப் பலவுடன்
> ஈயல் மூதாய் ஈர்ம் புறம் வரிப்ப” (அகநானூறு 304 -13-15)

அகநானூற்றில் காண முடிகிறது. முல்லை நிலத்திற்குரிய மலர்களில் தலையாயது முல்லை. நறுமலர் எனத் திகழும் இம்முல்லை மலர் மகளிர் நறுமண இல்வாழ்வைப் போற்றும் விதத்தில் கற்பு எனும் பொருளில் வழங்கியுள்ளனர். மேலும் அவர்கள் ‘விருந்தோம்பல” பண்பிலும் சிறந்து விளங்கியுள்ளனர்.

முல்லைநில மக்களின் வாழ்வியல்

முல்லைப்பகுதி மேய்ச்சல் நிலங்களைக் கொண்டிருப்பதால் ஆடு மாடு வளர்த்தல் முக்கிய தொழிலாகும். இவர்களை ஆயர், கோவலர், அண்டர், இடையர் என்றழைப்பர். முல்லை நிலத்து ஊர்களை, ‘கோவலர் பெருந்தண் நிலையப் பாக்கம்’ (ஐங்.433) எனக் குறிப்பிடுகிறது. இவர்களுடைய குடிசைகள் குறுகிய கால்களை உடையது. அதில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஆட்டுமறிகள் தின்னுவதற்குரிய தழைகளை கட்டியிருப்பர். மாடுகளைக் கட்டி வைக்கும் தடுப்புகள் இருக்கும். காலில் எப்போதும் செருப்பு அணிந்திருப்பர். இவர்களின் உணவு தினைச்சோறு, வரகுச்சோறு, கூழ், பால், இறைச்சியாகும். இவர்கள் தமது உணவுடன் அவரைப் புழுக்கினையும் சேர்த்துக் கொள்வர். முல்லை நிலத்து மக்களின் தொழில் தமது பொருள்களை உறிகளில் வைத்து தோளில் சுமப்பர், கையில் கவர்க்கோல் கோடாரிகளால் தழைகளை ஒடித்து ஆடுகளுக்குக் கொடுப்பர். ஆடு மாடுகள் நீர் உண்ண நீர் நிலைகளைத் தோண்டுவர். ‘ஏறுகோடல் விழா’ நடைபெறும். ஆயரும் ஆய்ச்சியரும் ஒருங்கு கூடி குரவக் கூத்தாடி திருமாலை வணங்குவர். இவர்கள் நடுகல்லை நட்டு வழிபடுவர், சிறுதெய்வ வழிபாடு உண்டு. முல்லை நிலத்தை அடுத்துள்ள தாழ்நிலப் பகுதி மருதமாகும். மருதநிலத்தைச் சார்ந்த முல்லைநில மக்கள் உழவுத் தொழிலைச் செய்வர். காடுகளை அழித்து மாடுகள் புகாதவாறு வயற்பயிருகளை நடுவர். வரகு தானியங்களைக் கொண்டு குதிர்கள் அமைப்பர். வரகு விதிகையை யுடைய பந்தரும் காணப்படும்.

மருதத் திணை

குறிஞ்சி குத்துச் செடி முல்லை படர் கொடி. மருதம் பெரிய மரம் குறிஞ்சியில் பூவும் தேனும் குத்துச் செடியாய் நின்று வழங்கியது. முல்லையில் புல்லும் மலரும் பற்றிப் படர்ந்து விரிந்து படர்ந்து நறு நிழலீந்து மரமும் பல வகையுமாய்ப் பல வகையில் உதவின. மருதமரம் இந்நிலத்தில் பெருக வளர்வதால் இதனை மருதம் என்றனர். ஆறும் ஓடையும் அயல் நின்ற வயலும் வெளியும் மண்மறைத்து மாடடர்ந்து பூச்சிறந்து மகரந்தம் மிகுந்ததால் மருதம் என்று பெயரமைந்திருக்க வேண்டும். மருதமரம் ஓங்கியுயர்ந்த கிளைகளால், மணங்கமழ் பூக்களால் செல்வச் செழிப்பின் எடுத்துக்காட்டுப் போல விளங்கிற்று.

மருத நிலமக்களின் வாழ்வியல்

கடலுக்கும் மலைக்கும் இடைப்பட்ட நாட்டுப்பகுதியே மருதம். பலவகை பயிர்களுக்கேற்ற நீர்வளமும், நிலவளமும உடையது. இவர்களின் ஓர் சிற்றூர், பேரூர் என்று அழைக்கப்படும். மருத நிலமக்களை களமர், உழவர் என்பர். வயல்களை எருதுகளை வைத்து உழுவர். காவிரி நாட்டில் ஒரு வேலி நிலம் ஆயிரகணக்கான செந்நெல்லை விளைவித்தது.

“சாலி நெல்லின் சிறைக்கொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக
காவிரி புரக்கும் காடு கிழவோனே” (பொருந.246.248)

களத்தில் வருவார்க்கு நெல் வழங்குதலே அன்றி உணவும் அளித்தனர். வாளை மீனின் பொரியலை நெல்லான கள்ளுடன் சேர்த்து வழங்குவர். கரும்பாலைகளிலிருந்து சாறு எடுப்பர். அக்கரும்புச் சாற்றை பருகுவதற்குக் கொடுப்பர். அவல் இடிப்பர். விருந்தினருக்கு வாளை, ஆமை தசைளையும், கரும்புச் சாற்றையும் கொடுப்பர். தலைவன் இல்லாதபோது பிள்ளைகளைக் கொண்டு அரிசியாலாகிய வெள்ளிய சோற்றையும், நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவையைக் கொடுப்பர். மலையில் வாழும் கோழி பொறியலும் கொடுப்பர். அரிசியாலாக்கிய கள்ளையும் கொடுப்பர்.

நெய்தல் திணை

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் திணைக்கு உரியன. இக்கடல் சார்ந்த இடங்களில் நெய்தற் செடி சிறந்து காணப்படுகின்றது. ‘பாசடை நிவந்த கணைக் கானெய்தல் இனமீன் இருங்கழியோத மல்கு தோறும் வளர்த்தது’ எனக் ‘குறுந்தொகை’ கூறுகிறது. ‘இருங்கழி யோதம் இல்லிறந்து மலர’ வள்ளிதழ் நெய்தல் கூம்புகிறது’ என்று நற்றிணை விளக்குகின்றது. ‘மணிப் பூ நெய்தல் மார்கழி நிவப்பத் தோன்றுகிறது’ என அகநானூறு குறிப்பிடுகிறது. இருங்கழி ஓரத்தில் கழிசேர் மருங்கில் நெய்தல் மலர் நன்றாக இலைகளுக்கு மேல் வெளியே நீட்டிப் பூக்கும். கணைக்கானெய்தல் கண்போல் நெய்தல்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நீட்டிப்பூக்கும், கணைக்கானெய்தல் கண்போல் நெய்தல் என்று பல இடங்களில் பேசப்படுகின்றன. நெய்தல் நீட்டிப்பூக்கும், நெய்தல் மலர் நறுமணமுடையது. இதன் தாதை வண்டினம் பெரிதும் விரும்புகின்றது.

நெய்தல் நிலமக்களின் வாழ்வியல்

- கடலை அடுத்த பெரும் மணற்பகுதியில் மக்கள் நெய்தல் நில மக்கள் ஆவர். ஊர்கள் உப்பங்கழியை அடுத்தும் தாழை வேலிகளுடனும் காணப்பட்டன.
- இவர்களின் குடிசைகள் வஞ்சி, காஞ்சி மரங்களால் கட்டப்பட்டிருக்கும். தாழை நாரால் கட்டி தருப்பைப் புல்லால் வேய்ந்திருப்பர். பரதவர்கள் பிள்ளைகளோடு நீர்நிலைகளில் மீன் பிடிப்பர். இவர்களை 'மீன் வேட்டுவர்' என அகநானூறு குறிப்பிடுகிறது. வலைஞர் எனவும், திமிலோன் எனவும், உப்பெடுத்தலால் உமணர் என்றும் அழைப்பர்.
- இவர்கள் இரவிலும் மீன்பிடிக்கச் செல்வர். கொண்டு வந்த மீன்களைக் கரையில் கொட்டி புன்னை நிழலில் அமர்ந்து கள்ளைக் குடித்து மகிழ்வர்.
- மீனினை உலர்த்துவர். அதை உண்ண வரும் கிளிகளை ஓட்டுவர். மீன்களை விற்று நெல் முதலியனவற்றை பெறுவர். இவர்களது உணவு அரிசி கூழ், மீன் கூட்டு முதலியனவாகும்.
- சுறா மீனின் எலும்பினை நட்டு அதில் இறைவன் உறைவதாக வழிபட்டன. தாழை மலர், புன்னை மலரை அறிவர். உலா நாளில் (பௌர்ணமி) கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாது கடற்கரையில் நின்று வழிபாடு செய்வர். மீனும் கள்ளும் உண்டும் ஆடியும் பொழுது போக்குவர் என்ற நெய்தல் நில மக்களின் வாழ்வியல் உண்மைகள் வெளிபடுகின்றனர்.

பாலைத் திணை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போலவே பாலையும் ஒருவகை நிலம் எனப் பெரும்பாலான மக்களும் புலவர்களும் கருதி வந்தனர்.

- இதனுள் 'பாலை' எனும் மரமொன்று வளர்ந்தமையால் இது பாலை எனப்பட்டது என்றனர். இதில் வாழும் மக்கள் வில்லும் அம்பும் கருவிகளாக கொண்டு வேட்டையாடி விலங்குகளைக் கொன்று வாழ்ந்தனர்.
- பாலை நிலம் பொட்டல், அத்தம் சுரம் என்பர், மழையற்ற வறண்டநிலம் அது. 'பாலை நின்ற பாலை நெடுவழி' எனும் தொடர் பாலைமரம் என்ற ஒன்று உண்டு என்று எண்ணினர். பாலையின் நெற்று குறித்தும் பாலை எனும் மரத்தின் நாரை யானை பிளந்துண்ணும் என்றும் நற்றிணை 107-ஆம் பாடல் குறிப்பிடுகிறது.
- பாலைத் திணையை ஓர் உண்மையான நிலம் எனக் கொள்ளவே முடியாது. அதற்கென தனி நாகரிகம் வளர்ச்சி எதுவுமே இல்லை. பெரும்பாலும் கொள்ளையிடலும், கொலைபுரிதலும் இயல்பாகவே ஓர் அநாகரிக செயலாகவே கருத வேண்டியுள்ளது.

பாலை நிலத்தின் இயல்புகள்

உலகில் இன்பத்தை நினைக்காத மொழியில்லை இலக்கியம் இல்லை நாடு இல்லை ஆயினும், அவற்றுள் ஒன்றாவது தமிழ்மொழி அவ்வின்பம் பற்றி நினைத்ததைப் போல் நினைக்கவும் இல்லை. அது வரையறை செய்து ஒழுங்கு நியதி கண்டு அமைந்தது போல காணவும் இல்லை செயற்படவும் இல்லை அவ்வின்பம் குறித்து தமிழ் வகுத்துள்ள முறைகள் சிறந்தவை நாகரிகமானவை பொருட் சிறப்புடையவை பயன் மிகுந்தவை அவ்வின்பம் எனும் பொருளைப் பற்றி மனிதத் தன்மைக்குள் எளிமையும் மென்மையும் ஒரு சேர உணர்ந்து யாங்கும் யாரிடத்தும் அம்மென்மை (Delicacy) சிறிதும் கெடாதவாறு வகுத்தது மக்கட்கு ஏற்ற தொன்றாகும். பாலையின் உரிப்பொருளாகிய பிரிவிலே தான் வாழ்க்கையின் மேடுபள்ளங்கள், உயர்வுதாழ்வுகள் தோன்றுகின்றன, நிகழ்கின்றன. உளவியலாளர்கள் பிரிவுத்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

துன்பம் பற்றிப் பாடும் பொழுதுதான் புலவரின் மனிதப் பண்புகளை நன்குணர்த்த முடியும் என்கின்றனர். இன்பமும், துன்பமும் விரவி வருவதே வாழ்க்கையாகும். திறனாய்வாளர்கள் சேக்சுபியரின் நாடகங்களில் வுசயபநைந ஊழஅநனநைள தான் பெருஞ் சிறப்புக்குரியன என்று குறிப்பிடுகின்றனர். “உலகம் துன்பம் நிறைந்ததுதான், அத்துன்பங்களிடையே இன்பத்தைக் கண்டு மகிழுங்கள்' என அறிவுறுத்துகின்றார்” “புறநானூற்றில் பல்குடுக்கை நன்கணியார், இன்னாதம்ம உலகம் இனிய காண்க இயல்புணர்ந்தோரே” (புறம்-194-6-4) எனப் பாடுகிறார். பாலைநில மறவரின் தோற்றம் பற்றியும் அவர்கள் வாழ்கின்ற ஊரின் நிலைப் பற்றியும் சொல்லப்பட்டவையே மேலே குறிப்பிடப்பட்டவை. வழிப்பறிக்கு ஒன்றும் இல்லாதபோது வழியில் செல்வோர் வெட்டுண்ட உடல் எப்படித் துடிக்கிறது. என்பதைக் காணக் கொலை புரிவர் என்ற கூற்றினை எந்த நாகரிகச் சமுதாயமும் ஏற்றுக் கொள்ளாது பிரிவின் அருமையைப் புலப்படுத்த கையாண்ட நெறிதான் பாலைநிலக் கொடுமையின் வருணனையே தவிர வேறு ஒன்றுமில்லை.

நிறைவாக

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகம், புறம் என்னும் பொருண்மையில் அமைந்துள்ளது. அகத்திணையியலில் முப்பொருள் பாகுபாடும் ஐவகை நிலமும் அமைந்துள்ளன. ஐவகை நிலங்களில் காணலாகும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களில் காணலாகும் மக்களின் வாழ்க்கை முறைகளும், ஐவகை நிலங்களில் காணலாகும் இயற்கை வளங்கள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் பழந்தமிழர்கள் எந்த ஒரு சிறு செயல் செய்வதாக இருந்தாலும் அதற்கென ஒருசில வாழ்வியல் நெறிமுறைகளைக் கடைப்பிடித்தனர் என்பது பற்றி இக்கட்டுரை வாயிலாக ஆராயப் பெற்றுள்ளன.

துணை நின்ற நூல்கள்

1. சுப்பிரமணியன், ச.வே. (உ.ஆ) தொல்காப்பியம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600 008.
2. சுப்பிரமணியன், ச.வே, (உ.ஆ) அகநானூறு, மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு சிதம்பரம் - 626 001 முதல்பதிப்பு – 2009.
3. சுப்பிரமணியன், ச.வே, புறநானூறு, (உ.ஆ) மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு சிதம்பரம் -626 001 முதல்பதிப்பு – 2009.
4. சுப்பிரமணியன், ச.வே, நற்றிணை, (உ.ஆ) மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு சிதம்பரம் -626 001 முதல்பதிப்பு – 2009.
5. சுப்பிரமணியன், ச.வே, பொருநராற்றுப்படை,, மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு சிதம்பரம் - 626 001 முதல்பதிப்பு – 2014.
6. மு. சண்முகம் பிள்ளை, சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி சென்னை – 600113.
7. கந்தசாமி. சோ.ந. ஐங்குறுநூறு ஆராய்ச்சித் தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், 53. புதுத்தெரு, சிதம்பரம் - 608001, முதல்பதிப்பு – 2014.
8. பரிமேலழகர் (உ.ஆ), திருக்குறள் மூலமும் உரையும், அருணா பப்ளிகேஷன்ஸ், 12. முதல்தளம், வடக்கு ஜகநாதாநகர், வில்லிவாக்கம், சென்னை – 600049, மூன்றாம் பதிப்பு – 2018.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

டி. செல்வராஜ் சிறுகதைகளில் தனிமனித வாழ்வியல் நெறிகள்

Individual Life Principles in the Short Stories of D. Selvaraj

ச.செல்வ சங்கரி, முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வு மையம், ஏ.பி.சி மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

Abstract

The research article tries to cater the life principles as shown in the short stories of D.Selvaraj. he is a versatile writer and an eminent man of letters. This portrayal also concentrates on the responsibilities of a man in the society. In all of his short stories, he had created a set up of logical outlook that a man's personal life ethics are also important for the development of the society. Hence, this article tries to bring forth the life norms of an individual keeps forth the construction of a society.

Keywords: Individual Life Principles, Short Stories of D. Selvaraj, Tamil Culture

முன்னுரை

ஒரு படைப்பாளன் தான் வாழ்ந்து வரும் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கும் போது மக்களின் வாழ்க்கை முறைகளும், சில நிகழ்வுகளும் அவனது கவனத்தை ஈர்க்கின்றன. அவ்வாறு படைப்பாளனின் மனதைக் கவர்ந்த செயல்பாடுகளுக்கும், நிகழ்வுகளுக்கும் தகுந்த வடிவம் கொடுக்கும் போது அவை இலக்கியங்களாக மலர்கின்றன. அந்த வகையில் டி. செல்வராஜ் படைப்புகளில் சிறுகதைகள் சமூகத்தில் பன்முகமாந்தர்களை அடையாளப்படுத்துகின்றன. இவைகள் யாவும் மனித வாழ்க்கையை மையமிட்டவையாகும். இவருடைய எந்த படைப்பை எடுத்து வாசித்தாலும் வாசகன் உள்ளத்தில் சமூகத்தின் மீது காணப்படும் ஆர்வமும், சமூகத்தை முன்னேற்றும் எண்ணமும் பிறந்துவிடும். தனிமரம் தோப்பாகாது எனினும் தோப்பாவதற்கு அவை துணைபுரியும். அதுபோல தனிமனிதன் சமுதாயமாகமாட்டான். எனினும் சமுதாயமாவதற்கு அவன் துணைபுரிவான். தனிமனித வாழ்க்கை சிறக்கும் போது சமுதாயமும் சிறப்படையும். மனிதனுடைய கல்வி, தன்னம்பிக்கை, காதல், திருமணம், தனிமை போன்ற தனிமனித தொடர்பான வாழ்க்கை நெறிப்படுத்தும். ஆகவே டி.செல்வராஜ் சிறுகதைகளில் தனிமனித வாழ்வியல் நெறிகள் குறித்து ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

1. கல்வி

மனிதருக்கு உயிரும் பொருளும் இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆகும். இவ்விரண்டையும் இணைத்து மானுடரைச் செயல்பட செய்வது அறிவு ஆகும். கல்வி இல்லாத மனிதன் களர்நிலத்தினைப் போன்றவன். ஒரு நாட்டிற்கும், வீட்டிற்கும், மக்களுக்கும் முக்கியமானது கல்வியே என்றால் அது மிகையில்லை. உடலால் பெற முடியாத வலிமையை அறிவால் பெறமுடியும். அதற்கு கல்வி இன்றியமையாத ஒன்றாகும்.

'பூங்காற்று திரும்புமா?" என்ற சிறுகதையில் சிவகாமி - தாசன் தம்பதியரின் மகன் முருகன். சிறுவனாக இருந்தபோதும் கல்வியின் மீது தணியாத தாகத்தினால் படிக்க விரும்புகிறான். ஆனால் தாசனோ அவன் கல்விக்கு தடை விதிக்கிறான். தறி பழகவிட்டு வருமானம் ஈட்டலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறான். இதனால் மிகுந்த மனவேதனையுற்ற

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தாய் சிவகாமி கணவனை எதிர்க்கிறாள். இறுதியில் கணவனது வாதமே வென்றது. முருகனது கல்வியும் தடைப்பட்டது. இருந்த போதிலும் தறி நெய்த மீதி நேரங்களில் திருக்குறளை ஆர்வமுடன் கற்றான். ஓர் நாள் இரவில் தாசன் குடி மயக்கத்தில் தெருவில் கிடக்க, மண்ணெண்ணெய் விளக்கேற்றி படிக்க நினைத்த முருகன் திடீர் தீயால் வீடு முழுவதும் எரிந்தது. இவ்விபத்தில் தாய் சிவகாமியும், சிறுவன் முருகன் உயிரிழக்கின்றனர். இதனால் மிகவும் மனமுடைந்து போகிறான் தாசன். தனது தம்பியின் மூன்று பெண் பிள்ளைகளும தறி நெய்வதை கண்டு உள்ளம் பதைபதைத்து, மூன்று பெண் பிள்ளைகளையும் பள்ளிக்குச் செல்ல வழிவகைச் செய்கிறான். இக்கதையில் வரும் சிறுவன் முருகனின் மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றார், படைப்பாசிரியர்.

"பஞ்சம் பிழைக்கப் போன இடத்தில், குடியை நிறுத்திவிட்டு ராப்பகலாக நெசவு செய்து சிறுகச் சிறுகச் சேர்த்த பணம், தம்பியின் குடும்பத்தைக் காப்பாற்ற உதவியதே என நினைத்து நிம்மதி பெருமூச்சு விட்ட தாசன், தம்பி மகள்களை மீண்டும் படிக்க அனுப்பினான்"[1] என்ற வரிகளில் மூலம் கல்வி வாழ்க்கையை மேம்படுத்தும் என்று கூறுகிறார்.

'தொண்டன்' என்னும் சிறுகதையில் தொண்டர் ஆறுமுகம், காங்கிரஸில் சேர்ந்த நாள் முதலாய் காந்தியின் கொள்கைக்கு மாறாக இதுவரை நடந்ததில்லை. எந்த எதிர்ப்பார்ப்பின்றி உண்மையான தொண்டான சேவை புரிந்த ஆறுமுகம் நாடி தளர்ந்து வயது முதிர்ந்து தான் செய்த பணிக்கு நல்ல மதிப்பு இல்லையே என மனமுடைந்த வேளையில் ஒரு சேரிப்பெண்,

" 'கும்பிடறேன் சாமி' இவ்வாறு சொல்லிக் கொண்டே தட்டை அவர் முன்னால் வைத்துவிட்டு அவர் காலில் விழுந்து நமஸ்காரம் செய்தாள்......'எம்மவன் பட்டணத்திலேருந்து வந்திருக்கான் சாமி', என்று சொல்லிக்கொண்டே சிரித்தாள் எசக்கி.....'என்னவோ சாமி நீங்க மட்டும் எம்மவனைப் பள்ளிக் கூடத்திலே கொண்டு சேர்த்திருக்காட்டிக்கு இன்னிக்கு நாங்களெல்லாம் நடுத் தெருவிலே தான், என்றாள்"[2]

தொண்டர் ஆறுமுகத்தின் தன்னலமில்லா பணிகளில் இதுவும் ஒன்று. சேரியில் ஓடித்திரியும் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைத்து, இலவச உணவுக்கும் ஏற்பாடு செய்வார். அவ்வாறு பயனடைந்த எசக்கியின் மகன் இன்று பட்டணத்திலே ஒரு ஆபிஸிலே பியூனா வேலை கிடைத்திருக்கிறது என்றால் தொண்டருக்கு பேரானந்தம் அல்லவா. கல்வியின் பயன் கற்பதனால் மட்டும் இல்லை. கற்க வைப்பதாலும் கிடைக்கும் என்பது இக்கதையின் மூலம் உணரமுடிகிறது.

2. தன்னம்பிக்கை

தன்னால் முடியும் என்று தன்மை நம்புவதும் தன்னிடமுள்ள ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதும் தன்னம்பிக்கை ஆகும். இன்றைய அவசர உலகில் போட்டிகள் நிறைந்த உலகில் தன்னம்பிக்கை உள்ள மனிதர்களால் தான் வெற்றிபெற முடியும்.

ஊர்க்குருவியும், பருந்தும் என்ற சிறுகதையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாடசாமி பட்டாளத்திலிருந்து திரும்பியதும் தன் சேரிமக்களுக்கு பாடுபடுவதையே கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தான். ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற மாடசாமி ஊருக்கு பிரஸிடெண்ட் ஆனால். ஆனால் ஊரில் உள்ள மைனர் பிள்ளையால் இதனை தாங்கிக் கொள்ளமுடியவில்லை. இதற்கு மேலாக கலெக்டருடன் ஊர்வலமாக பிள்ளைமார் தெருவில் வரப்போவதை எண்ணி பெருங்கோபம் கொண்டு கலவரம் புரிய கேடி வேலாண்டியையும், அனுப்பி வைத்தார். ஆனாலும் சிறந்த நாட்டுப்பற்றும், தன்னம்பிக்கையும் கொண்ட மாடசாமி கலெக்டர் அருகில் கம்பீரமாக அமர்ந்து பிள்ளைமார் தெருவின் வழியாக வலம் வந்தது ஊர்க்குருவியும் பருந்தாக அமைந்ததாக உணரமுடிகிறது.

"அவனைப் பார்க்க வேண்டுமென்று மைனர் முதல் முதலாக கூப்பிட்டனுப்பிய போது 'டீக்காக' வந்து நின்ற மாடசாமி இதர சாதி ஜனங்கள் செய்வதைப் போன்று தோள் துண்டை இறக்கவில்லை. சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் பண்ணவில்லை. இது உண்மையில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நாற்பது வருஷங்களுக்குப் பிறகு ஒருவன் பிள்ளையவர்களின் முகத்தில் காறி உமிழ்வது போன்றிருந்தது"[3]

என்பதிலிருந்து துணிவும் நம்பிக்கையும் உள்ளவனுக்கு இருள் கூட விளக்குகளாகி நாளை பொழுது வெற்றிக்கு வழிகாட்டும் என்பதை விளக்கியுள்ளார்.

காதல்

மனித வாழ்க்கையில் காதல் என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் காதல் செய்ப் பிறந்தவர்கள். தாயை, தந்தையை, தாரத்தை, குழந்தையை, காதலியை, இயற்கையை என அவரவருக்கு பிடித்ததைக் காதலிப்பது மனித இயல்பாகும்.

'தென்றல் சுடுமா?' என்ற சிறுகதையில் மீனாட்சி தான் நேசித்த சேகரை திருமணம் செய்து கொள்ள துடிக்கிறாள். அதற்கு மறுத்த சேகரைப் பயமுறுத்தி தற்கொலை செய்துகொள்வேன் என்று சொல்லி திருமணத்திற்கு சம்மதம் வாங்குகிறாள். திருமணமும் முடிந்தது. திருமணம் முடிந்தபின் தனக்கு எய்ட்ஸ் இருக்கும் உண்மையைக் கூறுகிறான் சேகர், திருமணத்திற்கு மறுத்ததன் காரணத்தை இப்போது உணருகிறாள் மீனாட்சி. சேகர் மீனாட்சியை அவளது மாமன் மகன் பூபதிக்கு திருமணம் செய்து வைக்க எண்ணுகிறான். ஆனால் மீனாட்சி அதனை ஏற்காது சேகருடன் வாழவே எண்ணுகிறாள். குறையிருந்தாலும் தான் காதலித்தவனையே ஏற்றுக்கொண்ட மீனாட்சியின் மனதினால், ஆசிரியர் உண்மையான காதல் எது என்பதை உணர வைக்கிறார்.

"உங்களை நான் அவமானப்படுத்தவோ ... அசிங்கப்படுத்தவோ ... மனசாரக் கூட நினைக்கமாட்டேன். எனக்கு நீங்க வேணும, உங்க மாறாத அன்பு வேணும்... என்னை விட்டுப் பிரிய மாட்டேன்னு சத்தியம் பண்ணுங்க"[4] என்று கூறுமிடத்தில் காதலன் வலிமை தெரிகிறது.

'தேனை விலக்கிய தேன் சிட்டு'என்கிற சிறுகதையில் தான் விரும்பிய ஏழை இளைஞனை மனதார ஏற்று திருமணம் செய்கிறாள் மாதவி. மகளின் திருமணத்தை செய்ய இயலாத மாதவியின் தந்தை தங்கமுத்து. மகளான மாதவியின் பெயரில் மாற்றி எழுதி கொண்டுவருகிறான். ஆனால் அதனை புறக்கணித்த மாதவி.

"சாதாரண டெபுடி தாசில்தாரான உங்களால எப்படி இவ்வளவு சொத்துச் சம்பாதிக்க முடிந்தது? எனக் கேட்டாள்.....தலைகவிழ்ந்து போனார் தங்கமுத்து...எத்தனை குடும்பத்தைக் கெடுத்து இந்தச் சொத்தைச் சம்பாதிச்சிருப்பீங்க... எனக்கு வேண்டா உங்க பணத்தால சாதாரண லச்சரானதே... பெரிய பாவம்... இந்தச் சொத்துக்களை அனாதை ஆசிரமத்துக்குக் கொடுத்திடுங்க" பத்திரங்களை திருப்பிக் கொடுத்தாள் மாதவி."[5] காதல் என்பது மனதினை மட்டுமே பார்க்கும். என்பதை உணர்த்துகிறார்.

திருமணம்

திருமணம் என்பது ஆணும் பெண்ணும் அன்பின் வழி ஒருங்கிணைவதாகும். திருமணம் என்பது எதிர்ப்பார்ப்போடுதான் வருகிறது. அதில் சிறிய ஏமாற்றம் வந்தாலும் அந்த வாழ்க்கை களங்கப்பட்டதாய் போய்விடுகிறது. எனவே வாழ்க்கையைப் புரிந்துகொண்டு செயல்பட்டால் ஏமாற்றம் நிகழ வாய்ப்பில்லை.

'அண்ணலின் அன்பு வழி' என்கிற சிறுகதையில் குடிகாரனகாவும், கள்ளச்சாராயம் விற்பவனாகவும் வரும் சக்திவேல், பரமானந்தம் என்கிற காந்தியவாதிக்கு வலுக்கட்டாயமாக மது அருந்த வைக்கிறான். இதனைக் கண்ட நர்ஸ் வசந்தா அவரை மீட்டு உதவிபுரிகிறாள். ஒருகட்டத்தில் சக்திவேல் அவனது எதிரியான அருண்பாண்டியனால் தாக்கப்பட்டு உயிருக்குப் போராடுகிறான். இதனைக் கண்ட வசந்தா அரசு மருத்துவமனையில் அவனை சேர்த்து குணமடையும் வரையில் கூடவே நின்று சேவைபுரிகிறாள். உடல்நலம் பெற்றவுடன் தீராத பகையால் மீண்டும் அருண்பாண்டியனை தாக்க கள்ளச்சாராயத்தின் மூலமாக சதிவேலை செய்கிறான், சக்திவேல் இதனை அறிந்த வசந்தா தடுக்கிறாள்.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"'பாப்பாக் கண்ணு... இந்தச் சாராயணத்தைச் சாக்கடையிலே ஊத்திடறேன் ... ஆனா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்..' என்று ஓங்காரமாக சிரித்தான். 'நீ நல்லவனா திருந்தினா ...என்னைத் தர தயார்' என்று முழங்கினாள் வசந்தா.'என்மீது அன்பும் ஆசையும் இருந்தா, உண்மையா நல்லவனாத் திருந்து, வர்ற காந்தி ஜெயந்தியன்று நமக்கு திருமணம்' என்றாள் வசந்தா. வசந்தா மனைவியாகப் போகிறாள் என்ற இனிக்கும் எண்ணத்தால் தனது துஷ்டத்தனங்களைத் தூக்கியெறிந்தான் சக்திவேல். நர்ஸரி ஸ்கூல் பஸ் டிரைவர் வேலைக்கு சேர்ந்தான் சக்திவேல். வசந்தாவின் நெஞ்சத்தில் புகுந்தான்"[6]

பல எதிர்பார்ப்புகளுடன் நடக்கும் திருமணம் இங்கு ஒருவனை நல்வழிப் படுத்துவதற்காக அமைவது நன்மையே என்று வசந்தாவின் மூலம் ஆசிரியர் விளக்குகிறார்.

தொகுப்புரை

உலகிலுள்ள உயிரினங்களின் பகுத்தறிவைப் பெற்றுள்ள மனித இனமே சிறப்பானதாகும். தனிமனித வாழ்வுக்குத் தேவையான செய்திகளை மையப்படுத்தி டி. செல்வராஜின் படைப்புகள் அமைந்துள்ளன. தன்னம்பிக்கை, கல்வி, காதல், திருமணம் போன்றவைகளின் மூலம் வாழ்வியல் நெறியைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. தென்றல் சுடுமா? - ப.26
2. நோன்பு - பக்.43,44
3. நோன்பு - ப.64
4. தென்றல் சுடுமா? - ப.11
5. தென்றல் சடுமா? - ப.70
6. தென்றல் சுடமா? - பக். 40, 41, 42

துணைநூற்பட்டியல்

1. நோன்பு - டி.செல்வராஜ்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
சென்னை - 600 098
முதற்பதிப்பு - ஆகஸ்ட் - 2005

2. தென்றல் சுடுமா? - டி.செல்வராஜ்
குறிஞ்சி மலர் பதிப்பகம்
2-143 சடையம் பாளையம்
டி.குமார பாளையம் - 638 183
நாமக்கல் மாவட்டம்.
முதற்பதிப்பு - ஏப்ரல் - 2008.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பத்துப்பாட்டில் பாணர்களின் வாழ்வியல்

The Social Life of the Panars in "Pattuppattu"

க.செல்வமுருகன், முனைவர் பட்ட ஆய்வாளர்,
இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010.

Abstract

The purpose of the article is to cater down the isocial life if the Panar people in "Pathuppattu". The work was written in the Sangam period. The Panar people's life is portrayed in "Pattupattu". The inner and the outer life of the people are the main deal of the collection. They are the people who dealt with music, dance and other related fine arts of the Sangam times. These are the principal traits of the Panar people. Therefore, this article, paves way to understand the life of the Panar people as shown in "Pattuppattu".

Keywords: Social Life of Panars, *Pattuppattu*, Sangam Literature, Gipsy Life, Music

முன்னுரை

வாழ்வியல் என்பது நம் வாழ்வில் நிகழும் ஒவ்வொரு நிகழ்வின் தொகுப்பு எனலாம். அதாவது நம் உடல் சார்ந்தும் உயிர் சார்ந்தும், உடை, உடைமை சார்ந்தும் வருபவை அனைத்தும் வாழ்வியலோடு தொடர்புடையவே. சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தில் பண் இசைத்தும், ஆடியும், பாடியும் வாழ்ந்துள்ளனர். அவ்வாறு பண் முதலான கலைகளைத் தொழிலாகக் கொண்டோர் பாணர் எனப் பட்டனர். அப்பாணர்களின் வாழ்க்கை முறை பண்டைய காலத்தில் எத்தன்மையுடன் இருந்தது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாணர்களின் வாழ்வியல்

வாழிடம்: கலைத் தொழிலை வாழ்வாகக் கொண்ட பாணர் சமூகம் தம் வாழிடத்தையும் கலை நயமிக்கதாய் அமைத்து வாழ்ந்து வந்துள்ளனர். மணம் கமழும் பொழில்கள், உயர்ந்த மலை உச்சியிலிருந்து வீழ்ந்தோடும் நீர், அழகிய பூந்தோட்டம் சூழ்ந்த பகுதியை வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்தனர்,

> "இயங்கு புணல் கொழித்த வெண் தலைக் குவிவு மணற்
> பல்வேறு பூத்திரள் தண்டலை சுற்றி
> அழுந்து பட்டிருந்த பெரும்பாண் இருக்கையும் (மதுரைக்காஞ்சி 336-342)

பெரும்பாணர்கள் நல்ல இயற்கை வளமும், எழிலும் கொண்ட அழகான வாழிடத்தைக் கொண்டு வாழ்ந்தனர் என்பதற்கு இப்பாடலே சான்றாகும்.

இசை வல்லாண்மை

சங்க காலத்தில் மக்களின் வாழ்வில் இசை தனித்த இடத்தினைப் பெற்றிருந்தது எனலாம். ஆடலும், பாடலும் கூத்துமாய் வாழ்ந்த பழந்தமிழர்களின் வாழ்வில் பாணர்களின் இசை இழையோடி காணப்படுகிறது. வலிவு, மெலிவு, சமன் என்ற மூன்று தானத்திலும் ஒவ்வொன்றில் ஏழு தானம் முடித்து பாடப்பெறும் 21 பாடல் துறைகள் என்பதே துறைபல எனச் சுட்டு வரும். பின்வரும் மலைபடுகடாம் பாடல் வரிகளின் மூலம்

> "வணர்ந்து ஏந்து மருப்பின் வள் உயிர்ப் பேரியாழ்
> துறைபல முற்றிய பைதீர் பாணரொடு" (மலைபடுகடாம் 37-40)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பேரி யாழினைத் தமக்குரிய இலக்கண மரபுகளில் பிறழாமல் வாசிப்பதற்கேற்ப ஆயத்தம் செய்து இசையை எக்காலத்தும் கேட்கும் செல்வத்தை உடைய அரசர்களின் அவைக்களத்தில் அவர்கள் செவிகளால் துய்த்து மகிழும் வண்ணம் தாம் வாசிக்கும் துறைகள் பலவற்றையும் அறிவு முதிர்ச்சியுற்ற பாணர்கள் வாசித்து முடிப்பர் என்று அறிவதிலிருந்தே அவர்களின் இசை வண்மையை நம்மால் உணர இயலும்.

பாணரது பொதுவுடைமைச் சிந்தனை

யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுகவென்று பொதுவுடைமை நோக்கில் வாழ்பவர்கள் பாணர்கள் வறுமையில் இருந்து செல்வம் பெற்ற பாணன் ஒருவன் மற்றொருவருக்குச் செல்வம் கிட்டும் வழியைக் கூறுவதிலிருந்தே இந்த மனப்பாங்கினை நாம் அறியலாம். புகழால் மேம்பட்டவனே கொல்லும் பசியாலே உன் சுற்றத்தார் பெரிதும் வாடி இருக்கின்றனர். நீயும் நெடுநாட்களாய் பெரும் பசியில் வாடியிருக்கின்றாய் எனவே காலம் நீட்டிக்காமல் உடனே செல்வாயாக என்றூ தான் பரிசு பெற்ற இடம் நோக்கி மற்றொரு பாணனுக்கு வழிகாட்டும் மாண்பை

"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின், நீடு இன்றி
எழுமதி வாழி ஏழின் கிளவ" (பொருநராற்றுப்படை 61-63)

எனும் பாடலடிகள் நிலைநிறுத்துகின்றன. பாடினியின் இசையும் அதன் வழி அறமும்,

"ஆறு அலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவுஇன் பாலை
வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி" (பொருநராற்றுப்படை 21-24)

பாடினியானவள் பாலை யாழைக் கொண்டுள்ளாள், அந்த யாழைக்கொண்டு நரம்புகள் கூடுமாறு தழுவியும், உருவியும் ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும் சீர்களையுடைய பாடலை நீர்மையோடு பாடுகின்றாள், அவ்வாறு பாடும்போது பாலை நில வழியே செல்பவரை அலைத்து பொருள் பறிக்கும் கொடுமையான ஆறலைக் கள்வர் கூட தம் கையிலுள்ள கொடிய ஆயுதங்களைப் போட்டுவிட்டு உருகி நின்றனர் என்பதன் வாயிலாகப் பாலை யாழை இசைக்கும் பாடினியரின் இசைத்திறத்தையும் அவர்கள் மக்களை மகிழ்வித்தலையும் இசையாலே அறம் போதித்த திறத்தையும் ஒருங்கே காணலாகிறது.

நாடோடி வாழ்க்கை

பாணர்கள் அரசர்களை ஆற்றுப்படுத்தி பரிசில் பல பெற்று வாழ்ந்து வந்தனர், அவ்வாறான வாழ்வில் அவர்கள் பல அரசர்களை நாடி ஓரிடம் விட்டு வேறிடம் நாடோடிகளாகத் திரிந்தனர். அவ்வாறாகத் திரிந்தபோது காட்டுப்பகுதியில் ஓய்வெடுப்பதைத் தன்மையாகக் கொண்டனர் எனப் பொருநராற்றுப்படை பாடல் வழியே அறியலாம்.

"நண்பகல் அந்தி நடையிடை விலங்களின்
பெடைமையில் உருவின், பொருந்தகு பாடினி
காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை" (பொருநராற்றுப்படை 46-52)

பாடினி பாடின தாளத்திற்குப் பொருந்துமாறு நாள்தோறும் ஆறுசொல் வருத்தம் தாங்கி இலைகள் உதிர்ந்த விட்டமையால் மேலே வலை கட்டியது போன்ற வரி நிழலிட்த்தே தங்கி காட்டகத்தே உறையும் தெய்வங்கள் மனமகிழும்படி அவற்றிற்குச் செய்யும் முறைமைகளைச் செய்தனர். தடாரியை வாசித்தனர்.

தொழில்

இசையைத் தொழிலாகக் கொண்ட பாணர்கள் சில நேரங்களில் மீன் பிடித் தொழிலையும் வையை ஆற்றங்கரையில் செய்து வாழ்ந்தனர் என்பதை மதுரைக்காஞ்சி பாடலடிகள் வழியே அறியலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"கோதையின் ஒழுகும் விரிநீர் நல் வரல்
அவிர் அறல், வையைத் துறை துறை தோறும் (மதுரைக்காஞ்சி 339-340)

வறுமை

வறுமை இன்னதென்று முழுமையாய் உணர்ந்து வாழ்ந்தவர்கள் பாணர்கள் எனலாம், வாழ்வின் பெரும்பகுதியை வறுமையிலேயே கழித்தவர்கள் இவர்கள். சான்றாகப் பெரும்பாணாற்றுப்படை வழியே

"கல்லென சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதலும்
புல்லென் யாக்கைப் புலவுவாய் பாணன்" (பெரும்பாணாற்றுப்படை 21-22)

பசி மிகுதியால் வாழும் சுற்றத்துடன் ஓரிடத்தில் நில்லாது திரிகின்ற, பொலிவற்ற வடிவினையும், கற்ற கல்வியை வெறுத்துக் கூறுகின்ற வாயினையும் உடையவன் பாணன் என்னும் வரிகளால் இவர்கள் எத்தனை வறுமையில் உழன்றிருப்பர் என்பதை அறிய முடிகின்றது.

தொகுப்புரை

பாணர்கள் பொருள் கொடுத்து விருந்தோம்பிய அரசர்களை நாடி தம் வறுமையைப் போக்கி வாழ்ந்தனர், வறுமை வரும்போது அதனைத் தாங்கிக் கொள்ளும் தன்மையும் அவ்வறுமையிலும் இல்லறம் தவறாது நின்று வாழும் மாண்பினர்கள் இவர்கள்.

நிகழ்த்துக் கலைஞர்களான இவர்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராது நாடோடிகளாய்ப் புதுப்புது சூழல்களை எதிர்கொள்பவராய் வாழ்ந்தனர்.

பாணர்கள் இசைக்கும் தொழிலோடு மீன் பிடிக்கும் தொழிலையும் சில நேரங்களில் செய்துள்ளனர். இசையால் தாம் துய்த்தும் பிறர் மகிழ்ச்சியைப் பேணியும் அரசர்களிடம் பரிசில்களைப் பல பெற்று சுகமாகவும் அதே நேரத்தில் எதிர்காலத் தேவை கருதாது அடுப்பில் காளான் பூக்கும் அளவிலான வறுமையிலும் முரணான வாழ்வை வாழ்ந்துள்ளனர்.

பயன்பட்ட நூல்கள்

1. மலைபடுகடாம்
2. *சிறுபாணாற்றுப்படை*
3. *பொருநராற்றுப்படை*
4. *மதுரைக்காஞ்சி*
5. *பெரும்பாணாற்றுப்படை*
6. *குறிஞ்சிப்பாட்டு*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நாலடியார் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

Life and Morale as Instructed by *Naladiyar*

முனைவர்.ர.செல்வ லதா, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-2

Abstract

The article caters about the morale of life as shown in literary work "Naladiyar". It is one of the very classical work in the Tamil literary tradition. "Naladiyar" comes under the "Pathinenkeelkanaku" collection. It is resembling the universal diadactic work "Thirukkural". It may be written at 250 b.c. it tells of valuable life and quotes fine morals to validate human lives. Hence, this article tries to bring forth the life oriented norms for the betterment of society.

Keywords: Life and Morale, Instructed by *Naladiyar*

முன்னுரை

பதினென்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார், பகுப்பு முறையில் மூன்று பகுதியாக திருக்குறளை ஒத்து காணப்படுகிறது. அறத்துப்பால் 13 அதிகாரங்கள், பொருட்பால் 26 அதிகாரங்கள் இ காமத்துப்பால் 1 அதிகாரம், என மொத்தம் 40 அதிகாரங்கள் உள்ளன சமணமுனிவர் பலரால் இயற்றப்பட்ட இந்நூலைத் தொகுத்தவர் பதுமனார். நான்கடிகளையுடைய நேரிசை, இன்னிசை வெண்பாவால் ஆனது. இயற்றப்பட்ட காலம் சங்கம் மருவிய காலமாகக் (கி.பி.250ஐ ஒட்டிய காலம்) கருதப்படுகிறது. அறத்துப்பாலில் மூன்றாவது அதிகாரமான ''யாக்கை நிலையாமை'' வழி வாழ்வியல் நெறிகள் பற்றி அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

யாக்கையின் நிலை

யாக்கை என்பது உடல் என்று பொருள் கொள்ளப்படுகிறது. இந்த உலகத்தில் நிலையானது என்று எதையும் கூற முடியாது. இறைவன் படைப்பில் உருவாக்கப்பட்ட உயினங்களில் மனிதப்பிறவி சிறப்புடையதாகக் காணப்படினும், இறப்பிற்கு பின் என்ற நிலையில் பிற உயிரினங்களான தாவர, விலங்குகளைப் பயன்படுத்த முடிகிறது ஆனால் மனித உடலைப் பயன்படுத்த முடியாது. அழுகி நாற்றமெடுத்து உடனே அப்பறப்படுத்தும் நிலையுடையது. இன்று மருத்துவ வளர்ச்சியின் காரணமாக இறந்த ஒருவரின் உடல் முழுவதுமோ அல்லது உடல் பாகங்களோ தானமாக வழங்க வேண்டும் என்ற விழிப்பணர்வு மக்களிடம் உள்ளது. அப்படி உடல் உறுப்பு தானம் செய்தால் மட்டுமே இவ்வுடல் இறப்பிற்குப் பின் சிலகாலம் பயனுடையதாகக் காணப்படும் மற்றபடி யாக்கை நிலை இல்லாதது. இதனை நாலடியார் பாடல் பின்வருமாறு உணர்த்துகிறது.

> "மலை மிசைத் தோன்றும் மதியம் போல் யானைத்
> தலைமிசைக் கொண்ட குடையர் -நிலமிசைத்
> துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட்ட டாரல்லால்
> எஞ்சினார் இவ்வுலகத்தில்." (யாக்கை நிலையாமை, பா.எ.:21)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மலைமேல் தோன்றும் முழுநிலவுபோல யானைமீது பிடிக்கப்பட்ட குடை நிழலில் சென்ற பேரரசரும் இவ்வுலகில் நிலைத்திருக்காமல் ஒரு நாள் இறந்தனர். இறந்தார் எனக் கூறப்படாமல் நிலைத்திருப்பவர் யாருமில்லை என்று கூறுகிறது.

"……….வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று" (கு.எ.22)

உலகில் இதுவரை பிறந்து இறந்தவர்களை எண்ண முடியாது என்று குறள் கருத்து உணர்த்துகிறது. இவ்வலகில் பிறப்புநிலை பெற்ற அனைத்துயிரும் எந்த நிலையிலிருந்தாலும் இறப்புநிலை அடைந்தே தீரவேண்டும் இது நியதி என்பதை அறிய முடிகிறது.

"சென்றே எறிய ஒரு கால்இ சிறுவரை
நின்றே எறிய பறையினை நன்றே காண்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டு எழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து." (யாக்கை நிலையாமை, பா.எ.24)

ஒரு வீட்டில் ஒருவர் இறந்தமையை அறிவிக்க முதல் முறையும், சடங்குகள் தொடங்கும்போது இரண்டாம் முறையும் சடலம் எடுத்துச் செல்லும்போது மூன்றாம் முறையும் பறை முழங்கப்படும்.முன்பு இறந்தவரின் உடலைப் பின்பு இறப்பதற்குரியவர் மூடித் தீச்சட்டி எடுத்துச் சுமந்து செல்லுதலே இவ்வுலக வழக்கு என்று இந்நூலில் கூறுகிறது.

சுபகாரியங்களில் கலந்துகொள்ளாவிட்டாலும் துக்க வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்பர். எதற்காக? இந்த இறப்புநிலை நாளைக்கு நமக்கும் உண்டு என்று அறிந்துகொள்வதற்காகத்தான். இன்று இந்தப் பெட்டியில் ஒருவரின் உயிரிழந்த உடல், ஒருநாளில் என் உடலும் இவ்வாறு உயிரற்று எல்லாவற்றையும் இழந்து கிடக்கும் என்று அறிய வைக்கிறது இந்நிகழ்வு. மண்ணிலிருந்து வந்த மனித இனம் மண்ணுக்குத் திரும்புவது இயல்பு என்பதை செத்தாரைச் சாவார் சுமந்து என்ற பாடல்வரி உணர்த்துகிறது.

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்த் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.'' (யாக்கை நிலையாமை, பா.எ.26)

நமது உடலானது தசை முதலியவற்றால் ஆகியதும் தோலால் மூடப்பட்டதுமான பை ஆகும். உயிராகிய கூத்தாடி இந்த உடலாகிய தோற்பைக்கு தங்கிப் பல தொழில்களைச் செய்து பின்பு பிரிந்துவிடுவான் இனி இவ்வுடலை மற்றவர் கயிற்றால் கட்டி இழுத்துச் சென்றாலும், முறைப்படி சுத்தம் செய்து அடக்கம் செய்தாலும்இ அவ்வாறு செய்யாமல் வீசினாலும் மற்றவர் இகழ்ந்தாலும் இவ்வுடலுக்கு கேடு ஏதுமில்லை என்று இப்பாடல் கூறுகிறது. உயிர் பிரிந்த அடுத்த நொடியில் உடலானது வேறு பெயர் பெறுகிறது.எல்லாம் அடங்கிய வெற்றுடல் தன் மதிப்பை இழந்து பிறரின் ஆளுகைக்குள் அடங்குகிறது.

"……….வாழ்நாள்
உலவாமுன் ஒப்பர வாற்றுமின் இயாரும்
நிலவார் நிலமிசை மேல்." (யாக்கை நிலையாமை, பா.எ.:22)

வாழ்நாள் முடிந்த பின்னர் உலகில் யாராலும் வாழ முடியாது. எனவே வாழ்நாள் முடிவதற்கு முன்பே சமுதாய நலப்பணி ஆற்றவேண்டும் என்று இவ்வரிகள் உணர்த்துகின்றன. உயிர் என்று பிரியும் உடல் தன் நிலை இழக்கும் என்று அறியாத மனித இனம் வாழும் போதே பிறருடன் மனம்ஒத்து, பிறருக்கு உதவி செய்து சமுதாயத்திற்கு பயனுள்ள வாழ்வு வாழவேண்டும்.

"மன்றம் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோம் ஆறே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வலிக்குமாம் மாண்டார் மனம்.'' (யாக்கை நிலையாமை, பா.எ:23)

திருமண அரங்கம் முழுவதும் பரவுமாறு முதலில் மங்கல மேளம் முழங்குகிறது. அன்றே அவர்க்கு பிணம் எடுப்பதற்குரிய சாப்பறையும் ஒலிக்கக்கூடும். எனவே அறிவுடையார் உள்ளமானது உடலின் நிலையாமையை உணர்ந்து அறச் செயல்கள் செய்தலைக் கடைபிடிக்கும் என்று கூறுகிறது.

"வழிப்படரல் வாயல் வருந்தாமை வாய்மை
………. ஆய்ந்து விடுதல் அறம்." (சிறுபஞ்சமூலம் பா.எ:97)

நல்வாழ்வை அடைய விரும்புகிறவர்கள்இ பொய்இ கொள்ளைஇ பிறர் பொருளைக் கவரல்இ மெய்மையல்லா நெறியின்கண் சேரல்இ பெரியோர் அறிவுரைகளை வெறுத்து நீக்குதல் ஆகிய ஐந்தையும் ஆராய்ந்து பார்த்து நீக்கிவிடுதல் அறமாகும் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

"வைததனால் ஆகும் வசைவணக்கம் நன்றாகச்
……..நெகிழ்ந்த
அருளினால் ஆகும் அறம்.'' (சிறுபஞ்சமூலம், பா.எ: 34)

தன்மனம் நெகிழ்ந்த அருளின் காரணமாக அறச்செயல்கள் நிகழும் என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. தீயவற்றை நீக்கி நல்லதையே செய்ய வேண்டும் என்ற எண்ணமும்இ மனதில் தோன்றும் அருளும் அறச்செயல்களுக்கு அச்சாணி என்று சிறுபஞ்சமூலம் எடுத்துரைக்கிறது.

"யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்கஇ யாக்கை
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்துவிடும்" (யாக்கை நிலையாமை, பா.எ:28)

மலைப்பகுதியில் வந்து படிந்து பின்பு கலைந்து செல்கின்ற மேகங்களைப்போல உலகில் தோன்றிய மனித உடல்களும் அழிவானவாகும். எனவே மனிதன்இ உடல்கள் உறுதியாக இருக்கக்கூடிய இளமைப்பருவத்திலேயே அறங்கள் பலசெய்து மனிதப்பிறவி எடுத்ததன் பயனாகிய வீடுபேற்றை அடைய முயலுதல் வேண்டும் என்று இப்பாடல் கருத்து உணர்த்துகிறது. மனிதப்பிறவியின் பயன் இம்மையில் அறவாழ்க்கை வாழ்ந்து அதன்பயனாக மறுமையில் வீடுபெற வேண்டும் அதுவே மனிதப்பிறப்பின் நோக்கம் என்று அறிய முடிகிறது.

"இளமை கழியும் பிணிமூப்பு இயையும்
……… வீடே புரிதல் விதி" (ஏலாதி, பா.எ:21)

கழிந்த நாள்போக எஞ்சியிருக்கும் நாட்களில் வீடுபேற்றிற்குரிய தவ ஒழுக்கங்களை விரும்புதலே முறை என்று பொருள் கூறுகிறது ஏலாதி.

"மறுபிறப் பறியா ததுமூப் பன்று'' (முதுமொழிக்காஞ்சி பா.எ.50)

மறுமை உண்மையை உணர்ந்து அதற்கேற்ப ஒழுகாதது முதிர்ந்த முதுமைஆகாது என்று இப்பாடல் கூறுகிறது. மறுமையை உணர்ந்து இம்மையில் அறவாழ்வு வாழ முதுமொழி உணர்த்துகிறது.

"படுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் - தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்" (யாக்கை நிலையாமை, பா.எ:27)

மழைநீரில் தோன்றி மறைகின்ற நீர்க்குமிழிகளைப்போல இவ்வுலகில் உடல்களும் தோன்றி விரைவில் மறையக்கூடியவை. இவ்வுண்மையை உணர்ந்து உலகில் மீண்டும் பிறந்து தடுமாறாதபடி வீடுபெறுவதற்குரிய அறநெறியில் வாழ்வோம் என உணர்ந்த பெரியோருக்கு ஒப்பானவர் இவ்வுலகில் வேறுயாருமில்லை என்று இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மனிதவாழ்க்கை நீர்க்குமிழி போல் தோன்றி அழகாகக் காட்சியளித்து நினையாத நேரத்தில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மறையக்கூடியது. சான்றோர் வீடுபேற்றிற்கான அறநெறியில் வாழ்வது உறுதி என்பதை அறியலாம்.

"மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
……. சாவா உடம் பெய்தினார்." (திரிகடுகம், பா.எ:16)

உலகில் மேலான புகழ்நாட்டியவனும், சிறந்த பெண்ணை மனைவியாகப் பெற்றவனும், குடிக்க நீர் குறைவுபடாது கிணறுகளைத் தோண்டி வைத்தவனும் ஆகிய மூவரும் எக்காலத்தும் இறவாத புகழுடம்பைப் பெற்றவர் என்று *திரிகடுகம்* கூறுகிறது. அறத்தின் வழியே ஒருமனிதனுக்கு புகழ் உண்டாகும். அவன் உடல் அழிந்தாலும் புகழுடம்பு உலகம் உள்ளவரை அழியாது என்று அறிய முடிகிறது.

முடிவுரை

உலகத்தில் நிலையில்லாத வாழ்வைப் பெற்றவன் மனிதன். அவன் இவ்வுடல் இன்பம் அடைய பலவழிகளையும் நாடித்தேடி ஓடுகிறான். எப்போது இவ்வுடலிலிருந்து உயிர் பிரியும் இவ்வுடல் மண்ணிற்குத் திரும்பும் என்று அறியாது வாழ்கிறான். நேற்றுதான் பார்த்தேன் இன்று இறந்துவிட்டார். இப்பொழுது பேசினேன் அதற்குள் என்ன நடந்தது? என்று திகைப்படைகிற வாழ்வுநிலையைப் பார்க்கும்போது இவ்வுலகில் பணம், புகழ், அறிவு, ஆற்றல், அழகு எல்லாம் குப்பை என்ற எண்ணம் தோன்றுகிறது. மணப்பறை கேட்கும் அதே இடத்தில் பிணப்பறை ஒலிப்பதை அறிகிறோம். எனவே இம்மையில் அருள்மனம் கொண்டு பிறருக்கு உதவுதல், அன்புசெய்தல், விட்டுக் கொடுத்தல் போன்ற மாசில்லாத அறவாழ்வு வாழ்ந்தால் மறுமையில் இறைவனை அடையும் வீடுபேற்றை பெறலாம் அதுவே நிலையானது என்பதை நாலடியார் என்ற அறஇலக்கிய நூல் வழி அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. தமிழறிஞர் சாமி. சிதம்பரனார் - 'பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்', இலக்கிய நிலையம், சென்னை, 1962.
2. இரா.கனகசுப்புரத்தினம் - 'திருக்குறள்', அறிவுநிதி பதிப்பகம், சென்னை, 1996.
3. கலைமாமணி . முனைவர் வி. முத்து. பேரா. இரா. ஏழுமலை. "பன்முக நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்" ஹேமப்பிரியா பதிப்பகம், திண்டிவனம். 2018.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தொல்தமிழரின் அகவாழ்வு நெறிமுறைகள்

Internal Life of the Classical Tamil People

முனைவர் ம. தமிழ்வாணன், முதுநிலை ஆய்வு வளமையர்,
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தரமணி, சென்னை – 113.

Abstract

The present article brings forth the internal life of classical Tamil people and the perspectives of their feelings and emotions. Human life is a fascinating one in the environment. It has plenty of developments when compared to other beings. A culture can be estimated by the development of people's inner psyche and that is the base of a strong society. Tamil people are the ones with rich culture and inner development. They live a code of life. Therefore, this article tries to bring the life of the classical Tamil people

Keywords: Internal Life, Classical Tamil People

தமிழ் இலக்கியத்தில் அகமும் புறமும் இருகூறுகளாக விளங்குகின்றன. தொல்தமிழர் வாழ்வியலில் அகம் என்பது, ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு, காதலித்து, மணம்புரிந்து, இல்லறம் நடத்துவதோடு தொடர்புடைய வாழ்வின் பகுதி ஆகும். பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களின் அகவாழ்க்கை பற்றி மிகவும் விரிவாகப் பேசுகின்றன. தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் இலக்கியங்களில் அகப்பொருளைக் கையாள்வது பற்றிய இலக்கணங்களை வகுப்பதுடன், அக்காலத்தின் அக வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றது. தமிழ் இலக்கணம் சொற்களினால் உணரப்படும் பொருளை மூன்று வகைகளாகப் பிரிக்கிறது. அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன. நிலம், காலம் என்பன தொடர்பானவை முதற்பொருளில் அடங்குகின்றன. இந்த இடத்திலும், காலத்திலும் காணப்படுவன கருப்பொருட்கள் எனப்படுகின்றன. மக்கள், விலங்குகள், உணவு, கருவிகள் முதலிய உயர்திணை, அஃறிணைப் பொருட்கள் இதனுள் அடங்கும். மக்களுக்கு உரிய பொருட்கள் அகம், புறம் என்பன. இவையிரண்டும் உரிப்பொருள் என்னும் பிரிவுள் அடங்குகின்றன. இதன்மூலம் மனித வாழ்வியலின் அம்சங்களை நிலம், காலம் என்பவற்றுடனும் அவற்றில் காணப்படும் பிற உலகப் பொருட்களுடனும் இயைபுபடுத்திக் காண்பதற்கான அடிப்படை உருவாக்கப்படுவதைக் காணலாம். மானிட அகவாழ்க்கையில் பல்வேறு நிலைகள் காணப்படுகின்றன. தொல்தமிழ் இலக்கியங்கள் இந்நிலைகளை நிலப் பிரிவுகளுடனும், காலத்துடனும், இயற்கையுடனும் தொடர்புபடுத்திக் கையாளுகின்றன. தமிழ் இலக்கணம் இவ்விலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அகவாழ்வைப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், கைக்கிளை, பெருந்திணை என எழுவகையாக வகுத்து விளக்குகிறது. இத்தகு சிறப்பிற்குரிய தமிழர் அகவாழ்வு நெறிமுறைகளை இப்பகுதியில் காண்போம்.

அகம் பொருளும் பொருத்தமும்

அகப்பொருள் பற்றிய இலக்கண நெறி தமிழுக்கே உரியது. இது உலகறிய வேண்டிய பேருண்மை! இதற்கான சான்றுகள் பல உள்ளன. அகம் என்ற சொல்லின் பொருள் உள் - உள்ளே-உள்ளிருப்பது-அகத்துள் இருப்பது என விரியும். தலைவனும் தலைவியும் தம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உள்ளத்துள் உணர்ந்து அனுபவிக்கும் இன்பம் இத்தன்மையுடையது எனப் பிறருக்கு விளக்க இயலாததாக இருப்பது. தம்முள்ளும் ஒருவர்க்கொருவர் விளக்க இயலாததாக இருப்பது. ஆகவே காதல் ஒழுக்கத்தை 'அகம்' என்றது மிகவும் பொருத்தமாகும். 'அகம்' என்பதை 'ஆகுபெயர்' என்றார் நச்சினார்க்கினியர். அகம் என்பது அகத்தே (உள்ளத்தே) நிகழும் இன்பத்திற்கு ஆகி வந்தது என்பது அவர் கருத்து. காதலுக்கு உள்ளமே முதன்மை; உள்ளத்து 'அவாவே' (ஆசை) தூண்டுதலாகக் 'காதல்' வெளிப்படும்; உடல் கருவியேனும் உள்ளமே காரணம்; காதலில் மொழியும் செயலும் உள்ளத்தின் வழிச்செல்லும்; உள்ளத்துள் நினைக்கும் நினைவும் காதல் நுகர்ச்சிக்குச் சமம். இவையாவும் காதலை - அன்புணர்ச்சியை 'அகம்' என்று வழங்கும் சொல்லாட்சியின் பொருத்தத்தைப் புலப்படுத்துவன. தலை மக்கள் தத்தம் உள்ளத்து உள்ளேயே எண்ணி மகிழும் ஏற்றத்தைக் குறிப்பது அகம். பின்னர்த் தோன்றிய தொன்னூல் விளக்கம் என்னும் நூலும், 'அகத்திணை என்பது மனத்தின் ஒழுக்கம்' என்று வரையறுப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

"பூவின் மணமெனப் புனிதத் தமிழினுக்கு
ஆவி ஆகும் அகப்பொருள் இயல்பே"

மலருக்கு நறுமணம் இன்றியமையாதது; அதுபோலத் தூய தமிழுக்கு அகப்பொருள் இலக்கணம் இன்றியமையாதது என்பது பொருள். இது அறுவகை இலக்கணம் எனும் நூலை இயற்றிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அறுதியிட்டு உரைக்கும் பேருண்மை!

காதல் விழுமியம் (அன்பின் ஆழம்)

ஆண், பெண் இருவரையும் தலைவன், தலைவி என்ற பொதுப்பெயரால் குறிப்பிடுவது சங்க இலக்கிய மரபு. அந்த வகையில் தலைவி ஒருத்தி தலைவன் மீது மாறாத அன்பு கொண்டிருக்கிறாள். தலைவன் "களவு வாழ்க்கை"யில் தலைவியை ரகசியமாக வந்து சந்திக்கிறான். இந்தச் சந்திப்பு பல நாட்கள் தொடர்கின்றன. தோழி இதனைப் பார்த்து விடுகின்றாள். அப்பொழுது தலைவனிடம், "ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய், தலைவியை உடனே திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று எச்சரிக்கிறாள். தலைவி இதனை அறிகிறாள். எச்சரித்த தோழியிடம் தலைவனைப் பற்றி கொஞ்சம் உச்சரிக்கிறாள். அப்போது, "நான் என் தலைவனோடு கொண்டிருக்கின்ற நட்பு எப்படிப்பட்டது தெரியுமா? இதோ! மலையும் மலைசார்ந்திருக்கின்ற குறிஞ்சி நிலம். இதில் குறிஞ்சிப்பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. அந்தப்பூக்களில் தேன் அருந்திய வண்டுகள் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற சந்தனமரங்களில் தேன் கூடுகள் கட்டியிருக்கின்றன. அப்படிப்பட்ட உயர்ந்த நாட்டின் தலைவன். அந்த தலைவனோடு தான் நான் நட்புக்கொண்டிருக்கின்றேன். அந்த நட்பு இந்த நிலத்தைவிடப்பெரியது, வானைவிட உயர்ந்தது, கடலைவிட ஆழமானது" என்று பெருமிதத்தோடு கூறுகிறாள். அகப்பாடல் இதனை,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர்அள வின்றே - சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இளைக்கும் நாடெனொடு நட்பே" (குறுந்.3)

எனக் குறிப்பிடுகிறது. தோழி இதனைக் கேட்டதும் சிலிர்த்துப் போகிறாள். அன்பு வயப்பட்ட காதலர்கள் இருவரும் இதயத்தால் ஒன்றுபடுகின்றனர். இந்த இதயப்பிணைப்பு எப்படி இருக்கிறது தெரியுமா? "செம்புலப் பெயல் நீர்போல" இருக்கிறதாம். இதைத்தான் "செம்புலப்பெயல் நீர் போல" என்ற உவமையால் குறிப்பிடுகின்றார் புலவர். ஆம்! உண்மையான அன்பிற்கு ஏது எல்லை. எல்லை கடந்த அன்பின் ஆழத்தில் தானே காதல் இன்பமும் இருக்கின்றது. அதுமட்டுமல்ல இந்தப்பாடல் தலைவனின் அன்பின் ஆழத்தையும் தலைவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் தெரியப்படுத்துகின்றது. நல்ல நட்புக்கு பலரும் எடுத்துக்காட்டும் இனிய பாடல் இது. இந்த இதயங்களின் இணைப்பைத்தான் பாடலில்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"யாயும் ஞாயும் யாராகி யரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப்பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே..." (குறுந்.40)

என்று குறிப்பிடுகிறார். காதலர்களின் இனிய இணைப்பிற்கு இதைவிட வேறு என்ன உவமை சொல்லமுடியும். இந்த உவமைதான் இலக்கியச் சுவைப்பிற்கு இன்பத்தைத் தருகின்றது.

இல்லற விழுமியம்

நல்லறம் புரிவதற்குத்தான் இல்லறம். அன்பால் இணைந்த காதலர்கள் திருமணம் புரிந்து இல்லறத்திற்குள் நுழைகின்றனர். இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்று கொன்றைவேந்தனில் ஔவையார் குறிப்பிடுவது போல் இல்லறத்தில் சிறந்து இருந்தனர். இல்லறத்தைச் சங்க காலத்தில் அகம் எனக் கொண்டிருந்தனர். இதற்குச் சங்க இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய அகப்பொருளைப் பாடும் இலக்கியங்கள் சான்றாக அமைகின்றன. சங்க காலத்தில் ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறைவு, முறை, பொறை முதலான இல்லற அறப்பண்புகள் வாழ்வியலில் மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக இன்னுரை பேசுதலும் இன்னாதன செய்யாதிருத்தலுமே சிறந்த அறமாகக் கருதப்பட்டது. இல்லறக்கடன் ஆற்றுதல் வேண்டி தலைவன் பொருள் தேடிச் செல்லலும் அவன் வரும்வரை தலைவி ஆற்றியிருந்து இல்லறக்கடன் ஆற்றுலும் அகநானூற்றில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையில் அறம்பல புரிவதற்கும் பிறர் கடைவாயில் சென்று நிற்காத நிலைமைக்கும் பொருள் இன்றியமையாதது என்பதனை,

"அறன்கடைப் படாஅவாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும்" (அகம்.155:1-3)

என்ற பாடல் விளக்குகிறது. இப்பாடல் இல்வாழ்வில் அறம் தவறாதிருத்தலையும் பொருளின் இன்றியமையாமையையும் விளக்கி இல்லற விழுமியங்களை வெளிப்படுத்துகிறது. இல்வாழ்வார்க்குரிய அறச் செயலின்றும் பிறழாமல் நடத்தலும், நெருங்கிய சுற்றத்தார்க்கு எய்திய துன்பங்கள் பலவற்றையும் நீக்கி அவர்களை நல்வாழ்க்கை வாழச் செய்தலும் வேண்டுமெனில் தலைவியாகிய நீ சிலகாலம் என் பிரிவை ஆற்றியிருத்தல் அவசியம் என்று தலைவன் கூறுவதை,

"அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த
கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல" (அகம்.173:1-3)

என்னும் பாடல் விளக்குகிறது. நாம் துன்பத்தால் வாடி வருந்தினாலும் கவலையில்லை என்று சொல்லிய மனத்தின் தூய்மையை உணர்த்தும் இல்லற விழுமியம் போற்றத்தக்கது.

இல்லறத்தில் நிகழ்ந்த ஒரு காட்சி. திருமணம் புரிந்த புதிய காலைப்பொழுது, கணவனின் அன்பு அரவணைப்பில் மீண்டு வந்து சமைக்கத் தொடங்குகிறாள். இதுவரை பிறந்த வீட்டில் அடுப்படிப்பக்கமே போகாதவள். அப்படி ஒரு செல்வச் செழிப்பில் வளர்த்தவள். அவள்தான் திருமணம் முடிந்ததும் கணவனுக்குப் பிடித்தமான மோர்க்குழம்பு வைக்கிறாள். தன் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் கட்டித்தயிரை மெதுவாகப் பிசைகின்றாள். அப்போது கட்டியிருந்த பட்டாடை சட்டென்று நழுவுகின்றது. மற்றொரு கையாலே சரிசெய்து கொண்டு தாளிக்கின்றாள். தாளிக்கும் போது உண்டான புகை, "கயல்" போன்ற அவளது விழிகளை கலங்க வைக்கின்றது. துடைத்துக் கொள்கின்றாள்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இவ்வாறு ஆசையோடு சமைத்து முடிப்பதற்குள்ளேயே வெளியில் சென்ற கணவன் வந்து விட்டான். முகத்திலும் ஆடையிலும் அழுக்கு அப்பியிருக்கின்றது. உணவைப் பரிமாறுகிறாள். அவனும் அவளது புறத்தோற்றத்தைக் கண்டு வெறுக்காமல் அகத்தின் அன்பினை நினைத்து இனிது, இனிது என்று பாராட்டிக் கொண்டே சாப்பிடுகிறான். அந்தப் பாராட்டைப் பெற வேண்டும் என்று தானே அவள் இப்படி விரும்பிச் சமைத்தாள். இந்த இனிய இல்லறக் காட்சியினை,

"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான் றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே." (குறுந்.67)

என்று கூடலூர் கிழார் என்னும் புலவர் பாடியுள்ளார். இந்த இல்லற வாழ்வின் இனிமையை இலக்கிய உள்ளம் படைத்த எவராலும் மறக்க முடியுமா? இப்பாடலில் இன்னொரு சுவையும் ஒட்டியிருக்கின்றது. இந்த இனிய இல்லறக் காட்சியினை தலைவியை வளர்த்த செவிலித்தாய் தூரத்திலிருந்து பார்க்கிறாள். பார்த்த இந்தக் காட்சியை தலைவியின் தாய்க்குப் போய்ச் சொல்லுகிறாள். அந்தத்தாய்தான் "நற்றாய்" என்று இலக்கியம் போற்றுகின்றது. மகளின் மணவாழ்க்கையைக் கேட்ட நற்றாய் மகிழ்ச்சியடைகிறாள். தாய்க்கு இதைவிட வேறு என்ன பேறு வேண்டும். படிக்கின்ற போது கண்களில் ஈரம் அரும்புகின்றது. ஆம், அதுதான் ஆனந்தக் கண்ணீர். இன்று திருமணம் முடிக்கும் மணமக்களுக்கு இதைவிட அறிவுரை சொல்ல வேறு ஏதேனும் இருக்கமுடியுமா. வாழ்க்கையைத் தானே இலக்கியம் சொல்கிறது.

பழங்காலத்தில் வீட்டின் கண் மனையறம் புரிதலை பெண்களும், வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விழங்கியது என்பதனை,

"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு
மருவி னினியபு முளவோ" (குறுந்.322)

என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது. தலைவன் என்பவன் இல்லற வாழ்வில் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவருக்கும் நல்ல துனையாக இருக்க வேண்டும் என்பதனை

"இல்வாழ்வான் என்பவன் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" (குறள்.41)

வினையே ஆடவருக்கு உயிர் என்பதனால் தலைவன் எவ்வித இடர் நேரிடினும் தான் மேற்கொண்ட வினையை செவ்வனே முடித்து பொருளீட்டிக் கொண்டுவர வேண்டும். அவ்வில்லறத்தில் அன்பு, விருந்தோம்பல், ஈகை முதலானவை சிறந்து விழங்கின.

களவு, கற்பு எனத் தம் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்தவர்கள் சங்க காலத் தமிழர்கள் ஆவர். தாமாகக் கூடுவது களவு வாழ்க்கை என்றும், பெரியோர்களால் கூட்டப்பட்ட வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்றும் கொண்டிருந்தனர். மேலும் மடல் ஏறுதல் என்ற ஒன்றினையும் பின்பற்றினர். ஒருவன் தான் காதலித்த பெண்ணை மணக்க வாய்க்காதபோது மடல் ஏறுவது வழக்கமாகும். பனங்கருக்கினால் குதிரை ஒன்று செய்து அதன்மேல் அவன் ஏறி அமர்ந்து தன் காதலியின் வடிவம் தீட்டிய கொடி ஒன்றைத் தன் கையில் ஏந்தித் தெருத்தெருவாகச் செல்வான். அக்குதிரையை ஊர்ச் சிறுவர்கள் இழுத்துச் செல்வர். இதனையே மடல் ஏறுதல் என்பர்.

சங்க இலக்கியங்களில் காணலாகும் சில பழக்கங்கள் இன்று ஒத்துவராது என்று ஒதுக்கித்தள்ளலாம். இயந்திரத்தன்மை கொண்டதல்ல மனித வாழ்க்கை. இது நாகரிக காலம் என்று பெருமையோடு சொல்கிறோம். இப்போதுதான்- எப்போதும் இல்லாத அளவுக்கு வன்முறைகளும், சமூகக் கொடுமைகளும் அதிகமாக நடக்கின்றன. இந்தக் கொடுமைகளைத்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தடுப்பதும் முன்னோர்கள் வகுத்துத் தந்த சில வாழ்க்கை முறைகளுக்குத் திரும்ப வேண்டியுள்ளது.

இல்லற மகளிர்க்குரிய விழுமியம்

செவ்வியல் அக இலக்கியங்களின் வாயிலாக பெண்களின் பண்பாட்டை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். ஒரு குடும்பம் வாழ்வதும், தாழ்வதும் பெண்ணால்தான் என்று அக்கால மக்கள் நம்பி வந்தனா.; அந்த நம்பிக்கை இன்றும் உண்டு. பெண்கள் புகுந்த வீட்டின் இயல்புக்கேற்ப நடந்து கொண்டு பிறந்த வீட்டைப் பற்றி எண்ணி இருப்பர். பிறந்த வீட்டின் உதவியை எதிர் பாராதும், உதவி கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளாதும் வாழ்ந்து சிறப்பு எய்தினர். அவர்கள் வாழ்வில் அன்பும், அறமும், அறிவும் பின்னியதாகவே அமைந்திருந்தது. பொருள்வயின் பிரிய எண்ணிய தலைமகன் தலைவியின் இயல்புகளை எண்ணி செலவழுங்கிநிற்கும் இடத்தில்,

"..... நன்மனைப்
பன்மாண் தங்கிய சாயல் இன்மொழி" (அகம்.193:11-12)

என்று கூறி தலைவியை சிறப்பிக்கின்றான.; நாள்தொறும் விருந்தோம்பல் முதலான நல் அறங்கள் நிகழ்தற்கு இடமான நன்மையுடைய நமது இல்லத்திற்கு உரியவளாகிய கற்புடை மகளிர்க்;கு இன்றியமையாத பல்வேறு மாண்புகளும் பொருந்திய தலைவி என்று தலைவியின் சிறப்புகளைத் தலைவன் விழுமியங்களாக வெளிப்படுத்துகின்றான். இதே கருத்தை தொல்காப்பியம்.

"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள" (தொல்.கற்பு.11)

என்று தலைவியின் மாண்புகளை எடுத்துரைக்கிறது.

மக்கள்பேற்று விழுமியம்

பழங்காலத்தில் மக்கட்பேற்றைப் பெறும்போதுதான் உண்மையான உயர்ந்த நிறைவு பெற்ற மனித நிலையை ஒவ்வொருவரும் எய்தினர் என்ற கருத்தை உணர்த்துகின்ற பாடல்கள் பல அகநானூற்றில் இடம் பெற்றுள்ளன.அத்தகு மாண்புடைய மக்கட்பேற்றை அடைந்தவரின் விழு நிலையையும், அடையாதவரின் இழி நிலையையும் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இல்வாழ்க்கையின் பயனாக மக்களைப் பெற்றவரையே மாண்புடையவராகத், தலைமைப்பேறு உடையவராகப் பண்புடையோர் கருதினா.; குழந்தைப் பேற்றின் காரணமாக இவ்வுலகத்திலும் புகழொடு விளங்குவார்கள். மறுமை உலக வாழ்வினையும் குற்றமின்றி எய்துவர் எனப் பலரும் கூறிய பழைய மொழிகள் எல்லாம் உண்மையாதலைக் காணலாம் இக்கூற்றை,

"இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப
செறுநரும் விழையும் செயி;ர்தீர்; காட்சிச்
சிறுவர்ப் பயத்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்,
வாயே ஆகுதல் வாய்த்தனம் - தோழி" (அகம்.66:1-6)

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது.

விருந்தோம்பல்

அன்பு நெறி கொண்டு வாழும் இல்லறத்தின் முக்கிய கடமையாக விருந்தோம்புதல் இருந்தது. அனிச்சப்பூ மோந்து பார்த்தால் வாடிவிடும் ஆனால் முகம் மாறுபட்டுப் பார்த்த அளவிலேயே விருந்தினர்கள் வாடிவிடுவர் என்பதனை

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நோக்கக் குழையும் விருந்து'' (குறள்.90)

குறள் வழி வள்ளுவர் விளக்குகிறார். தம் இல்லம் நாடி வரும் விருந்தினரை இன் முகத்துடன் வரவேற்று இனிய மொழிகள் பேசி கனிவுடன் உபசரிக்க வேண்டும் அப்போதுதான் விருந்தோம்பல் சிறக்கும்.

''பல நாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினர்'' (புறம்.101:2-3)

என்னும் பாடல் எத்தனை முறை விருந்திற்கு வந்தாலும் முதல் நாள் உபசரித்ததைப் போன்றே விருப்பத்துடன் உபசரிக்க வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. மேலும் இரவில் விருந்தினர்கள் வந்தாலும் மனைவி கணவனுடன் இணைந்து மனமகிழ்ச்சியுடன் விருந்து படைக்கும் செய்தியினை

''அல்இல் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே'' (நற்.142)

என்னும் நற்றிணைப் பாடல் அடிகள் சுட்டுகின்றன. கணவனுடன் கூடிவாழும் மங்கல மகளிர்க்குரிய தனி உரிமையாக விருந்தோம்பல் விளங்கியது. கணவனை இழந்தவர்களும், பிரிந்து வாழ்பவர்களும் விருந்தை எதிர்கொள்ளுதல் கூடாது என்பதை,

''அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'' (சிலம்பு. கொலை.71-73)

கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி தனக்கு நேர்ந்த இழப்புகளை நிரல்படுத்தும் போது தன்னால் விருந்தெதிர் கொள்ள முடியாத நிலையைக் கூறுவதில் இருந்து விருந்தோம்பலின் உயரிய நிலையை அறிய முடிகிறது.

பொதுநலன் பேணுதல்

இந்த உலகத்திலுள்ள மானிடர் யாவரும் ஓர் இனமே. எனவே அவர்கள் நம் உறவினர்கள். அதனால் அவர்கள் வாழும் ஊரும் நமது ஊர்களே. இத்தகைய ஒரு பரந்த மனப்பான்மையை,

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா'' (புறம்.192:1-2)

(யாதும் ஸ்ரீ எந்த ஊரும், கேளிர் ஸ்ரீ உறவினர், தீது ஸ்ரீ தீமை, வாரா ஸ்ரீ வராது)

எனக் கணியன் பூங்குன்றன் எனும் புலவர் குறிப்பிடுகிறார். இந்த உலகத்தில் பல தீமைகள் நிகழ்கின்றன. இதற்குக் காரணம் தன் நலத்திற்காக எத்தகைய தீமைகளையும் செய்யத் துணியும் தீயவர்கள் பலர் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த உலகம் இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம்? சுயநலம் கருதாத பல நல்லவர்கள் இருக்கின்றார்கள். எத்தகைய நல்லவர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கடலுள் மாய்ந்த இளம் பெரும்வழுதி எனும் புலவர் கீழ்க்குறிப்பிடும் பாடலில் சுட்டிக் காட்டுகிறார்.

''உண்டால் அம்ம, இவ்வுலகம், இந்திரர்,
அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே. முனிவிலர்
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்,
தமக்கென முயலா நோன்தாள்,
பிறர்க்கென முயலுநர் உண்மையானே'' (புறம்.182)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வயலில் தானியங்கள் விளைவது நமக்கு மட்டுமன்று இல்லாதவர்களுக்கு உதவுவதற்காகவே என்ற கருத்தைக் கொண்டதே இவ்வடி. இல்லறமே நல்லறம் என்ற கொள்கை தமிழரின் உயாந்த அருள் நெறியை உணர்த்துகிறது. இல்லறத்தில் வாழ்கின்றவர்கள் உழைத்து, உற்பத்தி செய்து பிறர்க்கு உதவும் தன்னலமற்ற பண்பு உடையவர்கள் என்பதனை அக நூல்கள் உயர்ந்த விழுமியமாகக் காட்டுகின்றன

"விளைகவயலே! வருக இரவலர்" (ஐங்.2:2)

என்னும் அடி தமிழர் அருள் நெறியை விளக்குவதாகும்.

சுற்றம் சூழல்

மானிடன் சமுதாயச் சார்புடையவன். ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தைச் சார்ந்தே வாழ வேண்டிய கட்டமைப்பில் உள்ளான். அவனின் தனி முயற்சி ஒரு புறம் அவனை உயர்த்தினாலும் அவன் சமுகத்தின் ஒரு அங்கமாக அந்தச் சமுகத்தின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பவனாக வாழ்ந்தால் மட்டுமே அனைவராலும் போற்றப்படுகிற உயர் நிலைக்கு உயரமுடியும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (குறள்.140)
எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு" (குறள்.425)

மேற்சுட்டிய குறட்பாக்களும் மனிதன் சமுகச் சார்புடையவன் என்பதை உணர்த்துவனவாகும்.

மக்கள் அனைவரும் சரிசமம் என்ற போதிலும் அவர்களுடன் பழகுகின்ற போது, அன்பைப் பகிர்ந்து கொள்கின்றபோது அவரவர் குணம், பண்பு பார்த்தே பழகவேண்டி இருக்கிறது. மனிதர்களின் குணம், பண்பு போன்றன வெளிப்பட தெரிவதில்லை. அவை உடலுக்குள், உணர்வுக்குள், மனதிற்குள் புதைந்து கிடக்கின்றன. புதைந்து கிடக்கும் இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, இக்குணம் பண்பு போன்றவற்றிற்கான நிலையில் மனிதர்களைப் பிரித்து அறிந்து கொள்வது மிக்கடினம். இந்த கடின நிலையை எளிதாக்கிட வள்ளுவர் சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைகோடல், பெரியாரைப் பிழையாமை, சுற்றந்தழால் போன்ற பல அதிகாரங்களில் மனிதர்களை இனம் பிரிந்து அறிந்து கொள்ள ஏற்ற வழிகளை எடுத்துச் சொல்லியுள்ளார்.

மனிதன் சார்ந்து வாழ வேண்டிய சமுதாய அமைப்பு என்பது சுற்றத்தார், நண்பர்கள் போன்றோரை உள்ளடக்கியதாகும். நண்பர்களைப் பற்றி அறிந்து கொண்டு அவர்களிடம் நட்பு பாராட்ட "நட்பு, தீநட்பு, கூடா நட்பு, நட்பாராய்தல்" போன்ற பல அதிகாரங்கள் வழிகாட்டுகின்றன. சுற்றத்தார் குறித்த செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பாகக் கிடைத்தது சுற்றந்தழால் என்ற ஒரே ஓர் அதிகாரம் ஆகும். சுற்றந்தழால் என்ற அதிகாரம் பொருட்பாலில் அரசனுக்கு கூறப்படுகிற அரசியல் சார்புடைய கருத்துக்கள் கொண்ட பகுதியில் வைக்கப் பெற்றுள்ளது. அரசன் சுற்றத்தாரைக் காத்து அவர்களுக்கு நன்மை செய்து, தானும் நன்மை பெற்று வாழ வேண்டும் என்ற நிலையில் இது வள்ளுவரால் படைக்கப்பெற்றுள்ளது. என்றாலும் இக்காலத்தில் சுற்றந்தழால் என்ற பண்பு ஆள்பவருக்கு உரிய பண்பா என்ற கேள்வி சில அறிஞர்களால் எழுப்பப்டுகிறது. இது குடியாட்சி நிலையில் ஆள்பவருக்கு உரிய பண்பு ஆகாது என்று கருதுகிறார் க.ப. அறவாணன்.

"சுற்றம் ஆக்கம் தரும். பாதுகாப்பு தரும். சுற்றம் சூழ வாழ்தல் ஒருகலை. சுற்றம் பேணி வாழ்தலுக்கு இடையறாத அன்பு, நினைவில் வைத்துப் பாராட்டுதல், அன்பு காட்டுதல், ஒத்துப் போதல், குற்றம் பாராட்டாது இருத்தல் ஆகியன தேவையானது. நாடள்வோருக்கும் சரி, தனி ஒருவராய் வெற்றி பொருந்திய வாழ்க்கை நடத்த விரும்புவோருக்கும் சரி சுற்றம் தேவை" (குன்றக்குடி அடிகளார், திருக்குறள் உரை, ப.158) என்ற அடிகாள் அவர்களின் கருத்து மனிதருக்கான சுற்றத்தின் இன்றியமையாமை எடுத்துரைப்பதாக உள்ளது.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 **Available at: www.ijtlls.com**

சுற்றத்தோடு தொடர்பற்று, பற்றற்றுச் சிலர் வாழ்ந்த போதிலும் அவர்களை ஒதுக்கிவிடாது தேவையான நேரத்தில் வந்து இருந்து உதவி செய்து பழமை பாராட்டும் பேரியல்பு சுற்றத்தாருக்கு மட்டுமே உண்டு என்ற அனுபவப் பாடத்தை இவ்வதிகாரத்தின் தலைக்குறள் எடுத்துரைக்கின்றது.

“பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள” (குறள்.521)

பழமை பாராட்டும் இப்பண்பு சுற்றத்தாரின் தனிச்சிறப்பாகும். மாதவி கண்ணகியின் உறவை ஏற்றிப் போற்றும் பாங்கு இக்குறளுக்கு இலக்கியமாகும். மணிமேகலையைக் கண்ணகியின் மகள் என உரிமைப்படுத்துகிறாள் மாதவி. மாதவிக்கும் கண்ணகிக்கும் இடையே நிலவிய முரண்பாடு மாதவியின் மகளான மணிமேகலையின் தொடர்வால் உறவாக மாறும் தன்மையைப் பெற்றது.

அன்பு மாறாத சுற்றம் ஒருவனுக்கு அமைந்தால் அது அவருக்கு குன்றாத செல்வம் பலவும் தரும். (522) கரையில்லாத குளத்தில் நீர் தங்காததைப் போல சுற்றத்தார் துணையில்லாதவனின் வாழ்க்கையும் பயனற்றுப் போய்விடும். (523) இதனோடு தொடர்புடையதாக பின்வரும் நாலாடியார் பாடல் அமைகின்றது.

“வயாவும் வருத்தமும் ஈன்றக்கால்
கவாஅன் மகற்கண்டு தாய் மறந்தாங்கு
அசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தான்
கேளிரைக் கானக் கெடும்” (நாலடி.211)

ஒருதாய் கரு சுமந்தபோதும் ஈன்றபோதும் ஏற்பட்ட வருத்தங்கள் குழந்தையைப் பெற்றபின் அக்குழந்தையைப் பார்த்தபின் தீருவதுபோல வருத்தம் உற்றவர்கள் தம் சுற்றத்தாரைப் பார்த்தால் அவ்வருத்தம் தீர்வார்கள் என்ற பொருளுடையதாக இப்பாடல் அமைகின்றது. உறவினர்களின் துணை மனிதத் துயரத்தை ஓட்டும் பயனுடையதாக உள்ளது என்பதை இவற்றின்வழி உணரமுடிகின்றது. மேலும் சுற்றத்தார்கள் ஒரு மனிதனின் உயர்விற்கு மிக முக்கியமான காரணமாக அமைகின்றனர். அவர்களைப் பேணிக்காக்க கோபமின்மையும் கொடைத்தன்மையுமே தேவை என்ற அடிக்கருத்தை மனித குலம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

முடிவுரை

தொல்தமிழ் மக்கள் அகத்தையும் புறத்தையும் இரு கண்களாகக் கண்டனர் அகம், புறம் என்னும் இரண்டும் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பெற்றிருப்பினும் புறத்தினும் அகமே சிறப்புடையதாகக் கருதப்பட்டது. புறத்திணைப் பொருளான வீரம் மக்களுள் சிலர்க்கு உரியது. ஆனால் அகத்திணைக்குப் பொருளான காமமோ ஆண் பெண் என்னும் பிரிவுகளைக் கொண்ட உயர்திணை, அஃறிணை உயிர்களுக்கெல்லாம் பொதுவானதாகும். ஆண் பெண் இணைந்து வாழும் உயர்திணை வாழ்வினை இல்லறம் எனச் சிறப்பிக்கின்றனர். இவ்வில்லறத்தில் தலைவனும் தலைவியும் இணைந்து அன்புநெறி பூண்டு விருந்தோம்பல், விட்டுக் கொடுத்தல், காத்திருத்தல், பகுத்துண்ணல் சுற்றத்தைக் காத்தல், கேட்டினை விலக்கல், ஈத்துவத்தல், புகழ்தேடல், முதலான உயரிய விழுமியங்களை வெளிப்படுத்த இல்லற மக்கள் கைக்கொள்ளும் ஒழுக்கங்களுக்கு இடப்படும் சிறப்புப் பெயரே பண்பு. பயன்தரும் பண்பின் இரட்டைக் குழந்தைகள் தான் அன்பும், அறமும். இவை வெளிப்படும் இடமே இல்லறம். இவ்வில்லறத்தின் வாயிலாக மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு நெறிமுறைகளைச் செவ்விலக்கியம் வாயிலாக வெளிக்கொணரப்பட்டுள்ளன. எனவே பழங்கால மக்கள் கற்பு வாழ்வினை பெரிதும் போற்றினர் என்பதை சங்க இலக்கியப்பாடல் மூலம் நம்மால் அறியமுடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

துணை நூற்பட்டியல்

1. இராமநாதன், லெ.ப.கரு, சங்ககாலத் தமிழர் வாழ்வு, வெள்ளையன் பதிப்புக் கழகம்,. இராமநாதபுரம், 2ஆம் பதிப்பு, 1958.
2. தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும், சுப்பிரமணியன்.ச.வே.(ப.ஆ.), மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை. 2008.
3. சோமசுந்தரனார் உரை, பொ.வே., அகநானூறு, கழக வெளியீடு, பதிப்பு-1970.
4. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம், கழக வெளியீடு, பதிப்பு-1966.
5. கோமதி, முனைவர், ப. முதலானோர், சங்க இலக்கியங்களில் மானுட விழுமியங்கள், அ.இ.பதிப்பகம், பதிப்பு-2011.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இலக்கியங்களில் சரணாகதி தத்துவம்

The Philosophy of Submisssion in Literature

எஸ்.தமிழரசி, முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதி மகளிர் கல்லூரி, சென்னை.

Abstract

The present article gathers information about the philosophy of submission found in Tamil Literature. Submission to the Almighty god is considered as the morale of a human being in all religions. Hindu religion is an ancient one and mother of all religions of the world. The concept of submission is also in the religion. Many writers of Tamil literature had dealt with the way of submission in their works. As Thiruvalluvar says in the 10th verse of the First chapter of "Thirukkural", "He whoeth cannot reached the bejeweled feets of God cannot swin across the ocean of life"(Trans, Vinoth-2019). One cannot be peaceful in leading his life without submission of his self to the Almighty; otherwise, he will delude himself in chaos. So, Tamil people have too much wholehearted trust in the way of submission. Therefore, this article tries to bring classic works that portray the art of submission.

Keywords: Philosophy of Submisssion, Tamil Literature, Sense of Tamil people

முன்னுரை

சரணாகதி – அர்த்தம் என்ன? சரணாகதி என்பது, தன்னையே ஒருவரிடம் ஒப்படைத்து விடுவது. "இனி, நீ தான் கதி, நீ என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எனக்கு என்று எதுவும் இல்லை. எல்லாமே (உடல், பொருள், ஆவி) உன்னுடையதுதான்!" என்று ஒப்படைத்து விடுவதை சரணாகதி என்பர். பாஞ்சாலி சபதத்தில் சரணாகதி கோட்பாட்டை விளக்குவதே பாரதியின் குறிக்கோளாய் இருந்தது. பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' காவியம் பலவித விளக்கங்களைத் தருகிறது. அதை தேச பக்திக் காவியம் என்பவர்கள் திரௌபதியை பாரத அன்னையின் உருவகமாகக் கற்பனை செய்கிறார்கள். ஆனால் இக்காவியத்தின் அடிப்படைக் கோட்பாடு சரணாகதித் தத்துவமாகும். இதனால் தான் திரௌபதி சபதம் செய்ததும் சட்டென்று காவியம் முடிந்து விடுகிறது. சரணாகதிக்கு உடனடிப் பலன் கிடைத்தபிறகு பாரதி அதற்கு மேல் காவியத்தை தொடர விரும்பவில்லை. அவர் விரும்பியிருந்தால் பாரதப் போர் வர்ணனை வரை காவியத்தை நீட்டி, "பாவி துச்சாதனன், பாழ்த் துரியோதனன் இருவரது ஆக்கை இரத்தம் கலந்து குழல் மீது பூசி நறு நெய் குளித்தே சீவிக் குழல் முடிப்பேன்" என்று அறிவித்த பாஞ்சாலியின் சபதம் நிறைவேறுவதைக் காட்டியிருக்கலாம். ஆனால் சரணாகதி கோட்பாட்டை விளக்குவது தான் பாரதியின் குறிக்கோளாக இருந்தது என்பதை அறிய முடிகிறது.

கௌரவர்களால் பாஞ்சாலி அவமானப்பட்டு நிற்கும் போது தன் கணவன்மார்களை காப்பாற்றுமாறு அழைக்கிறாள், தருமபுத்திரர் என்ற பெயரைக் கொண்டிருந்தவரால் கண்ணெதிரே நடக்கும் அதர்மத்தை கண்டிக்க இயலவில்லை. தெய்வம் எதிர்ப்பினும் சீறியடிக்கும் திறனுடையவனான வீமனும் வாளாவிருந்தான். பார்த்தனும் துரியனின் அவையில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பேசாமடந்தையாக நின்றான். நீதிநூல்களில் கரை கண்ட வீட்டுமரும் அநீதிக்குத் துணை போகிறார். இனித் தன்னைக் கணவர்களாலும், உறவினர்களாலும். சான்றோர்களாலும் - சுருக்கமாக மானிடர் எவராலும் காப்பாற்ற முடியாது என்பது தெளிவானதும், திரௌபதி கண்ணனைச் சரணடைகிறாள்.

"ஹரி, ஹரி, ஹரி என்றாள்; - கண்ணா
அபய மபயமுனக் கபய மென்றாள்,
……துக்கங்க ளழித்திடுவாய், - கண்ணா
தொண்டர்கள்கண் ணீரைத் துடைத்திடுவாய்!
……சோதிக்கு சோதியப்பா, - என்றன்
சொல்லினைக் கேட்டருள் செய்திடுவாய்!
…..நம்பிநின் னடிதொழுதேன்; - என்னை
நாணழியா திங்கு காத்தருள்வாய்
……நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்திருவாய்!"

பாஞ்சாலி முதலில் வெளி உதவிகளை நாடினாள், பயன் விளையவில்லை தன் புத்தியை, அறிவைக்கொண்டு வாதம் செய்து பார்த்தாள், வாதம் எடுபடவில்லை, தன் உடல் பலத்தை நம்பி வர மறுத்தாள், அதுவும் கை கொடுக்கவில்லை, புடவையைக் கெட்டியாகப் பிடித்தும் பயனில்லை, கடைசியில் நீயே சரணம் என்று பரந்தாமனின் கருணைக்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்தாள். கேசவா, மாதவா, கோவிந்தா நீயே சரண் என்கிறாள், அதன் பிறகே கண்ணன் இரக்கம் கொண்டு உறிய, உறிய, சேலையாய்த் தந்து அவளைக் காப்பாற்றுகிறார். சரணாகதி தத்துவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு இக் காப்பியமாகும்.

"கீதையில் கண்ணனும்,
"ஸர்வ தர்மான் பிரித்யஜ்ய மாம்
ஏகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வாம் சர்வ பாபேப்யோ
மோஷயிஷ்யாமி மாசுச"

என்று கூறும் சரணாகதித் தத்துவ ஸ்லோகமும் இங்கு நினைவு கூறத்தக்கது. (கீதை 18 ஆம் அத்தியாயம் 66-வது ஸ்லோகம்)

"அனைத்துத் தர்மங்களையும் துறந்துவிட்டு என் ஒருவனையே சரணாக அடை. நான் உன்னை அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் வருந்தாதே" என்ற கண்ணனின் வாக்கு முந்தைய அவதாரமான ராம அவதாரத்தில் அவன் செய்த பிரதிக்ஞை தான் என்பது தெளிவாக இங்கு விளங்குகிறது.

திருப்பாவையிலும் கோதை நாச்சியார்,

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உற்றோமே யாவோம்….. உமக்கே"

நாம் ஆட் செய்வோம்' என்று திருப்பாவை பாசுரத்தில் சரணாகதியைச் சுருக்கமாகச் சொல்கிறார்.

திருவள்ளுவரும்,

"மலர்மிசை ஏகினான் மானடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"
"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்று, சரணாகதி என்பது அடிபணிவது என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

விவிலியத்திலும்,

"நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்"

என்ற வாசகத்தையும் இங்கே நினைவு கூறலாம்.

கன்னங்களில் இருந்து மதநீர் மழையெனச் சொரிகின்ற கசேந்திரன் என்ற யானை 'ஆதிமூலமே' என கதறி அழைத்து சரணாகதி அடைந்தது.

மார்க்கண்டேயன் மீது யமன் பாசக்கயிற்றை வீச, எம்பெருமான் சிவபெருமானிடம், நீயே கதி என சரண் அடைந்தான்.

ராமாயணத்தில், சுக்ரீவன் ராமபிரானிடம் விபீடணன் சரணாகதி அடையும்போதே அவனைக் கொல்வது உசிதம் எனக் கருத்து கூறுகிறான். ஆனால் ராமபிரானோ,

"ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதி ச யாசதே"
அபயம் சர்வபூதேப்யோ
ததாம்யேதத் வ்ரதம் மம!!

அதாவது சரணாகதி அடைந்தோருக்கு அபயம் அளிப்பேன் என்று கூறுகிறார். இதே சரணாகதித் தத்துவத்தைத் தான் கம்பன் தனது ராமாயணத்தின் முதல் செய்யுளாக அமைத்தான் என்பது போற்றுதற்குரியது.

"உலகம் யாவையும் தாம்
உளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும்
நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார்
அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண்
நாங்களே!"

என்ற சரணாகதி தத்துவத்தை விளக்கும் செய்யுளே ராமாயணத்தின் முதல் செய்யுளாக அமைக்கப்பட்டுள்ளது. உலகம் அனைத்தையும் படைத்துக் காக்கும் அந்தத் தலைவனுக்கே நாங்கள் சரண் என தெளிவுபடுத்துகிறார் கம்பர்.

மாபலி சக்ரவர்த்தியிடம் வாமனன் வடிவில் வந்த எம்பெருமான் மூன்றடி மண்ணை யாசகம் கேட்டு வந்தார். அசுர குல குருவான சுக்ராச்சாரியார் மாபலி சக்ரவர்த்தியிடம் "வந்திருப்பவர் விஷ்ணு, உன் எல்லா செல்வத்தையும் இவர் பறித்துக் கொள்வார் எனத் தடுத்தார். ஆனால் மாபலியோ, பகவானே தன்னிடம் வந்த பிறகு. வேறென்ன வேண்டும்? என மூன்றாவது அடியில் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். இதுதான் சரணாகதி அவன் தாளைப் பற்றிக்கொள்வதே சரணாகதி. கண்ணன் சாதாரண பலன் தரும் தேவதை வகையைச் சேர்ந்தவனல்லன். பின்வரும் வரிகள் அவன் ஆற்றலை நிரூபிக்கின்றன.

"சரணம் அடைந்த தருமனுக்காப் பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன் - திருவரங்கத்தமுதனார்.
சரணம் ஆகும் தன்தாள் அடைந்தார்க்கு எல்லாம்
மரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் - நம்மாழ்வார்."

இவர்களுக்கு எப்படி இது தெரியவந்தது எனில், கண்ணன் கீதையின் கடைசியில்

"ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ"

என்று கம்பீரமாகத் தொடங்கி ஒர் அறிவிப்பு செய்கிறார்; "எல்லா தருமங்களையும் (சடங்குகள், சமய நெறிமுறைகள்) விட்டெழித்து என்னை ஒருவனையே சரணடைவாய். நான் உன்னை எல்லாப் பாவங்களிலும் இருந்து விடுவிப்பேன்" என உறுதி கூறுகிறார். (18.66) எனவே தெய்வம் உண்டு என்று ஒருவன் நம்புவது உண்மையானால் அவன் இறைவனிடம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

முழுமையாகச் சரணடைவதன் மூலம் நம்முடைய சிக்கல்களைத் தீர்க்கும் பொறுப்பை இறைவன் ஏற்றுக்கொள்கிறார்.

"நின்னைச் சரணடைந்தேன் - கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்!"

என பாரதியும் கண்ணம்மா வடிவில் கண்ணனைக் கண்டு மனமுருகிப் பாடுகிறார்.

இப்படி சரணாகதி அடைவதை, பகவானுடைய காலடியில் செய்து விடு. உன் நலத்தை அவன் கவனித்துக் கொள்வான் என்பது மகான்களின் வாக்கு. "பகவானே... நீ தான் கதி; நீ விட்ட வழி..... என்று பொறுப்பை அவனிடம் விட்டுவிட்டால், பொறுப்பு பகவானுடையதாகி விடுகிறது. பகவான் இவனைக் காப்பாற்றுகிறான். நீயே கதி என்று சரணடைந்தவர்களுக்கு பகவான் ஓடி வந்து உதவுகிறான்.

துணைநூற்பட்டியல்

1. தமிழறிஞர் சாமி. சிதம்பரனார் – 'பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்', இலக்கிய நிலையம், சென்னை, 1962.
2. இரா.கனகசுப்புரத்தினம் - 'திருக்குறள்', அறிவுநிதி பதிப்பகம், சென்னை, 1996.
3. *திருப்பாவை*
4. *பாஞ்சாலி சபதம்*
5. *விவிலியம்*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஐங்குறுநூற்றில் அறத்தொடு நிற்றல்

Living with the Ethics of A*inkurunooru*

முனைவர் ம. தனலெட்சுமி, உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு.

Abstract

"A*inkurunooru" is the primary scope of the present article. It gathers information about the life morals followed by the people of those times. The Lover, Beloved, her friend and the morals followed by them at the time of love, and at the time of detatchment, and at crisis areshown in regard to their perseverance with the moral principles and are widely seen in* "A*inkurunooru". So, Tamil people have principled life with morals. Therefore, the article tries to bring down the ideas from* "A*inkurunooru".*

Keywords: Living with Ethics, A*inkurunooru*, Tamil People, Lover and Beloved

நுழைவாயில்

பண்டையத் தமிழர்கள் காதலையும், வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். காதல் வாழ்க்கையை அகம் என்றுகூறி, அது சார்ந்த ஒழுக்கத்தை (திணை) அகத்திணை என்று இலக்கணம் வகுத்தனர். அகத்திணை மாந்தர்களைப் பெயர்சுட்டி வழங்காமல் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்று பொதுநிலையில் வைத்தே இலக்கியங்கள் சுட்டுகின்றன. இத்தகைய அகநிலை மாந்தர்களில் தலைவன், தலைவியின் அன்பு வழிப்பட்ட வாழ்க்கையைக் களவு, கற்பு என பிரித்தனர். இதில், களவு என்பது பெற்றோரும், மற்றோரும் அறியாமல் தலைமக்கள் இருவரும் எதிர்பாராமல் சந்தித்துக் கூடும் வாழ்க்கை ஆகும். இக்களவு வாழ்வானது கற்பாக மாறும் சூழலில்தான் ஒத்த அன்பாக அது பேசப்பட்டது. களவின் வழிவராமல் பெற்றோரால் கூட்டுவிக்கப்படும் கற்பு வாழ்வும் நிகழ்ந்துள்ளது. இதில், களவு நிலையிலிருந்து கற்பு வாழ்விற்குக் கொண்டுசெல்லும் ஒரு அக வாழ்வியல் நெறியே அறத்தொடு நிற்றலாகும். இந்த அறத்தொடு நிற்றல் நெறியை ஐங்குறுநூறில் உள்ள குறிஞ்சித்திணை வழியாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறத்தொடு நிற்றல்

அகத்திணை மாந்தர்களின் மன, மண ஒழுக்கங்களைக் களவு, கற்பு என்று பகுப்பதால், இவ்விரண்டையும் இணைத்து நிற்கும் ஓர் ஒழுக்க நெறி அறத்தொடு நிற்றலாகும். தலைவியின் களவு ஒழுக்கத்தை, அதாவது மாற்றாருக்குத் தெரியாமல் தலைமக்கள் மனங்கள் ஒன்று சேர்ந்ததை உண்மையோடு வெளிப்படுத்தலே அறத்தொடு நிற்றல் ஆகும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என ஒவ்வொருவரும் அறத்தொடு நிற்பதுண்டு. அறத்தொடு நிற்றலின் விளைவு தலைவியை அவள் விரும்பிய தலைவனுடன் கற்பு வாழ்க்கையில் இணைப்பதாகும். அதாவது, தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்வித்தலாகும். தலைவிக்கு உடனிருந்து பிறர்அறியாமல் களவு ஒழுக்கத்திற்கு உதவுகிறவள் தோழி. அவளின் களவு வாழ்வு கற்பாக மாறவேண்டும் என்ற நோக்கோடு வாய்ப்பு ஏற்படும் பொழுது தோழி செவிலிக்குத் (வளர்ப்புத்தாய்) தலைவியின் காதலைக் குறிப்பாகப் புலப்படுத்துவாள். இதனை, களவை வெளிப்படுத்துதல் என்று கூறாமல் அறத்தொடு நிற்றல் என்று கூறுவதன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நோக்கம் தலைவியின் கற்பு அறத்தைக் காப்பதற்காகக் களவு உண்மையை வெளிப்படுத்துவதால் இது அறத்தொடு நிற்றல் என்று கூறுவர். (அறம் என்பது உண்மை மாறாத் தன்மையாகும்.)

அறத்தொடு நிற்றல் என்பதற்கு, "களவினைத் தமர்க்கு முறையே தெரியப்படுத்துதல்"[1] என்று கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

நச்சினார்க்கினியர், "அறனென்று சொல்லப்படுந்தன்மை இருவர் கண்ணுங் குறைந்தீர்ந்த எதிர்ப்பாடென்று செவிலியிடத்தே கூறி அக்கிளவியை நற்றாயிடத்துச் செலுத்தினும் என்றது, புனல்தருபுணர்சியும், பூத்தரு புணர்ச்சியும், களிறுதரு புணர்ச்சியும் போல்வன செவிலிக்குக் கூறி அவள் நற்றாய்க்குக் கூறுதலை நிகழ்த்துதலாம். எனவே, அவள் தந்தைக்குந் தன்னையர்க்கும் உணர்த்துதலும் அதனை மீண்டுவந்து தலைவிக்கு உணர்த்துதலும் பெற்றாம். அவ்வறத்தொடு நிலை எழுகைய (207) எனப் பொருளியலுட் கூறுப"[2] என்கின்றார்.

தொல்காப்பியர் இதனை 'குற்றம் தீர்ந்த அறச்செய்கை' என்று குறிப்பிடுகிறார். களவியலில் "நாற்றமும் தோற்றமும்" என்ற நூற்பாவில் தோழி கூற்று நிகழ்த்தும் இடங்களை 32-ஆகச் சுட்டுகின்றார். அவற்றுள், தாய் ஐயுறும் சூழலிலும், களவை மறுத்துப்பேசி களவைப் பேணும்பொழுதும், இற்செறிப்பின் பொழுதும், வெறியாட்டின் பொழுதும், வேற்றுவரைவின் (நொதுமலர்) பொழுதும், தலைவன் வரைவைத் தமர் மறுக்கும் பொழுதும், தலைவன் - தலைவியின் களவொழுக்க இயல்புகளை எடுத்துரைக்கும் பொழுதும் ஏழு சூழல்கள் (தொல்.களவு.112:37-42) அறத்தொடு நிற்றல் தொடர்பானவையாகும். இவ்விடங்கள் தவிர, தோழி தலைமக்களது களவு வாழ்க்கையை வெளிப்படுத்தி அறத்தொடு நிற்கும் மரபு இல்லை என்று தொல்காப்பியம் (பொருள்.நூ.203) கூறுகிறது. அறத்தொடு நிற்கும் நிலையை நம்பியகப்பொருள் முன்னிலை, முன்னிலைப் புறமொழி என்று இரண்டாகச் சுட்டுகின்றது.

"முன்னிலை முன்னிலைப் புறமொழி யென்றாங்
கன்ன விருவகைத் தறத்தொடு நிலையே" (நூற்பா.175)

அறத்தொடு நிற்கும் முறைமை

அறத்தொடு நிற்கும் நிலை உண்டாகும் சூழலில் தலைவி தன் தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்கும், நற்றாய் தந்தை, தமர் போன்றோருக்கும் அறத்தொடு நிற்பர் என்று நம்பியகப்பொருள் இலக்கணம் கூறுகின்றது.

"தலைவிபாங்கிக் கறத்தொடுநிற்கும்
பாங்கிசெவிலிக் கறத்தொடுநிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
என்ப நெறியுணர்ந்தோரே" (நம்பி.48)

பொதுவாக, குறிஞ்சித் திணைக்குச் சிறப்பு சேர்க்கும் நிகழ்வுகளாக அறத்தொடு நிற்றல், வரைவு கடாவுதல், இற்செறிப்பு, இரவுக்குறி, குறிஞ்சியைப் போற்றல், குறிகேட்டல், தினைப்புனம் காத்தல் முதலியனவற்றைச் சுட்டலாம். ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐங்குறுநூறு குறிஞ்சித்திணையில் மட்டும் அறத்தொடு நிற்றல் குறித்து 20 பாடல்கள் உள்ளன. அதில் தலைவி அறத்தோடு நிற்கும் சூழலின் அடிப்படையில் இரண்டு பாடல்களும், தோழி அறத்தொடு நிற்கும் சூழலாக 16 பாடல்களும், தலைவன் கூற்றின் அடிப்படையில் ஒரு பாடலும், செவிலியைப் பாராட்டும் நோக்கில் அறத்தொடு நின்றதை நினைவூட்டும் அடிப்படையில் ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளன.

தலைவி அறத்தொடு நிற்றல்

தலைவி, அதிகம் பேசாத பெண்ணாக இலக்கணங்கள் வரையறுக்கின்றன. எனினும், தேவை எழும்பொழுது அவள் தன் கருத்தைத் தெளிவாகக் கூறுமிடங்கள் உள்ளன. இத்தகைய தலைவி, அறத்தொடு நிற்கும் சூழல்களை நம்பியகப்பொருள் ஏழாகப்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பகுத்துக்கூறுகின்றது. அவை: 1. கையறு தோழி கண்ணீர் துடைக்கும் பொழுது தலைமகள் காரணம் கூறல், 2. தலைமகன் தெய்வம் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை, 3. தலைமகன் இகந்தமை தலைமகள் பாங்கிக்கு இயம்பல், 4. தெளிவிடை விலங்கல், அதுகேட்ட பாங்கி இயற்பழித்துரைத்தல் தலைமகள் இயற்பட மொழிதல், 5. தெய்வம் பொறை கொளச் செல்குவம் எனல், 6. இல்வயிற் செறித்தமை சொல்லல், 7. செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல்.

"கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
......இல்வயிற் செறித்தமை சொல்லலும் செவிலி
கனையிருள் அவன்வரக் கண்டமை கூறலும்
எனமுறை யியம்பிய ஏழும் புனையிழைத்
தலைவி அறத்தொடு நிலைதனக் குரிய" (நம்பி.176)

ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களை எடுத்துக்கொண்டு ஆய்ந்ததில் வேற்றுவரைவு (பா.201) வரும் சூழலிலும், தலைவன் மணம்பேச வந்துற்ற சூழலில் தாய் மன்றல் நிகழ்த்துவாளா? என்று தோழியிடம் ஐயுறும் பொழுதும் (253) தலைவி அறத்தொடு நின்ற குறிப்பு தெரிகின்றது.

தலைவி அறத்தொடு நிற்றல்

வேற்றுவரைவு மன்றலைத் தாய் நிகழ்த்துவாளா?

வேற்றுவரைவு

தலைவி வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து கற்புக்கடம் பூண்டதை அறியாது அயலவர் பெண் கேட்டு வந்தனர். அதனை உணர்ந்த தலைவி தன் நிலையைத் தாய்க்கு உணர்த்தும் குறிப்புடன் தோழிக்கு அறத்தொடு நிற்கின்றாள். இதில், தலைவனது மலைச் சாரலில் உள்ள மரங்கள் பொன்னிற மலர்களையும் மணிபோன்ற அரும்புகளையும் உடையன. எம் தலைவன் அவற்றை விரும்பி அணிந்தான். அம்மரத்தின் தழைகள் எமக்கு உடுத்துக்கொள்ளும் தழையைத் தந்தன. இம்மரங்கள் எவ்வகையின நீ அறிவாயா? என்று தோழியிடம் கூறுவதிலிருந்து,

1. தலைவன் தந்த தழையாடையைத் தலைவி ஏற்றுக் கொண்டதனை அறிவிக்கின்றாள்.
2. தலைவன் நாட்டிலுள்ள மரமாதலால் அதன் மலரையும் அரும்பையும் பொன்னென்றும் மணியென்றும் புகழ்ந்தாள்.
2. அம்மரங்களின் தன்மையை நன்கு அறிந்திருந்தாலும் அறியாதவள் போன்று 'என்ன மரம்கொல்' என்று வினவுகின்றாள். இதன்வழி வேற்றுவரைவு (நொதுமலர் வரைவு) தடுத்து நிறுத்துதல் தோழியது கடமை என்பதை உணர்த்தும்பொருட்டு தலைவி அறத்தொடு நிற்கின்றாள்.

"அன்னாய், வாழி! வேண்டு, அன்னை! என்னை-
தானும் மலைந்தான், எமக்கும் தழையாயின,
பொன் வீமணி அரும்பினவே-
என்ன மரங்கொல், அவர் சாரலவ்வே!" (ஐங்.201)

மன்றலைத் தாய் நிகழ்த்துவாளா?

தலைவி, திருமணத்திற்குப் பொருள்தேடச் சென்ற தலைவன் அதனை ஈட்டித் திருமண ஏற்பாடுகளோடு வருவதை அறிந்து தோழியிடம் அவனது நாட்டின் செல்வவளத்தைக் கூறி அன்னை நம் இல்லத்தில் மன்றலை நிகழ்த்துவாளா? என வினவுகிறாள். இதன்வழி, விலை உயர்ந்த சந்தனக் கட்டைகளைக் கொண்டு மலைவாழ் குறவர் அடுப்பெரிப்பதனால் எழும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நறும்புகையானது மலைநாடு முழுவதும் பரவுகிறது என்பதில் தலைவனின் மலைநாட்டின் பெருமையைச் சுட்டுகிறாள். தலைவன் வரைவொடு வருவதை அறிந்த தாய், வேற்றுவரைவிற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதை அறிந்து அதற்கு உடன்பட வற்புறுத்துவாளோ என்ற ஐயம் தலைவிக்கு எழுகிறது. எனவேதாம் தோழியிடம் அறத்தொடு நிற்பதன்வழி தலைவனின் வேண்டுகோளை ஏற்று நம் மனையிலேயே மன்றலை நிகழ்த்துவாளா? என்று நயம்படக் கேட்கின்றாள்.

"கானக நாடன் வரையின்,
மன்றலும் உடையள்கொல் - தோழி! – யாமே" (ஐங்.253)

தோழி அறத்தொடு நிற்றல்

தோழி அறத்தொடு நிற்கும் சூழலை, 1. செவிலி தலைவியது மாற்றம் கண்டு தோழியை வினவும் பொழுதும், 2. தோழி வெறியாட்டை விலக்கும் பொழுதும், 3. பூ, புனல், களிறு தரும் புணர்ச்சியின் பொழுதும் தோழி அறத்தொடு நிற்பாள் என்று நம்பியகப்பொருள் இலக்கணம் வரைகிறது.

"எறிவளை வேற்றுமைக் கேதுவி னாவினும்
வெறிவிலக் கியவழி வினாவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பும்" (நம்பி.177)

ஆய்வுப்பகுதியில் தோழி அறத்தொடு நிற்கும் நிலைகளாக, செவிலி, தலைவியது மாற்றம் கண்டு தோழியை வினவிய பொழுது அறத்தொடு நிற்பதாக ஒருபாடலும் (205), வேலன் வெறியாட்டைத் தோழி விலக்கும்பொழுது (210, 241, 243, 244, 247, 248, 249, 250) அறத்தொடு நிற்பதாக எட்டு பாடல்களும், தமர் வரைவு எதிர்கொள்ளாத பொழுது அறத்தொடு நிற்பதாக மூன்று பாடல்களும் (212, 228, 266), வேற்று வரைவு வரும்பொழுது அறத்தொடு நிற்பதாக இரண்டு பாடல்களும் (220, 271), தலைமகளிடம் தோழி அறத்தொடு நிற்க வேண்டும் சூழலில் ஒரு பாடலும் (242), தலைவியது சுற்றத்தார் தலைவனது மணம்பேசலை மறுத்துரைத்தபின் அவன் வேண்டுகோளுக்கு இணங்கி அறத்தொடு நின்றதாக ஒரு பாடலும் (258) என மொத்தம் பதினாறு பாடல்கள் தோழி அறத்தொடு நின்றதாக உள்ளன.

செவிலி வினவ, தோழி அறத்தொடு நின்றல்

வேற்று வரைவு வந்தமையால், தலைவி வருத்தத்துடன் இருந்தாள். இதனை அறிந்த செவிலித்தாய் தோழியிடம் வினவும்பொழுது, பதிலுரையாக, தலைவி மிகுந்த நாணம் உடையவள். தாயைக் கண்டு மிகவும் அஞ்சுகின்றவள். ஒலியொடு வீழும் வெள்ளி அருவியினையுடைய உயர்ந்த மலைநாட்டிற்குத் தலைவன் இவள் காதலன். அவனது அகன்ற மார்பினிடத்தே கிடந்து துயிலுதலை இவள் மிகவும் விரும்புகின்றாள். அவள் நிலைக்காக நானும் வருந்துவதைத் தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை என்றெல்லாம் கூறுகின்றாள். இதன்வழி தலைவனின் உயர்குடிப்பிறப்பையும், தலைவி அவனைக் களவில் மணந்து திருவாளனாக ஏற்றுக் கொண்டதையும் குறிப்பாக உணர்த்துகின்றாள்.

"ஒலிவெள் அருவி ஓங்கு மலைநாடன்
மலர்ந்த மார்பிற் பாயல்
தவ நனி வெய்யள்: நோகோ, யானே" (ஐங்.205)

வேலன் வெறியாட்டு

தலைவியின் சுற்றத்தார், அவளை இல்லில் வைத்துக் காவல் பூண்டபொழுது தலைவனின் பிரிவை எண்ணி பெரிதும் மெலிவுறுவாள். அவளின் தோற்றமாறுபாடுக்குத் தெய்வக்குறைதான் காரணம் என தவறாக உணர்ந்து வேலனை அழைத்து வெறியெடுப்பது வேலன் வெறியாட்டு ஆகும். இந்தச்சூழல் நிகழும்பொழுது தோழி அறத்தொடு நிற்பாள். அவ்வாறு அறத்தொடு நின்றதாக ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித்திணையில் எட்டு பாடல்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உள்ளன. சான்றாக, தலைவியின் மெலிவிற்குத் தெய்வக் குற்றம்தான் காரணம் என்று வெறியெடுக்க முற்பட்ட சுற்றத்தாரிடம் அதனைத் தடுத்து, "நம் தோட்டத்தின்கண் உள்ள புலால்மணம் வீசும் குண்டுக்கல்மீது ஏறி நின்று, அவர் நாட்டகத்துள்ள பூக்கள் நெருங்கியதும் நீல மணியை ஒத்ததும் ஆன குன்றத்தை நோக்கினாள் எனில், என்தோழி, தன் ஒளிமிக்க அணிகள் நெகிழாது, அவை நின்ற நிலையிலேயே நிற்பதற்குக் காரணமாக அமையும். பிரிவுத்துயரம் தணிதற்கும் உரியதாகும்" என்று தோழி கூறுவதன்வழி தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தை விளக்குவதன்வழி அறத்தொடு நிற்கின்றாள். இதில், அத்தலைவனுக்கே தலைவியை மணம்செய்து கொடுத்தலே நோய்க்குரிய தீர்வாகும் என்பது பொருள்.

"மணிபுரை வயங்கு இழை நிலைபெறத்
தணிதற்கும் உரித்து, அவள் உற்ற நோயே" (ஐங்.210)

மற்றொரு பாடலில், தலைவியின் நிலைகண்டு வெறியாட்டு கொள்ள விழையும் செவிலியிடம் அறத்தொடு நிற்போமென தோழி, தலைவிக்கு உணர்த்தினாள். இவ்வாறு அறத்தொடு நிற்கமால் போனால் தலைவியின் காமநோய்க்குக் காரணம் தலைவன் என்ற உண்மை தெரியாமல் போவதுடன் தீமையாகவே முடியும் என்று வலியுறுத்துகின்றாள்.

"எய்யாது விடுதலோ கொடிதே – நிரைஇதழ்
ஆய்மலர் உண்கண் பசப்ப,
சேய் மலை நாடன் செய்த நோயே" (ஐங்.242)

இதன்மூலம், தோழி தலைவிமீது கொண்ட உண்மை நட்பும், அக்கறையும் தெரிகின்றது.

தமர் வரைவு ஏற்காதபொழுது

தலைவியைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்கும்படி தலைவன் வேண்டும்பொழுது, அவளின் பெற்றோரும் பிற உறவினரும் மறுத்தபொழுது தோழி அறத்தொடு நிற்பாள். சான்றாக, தலைவிக்கும், தலைவனுக்கும் இடையே ஊழால் காதலுறவு ஏற்பட்டது. மேலும், மலைநாடன் அறப்பண்பு உடைய சான்றோனாக இருக்கின்றான். அவனை நாம் விலக்குதற்குக் காரணம் என்ன? என்று செவிலியிடம் தோழி கேட்பதுபோல் அறத்தொடு நின்றாள்.

"சாத்த மரத்த பூழில் எழு புகை
கூட்டு விரை கமழும் நாடன்
அறவற்கு எவனோ, நாம் அகல்வு? – அன்னாய்!" (ஐங்.212)

தமர் வரைவு மறுத்தபொழுதும் தலைவன் விடாது வந்துகொண்டிருக்கும் சூழலையும், தலைவி அவனது மலைநாட்டைக் காண்பதனாலேயே உயிர் வாழ்கின்றாள் என்பதனையும் சுற்றத்தாருக்கு அறிவிக்க எண்ணிய தோழி, தலைவனிடம் கூறுவதுபோல அறத்தொடு நிற்கின்றாள்.

"குன்றக் குறவன் காதல் மடமகள்
அணி மயில் அன்ன அசை நடைக் கொடிச்சியைப்
பெருவரை நாடன் வரையும் ஆயின், கொடுத்தனெம் ஆயினோ நன்றே
இன்னும் ஆனாது, நன்னுதல் துயரே" (ஐங்.258)

வேற்று வரைவினைத் தடுக்கும் தோழியின் திறம்

தலைவி கற்புக்கடம் பூண்டதை அறியாத பிறர் மணம்பேச வருகையில் தலைவியின் அறிவுறுத்தல் இன்றி தோழியே அறத்தொடு நிற்கும் சூழலும் உள்ளன. இத்தகைய சூழல் ஒன்றில் தோழியானவள், செவிலியிடம் மலைநாடனின் பெரிய மலைபோன்ற அழகும் வெற்றியும் உடைய மார்பினைத் தழுவாமல் கழியும் ஒவ்வொரு நாளும் இவளுடைய மயங்கிய இதழ்போலும் குளிர்ந்த கண்கள் கண்ணீரைச் சொரியும் என்று கூறுகிறாள். இதன்வழி தலைவனைப் பிரிந்து தலைவி வாழமாட்டாள் என்பது இங்கு உணர்த்தப்பட்டுள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"..........திருவிறல் வியல் மார்பு
முயங்காது கழிந்த நாள், இவள்
மயங்கு இதழ் மழைக்கண் கலிழும் - அன்னாய்!"(ஐங்.220)

தலைவனும், தலைவியும் காந்தர்வமணத்தால் கூடியதைத் தலைவியின் சுற்றத்தாருக்கு உரைக்க தோழியிடம் தலைவன் வேண்டியபொழுது அறத்தொடு நின்றதாக ஒரு பாடலும் (280), அறத்தொடு நின்றபின் கைகூடிய திருமணத்தால் செவிலித்தாயை வாழ்த்துவதாக ஒரு பாடலும் (208) இடம்பெற்றுள்ளன.

தலைவியின் உடன்போக்கும் தோழியின் அறிவிப்பும்

தலைமக்கள் களவில் ஒன்றுகூடி உடன்போனபின் தலைவனின் ஊரில் மணவினை நிகழ்த்தியதைத் தலைவியின் சுற்றத்தாருக்கு அறிவிக்க, தோழியைக் கண்டு தலைவன் வேண்டிநின்றான். தலைவியின் உடன்போக்கில் தோழிக்கு பங்கு இருந்தாலும், அதை முறையாக அறிவிக்கும் நோக்கில், வானளாவி வளர்ந்த மூங்கிலின் உச்சியில் குரங்குக்குட்டி இருப்பது சிறு கோலால் மதியைப் புடைப்பதுபோல் உள்ளது. அதுபோல, தலைவியின் களவுமணத்தைச் சுற்றத்தார் ஏற்காமையால், உடன்போகி மணந்துகொண்டாள் என்று அறிவித்தாள்.

அறத்தொடு நின்றபின் நிகழ்ந்த மணத்தால் செவிலியைப் போற்றுதல்

களவில் ஒன்றுபட்ட தலைமக்கள் கற்புநெறியில் வாழ்வைத் தொடங்குவதுதான் மரபாகப்போற்றப்பட்டது. அவ்வாறு களவு மணத்தில் இடையூறு ஏற்படும்பொழுது தோழி அறத்தொடு நின்றதன்வழி தலைவியின் மணம் சிக்கலின்றி முடிந்ததை எண்ணி செவிலியைப் பாராட்டும் தோழியின் மனநிலையையும் ஐங்குறுநூறு குறிஞ்சித் திணையில் காணமுடிகின்றது. கானவர் வள்ளிக் கிழங்கும், கவலைக் கிழங்கும் தோண்டியெடுப்பது வழக்கமாதலின் அங்ஙனம் தோண்டியமையால் உண்டான குழிகள் நிறையுமாறு வேங்கை மலர்கள் நிறைந்தன. அதுபோல, தலைவனது மலையை மழைமேகம் மறைக்கும்பொழுதெல்லாம் காணாத உள்ளத்துடன் தலைவியின் குவளைக் கண்கள் நீரைச் சொரிந்தன. நின் உதவியால் அந்தத் துயரம் இனி இல்லை என்று தாயை வாழ்த்தினாள் தோழி.

"..................கானவர்
கிழங்கு அகழ் நெடுங்குழி மல்க வேங்கைப்
பொன்மலிபுது வீ தாஅம் அவர் நாட்டு,
மணிநிற மால் வரை மறைதொறு, இவள்
அறைமலர் நெடுங்கண் ஆர்ந்தன பனியே" (ஐங்.208)

நிறைவாக

- அறம் என்பது உண்மை. அதன்வழி நிற்பதே அறத்தொடு நிற்றலாகும்.
- தலைமக்களின் களவு வாழ்வு கற்பாக மாறும்பொழுது இன்னல் ஏற்பட்டால் அதனைத் தீர்த்து வைக்கும் நிலையில் தோழி அறத்தொடு நின்றுள்ளாள்.
- சில சூழல்களில் மட்டும் தலைவி அறத்தொடு நிற்கும் நிலையைக் காணமுடிகின்றது.
- மணம்செய்தலைத் தமர் மறுத்தபின்பு உடன்போக்கில் தன்ஊரில் தலைவியை மணந்த தலைவன் தலைவியின் சுற்றத்தாருக்கு முறையாக அறிவிக்கத் தோழியின் உதவியை நாடும் பண்பாளனாகப் படைக்கப்பட்டுள்ளான்.
- தலைவியின் சுற்றத்தாரிடம் அறத்தொடு நின்று மணம்பேசிய செவிலியைத் தோழி வாழ்த்தும் பண்பு தெரிகின்றது.

ஆக, தலைமக்களது களவு, கற்பு வாழ்வில் தோழியின் பங்கு மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சான்றென் விளக்கம்

1. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, ப.60.
2. நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், பக்.133-134

துணைமை ஆதாரங்கள்

1. ஐங்குறுநூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
2. இளம்பூரணம் (உ.ஆ) தொல்காப்பியம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
3. நாற்கவிராச நம்பி, நம்பி அகப்பொருள், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
4. Tamil Virtual University Library.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

விடியல்

The Dawn

த.பத்மா, முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.

Abstract

Literature is the mirror of the society. It points out the crisis and the tragic outcomes and suggests with the solutions to them. Tamil writers are excellent in doing so. Female writers are now the scene of Tamil literary tradition. Ambai is one of the women luminary who got succeeded in the Tanil writing and also in English. Her short stories are very notable for her rational outlook. The present study focuses on the story "Surian"(Sun) and takes the theme "Vidial" (Dawn) as liberation to decipher the war crisis throughout the story. Therefore, the article unfolds the goriness of war and the consequences of it.

Keywords: Surian (Sun), Vidial (Dawn), Ambai, War Crisis

முன்னுரை

மக்கள் வாழ்க்கையைப் படம் பிடிக்கும் கண்ணாடியாகத் திகழ்வது இலக்கியம். வாழ்வியல் சிக்கல்களைச் சுட்டிக் காட்டுவதோடு அவற்றுக்குத் தீர்வுகளையும் இலக்கியங்கள் முன் வைக்கின்றன. இவ்வகையில் அம்பை சிறுகதை தொகுப்பில் சூரியன் என்னும் கதையில் போரின் தொடக்கமாக ஒரு குடும்பத்தின் நிலையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கதைச்சுருக்கம்

போர் நடைபெற்று வருகிறது. அப்போரில் ஒரு குடும்பம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. போரில் ஒரு பெண் தன் கணவனை இழந்து பின் மூத்த மகனையும் இழக்கிறாள். போரின் முடிவை தன் மகன் கூறுவதைக் கேட்ட தாய் அதிர்ச்சி அடைகிறாள். போர் தொடர்ந்து நடைபெறுவதால் பூமியின் மேற்பரப்பில் வாழ முடியாமல் பூமிக்கு அடியில் வாழ்ந்து வருகின்றனர். தேவையின் போது இரவு நேரத்தில் மட்டும் தான் பூமியின் மேற்பரப்பிற்கு வந்து செல்வார்கள். தன்னுடைய வாழ்க்கை அனைத்தையும் பூமிக்கு அடியிலேயே வாழ்ந்துவரும் சூழ்நிலையில் இருக்கின்றனர். அப்போது தாய் தன் மகனிடம் தனக்கென நிலங்கள் இருந்த போது தானும், தந்தையும், அக்காவும், அண்ணனும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தோம் எனக் கூறுகின்றாள். அப்போது அவளின் இளைய மகனுக்கு தன் அண்ணனை புகைப் போல நினைவிருந்தது. தாய், தன் அண்ணனிடம் போரின் முடிவை கேட்டு அறிந்த தாய் அதிர்ச்சி அடைந்தாள் என்பதை கூட அறியாத சிறுவனாக இளைய மகன் இருக்கிறான். பின் மகள் வெளியே செல்வதாக கூறச் சென்றவள் இரவு பொழுது வந்தும் வீடு திரும்பவில்லை என்பதால் மகளை தேடிச் செல்கின்றாள். அப்போது மகனையும் உடன் அழைக்கச் செல்கிறாள். அவன் வெளியே வருவது அன்று தான் முதல் முறை. இந்நிலையில் தன் இளைய மகனுக்கு நிலங்கள் இரத்தமும் சதையுமாய் தோற்றம் அளித்தது. அவன் தொட்டும் பார்ப்பதற்குள் அன்னை அவனை இழுத்துச் சென்றுவிட்டாள். பின் தொலைத்தூரம் சென்று ஒரு புதருக்கு அருகில் மகள் கற்பை இழந்து உயிரற்ற நிலையில் கிடப்பதைப் பார்த்த தாய், மகளின் ஆடையைச்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சரிச்செய்து மார்போடு கட்டி அனைத்து கண்ணீர் விட்டாள். பின் மகளை அவ்விடத்திலேயே விட்டு விட்டு மகனை மட்டும் விரைவாக அவ்விடத்தை விட்டு செல்கின்றாள். அவ்விடத்திலேயே இருந்தால் தனக்கும் ஆபத்து நேரிடும் எனவும், விடிவதற்குள் செல்ல வேண்டும் எனவும் விரைந்து செல்கிறாள். அப்போது சூரியன் தன் கதிர்களை மெல்ல மெல்ல பூமியில் படர்ந்தது. அடிமை நிலையில் பூமிக்கு அடியில் வாழ்ந்த சிறுவன் சூரியன் என அறியாது. தாயிடம் சூரியனைக் காட்டு அந்த மஞ்சள் பந்து என்ன? என்று கேட்டான். தாயோ! தன் நிலையையும் மகளையும் நினைத்து வருந்தி அவனைக் கட்டி அணைத்தாள். பின் தாய் சூரியனின் கதிர்கள் பூமியின் மேற்பரப்பில் படர்வதைக் கண்டு தனக்கான விடியல் என்று என வருந்துவதாக கதை அமைந்துள்ளது.

குடும்பத்தின் நிலை

போரின் தொடக்கத்திற்கு முன் ஒரு குடும்பம் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். தனக்கான சொந்த நிலத்தில் கணவன், மனைவி, குழந்தைகள் என அனைவரும் அமர்ந்து சிரித்து பேசி மகிழ்ந்து வாழ்ந்தனர். ஆனால் போரின் ஆரம்பத்தில் அப்பெண் கணவனை இழந்தாள். பின் அவளுடைய மகனும் போரில் கலந்து கொண்டு இறுதியில் உயிர் துறந்தான். அப்பெண்ணோ பூமியின் மேற்பரப்பில் வாழ முடியாமல் தன் மகளையும், மகனையும் அழைத்துக் கொண்டு பூமிக்கு அடியில் வாழ்ந்தனர். பிறப்பு முதல் இறப்பு வரை அங்கேயே நடந்தது. தனது வாழ்க்கை முழுவதையும் பூமிக்கு அடியிலேயே வாழ்ந்து கழித்தனர். பின் ஒரு நாள் அப்பெண்ணின் மகள் வெளியே செல்வதாக சென்று வீடு திரும்பவில்லை என புலம்புகிறாள். போர் நடைபெறுவதால் பூமியின் மேற்பரப்பில் பாதுகாப்பு இல்லாமல் சென்ற அவளது மகள் கற்பை இழந்து பிணமாக கிடைக்கிறாள். அப்பெண் கணவன், மகன், மகளுக்கு ஏற்பட்ட நிலையை நினைத்து வருந்தினாள். இறுதியில் அவளது இளைய மகனுடன் தனக்கான விடியல் என்று எதிர்ப்பார்த்து இருந்தனர்.

குடும்பப்பெண்ணின் நிலை

சூரியன் என்னும் கதையில் ஒரு பெண் போரில் அவளது கணவனையும், மகனையும் இழந்து தனிக்கப்படுகிறாள். அவள் தனது பெண் குழந்தையும், இளைய மகனையும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று வாழ்கிறாள். இந்நிலையில் பெண்களுக்கான பாதுகாப்பு பூமியில் இல்லாததால் பூமியின் மேற்பரப்பிற்கு வராமல் பிறப்பு முதல் இறப்பு வரை பூமியின் அடியிலே வாழும் நிலைக்கு உள்ளாக்கப்படுகிறாள். கணவனையும், மகனையும் இழந்து பெரும் துன்பத்திற்கு ஆளாகிறாள். அவளுக்கு ஏற்பட்ட நிலையில் இருந்து என்று விடுதலைக் கிடைக்கும் என எதிர்பார்த்து வாழ்த்து கொண்டு இருந்தாள்.

குடும்பத் தலைவரின் நிலை

குடும்பத் தலைவனின் நிலைப் பற்றி இக்கதையில் அதிகமாகப் பேசப்படவில்லை. தங்களுக்கான நிலங்கள் இருக்கும் போது அத்தலைவன் வேலையைச் செய்வதற்கு முன் அவனது நிலத்தை முத்தமிட்டே தொடங்குவான் என அறியப்படுகிறது. அவனது நிலத்தில் குழந்தைகளுடன் அமர்ந்து உணவு உண்டு மகிழ்ந்து வாழ்ந்தனர். அவனுடைய மனைவி, குழந்தைகள் என மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த சூழ்நிலையில் போர் ஏற்படுகிறது. போரில் அவன் பங்கு பெற்று வேளையில் போரால் பாதிக்கப்பட்டு இறந்து விடுகிறான். அவன் இறந்தாலும் ஒரு வீணாகவே போரில் பலரை எதிர்த்து நின்று துணிச்சலோடு போரிட்டு வீர மரணம் அடைந்தான் என அறியப்படுகிறது.

மகளின் நிலை

மகளின் நிலைக் குறித்தும் அதிகமாக கூறப்படவில்லை. அவளது தாயிடம் தான் வெளியே செல்வதாக கூறிவிட்டு செல்வாள். வெகுநேரம் ஆகியும் வராததால் தாய் தேடிச் செல்கிறாள். பல புதர்களுக்கு அடியில் சென்று தேடிப் பார்க்கிறாள். வெகுதூரம் சென்று பின் ஒரு புதர்க்கு அடியில் கற்பை இழந்து ஆடைகள் விளக்கப்பட்டு உயிர் இழந்து

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கிடந்தாள். ஒரு பெண்ணிற்கான பாதுகாப்பு சிறிதும் இல்லாததால் அப்பெண் பெரிதும் பாதிக்கப்பட்டு கற்பை இழந்தவளாகவும், உயிரற்ற நிலையிலும் கிடந்தாள்.

மூத்த மகனின் நிலை

மூத்த மகன் ஒரு போர் வீரன் போன்று கருதப்படுகின்றான். போரின் முடிவைப் பற்றி அவனது தாய் அவனிடம் கேட்ட போது அவன் போரின் முடிவை பற்றி கூறினான். போரின் முடிவா! அமெரிக்காவிலிருந்து போரை நிறுத்த சில வருடங்களுக்குப் பிறகு ஒரு நிபுணர் வருவார். விமானங்கள் பறந்து கொண்டிருக்கும் விர்விர்ரென்று. வேறு ஒரு சப்தம் இருக்காது. வெறும் பாழ் வெளியும் செத்த மரங்களும், எலும்புக்கூடுகளுமே. இனி போரை நிறத்தலாம். இங்கே யாரும் இல்லை? என்று அவர் எழுதி அனுப்புவார். விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் இங்கே வருவார்கள். இங்கே ஒரு புது உலகம் உருவாகும் என கூறுகிறான். (ப.எண் 13) இறுதியில் அவனும் போரில் இறந்துவிடுகிறான். போரின் முடிவை நினைத்து பெரும் ஏக்கம் கொண்டான். பின் போராடி உயிர் துறந்தான்.

இளைய மகனின் நிலை

இளைய மகனின் நிலை சிறுவயதிலேயே தந்தையையும், அண்ணனையும் இழந்தான். தந்தையைப் பற்றி சிறிதும் அறியாதவனாக இருந்தான். அவனுடைய சிறு வயதில் இருந்தே பூமிக்கு அடியில் தான் வாழ்ந்து வருகிறான். சூரியனின் ஒளிக்கதிர்களை கூட தெரியாத சிறுவனாக விளங்குகிறான். ஐந்து வருடங்களுக்கு மேலாக பூமிக்கு அடியில் தான் வாழ்ந்து வருகின்றனர். பிறப்பு முதல் இறப்பு வரை அப்பகுதியில் தான். அவனுடைய தாய் அக்காவை தேடுவதற்கு அழைத்து செல்கிறாள். அன்று தான் அவன் பூமியின் மேற்பரப்பிற்கு வருவது முதல் தடைவ பார்ப்பவை அனைத்தும் அவனுக்கு புதியதாய் இருந்தது. நிலங்கள் இரத்தமும், சதையும் கொண்டதாய் அவனுக்கு தோன்றுகிறது. தான் உறங்காத போது அன்னை கதை கூறுவாள். நிலங்கள் இருந்த போது குடும்பத்துடன் மகிழ்ச்சியாய் இருந்ததை கூறுவாள். இன்று உறங்கினால் நிலத்தில் விளையாட விடுவேன் என்று கூறுவாள். ஆனால் ஒரு நாளும் அவ்வாறு செய்தது இல்லை என வருந்தினான். பின் அக்காவை தேடிச் செல்லுகையில் அவளுக்கு நேர்ந்த கொடுமையைப் பற்றி அறியாத சிறுவனாக இருந்தான். பின் அன்னை ஏனோ அவளை அந்த இடத்திலேயே விட்டுச் சென்றுவிட்டாள். சென்று கொண்டு இருக்கும் போதே சூரியன் ஒளி வீசத் தொடங்கியது. அது அவனுக்கு புதிய ஒன்றானதாக தெரிந்தது. ஒரு விளையாட்டு பந்து போன்று காணப்பட்டது. அதனைப் பற்றி அன்னையிடம் கேட்கிறான். அன்னையோ கண்ணீரில் பேசுகிறாள். உலக உயிர்கள் வாழ்வதற்கு பெரும் துணையாக இருக்கும் சூரியனை அறியாத வகையில் பூமியின் அடிப்பகுதியில் இருட்டு உலகத்தில் வாழ்ந்து இருக்கிறார்கள். இருக்கும் இடத்தை போன்றே அவர்களது வாழ்க்கையிலும் ஒளி வீசவில்லை. இருளில் தத்தளித்துக் கொண்டு வாழ்கின்றனர்.

முடிவுரை

அம்பை அவர்களின் கதைகள் அனைத்திலும் பெரிதும் பெண்ணின் சிக்கல்களையும், மன உணர்வுகளையும், குடும்ப நிலையில் பெண்களின் நிலையையும் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது. சூரியன் என்னும் கதையில் ஒரு குடும்பம் அடையும் இன்னல்களையும், அவர்களின் நிலையையும் தெளிவாகக் காட்டியுள்ளது. கணவனையும், மகனையும், மகளையும் இழந்த பெண் தனக்கான விடியல் என்று என ஏங்குகிறாள். ஒரு பெண்ணானவள் அவளது வாழ்க்கையில் நடைபெறும் அனைத்தை பொறுத்து கொண்டு வாழ்கிறாள். என்றாவது தன் வாழ்க்கையில் விடியல் வராதா என எண்ணுவதாக கதை முடிவு பெறுகிறது.

துணைநூற்பட்டியல்

1. அம்பை சிறுகதை தொகுப்பில் *சூரியன்.*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

புதுக்கவிதையில் - வறுமை

Poverty in Modern Poetry

முனைவர்.அ.பாக்கியமுத்து, தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்,
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்.

Abstract

The research article gives details on poverty as seen in the modern verses of Tamil Literature. Poverty is the prime evil that curbs the development of the society. In reality, poverty exists really because of the men who swindle other men. This is an inhuman act. When the basic amenities of a society are deprived of it, it is poverty. These glimpses are seen in the writings of Tamil modern poetry. The poetries of Mu.Mehta, Pa.Iraiarasan, Vi. Unnamalai and Sirpi portray the gory faces of poverty. Select poems are taken from these poets and are studied to bring down the ideas and thoughts of them in it.

Keywords: Poverty in Modern Tamil Poetry, *Mu.Mehta, Pa.Iraiarasan, Vi. Unnamalai, Sirpi*

முன்னுரை

வறுமையே மனிதனின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பெரிய தடைக்கல். மனிதநேயத்தின் அவலத்தை, சமுதாயத்தல் நிலவும் வறுமை வலியுறுத்துகிறது. வறுமை என்பது ஒரு மனிதனின் உழைப்பை மற்றொரு மனிதன் சுரண்டி வாழ்வதால் உண்டாவது. இது ஒரு மனிதநேயமற்ற செயலாகும். சமுதாயத்தில் இயற்கைக்கு மாறான இழிவான செயல்களுக்கு வறுமை காரணமாக அமைகிறது. ஒரு சமுதாயத்தில் ஒரு பிரிவினருக்கு ஆடம்பரப் பொருளாகக் கருதப்படும் பொருள், மற்றொரு பிரிவினருக்கு கேள்விப்படாத பொருளாகக் கூட இருக்கலாம். எனவே, சமுதாயத்தில் அடிப்படைத் தேவைகள் கிடைக்கப் பெறாத நிலையே வறுமை எனப்படும். புதுக்கவிதைகள் மனிதனுக்கு கற்றுக்கொடுக்கும் பாடங்கள் அதிகம்.

நாட்டின் முதுகெலும்பான உழைப்பாளிகள்

சமுதாயத்தின் உயிர்நாடி போன்றவர்கள் தொழிலாளர்கள். இவர்களின் நேர்மையான உழைப்பும், ஒற்றுமையும் சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை செய்கின்றன. அதனால் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை. நன்முறையில் அமைய வேண்டியது இன்றியமையாததாகிறது. நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபடும் உழைப்பாளர்களை நாட்டின் முதுகெலும்பு என்று சிறப்பிக்கின்றோம். ஆனால், அவர்களின் வாழ்க்கை மிகவும் வறுமையாகவே உள்ளது. தொழிலாளிகளின் வியர்வையே உறிஞ்சி வாழும் நிலையைக் கவிஞர்,

"எங்கள் வேர்வைத் துளிகளை நீ செண்டாகப் பூக்கிறாய்" (மு.மேத்தா)

(திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், ப.74) என்ற கவிதை உழைப்பவர்களின் உதிரத்துளிகளில் உல்லாச வாழ்க்கை வாழும் முதலாளிகளைச் சாடியுள்ளார்.

மேலும்,

"சுதந்திரக் கடலில் சமத்துவ மிதப்பைப் பற்றி கரையேறப் பார்க்கும்
தொழிலாளப் பயணிகள் அவர்கள் விழுங்கி விழுங்கிக் கண்ணீர் விடும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

முதலாளித் திமிங்கலங்கள்'' (வீ. உண்ணாமலை, புதுக்கவிதைகளில் சமுதாயம், ப.215). நம் நாட்டில் பணம் படைத்தவர்கள் அதிகமானவர்கள் இருந்தாலும், பல துறைகளில் முதன்மையாக இருந்தாலும் அன்றாடம் உழைக்கும் உழைப்பாளனுக்கு அவர்களால் ஒரு பயனும் இல்லை. அவன் நாளுக்கு நாள் பசியால் வாடி வதங்குகிறான் என்பதை மு.மேத்தா, ஊர்வலம், ப.110 என்கிற கவிதையின் மூலம் அறியலாம்.

மேலும், பா.இறையரசன்,

"ஏழையின் குடிசையில் அடுப்பும் விளக்கும் தவிர எல்லாமே எரிகிறது''
(பா.இறையரசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.345)

என்று தனது கவிதைகளின் மூலம் தொழிலாளிகளுக்கு ஏற்படும் அவல நிலையை சுட்டிக் காட்டியுள்ளார்.

வறுமையில் பசிக்கொடுமை

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பது முதுமொழி. ஒரு மனிதன் நெருப்பினுள்ளிருந்து கூடத்தூங்க முடியும். ஆனால், வறுமையினுள்ளிருந்து தூங்கவே முடியாது என்பது வள்ளுவரின் வாக்கு. இவ்வளவு நல்ல வல்லமை படைத்த பசியை உலகத்திலுள்ள அனைத்துக் கவிஞர்களும் சாடியுள்ளனர். இதனை,

"வயிற்றுக்கு உணவில்லா விட்டாலோ வரலாறே திசைமாறும'' (மு.மேத்தா. ஊர்வலம், ப.32)" என்ற கவிதை தெளிவாகக் காட்டுகிறது. பசியின் கொடுமையால் ஏழைகள் தினம், தினம் அழுது, கண்களில் கண்ணீர் வற்றுவதற்குள். மரணம் என்னை அழைக்காதா என்று மரணத்தை எதிர்ப்பார்க்கும் மக்களின் அவலத்தை மேத்தா,

"விழிக்கிணறு வறண்டு விடுவதற்குள் மரணக் கிணறு வாய்திறக்காதா'' (மு.மேத்தா. நந்தவன நாட்கள், ப.98) என்று கூறியுள்ளார். இதன் மூலம் பசியால் துடிக்கும் மக்களின் மனக்குமுறலை அறிய முடிகிறது.

அடிப்படைத் வேலையில்லாத் திண்டாட்டம்

நாகரீகம் என்ற பெயரில் உடல் உறுப்புக்களைக் கவர்ச்சியுடன் காட்ட அறைகுறை ஆடைகளை உடுத்தி உலாவரும் இல்வுலகத்தில் இன்றளவும் உடுத்த உடையின்றி அலையும் ஏழை மக்கள் ஏராளம். அரசு வழங்கும் இலவச வேட்டி சேலைகளுக்கு முண்டியடித்துக் கொண்டு, போட்டி போடும் அவல நிலையை படம்பிடித்துக் காட்டுகிறார். மேத்தா தனது கவிதைகளில்,

"இலவசச் சேலைக்கு இடிபட்ட போது நெரிசலில் சிக்கி நினைவிழந்தார்களாம்" (மு.மேத்தா, ஊர்வலம், ப.31) என்று குறிப்பிட்டுள்ளார். இன்றைய சமுதாயத்தில் உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாதவர்கள் இருக்கையில் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், அவர்களின் பசியைத் தணிக்காமல் கண்டம்விட்டு கண்டம் தாவும் அறிவியல் கண்டுபிடிப்புகளை அறிந்தும் என்ன பயன், இதனை,

"அழலும் பசி நெருப்பை அணைக்கும் வழி இல்லையேல் சுழன்று புறவெளியில் சுற்றுவதால் ஏதுபயன்" (சிற்பி, சிற்பியின் கவிதை வானம், ப.282)

என்று கவிஞர் சிற்பி அறைகூசல் விடுத்துள்ளார். மேற்கண்ட கவிதைகளின் வாயிலாக அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கே மக்கள் எவ்வளவு அல்லல்படுகிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

தண்ணீர் பஞ்சம்

மக்களின் அனைத்துத் தேவைகளுக்கு மூலகாரணமாக அமைவது தண்ணீரே, நமது நாட்டில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்து ஆடுகிறது.

காவிரி நீரை தமிழ்நாட்டிற்குத் திறந்து விடாமல் தடுக்கும் கர்நாடக வெறியர்களை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

> "பக்கத்து மாநிலங்களுக்கு பால் கொடுக்காமல் நதி நங்கைகளின் மார்புகளிலேயே முடிச்சுப் போடும் மாநில வெறியர்" (மு.மேத்தா, நந்தவன நாட்கள், ப.94)

என்று கவிஞர் பாடுகிறார். இவ்வாறு நாள்தோறும் கண்ணீர்விட்டு, தண்ணீர் இல்லாமல் வாழ்வை இழக்கும் விவசாய மக்களின் கண்ணீரைப் போக்க விஞ்ஞானிகளுக்கு ஒரு விண்ணப்பம் தருகிறார் கவிஞர். இதனை,

> "கண்ணீரை குடிநீராக்கும் மார்க்கத்தைக் கண்டுபிடியுங்கள் இந்தியாவில் இருக்கவே இருக்காது தண்ணீர் பஞ்சம்" (மு.மேத்தா, அவர்கள் வருகிறார்கள்," ப.44)

என்று கவிதையின் வாயிலாக மக்கள் தண்ணீருக்காக கண்ணீர் சிந்தும் அவல நிலையைக் காட்டுகிறார்.

வேலையில்லாத் திண்டாட்டம்

இந்தியாவின் மாபெரும் சவால்களுள் ஒன்று வேலையில்லாத் திண்டாட்டமாகும். இவை நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், நாட்டு மக்களின் வளர்ச்சிக்கும் மபெரும் முட்டுக்கட்டையாகத் திகழ்கிறது. எத்தனையோ படித்த இளைஞர்கள் வேலை கிடைக்கவில்லையே என்ற மனவிரக்தியில் தன்னை சட்டத்திற்குப் புறம்பானவர்களாக மாற்றிக் கொள்கிறார்கள். ஆகவே, படித்த ஏழை, எளிய மாணவர்களுக்கு வேலை கொடு, இல்லையென்றால் அவர்களின் வறுமையைப் போக்க நிவாரணம் கொடு என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கும் இளைஞர்களின் மனப்பான்மையினை கவிஞர், மு.மேத்தா, அவர்கள் ப.65 தனது கவிதையின் மூலம் தன்னுடைய மனக்குமுறலை வெளிப்படுத்துகிறார். மேலும்,

> "இந்தியாவின் எந்தத்தெருவோரத்திலும் அவர்களை எப்போதும் சந்திக்கலாம் நம்பிக்கையிழந்த நடை… வெறிச்சோடிப் போன அந்தவிழிகள் வறட்சி மிதக்கும் முகம்…." (மு.மேத்தா, அவர்கள் வருகிறார்கள், ப.56)

என்ற இக்கவிதையில் வேலை கிடைக்காதவர்களின் எண்ணிக்கை அதிகமாவதையும் அவர்கள் வாழ்க்கையைத் தொலைத்து நம்பிக்கையை இழந்து, எங்கு பார்த்தாலும் வேலையில்லாப் பட்டதாரிகள் அலைகிறார்கள் என்பதையும் கவிஞர் படம்பிடித்துக் காட்டுகிறார்.

முடிவுரை

சமுதாயத்தில் காணப்படும் மிகப்பெரிய அவலம் வறுமையாகும். புதுக்கவிதைகளில் மனிதநேயத்தைப் பாடும் போது வறுமை தவிர்க்க முடியாததாகிறது. புதுக்கவிதைகள் முதலாளி வார்க்கம், தொழிலாளி வர்க்கத்தில் வியர்வையை உறிஞ்சி வாழும் நிலையினைப் பதிவு செய்கிறது. இதுவே வறுமைக்கான முக்கிய கூறாகிறது. உழைப்பவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை என்பதையும், அவர்களுக்கு உடுத்த உடை கூட இல்லாத நிலையையும் புதுக்கவிதைகள் பதிவு செய்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் வறுமை அதிகரிக்கிறதென்றும் அதனால் நாட்டிற்கு ஏற்படும் அல்லல்களையும் சுட்டிக் காட்டுகிறது கவிஞர்கள் வறுமையின் கொடுமையைக் கற்பனையில் காண்கிறவர்கள் அல்ல, அனுபவத்தின் வாயிலாக உணர்பவர்கள், ஆதலால் வறுமையின் கொடுமையை வகை வகையாகத் தன் கவிதையின் வாயிலாக சித்தரிகிறார்கள். புதுக்கவிதைகள் சமுதாயத்திற்கு அனேக பாடங்களை கற்பிக்கிறது. நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நூற்பாட்டியல்

1. மு. மேத்தா. *திருவிழாவில் ஒரு தெருப்பாடகன்.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

2. மு. மேத்தா. *ஊர்வலம்.*
3. மு. மேத்தா. *நந்தவன நாட்கள்.*
4. மு. மேத்தா. *அவர்கள் வருகிறார்கள்.*
5. வீ. உண்ணாமலை. *புதுக்கவிதைகளில் சமுதாயம்.*
6. பா. இறையரசன். *தமிழ் இலக்கிய வரலாறு.*
7. சிற்பி. *சிற்பியின் கவிதை வானம்.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சங்க இலக்கியங்கள் காட்டும் ஐவகை நில மக்களின் வாழ்வியல் முறைகள்

The Way of Life in the Five Types of Land as Elicited in the Sangam Literature

முனைவர் பா.பாலகிருஷ்ணன், உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,
ம.சு.பல்கலைக் கழகக் கல்லூரி, திசையன்விளை.

Abstract

The research article tries to get the minute details of the status of the five sorts of lands where Tamil people lived. They are separated according to the natural set up. They are Kurinji, Mullai, Marutham, Neithal and Palai. The flora and fauna, the occupation, spiritual belief and other related habitual actions are dealt with the paper in a detail manner. Life according to them varies and seems surprisingly different. Hence, this paper bring forth the Way of Life in the Five Types of Land as Elicited in the Sangam Literature

Keywords: Way of Life, Five Types of Land, Sangam Literature, Tamil People

முன்னுரை

சங்க காலத் தமிழர்கள் பல்வேறு வகையான தொழில்களை செய்து தங்களது வாழ்க்கையை அமைதியான முறையில் மேற்கொண்டிருந்தனர். தொழில்கள் அடிப்படையில் சங்க காலத்தில் மக்களை குறவர், இடையர், எயினர், சேர்ப்பன், பள்ளர் என தனித்தனியாக பிரித்துள்ளனர். இக்கட்டுரையில் ஐவகை நிலமக்களின் செயல்பாடுகள் அவர்கள் வாழ்ந்த வாழிடங்கள் அவர்களின் தொழில்கள் அவர்களின் சமூக மதிப்புகளைப் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

குறிஞ்சி நிலம்

மலைகள் குன்றுகள் அவற்றைச் சார்ந்த இடங்களே குறிஞ்சிநிலம் என்பர். குறவர், குன்றவர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாழ்ந்த பகுதியைச் சிலம்படைந்த குறவர்பாக்கம், சிறுகுடி என்றெல்லாம் குறிக்கப்படுகின்றன.

குறிஞ்சி நில குடியிருப்புகள்

குறவர்களின் குடில் மிகத் தாழ்வான சிறிய குடில்களைக் காட்டி அதன் மேல தினைத்தாளையும், ஐவன நெல்லின் தாளையும் புற்களையும் கூரையாக வேய்ந்துள்ளனர் என்பதனை,

> "இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை
> பிணையேர் நோக்கின் மனையோள் மடுப்பத்
> தேம்பிழி தேறல் மாந்தி மகிழ்சிறந்து" (குறிஞ்சி.153-55)

என்ற பாடலில் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை நிலையையும் அவர்கள் குடியிருந்த குடிலினையும் அறியமுடிகிறது.

குறிஞ்சி நில மக்களின் தொழில்கள்

தேன் எடுத்தல்

குறவர் முசுக்கலை ஏறமுடியாத மலை உச்சியின் கண்ணும் கண்ணேனியை அதன் வழியே வைத்து ஏறுவர். தேனீக்கள் ஈட்டி வைத்த தேனை எடுப்பர். கண்ணேனி என்பது கணுக்களில் அடி வைத்து ஏறியிறங்கும்படி அமைந்துள்ள மூங்கிலாகும். இதனை 'மால்பு' எனவும் கூறுவர். குறுவர் உச்சிப் பாறையில் உள்ள தேனை அறுத்தெடுக்க முயல்வதை

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"அறையுறு தீந்தேன் குறவர் அறும்ப" (அகம்-322:12)

என்பர் பரணர்.

முல்லை நிலம்

முல்லை நிலத்தவர் விலங்குகளுடனும் மக்களுடனும் நிகழ்த்திய போர் வாழ்க்கையாகவே முடிந்தது. கிளர்ச்சியும், வீரமும் அவர்களுடன் பிறந்தவைகளாகி விட்டன. ஆயர், ஆராச்சியர், கோவலன் இடையர் என்று அழைக்கப்பட்டனர்.

முல்லை நில குடியிருப்புகள்

இவர்கள் தங்கள் வீடுகளைக் குறுகிய கால்களைக் கொண்ட குடில்களாக அமைத்துக் கொண்டுள்ளனர். தங்கள் குடில்களின் மேல் கூரைகளாக வரகுத்தாள், கேழ்வரகுத் தாள் தலைழகளைக் கொண்டு வேய்ந்துள்ளனர். சிறிய வண்டிகளோடு கலப்பையும் சார்த்தி வைப்பதால் சுவர் தேய்ந்து புகை சூழ்ந்து காணப்படும் கொட்டில்கள் கார் காலத்தே ஆகாயத்தே பரவிய முகில்கள் போன்று வரகு வைக்கோலால் வேயப்பட்டு விளங்கும் கூரையை உடையனவாய் இந்தன என்பதை,

"குறுஞ்சாட்டு உருளையோடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ்க் கொட்டில்
பருவ வானத்துப் பாமழைக் கடுப்பக்
கருவை வேய்ந்த கவின் குடிச் சீறூர்." (பெரும் பாண். 188-191)

இப்பாடல் வரி மூலம் அறிய முடிகின்றது.

முல்லை நிலத்தொழில்கள்

ஆயர் காலையில் வீடுகள் தோறும் உள்ள மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வர் அவ்வாறு செல்லும் பொழுது தமக்குரிய உணவினை எருதின கழுத்தில் மூங்கிற்குழாயில் செய்து பூட்டுவர் இதனை,

"........... துளங்கிமில் நல்லேற்றுத்
தழூ உப்பிணர் எருத்துந் தாழப் பூட்டிய
அந்தூம் பகலமைக் கமஞ்செலப் பெய்த
துறு காழ் வல்சியா"

என்று குறிப்பிடுவர்

மருத நிலம்

ஏரிகள் அல்லது ஆறுகள் சார்ந்து நில வளமும், நீர் வளமும் கொண்டது மருதநிலம். இங்கு மக்கள் சேர்ந்து வாழும் இருப்பிடங்கள் ஊர் எனப்பட்டன. அவற்றின் சிறுமை, பெருமை கருதிச் சிற்றூர், பேமூர் என வழங்கப்படும் இம்மருத நிலத்தே வாழும் மக்கள் களமர், உழவர் எனப்படுவர்.

மருத நிலக்குடில்

இவர்கள் தங்கள் வீடுகளின் மேல் கூரைகளைப் புதிய வைக்கோல், தென்னங்கீற்று போன்ற பொருட்களால் வேய்ந்துள்ளனர்.

"........ கறை அடிக்
குன்று உறழ் யானை மருங்குல் ஏய்க்கும்
வண் தோட்டுத் தெங்கின் வாருமல் வேய்ந்த
மஞ்சள் முன்றில்" (பெரும்.351-354)

என்று பெரும்பாணாற்றுப் படை சுட்டுகிறது.

மருத நிலத் தொழில்கள்

உழுதல், விதைத்தல்

உழவர் பெரிய மழை பெய்த இருள் புலர்ந்த காலைப் பொழுதில் ஏர்களால் இடமுண்டாக நிலத்தைக் கீழ் மேலாகப் புழுதி புரளும் படி உழுவர். பழங்கொல்லையை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உழுத உழவர் வைகறையில் விதைக்கும் பொருட்டுச் சிறிய பெட்டிகளில் விதையை எடுத்துச் செல்வர், என்பதனை,

“அரிகால் மாறிய அங்கண் அகன்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவயின்
வித்தொடு சென்ற வட்டி” (நற்.210:1-3)

என்பர் மிளைகிழான் நல்வேட்டனார்.

நெய்தல் நிலம்

கடலைச் சார்ந்த நிலம் நெய்தல் நிலம் கடற்கரையை அடுத்த பெருமணற் பகுதியில் கடல் வளத்தை நம்பி வாழும் மக்கள் கூட்டத்தினர் இந்த ஊர்களை பாக்கம் என்பர். இங்குள்ள மக்கள் பெருங்கடற் பரதவர் எனப்படுவர்.

பரதவர் குடிலின் அமைப்பு

மூங்கில் கோல்களை வரிசையாகச் சார்த்தி வஞ்சி, காஞ்சி ஆகிய மரங்களின் வெண்மையான கொம்புகளை இடைஇடையே விரவிப் பொருத்தி தழை நாரினைக் கொண்டு வலித்துக் கட்டி கருப்பைப் புல் வேய்ந்த குறுகிய தாழ்வாரம் இறக்கி அமைந்த குடிசை தாழ் வாரத்தில் மீன் பெய்யும் பனை ஒலையால் செய்த பறி தொங்கி அசைத்துக கொண்டிருக்கிறது. குடிசையையொட்டிப் புன்னைக் கொம்புகளைக் கால்களாய் நட்டுக் கட்டிய சிறுபந்தர் அதில் சுரை போன்ற கொடிகள் செழித்துப் படர்ந்து காய்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்பதனை,

“வேழம் நிரைத்து வெண்கோட விரைஇ
தாழை முடித்துக் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை பறியுடை முன்றில்
கொடுங்காற் புன்னை கோடுதுமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்’’ (பெரும்.236, 267)

என்ற இந்தப் பாடல் வரிகள் நெய்தல் நில மக்கள் வாழ்ந்த வீட்டினைக் கண்ணின்முகக் காட்சிப் படுத்துவதாக அமைந்துள்ளன.

நெய்தல் நிலத் தொழில்கள்

மீன் பிடித்தல் பரதவர் நாட்காலையில் தோணியில் சென்று மீன் வேட்டையாடுவர் இதனை,

“வாள் வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி
நாள் வேட்டு எழுந்த நயனில் பரதவர்
வைகு கடல் அம்பி” (அகம். 187:21,23)

என்பர் மாமூலனார்.

பாலை நிலம்

பாலை என்பது தனி நிலம் அன்று வெயிலின் கொடுமையால் வளம் இழந்து நிற்கும் போது பாலை என்று அழைக்கப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் மறவர், எயினர் என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வாழும் ஊர் குறும்பூர் என்றும் அழைக்கப்படுகிறது.

“கருங்கண் மறவர் கல்கெழு குறும்பின்” (அகம். 87.7)

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

பாலை நிலக் குடியமைப்பு

பெரும்பாணாற்றுப்படை நூல் எயினர் குடியிருப்பைப் பற்றிக் கூறும் போது “ஊகம் புல்லால் வேய்ந்த உயர்ந்த சுவர்களையும் மலையில் தொடுக்கப்பட்ட தேனடை போன்ற அம்புக் கட்டுகளும், அவை தொங்கவிடப்பட்ட திரண்ட காலை உடைய பந்தலையும், சங்கிலியால் கட்டப்பட்ட நாய்களைக் காவலாகக் கொண்ட வீட்டினையும், முள்வேலியினையும்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

காவற் காட்டையும், கணைய மரம் பிணைந்த வாயிற் கதவினையும், கழுமரங்கள் வரிசையாக நடப்பட்ட ஊரெல்லையினையும் கொண்டது எயினர் குடியிருப்பு என்பதனை.

"யாற்றுஅறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை அன்ன வைந்துதி நெடுந்நகர்
ஈந்துஇலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை" (பெரும்பாண்.83)

என்ற பாடலடிகளின் மூலம் எயினர்களின் குடில் அமைப்பினை அறியமுடிகிறது.

பாலை நிலத் தொழில்கள்

விலங்குகளைக் கொன்று தன் தமையன்மார் கொணர்ந்த நிணமுடைய ஊனை எயிற்றியர் பகற்பொழுதில் வெயிலில் காய வைப்பர். அவ்வூனை உண்ண வரும் பறவைகளை ஒட்டுவர் இதனை,

"கணமா தொலைச்சித் தன்னையர் தந்த
நிணவூன் வல்சிம் படுபுள் ளோப்பும்
நலமா ணெயிற்றி" (ஐங்.365:1-3)

இவ்வரிகள் மூலம் எயினர் பகற்பொழுதில் விலங்குகளை வேட்டையாடுவது பற்றி அறியமுடிகிறது.

முடிவுரை

கருத்துக்களைச் சுவைதோன்றச் சொல்லும் நூல்களையே பொதுவாக யாரும் விரும்புவர் அவ்வகையில் இடம் பெறுவது சங்க இலக்கிய நூல்களான எட்டுத் தொகையும் பத்துப் பாட்டுமே எனலாம். தமிழின் ஐந்திணைப் பாகுப்பாடு என்பது புவியியல் ரீதியில் தமிழகத்தின் நில வெளியைப் பகுக்கின்றது. இக்கட்டுரையின் வழி ஐவகை நில மக்களின் வாழ்க்கை முறையினை பகுத்துணர முடிகிறது.

துணை நின்ற நூற்கள்

1. இராசாராம்.சு - சங்க இலக்கியத்தில் நடைமுறை வாழ்க்கை
2. சோமசுந்தரனார், பொ.வே - பத்துப்பாட்டு பகுதி - I, II
3. நீலகண்ட பிள்ளை, தா - சங்கத் தமிழர் வாழ்வியல்
4. புலியூர்க்கேசிகள் - தொல்காப்பியம் முழுவதும்
5. வேங்கடசாமி நாட்டார், ந.மு - அகநானூறு
6. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் - நற்றிணை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கவிக்கோ அப்துல் ரகுமானின் புதுக்கவிதைகளில் குறியீடு – ஒரு பார்வை

Symbolism in the Modern Verses of Kaviko Abdul Rahman

ம.பாலகுருசாமி, முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்)
அரசு கலைக்கல்லூரி (ஆடவர்), நந்தனம், சென்னை-600 035.

Abstract

The research paper fosters the use of symbolism in the verses of the famed poet Abdul Rahman. Symbolism is a famous movement that existed authentically in the west; especially in French Literature. French symbolism is noted for its elegance and indepth meaning. Tamil literature is also rich in its lofty use of symbolism. The poet has used wide range of themes such as moon, closed eye, democracy and etc to extend his views on society and individual feelings and senses. Therefore, the paper bring the use of symbolism in the verses of the world famed poet Abdul Rahman.

Keywords: Symbolism, Modern Verses, Kaviko Abdul Rahman, Tamil Literature

முன்னுரை

தமிழ்க் கவிதை காலந்தோறும் உருவத்தாலும், உள்ளடக்கத்தாலும் மாற்றங்கள் பலவற்றைப் பெற்று வந்துள்ளது. பாரதி காலம் தொடங்கி இன்றையக் காலக்கட்டம் வரை நீண்ட வரலாற்றுப் புகழைக் கொண்டது. மாறிவரும் உலகின் அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தால் இலக்கியம் புதியப் பரிமாணங்களை எட்டியுள்ளது. வடிவம் தழுவிய எண்ணற்ற ஆய்வுகளும் உள்ளீடு தழுவிய தத்துவார்த்த வளர்ச்சிகளும் தமிழ்க் கவிதையைப் புதுமைப்படுத்தியுள்ளன. காலந்தோறும் வடிவ அமைப்பாலும், பாடுபொருளாலும், உத்தி முறைகளாலும் பல்வேறுபட்டக் கோணங்களைப் பெற்றுத் திகழ்கின்றது. இன்றையப் புதுக்கவிதை உலகின் உண்மைநிலைகளை குறியீடு மூலம் சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்துபவர் கவிக்கோ அப்துல் ரகுமான் ஆவார்.

குறியீடு

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கிய இயக்கம் ‘சிம்பலிசம்’ என்று அழைக்கப்பெறும் குறியீட்டியல் இயக்கம் 1850 லிருந்து 1920 வரை பிரெஞ்சு நாட்டில் தழைத்து பின் ஆங்கில அமெரிக்க நாடுகளில் செல்வாக்குப் பெற்றது. அதன் தாக்குதலில் சிறப்பான இலக்கிய ஆக்கங்களும் வலுவான கலை இயக்கங்களும் பிறந்துள்ளன. நம் வாழ்வில் சால துறைகளிலும் குறியீடுகள் பயன்படுத்தப்பெறுகின்றன. குறியீடுகளின் தொகுதியாக, நம் பண்பாட்டை, வாழ்க்கையைக் காண இயலும்.

குறியீடு – பொருள்

கிரேக்க மொழியிலமைந்த சிம்பலின் (Symballein) என்ற சொல்லுக்குஒன்றிணைத்தல் என்பது பொருளாகும். சிம்பலான் (symbolon) என்ற பெயர்ச் சொல்குறி, அடையாளம், இலச்சினை ஆகிய பொருள்களைக் குறிக்கிறது. இம்மூலச் சொல்லின் இருந்தே ஆங்கிலத்தின் சிம்பல் (Symbol) என்ற சொல் உருவானது. அது தமிழில் ‘குறியீடு’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"கவிதையில் இரு பொருளைக் குறிப்பிட்டு அதன் வாயிலாக அதனுடன் தொடர்புள்ள வேறொரு பொருளைக் குறியிட்டுக் காட்டுவதே குறியீடு"[1]

குறியீடு என்பது ஒன்றை இன்னொன்றால் புலப்படுத்துவதாகும். உள்ளுரை உவமம் குறியீடே நேரடியாக ஒன்றைச் சொல்லாமல் மறைமுகமாக வெளியிடுகிற போது அதை உணருகிற வாசகருக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

"ஒப்புறவாலும் ஒட்டுறவாலும் மற்றொன்றைக் குறிப்பாக உணர்த்தும் பொருள், 'குறியீடு' எனப்படும்"[2]

ஏதாவது ஒரு குறியீட்டுடன் கவிதை படைப்பது குறியீட்டைக் கொண்டு கவிதைப்படைப்பது சிறிது கடினம் தான் என்றாலும் கவிதையைப் படிக்கவும் யோசிக்கவும் வைக்கிறான் கவிஞன். படித்தவுடன் பொருள் தாரது. நேரடியாக கூறாது மறைமுகமாகக் கூற இக்குறியீட்டு உத்தி பயன்படுகிறது.

மூடிய இமை

"என்னைப் பார்த்ததும் கவிழும்
உன் இமைகள்
கொசு வலையா?
மீன் வலையா?"[3]

கொசு வலை - வலைக்குள் செல்ல முடியாது.

மீன் வலை - வலைக்குள் விழுந்தால் வெளியே வரமுடியாது.

காதலை ஏற்றுக் கொண்டாயா? இல்லையா? என்பது குறியீடு.

தீர்ப்பரிட்சை

வண்ணானின் பேச்சால் சீதையை இராமன் சந்தேகப்படும் படியான குறியீட்டுக் கவிதையைக் காணலாம்.

"நெருப்பின் நாக்கு
நிரூபித்த கற்பை
ஒரு வண்ணானின் நாக்கு
அழுக்காக்கியது
மானம் காக்கத்
தன் விரத ஆடையைக்
களைத்தெறிந்தான் இராமன்"[4]

ஐந்தாண்டுக்கு ஒருமுறை

மக்களின் உரிமைகளைப் பற்றி அவர்களுக்கு எடுத்துச் செல்லவும் அரசியல் குறித்து விழிப்புணர்வு மக்களிடம் இல்லாததை தனது கவிதையில் குறியீடுகளாக அமைத்துப் பாடுகிறார். போலி அரசியல்வாதிகளின் போலி உறுதிமொழிகளை நம்பி அவர்களுக்கு வாக்களித்து ஏமாந்து போகும் மக்களின் நிலையினைச் சுட்டிக்காட்டுகிறார்.

"புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி"[5]

என்ற கவிதையில் தேர்தலுக்குச் சுயம்வரத்தையும், வாக்காளர்களுக்குக் குருட்டு தமயந்தியையும் குறியீடாக்கி இன்றைய அரசியல் நிலையைப் புலப்படுத்துகிறார்.

நகர்மயமாதல்

கவிஞர் அப்துல் ரகுமான் பாதை என்னும் கவிதையில் கிராமத்தின் தூய்மையான இயற்கை காற்று நகர்மயமாதலால் மாசடைந்து வருவதாகக் கூறுகிறார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"கிராமத்தின்
பச்சை வயல்களையும்
தூய காற்றையும் இழந்து
நகரம் நோக்கி செல்லும்
பாதைகள்"[6]

என்று நகரப்பெருக்கம் கிராமத்தின் தூய அடையாளங்களை அழித்தும் ஒழித்தும் உருமாற்றி வருவதாக குறியீடு மூலம் குறிப்பிடுகிறார்.

சுட்ட பழம்

குறியீடு வெளிப்படக் கூறாதது. பல பொருள்கள் தரக் கூடியது. தலைப்பை அகற்றிவிட்டு நோக்கினால், அக்கவிதை பல தளங்களுக்கு அடித்தளமாக இருப்பது குறியீட்டின் இலக்கணமாகும்.

"தீப மரத்தின்
தீக்கனி உண்ண
விட்டில் வந்தது
கனியோ
விட்டிலை உண்டது"[7]

அரசியல்வாதி – தீபமரத்தின் தீக்கனியாகவும், மக்கள் - விட்டில்களாகவும் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ்கள் கொல்லப்படும் நிலையில் சிலர் தவறு செய்யாதவர்கள் மீது வீணாக பழியைச் சுமத்துவதை,

"இதோ
ரத்தப் பற்களை மறைத்த ஓநாய்கள்
நீரைக் கலக்கிய பழியை
ஆடுகளின்மீது சுமத்திக்கொண்டிருக்கின்றன"[8]

என்று வழக்குக் கதையைக் குறியீடாக்குகிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்

கவிஞர் "வேர்வைத் தாலி" எனும் கவிதையில் உழைப்புச் சுரண்டலைச் செய்து வரும் முதலாளிகளை விரட்டியடிக்கும் ஏதேன் தோட்டத்து அறிவுவாதிகளாகப் படைப்பாளர்களைக் காட்டுகின்றார்.

"... யுக எழுதுகோல்களே,
ஆதியாகமத்தைத் திருத்துங்கள்
'முகத்தின் வேர்வையால்
ஆகாரம் புசிப்பது'
சாபமல்ல
வரம்
பிறர் வேர்வையைக்
குடிக்கிறவர்களையே
எங்கள் ஏதேன்
துரத்தியடிக்கும்"[9]

என்று வர்க்கப்புரட்சியின் குறியீடாக ஏதேனை உருவகப்படுத்துகின்றார்.

நிலவு

நிலவு காதல் உணர்வுகளைத் தட்டித் திறக்கும் மந்திரச் சாவியாகத் திகழ்வதைக் குறியீடாக்குகிறார்.

"நிலா உதிக்கும் போது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எனக்குள்
நீ நுழைகிறாய்
'கம்ப்யூட்டர் வைர' ஸாய்"[10]

என்ற அடிகளில் கம்ப்யூட்டரைச் செயலிழக்கச் செய்யும் வைரஸைப் போல் காதலி காதலனின் மனதில் நுழைந்து அவனைச் செயலிழக்கச் செய்வதாகக் குறியீட்டு அறிவியலுடன் தொடர்புப்படுத்திப் படைத்துள்ளார்.

நீரும் - மனிதனும்

நீரிலிருந்து பிறந்த மனிதன் நீரின் குணங்களை மறந்தவனாக இருக்கின்றான். நீரின் குணங்களைப் பெறும் போது மனிதர்கள் புதிய வாழ்வு நிலைகளுக்குச் செல்லும் போது அடைவார்கள் என்கின்றார் அப்துல் ரகுமான்.

"நீரைப் போல்
சுத்தம் செய்கிறவனாக இரு
நீரைப் போல்
சுவையற்றவனாக இரு
எப்போதும்
நீ தெவிட்டாதவனாக
இருப்பாய்
நீரைப் போல்
தாமரை இலைக்குக்
கீழேயும் மேலேயும்
வெவ்வேறு விதமாய் இரு"[11]

என்று நீரைப் போல் எல்லவாற்றையும் படைப்பவனாகவும் சுயம்புவாகவும் இருப்பதுடன் இலட்சியவாதிகளாக மனிதர்கள் திகழ வேண்டுமென்ற தன் ஆவலைக் கவிஞர் நீர் குறியீடு மூலம் வெளிப்படுத்துகின்றார்.

முடிவுரை

சமூகத்துக்கு உணர்த்த விரும்பும் வாழ்க்கைத் தத்துவங்களை குறியீடு வழியே கவிக்கோ எடுத்துக் கூறியுள்ளார். மூடிய இமை, நீர்ப்பரிட்சை, ஐந்தாண்டுக்கு ஒருமுறை, நகர்மயமாதல், சுட்டபழம், வேர்வைத்தாலி, நிலவு, நீரும் - மனிதனும் என்ற குறியீடுகள் மூலம் வார்த்தையின் அர்த்தத்தைக் குறித்து விளக்குகிறார் கவிக்கோ அப்துல் ரகுமான்.

குறிப்புகள்

1. அ.வெ. சுப்பிரமணியன், சங்கப்பாட்டில் குறியீடு, ப.11.
2. அப்துல் ரகுமான், புதுக்கவிதையில் குறியீடு, ப.19.
3. அப்துல் ரகுமான், பால் வீதி, ப.33.
4. மேற்படி, ப.49.
5. மேற்படி, ப.72.
6. அப்துல் ரகுமான், ஆலாபனை, ப.103.
7. அப்துல் ரகுமான், பால் வீதி, ப.16.
8. அப்துல் ரகுமான், சுட்டு விரல், ப.19.
9. அப்துல் ரகுமான், பால் வீதி, ப.48.
10. அப்துல் ரகுமான், பறவையின் பாதை, ப.50.
11. அப்துல் ரகுமான், ஆலாபனை, பக்.147,148.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சங்க இலக்கியத்தில் வாழ்வியல்

Way of Life in Sangam Literature

கோ.பிரியங்கா, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி – 8.

Abstract

The research article focuses on the style of life lived by the people of the Sangam Age. Sangam Age is noted for its virtues of life. They lived a life full of value and code. It is a pleasant feel to study on the life ethics of the people. The present study fills the gap between the modern society by eliciting them the rich life lived by the Sangam people. It deals with the social concerns like art, early wake up, bathing, cuisine and dressing of the people. Therefore, the paper bring the use of symbolism in the verses of the world famed poet Abdul Rahman.

Keywords: Way of Life, Sangam Literature, Tamil Life

முன்னுரை

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்"

என்ற பாரதியின் பாடல் வரிகளுக்கேற்ப பழம்பெருமை வாய்ந்தது செம்மொழியான நம் தமிழ்மொழி. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய மொழி, நம் தாய்மொழியில் எழுத்து, சொல், யாப்பு, அணி ஆகியவற்றிற்கு மட்டுமல்லாது வாழ்விற்குரிய பொருள் இலக்கணமும் இருக்கின்றது. மற்ற மொழிகளில் அவ்வாறு இல்லை. சங்க இலக்கியம் தோன்றிய சங்க காலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். தங்கள் வாழ்வில் இடம்பெற்ற இயற்கையினை இலக்கியத்திலும் அமைத்து சிறந்த இலக்கியமாக நமக்குந் தந்துள்ளனர். சங்க கால மக்கள் தங்களுக்குப் பிடித்தமான நிலத்தைத் தேர்ந்தெடுத்து வாழ்ந்தனர். அவ்வாறு இம்மக்களின் வாழிடம் காடு, மலை, கடற்கரை, வயல்சூழ்ந்தப் பகுதியாக இருந்தது. இயற்கையினை அழிக்காமல் நிலம், நீர், தீ, காற்று, வானம் என்பதைப் புவி என்று அறிந்திருந்தனர்.

"மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல்" (புறம். 2)

என்ற புறநானூற்றுப்பாடலின் மூலம் நிலம், பொழுது, தட்பவெப்பத்திற்கு ஏற்றவாறு இயற்கையோடு இயைந்த வாழ்வியல் முறையினை அமைத்துக் கொண்டதை அறிய முடிகின்றது. சங்ககால மக்களின் வாழ்வியல் முறையினை வியக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வைகறையில் துயில் எழுதுதல்

சங்ககால மக்கள் கதிரவன் உதயமாவதற்கு முன்பு துயில் எழுந்தனர். அதிகாலைத் துயில் எழுவதற்கு சேவல் கூவலும் பிற பறவைகளின் ஒலியும் துணை செய்துள்ளன. அந்தணர் மந்திரம் ஓதும் ஒலியும் யாழோர் எழுப்பும் இசையொலியும் மன்னனுடைய அரண்மனையில் ஒலிக்கும் காலை முரசும், அரசனை எழுப்புவோரின் பாடல்களும் மக்களைத் தூக்கத்தில் இருந்து எழுப்புகின்றன என்பதை,

"நான்மறைக் கேள்வி நவில்குரல் எழுப்ப
ஏம அன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது எம்பேர் ஊர் துயிலே" (பரிபாடல். 2)

எனும் பாடலடிகள் பொய்கை மலாதின் இன்னொலி செய்யும் வண்டைப்போல அந்தணர் வேதம் பாடத் தொடங்குகின்றனர். கோழி போன்ற பறவைகளின் ஒலியும் மக்களைத் துயில் எழுப்புகின்றன. மதுரை மாநகரில் மறை ஒலியால் மக்கள் துயில் எழுகின்றனர் என்பதை,

"ஓதல் அந்தணர் வேதம் பாட
சீர் இனிது கொண்டு நரம்பு இனிது இயக்கி
யாழோர் மருதம் பண்ண காழோர்
பணைநிலைப் புரவி புல் உணாத் தெவிட்ட
தருமணல் முற்றத்து அரி ஞாயிறு ஆர்ப்ப
மென்பூஞ் செம்மலொடு நன்கலம் சீப்ப
இரவுத் தலைப் பெயரும் ஏம வைகறை" (மதுரைக் காஞ்சி. 656-660)

என்ற மதுரைக்காஞ்சி பாடல் சங்கால மக்கள் அதிகாலையில் துயிலெழுதல் குறித்து விளக்குகின்றது.

நீராடுதல்

மனதிற்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைத் தருவது நீராடல். உடலைச் சுத்தம் செய்வதற்குக் குளத்திலும், ஆற்றிலும் நீராடினர். மனதைச் சுத்தம் செய்வதற்கு வழிபாட்டை மேற்கொண்டனர். நீராடுதல் அன்று முதல் இன்று வரை தொன்றுத்தொட்டு இருந்து வரும் பழக்கமாகும். அக்கால மக்கள் நீராடுதல், அருவியாடல், சுனையாடல், புனலாடல், துறையாடல், புதுப்புனலாடல், குளநீராடல் எனப் பல்வகையில் நீராடியுள்ளனர். நீராடுவதற்கென்று தனித்தனி அணிகலன்களை அணிந்துள்ளனர். பெண்கள் அலங்காரமான ஆடை, அணிகலன்களை அணிந்து நீராடினர். சிலர் பொன்னால் செய்த பூக்களை அணிந்தனர். சிலர் முன்னர் அணிந்திருந்த சதந்தினை மாற்றிவிட்டு துகில் புகையினலாகிய சாந்தினைப் தம் உடம்பில் மிகுதியாகப் பூசிப் புடவை அணிந்து நீராடினர் என்பதை,

"மின்அவிர் ஒளி இழை வேயுமோரும்
பொன் அடர்ப்பூம் புனை திருத்துவோரும்
அகில்கெழு சாந்தும் மாற்றி ஆற்றப்
புகைகெழு சாந்தம் பூசுவோரும்
கார்கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்
வேர் பிணி பலர் மலர் வேயுமோரும்
புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்" (பரிபாடல். 12)

போன்ற செய்திகளும் பரிபாடல் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

உணவு

சங்க இலக்கியங்கள் சிறப்புடைய தமிழர்களின் வாழ்க்கையைக் கண்ணாடி போல் காட்டுவதாகும். இதில் இவர்களின் வாழ்வியல் செய்திகள் மட்டுமல்லாது இயற்கையோடு இணைந்து வாழ்ந்த சுற்றுச்சூழல் சார்ந்த அறிவினையும் காண முடிகின்றது. வானம், பூமி,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மரம், செடி, கொடி, விலங்கு, பறவை என அனைத்து அசையும் அசையா உயிர்களின் இயல்பினையும் அறிந்து வைத்திருந்தனர். இவைகளின் அசைவுகளை அறிவதற்கு "உற்றுநோக்கல்" என்ற முறையினைக் கையாண்டனர். தான் கண்ட காட்சிகளையும், அவற்றின் மூலம் கிடைத்த அனுபவங்களையும் பாடல்களாகப் பாடினர். இப்பாடல்களில் எல்லாம் அவர்களின் அனுபவம் மட்டுமல்லாது வாழ்க்கையோடு தொடர்புடைய பண்பாடு, பழக்கவழக்கம், நம்பிக்கைகளின் சடங்குகள் என அனைத்துக் கூறுகளும் ஒருங்கே காணப்படுகின்றன.

மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். தேவைகளில் முதன்மையானது உணவே. திணையிலக்கியத்தின் பின் தோன்றிய "மணிமேகலையில்" "உணவின்" முதன்மையானது இவ்விதமாய் பேசப்பட்டுள்ளது.

"அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்
மறவாது இது கேள் மண் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்
அல்லது கண்டது இல்" (மணிமேகலை-25 (288-291)

என்ற பாடலின் வழி அறியலாம். மனிதன் உயிர் வாழ உணவு அவசியமானது. இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையைப் பல நிலைகளில் காட்டும் பதிவு போன்றது. தமிழரின் உணவு பற்றிய நிகழ்ச்சிகள் அந்தந்த நிலைகேற்ப இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. உணவை பல பெயரிட்டு வழங்கியுள்ளனர்.

குறிஞ்சி நிலத்தின் உணவாகத் தேன், கிழங்கு, மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி மற்றும் ஐவனநெல் இருந்துள்ளன. கிழங்கு மற்றும் தேனை உண்ட நிலையினை,

"கிழங்குகீழ் வீழ்ந்து தேன்மேல் தூங்கி" (நற் 328)

என்ற அடிகளின் மூலம் அறிய முடிகிறது. கணவன் வேட்டையாடி அதன் மூலம் கிடைத்த உணவினை மனைவிக்குக் கொண்டு வருகிறான்.

"வன்கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி
உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையெகடு"

என்ற அடிகளிலும், கூத்தராற்றுப்படையில் குறமகளின் வீட்டில் சமைத்த கடமானின் கொழுப்புமிக்க தசையினையும், பன்றியின் தசையினையும், உடும்பின் கறியோடு புளியும் பசுமோரும் கலந்து உலையில் ஏற்றி சமைத்த மூங்கிலரிசி சோற்றுடன் தருவதாக இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் கூறுவதை கீழ்க்கண்ட பாடல் வரிகள் மூலமாக அறிய முடிகிறது.

ஆநிரை மூலம் கிடைக்கும் பால், நெய் போன்றவற்றையும் வேட்டையாடுதலில் கிடைக்கும் உடும்பை, நுணல், ஈயல் போன்றவைகளின் இறைச்சியையும் உணவாக உண்டுள்ளனர். பால், நெய் போன்ற உணவுகள் உண்ணப்பட்ட நிலையினை உவமையாகக் கூறியுள்ளனர். இதனை,

"உருக்குறு நறுநெய் பால் விதிர்த்தன்ன
அரிக்குறல் மிடற்ற அந்நுண் பல்பொறிக்
காமரு தகைய கான வாரணம்." (நற்: 21)

என்ற அடிகளின் மூலம் கானக் கோழியின் நிறத்திற்கு உவமையாக பால், நெய் ஆகியன கூறப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

மருத நிலத்தில் கிடைக்கும் பொருளான நெல்லும், நீரின் மூலம் கிடைக்கும் மீனும் முக்கிய உணவாக அறியப்படுகிறது. வயல்வெளிக்கு வேலைக்குச் செல்பவராக இருப்பதால் வைகறைப் பொழுதில் மீனையும் அரிசியையும் சமைத்து வயல்களுக்கு எடுத்துச் சென்று உண்டுள்ளனர். இதனை,

"கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையோடு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

புகர்வை அரிசிப் பொம்மல் பெருஞ்சோறு" (நற்:60)

என்ற பாடல் அடிகள் வாயிலாக அறிய முடிகிறது.

கடலில் கிடைக்கும் மீன்களும், பனைகளின் மூலம் கிடைக்கும் கள், நொங்கு போன்றவையும் முக்கிய உணவாக அமைகின்றன. இவை தவிர பண்டமாற்று முறையின் மூலம் கிடைத்த நெல்லையும் சமைத்து உணவாக உண்டுள்ளனர். மீனைச் சுட்டு உண்டுள்ள நிலையினை,

"கொழுமீன் சுடுபுகை மறுகினுள் மயங்கி" (நற்: 311)

என்ற பாடலின் மூலம் மீனவ மக்கள் கடலில் கிடைக்கும் மீன்களையும், பனையில் கிடைக்கும் கள்ளையும் முக்கிய உணவாக உண்டனர் என்பதை அறிய முடிகிறது.

பாலைநிலத்தின் உணவாக விளாம்பழம், விலங்குகளின் இறைச்சி, பால், நெய் முதுலியன அறியப்படுகின்றன. அங்ஙனமே,

"விளம்பழங் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசந் தின்ற தேய்கான் மத்த
நெய்தெரி யியக்கும் வெளில் முதன் முழங்கும்" (நற். 12)

என்ற அடிகளில் வழி விளாம்பழம் மற்றும் நெய்யை உணவாக உட்கொண்ட நிலையினைக் காண முடிகின்றது. மேலும்,

ஆடை

ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்ற பழமொழிக்கேற்ப மனிதனுக்கு ஆடைகள் மிகவும் இன்றியமையாதது. மனிதனின் தரத்தையும், சிறப்பபையும் காட்டுவனவாக ஆடைகளும், அயிகலன்களும் உள்ளன.

"கல்சேர்பு இருந்த கதுவாய்க குரம்பைத்
தாழி முதல்கலித்த கோழிலைப் பருத்தி
காஞ்சியின் அகத்துக் கரும்பருத்தியாக்கும்
தீம்புனல் ஊரன்" (அகநானூறு. 156)

என்ற அகநானூற்றுப் பாடலின் ஆடைகளின் முக்கியத்துவம் குறித்து அறியப்படுகின்றது.

கல்வி

உலகத்தில் உள்ள உயிரினங்களில் மனித இனம் தலைசிறந்ததாகும். ஏனெனில் மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆய்ந்தறியக்கூடிய பகுத்தறிவு மனித இனத்திற்கு மட்டுமே உண்டு. அத்தகைய அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையானது கல்வி. ஔவையார் கல்வியினைப் பற்றிக் கூறும் போது,

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துணக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா"

என்ற அடிகளின் மூலம் இறைவனை வணங்கும் பொழுது பொன்னையோ, மண்ணையோ, பொருளையோ அல்லது நீண்ட வாழ்வையோ கேட்காமல் தமிழைக் கல்வியாகக் கேட்கிறார்.

கலை

பண்டைய மக்கள் நாகரீகம் அடைவதற்குக் காரணம் அவர்களிடம் கலையுணர்வு இடண்டறக் கலந்திருந்தது தங்கள் கருத்துக்களில் தோன்றிய சிறந்த உண்மைப் பொருட்களை கலைகளின் மூலம் வெளியிட்டனர்.

"நூலறிபுலவர் நுண்ணறிதல் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க்கு ஒப்பமனை வகுத்து" (நெ.வாடை. 75-77)

என்ற நெடுநல்வாடை பாடல்வரிகள் கலைகள் குறித்து குறிப்பிடுகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

விருந்தோம்பல்

"உண்டி கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே" எனும் திருமூலர் வாக்கிற்கிணங்க, தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடு. இல்லற மகளிர்க்கு இன்றியமையாத மாண்புகளுள் விருந்தோம்பலும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனையே தொல்காப்பியரும்,

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்" (தொல் - 1098)

எனக் கூறுகின்றார். இதனையே சங்க இலக்கியங்களும் மனித நேயப் பண்புகளில் விருந்தோம்பலே சிறந்த பண்பாடாகப் பேசி நிற்கின்றது. விருந்து என்றாலே புதுமை என்று பொருள், "பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்பது மனித நேயத்தின் முதற் படியாகும். நம் சங்கச் சான்றோர் விருந்தோம்பலைப் பெரும்பேறாகவும், கடமையாகவும் கருதி உள்ளனர் என்பதை,

"சோறுடைக் கையர் வீறு வீறு இயங்கும்
இருங் கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுவதும், தெற்றென,
பசிபிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின் எமக்கே" (புறம் - 173)

எனும் புறநானூற்றுப் பாடல் பசியை நோய் என்றும், உணவை மருந்து என்றும் வழங்குவர். உணவை அளிக்கும் பண்ணனைப் "பசிப்பிணி மருத்துவன்" என்று கிள்ளிவளவன் பாடியது பண்ணனின் விருந்தோம்பல் பண்பைப் புலப்படுத்துகின்றது.

"நெருநை வந்த விருந்தின்று மற்றுத்தன்
இரும் புடைப் பழிவான வைத்தனன், இன்று இக்
கருங் கோட்டுச் சீறயாழ் பணையம்" (புறம் 316)

எனும் பாடலின் மூலம் தன்னை நாடி வரும் விருந்தினர்களை உபசரிப்பதற்காகத் தன் வாட்படையையும், சிறிய யாழினையும் பணையமாக வைத்தான் என்று வெண்ணாகனார் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மேலும் ஒளவையார் அதிய மானின் விருந்தோம்பல் பண்பை,

"வெள்ளி வெண் கலந்து ஊட்டல்" (புறம் - 390)

எனும் வரிகளின் மூலம் வெள்ளி வெண்கலம் போன்ற பாத்திரத்தில் உணவு படைத்து சுற்றத்தார்களின் பசித்துன்பத்தைப் போக்கினான் என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

முடிவுரை

சங்ககால மக்கள் இயற்கையுடன் அதிகாலை எழுந்து நீராடி ஆடை அணிந்து இயற்கை உணவை உண்டு நோயில்லாமல் கலை நயத்துடன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். மற்ற உயிரினங்களுக்கு இல்லாத பகுத்தறிவு மனித இனத்திற்கு உண்டு. அதனை ஆய்ந்து அறியும் பகுத்தறிவிற்கு கல்வி உறுதுணை புரிந்தது. விருந்தோம்பலும், ஆகையும் ஒன்றுடன் ஒன்று கலந்து வறுமையானவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று பழந்தமிழர் உணர்ந்து நமக்கும் உணர்த்தியுள்ளனர். நட்பு இல்லை என்றால் இவ்வுலகில் இன்பம் இல்லை. மனிதனிடம் துன்பமும் வறுமையும் உண்மையான நட்பின் தன்மையில் வெளிப்படுத்துகிறது. நட்போடு கலந்திருக்கும் உண்மையான காதலுக்கும் அழிவில்லை என்பது இக்கட்டுரையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

துணை நூல்கள்

1. தொல்காப்பியம், பொருளதிகார மூலமும் உரையும், நச்சினார்க்கினியர் பதிப்பகம், 2007.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

2. அகநானூறு, ந.சி.கந்தையா, தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2008.
3. புறநானூறு தொகுதி 1, 2, ஔவை. துரைசாமிப்பிள்ளை உரை, தமிழ்மண் பதிப்பகம், 2008.
4. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், 2008.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அற இலக்கியங்களில் பெண்மைக் குறித்தப்பதிவுகளும் மதிப்பீடுகளும்

Registration and Estimation of Women in Didactic Literatures

முனைவர் ச. பிரியா, உதவிப் பேராசிரியர்,
வேல்ஸ் பல்கலைக்கழகம், பல்லாவரம், சென்னை-117.

Abstract

The research paper examines on the registration and estimation of women in Diadactic works from Tamil Literature. Tamil people came across many religions and in most of them had instructed women are weak, fragile, immune and worthless; they insisted only they can be used for sexual gratification and progeny. Some of the pure Tamil works had estimated very low on the quality of women. The focus of the article chooses the theme of patriarchal subjugation and oppressive nature on women and therefore, the related facts are analysed from the chosen works.

Keywords: Registration and Estimation of Women, Didactic Literatures, Tamil Culture

முன்னுரை

சமுதாயத்தின் இயல்பினை அறிய உதவும் கருவிகளுள் இலக்கியமும் ஒன்றாக முன் நிற்கிறது.சங்க காலத்திற்குப் பின் நிகழ்ந்த சமுதாய மாற்றத்தை அறநூல்களில் காண முடிகின்றது. அவற்றுள் ஒன்று பெண்மைக் குறித்த பதிவுகளும் மதிப்பீடுகளும் குறிப்பிட்த்தக்க ஒன்றாகும். உலகின் பிற இனங்களைப் போலவே தமிழினமும் பெண்ணுக்கென்று பல கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் வரையறுத்துள்ளது. *திருக்குறள்* முதற்கொண்டு பிற அற இலக்கியங்களிலும் பெண்மைக்குண்டான மதிப்பையும் பெண்மையைப் பழித்துரைக்கும் இழிநிலைகளையும் காண முடிகின்றது. சமணம், பௌத்தம் உள்ளிட்ட பிற சமயங்களின் வரவும் இதற்குக் காரணங்களாக அமைவதை இவ்விலக்கியங்களின் வழி அறிய முடிகின்றது. “பெண் பிறவி தாழ்ந்த பிறவி; பாவம் செய்தவர் பெண்ணாகப் பிறக்கிறார்; பெண்ணாகப் பிறந்தவர் வீடு பேறு அடைய முடியாது என்பன சமண மதத் துணிபு ஆகும்”. மேலும் “ஒருவன் யாரையேனும் வஞ்சனை செய்தால் அவன் அடுத்த பிறப்பில் பெண்ணாகப் பிறப்பான் என்பது சமண சமயக் கொள்கை”. *ஜசமணமும் தமிழும்*, (மயிலை சீனி வேங்கட சாமி, ப.207) மயிலையார் சீனி வேங்கடசாமி அவர்களால் எடுத்துரைக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பெண்ணுக்குண்டான குண நலன்களாக அற இலக்கியங்கள் உணர்த்தும் கருத்துக்கள், பெண்களை இழிவுப்படுத்தும் நிலைகள், பெண்மைக் குறித்த மதிப்பீடுகள் குறித்து ஆராய்வதாகவும் இக்கட்டுரை களம் அமைகின்றது.

பெண்மைக்கான குணநலன்கள்

பெண்ணானவள் குடும்பத்திற்கு தக்க சிறப்பினைப் பெற்று தந்து கணவனின் வளங்களுக்கு தக்கவளாய் வாழ வேண்டும். அவ்வாறு அமைபவள் சிறந்த மனைவி என்றும் அவள் மக்களைப் பெறுதலும், அடக்கமுடனும், அழகுடனும், கணவனது கருத்துக்கிசைய அவனோடு வாழ்தலும், அவன் உண்ணும் உணவின் மிகுதியை உண்ண விரும்புதலும் பெண்ணுக்கு இருக்க வேண்டிய ஐந்து குணங்களாக சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

“மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஒக்க உடனுறைதல் ஊ ணமைவு - தொக்க
அலவலை அல்லாமை பெண்மகளிர்க்கு ஐந்து
தலைமகனைத் தாழ்க்கு மருந்து". (சிறு.பஞ்ச.53)

இவ்வைந்து குணங்களும் பெண்டிர்க்கு இருக்குமாயின் அவை அவளது கணவரை இசைய வைக்கும் மருந்தாகும் என்று இப்பாடல் கூறுகிறது.

பெண்ணானவள் கண்ணுக்கு இனிய தோற்றம் தருபவளாகவும், நாயகனது விருப்பத்தின் வகைக்கேற்பத் தன்னை ஒப்பனைச் செய்து கொள்பவளாகவும், ஊரினர் முன் நாணும் இயல்புடையவளாகவும், கணவனுக்கு பயந்து, சமயம் பார்த்து ஊடல் கொண்டு இனிமையுடன் அவ்வூடலைக் கைவிடும் அழகிய சொற்களையுடையவளாகவும் உள்ளவளே போற்றத் தகுந்த பெண் என்று நாலடியாரும் கூறுகிறது.

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள் - உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழிமாதராள் பெண்". (நாலடி – 384)

என்று நாலடியாரும், அழகோடு நல்லறிவும் உடையவள் இல்வாழ்க்கைக்குரிய நல்ல துணையாவாள் என்பதை "உருவோடு அறிவுடையார் இல்வாழ்க்கை பெண் என்ப" (நான்மணிக். 55) என்னும் பாடலடி வாயிலாக நான்மணிக்கடிகையும் எடுத்துரைக்கின்றது. இதன் உட்கருத்தை "கொண்டான் வழி ஒழுகல்" (சிறுபஞ்ச. 15) என்று சிறுபஞ்சமூலம் தெளிவாக்குகிறது.

கணவனுக்கு அடங்கி நடக்கும் பெண்ணை "கொண்டான் குறிப்பறிபவள் பெண்டாட்டி", "பெய்யெனப் பெய்யும் மழை" ஐதிரிகடுகம் 96ஸ, "பெண்பால் கொழுநன் வழிச்செலவும் திங்கள் மும்மாரிக்கு வித்து" (திரிகடுகம். 98) என்று அற இலக்கியங்கள் போற்றிடத் தவறவில்லை.

புறத்தில் காணும் புற அழகை விடவும் அகத்தில் உண்டாகும் இரக்கக் குணமும், பழிபாவத்திற்கு அஞ்சும் நேர்மையும், விருந்தினரை உபசரிக்கும் பண்பும் பெண்மைக்கு வேண்டப்படுவது என்பதும் அற இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

"கண்ணுள்ளும் காண்புழிக் காதற்றாம் - பெண்ணின்
உருவின்றி மாண்ட வுளவாம் - ஒருவழி" (நான்மணி – 65)

என்னும் பாடல் அழகற்ற கண்களிலும் விரும்பப்படும் கண்கள் உள்ளன போன்று அழகற்ற பெண்களிலும் மாட்சிமையுடைய நல்லியல்புடையோர் உண்டு என்பதை பதிவு செய்கிறது. மனைவியிடம் கண்ணோட்டம் என்னும் இரக்கக் குணம் மிகுந்தால் சுற்றத்தார் பெருகுவர் என்பதை, "பான்மொழியார் இன்கண் பெருகின் இனம் பெருகும்" (நான்மணி – 93) என்னும் பாடல் வரி பதிவு செய்கிறது. பெண்ணானவள் ஒரு குடும்பத்தின் முதுகெலும்பாக இருப்பதால் அவளுடைய இனிமையான குணத்தால் சுற்றத்தார் பெருகுவதும், விருந்தோம்பல் சிறப்படைவதும், இல்லறக் கடமை முழுமையடைய காரணமாக இருப்பவளும் பெண்ணே என்பதால் பெண்ணை முன்னிறுத்தி அறிவுரைக் கூறியிருப்பதாக எடுத்துக் கொண்டாலும், இந்த கட்டுப்பாடுகளும் அறிவுரைகளும் பெண்ணுக்கு மட்டுமே கூறியிருப்பது தான், அற இலக்கியங்கள் எழுந்த சூழலில் தமிழ்ச் சமூகத்திலிருந்த பெண்களின் நிலையினை எடுத்துக்காட்டுகிறது.

பெண்மையும் நாணமும்

நல்லியல்புடைய பெண்டிர் நாணத்தின் எல்லையில் நிற்பர்." பேணிய நாணின் வரை நிற்பர் நற்பெண்டிர்" (நான்மணி.90); நற்பண்புடைய பெண் கற்பொழுக்கத்திலிருந்து தவறிட மாட்டாள்." பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள்" (நான்மணி.92); பெண்களுக்கு நாணம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வேண்டுமென்பதை “நாணின்றி ஆகாது பெண்மை” (பழமொழி நானூறு.328) எனப் பெண்ணின் பண்பினை, இயல்பினைப் பட்டியலிடும் அற இலக்கியங்கள் பெண்ணின் கற்புக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதையும் காண முடிகின்றது. “கற்புடைய பெண் அமிர்து; கற்றடங்கினாள் அமிர்து” (சிறுபஞ்ச.4) என்று பெண்ணை சாவா மருந்தாகிய அமிர்தத்தோடு ஒப்பிடுகின்றது.

“குலனுடைமையின் கற்புச் சிறந்தன்று” (முதுமொழிக்.1-7)
“அரும்பெறற் கற்பின் அயிராணி” (நாலடி – 381)
“அருந்ததிக் கற்பினள்” (திரிகடு.1)

என பெண் கற்பினை வலியுறுத்தும் இலக்கியங்களும், “அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த; நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப” (தொல்.களவு.1045)
என தொல்காப்பியமும் பெண்டிர்க்கு உரிய பண்புகளை வரையறை செய்கின்றன. கற்பு என்பது மனக்கட்டுப்பாடு என்பதை,

“பெண்ணின் பெருந் தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்” (குறள்-54)

என்னும் குறளின் வழி, கற்பு என்னும் மனக்கட்டுப்பாடு உடைய பெண்மையை விடப் பெருமைக்குரியது வேறொன்றுமில்லை என்பதை அறியலாம். “பறைநன்று பண்ணமையா யாழின் நிறை நின்ற; எண்நன்று பீடிலா மாந்தரின்” (நான்மணி.15) என்னும் பாடல், பண்ணிசை அமையாத யாழினை விட பறை மேலானது போல பெருமையில்லாத மாந்தரை விடயும் நெஞ்சை ஒரு வழியில் நிறுத்துகின்ற கற்பில் சிறந்த பெண் மேலானவள் என்பதை உணர்த்துகின்றது.

நற்பண்புடையவள் எவ்வளவு துன்பம் வந்த பொழுதும் கற்பொழுக்கத்திலிருந்து தவறிட மாட்டாள். ஆனால் மனதளவில் கட்டுப்பாடு இல்லாதவள் தான் விரும்பியபடியே நடப்பாள் என்பதை,

“பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்;
பெட்டாங்கு ஒழுகும் பிணையிலி” (நான்மணிக்.92)

என்னும் பாடலடி புலப்படுத்துகிறது.

“நாய்வால் திருந்துதல் என்றுமோ இல்” (பழ.நானூ.337)

என்னும் பழமொழி நானூற்றுப் பாடல், நாய் வாலை நிமிர்த்த முடியாததைப் போல நல்ல குணமில்லாத பெண்களைக் கட்டுக் காவலிலிட்டு அவர்களின் கற்பு கெடாதிருக்கச் செய்வதும் இயலாத காரியமாகும் என்பதை எடுத்துரைக்கின்றது. ஆகவே கற்பு என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்து அமைகிறது என்பதை அறியலாம்.

பெண்மைக்கு அழகு தருவன

நிலத்திற்கு நெல்லும் கரும்பும், நீர் நிறைந்த குளத்திற்கு தாமரை மலர்களும் அழகு தருவது போல பெண்மைக்கு நாணமுடைமையே அழகினைத் தரும் . மறுமை உலகத்துக்குரிய அறங்கள் ஆண்மைக்கு அழகு தரும் என்பதை,

“நிலத்துக்கு அணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக்கு அணியென்ப தாமரை பெண்மை
நலத்துக்கு அணியென்ப நாணம் தன்க்கணியாம்
தான்செல் லுலகத் தறம்.” (நான்மணி – 11)

என்னும் நான்மணிக்கடிகைப் பாடலால் அறியலாம்.

பெண்மைக்கு நன்மையும் சிறப்பும் தருவன

திருமகளைப் போன்ற செல்வச் செழிப்பான பெண்ணாக இருந்தாலும் உறவினரைப் போற்றியும் அடக்கமுடனும் பிறரை விரும்பாத பெருந்தன்மை குணத்துடனும் பெருமையுடனும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நாணத்தால் உண்டாகும் ஒழுக்கத்துடனும் கணவன் அளவில் அடங்கியிருத்தலே பெண்மைக்கு நன்மைத் தரும் என்பதை,

"பேண அடக்கம் பேணாப் பெருந்தகைமை பீடுடைமை
நாண் ஒடுக்கம் என்றைந்தும் நண்ணின்றாப் - பூண் ஒடுக்கம்
பொன்வரைக்கோங் கேர்முலைப் பூந்துருவே யாயினும்
தன்வரைத் தாழ்த்தல் அரிது" (சிறு.பஞ்ச. – 45)

என்னும் பாடல் மூலம் சிறுபஞ்சமூலம் ஆசிரியர் காரியாசான் எடுத்துரைக்கின்றார்.பெண்ணுக்கு நன்மைத் தரும் செயலினைக் கூறுவது போலவே பெண்ணை மதித்துப் போற்றிக் காக்க வேண்டுமென்பதையும் அற இலக்கியங்கள் குறிப்பிடத் தவறவில்லை.

"தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்று
உன்னித்து வைத்த பொருளோடு இவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும்". (ஆசாரக் - 93.)

என்னும் பாடல், தன் உடலும், மனைவியும், தன்னிடத்தில் அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருளும், தன்னுயிர்க்கு உறுதியாகும் என்று எண்ணிச் சேர்த்து வைத்த பொருளும் ஆகிய இந்த நான்கினையும் பொன்னைக் காப்பது போல நன்கு பாதுகாக்க வேண்டுமெனவும் அவ்வாறு காக்காவிட்டால் மிகுந்த துன்பம் வந்து சேரும் என்பதையும் எடுத்துரைக்கின்றது. பொன்னுக்கு நிகராக பெண்ணைப் போற்றியுள்ளமையும் அறிய முடிகின்றது.

பெண்ணின் கடமைகள்

'வாழ்க்கைத் துணைநலம்' என்று திருக்குறளும், 'கற்புடைய மகளிர்' என்று நாலடியாரும் தனி அதிகாரம் அமைத்து பெண்ணின் சிறப்புகளையும் கடமைகளையும் வலியுறுத்துவதை அறிய முடிகின்றது.

மனைவியின் சிறப்பினைப் பொறுத்து கணவனுக்கு பெருமையும் வாழ்வும் உண்டாகும் என்பதை,

"இல்லதுஎன் இல்லவள் மாண்புஆனால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை." (குறள் - 53)

என்னும் குறளின் வழியாகவும், குடும்பமாக இருந்து செல்வத்தைக் காப்பாற்றி வாழ்வது, விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உதவுவதற்காகவே என்பதை,

"இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு". (குறள் - 81)

என்னும் குறளின் வழியாகவும் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

"குடநீர் அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடனீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறாக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்". (நாலடி – 382)

என்னும் பாடல், உண்ண உணவு கூட இல்லாத வறுமை வந்த காலத்திலும், சருக்கரை கலந்த நீரைக் காய்ச்சிப் பருகி தன் பசியைப் போக்கிக் கொள்ளும் நிலையிலும், சமுத்திரத்து நீரையே மொத்தமாக் குடித்து விடும் அளவிற்கு உறவினர் வந்த போதிலும் வந்தவரை இன்முகத்தோடு உபசரித்து விருந்தினரைப் போற்றும் அழகிய சொற்களைப் பேசும் பெண்ணே மனை வாழ்க்கைக்குரிய மாண்புடையவள் என்றுரைக்கின்றது.

விருந்தினரைப் பாதுகாத்தலால் கணவனுக்கு நட்புடையவளாகவும், நாள்தோறும் இல்லறத்தை வழுவாது காத்தலால் பெற்ற தாயாகவும், தன் பழையகுடும்பத்திற்குரிய மக்களைப் பெறுதலால் மனைவியாகவும், நடந்து கொள்வது கற்புடைய பெண்ணின் கடமைகளாகதிரிகடுகம் நூலாசிரியர் நல்லாதனார் எடுத்துரைக்கின்றார். அப்பாடல்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்." (திரிகடு. 64)

என்னும் பாடல் விருந்தோம்பலும், பிள்ளைகளைப் பெறுதலும் பெண்ணின் கடமைகளுள் ஒன்றாகவும் கற்பு நிலைகளாகவும் கருதப்பட்டது புலனாகின்றது.

கற்பு மாட்சிமையில்லாத மனைவியரை நீக்கி விடுதல் நல்லது என்கிறார் இனியவை நாற்பது பாடலாசிரியர் பூதந்சேந்தனார்.இதனை, "நிறை மாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே "(இனியவை நாற். 10) என்னும் பாடலடியால் அறியலாம்.

பத்தினிப் பெண்டிர் தன் கணவரது பரத்தமை ஒழுக்கம் கண்டவிடத்தும் அவன் மீது அன்பினைக் கொண்டிருந்தனர் என்பதை, "சாய்ப்பறிக்க நீர்த்திகழும் தண்வயல் ஊரன் (நாலடி – 389) என்னும் பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

பெண்மைக்குக் கேடு தருவன

விருந்தில்லாப் பகலும் மனைவியில்லா இரவும் வறிஞர்க்கு ஈயாத காலைப் பொழுதும் அறிவுடையோர்க்கு நோய் போன்றது என்பதை, "புல்லப் புடைபெயராக் கங்கலும்" (திரிகடு. 44) என்னும் பாடலும் கூறுகிறது. "கொழுநனை இல்லாக் கறையும்" "திரிகடு. 66", கணவனை இழ்ந்தவளின் மாதவிடாயும், "குருடன் மனையாள் அழகும்" (திரிகடு.53)
என்பனவற்றை நோக்க இவ்விரண்டும் பெண்ணுக்கு சிறப்பும் பாதுகாப்பும் தருவதில்லை என்பதையும் நல்லாதனார் பதிவு செய்கின்றார்.

கணவனோடு மாறுபட்டவள்

கணவனோடு ஒத்துப் போகாமல் அவனோடு முரண்பட்டு நிற்கும் பெண்ணை 'எமன்' என நாலடியார் சாடுகிறது."எறியென் எதிர் நிற்பாள் கூற்றம் "நாலடி – 363" என்னும் பாடல், கணவனை எதிர்த்து நிற்கும் பெண்ணை எமனைப் போன்றவள் என்கிறது. மேலும் விடியற்காலத்தில் சமையலறைக்குள் நுழையாதவள் தீர்ப்பதற்கு அரிய நோயைப் போன்றவள் என்றும் சமைத்த உணவைப் பரிமாறாதவள் வீட்டினிட்த்தே வாழுகின்ற பேயைப் போன்றவளென்றும் கூறுகிறது. மொத்தத்தில் இம்மூவகைப் பெண்களும் கணவனைக் கொல்லும் ஆயுதத்திற்குச் சமமானவர்கள் என்று கூறுகிறது. இதில் பெண்ணைப் பேய், நோய், எமன் என இகழ்ந்துரைப்பதைக் காண முடிகின்றது.

பொதுமகளிர்

'வரைவின் மகளிர்' என அதிகாரம் அமைத்து அதில் பொது மகளிரை வள்ளுவர் சாடுவதை விட, நாலடியார் 'பொது மகளிர்' என தனி அதிகாரம் அமைத்து பொருட்பெண்டிரை மிக இழிவாக சாடுவதையும் காணமுடிகின்றது. "மலங்கன்ன செய்கை மகளிர் தோல் சேர்வார், விலங்கன்ன வெள்ளறிவினார்" (நாலடி – 375" என்னும் பாடலில்

பொதுமகளிரை விலாங்கு மீனோடும் காட்டுப் பசுவோடும் ஒப்புமைப்படுத்திச் சாடியுள்ளதைக் காண முடிகின்றது.மேலும் பொதுமகளிரது அன்பானது கைப்பொருள் தீர்ந்துபோன பொழுதே அறுந்துவிடும் என்பதை, "நெய்யற்ற கண்ணே அறுமே, அவரன்பும் கையற்ற கண்ணே அறும்" (நாலடி – 371) என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றன.

"ஏமாந்த போழ்தின் இனியார் போன்று இன்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம்" (நாலடி - 378; 1-2)

என்னும் பாடலில், பொதுமகளிர் மான் போன்ற பார்வையுடையர்கள் என்றும் ஆட்டுக்கடாவின் கொம்பைப் போல் மனந்திரிகின்ற குணம் கொண்டவர்களென்றும் இழிந்துரைப்பதைக் காண முடிகின்றது.இதே போல (நாலடி - 376) பாடலிலும் பொதுமகளிரின் குணத்தை ஆட்டுக்கடாவின் திரிந்த கொம்போடு ஒப்பிட்டுரைப்பதைக் காண முடிகின்றது. அறநெறியில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஒழுக விரும்புவோரும், பகை, பழிக்கு அஞ்சுவோரும் இப்பொதுமகளிரின் அன்பைப் பெற விரும்ப மாட்டார் என்று உரைப்பதால் பொதுமகளிரின் உறவால் குடும்ப நலமும் சமூக நலமும் கெட்டுப் போக நேரிடுவதால் இப்பொதுமகளிரைக் கண்டித்துரைப்பதையும் காண முடிகின்றது.

இவ்வாறாக பல பாடல்களில் பொது மகளிரைக் கண்டித்துரைத்தாலும் இப்பெண்களின் மனநிலையினையும் நாலடியார் எடுத்துக்காட்டுகிறது. எவ்வளவு பொருள் கொடுத்தாலும் பொதுமகளிரின் மனதை மட்டும் பெற முடியாது என்பதை, "முறிபுரை மேனியர் உள்ளம் போன்றி யார்க்கும்; அறிதற் அரிய பொருள்" (நாலடி – 317) என்னும் உவமை அமைந்த பாடலடி மூலமாக, கற்கத் தொடங்குபவர்களுக்கு நூல் எளிதில் கிடைத்தாலும் அதன் நுண் பொருள் அறிய முடியாததைப் போல பொதுமகளிரின் தோல் சேர்வது எளிமையான காரியமாக இருந்தாலும் அவர்களின் மனதை அறிய முடியாது என்பதை அறியலாம்.

நாலடியார் சமணர்களால் படைக்கப்பட்ட நூலாயினும் பொதுமகளிரின் மனநிலையை எடுத்துக்காட்டியிருப்பதும் ஏற்கத்தக்கதாய் உள்ளது. மேலும் ஒரு பொருள் குறித்து பல கருத்துக்கள் இருப்பது நாலடியார் ஒரு தொகுப்பு நூல் என்பதற்கு சான்றாகிறது.

பெண்களின் உடலுறுப்புகளைப் பழித்தல்

நாலடியார் 'தூய தன்மை' என தனி அதிகாரம் அமைத்து அவ்வதிகாரம் முழுவதும் பெண்ணின் உடல், கண்கள், பற்கள், உடலுறுப்புகள் என்று பெண்ணைப் பல பாடல்களில் பழித்துரைப்பதைக் காண முடிகின்றது. "உண்ணீர் களைந்தக்கால் நுங்குசூன் றிட்டன்ன; கண்ணீர்மை கண்டொழுகுவேன்" (நாலடி – 44) என்னும் பாடல், பெண்களின் கண்களைக் குவளை மலரென்றும் கயல் மீன்களென்றும் விவேகமில்லாத அற்பர்கள் தான் வருணிப்பார்கள் என்றும் அக்கண்கள் பனங்காயிலிருக்கும் நுங்கைக் கிள்ளி எடுத்து விட்டது போல் குழியாகத் தோன்றும் என்றும் பெண்ணின் கண்களை இழிவுப்படுத்தியுள்ளதையும் காண முடிகின்றது.

பெண்களின் பற்களை முல்லை மொட்டுக்களென்றும் முத்துக்களென்றும் கூறி பிதற்றுகின்ற அற்பர்கள், ஊரின் புறத்தே சுடுகாட்டில் சிதறிக்கிடக்கின்ற அப்பற்களாகிய எலும்புகளைப் பார்த்து, அப்படி வருணிக்கும் பற்களுக்கும் இதுதான் கதியென்று உண்மையை உணர்ந்து பெண்மையை வெறுத்திட வேண்டுமென "முல்லை முகை முறுவல் முத்தென் றிவைபிதற்றும்; கல்லாப்புண் மாக்கள்" (நாலடி-45) என்னும் பாடலடி எடுத்துரைப்பதைக் காண முடிகின்றது. மேலும் விவரம் அறிய நாலடியார் பாடலெண்கள் - 46,47,48 நோக்குக.

"ஏமாந்த போழ்தின் இனியார் போன்று இன்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம்" (நாலடி - 378; 1-2)

மான் போன்ற பார்வையுடைய பொதுமகளிர் ஆட்டுக்கடாவின் கொம்பைப் போல் மனந்திரிகின்ற குணம் கொண்டவர்கள். அறநெறியில் ஒழுக விரும்புவோர் பொதுமகளிரின் அன்பைப் பெற விரும்ப மாட்டார் என்று உரைப்பதால் பொதுமகளிரைக் கண்டித்துரைப்பதைக் காண முடிகின்றது.

முடிவுரை

அகம் புறம் போற்றப்பட்ட சங்க இலக்கிய காலத்தை அடுத்து தோன்றிய சங்க மருவிய கால இலக்கியங்களில் பெண்கள் அடக்குமுறைக்கு உட்பட்டிருப்பதும், சங்க இலக்கிய மகளிர் போல இக்கால மகளிர் சிறந்த கல்வியாளராகவோ, தமிழ்ப் புலவராகவோ திகழ வாய்ப்பில்லாமல் பெண்கள் போற்றப்படவும் இல்லை என்பது தெளிவாகிறது.

மேலும், பெண்ணானவள் கணவனுக்கு அடங்கியும் இல்லறத்தை நடத்தக்கூடிய திறமை வாய்ந்தவளாகவும், கணவனின் சொல்லுக்கு மாறுபடாமல் அவனின் மனநிலை அறிந்து ஒப்பனைச் செய்து கொண்டு இல்லறத்தை நடத்தக் கூடியவளாகவும் இருக்க வேண்டுமெனவும்,

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அவ்வாறு கணவனோடு ஒத்துழைக்காமல் கணவனோடு மாறுபட்டிருப்பவளையும், இல்லறப் பணிகளை சரிவர செய்யாதவளை எமன், பேய், நோய் என சாடுவதையும் காண முடிகின்றது. மேலும், நாலடியாரில் பெண்களின் உடலுறுப்புகளை பழித்தும், அவர்களை வெறுத்து துறவறம் பேண வேண்டுமென வலியுறுத்தும் பாடல்களையும் காண முடிகின்றது. பெண்களை நாய், ஆட்டுக்கடாய், காட்டு பசு, எருது என பிற விலங்குகளோடு ஒப்பிட்டுரைப்பதையும் அறிய முடிகின்றது.

அகம், புறம் பாடிய செவ்வியல் நிலையிலுருந்து அறம் முதன்மைப் பொருளாக பாடிய காலச் சூழல் 'புதுச் செவ்வியல்' நிலைக்குக் கொண்டு செல்வதையும் காண முடிகின்றது.களப்பிரர், பல்லவர் போன்ற ஏதிலார் வரவும், சமணம் மற்றும் பௌத்தச் சமயங்களின் தாக்கங்களும் இவ்வகையான மாற்றத்திற்கு காரணமாக அமைந்ததை அறிய முடிகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. சுப்பிரமணியம். ச.வே, தொல்காப்பிய தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 2003,
2. சுப்பிரமணிய பிள்ளை கா. *திருக்குறள் பொழிப்புரை.* திருநெல்வேலி, தென்னிந்திய, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்..

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ரமணிசந்திரன் நாவல்களில் மனிதநேயம்

Humanity in Ramanichandran's Novels

சா.பிரேமா, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 8

Abstract

The article focuses on humanity as shown in the novels of Ramanichandran. Ramanichandran is a voive of the Tamil women who shares her intellect by portraying the life of the Tamil people and others in her novels. Her novels can be attested as domestic novels. The stories are often intertwined with the crisis of women in the Indian setup. Moreover, humanity is the main concern of her novels. Therefore, the paper bring down the evidences of humanity in her novels.

Keywords: Humanity, Ramanichandran's Novels, Tamil Literature

முன்னுரை

மனிதநேயம் என்பது சாதி, மதம் என்ற பிரிவினை மாற்றங்களுக்குள் உறழாமல் உள்ளங்களின் உணர்வுகளுக்கும், இதயங்களின் ,கை குணத்திற்கும் ஓர் பாலமாகும். மனிதனின் மூளையில் புதைந்து கிடக்கும் நேச உணர்வினால் பிரதிபலிக்கும் ஓர் வெள்ளோட்டம். ரமணிசந்திரன் நாவல்கள் அன்பும் அறனும் பின்னிப் பிணைந்த ஒரு பெரும் உணர்வே மனிதநேயம். அறம் என்றால் என்ன? மனத்துக் கண் மாசிலனாதல் -தூய மனம் உடையவராயிருத்தல், இது உலகப் பொதுமறை அறத்துக்கு வகுத்த இலக்கணம். தூய மனத்தினின்று வெளிப்படும் உன்னத உணர்வே உண்மையானது. அதுவே மனிதநேயம் என்பது அன்பு அறம் ஆகிய இரு பெரும் கூறுபாடுகளைக் கொண்டது. புத்தர், இயேசு, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்தியடிகள், போன்ற இவர்கள் எல்லாம் மனிதநேயக் காவலர்களே! என்பதனை வள்ளுவர் அறுதியிட்டுக் சொல்லாமற் சொல்லுகின்றனர்.

பொதுமறை கண்ட புலவர்

மனிதநேய உணர்வு காக்கப்பட வேண்டும் என்பதற்காகவே 1330 கருத்து அரண்கள் அமைத்ததார் வளர்தமிழ்ப் புலவர் வள்ளுவர். ஒருவன் செய்கின்ற செயல்களால் தான் பெருமையும், சிறுமையும் அவனைச் சென்றடையும் என்றும் பிறப்பால் உயர்வு, தாழ்வு கிடையாது என்று வலியுறுத்தும் வள்ளுவர்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள். 972)

என்று கூறி மனித நேயத்துக்குப் பொருளுரையானார். மனித நேயத்துக்குமறுபெயரே சான்றாண்மை என்பதை மிகத் தெளிவாகஎடுத்துச் சொல்கிறார்.

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்"

எனச் சான்றாண்மைக்கு இலக்கணம் வகுக்கின்றார் பொய்யாமொழிப் புலவர். எடுத்த எடுப்பிலேயே மனிதநேயத்துக்கு அடிப்படையாக அமைவது அன்பே என்று அழுத்தமாகக் கூறுகின்றார் எனலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருமூலர் மனிதநேயக் கருவூலம்

மனிதநேயம் என்றும் வியந்து பாராட்டும் முத்தமிழ்த் தேனூற்றாம் திருமூலம் மனித நேயத்தின் மிகச்சிறந்த படைப்பாகத் தோன்றினார் அவர்

“மடமாடக் கோயில் பகவற்கு ஞன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பாக்கங்(கு) ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஞன்று ஈயில்
படமாடக் கோயில் பகற்கு அதாமே”

என்னும் பாடலில் மனிதநேயத்தைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லுகின்றார்.

மனிதநேய வகைகள்

- இயல்பான மனிதநேயம்
- காலப்போக்கில் மாறும் மனிதநேயம்
- மரபுக்குட்பட்ட மனிதநேயம்
- மரபு மீறிய மனிதநேயம்
- அன்பின் பிணைப்பால் ஏற்படும் மனிதநேயம்
- பெண்கள் நலநன ஆண்கள் விரும்பும் மனிதநேயம்
- துயரமே தன் வாழ்வின் முடிவாக வாழும் நேயம்
- சுய அழிவனைத் தேடிக்கொள்ளும் நேயம்
- பிறர்க்கு உதவும் நேயம்
- ஆதரவான நேயம்

மனிதநேயம் என்பது மானுடப்பண்பு

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லாதவர்” (குறள்.997)

என்று வள்ளுவம் கூறுகிறது. எத்தனை கூரிய அறிவுடையவர் என்றாலும், மனிதநேயமாகிய மக்கட்பண்பு இல்லாதவர் மரத்தைப் போன்றவர் என்பது குறள் கூறும் கருத்தாகும்.

வல்லமை தந்துவிடு என்ற நாவலில் வரும் மாதங்கியின் பெற்றோர் இருவரும் ஒரு வருடத்தில் எதிர்பாராத இறப்பில் எல்லாமே நிலைகுலைந்து போயிற்று. பணம் கொடுக்கவில்லை என்று கடையில் சாமான் போட்ட பல சப்ளையர்கள் வந்து சாமான்களை அள்ளிக்கொண்டு போயினர். சிலர் கடன் தர வேண்டும் என்ற வந்தார்கள் அதனால் பொறுப்பு தங்களது ஆகிவிடுமோ என்று அஞ்சி, உறவினர் கூட்டம் ஒதுங்கிப் போய்விட மாதங்கி பார்லரில் வேலை செய்து அண்ணன் சிவாவையும் தன்னையும் பார்த்துக் கொண்டு வந்தாள். உறவுகள் ஜைக கொடுப்பதில்லைஎன்பதை ஆசிரியர் நயமாகக் காட்டுகின்றார்.

“அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை” (குறள். 315)

பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதிப் பேணிப் போற்றாவிட்டால் ஒருவர் பெற்றுள்ள அறிவினால் பலன் எதுவும் இல்லை என்று இக்குறளில் கூறியுள்ளார்.

இராமலிங்க அடிகளார் “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்” என்று பயிருக்கும் உயிருண்டு என்ற எண்ணத்தில் வாடுகின்றார். மனிதநேயப் பண்பினை, முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையும், வகுத்த நெறிகளும் சொல்லிக் கொண்டிருக்கின்றன, இக்காலத்தில் மானுடப்பண்பு என்பது மனிதன் அழிப்பதில் கோலோச்சுகிறது.

‘சென்ற பாதையில் மீண்டுமே திரும்பாதது ஆற்றின் பயணம்’ அதைப் போலத்தான் வாழ்க்கைப் பயணமும் தொடர்கிறது. களங்கமற்ற உள்ளங்களில் கூட பிரிவினைகள் ஏற்படும் வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த தூண்டு சக்திகளின் செயல் ஏற்கக் கூடியதல்ல, மனிதநேயமிக்க பாத்திரப்படைப்புகள் மூலம் ஆசிரியர் சமுதாயத்திற்குத் தேவையான பண்புகளை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

விவரிக்கிறார். பொங்கட்டும் இன்ப உறவு என்னும் புதினத்தில் கனகலிங்கம் மகன் மோகனை சிறுவயதிலிருந்து அவனது அத்தை மகள் மதுமஞ்சரியை திருமணம் செய்து கொடுப்பதாகக் கூறியே வளர்க்கப்படுகிறாள்.

இந்நிலையில் சில சூழ்நிலையின் காரணமாக மதுமஞ்சரியை சுதாகரனை திருமணம் செய்ய வேண்டியதாயிற்று. இதனை ஏற்றுக்கொள்ள முடியாத கனகலிங்கம் சுதாகரன் பற்றி தவறான கருத்துக்களைக் கூறி இருவரையும் பிரிக்க முயற்சி செய்கிறார். இதை புரிந்து கொள்ளாமல் மஞ்சரியும் கணவனை தவறாக நினைக்கிறாள். பின்னர் அத்தை சகுந்தலா மூலம் கனகலிங்கத்தின் சூழ்ச்சியை புரிந்து கொண்டு மனம் மாறுகிறாள். மாற்றம் என்பது மானுடத்தத்துவம் என்பதை உணர்ந்து காலச்சூழலுக்கு ஏற்பத் தன்னையும் தன் செயல்பாடுகளையும் மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கின்ற மானுட சமுதாயம் நல்லாழ்வு வாழ்வதற்குத் தகுதி பெற்று விடுகின்றது என்னும் கருத்தும் பெறப்படுகின்றது.

உறவுகளில் மனிதநேயம்

இந்த உலகமானது உயிர் பெற்று இயங்க அனித உறவுகளே காரணமாகின்றன. மக்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடாமல் மற்றும் தொடர்பு கொள்ளாமல் இருந்திருந்தால் இந்த உலகமே உயிரற்றுப் போயிருக்கும். மேலே நாடுகளுக்கும், கீழே நாடுகளுக்கும் மனிதன் பயணம் மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் இந்த உலகம் நம் பார்வையிலிருந்து மறைந்து போயிருக்கும். இத்தகைய தொடர்புகள் மற்றும் உறவுகள் தொடர்ந்து தொடர்ந்து கொண்டிருப்பதாலே தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த உலகத்தை உருவாக்கித் தந்துள்ள மனித உறவுகள் தாம் எத்தனை.... எத்தனை... இந்த உறவுகள் நம்மை வாழ வைக்கின்றன, வருந்த வைக்கின்றன, நோக வைக்கின்றன மற்றும் சாக வைக்கின்றன. எனினும் இந்த உறவுகள் தேவையானதாகின்றன. இந்த நிஜத்தை, இத்தகைய மனித உறவுகளை மிக அழகாக தெளிவாக நம் மனதில் தைத்துச் செல்கிறார் நாவலாசிரியர் ரமணிசந்திரன். இந்த நாவலின் மூலம் மனித உணர்வுகளும் நம்மைஆட்கொள்கின்றன. மனித நேயத்தின் அடிப்படையினால், மனித உறவுகளின் தேவை வலியுறுத்தப்படுகின்றன.

மனித உறவுகளை

- குடும்ப உறவுகள்
- நட்பு சார்ந்த உறவுகள்
- சமுதாய உறவு
- அண்டை மாநில உறவு

ஆகியவற்றின் மூலம் அடையாளம் காட்டப்படுகின்றன.

குடும்பம்

சமுதாயத்தில் தனி மனிதன் தன்னில் அனைத்துமாக இயங்க முடியாது. ஒருவரை ஒருவர் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ சார்ந்திருப்பதன் மூலம் தான் வாழ்க்கையை வாழ முடியும். அவ்வாறு தொடர்பு கொள்வதுதான் உறவு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. ஒருவனும் ஒருத்தியும் பல கட்டுப்பாடுகளின் அடிப்படையில் இணைந்து வாழ்வது குடும்ப வாழ்வு ஆகிறது. ஒருவர் மற்றவரிடம் கொண்டிருக்கும் நெருக்கமான பிணைப்பு, உறவு எனப்படும் குடும்ப உறவுகள் என்பவை சமுதாயத்தின் வலிமையான பிடிப்புக்குட்பட்டவை. குருதிக் கலப்பாலும், பெற்றோர் மரபு வழியாலும், மனைவியாலும் ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவு முறை அமைகின்றது.

நட்பு

நட்பு இதிகாச காலம், சங்க காலம் முதல் இன்றும் போற்றப்படும் உன்னதமான உறவு. சாதி மத பேதங்கள் இல்லாத அல்லது அது போன்ற தடைகளை இன்றும் உடைக்கும் ஒரு கருவி. உலகில் எந்த தலையீடும் இன்றி தன் விருப்பம் போல் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை உள்ள உறவு இது மட்டுமே இதன் தனிச்சிறப்பு.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தனக்கு கிடைத்த வரத்தை, சன்மானத்தைதன் வாழ்க்கையைக் கூட தன் நண்பனுக்கு அர்ப்பணித்த நிகழ்வுகளை கடந்து வந்த சமூகமாகும்.

முடிவுரை

உறவு என்னும் அச்சாணியில் நகரும் மானுட சமுதாயத்தைப் புதினங்களில் காணமுடிகிறது. அன்பினை அடித்தளமாகக் கொண்டு தனது சுற்றங்களை அரவணைத்துச் செல்லும் அன்பு உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கும் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மக்கள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கும், மனிதனின் இனிய உணர்வை எழுப்பி, மனித வாழ்வை மேம்படுவதற்கு மனித உறவுகள் தேவைப்படுகின்றன என்பதை ஆசிரியர் கூறியுள்ளார்.

துணை நூல்

1. ரமணிசந்திரன். *வல்லமை தந்துவிடு.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நெடுநல்வாடை: பெண்களின் அணிகலன்களும் சமூக குறியீடுகளும்

Nedunalvaadai: Ornaments of Women and Social Symbolism

முனைவர் ஆ.புஷ்பா சாந்தி, ஆய்வாளர்,
தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

Abstract

The research paper focuses on the ornaments and their social identity as registered in the Tamil literary work "Nedunalvaadai". The use of ornaments among women is of the rich state of the society and has the influence of aesthetic taste among them. Normally, women ale easily drawn to the use of jewells. These they think of to beautify them and to have a royal look in the society. In Sangam times women are very elegant and used various types of ornaments to be used in the limbs. It shows the luxuric trait existed among them. Therefore, the paper culls out the facts of Ornaments of Women and Social Symbolism in "Nedunalvaadai".

Keywords: Ornaments of Women, Social Symbolism in *Nedunalvaadai*, Tamil Literature

மனிதர்களின் அடிப்படைத் தேவை உணவு, உடை, இருப்பிடம் என்னும் மூன்றுமாகும். பொதுவாக உலகில் தோன்றும் உயிர்கள் அனைத்துமே ஏதோ ஒரு தேவையுடனே வாழ்ந்து வருகின்றன. அவ்வகையில் மனிதன் நீங்கலாக உள்ள எல்லா உயிர்களும் உணவு, இருப்பிடம் என்ற இரண்டை மட்டுமே அடிப்படைத் தேவையாக கொண்டுள்ளன. மனித இனம் மட்டுமே பணம், ஆடை, ஆடைகேற்ற அலங்காரப்பொருட்கள், அணிகலன்கள் என்ற அனைத்தையும் அடிப்படைத் தேவையாகக் கொண்டுள்ளான். ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய நிலைக்கு ஏற்பவும், காலச்சூழல்களுக்கு தக்கவாறும் தனக்குரிய உணவு, உடை, இருப்பிடம் போன்றனவற்றை எல்லாம் மாற்றியமைத்துக் கொள்கிறான். அதற்கு தக்கவாறு தனது வசதிக்கேற்ற அணிகலன்களை அணிவதையும் ஆண்கள், பெண்கள் இருவருமே விரும்புகின்றனர்.

மனிதன் தன்னை அலங்கரித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்திய பொருட்களுள் மிகவும் இன்றியமையாதது அணிகலன்களாகும். சங்க காலத்தில் பெண்கள், ஆண்கள் இருவருமே பலவிதமான அணிகலன்கள் அணிந்திருந்ததற்கான செய்திகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் நெடுநல்வாடையில் பெண்கள் அணிந்திருந்த அணிகலன்கள் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஒரு நாட்டிலுள்ள மக்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் அடையாளப் படுத்துவதில் அணிகலன்களும் தலையாய பண்பு வகிக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் மக்களின் மனநிலைக்கு ஏற்பவும், விழாக்களுக்கு ஏற்றாற் போலவும் தங்களின் அழகுக்கு அழகூட்டும் விதமாகவும் பெண்கள் அணிகலன்களை பயன்படுத்துவர். இவை தங்கம், வெள்ளி, முத்து, பவளம், வைரம், பித்தளை, மணிகள் போன்றவற்றால் உருவாக்கப்படுகின்றன. பழங்காலம் முதல் இன்று வரை அணிகலன்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவது பெண்கள் தான். தற்காலங்களில் பெண்கள் அணியும் அணிகலன்களும் அதிகமாகியுள்ளன. அதற்குரிய உறுப்புகளும் குறியீடுகளும் மாற்றம் பெற்றுள்ளன. தாலி, மெட்டி, அணிந்திருக்கும் பெண்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருமணம் ஆனவர்கள் குறியீடுகளும் காணப்படுகின்றன. அணிகலன்கள் அணியும் பழக்கம் என்று தோன்றியது என்பதைப் பற்றி "மந்திரம் சம்பந்தமான சடங்குகளுக்காகக் கிளிஞ்சல்களையும், எலும்புகளையும், பற்களையும், ஆதிமனிதன் அணிந்ததிலிருந்தே இன்றுள்ள அணிகலன்கள் தோன்றியிருக்க வேண்டும்" (கலைக்களஞ்சியம். 1 ப-353) என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது. "அணிகள் சமுதாயத்தில் அவரவர் நிலைமையை அறிவதற்கும், மதிப்பிடுவதற்கும் ஓர் அளவு கோலாக விளங்கின" (இரா. வேலம்மாள், தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள், ப -11) என்பதிலிருந்து சமூகத்தில் ஒருவரின் பொருளாதார நிலைப்பாட்டினை அடையாளம் காணும் வகையிலும் அணிகலன்கள் இருந்திருக்கின்றன என்பதை உணரமுடிகின்றது.

அபிதான சிந்தாமணி பெண்கள் அணியும் அணிகலன்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றன. "கால்விரல் அணிகள், மகரவாய், மோதிரம், பீலி, பாடகம், சதங்கை, காற்சரி, பரியகம், காஞ்சி, மேகலை, கலாபம், பருமம், விரிசிகை, அரைப்பட்டிகை, அரைஞாண் செவிமலர்ப்பூ, ஆழி, பூணுநூல், நுதலணி, தெய்வவுத்தி, தலைக்கோலம், தலைப்பாளை, கிம்புரி, பெருஞ்சூட்டு, சரப்பணி, மதாணி முதலியனவாம்.

காலணிகளாவன:- பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி, பரியகம்.

தொடை அணிகலன்:- குறங்குசெறி என்பது.

அல்குல் அணிகலன்:- விரிசிகை என்னும் அணி.

தோள் அணிகலன்கள்:- சூடகம், பொன்வளையம், நவமணிவளையம், சங்க வளையம், பவள வளையம்.

கைவிரல் அணிகலன்கள்:- நெறி, பலரத்தினங்கள் இழைத்த மோதிரங்கள்.

கழுத்து:- வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, பொன்னூல், சவடி, சரப்பளி.

காது அணிகலன்கள்:- கடிப்பிணை, வாளி, குழை முதலியன.

தலை அணிகலன்கள்:- சீதேவியார் எனும் பணி, வலம் புரிச்சங்கு, பூரப்பாளையம், தென்பல்லி, வடபல்லி, புல்லகம், சூளாமணி, பொன்னரி மாலை. இடைக்கணி முதலிய இக்காலத்து அணிகள் ஒட்டியாணம் முதலியனவாகும்" (சிங்காரவேலு முதலியார்:2001:198).

பெண்களின் வாழ்வில் மிகவும் இன்றியமையாத இடத்தை அணிகலன்கள் பெற்றிருக்கின்றன. பலவிதமாக அணிகலன்களை அணிவதில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் பெண்களாவர். பத்துப்பாட்டின் நெடுநல்வாடையில் பாண்டியன் நெடுஞ்செழியன் போருக்கு சென்று இருந்த போது அரசமாதேவியின் பிரிவுத்துயரினைப் போக்குவதற்காக செவிலி உள்பட மற்றப் பெண்களும் மாலை நேரத்தில் தெய்வத்தை வணங்கினர். அந்த பெண்களைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர் அவர்களின் மேனியழகினை வருணிக்கும் விதமாக பாடல் வரிகளைப் பதிவு செய்துள்ளார். பெண்கள் வெண்ணிறச்சங்கு வளையல்கள் அணிந்து இருந்தனர் எனவும் கூறுகின்றார். இதன் மூலம் சங்க காலத்தில் சங்கினை அறுத்து வளையல்கள் செய்யப்பட்டன என்னும் குறிப்பினை அறிய முடிகின்றது. இதனை,

"வெள்ளி வள்ளி வீங்கு இறைப் பணைத் தோள்" (நெடுநல். 36)

எனும் வரிகள் விளக்குகின்றது. அரசி அரசன் தன் அருகில் இருக்கும் போது பொன்னால் செய்யப்பட்ட வளையல்களை அணிந்திருந்தாள். ஆனால் அரசனின் பிரிவு காலத்தில் அவள் வலம்புரிச் சங்கினை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்கள் அணிந்து, அதனுடன் காப்புநாண் கட்டியிருந்தாள் எனும் செய்தியினை,

"பொலந்தொடி தின்ற மயிர் வார் முன்கை,
வலம்புரி வளையொடு கடிகைநூல் யாத்து" (நெடுநல்.141,142)

எனும் வரிகள் விளக்குகின்றன. சங்கு என்பது குளிர்ச்சியினைத் தரவல்லதாகும். அரசனின் வரவுக்காக ஏங்கி இருக்கும் தலைவி தனது உடலின் வெப்பம் குறைவதற்காகவும், குளிர்ச்சிக்காகவும் சங்கு வளையல்களை அணிந்து இருக்கலாம்.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருமணம் முடிந்து கணவன் இருக்கும் பெண்கள் தாலி அணிவது என்பது நமது பண்பாடாகும். சங்க காலம் முதலே திருமணப் பந்தத்தில் இன்றியமையாத இடத்தை வகிப்பது தாலியாகும். திருமணம் என்றாலே தாலிதான் முக்கிய பங்கு வகிக்கின்றது. நெடுநல்வாடையில் அரசனின் வரவிற்காக ஏங்கி இருக்கும் தலைவி கழுத்தில் வேறு எந்த அணிகலன்களும் அணியாமல் தாலி மட்டுமே அணிந்து இருக்கின்றாள் எனும் செய்தியினை,

"ஆரம் தாங்கிய அலர் முலை ஆகத்துப்

பின் அமை நெடுவீழ் தாழ, துணை துறந்து" (நெடுநல்.136,137)

எனும் வரிகள் விளக்குகின்றன. பெண்கள் தன் அருகில் துணை இல்லாத போது கழுத்தில் வேறு எந்த அணிகலன்களும் அணியாமல் தன் துணைக் கட்டியத் தாலியினை மட்டுமே அணிந்திருந்தனர் என்பதையும் இவ்வரிகள் உணர்த்துகின்றன.

அரசன் தன்னுடன் இருந்த போது அரசி தொங்கும் தன்மைக் கொண்ட மகரக் குழைக் காதணிகள் போட்டிருந்தாள். அவன் இல்லாத போது காதுகளில் மட்டும் அழுத்தம் பெற்ற காதணி அணிந்திருக்கின்றாள் என்பதனை,

"நெடுநீர் வார்குழை களைந்தென, குறுங்கண்

வாயுறை அழுத்திய, வறிது வீழ் காதின்" (நெடுநல்.139,140)

எனும் வரிகள் விளக்குகின்றன.

அரசன் அரசியுடன் இருக்கும் காலத்தில் வாளை மீனின் பிளந்த வாயைப் போன்று விளங்கும் வளைவினையுடைய பெரிய மோதிரம் அணிந்திருந்தாள். அவ்வாறு விளங்கிய அரசியின் கைவிரல்களில் அரசன் இல்லாதிருக்கும் போது செந்நிறமுடைய நெளி என்னும் மெல்லிய மோதிரம் அணிந்திருக்கின்றாள் எனும் செய்தியினை,

"வாளைப்பகுவாய் கடுப்ப வணக்குறுத்து,

செவ்விரல் கொளீஇய செங்கோழ் விளக்கத்து" (நெடுநல்.143,144)

எனும் வரிகள் விளக்குகின்றன. அரசன் இல்லாத காலங்களில் அணியும் அணிகலன்கள் வேறாக இருக்கின்றன. அரசன் இருக்கும் போது அணியும் அணிகலன்கள் வேறாக இருக்கின்றன. இவ்வணிகலன்கள் அரசியின் மகிழ்ச்சியினை வெளிப்படுத்தும் குறியீடுகளாகவும் அவளது துன்பத்தினை வெளிப்படுத்தும் குறியீடுகளாகவும் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. பெண்களின் மனநிலையினை வெளிப்படுத்தும் குறியீடுகளாக அணிகலன்கள் முக்கியத்துவம் பெற்றிருந்ததை மேற்குறித்த குறிப்புகளின் வழி அறியமுடிகின்றன.

அணிகலன்கள் பெண்களின் வாழ்வில் மிகவும் முக்கியப் பங்கு வகிப்பனவாகவே காணப்படுகின்றன. தற்காலங்களிலும் இதுபோன்ற நிலை காணப்படுகின்றது. பெண்கள் தங்கள் வாழ்வில் கணவனுடன் இருக்கும் போது அணியும் அணிகலன்களை கணவன் தற்காலிகமாக தன்னைவிட்டு பிரிந்து சென்று திரும்ப வரும்வரை அதிக அணிகலன்களை அணிவதில்லை. கணவன் ஊரில் இல்லை எனும் காரணமும் உண்டு திருட்டு பயமும் அதிகம் காணப்படுகின்றது. சங்க காலத்தில் பெண்களின் வாழ்வியலோடு குறியீடுகளாக அணிகலன்கள் ஒன்றிணைந்தே காணப்பட்டன என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகின்றது.

துணை நின்ற நூல்கள்

1. மோகன். இரா., 2007, நெடுநல்வாடை, சென்னை: நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
2. சிங்காரவேலு முதலியார். ஆ., 2001, அபிதான சிந்தாமணி, சென்னை: சாரதா பதிப்பகம்.
3. வேலம்மாள். இரா., 1998, தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள், பாவை பப்ளிகேஷன்ஸ்.
4. கலைக்களஞ்சியம், (தொகுதி-1),

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பிரபஞ்சன் நாவல்களில் நாட்டார் இலக்கியக் கூறுகள்

Nattar (Folk) Literary Types in the Novels of Prapanchan

டே.பெமிலா, முனைவர்பட்ட ஆய்வாளர்,

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு.

Abstract

The paper traces the way of story telling in the novels of Prapanchan. Mostly the Tamil tradition had passed its literature through oral tradition. They are called as Oral Literature. It is based on the folk tradition of telling the tales; pointing mainly the culture and the setup of the people. There are some forms too to identify them. They may be of revealing ugliness, cruelty, vulgarity, beautifulness and virtuousness through the oral songs. Hence, this article focuses the use of Nattar (Folk) literary types in the novels of Prapanchan.

Keywords: Nattar (Folk) Literary Types, Novels of Prapanchan

முன்னுரை

மனிதச் சமுதாயத்தின் இயங்கியல் தன்மைக்கும் மற்ற விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் இயங்கியல் தன்மைகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. உணவே முதன்மையானது என்ற நிலையில் இயங்குகின்ற உயிரினங்களுக்கிடையே உணவோடு சேர்த்து கருத்தியல் சார்ந்த சிந்தனை மனிதச் சமுதாயத்திற்குச் சாத்தியப்பட்டிருக்கிறது. பண்டைய மக்கள் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள அனைத்து நிகழ்வுகளுக்கும் பாடல் பாடினர். பொழுதுபோக்கு நேரங்களில் கதைகள் கூறினர். இவை அனைத்தும் நாட்டார் இலக்கியமாக உருவெடுத்தது. புதுச்சேரியில் பிறந்தவர் எழுத்தாளர் பிரபஞ்சன் இருபதுக்கும் மேற்பட்ட நாவல்கள் எழுதி உள்ளார். 'மானுடம் வெல்லும்", 'இன்பக்கேணி' ஆகிய இரண்டு நாவல்களில் இடம்பெற்றுள்ள நாட்டார் இலக்கியக் கூறுகளை மட்டும் இக்கட்டரையில் காண்போம்.

வாய்மொழி இலக்கியங்கள்

நாட்டார் வழக்காற்றியலின் ஒரு பிரிவு வாய்மொழி இலக்கியமாகும்.

> "ஒரு மொழியில் காணப்படும் வாய்மொழி இலக்கியம் அம்மக்களின் இயல்பிற்கேற்ப அசிங்கமானதாகவோ (Ugly), கொடுமையானதாகவோ (Cruel), இழிவான கொச்சை வழக்கினதாகவோ (Vulgar), அழகுடையதாகவோ (Beautiful), அன்பு கனிந்ததாகவோ (Kind), நற்பண்பு மிக்கதாகவோ (Virtuous) காணப்படலாம்"

என்று தே.லூர்து அவர்கள் குறிப்பிடுகின்றார்.

வாய்மொழி இலக்கியங்கள் செயற்கையாக அமையாமல் பேச்சு வழக்கினும் சிறிது அழகுடன் ஒரு கட்டுக்கோப்புடன் திகழ்வதைக் காணமுடிகின்றது. பழமொழி, நாடோடிக் கதைகள் போன்றவை உரைநடை வகையைச் சார்ந்தவை. தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, கதைப் பாடல்கள் போன்றவை கவிதைகளாக மாறுபவை. இவ்விலக்கியம் தலைமுறை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தலைமுறையாக மக்கள் நினைவில் நிலைத்து வாய்வழியாக எடுத்துரைக்கப்பட்டு மாறி வருவது ஆகும்.

நாட்டுப்புறப் பாடல்

நாட்டுப்புற இலக்கியம் மக்களிடையே வாய்மொழியாக வழங்கி வருவது. ஏட்டிலக்கியம் தோன்றுவதற்கு முன்பே தோன்றியது. ஒவ்வொரு மொழியிலும் எழுத்துத் தோன்றுவதற்கு முன்பு பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கின. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் கூறும் பண்ணத்தி நாட்டுப்புறப் பாடல் ஆகும். தொல்காப்பியர் இதனை,

"பாட்டிடைக் கலந்த பொருளவாகிப்
பாட்டின் இயல பண்ணத் திய்யே"

என்று குறிப்பிடுகின்றார்.

நாட்டுப்புறப் பாடல்களில் காதற்பாடல்கள், தொழிற் பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் போன்றவை அடங்கும்.

பிரபஞ்சனின் படைப்புகளில் நாட்டுப்புறப் பாடல்கள் காணப்படுகின்றன.

தாலாட்டுப் பாடல்கள்

போரை முன்னிட்டு பல குடும்பங்கள் புதுச்சேரி வந்து தஞ்சமாகின. தாய், மரக்கிளைத் தூளியில் குழந்தையை இட்டு அசைத்துத் தூங்கப் பண்ண முயன்று கொண்டிருந்தாள். அவளின் தாலாட்டு,

"காரைக்கால் பட்டணமாம் - என் கண்ணே
கல்லிழைத்த மாளிகையாம்
கல்லிழைத்த மாளிகையாம் - என் கண்ணே
கப்பலிலே பொன் வரத்தாம்
கப்பலுக்கு உத்தரவு
கொடுப்பவரோ உங்களய்யா
களைத்தோருக்கு அன்னமிடும்
கர்ணரோ உங்களய்யா?
புதுச்செரிப் பட்டணமாம் - என் கண்ணே
பொன் விளையும் மாளிகையாம்
பொன் விளையும் மாளிகையில் - என் கண்ணே
பூ மெத்தை நீ நடக்க
பூ மெத்தை நீ நடக்க- என் கண்ணே
பொன் அரளி நீ படுக்க - அங்கே
போவோர்க்கு அன்னமிடும்
புண்ணியனார் உங்களய்யா
ஆராரோ - ஆரிரரோ என் கண்ணே - உன்னை
ஆரடிச்சார் ஆராரோ......"

தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கின்றது. தாயின் மனதில் தோன்றும் எண்ணங்கள், ஆசைகள், கனவுகள் இவையே பாடலாக வடிவமெடுத்தது. தாலாட்டுப் பாடல்களின் வாயிலாக முன்னோர்களின் பழமையை அறிய முடிகின்றது.

ஏற்றப்பாட்டு

ஏற்றம் இறைக்கும்போது பாடும் பாடல்களை ஏற்றப் பாடல் என்பர்.

'இன்பக் கேணி" என்ற நாவலில் ஆயி என்ற பெண்ணால் மக்கள் பயனடையும் வகையில் குளம் வெட்டப்பட்டது. ஏற்றம் போட்டு இறைத்துக் கொண்டிருந்த ஒருவன், ஏற்றத்தின் மேலே போவதும், பின் இறங்குவதுமாகப் பாடிக் கொண்டிருந்தான்.

"ஆத்துக்கு அந்தப் புறம் - அஞ்சாறு தென்னை மரம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தென்னை மரம் தாண்டி தித்திக்கும் ஆயி குளம். . .
அம்மா வீடு போற பொண்ணே . . . என்ன பேரு வைக்கப் போறே?
ஆம்பிளைன்னா பாட்டன் பேரு......பொம்பளைன்னா ஆயி பேரு......"

என்று பாடிக்கொண்டே ஏற்றமிறைத்தான்.

ஒப்பாரிப் பாடல்

மனிதனின் சோகத்தை வெளிக்காட்டும் பாடல் ஆகும்.

"ஒப்பாரிப் பாடல்களில் மற்றொருவரின் சோகத்தை உள் வாங்கி அதனை தனதாக்கிக் கொள்ளும் பண்பாடு உள்ளது" *மானுடம் வெல்லும்* நாவலில், ஒரு தவறும் செய்யாத கணவனைச் சிறையிலிட்டனர். அவனைக் கஷ்டப்பட்டு விடுதலையாகச் செய்கிறாள் மனைவி. கணவனைக் கண்டதும் மனைவி ஒப்பாரி வைத்து அழுதாள்.

"தொட்ட தெல்லாம் பொன் விளையும்
என் துரை மவனார் வாசலிலே
பட்டதெல்லாம் பால் பொழியும்
என் மாலையிட்டார் வாசலிலே
பொன் விளைச்ச கைகளுக்கோ
போட்டு வச்சார் தோல் விலங்கு?
மண்ணை வச்ச பொங்கல் வச்ச
மணவாளருக்கோ மணி விலங்கு?"

இன்ப துன்பங்களைப் பற்றி மக்களே பாடுவதால், இவை மக்கள் இலக்கியம் என்றும் அழைக்கப்படுகிறது.

நாட்டுப்புறக் கதைகள்

பெண்கள் கூந்தலை நேசிப்பவர்களாவர். கூந்தலை அறுத்தல் என்பது அகம்பாவத்தை அறுத்ததாகக் கருதப்படுகிறது. கூந்தல் பற்றிய நாட்டுப்புறக் கதை 'மானுடம் வெல்லும்" நாவலில் கூறப்பட்டுள்ளது.

"ஒரு பொம்மனாட்டி இருந்தாள், புருஷன் ஏதோ காரியமாக வெளியூர் போயிருக்கிற போது, அவளுக்கும் இன்னொருத்தனுக்கும் உறவு ஏற்பட்டுவிட்டது. கள்ளப் புருஷன் தாராளமாக வந்து போய்க் கொண்டிருந்தான். இது இப்படி இருக்கச்சே, வெளியூர் போன புருஷன் வந்துவிட்டானாம். புருஷன்காரன் வந்ததைக் கொண்டாட வேண்டும்தானே? ஆகையினால் அவள் சீவி சிணுக்கெடுத்து சிங்காரித்துக் கொண்டு, பட்டுடுத்தி, காசு மாலை, கழுத்துச் சங்கிலி, வைர அட்டிகை, காதுக்குத் தோடு, மூக்குக்கு முத்துப் பல்லாக்கு, வாய்க்கு வெற்றிலை என்று எல்லாம் தரித்துக் கொண்டு அலங்கார பூ விதையாக, புருஷன்காரனுக்குக் கோழி அடித்துச் சோறு பொங்கிப் போட்டாளாம். புருஷன்காரன் சாப்பிட்டுக் கொண்டிருக்கிற போதே கள்ளப் புருஷன் வந்து கதவைத் தட்டுகிறான். கதவைத் திறந்தவளுக்கு முன் அவன் நின்று கொண்டிருந்தான். பொம்பிளை இப்படி அலங்காரம் பண்ணிக் கொண்டு கல்யாணப் பெண் மாதிரி நிற்பதைப் பார்த்து என்ன விஷயம்? என்றாளாம். புருஷன் வந்திருப்பதைச் சொல்லியிருக்கிறாள் அவன், வந்தவனுக்கோ மகா ஆத்திரம். எதிர்பார்த்து வந்தது கிடைக்காமல் போனது. அப்புறம் எவனுக்காகவோ அவள் சிங்காரித்துக் கொண்டு நிற்பது. இரண்டு ஆத்திரம் சேரவே, அடி அவிசாரியே. . . என்றபடி அவள் கூந்தலை எட்டிப்பிடித்து அறுத்தக்கொண்டு போய்விட்டான். பொண்டாட்டி திரும்பி உள்ளே வந்தாளாம். புருஷன்காரன் பார்த்து, வெகு ஆச்சரியப்பட்டு எங்கே அடி கூந்தல் என்று வினவ, நீங்க பச்சபுல்லு கருகாமே, கறந்த பாலும் கெடாமே, வச்ச விளக்கும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

> அணையாமே, வச்ச குங்குமமும் கலையாமே, வாகா திரும்பி வந்தா என் வாசனைக் கூந்தலை சாமிக்குத் தந்திடறேன் அப்படீன்னு நேர்ந்துவிட்டேன். நீங்களும் வந்தாச்சு. அம்மனுக்கு அறுத்துக் கொடுத்திட்டு வந்திருக்கேன்னு சொன்னாளாம்".

பெண்களின் சாமர்த்தியம் பற்றிய ஒரு நாட்டுப்புறக் கதை.

"ஒருத்தி கள்ளப் புருஷனோடு சுகித்திருந்தாளாம். புருஷனுக்குச் சந்தேகம். ஒருநாள் பரதேசம் போகிறதாகச் சொல்லிக்கொண்டு, பரணில் ஏறி ஒளிந்து கொண்டு என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தானாம். அந்த நேரம் பார்த்து தெரு வாசல் படியில் கள்ளப் புருஷன் வந்து நின்றிருக்கிறான். புருஷன் ஒளிந்து கொண்டு தன்னை வேவு பார்ப்பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும், தெரியாது மாதிரி இருந்தாள் அந்தப் பொண்டாட்டி. என்ன செய்வாள் கள்ளப் புருஷன் கேட்பது மாதிரி ஒரு பாட்டு சொன்னாள்."

> "வாறீர் போறீர் என்னாலே
> வந்திருக்கார் ஐயா மேலாலே
> என்னால நீ செத்துக் கிடக்கே
> ஒன்னாலே நான் சாகப் போறேன்"

என்ற பாட்டைக் கேட்டதும் கள்ளப் புருஷன் ஓடிப்போனான். பரணில் இருந்த புருஷன்காரன் இறங்கி வந்து அந்தப் பாட்டுக்கு என்ன அர்த்தம்னு கேட்டானாம். அது எங்க அப்பா எனக்குச் சொன்ன கதை. அது ஞாபகம் வந்துச்சு, பாடினேன். ஒரு மீன்காரன் தூண்டில் போட்டுட்டுக் கரைமேல உட்கார்ந்து கொண்டு இருக்கான். தூண்டில் மீன், தன்னைத் தின்ன வர்ற மீனைப் பார்த்துச் சொல்லிச்சாம். என்னைப் பார்த்து வாறீர் போறீர். என்னைத் தின்னப் பார்க்கிறீர். என்னைத் தூண்டில்லே மாட்டினவரு மேலே உட்கார்ந்துகிட்டு இருக்கார். என்னாலே மேலே பல மீன்கள் செத்து குடுவையிலே கிடக்கு. உன்னால, நீ என்னைத் தின்னா நான் சாகத்தான் போறேன் அப்படீன்னு மீனு சொன்ன பாட்டு என் ஞாபகத்துல வந்துச்சு. அதைத்தான் பாடினேன்னாளாம் அந்த பொம்மனாட்டி. புருஷன்காரன் அவ காலில் விழுந்து, அவ மேல சந்தேகப்பட்டது தப்புன்னு சொன்னானாம்."

ஆண்களும் பெண்களும் பொழுதுபோக்கு நேரங்களில் பேசி சந்தோஷிக்கிற கதைகளாக நாட்டுப்புறக் கதைகள் உள்ளன.

முடிவுரை

மக்களின் என்ன ஓட்டங்களையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் தன்னுடைய எழுத்தில் பிரதிபலித்தவர் எழுத்தாளர் பிரபஞ்சன். 'தமிழ் உள்ளவரை பிரபஞ்சன் எழுத்துக்களை இப்பிரபஞ்சமும் போற்றும் என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்

1. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம்.
2. பிரபஞ்சன், மானுடம் வெல்லும், ப.286.
3. பிரபஞ்சன், இன்பக்கேணி, ப.191.
4. ஆய்வுக்கோவை, நாட்டுப்புறப் பாடல்களில் ஒப்பாரிப் பாடல்கள், ப.334
5. பிரபஞ்சன் மானுடம் வெல்லும், ப.35.
6. மேலது., பக்.323-324.
7. மேலது., பக். 324-325.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஆற்றுப்படை நூல்களில் இறைவழிபாடு

Divine Worship in the *Aatruppadai* Collection

முனைவர் இயே.பெர்க்மான்ஸ், உதவிப் பேராசிரியர்
காமராசர் அரசு கலைக்கல்லூரி, சுரண்டை, திருநெல்வேலி மாவட்டம்.

Abstract

The paper finds the traces of Divine worship in the collection of "Aatruppadai". Divinity is the main concern for an individual and it is really a great one to achieve. The divine soul will be ever free and is a source of salvation to others. So people belong to all cultures created the tendency of divine worship. Tamil people is of no exception, they are so divine in all pursuits. Their whole life is to attain divinity, "Aatruppadai" collection is a fountain of divine source. The ideas in it enthrall the soul of all and cover them into the divine universe. Hence, this article tries to elicit the problems endured by the protagonist and the sufferings of his family members.

Keywords: Divine Worship, *Aatruppadai* Collection, Divinity of Tamils

முன்னுரை

சங்ககாலத்தில் இன்றிருப்பது போன்ற பெரிய கோயில்கள் இருக்கவில்லை. சிறு சிறு கோவில்களே இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன. அக்காலத்து மக்கள் எங்கும் இறைவன் நீக்கமற நிறைந்திருப்பதாகக் கருதினர். ஆகையால் அவர்கள் இயற்கை வனப்பமைந்த எல்லா இடங்களிலும் இறைவனை வணங்கி வழிபட்டனர். அக்காலத்தில் உருவவழிபாடு அருவவழிபாடு என்னும் இரண்டு நிலைகளிலும் இறைவனை வழிபட்டு வந்ததற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. தமிழர்கள் முருகனைக் காட்டிலே வைத்தும், சோலைகளிலே வைத்தும், ஆற்றின் நடுவிலே அமைந்த அரங்களிலே வைத்தும், குளத்தங்கரைகளிலே வைத்தும் வணங்கினர். மேலும் முச்சந்தி, நாற்சந்தி, அஞ்சந்திகளிலும் வழிபட்டதாகவும், கடம்பமரத்திலும், மரக்கட்டைகளிலும் அம்பலத்திலும் முருகனை வழிபட்டனர்.

வழிபாட்டு முறை (வழிபாடு)

இயற்கையையும் இறைவனாக வழிபட்ட மக்கள், இறைவனின் உருவங்களையும் வழிபட்டனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. உருவ வழிபாடே சிற்பக் கலைக்கு அடித்தளமாக அமைந்தது என்றும் கூறலாம். பண்டைத் தமிழர்கள் போரிலே விழுப்புண்பட்டு இறந்த வீரனுக்கு வழிபாடு செய்ய ஒரு கல்லினைத் தேர்ந்தெடுத்து அக்கல்லில் அவ்வீரனது உருவத்தினை, வல்லோர் செதுக்குதல் மரபு, அக்கல்லில் அவ்வீரனது உருவத்தினையும், புகழையும், பெயரையும் அடியில் எழுதியிருப்பர். இச்செய்திகள் தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. வீரர்களுக்கு உருவமத்து அவர்கள் வெற்றியைக் கொண்டாடி வணங்கியது போலவே உடவுளர்களுக்கும் கற்சிலைகள் செய்து வணங்கினர். இதுவே உருவ வழிபாட்டுக்குக் காரணமான செயல் என்பது சாலப்பொருந்தும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

முருகனுடைய உருவம் பற்றி திருமுருகாற்றுப்படையில் ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் உடையவனாக சித்தரிக்கப்பட்டு வருணிக்கப்படுகின்றது. இது சங்க காலத்தில் உருவ வழிபாடு இருந்ததற்கு தகுந்த சான்றாக அமைகிறது.

“ஆறுமுகமும் செய்யும் செயல்களை
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுரி வழாஅ
அந்தணர் வேள்வி ஒர்க்குமே, ஒருமுகம்
அஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே, ஒரு முகம்
செறுநர்த் தேய்த்துக் செல்சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே
ஒருமுகம், குறவர், மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே”

என்று குறிப்பிடுகின்றது.

ஒரு முகம் சூரியனைப் போல ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது. ஒருமுகம் தன்னை வணங்கும் அன்பர்களுக்கு வரங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு முகம் அந்தணர்களின் வேள்விகளைப் பாதுகாக்கின்றது. ஒருமுகம் உண்மையறிவை உணர்த்திக் கொண்டிருக்கிறது. ஒரு முகம் அன்பர்களின் பகைவர்களை அழித்து அவர்களுக்குப் போரிலே வெற்றியைத் தருகின்றது. ஒரு முகம் வள்ளியுடன் மகிழ்ந்து வார்த்தையாடிக் கொண்டிருக்கிறது என்பதே இதன் பொருளாகும். பன்னிரு கைகளில் சிறப்புகளையும் அவர் கூறியிருக்கின்றார். இவ்வாறு தமிழகத்தில் உருவ வழிபாடும், அருவ வழிபாடும் இருந்ததனை ஆற்றுப்படை நூல்களினால் அறிய முடிகின்றது.

வழிபாட்டு முறை

சங்ககாலத் தமிழர்கள் தெய்வங்களுக்கு மலர்களிட்டும், உயிர்களைப் பலியிட்டும் வணங்கினர். இரத்தம் கலந்த அரிசியைப் பலியாக வைத்தும் வணங்கினர்.

சிறிய திணை அரிசியை மலரோடு கலந்து வைத்தும், ஆடறுத்தும், சேவல் கொடியொடு முருகனை வரிசையாக நிலைநிறுத்தியும் ஊர்கள் தோறும் முருகனுக்கு சிறந்த விழாக்கள் செய்தனர் என்பதனை,

“சிறுதினை பலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியோடு வயிற்பட நிறிஇ
ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்”

என்ற வரிகளாலும்.

வலிமை பொருந்திய பெரிய கொழுத்த ஆட்டுக் கடாவை வெட்டி, அதன் குருதியுடன் வெண்மையான அரிசியைக் கலந்து பலிகளாகப் பண்ணுவார்கள். அவைகளைப் பிரப்பங்கூடைகளிலே வைத்து முருகனை வழிபடுவார் என்பதனை,

“மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரை இய தூவெள்ளரிசி
சில்பலிச் செய்து பல் பிறப்பு இரீஇ”

என்ற பாடலாலும் அறியலாம். மேலும் மதுரைக்காஞ்சியிலும், தெய்வத்திற்கு உயிர் பலியிட்டதைக் காண முடிகிறது. இதனை அந்நூலாசிரியர்.

“நூற்ற உணவின், உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயிர்ப்பலி கொடுமார்”

என்றுரைக்கின்றார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சைவ வழிபாடு

நெல்லையும், மலரையும் தெய்வத்தின் முன்னே சொரிந்து நின்று வணங்கி வரம் கேட்டனர் என்பதனை,

"..................... நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூ உய்க் கைதொழுது"

என்ற வரிகளால் உணரலாம்.

பிரார்த்தனை செய்தும், வணங்கியும், பல மலர்களை சிந்தியும், பல வேறு உருவங்களுடன் விளங்குகின்ற கடவுளை வேண்டுகின்றனர்.

தூபங்காட்டியும், வாசனைப் பொருள்களைப் போட்டும் வழிபட்டனர் என்பதனை,

"பரவியும் தொழுதும் விரவு மலர் தூவியும்
வேறுபல உருவின் கடவுள் பேணி
நரையும் விரையும் ஒச்சியும்"

என்று குறிஞ்சிப்பாட்டில் ஆசிரியர் உணர்த்துகின்றார்.

பழங்காலத்தில் அந்தணர்கள் தாங்கள் வழிபடும் முருகப் பெருமானை மூன்று காலமும் அறிந்து வேத மந்திரங்களையும் சொல்லுதல் பொருட்டு, ஒன்பது இழைகளைக் கொண்டு மூன்று புரியாக அமைந்துள்ள மெலிதான பூணூலைத் தம் உடம்பில் அணிந்தும், நீராடும் போதும் துவைத்துப் பிழிந்து ஈரம் உலராத ஆடையை தம் உடலில் இருந்து உலரும்படியாக அணிந்து கொண்டு, இருகைகளையும் தலைக்குமேல் குவித்து தன்னைப் புகழ்ந்து ஆறு எழுத்துக்களையும் தன் மனத்தில் அடக்கியவனாய் கேட்டதற்குரிய மந்திரங்களையும், நாக்கு அசையும் அளவில் பலமுறை உச்சரிக்கவும், பின்னர், நல்ல வாசனை பொருந்திய மலர்களைத் தூவி அர்ச்சித்து முருகனை வழிபடுவர். சங்க காலத்திலும் முருகனை வழிபடும் முறை இருந்தது. அது இன்றைய சமுதாயத்திலும் பொருந்தி வருவதாக உள்ளது என்பதனை நக்கீரரின் திருமுகாற்றுப்படையின் திருஏரகம் என்னும் தலப் பாடலின் வழி,

"ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்நாண்
புலராக் காழகம் புரை உபீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்த்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி"
நாவியன் மருங்கின் நவிலப்பாடி
விரையுறு நறுமலர் ஏந்தும் பெரிது வந்து
ஏரகத்து உறைதலும் உரியன் அதாஅன்று"

வழிபடும் முறையை அறியலாம்.

முடிவுரை

பொதுமக்கள் இறைவனை பலவாறு துதித்தும், பூசைகள் பல செய்தும் இறைவனை வழிபட்டனர். இப்போதும் இந்த வழிபடும் முறை இருந்து வருகிறது. முருகனுக்கு பல அற்புதப் பூசைக் காட்சியாகவும், மலைக்கோயில் என்னும் ஒரு குன்றில் முருகனுக்கு ஏற்ற பாடலைப் பாடுவதும் ஊது கொம்புகள் பலவற்றையும் ஒன்றாக சேர்த்து வாயில் வைத்து ஊதி, மணி ஒலித்து பகைவர்கள் புறங்கொடுத்து ஓடாத வலிமையான பிணிமுகம் என்கின்ற பட்டத்து யானையை முருகக் கடவுளின் வாகனமாகக் கருதி யானையை வாழ்த்துவர், மக்கள் தங்கள் குறைதீர வேண்டும் என தாங்கள் நினைத்ததை இறைவன் நிறைவேற்றுவதாக முருகனை நினைத்து வழிபடுவர்.

தற்போதைய வழிபாட்டு முறைகளின் அடித்தளமாக, இன்றைய சிறுதெய்வ வழிபாட்டு முறையின் சாயலை அதிகம் பெற்றதாக சங்ககால தமிழர்களின் வழிபாட்டு முறை அமைந்து

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இருந்தது. குறிஞ்சிக் கடவுள் முருகன் வழிபாடு இன்றும் சிறுதெய்வ வழிபாட்டுச் சாயலை பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது.

துணை நின்ற நூல்கள்

1. *திருமுருகாற்றுப்படை.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஈழத்தமிழ்ச் சிறுகதைகளில் தலித்தியப் பார்வை

Dalit Approach in the Short Stories of Tamil Eelam

முனைவர் சு. பேச்சியம்மாள், தமிழியல் துறை,
உதவிப் பேராசிரியர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி,

Abstract

The paper plans to find out the traces of Dalit suppression and oppression in the short stories of Tamil Eelam. Tamil people are the original inhabitants of the present Sri Lanka, known formerly as Ilankai. There are many evidences that prove Tamils had a rich culture at Lanka. After the Aryan influence over the Buddhist, adopted by the Sinhala People; the Tamil people were preyed under the influence of Aryan segregation of castes. Due to that and the bogus Buddhists of the island Tamils were betrayed and corrupted by themselves of believing the caste order, they did many sorts of oppression to their kins men. These are reflected in the stories of the Eelam. Many writers wrote about the caste oppression in their stories. The paper focuses on the compiled short stories by Sugan and decipers the influence of caste in the society which made Dalit a separate caste order in Eelam. Hence, this article focuses the related theme.

Keywords: Dalit Approach, Short Stories of Tamil Eelam

இந்தியச் சமுதாயம் சாதி அடுக்குகளைக் கொண்டது. அச்சாதி அடுக்குப் பொருளாரதார ரீதியில் ஏற்றத் தாழ்வையும் கொண்டு விளங்குகிறது. “ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில்'' என்று விடுதலைக் கவி பாடியிருப்பினும் ''சாதி ஒழியாது சரஸ்வதி பொய்யாது'' என்ற பழமொழியைக் கூறிச் சாதியை வளர்த்து விட்டு விட்டனர். உயர்வு தாழ்வு கற்பித்து விட்டனர். உயர் சாதியினர் தாழ்ந்தவரை அடிமையாகவே நடத்தி வந்தனர் தாழ்ந்தவர் ஒடுக்கப்பட்டவராய் புறக்கணிக்கப்பட்டவராய் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைக் குறிக்க வடமொழியின் மூலச் சொல்லான ‘தலித்’ வழக்கில் வந்து நிலைத்து விட்டது. இவ்வகையினரின் வாழ்வியலை நடப்பியல் போக்கை எடுத்துக் கூறி விழிப்புண்வை ஏற்படுத்த விரும்பிய இலக்கியப் படைப்பாளர்கள் தத்தம் படைப்புகள் வழி இம்மக்களின் வேதனையை எதார்த்தப்போக்கை எடுத்துக் கூறியுள்ளனர். அவ்வகையில் ஈழத்தமிழ் இலக்கியப் படைப்பாளர்களின் சிறுகதைப் படைப்புகளில் தலித் மக்கள் படும் வேதனைகளை அனுபவிக்கும் கொடுமைகளை உள்ளது உள்ளவாறு விளக்குவதை இக்கட்டுரை அமைகிறது. சுகன் தொகுத்த தீண்டாத்தகாதவன் முதலான ஈழத்துச் சிறுகதைகளில் தீண்டதகாதவன்இ நிலவிலே பேசுவோம், ஆற்றல்மிகு கரத்தில்இ தப்புக்கணக்கு போன்ற கதைகள் ஆய்வுக்களத்துக்குரியனவாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் சொல்லாக தலித் மக்கள் சமுதாய உற்பத்தியில் பெரும் பங்கு வகிப்பவர் ஆவர். ''சமூகத்தின் உற்பத்தியில் பெரும்பகுதிக்கு இவர்கள் தான் காரணம் சமூகத்திற்கு இதுவரை தேவை என்று கருதப்பட்ட சில

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சேவைகளையும் இவர்கள் தான் செய்கிறார்கள். ஆகவே சமூகத்தின் கட்டமைப்பில் இவர்கள் தமக்கான இருப்பை இடத்தைப் பெறமுடியும்'' என்று ஞானி கூறியுள்ளார் (தமிழ்ச் சமூக மரபும் மாற்றமும் 2014, பக்.17) இராமாயணத்தின் இலங்கை நாடே இன்றை லங்கா எனும் சிறிய நாடு. அதன் வடக்கு கிழக்கு மாகாண நிலப்பகுதிகள் ஈழம் எனும் பெயருடன் விளங்கிறது. அங்கு வாழும் தமிழ் மக்களிடையே காணலாகும் தலித்திய ஒடுக்கு முறைகளை எழுத்தாளர்கள் தம் சிறுகதைப் படைப்புகளில் பதிவு செய்துள்ளனர் அப்பதிவுகள் வழி ஈழத் தமிழப் படைப்பிலக்கியத்தில் காணலாகும். மக்களின் வாழ்வியலை எதார்த்த பூர்வமாக வெளிப்படுத்திய நிலையை அறிய முற்படுகிறது இக்கட்டுரை. மக்களின் விடுதலையே இலக்கியக் குறிக்கோளாகக் கொண்டு சுகன் இக்கதைகளைப் படைத்துள்ளார் என்பதை அறிய அவர் தம் சிறுகதைகள் துணை நிற்கின்றன. உயர் சாதியினரால் ஒடுக்கப்படும் தலித் மக்களின் வேதனைகளைச் சம்பவங்களை எடுத்துச் கூறி விளக்கும் திறனில் இவரது (சுகன்) கலை நுட்பத்தைக் காண முடியும். ('தால்' என்ற வடமொழிச்சொல்லில் இருந்து உருவான தலித் என்ற சொல் பிளக்கப்பட்ட கூறு போடப்பட்ட ஒடுக்கப்பட்ட ஆகிய பொருளில் வழங்குகிறது.'' தலித்தியக் கருத்தாடல்கள் பக்.32)

சுகன் தொகுத்த ஈழத்து தலித் சிறுகதைகளில் தீண்டாமைக் கொடுமைகளும் எதிர்ப்புகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதையும் இன்று ஈழத்தில் சாதி உணர்வுகள் முற்றாக ஒழிக்கப்படவில்லை என்பதையும் போர்ச்சூழல் விளைவாக இன்று புலம் பெயர்ந்த பின்னும் சாதி உணர்வுகள் நீங்கவில்லை என்பதையும் பிரதிபலிப்பனவாக கதை கருக்கள் அமைந்துள்ளன.

முதல் கதைத் தலைப்பே தெணியானின் "தீண்டதகாவன்'' தீண்டாமைக் கருவே தலைப்பாகிறது. மூன்றாம் வகுப்பு பயிலும் எட்டு வயது சின்னப் பையன் ஏழை என்பதால் வகுப்புத் தோழனின் தந்தை (உயர் சாதி) பாய் தேய்த்து வயிற்றைக் கழுகும் குடும்பப் பையனுடன் பேசக்கூடாது எனத் தடுப்பது தீண்டத்தகாவன் என்பதை (அச்சிறுவன்) அடையாளப்படுத்துகிறது. "அவனோட நீ பேசக்கூடாது சுவற்றின் மேலில் எழுதவும் கூடாது'' (தீண்டதகாதவன் பக்.13) என்று இளைய தலைமுறைக்கு அறிவுறுத்துவது தீண்டாமை தொடர வேண்டும் என்பதாகும். கோயில் யாவர்க்கும் பொது. கல் குதிரை மீது மானேஜர் தன் மகனை இருத்தி அழகு பார்க்கிறார். அதே நேரம் ஏழை தலித் சிறுவனை கல்குதிரையைத் தொடக்கூடாது எனக் கண்டிப்பது அச்சிறுவனை மன வேதனைப்படுத்துவது மட்டுமல்ல தலித் இன மக்களுக்கு அவமானமாகவும் அமைகிறது. சிறு வயது முதலே தீண்டாமை விதை விதைக்கப்படுகிறது.

என்.கே. ரகுநாதனின் "நிலவிலே பேசுவோம்'' என்ற சிறுகதையில் மதுவை ஒழிக்கப் புறப்பட்ட காந்தியவாதி சிவப்பிரகாசத்தைச் சந்திக்க சில இளைஞர்கள் வருகின்றனர். அவரும் தெருவிற்கு வந்து நின்றபடியே விவாதம் "... காந்தியின் பேரைச் சொல்லி மது ஒழிக்கக் கிளம்பி விட்டர்கள்! முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?'' என்றது அந்தக்குரல்... கதையின் முடிவில், வெளியே நல்ல நிலவு அங்கே போய் பேசிக் கொள்ளலாம் என சிவப்பிரகாசம் சொன்னதின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை (தீண்டதகாதவன் பக்.23) கந்தன் என்ற தலீத் குடும்பத்தான் உயர்சாதியைச் சேர்ந்த பேச்சாளர் சிவபிரகாசத்தைச் சந்தித்து தீண்டாமையை முதலில் ஒழியுங்கள் பின் மது ஒழிப்புக்கு வாருங்கள் என வேண்டுவதைக் காண முடிகிறது.

கே. டேனியலின் "ஆற்றல் மிகு கரத்தில்'' என்ற கதையில் தலீத் வேலன் படும் வேதனைகள் விளக்கம் பெறுகின்றன. தோள் மறந்த துண்டு கரையாவதுண்டு எனக் காட்சி தருவதில் கூட சமநிலை மறுக்கப்பட்டது தான். கமக்காரன் வீட்டில் அடிமையாக வாழ்ந்த வேலனின் மனவேதனைக்குக் காரணம் வீட்டு எசமானி. "வேலன் முதுகில் குத்துவாள். இன்று கமக்காரன் வேலனின் பிடரியில் அடிப்பான். சின்னக்கமக்காரிச்சி வேலனின் செவிகளைப்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பிடித்துத் திருகுவாள். கமக்காரன் வீட்டுக் குழந்தை குட்டிகள் வேலன் மீது எச்சில் துப்பி வேடிக்கை பார்ப்பார்கள்'' (தீணடதகாதவன் பக்.25) இவற்றைப் பொறுத்துப் போக வேண்டிய அடிமை ஒரு தலித் இளைஞன். வீட்டார் செல்ல வேலன் ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு தானும் கச்சேரி காண வந்து அகப்பட்டுக் கொள்கிறான். ஊரார் அவனைப் அடித்து உதைத்து பெரியதனக்காரரிடம் (விதானையர்) ஒப்படைத்தனர். அன்றிலிருந்து நிரந்தர அடிமையாய் வேலன் கந்தப்பர் வீட்டில் இருந்தான், ஆதிக்க சாதிக்கு அடிமைப்பட வேண்டிய நிலையே இருந்து வருவதை இச்சம்பவம் சுட்டுகிறது. வேலனின் விடுதலைக்கு ஒரு விடியற் காலமாக எசமானி அம்மானின் ஒழுக்ககேடு உதவுகிறது. தான் தவறு இழைப்பதை இரவுப் பொழுதில் மாட்டுக் கொட்டகையில் படுத்து இருந்து விழித்துக் கொண்ட "வேலன் நீ இஞ்சை இருந்து ஐயா வீட்டை அடி வாங்கிச் சாகாதை! எங்கையெண்டாலும் ஓடித் தப்பு! முந்தினமாதிரி ஐயா உன்னைத் தெடராாமைக்கு நான் பாத்துக்கொள்ளிறேன்'' என்று கட்டளைபோட்டுவிட்டு. சில்லறையாகப் பணமும், ஒரு பொட்டலமும் கொடுத்தாள், வேலனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சில்லறையை ஒவ்வொன்றாக ஒரு கையிலிருந்து, மறு கைக்கு மாற்றி, மாற்றி எண்ணிப் பார்த்தான். ரூபா பத்து. பொட்டலத்தில் சின்னக் கமக்காரனின் இரண்டு நிறச் சேட்டுகளும், ஒரு வேட்டியும் இருந்தன. (தீண்டதகாதவன் .பக்.21) விடுதலை பெற்ற மகிழ்ச்சியுடன் பிறந்த ஊர்ப்பக்கம் வந்தபோது அவனது உடை மாற்றம் கண்டு வியந்த ஆதிக்கச் சாதியினர் சட்டையைக் கழற்றச் செய்தார்கள்.

''கீழ்ச்சாதி பயலே கழட்டடா சட்டையை'' என்று கழட்டி கிழித்துப் போட வந்த இருவரும் அவனை அடித்து உதைத்தனர். காரண ஏதுமின்றி அடி விழும் நிலை. அவனை அம்மணமாக நிறுத்தி அவன் வேட்டியை முழங்காலுக்கு மேல் உடுத்தச் செய்து அவமானப்படுத்தினர். வைரவன் கோயில் முன் அழுதான் வேலன். பிறந்த ஊரில் உள்ள ஆதிக்கச் சாதியினர் தான் நல்லாடை அணியக் கூடவில்லையே என வருந்தி விம்மி விம்மி அழுகிறான்.

அவனது சிறிய தாயார் கற்பி என்பவள் விதானையர் 20 வருட சேவை செய்யும் வீட்டு வேலையாள். வேலன் விதானையர் வீட்டிற்குச் செல்ல விரும்ப வில்லை. பயமே காரணம் வேறுவழியின்றி சிறிய தாயுடன் தங்கினான். கையில் உள்ள பணத்தைக் கொண்டு வியாபாரம் செய்ய விரும்பி பட்டணம் போய் ஒரு காபிக் கடையில் காபி கேட்க கிடைத்த காப்பியைக் குடித்து முடிக்கவும் அங்கு 4 பேர் வந்து ''இவன் பள்ளன்'' எனக் கூறி அவன் பிடரியிலும் முதுகிலும் அடித்தனர். ஆதிக்கச் சாதியினரின் வெறுப்பை வேலன் பெற்றான். அங்குள்ள கோயில் விழாவில் பஞ்சமர்க்கு ஒதுக்கிய இடம் தாண்டி சென்றால் வேலனுக்கு அடி உதை காத்திருந்தது. சாதிப் பெயரைச் சொல்லியே இழுத்து சென்றதை நடப்பியல் தன்மையுடன் கதை ஆசிரியர் குறித்துள்ளார். சாதி மட்டுமே காரணம் எனில் தீண்டாமையின் கொடூரம் எத்தகையது என்பதைப் படைப்பாசிரியர் புலப்படுத்தியுள்ளமை எதார்த்தத்தைச் சுட்டிக்காட்டி சிந்திக்க வைத்தும் வெளி உலகத்தார்க்கு வெளிச்சமிட்டும் காட்டுகிறார்.

வருணச் சாதியப் படிநிலையில் கீழப்படியில் தள்ளப்பட்ட சாதியினராய் தலித் மக்கள் வாழ்ந்து வருவதையும் அவர்களை ஆதிக்கம் செய்வதையும் உள்ளதை உள்ளவாறு உரைக்கும் கதைகள் இத்தொகுப்பில் உள்ளன. எதிர்ப்புணர்வின்றித் தாக்குபவர்களை எதிர்க்காது தாங்கிச் செல்லும் அடிமைகளாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். காரணமின்றி அடி உதைக்கு ஆளாவது பரிதாபத்திற்கு உரியவராய் உள்ளனர்.

''சாதி வேட்டியை அடையாளப்படுத்திப் பெருமைப்பட்டுக் கொள்கிற இவர்கள் (ஆதிக்கச் சாதியினர்) மறைமுக சாதிப்படி நிலையில் உள்ளவர்களை அவமானப்படுத்துகிறார்கள்'' (தலித்திய சொல்லாடல் பக்.116) அடி உதை மூலம் இவன் தாழ்சாதி பிறவி எனப் பிறர்க்கு எடுத்துரைக்கின்றனர். சாதிப் பேதம் பார்க்கும் சமுதாயத்தை சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர்.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"தப்புக்கணக்கு" என்னும் சிறுகதையில் ஆசிரியர் ஒரு தலித் சமூகத்தை சேர்ந்த ஒரு சிறுவனை அடையாளப்படுத்துகிறார் கதை முழுக்க ஒரு வகுப்பறையில் கட்டமைக்கப்பட்டிருக்கும் அரசியலையும் அதில் சிக்கி கொண்ட அச்சிறுவனின் மன உணர்வும் பதிவு செய்யப்பட்டுள்ளது. வகுப்பில் தனிமைப்படுத்தப்படும் அச்சிறுவன் கதையின் ஊடாக பேசிக் கொண்டிருக்கிறான். வகுப்பறையில் ஒரு யேசுநாதரின்படம். அதன் கீழுள்ள வாசகம், அதனைப் பற்றி ஆசிரியர்கள் கூறிய கருத்துக்கள், அதையும் மீறி அந்த ஓவியத்தின் மீது அவன் கொள்ளும் விருப்பம் என கதையாசிரியர் கதையை நகர்த்துகிறார்.

வகுப்பறையில் ஆசிரியர்கள் மேல்தட்டு மாணவர்களையும் பணக்கார மாணவர்களையும் தனியான சலுகைகளுடன் கவனிப்பதைக் கண்டு மனம் நோகுகிறான். கல்வி அவர்களுக்கு வழங்கப்படும் ஒன்றாக இல்லாமல் ஏதோ ஒரு கடமைக்காகத் தரப்படும் ஒன்றாகப் பாவிக்கப்படுகிறது. அச்சிறுவன் மீது காட்டும் அவமரியாதையும் வெறுப்புணர்வும் எப்படி ஈழத்தில் கல்வியும் ஓர் அதிகாரமாக செயல்படுகிறது என்பதை உணரமுடிகிறது.

மேலும் சிறுவனின் ஆசிரியர் பிற உயர்த்தர மாணவர்களின் மீது காட்டும் தனி கவனத்தையும் சழுகைகளையும் அவன் முன் வைத்து காட்டி வெறுப்பேற்ற முயல்கிறார். அதன் மூலம் அவன் ஆசிரியர் மீது நேசமற்றுப் போகிறான். மேரிமாதாவை நேசிக்க முடிந்த அளவிற்கு அவனால் தன் வகுப்பாசிரியரை நேசிக்க முடியாமல் போனதன் தோல்வியை ஒப்புக்கொள்கிறான். மேலும் இக்கதையில் வகுப்பறையில் இருக்கும் யேசுநாதரின் ஓவியத்தைப் பற்றி குறிப்பிடுகையில் அந்த ஓவியத்துக்குக் கீழ் உள்ள வாசகம் அதிகமாகக் கவனப்படுத்தப்படுகிறது என்பதாக அந்த வாசகம் தொழிலாளர்கள் என்னும் அடையாளம் அந்த தேசத்தின் உழைக்கும் மக்களின் அழைப்பாகும், ஆனால் வகுப்பிற்குள் நுழையும் ஆசிரியர்கள் அதற்கான அர்த்தம் சொல்வார்களே தவிர அதைக் கடைப்பிடிப்பதில்லை என அச்சிறுவன் கூறுகிறான்.

ஆசிரியர் கரும்பலகையில் போடும் ஒரு கணக்கின் பிழையைக் கண்டறியும் அச்சிறுவன் அதனைச் சொல்ல முடியாமல் தவிக்கிறான் தன்னை ஆசிரியர் மேலும் வெறுத்து அவமானப்படுத்தி விடுவார் என்று பயப்படுகிறான். உடனே கையை உயர்த்தி அப்பிழையைச் சுட்டிக்காட்டும் அவனை ஆசிரியர் "போயும் போயும் சிரைக்குப் போகிற உனக்குப் படிப்பு எதுக்குடா" (தீண்டதகாதவன் பக்.78) எனச் சொல்லி அவனைக் கண்டிக்கிறார். தலித் பையனாகப் பிறந்தததற்காக அவன் அப்படி ஒதுக்கப்பட்டு நடத்தப்படுகிறான். கல்விக்கும் சாதிக்கும் என்ன தொடர்புண்டு? கல்வி நிறைந்த சமூகம் எப்படிச் சாதிய வேறுபாட்டால் பிளவுண்டு கிடக்கின்றது. கதையில் தப்புக் கணக்கைச் சரிப்படுத்தியவனின் எதிர்காலம் தப்புகணக்காகி போவதைப் பார்க்க முடிகிறது.

தலீத் மக்கள் ஆதிக்கச் சாதியினரால் துன்புறுத்தப்படுவதற்குத் தக்க காரணம் ஏதுமில்லை சாதியால் தான் என்பதை வெளிக்காட்டுகிறது.

துணை நின்ற நூல்கள்

1.	சுகன்.	2007	தீண்டத்தகாதவன் ஈழத்து தலித் சிறுகதைகள் மாலிகாபுக்ஸ்.
2.	அந்தோணி குருசு. ஆ.	2003	தலித்தியக் கருத்தாடல்கள் ஸ்ரீ செண்பகா பதிப்பகம் சென்னை.
3.	சதாசிவம் மற்றும் பலர்.	2014	தமிழச் சமூக மரபும் மாற்றமும் செம்மூதாய் பதிப்பகம். சென்னை.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

திருவாசகத்தில் மாணிக்கவாசகரின் பக்திநெறி

Norms of Bhakthi in Manickavasakar's *Thiruvasakam*

ப.மகேஸ்வரி, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 8

Abstract

The paper finds out the norm of Bhakthi (Devotion) in the great Saivam Poet Manikavasakar's "Thiruvasakam". There is a saying by G.U. Pope as "If no one melts on the verses of "Thiruvasakam", the one won't be melted for any sort of emotion"(Trans- Prof. Vinoth). Bhakthi is a moral virtue in a Hindu's life. He should be of pure in his dedication. Saiva sect is an age old one and the mother of Hinduism and for many religions of the world. Lord shiva is the primodal God of the sect. He is called as 'Eesan' in Tamil and the name resonates in many major religions. Manickavasakar is a spiritual luminary who redeemed the salivate religion in the Buddhist and Jain influenced Tamil Nadu. The verses of "Thiruvasagam" is an epitome of ultimate surrender to the almighty Shiva. Manickavasakar surrendered his soul completely to lord Shiva and is the out come of Bhakthi tradition in spiritual elevation in Tamil Nadu. Hence, this article focuses the norms of bhakthi related to the concept.

Keywords: Norms of Bhakthi, Manickavasakar's *Thiruvasakam*, Saivam Sect, Hinduism

முன்னுரை

பக்தி என்பது வரம்பில்லாத அன்பினால் உண்டாவது, கடவுளிடம் மனிதனுக்கு ஏற்படும் அன்பே பக்தி எனப்படுகிறது கடவுளும் மனிதனும் ஒருவருக்கொருவர் தம் உள்ளத்து அன்பால் ஐக்கியமாகதே பக்தி என்று கூறப்படுகிறது. என்று முனைவர் கோபாலன் குறிப்பிடுகிறார். இதையே இறைவனைக் குறித்த மெய்யடியார் உள்ளத்தில் நிகழும் பேரன்பு பக்தியாகும் என்று பக்தியைப் பேரன்புக்கு நிகராக மு.கிதிரேசச்செட்டியர் கூறுகிறார். இது ஒரு உணர்வு நிலையாகும். இது நம்பிக்கை, விருப், காதல், ஒருமுகநோக்குடைய பற்றுறுதி ஆகியவற்றின் தொகுதியாகும். மதநிலை நின்று நோக்கும் போது, இது தெய்வத்தின்பாற் கொள்ளப்படும் மனோநிலையாகும் (An attitude towards God) என்று பக்தியைப் பற்றிச் சொல்நிலை விளக்கமாக சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளார்.

கடவுளின் மேலான தன்மைகளிலும் குணங்களிலும் அன்பு செலுத்துவதே பக்தியாகும். அவனுடைய அழகில் ஈடுபடுவதும் அதனை மீள நினைப்பதும் வழிப்படுத்துவதே பக்தியாகும். தொண்டனாக, தோழனாக, பெற்றோராக, காதல் கொண்டவராக அவனிடம் அன்பு செலுத்த வேண்டும். தன்னை முழுவதுமாகக் காப்பான் என்ற நம்பிக்கையுடன் தன்னை முழுவதும் அவனிடத்து ஈடுபடுத்திக் கொண்டு அவனுடைய பிரிவினைத் தாள மாட்டாத அன்புடன் இருக்கும் நிலையே பக்தியாகும் என்ற இந்திரா பார்த்தசாரதியின் கூற்றின் மூலம் பக்தியை இறைநிலையில் வைத்துப் புரிந்து கொள்ளுதல் வேண்டுமென்பதைஉணர முடிகிறது. திருவாசகத்தில் காணப்படும் மாணிக்கவாசகரின் பக்தநெறி குறித்தே இக்கட்டுரை பேசுகின்றது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பக்தியின் வகைகள்

ஸ்ரீமத் பாகவத்திலும் வி'ணுபுராணத்திலும் ஒன்பது விதமான பக்திகளைப் பற்றிக் கூறியுள்ளார்கள். இவை முறையே,

1) சிரவணம்
2) கீர்த்தனம்
3) ஸ்மரணம்
4) பாத சேவனம்
5) அருச்சனம்
6) வந்தனம்
7) தாஸ்யம்
8) சக்கியம்
9) ஆத்தும நிவேதனம்

என அமைகின்றன. இவை நவவித பக்தி என்று சமய ஞானிகள் அனைவராலும் குறிக்கப்பெறுகின்றன.

சிரவணம்

இறைவனுடைய கதைகளைக் கேட்பது சிரவணம் கடவுளுடைய திருவுருவம், திருநாமம், நற்குணங்கள், மகிமைகள், கதைகளைக் கேட்பது என்பனவாகச் சிரவணம் தொழிற்பட்டு நிற்கின்றது. இதற்கு நிகராக “ஓர் நாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி, நாம் தெள்ளேனம் கொட்டாமோ” என்கிறார் மாணிக்கவாசகர்.

கீர்த்தனம்

இறைவனுடைய புகழைப் பாடுதல் கீர்த்தனமாகும். புராணக்காலத்து மஹாபுரு'ர்களான நாரதர், வால்மீகி, சுகதேவர் ஆகியோரும் சமீபத்தில் தோன்றிய கௌரங்கர், நானக், துளசிதாஸ், சூர்தாஸ் ஆகிய யாவரும் கீர்த்தன பக்தி மார்க்கம் மூலமே பூரணத்துவம் எய்தினார்கள். பாடும் பணியே பாணியாவருள்வாய் என்ற அருணகிரி பெருமானின் கூற்று வாயிலாக, நீ உன்னைப் பாடும் புகழாகிய பணியை எனக்குத் தொழிலாக அருள் புரிதல் வேண்டும் என்று முருகனிடம் கோருவது புலனாகிறது. இதுவே கீர்த்தனை பக்தியாகும் இதனையே,

“மண்சுமந்து கூலி கொண்டு, அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி - பாடுதும் காண் அம்மானாய்”

என்று மாணிக்கவாசகரும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்மரணம்

ஸ்மரண பக்தியைச் சிந்தனைப் பக்தியென்று கூறுவர். செவியால் கேட்ட இறைவனின் நாமங்களை வாயார வாழ்த்தி, வழிபட்டு, மனதால் நினைந்து உருகுவது ஸ்மரணபக்தி எனப்படும் இறைவனை மீண்டும் மீண்டும் நினைப்பது ஸ்மரணம் எனப்படும்.

“நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!”

என்று மாணிக்கவாசகரும் ஸ்மரண பக்தியைத் தம் படைப்பில் பாடியுள்ளார்.

பாத சேவனம்

பாத சேவனம் என்பதற்கு இறைவனின் திருவடியை வணங்குதல் என்று பொருள். ஞானமார்க்கத்தில் முடிக்கும் பெருமையும், பக்தி மார்க்கத்தில் அடிக்கும் பெருமையும் கூறப்பெற்றிருக்கின்றன. இறைவனுடைய திருவடிக்குத் தாமரை உவமானமாகக் கொண்டிருக்கிறது. தாமரையில் நான்கு குணங்கள் இருக்கின்றன.

1) கோமலம்
2) சீதலம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

3) நறுமணம் (சுரபி)
4) ரசமயம் என்பவனாகும்.

இந்நான்கு குணங்களும் இறைவனது திருவடியில் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றன.

பகவானுடைய கோமலம் என்பது அஃதாவது மிருதுவான திருவடிக்குப் பணி செய்கின்ற போது நம்முடைய கடினமான உள்ளம் மிருதுத் தன்மையடைகிறது. இறைவனுடையகுளிர்ந்த திருவடிக்குப் பணி செய்கின்ற போது நம்முடைய துக்கத்தினால் கொதிக்கப்பட்ட உள்ளம் குளிர்ச்சியினை அடைகின்றது.

இறைவனுடைய பரிமளகந்த திருவடிக்கும் பணியாற்றும் போது நற்குணங்கள் நிறைந்த உள்ளமாகின்றது. இறைவனுடைய ரசமய திருவடியைச் சிந்தனையாய் சார்ந்து பக்தி இரசத்தால் நிரம்பப்படுகிறது என்று விளக்கப்படுகிறது. இவ்வாறு பகவானுடைய திருவடிச் சேவனத்தால் எல்லாச் செல்வங்களும் உண்டாகின்றன. எனவே திருவடியை வணங்க வேண்டும் என்பது பொருள். மாணிக்கவாசகரும்,

"ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னர் அடி போற்றி!"

என்பதால் இறைவன் குறித்த இவர்தம் திருவடி வணக்கத்தை அறிய முடிகிறது.

அருச்சனம்

அருச்சனம் என்பது இறைவனை மலர்களால் பூசிப்பது ஆகும்.அர்ச்சனம், ஆராதனம், வழிபாடு, இரைஞ்சுதல் என்பன ஒரு அபாருட் சொற்கள் பகவானைச் சேவிப்பது அர்ச்சனை ஆகும். உருவம் அல்லது படம் அல்லது மனோவடிவம் மூலமாக வணக்கத்தைச் சாதிக்கலாம். பூசையின் போது படைக்கப்படும் உணவு பகவானால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பக்தியின் உணர்ச்சிக்குத்தான் பகவான் முக்கியத்துவம் கொடுக்கின்றான். வழங்கப்படும் நைவேத்யம் பொருள்களுக்கல்ல இலைகள் நீர் இவற்றைக் கூட சமர்பித்து திருப்திப்படுத்தலாம். கண்ணப்பரின் பக்திநெறி இதற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

வந்தனம்

வந்தனம் என்பது வணங்குதல் ஆகும். கடவுளின் முன்பாக உடம்பின் எட்டு அங்கங்களும் பூமியைத் தொடும் வண்ணம் வணங்குதல் (சா்'டங்க நமஸ்காரம்) எனப் பொருள்படுகிறது. இறைவழிபாட்டில் வந்தனைப் பக்தி என்பது தலை சிறந்ததாகும். வந்தனை, பணிதல், வணக்கம், பரவல், இறைஞ்சுதல், தாழ்தல் என்கிற இவை எல்லாம் ஒருபொருட் சொற்களாகும்.

"சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரேன் கழல் வெல்க!"

என்கிறது சிவபுராணம். இருகைகளும் குவிய வணங்குவது அன்பர் தம் தொழில், அங்ஙனம் நினைத்துக் களிப்படையுமாறு இறைவன் திருவடிகளை வணங்கிச் சிறக்க என்பது சிவபுராணம் பொருள்.

தாஸ்யம்

ஆண்டவனுக்கு அடிமை பூண்டு அன்பு செய்வதே தாஸ பக்தியாகும். மரியாதை, பயம், நேர்மை, பக்தி, அடக்கம், ஒழுக்கம் முதலானவை இதில் அடங்கும். இறைவா! நீ ஆண்டான், நான் அடிமை, நீ நடத்துபவன், நான் நடப்பவன், நீ இயக்குபவன், நான் இயங்குபவன். நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோவிதற்கு நாயகமே என்று மாணிக்கவாசகப் பெருமான் கூறுகிறார். அடிமை பூண்டுஒழுகும் பக்தியில் தான் இறைவன் விரைந்து அடியவரைத் தடுத்தாட் கொள்கிறான் என்று தாஸபக்தியின் உட்பொருளாகும்.

சக்கியம்

இறைவனைத் தோழனாகக் கருதி பக்தி செய்வது, பீமசேனன் குசேலர்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

ஆகியவர்களெல்லாம் வி'ஷ்ணு பகவானுக்குத் தோழர்கள். சிவபெருமானுக்குச் சுந்தர மூர்த்தி தோழமைப் பக்தராவார். மாணிக்கவாசகரும் இறைவனைத் தோழா என்று விளித்துள்ளார்.

ஆத்தும நிவேதனம்

ஆத்துமாவைப் பகவானுக்கு அர்ப்பணித்து விடுவது ஆத்மநிவேதனமாகும். முதற்பக்தி சிரவண பக்தி, இறுதிபக்தி ஆத்தும நிவேதன பக்தி. இவை இரண்டுக்கும் முக்கிமான தொடர்புண்டு. இறைவனின் நாமத்தைக் கேட்பவர் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து விடுவர்.

"உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்
பேர் வேண்டேன்"

என்று எல்லாவற்றையும் விடுத்து, உடல், உள்ளம், உயிர் உள்பட அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணித்தல், இதனைச் சுயச்சரணாகதி என்றும் கூறுவர் இதுவே நிரந்தரப் பக்தியாகும். மேற்சொன்ன ஒன்பது வகை பக்திகளில், தனக்குப் பொருத்மான ஏதாவதொரு பக்தியினைக் கடைப்பிடிப்பதன் மூலம் இறைவனின் திருவருளைப் பெறலாம் என்பது காணக்கிடைக்கும் உண்மையாகும். திருவாசகம் முழுவதிலும் சிரவணம் முதலான ஒன்பது பக்தி வகைகளும் விரவிக் கிடக்கின்றன.

அன்பு நெறி

மாணிக்கவாசகர் இறைவனிடம் காட்டும் நெறி அன்பு நெறி. அன்பு என்ற சொல்லுக்குப் பக்தி, காதல் முதலான பொருளும் உண்டு என்று முன்னர்க் கூறப்பட்டுள்ளது. அன்பு காதல் என்ற இரண்டு சொற்களும் திருவாசகம் முழுவதும் பக்தியைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அன்பினால் உருகுதல்

மாணிக்கவாசகர் இறைவனிடம் தன்னுடைய அன்பை மட்டுமே வெளிப்படுத்துகிறார் அன்பினால் அவனை அடையாளம் என்ற உறுதியில் தன் அன்பைக் காட்டி சிவனுடைய அன்பினை வேண்டி உருகுகின்றார்.

"கலந்த அன்பு ஆகி, கசிந்து உள் உருகும்"
"உலையா அன்பு என்பு உருக ஓலம் இட்டு"
"புகவே தககேள் உனக்கு அன்பருள், யான்"
"அகம் நெகவே புகுந்து, ஆட்கொண்டான்,
அன்பு கூர"
"என்பு நைந்து உருகி, நெக்கு - நெக்கு ஏங்கி
அன்பு எனும் ஆறு கரை அது புரள"

என்று எலும்புகள் நைந்து போகும் அளவுக்கும் பெருகி உருகி அருளன்புடன் வழிபடுகின்றார்.

அன்பினைத் திருவடிக்கே செலுத்துதல்

அன்பினை இறைவனின் திருவடிக்கே அவர் செலுத்துகிறார்.அவனது மலரடி தொழுதலும் பற்றற்றான் பற்றினைப் பற்றுவதாகவும் மணிவாசகங்கள் அமைகின்றன.

"என்னை ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவது ஆவதும்"
"புணர்பது ஆக, என்று இது ஆக
அன்பு நின் கழல் கணே"
"உன்தான் இனை அன்புக்கு
ஆரோ அடியேன்"
"நின் கழற்கு அன்பு அது என் கணே"

திருவடிக்கு அன்பு செலுத்தினால் வீடுபேறு உறுதி என்பதால் அவருடைய அன்பு திருவடியை நோக்கி அமைந்துள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பக்தர்களை அன்பர் என்றழைத்தல்

இறைவனுடைய அருளை வேண்டுபவர்கள்பக்தர்கள் மாணிக்கவாசகர் அவர்களை அன்பர் என்றே என்றழைக்கிறார்.

"அன்பருக்கு அன்பனே"
"கொள்ளும் கில், எனை அன்பரில் கூய்ப்பணி"
"தீர்ந்த அன்பாய அன்பருக்கு
அவரினும், அன்பே போற்றி"
"அரைசனே! அன்பர்க்கு அடியேனேன் உடைய"

என்று பக்தர்களை அன்பர் என்று சுட்டுவதற்கு தன்னையும், நாதனே! நான் உனக்கு ஓர் அன்பேன் என்பேன் என்கிறார் தானும் இறைவனின் அன்புக்கு அனைவானவள் என்றும் கூறுகிறார்.

முடிவுரை

"நாயிற் கடையாயக் கிடந்த அடியேற்கு
தாயின் சிறந்த தயாஆன தத்துவனே"

என்னும் வாசகங்களால் புலப்படுத்துகிறார். இவ்வளவு தான் என்று தோன்றாக எல்லையற்ற பெருமையை உடையவனே என்று இறைவனின் பெருமையைப் பேசுகிறார் மாணிக்கவாசகர். தனக்குவமை இல்லாதவன் என்று வரையறை செய்த வள்ளுவரின் தாக்கம் வாதவூராருக்குண்டு. திருவாசகம் முழுவதிலும் இறைவனின் பெருமை பேசப்படுகிறது. இருப்பினும், பெருமை பேசுதல் என்பதையே பொருளாகக் கொண்டு முதல் பதிகமான சிவபுராணத்தை அமைத்திருக்கிறார். மேற்கண்ட இறைப்பெருமைகள் சிவபுராணத்துள் சிறப்பிடம் பெறுபவை. இறைவனின் பெருமை பேசுதல் என்பது பக்தியின் தனிப்பெருங் கூறானதை இதனால் அறியலாம்.

"நெல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுபத்து ஆனந்தம் ஆக்கியதே எல்லை
மருவாநெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்"

துணை நின்ற நூல்

1. மாணிக்கவாசகர். *திருவாசகம்.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நாட்டுப்புறவியல் தோற்றமும் வளர்ச்சியும்

The Origin and the Development of Folk Literature

இரா.மணிகண்டன், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்,
தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி-(தன்னாட்சி), சென்னை -600 005.

Abstract

The paper traces the origin and development of Folk Literature in Tamil Nadu. Basically, Tamil Folk culture is categorized into four types. They are Folk Literature, Folk Art, Folk Beliefs, Customs, Ceremonies and Folk Dialogues. In them, there are many types of songs. They are Thalattu (Lullaby), Oppari (Lamentation or Elegy), Children Songs, Dances, Occupational Songs, Marriage Songs and the song of the Gipsies. Hence, this article focuses origin and development of Folk Literature.

Keywords: Origin and Development, Folk Literature, Tamil Nadu

தோற்றம்

நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் பாடல்கள், அந்தந்தப் பகுதி மண்ணுடன் வளர்ந்து வளம் பெற்றவை. இப்பாடல்கள் எளியவை. இனியவை, நாட்டுப்புற மக்களிடையே தொன்று தொட்டுக்காலம் காலமாக வழக்கில் வழங்கி வருபவை. இப்பாடல்கள் என்று தோன்றியன என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாதவை. இவற்றின் பொருள், ஆழம்மிக்கவை, நாட்டார் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், ஏட்டில் எழுதா இலக்கியம் என்ற நிலையிலிருந்த இன்று நாட்டுப்புறப்பாடல்கள் என்னும் பெயரே நிலைத்துவிட்டது.

1812-ல் ஜெர்மனியில் கிரிம் சகோதரர்கள் நாட்டார் கதைகளைத் தொகுத்து ஆராயத் தொடங்கினர். தமிழ்நாட்டில் பீட்டர் பெர்சிவெல் 1820-ல் பழமொழிகளைத் தொகுக்கத் தொடங்கினார். 19 ஆம் நூற்றாண்டினரான ஆங்கிலேய அறிஞர் வில்லியம் ஜான்தாமஸ் ‘Popular Antiquities” என்ற இலத்தீன் பதத்திற்கு மாற்றீடாக ‘Folk-Lore’ என்ற ஆங்கிலத் தொடரை உருவாக்கினார். பின்னர் படிப்படியாக 20ஆம் நூற்றாண்டில் வழக்காற்றியல் வளர்ச்சியடைந்தது.

வளர்ச்சி

1960களில் நாட்டுப்புறவியல் தமிழியல் ஆய்வுலகில் தன் முக்கியத்துவத்தினை நிலைநாட்டியவர் நா.வானமாமலை. இவர் தமிழனர் நாட்டுப் பாமரர் பாடல்கள் என்னும் நூலை வெளியிட்டார். இவர் எழுதிய ‘Studies in Tamil Folk Literature” என்னும் நூல் இவருடைய ஆய்வுக்குச் சிறந்த சான்றாகும். 1970களில் கல்வித் துறையில் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் நிகழத் தொடங்கின. சியாமளா, ஆறு.அழகப்பன், கே.பி.எஸ்.அமீது ஆகியோர் எம்.லிட் பட்டங்களுக்காக நாட்டுப்புற வழக்காறுகளை ஆராய்ந்தனர். பா.ரா.சுப்பிரமணியன் பி.எச்.டி. பட்டத்திற்கான முதல் ஆய்வினைச் செய்தார்.

வி.மி.ஞானப்பிரகாசம், க.ப.அறவாணன் (1974) ஆகியோர் பதிப்பித்த நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள் என்னும் நூல் நாட்டுப்புற இலக்கியங்களின் பரப்பு பற்றியும் நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் குறித்தும் தெளிவுபடுத்தியது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தொடர்ந்து வெளிவந்த சு.சண்முகசுந்தரம் (1975). தெ.லூர்து (1976.1981). சு.சக்திவேல் (1976, 1983), சரசுவதி வேணுகோபால், மு.இராமசாமி (1976), ஆறு. இராமநாதன் (1979, 1982) ஆகியோரின் நூல்கள் நாட்டுப்புறவியலின் பரப்பினையும் கள ஆய்வு முறைகளையும் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தின.

இன்றைய நிலை

1980, 90களில் நாட்டுப்புறவியல் துறை வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக இத்துறை ஆய்வாளர்களிடம் வரவேற்பினைப் பெற்று வருகின்றது. நாட்டுப்புறவியல் குழடமடழசந என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் Folklore என்ற வார்த்தையை வில்லியம் ஜான் தாமசு (William John Thomas) என்ற ஆங்கிலேயர் முதன் முதலில் 1846-ல் உருவாக்கினார். வாய்மொழி இலக்கியம் உலகப் பொதுமையல்லாத எழுதப்பட்ட இலக்கியத்தோடு முரண்பட்டது". என்று நாட்டுப்புறவியல் பற்றி ஆலன்டான்டி குறிப்பிடுகிறார்.

Folklore என்ற சொல் முதலில் வழக்காறுகளைக் குறிக்கப்பயன்பட்டது. பின்னர் வழக்காறுகளையும் வழக்காற்றைப் படைப்போரையும், அதனைப் பற்றி படிக்கும் ஆய்வுக் கல்வியாகிய அறிவியல் துறையையும் குறிக்கப் பயன்பட்டது. தற்காலத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்காறுகளை Folklore குறிக்கிறது. Folk என்பதை நாட்டார் என்னும் சொல்லால் அழைப்பர். Folk என்பதற்கு நாட்டார் என்ற சொல் மிகப் பொருத்தமான ஒன்றாகும். நாட்டார் கூட்டம் என்று மக்கள் வழக்கிலும் காணப்படுகிறது. நாட்டார் என்ற சொல் ஓர் இனம்கககளைக் குறிக்கும் சொல்லாகவும் வழக்கத்தில் இருக்கிறது. இச்சொல் படித்த படிக்காத மக்கள் அனைவரையும் குறிக்கும். Lore என்பதற்கு வழக்காறு என்ற சொல் பொருத்தமானதாகும். வழக்காறு என்ற சொல்லியல் வாய்மொழி (Oral) வழக்கிலுள்ள பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் போன்றவற்றையும் அடக்கலாம். Folklore ன்பதற்கு தெ.லூர்து இவ்வாறு விளக்கம் தந்துள்ளார். நா.வானமாமலை நாட்டார் என்பவர்கள் உழைக்கும் கிராம விவசாயிகள் என்கிறார். 'ஒரு நாட்டின் நிலவியல் சூழ்நிலைக்கேற்பவே அந்நாட்டின் நாட்டுப்புறவியல் கருத்துக்கள் அமையும்" என்று ரிச்சர்டு எம். டார்சன் கூறுகின்றார்.

நாட்டுப்புற இயலின் வகைகள்

நாட்டுப்புற இயலின் பரப்பெல்லையானது மிக விரிந்தது. அதனை ஐந்து வகையாகப் பிரிக்கலாம்.

1. நாட்டுப்புற இலக்கியம் (Folk Literature)
2. நாட்டுப்புறக் கலை (Folk Art)
3. நாட்டுப்புற மக்கிளன் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள்.
   சடங்குகள் (Folk Beliefs, Custom, Ceremonies)
4. நெசவு, பாண்டம் வனைதல் போன்ற கைத்தொழில்கள் (Weaving, Pottering, etc.)
5. குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் வரும் நாட்டுப்புற மக்களின் உரையாடல்கள் (Folk Dialogues) என்பவைகளாகும்.

நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்புற இலக்கியமானத நாட்டுப்புறப்பாடல் (Folk Song). நாட்டுப்புறக் கதை (Folk Tale). விடுகதை (Riddle). பழமொழி (Proverb) என்ற நான்கு பெரும் பிரிவுகளுள் அடங்கும். நாட்டுப்புறப் பாடல்களைக் கதைப் பாடல் போன்ற தொடர் நிலைப் பாடல்கள் (Native Poems) என்றும் தாலாட்டு, ஒப்பாரி போன்ற தனிநிலைப் பாடல்கள் (Lyric Poems) என்றும் தாலாட்டு,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஒப்பாரி போன்ற தனநிலைப் பாடல்கள் (Lyric Poems) என்றும் இரண்டு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்.

> 'பண்டைக்கால மக்கள் தங்கள் சூழ்நிலையில் காண்பனவற்றை யெல்லாம் விளக்க முயன்றதன் பயனாகவே பெரும்பாலும் நாட்டுப்புற இலக்கியம் எழுந்தது என்று தமிழ் கலைக் களஞ்சியம் குறிப்பிடும்.''

நாட்டுப்புறப் பாடல்கள்

நாட்டுப்புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்கள் ஆகும். இப்பாடல்கள் வாழ்வியலை. வெளிக்காட்டுகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரை தாலாட்டு முதல் ஒப்பாரி வரை பல்வேறு வகையான பாடல்கள் மக்களால் பாடப்பட்டு வருகின்றன. இப்பாடல்கள் மக்கள் மனதினை கொள்ளை கொள்வனவாய் அமைந்துள்ளன. இன்பத்தில் தன்னையே மறந்தும், துன்பத்தில் தன் துயரத்தினை நினைத்தும், பாடல்களைப் பாடுகின்றனர். இப்பாடல்கள் வாழ்விற்கு ஒளிகாட்டும் விளக்குகளாகக் காணப்படுகின்றன.

> 'கள்ளங் கபடமற்ற வெள்ளை உள்ளங்களிலிருந்து இயற்கையாகப் பிறக்கும் உணர்ச்சி அமுதங்கள். கிராமங்களில் வாழும் சாதாரண மக்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உள்ளதை ஊஞ்சலாட விடுவார்கள். துன்பமாக இருந்தாலும் அவர்கள் மனம் துடிக்கும்: தயருறும்: கண்ணீர் சிந்தும். இன்பமாக இருந்தால் அவர்கள் இயதம் துள்ளிக் குதிக்கம். களிப்புறும்: கலகலவெனச் சிரிக்கும். இந்த உணர்ச்சிகள் எல்லாம் ஊமை நாடகங்களாக முடிந்து விடுவதில்லை. பாட்டுருவில் வெளியில் பறந்துவிடும்.''

நாட்டுப்புறப் பாடல்கள் சாதாரண, எழுத்தறிவில்லாத மக்களின் இதயத்தில் உணர்ச்சி பொங்க அது பாட்டாகப் பெருகி வருவதுண்டு. மக்களின் இன்பம், ஏக்கம், காதல், வேதனை, துன்பம் ஆகியவை வாழ்வோடு கலந்த நிலையினைப் இப்பாடல்கள் தெரிவிக்கின்றன. சமூகத்தின் அறை கூவல்கள் வெளி உலகிற்குக் கூறுவனவாக உள்ளன.

> 'நாட்டுப் பாடல்கள் கிராமப்புற வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புள்ளவை. கதைப் பாடல்கள் தவிர மற்ற பாடல்கள் நாட்டுபற்று வாழ்க்கையின் அன்றாடச் சம்பவங்களையே பொருளாகக் கொண்டவை. இதனால்தான் வாழ்க்கையின் சாதாரண சம்பங்களான பிறப்பு, குழந்தைப் பிறப்பு. குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள், விளையாட்டுகள், காதல், பொருந்தாமணம், குடும்ப விவகாரங்கள், கிராமத் தொழில்கள், பஞ்சம், கிராம தேவதைகள் முதலியனவே நாட்டுப் பாடல்களின் பொருளாக அமைந்துள்ளன. ஆனால் இவற்றுள்ளும் சமூக அமைப்பின் தன்மையும். ஆதனால் தனி மனிதனின் உணர்வில் ஏற்படும் சிந்தனைகளும் வெளியாகத்தான் செய்கின்றன.''

என்பார் நா.வானமாமலை.

இயற்கையின் இனிய நறுமணத்தினை நாட்டுப்புறப் பாடல்களில் நுகர்ந்து இன்பம் பெற முடிகிறது. நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் வாழ்க்கைக் கூறுகளைப் பிரதிபலிப்பனவாகவும் துன்பநேரங்களில் துயர்தீர்க்கும் மருந்தாகவும் காணப்படுகின்றன. 'நாட்டுப்புறப் பாடல்கள் மக்களின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும், உள்ளத்து உணர்வுகளையும் வெளிப்படுத்தும் இலக்கியவடிவம் என்று கொள்ளலாம். இப்பாடல்களை ஆராய்வத இம்மக்களின் சமூக வாழ்வியலை உளவியலையும் ஆய்வதாகும்.

தொழிற்களங்களில் வேலையின் களைப்புத் தெரியாமல் இருக்கக் காதல் உணர்வு ததும்பிய தெம்மாங்குப் பாடல்களைப் பாடி மகிழ்கின்றனர். இப்பாடல்கள் மக்களின் மனதில் உற்சாகத்தையும் உத்வேகத்தையும் எழுப்பி விடுகின்றன. இப்பாடல்களில் கேலியும் எள்ளலும் காணப்படுகின்றன. சமூக வாழ்வின் நிகழ்வுகள் பாடல்களாகத் தோற்றம் பெறுகின்றன.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பாடல்களின் பகுப்பு முறை

ஆறு.அழகப்பன் பாடல்களை ஆறுவகையாகப் பகுத்துக் கூறுகிறார்.

1. குழந்தைப் பாடல்கள்
2. பக்திப் பாடல்கள்
3. தொழிற் பாடல்கள்
4. கொண்டாட்டப் பாடல்கள்
5. உணர்ச்சிப் பாடல்கள்
6. பன்மலர்ப் பாடல்கள் என்பனவாகும்.

சு.சண்முக சுந்தரம் நாட்டுப்புறப் பாடல்களை ஏழுவகையாகப் பகுக்கின்றார்.

1. தாலாட்டு
2. ஒப்பாரி
3. சிறுவர் பாடல்கள்
4. நடனப் பாடல்கள்
5. தொழிற் பாடல்கள்
6. மணப் பாடல்கள்
7. நாடோடிப் பாடல்கள் என்பவைகளாகும்.

கடையநல்லூர் வட்டாரத்தில் கள ஆய்வின் போது சேகரித்த பாடல்களை ஆறுவகைப் படுத்தலாம்.

1. தாலாட்டுப் பாடல்கள்
2. சிறுவர் விளையாட்டுப் பாடல்கள்
3. தெம்மாங்குப் பாடல்கள்
4. வழிபாட்டுப் பாடல்கள்
5. திருமண வாழ்த்துப் பாடல்கள்
6. ஒப்பாரிப் பாடல்கள்

தாலாட்டுப் பாடல்கள்

குழந்தையைத் தூங்கச் செய்வதற்காகத் தாய்பாடும் பாட்டு தாலாட்டு ஆகும். தால் என்பது நாக்கு. நாவினை ஆட்டிப்பாடுவதால் தாலாட்டு எனப்பட்டது. தாலாட்டினை ராராட்டு, தாராட்டு. தொட்டில் பாட்டு, ரேரராட்டு என்று பல்வேறு பெயர்களில் கூறுவதுண்டு.

தாலாட்டினைத் தாய் மட்டுமல்லாமல் பாட்டி, அத்தை, பெரியம்மா போன்ற குடும்ப உறவினர்களும் பாடுவர். குழந்தை தூங்கும் வரை இப்பாடல்கள் நீண்டு கொண்டே செல்லும். குழந்தையின் அழுகையை இப்பாடல்கள் நிறுத்தி, உறங்கச் செய்கின்றன.

இத்தாலாட்டில் குழந்தை வருணை, தெய்வக் கதைகள் இடம் பெறும். தாயின் அன்பு குழந்தைக்காக ஏங்கிய நிலை, குழந்தையின் எதிர்காலக் கனவு. விற்பனை கலந்து பாடலாகப் பாடப்படுகின்றன. தாய்மாமன் குழந்தைக்குக் கொண்டு வரும் பொருள்கள் பெருமையாகப் பாடப்படுகின்றன.

சிறுவர் விளையாட்டுப் பாடல்கள்

குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் தனியாக இருக்க விரும்புவதில்லை. தன்னை ஒத்த சிறுவர்களோடு கூடி விளையாடுவதைப் பெருமையாகக் கொள்கின்றனர். குழந்தைகள் சேர்ந்து விளையாடும் போதும், பிறரைக் கேலி செய்யும் போதம் பாடல்களைப் பாடுகின்றனர்.

குழந்தைக்காகப் பெரியவர்கள் பாடல்கள் பாடுவதும் உண்டு. குழந்தைகள் மீது அன்பும் அக்கறையம் கொண்டு அவர்களுக்காகப் பாடல், கதைகள் போன்றவற்றைத் தாத்தா பாட்டி பாடுகின்றனர். இப்பாடல்கள் குழந்தையின் மனவளர்ச்சியினையும், அறிவுத் திறனையும் வளர்ப்பவைகளாகவும் இருக்கின்றன.

தெம்மாங்குப் பாடல்கள்

தேன் போன்ற இன்பச் சுவையினைத் தரக்கூடிய பாடல்கள் ஆகையால் தெம்மாங்கு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எனப்படுகிறது. தெம்மாங்கு பாடலைப்பாட குறிப்பிட்ட நேரமோ இடமோ வேண்டியதில்லை. எங்கும், எந்த நேரத்திலும் பாடலாம். காதலன் காதலியைப் பார்த்து பாடுவதாகவும், அவள் எதிர்ப்பாடல் பாடுவதாகவும் அமைந்து காணப்படுகிறது. இப்பாடல்கள் தனிமைத் துயரினைப் போக்குகின்றன. உற்சாகத்தோடு உழைக்கவும். வேலைப் பளுவினை மறக்கவும் இத்தெம்மாங்குப் பாடல்கள் பாடப்படுகின்றன.

நாற்றுநடும் போதும். களை எடுக்கும் போம், கதிரை அறுவடை செய்யும் போதும், அறுவடை செய்த கதிர்களை களத்து மேட்டுக்குச் சுமந்து செல்லும் போதும் காதற்சுவை நிரம்பிய இத்தெம்மாங்குப் பாடல்களைப் பாடுகின்றார். வேளாண்மைத் தொழில்கள் செய்யும் போதும், வேளாண்மை அல்லாத தொழில்கள் செய்யும் போதும் தொழிலோடு சேர்ந்த காதல் பாடல்கள் பாடப்படுகின்றன.

வழிபாட்டுப் பாடல்கள்

தங்களுக்கு நன்மை வேண்டும் போதும். நன்மை கிடைத்தபோது, அந்த நன்மை கிடைத்ததற்காக நன்றி செலுத்தும் போது நாட்டுப்புற மக்கள் தெய்வங்களை வழிபட்டு விழா எடுக்கின்றனர். அப்பொழுது மாரியம்மன், காளியம்மன், அய்யனார், மாடசாமி, கருப்பசாமி போன்ற தெய்வங்களைப் புகழ்ந்து பாடல்களைப் பாடி சிறப்புச் செய்கின்றனர். நாட்டுப்புறமக்கள் பெருந் தெய்வங்களை வழிபட்டாலும், சிறுதெய்வ வழிபாடும் அவற்றினைப் பற்றிய பாடல்களும் அதிகமாகக் காணப்படுகின்றன.

திருமணப் பாடல்கள்

மணவிழாவில் மணமக்களை வாழ்த்தும் பாடல்கள் மணவாழ்த்துப் பாடல்கள் எனப்படும். இவற்றினை வாழ்த்து மணம் என்பர். திருமணப் பாடல்களில் வாழ்த்தும் வசையும் கலந்திருக்கும். திருமணத்திற்கு உறவினர்களைப் பாக்கு வைத்து அழைத்தல், மணமக்களைப் புகழ்ந்தும், இகழ்ந்தும் கேலியாக அவர்களின் உடன் பிறந்தவர்கள் பாடுவர். மணவாழ்த்துப் பாடலில் மணமக்களின் ஒப்பனை, ஊர்வலம், மணப்பந்தல் அழகு, திருப்பூட்டுதல், சீர்வரிசை இடம் பெறுகின்றன.

ஒப்பாரிப் பாடல்கள்

ஒருவர் இறந்த பிறகு அவரது இறப்பைக் குறித்து உறவினர்கள் துயரத்தோடு பாடும் பாடல் ஒப்பாரி எனப்படும். இது பெண்களுக்கே உரிய வழக்காறு ஆகும்.

குறிப்புகள்

1. Alandundas; Oral Literature Cultural Anthropology, P.121
2. Richard M. Dorson; American Folklore, P.16
3. கலைக்களஞ்சியம், தொகுதி இரண்டு, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு. ப.379.
4. ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு .ப.5
5. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், பக்.9-10
6. பழ.முத்தப்பன், நாட்டுப்புற இலக்கியம். ப.2.
7. க.ப.அறவாணன், படைப்பாளி + சமுதாயம; + இலக்கியம், ப.20
8. முத்துச் சணமுகன், தமிழ் இலக்கியக் கோட்பாடுகள், ப.126
9. ஆறு.இராமநாதன், நாட்டுப் புறவியல் ஆய்வு முறைகள். பக்.255-256.
10. மேலவர், மேலது. ப.198.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

உவரி வாழ் பரதவர்களின் பண்பாட்டுக் கூறுகள்

Cultural Traits of the Parathavars of the Uvari Region

மு.மணிமேகலா, முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 8

Abstract

The research paper traces the cultural traits of the fishing people (Parathavars). The people belongs to the Neithal (Costal Region) of the Southern Tamil Nadu. Their customs and their way of life seems to be a significant one in knowing about the life of the fishing community. The paper focuses on the customs like marriage, hospitality, friendship, education and harmony among the religions and so on followed by the Parathavar People. Hence, this article mines out the traits of the sea-faring people.

Keywords: Cultural Traits of the Parathavars, Uvari Region, Tamil Nadu

முன்னுரை

சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம் முதல் இன்று வரை பூமியில் வாழும் ஒவ்வொரு மக்களும், ஒவ்வொரு விதமான பண்பாட்டுக் கூறுகளைப் பின்பற்றி வருகின்றனர். அந்த வகையில் உவரியை இருப்பிடமாகக் கொண்டு வாழும் கடற்கரைத் தொழிலை மேற்கொண்டு வரும் நெய்தல் நிலத்தில் ஒருவரான இப்பரதவ மக்களிடமும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் பொதிந்து காணப்படுகின்றன. மற்ற சமுதாயத்தில் இல்லாத பல்வேறு பண்பாடுகள் காணப்படுகின்றன. மக்கள் பின்பற்றும் பண்பாடுகளை வைத்தே அவனின் குணத்தை தீர்மானம் செய்து விடலாம். அந்த வகையில் உவரி பரதவர்கள் மற்ற சமுதாயத்தில் இருந்து மாறுபட்டு தலைநிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் அவர்கள் மேற்கொள்ளும் பண்பாடுகளே! இக்கட்டுரையானது உவரி வாழ் பரதவர்களின் பண்பாட்டுக் கூறுகளை எடுத்தியம்பி உள்ளது.

இன்றைய உவரி

திருநெல்வெலி மாவட்டத்தில், இராதாபுரம் தாலுகாவில், திசையன்விளைக்கு அருகில், திராவிட மொழிக்கு ஒப்பிலக்கணம் எழுதி உலகத்தார் அனைவரையும் தன்வசம் திரும்பி பார்க்கச் செய்த கால்டுவெல் பெருமான் வாழ்ந்த இடையன்குடிக்கு மிக அருகிலும், பூமிக்கு அடியில் இருந்து சுயமாகத் தோன்றி, இன்று சுயம்பாக வீற்றிருக்கும் சுயம்புலிங்க சுவாமியின் கோவில் அமைந்திருக்கும் நாடார் உவரிக்கும் மிக அருகில் இன்றைய உவரி அமைந்துள்ளது.

முழுக்க முழுக்கப் பரதவர்களை மட்டுமே உள்ளடக்கி, புனித அந்தோணியாரின் ஆசி பெற்று கடலண்னையின் தாலாட்டில் சுற்றுலா தளமாக இயங்கி வரும் அழகிய மீனவ கிராமம் உவரி. "உவரி என்பதற்குக் கடல் என்று பொருள்" என தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. வலம்புரி ஜான் தன்னுடைய உரையில் "உப்புநீர்க்கடலும், உவர்மண் திடலுமாகச் சேர்ந்ததே உவரி" என்று குறிப்பிடுகிறார். உவரி என்பது கலப்பில்லாத தமிழ்ச் சொல் ஆகும். "திருக்குறளிலும், கம்பநாட்டாழ்வார் கவிதையிலும் உவரி என்ற சொல் இடம் பெற்றிருக்கிறது" என்றும் வலம்புரிஜான் குறிப்பிடுகிறார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பண்பாடு விளக்கம்

மனிதன் கூட்டமாகச் சேர்ந்து வாழ்வதற்கு ஒரு பொதுமையான ஒழுக்கத்திற்கான விதிமுறைகள் தேவைப்பட்டது. தான்தோன்றித்தனமாக வாழ்க்கை முறையிலிருந்து கட்டுப்பாடுடைய வாழ்க்கை முறையினை மனிதன் ஏற்படுத்திக் கொண்டான். தொழில்வளர்ச்சி, குடும்பம் என்ற அமைப்பு முறையே பண்பாடு என்ற கட்டமைப்பு உருவாகக் காரணமாக அமைந்தது. இந்தப் பண்பாடு இடத்திற்கு இடம் புவியியற் சூழ்நிலைக்குத் தகுந்தாற் போல் மாற்றம் கொண்டு விளங்கியது. ஒரு சமூகத்தில் காணப்படும் பண்பாட்டின் உட்கூறுகள் வேறொரு சமூகத்தில் மாற்றம் கொண்டு காணப்பட்டது. இது தான் பண்பாட்டிற்கான விளக்கம் என அறுதியிட்டுக் கூற முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, பண்பாடு குறித்து அறிஞர்கள் பலவகையான மாறுபட்ட விளக்கங்களை அளித்துள்ளனர். "பண்பாடு என்பது ஒரு முறையான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி" எனக் கருத்தியலாளர்கள் ஒரு பொது விளக்கம் தருகின்றனர்.

"பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
பண்புக்கு மாய்வது மண்" (குறள். 966)

அன்பு, நீதி, அறம், பிறருக்குப் பயன்படுதல், பிறரோடு இணக்கமாக வாழ்தல், உலகம் வாழ உதவுதல் போன்றவற்றைப் பண்புடைமையின் அடையாளமாக் காட்டுகிறார் திருவள்ளுவர். தொல்காப்பியத்தில் பல இடங்களில் 'பண்பு' என்ற சொல் பயின்று வருகிறது.

"இசையினும் குறிப்பினும் பண்பினுந் தோன்றி" (தொல். ஊயி.நூற். 1. வரி-2)

இதில் 'பண்பு' என்று சொல்லுக்குப் 'பொறியாணுரைப் படுங்குணம்' எனச் சேனாவரையார் பொருளுரைக்கிறார். சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் பண்பு என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" (கலி. 133)

என்று கலித்தொகையில் வரும் 'பண்பு' என்ற சொல்லுக்கு 'மக்கட்பண்பு' என்று சொல்லப்படுவது 'உலகவொழுக்கம் அறிந்தொழுகுதல்' என நச்சினார்க்கினியர் பொருளுரைக்கிறார்.

திருமணமுறை

உவரி மக்கள் பரதவ இனத்தினைச் சார்ந்தவர்களிடம் மட்டுமே திருமணம் என்ற பந்தத்தை வைத்துக் கொள்வர். வேறு எந்த இனத்திலும் பெண் எடுப்பதும் இல்லை, பெண் கொடுப்பதும் இல்லை. 'ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வதே' இவர்களின் தலைசிறந்த பண்பாடாகும். காதல் திருமணம் செய்து கொள்வதில்லை. காதல் திருமணம் செய்து கொள்பவர்களை நடுஇரவு பங்கு ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் போது தலையில் முள் கீரிடத்தை அணிவித்தோ அல்லது கையில் சிலுவையை பிடித்தபடி பாவ மன்னிப்பு பெற்ற பிறகே வீட்டிலும். ஊரிலும் ஏற்றுக்கொள்கின்றனர்.

மனைவி இருக்கும் போதோ அல்லது கணவன் இருக்கும்போது வேறு யாருடனாவது தவறான தொடர்பு வைத்திருக்கும் ஒரு நபர் இறந்துவிட்டால் கல்லறைத் தோட்டத்தில் அவர்களுக்கென்று தனி இடம் ஒதுக்கப்பட்டு அங்கு தான் அடக்கம் செய்வார்கள்.

இல்லறத்தின் சிறப்பு

இந்த குறுந்தொகைப் பாடல் கடல் தொழில் புரியும் பரதவர்களுக்கு ஏற்றுது போன்று அமைந்துள்ளது. இல்லறம் என்ற நல்லறத்தில் ஆண்கள் கடல்தொழில் செய்வதையே உயிராகக் கொண்டுள்ளனர். இல்லறத்தில் காணப்படும் பெண்கள் அவ்வாடவரையே உயிராகக் கொண்டுள்ளனர்.

"வினையே ஆடவர்க்கு உயிரே வானுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்ற பாடல் வாயிலாக இப்பரதவ மக்களின் இல்லற மாண்பு தெள்ளத் தெளிவாக புலப்படுகிறது.

"மனைக்கு விளக்காம் மடவார்"

உவரி மீனவர்கள் வெளிநாடுகளிலும் சென்று மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்றனர். வருடத்திற்கு ஒரு முறையோ அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு முறையோ தான் தன்னுடைய சொந்த ஊருக்கு வருகின்றனர். ஆடவர் திரும்பி வரும் வரை பெண்கள் குடும்பத்தை அவருடைய இடத்தில் இருந்து மனைக்கு விளக்காக இருந்து பெற்ற மக்களைப் பேணி காப்பதோடு மட்டுமல்லாமல், கற்பிலும் தலைசிறந்து காணப்படுகின்றனர்.

சங்ககால மக்களின் இல்லறம் நல்லறமாக நடந்தமை இலக்கியங்களால் அறிய முடிகிறது. பெண்கள் தற்காத்துத் தற்கொண்டாள் பேணி. சொற்காத்துச் சோர்வு இல்லாதவர்களாகக் கற்புக் கடம்பூண்டு இருந்தமை அறிய முடிகிறது.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்று திருவள்ளுவர் கூறுகிறார். காலத்தில் பெய்து காக்கும் மழைக்குச் சமமானவர்களாகக் கற்புடைய பெண்டிர் மதித்து வணங்கப்பட்டனர். அவ்வகையில் இப்பரதவ பெண்களும் கற்புக்கு எடுத்துக்காட்டாக வாழ்கின்றனர்..

விருந்தோம்பல் பண்பு

"விருந்து" என்ற சொல்லுக்குப் 'புதுமை' என்பது பொருள். உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை 'விருந்து' என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்கிறார் திருவள்ளுவர். "அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல், ஆகிய அறங்களைத் தான் செய்யாது விட்டேன்" என்று கண்ணகி வருந்திக் கூறுவதைச் சிலப்பதிகாரம் உணர்த்துகிறது. விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதை வள்ளுவர்,

"விருந்து புறத்ததார் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

என்று கூறுவதிலிருந்து விருந்தோம்பல் சங்க கால மக்களின் பண்பாக இருந்தமை அறிய முடிகிறது. தமிழரின் பண்பாட்டில் விருந்தோம்பல் சிறந்து விளங்குகின்றன. தமிழர்களின் இல்லற வாழ்வின் இயல்பினை அளக்க உதவும் அளவுகோலாக விருந்தோம்பல் திகழ்கின்றது. உண்ணும் உணவு மருந்தே என்றாலும் விருந்தினர்க்கும் கொடுத்துத் தாமும் உண்டு மகிழ்ந்தனர் என்பதை 'மருந்தே மகள் ஆயினும் விருந்தொடு உண்' என்று ஔவையார் எடுத்துரைக்கின்றார். இல்லற மகளிரின் இன்றியமையாப் பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல்.

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் தலைசிறந்த பண்பாடாகும். தன் உற்றார் உறவினர்களை மட்டும் அல்லாது முகம் தெரியாத நபர்களையும் உபசரிப்பதில் இம்மீனவ மக்கள் சிறந்து காணப்படுகின்றனர்.

"கற்றாரை கற்றது உணரார் என மதியார்
உற்றாரை அன்னணம் ஓராமல் - அந்நார்க்கு
உண்டி உறையுள் உடுக்கை இவை ஈந்தர்
பண்டிதராய் வாழ்வார் பயின்று"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பசித்தவனுக்கு உணவு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தவனே படித்தவன் என்ற பெருமதிப்புக்கு உரியவனாவான். அவனுக்கு வானுலகில் சிறந்தபேறு காத்திருக்கின்றன என கணிமேதவியார் தன்னுடைய நூலான ஏலாதியில் குறிப்பிட்டுள்ளனர். இம்மீனவ மக்கள் கல்வியறிவு பெறாத காலத்திலும் அன்னியர்களை இன் முகத்தோடு வரவேற்று அவர்களை உபசரிக்கும் பண்பினைப் பெற்று விருந்தோம்பல் என்னும் பண்பாட்டிற்கு இலக்கணமாய்த் திகழ்கின்றனர்.

நட்பு

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர். திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு".

உள்ளன்புடன் மனம் மகிழ்ந்து நட்பு கொள்வதே உண்மையான நட்பாகுமென்றார். கபிலரும் பறம்பு மலைத்தலைவன் பாரியும் நட்பாயிருந்தனர். பாரியின் மகளிர் இருவரையும் பாரி இறந்தபின் கபிலரே மணமுடித்து வைக்கிறார். மேலும் கபிலர் சேரன் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கண்டு பறம்பு நாட்டின் வளம், பாரியின் சிறப்பு, அவன் வீரம், அவனைப் பிரிந்து வாடும் மக்கள் நிலையைக் கூறுகிறார். தன் வறுமையைக் கூறாது, நண்பனின் பிரிவை சேரமன்னனிடம் கூறும் நிலை அவர்கள் நட்பின் ஆழத்தைக் காட்டுகிறது. கடலாடி தொழில் புரியும் இப்பரதவர்கள் நட்புக்கு உதாரணமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களிடம் உண்மையாக பழகும் நபர்களுக்காக தங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டார்கள். மேலும் இவர்களுக்கும் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நட்பு ரீதியாக உறவுமுறை இருப்பதை காண முடிகிறது.

கல்வியின் சிறப்பு

கடலில் தான் விலை மதிப்புமிக்க முத்துக்கள் பிறக்கின்றன. அதுபோன்று தான் உவரி என்ற கடற்கரையிலும் முத்துக்கள் பிறந்துள்ளன மனிதர்கள் வடிவில். கல்வியறிவு இல்லாத கடலோடு வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த உவரி மீனவர்கள் இன்று உலகமே வியந்து பார்க்கும் அளவிற்கு ஒவ்வொரு துறையிலும் சாதனைகள் புரிந்து கொண்டிருக்கின்றனர். பல்வேறு துறைகளில் சாதித்து பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ள உவரி முத்துக்கள் சிலவற்றை ஆய்வாளர் கூறியுள்ளார்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருற்கு
மாடல்ல மற்றை யவை"

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்பதை உணர்ந்து கொண்ட இம்மக்கள் தாம் படிக்கவில்லை என்றாலும் தம் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பதற்காகப் பிள்ளைகளைக் கல்வி நிலையத்திற்கு அனுப்பினர். அவ்வகையில் கடல் தொழிலில் மட்டுமே ஈடுப்பட்டு வந்த இம்மக்கள் இன்று பல்வேறு துறைகளிலும் சாதித்து வருகின்றனர். இன்று உலகையே தங்களை எட்டிப் பார்க்க வைத்த நபர்களில் இவர்களும் சிலரே!

வலம்புரிஜான்

1946ம் வருடம் உவரி மண்ணில் பிறந்தவர் வலம்புரிஜான். இவர் இலக்கியத் துறையில் மட்டுமல்லாது அரசியலும் திறமையாக செயல்பட்டு தன்னுடைய முத்திரையை பதித்தவர். இவர் எழுதிய முதல் புத்தகம் 'தாய்' என்பதாகும். இவர் இலக்கியத் துறையில் பல நாவல்களையும், புத்தகங்களையும், கவிதைத் தொகுப்புகளையும் எழுதி சாதனை புரிந்துள்ளார். இவர் மறைந்து போனாலும் இவருடைய புத்தகங்களின் எழுத்துக்கள் வாயிலாக இன்றும் மக்களிடையே வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றார்.

ஜோ.டி.குரூஸ்

குறிப்பிட்டத் துறையில் தான் சாதிக்க வேண்டும் என்று இல்லாமல், கால்பதித்த இடங்களில் எல்லாம் சாதித்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் ஜோ.டி.குரூஸ். இவர்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கொற்கை, ஆழிசூல்உலகு போன்ற நாவல்களை எழுதியுள்ளார். கொற்கை நாவல் 2013ம் ஆண்டிற்கான சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளது. ஆழிசூல் உலகு 2004ம் ஆண்டிற்கான சிறந்த நாவல் என்ற பரிசைப் பெற்றுள்ளது.

எஸ்.பி. அந்தோணிசாமி

போதுமான கல்வியறிவு இல்லாவிடினும் தன்னாலும் சாதிக்க முடியும் என்பதை நிருபித்த மீனவர் எஸ்.பி. அந்தோணிசாமி. இவர் தாம் கற்றுக்கொண்ட நாட்டுப்புறக் கலையான களியல் கலையை பிறர் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எழுதிய புத்தகம் தான் "உவரி மீனவர் வாழ்வியல்" என்பதாகும். 25.11.2000 அன்று தமிழ்நாடு அரசு மூலம் களியல் கலைக்காக கலைமாமனி விருது பெற்றுள்ளார். 25.11.2013 அன்று தமிழ்நாடு அரசு மூலம் களியல் கலைக்காக பொற்கிளியையும் பெற்றுள்ளார்.

பவர்சிங்

தாம் தேர்ந்தெடுத்த முறையில் சிறப்பாக பணியாற்றி மற்றவர்களுக்கு உதாரணமாக வாழ்ந்துக் கொண்டிருப்பவர் பவர்சிங். கிட்டத்தட்ட 32 வருடங்களாக பல மாணவர்களின் அறியாமையை அகற்றி அறிவொளியை ஏற்றிக் கொண்டு, ஆசிரியர் பணியில் சாதித்து கொண்டிருக்கிறார். இவரின் இப்பணியை பாராட்டி தமிழ்நாடு அரசு 2011 - 2012ம் ஆண்டிற்கான டாக்டர். இராதாகிரு'ணன் விருதான நல்லாசிரியர் விருதை 5.9.2012 அன்று வழங்கி அன்னாரை சிறப்பித்துள்ளது.

சமய நல்லிணக்கம்

சமங நல்லிணக்கத்திற்கு சிறந்த ஒரு உதாரணமாக வாழ்பவர்கள் இம்மீனவ மக்கள் தாங்கள் வழிபடும் அந்தோணியாரை மட்டுமல்லாது, தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள சுயம்புலிங்கசுவாமி கோவிலில் உள்ள புகழ்பெற்ற வன்னியடி சாஸ்தாவையும் குழந்தை வரம் வேண்டியும், அது நிறைவேறியவுடன் அக்கோவிலுக்கு நேர்த்திக் கடனாகப் பல்வேறு காரியங்களையும் கண்கூடாக காண இயலுகிறது. அதுமட்டுமல்லாது தங்கள் ஊர்த்திருவிழாவிற்கு வெளியூரில் இருந்து வரும் பல்வேறு மதங்கள் மற்றும் ஜாதிகளைச் சேர்ந்த மக்களையும் திருவிழா நடைபெறும் நாட்கள் முழுவதும் தங்களுடைய இல்லங்களில் தங்க வைத்து அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்வதில் இம்மக்களுக்கு நிகர் யாருமில்லை. எந்த சமயம் என்றாலும் அதை பாராமல் மனத்தால் ஒன்றுகூடி இறைவனை வழிபடும் இப்பரதவ மக்களின் சமய நல்லிணக்க பண்பாட்டிற்கு வேறு உதாரணங்கள் கூற இயலாது.

நிறைவாக

பண்பாட்டினைக் காத்து நடக்கும் நம் தமிழக மக்களில் தமக்கென ஒரு பண்பாட்டை உருவாக்கி அதை தலைமுறை தலைமுறையாக பாதுகாத்தும் பேணியும் வருவதில் உவரி பரதவர்களின் செயல்படுவது சாலச்சிறந்தது ஆகும். முகம் பார்த்து பழகும் இக்காலத்தில் எதையும் பார்க்காமல் இல்லை என்று கூறாமல் இன்முகத்துடன் உபசரிக்கும் இவர்களின் விருந்தோம்பல் பண்பிற்கு ஈடு, இணையில்லை இவ்வையகத்தில். கடலாடி பிழைப்பு நடத்தும் இவர்கள் நட்புக்காக உயிரையும் கொடுப்பதில் சந்க காலத்தில் வாழத்தில் வாழ்ந்த அரசர்களுக்கு நிகராக உள்ளனர். திருமணம் முதல் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் இவர்களின் வாழ்க்கையுடனே பண்பாடு கலந்திருப்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

துணை நின்ற நூல்

1. இரா.கனகசுப்புரத்தினம் - *திருக்குறள்,* அறிவுநிதி பதிப்பகம், சென்னை, 1996.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

பழந்தமிழர் வாழ்வியலும் தொழில் முறையும்

Life Manner and Occupation of the Classical Tamil People

ஸ். மார்த்தாள் ஜான்சி,
தமிழ்த்துறை, புனிதவளனார் கல்லூரி, திண்டுக்கல் - 624 304.

Abstract

The research article plans to bring forth the life style, occupation of the Classical Tamil people of the Sangam times. It unfolds the intelligence of the classic Tamil people and list outs the occupation existed at the times. Agriculture, Carpenting, Weaving, and other chores of life. It is a life of all sophistication and decorum in those people's lives. Hence, this article draws out the life mannerisms of the classical Tamil people.

Keywords: Life Manner, Occupation, Classical Tamil People

முன்னுரை

பண்டைய தமிழரின் வாழ்வியல் முறைக்கும் இன்றைய வாழ்வியல் முறைக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. பண்டைக் காலத்தில் இன்னதை இன்னார் தான் செய்ய வேண்டும் என்று வரையறை இருந்தது. இந்த முறையை ஒட்டியே அறிவியல் வளர்ச்சியும் தொழில் நுட்பச் சூழலும் இருந்துள்ளன. அவரவர் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ற வகையில் பழந்தமிழர்கள் தொழில் செய்து வந்தனர். இத்தகைய பழந்தமிழரின் தொழில் முறைகளை விளக்குவதாக இக்கட்டுரைஅமைகிறது.

பழந்தமிழரின் நுண்ணறிவியல் சிந்தனை

விலங்கியலாரே வியக்கும் வண்ணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பல நுண்ணிய உண்மைகளைச் சில வரிகளுக்குள்ளாகவே தமிழ்ப் புலவர்கள் இடம் பெறச் செய்து இருப்பது வியப்பிற்குரியதாகும். தொல்காப்பியம் உயிரினங்களையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றைப் பகுத்தறிந்து எளிய கோட்பாட்டினை உருவாக்கி உள்ளார் என்பதற்கு,

“ஒன்றறிவதுமே உற்றறிவதுவே
இரண்டறிவதுமே அதனொடு நாவே
மூன்றறிவதுவேஅவற்றொரு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே” (தொல் .பொருள் . நூ.எ.571)

எனும் தொல்காப்பிய நூற்பாவின் உயிரினப் பாகுபாடுப் பங்கு பற்றி கூறுகிறார். தொடுதல், நாவினால் சுவைத்தறிதல், மூக்கால் மோந்து பார்த்தல், கண்ணாற்கண்டல், செவியாற் கேட்பது இவை ஐம்பொறியால் அறியும் ஐம்புல அறிவுகள் என்றும், அவற்றுடன் ஆறாவதாகிய மனத்தால் அறியும் உடைய உயிர்கள் மக்கள் என்று கூறுகிறார். இவற்றின் மூலம் தொல்காப்பியர் காலம் தொட்டே அறிவியல் சிந்தனை பழந்தமிழர்களிடம் இருந்தது என்பதை நம்மால் அறிய முடிகிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கைத்தொழில்கள்

மக்களின் வளமானவாழ்வுக்கும் வசதிக்கும் பயன்படும் தொழில்கள் அனைத்தையும் கைத்தொழில்கள் என்று கூறலாம். அவைபயிர்த்தொழில்,நெசவுத் தொழில், தச்சுத் தொழில்,மட்கலத் தொழில்,உலோகத் தொழில் அணிகலன்களைச் செய்யும் தொழில்,தோல் தொழில் போன்றவையாகும்.

பயிர்த்தொழில்

மனித வாழ்வுக்கு அடிப்படையானது உணவு. ஒருவர் சிறந்த பண்பினைப் பெற அடிப்படையாய் இருக்க வேண்டியது வறுமையின்மையாகும். உணவு இல்லையென்றால் பண்பாடு இல்லை என்பதை உணர்ந்து பயிர்த் தொழிலைப் பெருக்கினர். உழவுத் தொழில் உயிர்த் தொழிலாகப் போற்றப்பட்டது. புறநானூறு தமிழரின் வாழ்வியலையும், பயிர்த் தொழிலைப் பற்றிய செய்திகளைப் பல்வேறு நிலைகளில் விளக்கமாகத் தருகிறது. வேளாண்மைக்கு அடித்தளமாக அமைவன நிலமும் நீரும். இவையே உணவுக்கு அடிப்படையானவை என்பதை,

"உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே" (புறம். பா. எ 18)

என்னும் புறநானூற்று அடியில் காணலாம். தமிழர் நிலத்தினை இயற்கை அமைப்பிற்கு ஏற்ப நான்கு வகைகளாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பிரித்தனர். இந்த நால் நிலங்களில் பயிர் தொழிலுக்கு ஏற்ற நிலப்பகுதிகள் நீங்கலாக மற்றவற்றைத் தரிசு நிலமாகக் கால்நடை மேய்ச்சலுக்கு விட்டனர்.

நெசவுத் தொழில்

உணவினை அடுத்துச் சமூகத்திற்கு இன்றியமையாததாக இருப்பது உடையாகும். பண்டைத் தமிழர்கள் தழை, மரநார், பருத்திபட்டு ஆகியன கொண்டு நெய்யப்பட்ட ஆடைகளைப் பயன்படுத்தினர். இவற்றுள் பருத்தியும் ,பட்டும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. பருத்தியிலிருந்து பஞ்சு எடுத்தல் முதல் ஆடை நெய்து முடியும் வரை பல வகையான கருவிகள் பயன்படுத்தப்பட்டமை தெரிகின்றன.

இது பெரும்பாலும் வீட்டுத் தொழில்களில் முக்கியமானதாக இருந்தது. பண்டையத் தொழில் பழமையான ஒன்றாக விளங்கியது. மக்கள் நாகரிகம் அடையத் தொடங்கியதும் கையாண்ட முதல் கைத்தொழில் இது என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. நெசவுத் தொழிலுக்குப் பருத்தி மிகவும் இன்றியமையாத ஒரு மூலப் பொருளாக விளங்கியது என்பதற்குச் சான்றாக

"பருத்தி வேலிச் சீறூர்" (புறம் . பா.எ.299)

"சிறையும் செற்றையும் புடையருள் எழுந்த
பருத்திப் பெண்டின் சிறு தீ விளக்கத்து" (புறம் பா.எ.326)

எனும் புறநானூற்றுப் பாடல் பழந்தமிழர்கள் நெசவுத் தொழில் வல்லவர்களாக இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

தச்சுத் தொழில்

மரத்தை மூலப் பொருளாகக் கொண்டு நடைபெற்று வரும் தொழில் தச்சுத் தொழிலாகும். இத்தச்சுத் தொழில் மிகப் பழங்காலத் தொட்டு நடைபெற்று வரும் தொழிலாகும். மரத்தைக் கொண்டு வாழ்க்கைக்குத் தேவையான மரச்சாமான்கள், வீட்டு உபயோகப் பொருள்கள், படுக்கைகள், உழவுக் கருவிகள் வண்டி போன்றன செய்யப்படுகின்றன.

தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருத்தி இணைப்பதாகும். தச்சுத் தொழில் செய்பவர்கள் கல்தச்சர், மரத்தச்சர் எனவழங்கப்பட்டனர்.

"மரங்கொள் தச்சர் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து" (புறம், பா. எ.206)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எனும் புறப்பாடலில் மரவேலை செய்யும் தச்சர்கள் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் யானைகள் மோதினாலும் விழாத வண்ணம் கணைய மரத்தினால் உறுதியான கதவுகள் அமைத்தனர் . கதவுகள் வேண்டும் பொழுது திறக்கவும், வேண்டாத பொழுது மூடிக் கொள்ளவும் இயலும் வகையில் தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட அரண்மனைக் கதவுகள் பகைவர்களால் எளிதில் கைப்பற்ற முடியாதபடி, மிக வலிமை உடையவனாக இருந்தன. இவ்வாறாகத் தச்சர்களின் கைவண்ணம் கூடிய தொழிலில் சிறப்புற்று இருந்தனர் என்பதை,

"வைகல் எண்தேர் செய்யும் தச்சம்" (புறம், பா.எ.87)

எனும் புறப்பாடல் தச்சனின் வலிமை பற்றி விளக்குகிறது. வளர்ந்து வரும் அறிவியல் தாக்கத்தால் அறிவியல் வழியிலானதொழில்நுட்பம் தச்சுத் தொழில் புகுந்துள்ளது. எனினும் பிறதொழில்களைப் போன்று இத்தொழிலில் முற்றிலும் அறிவியல் நுட்பம் நுழைந்திடவில்லை.

கொல்லுத் தொழில் திட்டம்

கொல்லுத் தொழில் ,தச்சுத் தொழிலைப் போன்று பழமை வாய்ந்த தொழிலாகும். இரும்பை மூலப் பொருளாகக் கொண்டு நடைபெறும் தொழிலான இது தச்சுத்தொழிலோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டது. மரம் ,உலோகம் போன்ற பொருள்களை வளைவு, உருண்டை என்று வேண்டிய வடிவங்களில் வடிவமைத்துச் செய்யப்படும் தொழில் கடைசல் தொழிலாகும். இக்கடைசல் தொழில் இன்று 'லேத்" என்றபெயரில் செய்யப்பட்டுவருகின்றது.

இரும்பு, செம்பு போன்ற உலோகங்களைக் கடைந்து பொருட்களை உருவாக்கியிருக்கின்றனர். படைக் கருவியாகிய வேல் நுனியைத் தாங்கிய காம்பை உருள் கம்பி வடிவத்தில் ஏற்றதகு வகையில் இரும்பைக் கடைந்து அமைத்துக் கொண்டனர் என்பதை, "காருங்கடைநெடுவேல்" (புறம் பா.எ.345) எனும் புறப்பாடல் கொல்லுத் தொழிலைத் தச்சுத் தொழிலின் ஒரு பகுதியாகக் கொண்டிருந்தனர் என்பதை எடுத்துரைக்கிறது. சங்ககாலப் பொருளாதார அமைப்பில் கொல்லரும், தச்சரும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். பயிர்த் தொழிலுக்குத் தேவையான கருவிகள், படைக்குத் தேவையான போர்க்கருவிகள் போன்றவை செய்தனர். இவர்களின் தொழில்நுட்பம் பண்டைத் தமிழர்களுக்குப் பெருமளவு பயன்படுத்தப்பட்டுள்ளது.

தோல் தொழில்

இயற்கையோடு இயைந்த பண்டைத் தமிழர் தோலின் பயனறிந்து வாழ்க்கைத் தேவையான பயன்பாடு பொருளாகத் தோலைப் பதப்படுத்திப் பயன்படுத்திய முறைகளைப் புறநானூறு கூறுகிறது. மேலும் தோலின் நிறம் ,தன்மை, பயன் ஆகியவற்றை புறப்பாடல் எடுத்துரைக்கிறது.

"குளம்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்ககழல் உருவின் விசியுறு பச்சை" (புறம் பா.எ.306)

என்ற புறப்பாடலில் தோலுக்கு வழங்கிய வேறு பெயர்களான பச்சை, உரிவை, உரி, சருமம் போன்ற பெயர்களையும் அறியமுடிகிறது.

முடிவுரை

தமிழன் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு கால வரலாற்றுப் பக்கங்களைத் திரும்பிப் பார்க்கும் போது அறிவில் மேம்பட்ட தமிழினத்தைக் காணமுடியும். தன்னை உணர்ந்தவனாகவும், தரணியை அளந்தவனாகவும், பண்டைத் தமிழன் சிறந்திருந்தான் என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் சொல்லோவியமாய்க் காட்டுகின்றன. கல்வியறிவு இல்லாத காலத்திலும் புலவர் பெருமக்கள் விண்ணையும் தாண்டி அண்ட சராசரங்களைப் பற்றியும் பாடிச் சென்றுள்ளனர். பழந்தமிழர்கள் அறிவியல் சிந்தனைகள், மண்ணியல், பொறியியல், அளவையியல், இயற்பியல், சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு சிந்தனைகளை இலக்கியங்கள் வழி உணரலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, 1970.
2. ராஜ்கௌதமன், பாட்டும் தொகையும்- தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி பதிப்பகம், சென்னை, 2016.
3. உ.வே. சாமிநாதையர் - புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.பதிப்பு, சென்னை, ஆறாம் பதிப்பு - 1963.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிலம்பில் வரிகளும் நளன் கதையும்

The Story of Nala in *Silappathikaram*

மு. மாரியம்மாள், முனைவர்பட்ட ஆய்வாளர், **க. ஜோதிமுருகன்**, நெறியாளர்,
தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

Abstract

The article caters the folk story of Nala as enunciated in the epic "Silappathikaram". Tamil literary tradition has a distinction in its elegance. The paper focuses on the dramatic quality and music of "Silapathikaram" and the depiction of the king Nala in the perspective of Thamilur. SA.VE.Subramaniam, Former Prof. International Institute of Tamil Studies. Hence, the research article culls out the life of Nala within the norms of the chosen hyothesis.

Keywords: The Story of Nala, *Silappathikaram*

தமிழ் உலகில் தோன்றிய மொழிகளுள் பழமையான ஒன்று நீண்ட பாரம்பரியம் அதற்கு உண்டு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழில் இலக்கண இலக்கியங்கள் தோன்றின. அவை சரியாகப் பேணப்படாமல் பல இலக்கியங்கள் கால வெள்ளத்தில் அழிந்தன. நீருக்கும் நிலத்துக்கும் கரையானுக்கும் நெருப்புக்கும் இரையாகாமல் தப்பிய இலக்கியங்களே இன்று நம் கைகளில் தவழ்கின்றன. நீண்ட காலச் சூழ்நிலையில் தோன்றிய இலக்கியங்களின் வரலாற்றை ஆராய்ந்துப் பார்ப்பது தமிழர் கடன்.

தமிழ் இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்து ஒவ்வொரு காலச் சூழ்நிலையிலும் குறிப்பிட்ட துறை இலக்கியங்கள் தோன்றின. இயங்கையோடு இணைந்து வாழ்வு கண்ட மக்கள் வாழ்வைப் பாடிய சங்க இலக்கியங்கள் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள், தமிழ் உரை நூல்கள், தனிப்பாடல்கள். காலத்திற்கு ஏற்ப பல நூற்கள் தோன்றுகின்றன. ச.வே.சுவின் சிலப்பதிகாரத்தில் சில வரிகளைப் பற்றியும், நளவெண்பா கதை இடம் பெறும் விதம் பற்றியும் அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

'வரி' என்ற சொல்லுக்கு இசை, கூத்து என்பது பொருள். வரி என்ற தலைப்பில் கானல் வரி, வேட்டுவ வரி, ஊர்சூழ் வரி என்ற மூன்று காதைகள் உள்ளன. கானல் வரியும் வேட்டுவ வரியும் இசையால் அமைந்தவை. ஊர்சூழ் வரியோ கூத்தால் பெற்ற பெயர் என்று நல்லாதனார் கூற்றையும் சுட்டியுள்ளார்.

கடற்கரைச் சோலையில் கோவலனும் மாதவியும் பாடிய இசைப் பாடல்களைக் கூறும் பகுதி கானல் வரி. ஐவகை நில வருணனைகள், மக்கள் வாழ்க்கை, தொழில் அவர்கள் பயன் கொண்ட நாட்டார் பாடல்கள் போன்றவற்றைக் கூறுவது அவர் தனித்தன்மை, நெய்தல் நில வருணனை, அந்நிலமக்களின் வாழ்க்கை தொழில் இசை, பழக்கவழக்கங்கள் போன்றவற்றைப் பற்றி இக்கானல் வரியில் கூறியுள்ளார். அதே வேளையில் அந்நாட்டார் பாடல்களில் கோவலன், கண்ணகி, மாதவி மூவர் வாழ்க்கை நிலைகளையும் இணைத்து, உள்ளுறைப் பொருத்தும் கூறும் நிலையில் கானல்வரிப் பாடல்கள் அமைந்துள்ளன.

யாழின் உறுப்புகள், அவற்றின் இயக்கங்கள் பற்றி இக்காதையில் கூறியுள்ளார். கோவலன் முதலில் யாழில் இசைப் பாடல்களை வாசிக்கின்றன. அவன் வாயால் பாடுகின்றான். கோவலன் கானல் வரிப் பாடல்கள் பாடும்போது கண்ணியின் பண்புகளை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நினைத்துக் கொண்டு பாடுகின்றான். மாதவி அதற்குப் பதிலாக எதிர்ப்பாடல் பாடும் போது, இவன் பிற ஒரு பெண்ணை நினைத்துக் கொண்டு பாடுவதாக நினைத்து, தான் ஒரு தலைவனைக் கற்பனையில் நினைத்துப் பாடுகிறாள். கற்பனையில் அவள் நினைத்த தலைவன் கோவலன் தான். ஆனால் இவன் பிற ஒரு தலைவனை நினைத்துப் பாடியதாக நினைத்து, அவளைவிட்டுப் பிரிந்து, தனியாகத் திரும்பிவிட்டான். மாதவி செயலற்ற நிலையில் தன் வீட்டிற்குத் தனியே திரும்பி வருகிறாள். யாழ் இசையின்மேல் ஊழ்வினை வடிவெடுத்து செயலாற்றியதாக அடிகளின் எழுத்தினை சுட்டிகாட்டுகிறாள்.

சிலப்பதிகாரத்தில் வரிகள் பற்றியக் குறிப்புகள் இரண்டு காதைகளில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. அவை கானல் வரி மற்றும் வேனிற் காதை, கானல் வரியில் ஆற்றுவரி, சார்த்துவரி, முகமில்வரி, கானல் வரி, நிலை வரி, முரி வரி, திணைநிலை வரி, மயங்கு திணை நிலை வரி, சாயல் வரி போன்றவை காணப்படுகின்றன. இவற்றைத் தவிர எட்டு வகை வரிகளும் வேனிற் காதையில் இடம் பெறுகின்றன.

கானல்வரி காதையில் காணக்கூடிய ஆற்றுவரியானது காவிரி ஆற்றை நோக்கி, யாழில் இசைத்த இப்பாடல்கள் 1 முதல் 3 பாடல்களில் ஒவ்வொரு பாடலிலும் நான்கு வரிகளும் இடம் பெறுகின்றது.

> "திங்கள் மாலை வெண்குடையான் சென்னிசெங்கோல் அதுஒச்சிக்
> கங்கைத் தன்னை புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி
> கங்கைத் தன்னைம் புணர்ந்தாலும் புலவாது ஒழிதல் கயற்கண்ணாய்
> மங்கைமாதர் பெரும் கற்புஎன்று அறிந்தேன் வாழிகாவேரி" (பா.1-4:ப. 146)

என்ற பாடலின் மூலமாக அறியலாம்.

ஆற்றுவரிக்குப் பின் அடுத்ததாக கூறப்பட்டுள்ள வரியே சார்த்து வரி. இவ்வரியில் பாட்டுடைத் தலைவன் அவனுடைய ஊரோடும், பெயரோடும் சார்த்துப் பாடப்படுவது தலைவனிடம், தோழி தலைவியின் நிலையைக் கூறி திருமணம் செய்து கொள்ளுமாறு வரைவுகடாய பாடல்கள். கோவலன் பாடிய இம்மூன்று பாடல்களும் தலைவி கூற்றாய் மற்றொரு பெண்ணைக் காதலிப்பதாய் அமைந்தவை. கண்ணகி, தலைவியாக நின்று இவனுக்காக ஏங்கிக் கொண்டிருப்பதை, வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

அடுத்ததாக முகமில் வரியில் கோவலன் வேறொரு பெண்ணை விரும்பிப் பாடுவதாக அமைந்துள்ள பாடல்கள். அவன் உள்ளத்தில் இருப்பவள் கண்ணகிதான். அவளை நினைத்துப் பாடுகிறான். மாதவி தன்னை விட்டு மற்றொரு பெண்ணை நினைத்து இவள் பாடுவதாகக் கருதுகிறாள்.

கடற்கரைத் துறையில் வலம்புரிச் சங்குகள் உழுது மணலில் ஏற்படுத்திய கோடுகளையும் வடுக்களையும் அங்குள்ள பாரம் மலிந்த பூக்களையுடைய புன்னை மரங்களிலிருந்து விழுந்த பூக்களும், பூந்தாதுக்களும் விழுந்து மறைந்து போர்த்துள்ள கடற்கரைச் சோலை. அங்கு முழுமதியைப் போன்ற ஒலியுடைய முகத்தில் உள்ள, காயல்மீன் போன்ற கண்கள் செய்த காமநோயை, மருந்துகளால் தீர்க்க முடியாத நோயை, அப்பெண்ணின் மார்பில் ஊர்ந்து பரந்துள்ள தேமல் போன்ற கணங்கள் தீர்க்கமுடியும் என்கிறான்.

கானல்வரிப் பாடல் கடற்கரைச் சோலையின் இசைப்பாட்டாகும். இவ்வரியில் கடற்கரைச் சோலையில் அச்சுறுத்தக்கூடிய அணங்கு இருந்ததால் தான் அங்கே செல்லாமல் இருந்திருப்பேன் என்றான்.

நிலைவரி என்பது பெண்ணின் தன்மையைக் கூறும் இசைப்பாடல். தனித்து எதிரே வந்த ஒரு பெண்ணைப் பார்த்து தலைவன் கூறியதாக அமைந்த இசைப்பாடல் ஆகும்.

முரிவரி என்னும் அடுத்த வரியே இயலும் இசையும் தம்மில் முரித்துப் பாடுதல் முரி எனப்படும். இதற்கு ஏற்றாற்போல் தன்மையிலும், கவிதை ஓசையிலும் மாற்றி அமைத்துப்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பாடுதல் என்பது பொருள். தலைவன் தோழனிடம் தனக்கு துன்பம் தந்த பெண்ணைப் பற்றிக் கூறுதல்.

திணைநிலை வரி என்பது நெய்தல் திணையின் தன்மையைக் கூறும் இசைப்பாடல் ஆகும். தலைவன் தலைவியைக் கூடியப் பின்பு பாடியப் பாடல்கள்.

மயங்கு திணை வரி என்பது நெய்தல் நிலத்தில் காணக்கூடிய முத்துக்களால் ஆகிய அணிகலன்கள், பவளத்தால் ஆன இடையணி உடுத்தக்கூடிய நெய்தல் நில தலைவன் கடலில் மீதும் கடற்கரையின் மீதும் மயங்கி தன்னிலை மறந்து நிற்றலே மயங்குதிணை வரி ஆகும்.

சாயல் வரி என்பது கானலில் பொய்தல் விளையாட்டை அழித்துப் போனவர் ஒருவர். அவரது பார்வை மான் போன்றது. இதை மறப்பவர் எவரும் இலர் என்றும் ஆடும் அன்னப்பறவையின் துணையோடு தலைவியும் கானல் போல் மனதில் தோன்றிவரும் ஒன்று சேர்வோம் என தலைவி சாயலை நினைத்துப் பாடுவது ஆகும்.

கானல் வரிக்கு அடுத்ததாக வரிகளின் எட்டு வகைமையைப் பற்றிப் பேசிய காதை வேனிற் காதை. தமிழர், பெரும்பொழுதுகளை ஆறாகப் பிரிப்பர். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. ஒவ்வொரு பெரும்பொழுதிற்கும் இரண்டு மாதங்கள், சித்திரை, வைகாசி இருமாதங்களும் இளவேனில் காலம். இந்திர விழா சித்திரை மாதம் சித்திரைப் பௌர்ணமி தொடங்கி இருபத்து எட்டு நாட்கள் நடைபெற்றது. வைகாசி மாதம் கோவலன் மாதவியைப் மணம் புரிந்தான். சிலம்பில் சிறு பொழுதுக் கதையாக அந்தி மாலைச் சிறப்பு செய்காதையும் பெரும்பொழுதுக் காதையாக இளவேனில் காதையும் அமைந்துள்ளன. காதலன் பிரிவைத் தாங்க இயலாத மாதவி, கோவலனுக்குத் தன் முதல் கடிதத்தை எழுதுகிறாள். பழங்காலத்தில் திருமுகம் என்று அழைக்கப்பெற்ற கடிதம் எவ்வாறு அமைந்தது, எழுதப் பெற்றது என்பதை மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். அடிகள், இக்கருத்தினை சவேசுவும் தனது உரையில் பதிவுசெய்துள்ளார். இக்கடிதத்தை கோவலன் ஏற்றுக் கொள்ளவில்லை. மாதவியின் பதினொரு ஆடல்போக, வரிக் கூத்துக்கள் எட்டுப்பற்றியும் இக்கதையுள் விளக்குகிறார். காதலனாகிய கணவன் கோவலன், இன்று வரவில்லை என்றாலும் நாளை வருவான் என ஏக்கத்துடன் காத்திருக்கிறாள் மாதவி.

இக்கதையில் எட்டு வகையான வரிகள் இடம் பெறுகிறது. இவ்வரிகள் மாதவி முன்பு ஆடிய எட்டு வகை வரிக் கூத்துக்களாக கோவலன் எண்ணிப் பார்ப்பது போல அடிகள் கூறியதையும் சுட்டியுள்ளார் ச.வே.சு. எட்டு வரிகளில் முதலிய இடம்பெறும் வரி கண்கூடு வரி. கண்கூடு வரி முதல் கோள்வரி வரையிலும் எட்டு வரிகளும் பின்வருமாறு விளக்கப்படுகிறது.

கண்கூடு வரி நெற்றியில் திலகமும், கருங்கூந்தலும் சிறிய கரிய புருவங்களாகிய வில்லும், குவளைக் கண்களும், குமிழும் பூப்போன்ற மூக்கும் கொவ்வைக் கனி போன்ற இதழ்களையும் உடைய வாயையும் கொண்டு ஒளி பொருந்திய அழகிய முகத்தில், காமக் குறிப்புகளுடன் கூடிய மதர்த்த நோக்கத்தோடு காதலுடையவள் போல் தோன்றிய காட்டிக்குரியது ஆகும்.

காண் வரி மேகம் போன்ற கூந்தலைச் சுமந்து வருந்தி, ஒளி பொழிகின்ற மதிபோன்ற முகத்தில் கயல் போன்ற கண்கள் இருபக்கமும் உலவித்திரிகின்ற, விருப்பம் ஊட்டுகின்ற அடிகில், பவளம், போன்ற இதழ்களுள், சுவையான பாங்கினையும் பொதிந்து வைத்துள்ள வாயில் இளமுத்துப் போன்ற பற்கள் நிலா போன்று ஒளிவிட, கோவலன் வருக என்றால் போகிய கரிய நீண்ட கண்களையுடைய மாதவி ஆடுதல்.

உள்வரி பகலும் இரவும் சந்திக்கின்ற அந்தி மாலைக் காலத்தில், காதலியின் பிரிவால் துன்புற்ற என் மனநோயின் சிலுமையைத் தெரிந்து கொண்டு, கிளி போன்ற சொற்களையும், மடப்பத்தையுடைய அன்னம் போன்ற மென்மையான நடையையும், மனமகிழ்ந்தாடும் மயில் போன்ற சாயலையும், தனது போர்க்களத்தில் பயன்பெறும் வேல்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

போன்ற நீண்ட கண்களையுடைய தோழியர் கோலத்தில் தன்னை மறந்து வந்து ஆடிய கூத்தாகும்.

புன்புற வரி தான் (மாதவி) அணிந்திருந்த சிலம்புகள் ஒலிக்கவும், மேகலைகள் ஒசை எழுப்பவும், ஆபரணங்கள் அணிந்தால் சுமக்க முடியாத நிலையிலுள்ள இடையையுடையவள் காதல் நோக்கத்துடன் பிரிவால் துன்புறுகின்ற என் எண்ணம் கோவலனின் புறத்தில் வந்து ஆடிய கூத்தாகும்.

கிளர்வரிக் கூத்து தலையில் அணிந்துள்ள மாலையும், குடிலும், தாதுக்கள் சேர்ந்து மாலைகளையுடைய கூந்தலும், ஒரு வடமுத்து மாலையும், அழகிய முலைத் தடங்களும் நெற்றியையுடைய மாதவி தோன்றி செவிலியரிடம் சொன்ன மறுமொழியை இருபொருள்படும் நிலையில் எடுத்துக்கொண்டு, எனது புணர்ச்சி விருப்பத்தை புலவிக் கூற்றாகக் கருதி தளிர்ந்த காயலையும் தகுதிவாய்ந்த மென்மையான கூந்தலையும் உடைய மாதவி கிளர்ந்து வேறுபட நடித்த கூத்து.

தோச்சி வரி கோவலன் மாதவியைப் பிரிந்திருந்த காலத்தில் கோவலனுக்காக இரங்கியவள் போல நடித்து, கோவலனைச் சார்ந்தவர்களிடம், கோவலன் உற்றத் துன்பத்தினைத் சேர்ந்து, தேர்ந்து, எடுத்துக்கூறி நடித்த கூத்து.

காட்சி வரி வண்டுகள் மொய்க்கின்ற மலர் மாலையை உடையவள், கோவலனின் பிரிவால் மயங்கியதை கண்டவர்களிடம் எல்லாம் கூறி நடித்த காட்சி கூத்து.

கோள்வரி பிறரிடம் கோவலனின் பிரிவு மக்கத்தைக் காட்டியதால் அவர் இவளை எடுத்து அவள் துயரத்தைத் தீர்த்த எடுத்துக்கோள் வரிக் கூத்து.

இவ்வாறாக எட்டு வகை வரிக் கூத்தைக்களை ஆடி நடிக்கின்ற ஆடல் மகள் என கோவலன் கூறுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

"பாடுபெற்றன அப்பைந்தொடி தனக்கு என
அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய
மணித்தோட்டுத் திருமுகம் மறுத்தற்கு இரங்கி
வாடிய உள்ளத்து வசந்த மாலை
தோடு அவர் கோதக்கு துணைந்து சென்று உரைப்ப (பக்.110: பா.5)

சிலம்பில் நளன்

பாரதக்கதையின் கிளைக்கதையான நளன் கதையை புகழேந்தியும் அதிவீரராம பாண்டியரும் காப்பியமாக அமைத்துத் தந்துள்ளனர். கி.பி. 12ம் நூற்றாண்டு என்று கருதப்படும் புகழேந்தியாரும் வெண்பா யாப்பில் கடவுள் வாழ்த்துப் பாடல் உட்பட மூன்று காண்டங்களையும் 427 பாடல்களையும் கொண்ட நளன் கதையைப் பாடியுள்ளர். இது தமிழ்ப் புலவரால் பாடப்பட்ட சிறுகாப்பியம் எனலாம்.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அதிவீரராம பாண்டியர் விருத்த யாப்பில் பெருங்காப்பியம் என்று கருதத்தக்க அளவில் பாயிரம் உட்பட 1172 பாடல்களால் நைடதம் என்ற தலைப்பில் காப்பியமாகப் பாடியுள்ளார். வியாசரால் எழுதப்பட்ட மகாபாரத்தில் மூன்றாம் பருவமாகிய வனபருவத்தில் நளன் கதை நளோபாக்கியானம் என்ற பெயருடன் காணப்படுகிறது. இப்பருவமே நளவெண்பாவிற்கு முதல் நூலாக அமைந்தது. இரண்டு காப்பியங்களுமே சூதாட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளன சூதாட்டத்தினை மையமாகக் கொண்ட நளன் கதை சிலம்பிலும் இடம்பெறுகிறது.

சிலப்பதிகாரத்தில் ஊர்காண் காதையில் நளனின் கதையினை கவுந்தியடிகள் கோவலனிடம் எடுத்துரைப்பதாக அமைகிறது. கவுந்தியடிகள் கோவலனை நோக்கி மனைவியோடு தவக்குறைவு காரணமாகத் தனித்த துன்பத்தால் வருந்தினாய், மறந்துரையாகிய தீயவையின் வினை வந்து ஊட்டும் என்றும், அறவழியில் செல்வோர், காரண காரியங்களோடு கூறி, நாவானது குறுந்தடி எனவும் வாயானது பறை அறைந்து சொன்னாலும் வினையால் கட்டுப்பெற்ற மக்கள் அதனை இயல்பாக ஏற்றுக்கொள்வதில்லை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பிரிதல், துன்பம், சேர்தல் துன்பமும் காமனால் தண்டிக்கப் பெறும் துன்பமும், சுருண்ட கூந்தலையடைய மகளிரோடு சேர்ந்தோர்க்கு அல்லது தனிவாழ்க்கை வாழும் உள்ளம் உறுதியுடையோருக்கு இல்லை. காதலில் துன்புற்று கரையினைக் காண முடியாத துன்பத்தைப் பலர் அடைந்தனர். அது இன்று மட்டுமல்ல, கடந்த காலத்திலும் நிகழ்ந்தது. தொன்று தொட்டு வந்து கொண்டே இருக்கும் ஒன்றாக உள்ளது.

ஆதலால், தந்தையின் ஏவலால் சீதையோடு காட்டிற்குப் போய், சீதையைப் பிரிந்து மிகுந்த துயரம் அடைந்தான் இராமன். வேதங்களைத் தோற்றுவித்த பிரம்மனைப் பயந்த திருமால் என்பது நீ அறிந்ததில்லையோ? என கோவலனிடம் கேட்பதையும் அறியமுடிகிறது.

சூதாம் களத்தில் தோற்று, நாட்டையும் அரசையும் இடிந்து மென்மையான இயல்புடைய தமயந்தியுடன் கொடிய காட்டினை அடைந்தான் நளன். காதல் காரணமாகப் பிரிந்தோன் அல்லன். அவளும் துன்பப்படும் சிலுமையுடையவள் அல்லள். காட்டின் இருட்டில் நடு சாமத்தில் தமயந்தியை விட்டு நளன் நீங்கியது கொடிய வினையால் என்றும் இதில் தமயந்தியின் தவறு என்ன என்றும் வினவினார் அடிகள் இதனை

“வல்ஆடு ஆயத்துமண், அரசு இடிந்து
மெல் இயல் தன்னுடன் வெம்காண் அடைந்தோன்
காதலில் பிரிந்தோன் அல்லன், காதலி
தீதொடு படுஉம் சிறுமையள் அல்லள்
அடவிக் கானத்து ஆய்இழை தன்னை
இடை இருள் யாமத்து இட்டு நீக்கியது
வல்வினை அன்றோ? மடந்தை தன் பிழைஎனச்
சொல்லலும் உண்டேல், சொல்லாயோ நீ!
அனையையும் அல்ல, ஆய் இழை தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே” (சிலம்பு. ஊர்காண் காதை. 50-59)

இவ்வரிகளின் மூலம் எடுத்துரைக்கிறார்.

கோவலனிடம் கவுந்தியடிகள், இராமனைப்போல், நளனைப்போல் மனைவியைப் பிரியவில்லை மனைவியைப் பிரியாத வாழ்க்கையைப் பெற்றுள்ளாய், அதனால் வருந்தாது, பாண்டியரின் மதுரை நகர் செல்லக் கூறுவதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

துணைநின்ற நூல்கள்

1. சிலப்பதிகாரம் தெளிவுரை - ச.வே.சுப்பிரமணியம் முதற்பதிவு – 31, திங்கள் 2009, மெய்யப்பன் பதிப்பகம்,
2. நளவெண்பா. மூலமும் உரையும் - அ.ப. பாலையன், நான்காம் பதிப்பு, 2014 சுரதா பதிப்பகம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருக்குறளில் மனித நேயம்

Humanity in *Thirukkural*

முனைவர். மா. முத்துவிஜயலட்சுமி, உதவிப்பேராசிரியர்,
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, பழனி.

Abstract

The article fosters to note down the humane quality found in the universal ethical work "Thirukkural". It is a source of virtues. One who follows the sayings of the "Thirukkural" will be redeemed from all sorts of crisis in his life. It is a sorce of confidence and hope in brevity. Humanity can be deciphered through the virtues followed in life. Love, Charity, Hospitality, Discipline are considered as the primary virtues of an individual. One who cultivates these traits will be a man of honour. "Thirukkural" has such virtual power to empower a man with such attitudes. So, the paper unleashes the messages regarding humanity from the chosen diadactic work.

Keywords: Humanity in *Thirukkural*

இன்றைய சமுதாயத்தில் அன்பு, பாசம், கருணை, விருந்தோம்பல், ஈகை போன்ற பண்புகள் சிதைந்து வருகின்றன. மனிதனை மனிதனாக மதிப்பதே மனிதநேயமாகும். பிறர் துன்பத்தைப் போக்குவதும் மனித நேயமாகவே கருதப்படுகின்றது. உயிரினங்களில் மனித இனமே உயர்ந்த இனமாக விளங்குகின்றது. தான் நினைத்தைச் செய்யும் ஆற்றல் மனித இனத்திற்கு உரியதாகும். பகுத்தறியும் தன்மை மனிதனுக்கு மட்டுமே உண்டு என்பதைத் தொல்காப்பிய மரபியல் நூற்பாவில்,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நோதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே" (தொல் - மரபியல் .27)

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மனித நேயம்

மனித நேயம் என்பது மனிதன் தன்னைப் போல் பிறரை நேசித்து அன்பு காட்டுவதாகும். இந்த மனித நேயமானது சாதி, இனம், மொழி, மதம் ஆகியவற்றைக் கடந்து ஒருவர் மற்றொருவரிடம் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி காட்டக்கூடிய அன்பாகும்.

"மானுடம் போற்றுவதே மனிதநேயம் எனப்படும். மானுடம்
என்பது மக்கட் பண்பாகும். உலகில் மனிதராய்ப் பிறந்தவர்
மக்களுக்குரிய பண்புகளைப் பெற்று வாழவேண்டும்" (பண். சிந்த .ப.108)

என வே.முத்து இலக்குமி மனிதநேயத்திற்கு விளக்கம் தந்துள்ளார். மனித மனமானது தன்னலத்தோடு குறுகி சிந்திக்கும் திறன் கொண்ட காரணத்தால் மனிதர்களுக்கிடையே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிக்கல் நிலைத்து நிற்கின்றது. அதன் காரணமாக மனிதநேயத்தை இழக்கும் சூழல் உருவாகி வருகின்றது. ஆகவே அதனை மாற்ற முயற்சி செய்யவேண்டும். அப்பொழுது தான் மனிதநேயம் தழைக்கும். திருக்குறளில் மனிதநேயம் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அன்பு

உலக மக்கள் ஒற்றுமையோடு சேர்ந்து வாழ்வதற்கு அன்பே அடிப்படைக் காரணமாக அமைகின்றது. இந்த அன்பானது குடும்பம், நாடு, உலகம் என விரிந்து காணப்படுகிறது.

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு" (குறள். 73)

சான்றோர்கள், இந்த அருமையான உயிருக்கு உடம்போடு பொருந்திய தொடர்பானது அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையாகும் எனக் கூறுகின்றனர்.

"அறத்திற்கே அன்புசார் என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (குறள். 76)

அன்பை பற்றி அறியாதவர்கள் அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் எனச் சொல்வார்கள். ஆனால், ஆராய்ந்து பார்த்தால் மறச்செயல்களுக்கும் அன்பே துணையாய் நிற்கும் என்பது தெளிதாகும்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" (குறள்: 79)

உள்ளத்தின் உள்ளே இருக்கக்கூடிய அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதவருக்கு கண்ணுக்குத் தெரியும் உடம்பின் புற உறுப்புக்கள் எல்லாம் எந்தவிதமான பயனையும் அளிப்பதில்லை எனக் குறிப்படுகின்றார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாய தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே" (திருமந்திரம்- 270)

அனுபவம் அறிறவர் அன்பாகிய சக்தியும் அறிவாகிய சிவமும் இரண்டு எனக் கூறுவார். அன்பின் முதிர்ச்சியில் அறிவு விளங்கும் என்பதை உயர்ந்தவர், தாழ்ந்தவர் ஆகிய எவரும் உணர்வதில்லை. அன்பு தான் சிவத்தை உணரச் செய்யும் என்பதை எல்லோரும் அறிந்த பின்பு அன்பே வடிவமாய் சிவத்தின் தன்மையை அடைந்த நிலையினைத் திருமூலர் பாடல் உணர்த்துகின்றது.

"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு" (குறள் - 75)

இவ்வுலகத்திலே இன்பம் அடைந்தவர் அடையும் சிறப்பானது, அவர் அன்புடையவராக இருந்து வாழ்ந்த வாழ்க்கையின் பயன் எனக் கூறுவர். ஆகவே, ஒவ்வொருவரும் அன்போடு இருத்தல் வேண்டும். அந்த அன்பே நம்மை நல்வழியில் அழைத்துச் செல்வதற்கும். உறவுகளைப் பலப்படுத்துவற்கும் துணை நிற்கிறது.

ஈகை

நாம் பெறக்கூடிய வருவாயில் சிறிதளவாவது பிறருக்குக் கொடுத்த மகிழ்தல் ஈகையாகும்.

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள் - 221)

வறுமையானவனுக்கு ஒரு பொருளைத் தந்து உதவுவதே ஈகையாகும். அதைத் தவிர்த்து பிறருக்குக் கொடுப்பது எல்லாம் எதிர்பயனை எண்ணித் தருவாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்." (குறள் - 228)

தாம்சேர்த்து வைத்துள்ள செல்வத்தைக் காப்பாற்றி வைத்து பின் இழந்துவிடும் கல்நெஞ்சம் உடைய மனிதர்கள், பிறருக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை அறியமாட்டார்கள்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்" (குறள் - 225)

பசியைப் பொறுத்துக் கொள்பவரது ஆற்றல் சிறந்ததாகும். அப்பசியாகிய நோயை உணவளித்து போக்குபவரின் ஈகையானது அதை விட சிறந்தாகக் கருதப்படுகிறது.

"ஈயென இரத்தல் இழிந்தன்று, அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதனெதிர்,
கொள்ளேன் என்றால் அதனினும் உயர்ந்தன்று" (புறம் - 204 : 1-4)

என்னும் கழைதின் யானையார் பாடலில் நீ எனக்குத் தருக எனக் கேட்பது இழிவு என்றும், கேட்ட பின்பு அதனைத் தருபவன் தரமாட்டேன் என்று கூறுவது அதைக் காட்டிலும் இழிவானதாகும். கேட்காமலே இதைப் பெற்றுக்கொள் எனக் கூறுவது உயர்வானதாகும். ஆனால் தந்த பொருளை வேண்டாம் என்று மறுத்துக் கூறுவது அதனை விட உயர்ந்ததாகும் என ஈகையின் சிறப்பு வெளிப்படுகின்றது.

"உண்டால் அம்மஇவ் உலகம் - இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே" (புறம் -182: 1-3)

பண்பாடு உடையவர்கள் இருப்பதாலேயே இவ்வுலகம் நிலைபெற்று இருக்கின்றது. வானுலகத்திலுள்ள இந்திரனுக்குரிய அமிழ்தமே கிடைத்தாலும் அதைத் தனியே உண்பது இல்லை எனக் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி தம் பாடலில் பாடியுள்ளார். இவ்வாறு பிறருக்குக் கொடுத்து வாழும் நற்பண்பு உடையவராகத் திகழ்வதே சிறந்த பண்பாகும்.

விருந்தோம்பல்

விருந்தோம்பல் பண்பானது நம் பண்பாட்டை உணர்த்தக் கூடியதாகும்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் -81)

இவ்வுலகில் இருந்து பொருளைப் பாதுகாத்து இல்வாழ்க்கையினை நடத்துவதெல்லாம் வீட்டிற்கு வந்த விருந்தினரைப் போற்றி பாதுகாப்பதற்காகவே ஆகும்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு" (குறள் -86)

வீட்டிற்கு வந்த விருந்தினரை நன்கு உபசரித்து அனுப்பிய பிறகு, அதன்பின் எதிர்பார்த்து காத்திருப்பவன் வானத்துத் தேவர்களுக்கு நல்ல விருந்தினனாகக் கருதப்படுகின்றான்.

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்" (குறள் - 84)

முகமலர்ச்சியோடு நல்லமுறையில் விருந்தினரைப் போற்றி பாதுகாப்பவரின் வீட்டில், மனமலர்ச்சியோடு திருமகள் நீங்காது தங்கியிருப்பாள்.

"பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்பர்
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்" (புறம் -173: 5-9)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தவறாது பெய்யும் மேகமானது, மழைபெய்து நீர் பெருகும் இடத்தைவிட்டு முட்டையைத் தூக்கிக் கொண்டு மேட்டு நிலத்தை நோக்கிச் செல்லும் எறும்பின் வரிசைகளைப் போல, சோற்றைக் கொண்ட கையை உடையவராய் செல்லும் பெரிய சுற்றத்துடன் கூடிய சிறுவர்களையும் காண்போம் என்பதிலிருந்து சிறுகுடிகிழான் பண்ணனின் விருந்தோம்பும் பண்பு வெளிப்படுகிறது.

ஒழுக்கம்

ஒருவனுக்கு ஒழுக்கமே சிறந்த பண்பாகக் கருதப்படுகிறது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 131)

ஒழுக்கப் பண்பானது எப்பொழுதும் உயர்வைத் தருவதால் அந்த ஒழுக்கத்தை உயிரினும் மேலானதாக எண்ணி சான்றோர்கள் காக்கின்றனர்.

"ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்" (குறள் - 139)

நல்லொழுக்கம் உடையவர்கள் மறந்தும் தம் வாயினால் தீய சொற்களைச் கூறுவதில்லை. ஏனெனில் இப்பண்பு அவர்களுக்கு ஒரு போதும் பொருந்துவது இல்லை.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி" (குறள் -137)

ஒழுக்கத்தால் எல்லோரும் மேன்மை அடைவார்கள் . ஒழுக்கமில்லாத பண்பினால் என்றும் பழியினை அடைவர்.

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து" (குறள் - 125)

பெரியோரிடம் பணிவாக நடத்தல் என்பது சிறந்த குணமாகும். அது எல்லோருக்கும் நன்மையைத் தரக்கூடியதாகும். அது செல்வம் உடையவர்க்கு மேலும் செல்வத்தைச் சேர்த்தது போன்ற தன்மையை உடையதாகும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள் - 398)

ஒருபிறவியிலே தான் கற்ற கல்வியானது ஒருவருக்குத் தொடர்ந்து வரும் ஏழு பிறப்புக்களிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்பை உடையதாகும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (குறள் -140)

உலகத்தோடு பொருந்தி வாழும் தன்மையை அறியாதவர்கள் பல நூற் பொருள்களைக் கற்றிருந்தாலும் அறிவில்லாதவராகவே கருதப்படுவர். இவ்வாறு அன்பு, ஈகை, விருந்தோம்பல், ஒழுக்கம் போன்ற நற்பண்புகளை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொண்டாலே மனித நேயத்தை அழியாமல் பாதுகாக்க முடியும்.

பார்வை நூல்கள்

1. தமிழண்ணல். தொல்காப்பிய உரை, மு.ப. – ஏப்ரல் 2008.மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலிதெரு, மதுரை – 625 001.
2. வ.சுப. மாணிக்கம் (உ.ஆ) - திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு - 2000.
3. உ.வே. சாமிநாதையர் - புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.பதிப்பு, சென்னை, ஆறாம் பதிப்பு - 1963.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நாலடியார் காட்டும் வாழ்வில் சிந்தனைகள்

Thoughts of Life in *Naladiyar*

முனைவர் ஆர்.முல்லை, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, பெரம்பலூர்.

Abstract

The present research article taps the ethics of life and thoughts as evinced in one of the the "Pathinenkeelkanakku" book "Naladiyar". These books were written after the Sangam Era. They are attested as diadactic works in Tamil Literature. "Naladiyar" is one of the "KeelKanakku" books. It is full of moral axioms that lead our lives in a very bright and ful-fledged manner. Therefore, the paper give a free rein to the messages regarding life from the chosen diadactic work.

Keywords: Thoughts of Life, Life in *Naladiyar*, Tamil Literature

முன்னுரை

சங்க காலத்திற்கு பின்பு தோன்றிய நூல்களை நீதி நூல்கள் என்று அழைத்தனர். மக்களுடைய வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் தீர்வாக அமையும் வண்ணம் நீதி கருத்துக்களை கூறுவதாக அமைவன. இவ்வகை நூல்களே ஆகும். இதில் நாலடியாரில் இடம் பெறும் வாழ்வியல் சிந்தனைப்பற்றிய கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

பதினெண் கீழ்க்கணக்கு

கணக்கு என்பது நூலைக் குறிக்கும் சொல். இங்கு பதினெட்டு நூல்களின் தொகுதியைச் சுட்டுவதால், இது பதினெண் கீழ்கணக்கு எனப்பட்டது. கீழ்க்கணக்கு என்பது பெரிதும் அடிவரையறையில் குன்றி, வெண்பாவினாலும் அறம், பொருள் இன்பங்களைக் குறித்து, முறையில் பாடப்படுவது. அடிவரையறையில் ஐந்தடியில் மிகுந்து வருவது இல்லை. ஆனால் களவழி நாற்பதில் ஐந்தடிக்கு மிக்க பாடலும் இதில் வருவதும் உண்டு.

கீழ்கணக்கு இன்ன முறையில் வரும் என்பதைப் பன்னிரு படலம்.

"அடிநிமிர் பில்லாச்செய்யுட் தொகுதி
அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்."

என்று கூறுகிறது. புதினென் கீழ்கணக்கு நூற்கள் நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னாநாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மொழி நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழிமொழி, சிறுபஞ்சமூலம், கைந்நிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பனவாகும். இவற்றுள் நாலடியார் நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னாநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி,ஏலாதி என்பனவாகும். ஆகியவைகள் நீதிகளை புகட்டும் நூல்கள் ஆகும். இன்னிலையும் நீதி நூல்கள் ஆகும். *கார்நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணையெழுபது, தினை மொழி ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்பன அகப்பொருள் பற்றிய நூல்கள் ஆகும். கைந்நிலையும் அகப்பொருள் நூல். களவழிநாற்பது புறப்பொருளைச் சார்ந்தது ஆகும்.

நாலடியார்

பதினெண் கீழ்கணக்கு நூல்களில் திருக்குறளுக்கு அடுத்து வைத்து போற்றப்படுவது *நாலடியார்* ஆகும். இந்நூலில் காணப்படும் வெண்பாக்கள் அனைத்தும் நான்கு அடிகளாக அமைந்திருத்தலின், இதனை நாலடியார் என வழங்கினர். இந்நூலைக்குறித்து வழங்கும் வரலாறு ஒன்று உண்டு.

ஒரு சமயம் எண்ணாயிரச் சமணர்கள் தம்தம் ஊரில் பஞ்சம் ஏற்பட, மதுரை புகுந்தபோது, பாண்டியனால் ஆதிரிக்கப்பட்டு வருகையில், பின் தம் நாட்டில் பஞ்சம் நீங்க, அதனால் அச்சமணர்கள் தம் நாட்டை நோக்கிச் சென்றனர் எனவும், அங்ஙனம் சென்றவர்கள் ஒவ்வொரு பாட்டை எழுதி வைத்துச்சென்றனர் எனவும், அவர்கள் பாண்டிய மன்னனிடம் கூறாது சென்றதனால், அவற்றை வைகையில் எறியும்படி அரசன் கட்டளை இட்டான் எனவும், அவ்வாறு எறியப்பட்ட எண்ணாயிர வெண்பாக்களுள் நானூறு மட்டும் கரையில் ஒதுங்கின எனவும், அவற்றை ஒன்று சேரத் தொகுத்து அமைத்த நூலே நாலடியார் என்பதாகும் எனவும் கூறப்படுவதே அவ்வரலாறாகும்.

"மன்னன் வழுதியர்கோன் வையைப்பேர் ஆற்றின்கண்
எண்ணி இருநான்கோடாயிரவர் - நண்ணி
எழுதியிடும் ஏட்டுக்குள் ஏடெதிரே ஏறும்
பழிதில்லா நாலடியைப்பார்."

என்னும் வெண்பாவால் அறியலாம்.

***நாலடியார்* காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்**

"பெருமுத்தரையர் பெரிதுவந்து ஈயும்
கருணைச்சோறார்வர் கயவர் - கருணையைப்
பேரும் அறியார் நனி விரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும" (பா.எண்.200 ப.எண்.17)

முயற்சியில்லாத கீழ்மக்கள் பெரு முத்தரையர் மகிழ்ந்தளிக்கும் கறிகளோடு கூடிய உணவை உண்டு வாழ்நாள் கழிப்பர். முயற்சியாளர்கள் மிகவும் விரும்புகின்ற தம் முயற்சியால் கிடைத்த நீர் உணவும் அவர்களுக்குத்தேவர் உணவாகி மெய் இன்பம் தரும்.

"மல்லல்மா ஞாலத்து வாழ்பவர் உள்எல்லாம்
செல்வர் எனினும் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத்தரையரே
செல்வரை சென்றிரவாதார்." (மேலது- 296, ப.எண்.18)

உலகில் உயிர் வாழ்பவருள் பொருள் உரையவராயினும் பிறர்க்கு ஒன்று ஈயாதவராயின் அவர்கள் வறியரேயாவர். வறுமையுற்ற காலத்தும் பொருள் உடையாரிடம் சென்று ஒன்று இரவாதவர் பெருமுத்திரையரே யாவர்.

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனின் செல்வமொன்று
உண்டாக வைக்கப்பாற்றன்று." (பா எண்.1 – ப.எண். 19)

அறுசுவை உணவை மனையாள் விரும்பி உண்பிக்க, போதுமென்று தவிர்த்த செல்வரும் ஒரு காலத்தில் வறுமையுற்றுக் கூழையும் இரந்து உண்பர்கள். ஆதலால் செல்வமானது நிலையில்லாதது என்று நாலடியார் வழி அறிய முடிகிறது.

"கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அடுக்கிய மூவுலகும் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படும் சொல்.'' (மேலது 100, ப.எண்.19)

குறுங்கோலால் ஒலிக்கப்படும் முரசினது ஒலியைக் காத எல்லை வரையில் உள்ளோர் கேட்பார்கள். மேகத்தின் இடியோசையை ஒரு யோசனை தொலைவிலுள்ளோர் வரை கேட்பார்கள். தக்கச் சமயத்தில் செய்யப்பட்ட உதவி பற்றிய புகழுரை மூன்று உலகங்களில் உள்ளார் அனைவரும் கேட்பார்கள். அதனால் சிறந்தது எதுவென்றால் ஒருவருக்கு துன்பப்படும் நேரத்தில் கிடைக்கப்படும் உதவியே ஆகும்.

"மன்றம் கறங்க மணப்பாறையாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் -பின்றை
ஒலித்தலும் உண்டாமென்றுய்ந்துபோம் ஆறே
வலிக்குமாம் மாண்டார் மனம்.'' (பா எண.23. ப.எண்.10)

மணமேடையில் - திருமண மண்டபத்தில் மங்கல ஒலி கேட்டுக்கொண்டிருக்கும் போதே அங்குள்ள நிலை மாறாலம். அந்த நேரத்திலேயே மணமகன் அல்லது மணமகள் இறக்கும் சூழ்நிலை திடீரென்று ஏற்படலாம். அப்போது அந்த மேடை பிண மேடையாகிப்போகும். அங்கேயே சாவுப்பறை ஒலிக்கும். அதனால் இன்பத்தையும், துன்பத்தையும் தாங்கிக்கொள்ளும் மன உறுதியை மனிதன் பெற்றிருக்க வேண்டும்.

"விளக்குபுக இருள் மாய்ந்தாங்கொருவன்
தவத்தின் முன் நில்லாதாம் பாவம் - விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது'' (மேலது 51 ப.எண்.22)

விளக்கு ஏற்றியவுடன் ஒளிபரவ இருள் விலகிச் செல்வதைப் போல, தவம் செய்பவர்களைத் தீமை அண்டாது. ஏற்றிய விளக்கில் எண்ணெய் தீர்ந்துவிட்டால் விளக்கும் அணைந்து அங்கு இருள் சூழ்ந்து வருவதைப்போல, நல்வினை தீர்ந்தவுடன் ஒருவனைத் தீவினை பற்றிக்கொள்ளும். அதனால் மனிதனை தொடர்ந்து தவம் செய்ய விடாமல் தடுத்து விடும். ஆதனால் மனிதன் வாழ்நாள் முழுவதும் தன்னால் முடிந்த உதவிகளை செய்துகொண்டே இருந்தால் அவனுடைய வாழ்வில் துன்பம் ஏற்படாது.

"மாண்டகுணத்தொடு மக்கட்பேறில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால் - பூண்ட
மிடியென்னும் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றிந்தார்.'' (மேலது 56, ப.எண். 24)

சிறந்த குணநலன்களும், அறிவுடைய மக்கள் பேறும் இல்லை என்பதற்காக, ஒருவன் கட்டிய மனைவியை விட்டுவிட்டு வாழ முடியாது. வாழ்க்கையில் வறுமையால் துன்பம் அடையவும் நேரும். அதனால் தான், கற்றறிந்த பெரியோர் இளமையில் துறவு பூணுவதையே இனிதென்று போற்றினார்கள்.

முடிவுரை

மனிதன் தம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளையும், அறிவுரைகளையும் நாலடியார் எடுத்து இயம்புகின்றது. இதனால் மனிதன் சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் தன்னுடைய இயல்பை மாற்றிக்கொண்டால் மட்டுமே இவ்வுலகில் எந்தவித துன்பமும் இல்லாமல் வாழ முடியும் என்றும் நாலடியார் மூலம் அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. *தமிழ்நூல் வரலாறு.* பாலூர் கண்ணப்ப முதலியார் நாம் தமிழர் பதிப்பகம், நவம்பர் 2010.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

2. *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.* தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், டிசம்பர் 2014,
3. பதினெண் கீழ்கணக்கு நூல்கள், டாக்டர்.எம். நாராயண வேலுப்பிள்ளை, நர்மதா வெளியீடு, நவம்பர், 2000
4. *நாலடியார்.* ஞா.மாணிக்கவாசகன். உமாபதிப்பகம் ஜனவரி 2003.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

Life Morals Instructed in Tamil Literary Works

மா. முனிசாமி, முனைவர் பட்ட ஆய்வாளர்,
மதுரை காமராசர் பல்கலைகழகம், அருள் ஆனந்தர் கல்லூரி, மதுரை

Abstract

The present article encompasses the morals of life instructed in the select Tamil literary works. It is a fact that life is a one to be lived with cartain virtues; without them the life of an individual seems futile. Tamil people are the ethinic group who trust virtues are the sources of attainment of holy nature. Many Tamil scholars gave much significance to moral ethics and that are widely seen in Tamil Literary works. Most of the themes centeres around the life of the poets, kings, devotees, education, wealth, love, valour and etc. Therefore, the paper give a narrow study on the literary works that give glimpses of moral ethics to be followed in life.

Keywords: Life Morals, Instructed in Tamil Literary Works

முன்னுரை

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி" என்று சங்ககாலப் புலவர்கள் கூறியுள்ளனர். முதல் குடியாகவும், மூத்த குடியாக வும் தமிழ்மொழி என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். தமிழக மக்களின் வாழ்வு, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றை எடுத்துக்காட்டுவது தமிழ் இலக்கியங்கள் என்பதில் ஐயமில்லை. தமிழக மக்கள் வாழ்ந்த காலத்திலிருந்தே இன்று வரை நாம் இலக்கியங்கள் வழியாகத்தான், மரபுகளும் பழக்க வழக்கங்களும் பின்பற்றி வருகின்றோம். அதனால் தான், தமிழ் இலக்கியங்கள் தமிழக மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடி என்பர். தமிழ் இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள் பற்றி இக்கட்டுரையின் கீழ் காண்போம்.

புலவர்கள்

புலவர்களை 'பழுமர முற்றிய பறவையினம்' என்று பொருநராற்றுப்படையில், குறிப்பிடுகின்றனர். அரசர்களை பழுத்த பழம் முற்றிய மரமாகவும், அவர்களை பாடி மகிழ்வித்து பரிசுகள் பெறச் செல்லும் பறவையினமாக புலவர்களை குறிப்பிடுகின்றனர். அதே நேரத்தில் அரசர்கள் தவறு செய்யும் நேரத்தில் அவர்களை இடித்துரைத்து நல்வழிப்படுத்தும் ஆசானாக இருந்திருக்கின்றனர்.

"சினமே காமம் கழி கண்ணோட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்பு மிக உடைமை
தெறல் கடுமையோடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழி நடையாகும்"

என்று பதிற்றுப்பத்து நூலில் பாலைக் கௌதமனார் என்னும் புலவர், பல்யானை செல்கெழு குட்டுவனுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் என்பதை அறியலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

அரசர்கள்

நாட்டை ஆட்சி செய்யும் அரசர்கள் தங்கள் நாட்டையும் நாட்டு மக்களையும் நீதி தவறாமல் ஆட்சி புரிவதே தங்களின் கடமையாக வாழ்நதிருந்தனர். “மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே” என்றும், “புகழெனின் உயிரும் கொடுப்பர், பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலார்” என்ற பாடலுக்கேற்ப பகழ் பட மட்டும் வாழ்ந்து பழி ஏற்படாது வாழ்ந்த எத்தனையோ அரசர்களை நாம் தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறிந்திருக்கின்றோம். உதாரணமாக பசுவின் கன்றுக்காக தனது மகனை தேர்க்காலில் இட்டு கொன்ற மனுநீதிச் சோழன், புறாவின் தசைக்காக, தன்னுடைய கால் தொடை தசையைக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி, மன்னர்களையும் நாம் படித்திருக்கின்றோம். மேலும் தமிழ்மொழி மீது ஏற்பட்ட பற்றின் காரணமாக, தனக்கு கிடைத்த நெல்லிக்கனியை ஔவையார்க்கு கொடுத்து அருளிய அதியமானின் கொடைத்திறத்தையும் நன்கு அறியலாம். “மக்கள் எவ்வழியோ மன்னர் அவ்வழி” என்று வாழ்ந்திருக்கின்றனர். மன்னர் பெருமக்கள்.

அடியவர்கள்

இறைவன் மீது நாம் கொண்டுள்ள தூய அன்பினை பக்தி என்பர். அதாவது இறைவனுக்கு அடிமையாவது என்றும் கொள்ளலாம். இறைவன் மீது கொண்டுள்ள தூயவர்களை அடியவர்கள் என்கின்றோம். அதன் வழியில் இறைவனை நினைப்பதற்கு மனிதப் பிறவியே சிறந்தது என்கிறார். திருநாவுக்கரசர்.

“குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயின் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீரும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே”

என்கிறார் தேவாரப் பாடலிலே

மேலும் தாயுமானவர் தன்னுடைய நீதிப்பாடலிலே பக்தர்களாகிய அடியவர்களையே நான் தொழும் தெய்வம் என்கிறார்.

“கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலும்
நண்ணுகின்றவர் நான் தொழும் தெய்வம்” என்கிறார்.

ஜாதிய முறை

சங்க காலத்திற்கு முன் வேதகாலத்தில் நால் வகை வருணம் என்று சொல்லப்படும் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் (சூத்திரர்) என்று பிரிக்கப்பட்டிருந்தனர். அரசர் இறைவனின் மார்பிலும், அந்தணர் நெற்றியிலும், வணிகர் கால் தொடையிலும், வேளாளர் எனும் சூத்திரர் கால் பாதத்திலும் பிறந்ததாக, பார்ப்பனர்களால் மக்கள் பிரிக்கப்பட்டு உயர்வு, தாழ்வு என்ற நிலையில் சமூகத்தில் நிலவி வந்தன. சூத்திரர்களை கோவிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கிய காலத்தில் திருநாவுக்கரசர் இந்த சாதி முறையை உடைத்தெரிகின்றார்.

“சாத்திரம் பல பேசும் சளக்கர்கால்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிந்தீரேல்
மாத்தரைக்குள் அருளும் மாற்பேரரே”
“ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும்
கங்கைவார் சடைகரந்தார்க்கு அன்பர் ஆகில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவளரே"

என்று பாடி இறைவன் மீது கொண்டுள்ள உண்மையான பக்தனுக்குத்தான் இறைவன் காட்சியளிப்பார் என்பதை உறுதியாக எடுத்துரைக்கின்றார்.

திருநாவுக்கரசரின் கூற்றைப்போல பாரதியாரும் தன்னுடைய பாடலிலே, பார்ப்பனர்களைச் சாடி, உண்மையானவர்களே மேலோர்கள் என்று கூறுகின்றார்.

"சூத்திரனுக்கொரு நீதி, தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடும் ஆயின்
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"
"வையகம் காப்பவரேனும் சிறு வாழைப்பழக்கடை
வைப்பவரேனும் பொய் அகலத் தொழில் செய்து பிறர்
பொய் அகலத் தொழில் செய்தே - பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கனும் மேலோர்" - என்று கூறுகின்றார்.

கல்வியின் நிலை

சங்ககாலம் தொட்டு மக்களின் கல்விநிலை மிகவும் போற்றிதலுக்குரியவையாக இருந்துள்ளன. 'கற்றவர் கண்ணுடையவர் கல்லாதவர் கண்ணிரண்டும் புண்ணுடையவர்' என்கிறார் வள்ளுவர்.

"ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் யார் அரசு வெல்லும்"

ஒரு குடியில் பலர் பிறந்திருந்தாலும் கல்வி கற்றவனே அறிவுடையவனாக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று புறநானூற்றுப் பாடல் காட்டுகிறது.

மூதுரை என்னும் நூலில் ஔவையாரும் கல்வி கற்றவன் ஒரு நாட்டை ஆளும் மன்னனை விட சிறந்தவன் என்று கூறுகின்றார்.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையோன் - மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்று கல்வி கற்றவர்களையே உயர்வான இடத்திற்கு வைத்து போற்றினர்.

செல்வம்

சங்ககாலத்திலிருந்து மக்கள் செல்வ செழிப்புடன் வாழ்ந்திருக்கின்றனர். அதனால் தான் கஜினிமுகமது என்ற மன்னன் நம் நாட்டின் மீது பதினெட்டு முறை போர் தொடுத்திருக்கிறான். 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்ற பாடலின் வரிக்கு ஏற்ப ஆண்கள் கடல் கடந்து பொருள் தேட சென்றிருக்கிறார்கள். என்று கூறுகிறார் ஔவையார்.

கோழியை பொற்குழையால் எறிதல்

நெல்லை திண்ண வரும் கோழகளை பெண்கள் தங்கள் காதிலே அணிந்திருக்கின்ற பொற்குழையை கழற்றி எறியும் அளவிற்கு செல்வ வளம் இருந்திருக்கின்றன.

"நேரிழை மகளிர் உணங்குனாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்கால் கணங்குழை
பொற்கால் புதல்வர் பரவி இன்றி உருட்டும்
முக்கால் சிறுதேர் முன் வழி விலக்கும்"

வறுமை

தமிழக மக்களின் வறுமை நிலைகளையும் சிறுபாணாற்றுப்படை நூலிலே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தெரிவிக்கின்றது. குப்பையில் தழைந்த குப்பைக்கீரையை வேக வைத்து, உணவாக பிறர் அறியா வண்ணம் கதவை அடைத்து உண்டு வாழ்ந்தனர்.

"குப்பை வேளை உப்பிலி வெந்தை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலோடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருந்தும்"

என்று கூறுகிறார் நல்லூர் நத்தத்தனார்.

காதல்

"ஒத்த தலைவனும், தலைவியும் பிறர் அறியா வண்ணம் நுகரும் அன்பு" காதல் வாழ்க்கை என்பர்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே"

என்று குறுந்தொகைப் பாடல் வாயிலாக தாய் அரியாது, தந்தையும் அரியாது, செம்மண்ணும் நீரும் கலந்த செந்நீர் போல தலைவன், தலைவியும் இரண்டறக் கலந்த காதல் மணம் புரிகின்றனர்.

வீரம்

உலகத்திலே, வீரத்தின் விளைநிலமாகக் கருதப்படுவது தமிழகம். தமிழகத்தில் பிறந்த ஆண் குழந்தையின் கையில் வாளைக்கொடுத்து போர் செய்ய அனுப்புவது தமிழர்கள் போர்க்களத்திலே எதிரிக்கு பயந்து புறமுதுகு காட்டி ஓடாமல், மார்பிலே வடு பெற்று உயிரை விடும் ஆண் மகளை சிறந்த வீரனாக கருதப்படுகின்றான்.

"பொரு தடக்கை வாளங்கே?
மணி மார்பெங்கே? போர் முகத்தில் எவர்வரினும் புறங்கொடாத
பருவயிரத் தோளெங்கே? எங்கே?"

என்று பயிரவியைக் கெட்பாளைக் காண்மின்! காண்மின்! என்று கலிங்கத்துப் பரணியிலே செயங்கொண்டார் விவரிக்கின்றார்.

பெண்களின் நிலை

சங்க காலம் முதல் இக்காலம் வரை பெண்களின் நிலைப்பாட்டை ஆராய்ந்து பார்த்தால் பெண்களின் நிலை உயர்நீது கொண்டே இருக்கின்றன. பெண்பாற் புலவர்களாக ஔவையார் முதல், அகத்திணையில் சுட்டப்படும் தலைவி, பாங்கி, பகதி இலக்கியங்களில் காரைக்காலம்மையார், ஆண்டாள் போன்றவர்கள் மட்டுமல்லாது பெண்களின் சமூகத்திற்கு பெருமை சேர்த்திருக்கின்றனர். 21-ம் நூற்றாண்டு கால தமிழக முதல்வர் ஜானகி அம்மாள், ஜெ.ஜெயலலிதா அவர்களும் நாட்டை ஆண்ட ஆளுமை மிக்க பெண்மணிகளாகவும், பெண் சமூகத்திற்கு முன் மாதிரியாகவும் வாழந்திருக்கிறார்கள் என்பதில் மறுப்பில்லை. மேலும் பேருந்து ஓட்டுபவராகவும், வானவூர்தி ஓட்டுனர்களாகவும், நாட்டை ஆளும் பிரதமராகவும் பெண்கள், ஆண்களுக்கு இணையாக வளர்ந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

பொதுவான அறக்கருத்துக்கள்

- 'எத்திசைக் செல்லினும் அத்திசைச் சோறே' - ஔவை
- 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' - ஔவை
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' - கனியன் பூங்குன்றனார்
- 'அறம் புரிந்து அல்லவை நீக்கல் இனிது' - பூதஞ்சேந்தனார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

- 'பிறர் மனையாள் பின்னோக்கும் பேதைமை இன்னா' - கபிலர்
- 'கற்றலிற் கேட்டலே நன்று' - முன்றுரையரையனார்.
- 'ஓதலின் சிறந்தது ஒழுக்கமுடையமை' - கூடலூர் கிழார்.
- 'நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு' - மு. அரையனார்.
- 'ஏதிலார் இல்கண் குருடனாய்' - சமண முனிவர்.
- 'துன்பம் தோற்றம் பற்றே காரணம்
  இன்பம் வீடே பற்றிலி காரணம்' - மணிமேகலை
- 'மண்டினி ஞாலத்து வாழ்வோர்க கெல்லாம்
  உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே' - மணிமேகலை
- 'பேசுவது மாணம் இடை பேணுவது காமம்' - கம்பர்
- 'பழகினும் பார்ப்பாரைத் தீ போல் ஒழுகல்' - நல்லாதனார்
- 'எழுத்தறிவித்தவன் இறைவன்' - அதிவீரராமபாண்டியன்
- 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி
  எங்கு நோக்கினும் வெற்றி' - பாரதியார்

முடிவுரை

சங்ககாலம் முதல் இக்காலம் வழைர தமிழக மக்களின் வாழ்வியலும், வாழ்வினை ஒட்டி அமைந்துள்ள நெறிமுறைகளும் நாம் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். உலக மொழிகளிலே தமிழ் மொழிக்கென சிறப்பிடம் உலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றன. அதே போல் தமிழருடைய ஒழுக்க நெறிகளை உலக மக்கள் திரும்பிப் பார்க்கின்றனர். இன்னும் எவ்வளவோ தமிழக மக்களின் கலாச்சார பண்பாடுகள் ஒளிந்து கிடக்கின்றன. அவற்றையெல்லாம் நாம் இலக்கியத்தின் வாயிலாக வெளிக் கொண்டு வந்து உலக அரங்கத்திலே ஏற்றிட பாடுபடுவோம் என்று கூறி இக்கட்டுரையின் வாயிலாக தமிழர்களுடைய வாழ்வியல் நெறிகளை ஒரு சில பண்பாட்டு கலாச்சாரத்தை மட்டுமே பதிவு செய்து கொள்கின்றேன்.

துணைநூற்பட்டியல்

1. பாலூர் கண்ணப்ப முதலியார். *தமிழ்நூல் வரலாறு*. நாம் தமிழர் பதிப்பகம், நவம்பர் 2010.
2. தமிழண்ணல். *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு*. மீனாட்சி புத்தக நிலையம், டிசம்பர் 2014,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பழந்தமிழரின் புழங்குப்பொருளில் மட்கலம்

Mud Wares in the Utensils of the Classical Tamil People

முனைவர் சி.ராம லெட்சுமி, தமிழியல் துறை,
உதவிப் பேராசிரியர், ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி,

Abstract

The present article conducts a study on the mud utensils used by the Tamil people of the Sangam times. Even though, they used Gold, silver and Iron utensils the use of mud are spoken vastly of its antiqueness; because it reveals the culture of the Tamils from the different parts of the world. Pottery and Mud wares are the occupation and used utensils of the classic Tamil people. They are of many types. They are named as Thali, Kulisi, Sadi, Thasumbu, Kuppi, Kadi, Thadavu, Thalam, Mandai and Panaiodu. Therefore, the study focuses on the different types of mud wares used by the Tamil people.

Keywords: Mud Ware Utensils, Classical Tamil People

முன்னுரை

சங்க கால மக்கள் பல்வேறு வகையான புழங்குப் பொருட்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அவை மண், பொன், வெள்ளி, இரும்பு போன்றவற்றால் செய்யப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்புழங்கு பொருட்களில் மண்ணால் செய்யப்பட்ட புழங்கு பொருளில் மட்பாண்டமும் ஒன்று. அம்மண்பாண்டங்கள் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியத்தில் காணக்கிடக்கின்றன. அவை தாழி, குழிசி, சாடி, தசும்பு, குப்பி, காடி, தடவு, தாலம், மண்டை, பானையோடுகள், போன்ற பெயர்களில் மண்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை எவ்வப் பெயர்களில் எந்தெந்த தேவைக்காகப் யாரால் பயன்படுத்தப்பட்டன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மட்கலங்கள்

மனிதன் கண்டுபிடித்த மிகவும் பழமையான தொழில்களில் மட்பாண்டங்களை வனைதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. புதிய கற்காலத்தில் மனிதன் உணவுக்காக அலையும் நிலையிலிருந்து வேளாண்மை செய்து உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் நிலையை எய்தினான். உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை சேமித்து வைக்கவும், அன்றாட வாழ்க்கைத் தேவைக்காகவும் மட்பாண்டங்களை உருவாக்கினான். புதிய கற்காலத்தில் மட்பாண்டங்கள் முதலில் கையாலும், பின் சக்கரத்தினாலும் செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் இரும்புக் காலத்தைச் சார்ந்த பெருங்கல் பண்பாடு முழுவீச்சில் இருந்த பொழுது மட்பாண்டத்தொழில் மிகவும் உன்னத நிலையில இருந்தது. அக்காலக்கட்டத்தில் மக்கள் தொகையும் சற்று பெருகியதால், அவர்களின் தேவையும் விருப்பமும் வேறுபட்டதும், வளர்ச்சியடைந்ததாயும் இருந்தன. ஆகவே மக்களின் தேவைக்குத் தகுந்தவாறும், விருப்பத்திற்குத் தகுந்தவாறும் அதிகமான மட்பாண்டங்களை, மட்பாண்டத் தொழிலாளர்கள் ஆக்கித்தர வேண்டியிருந்தது. அதனால் பலவித வடிவங்கள் கொண்ட மட்பாண்டங்கள் நிறைந்த அளவில் தயாரிக்கப்பட்டன. புதிய கற்காலத்தில் மனிதன் மட்பாண்டங்கள் செய்ய கற்றுத் தேர்ந்தான் என்பர் தொல்லியல் அறிஞர். இருப்பினும் பெருங்கற்காலத்தில் மட்பாண்ட தொழில்கள் அதிகமாக வளர்ச்சி பெற்றிக்கவேண்டும். முதுமக்கள் தாழிகள், சிறுசிறு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தைச் சார்ந்தன. ஆனால் பெருங்கற்காலத்தைச் தொடர்ந்து வரக்கூடிய சங்ககாலத்தில் மட்பாண்ட தொழில்கள் பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன. மட்பாண்டம் செய்வோரைக் "கலஞ்செய்கோ" எனக் குறிப்பிடுகின்றன. "வேட்கோ" (Tamil Lexicon, Vol.V.p.3821) என்ற பெயரும் இவர்களுக்கு உண்டு.) தொல்பழங்காலத்திலிருந்தே மக்கள் தங்கள் வாழ்வோடு தங்களைச் சூழ்ந்துள்ள முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லது வழிபட வேண்டியவை என்று கருதியவற்றை பாறைகளில் வரைவுகளாகத் தீட்டினர். அதன் தொடர்ச்சியாக ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கி மட்பாண்டங்கள் செய்யத் தொடங்கிய காலங்களில் அந்த வரைவுகளை கீறல்களாக. குறியீடுகளாக மட்பாண்டங்களில் வடித்தனர். பானைகளைச் சுடுவதற்கு முன்னர், சுட்ட பின்னர் இத்தகைய வடிவங்களை உருவாக்கியுள்ளனர்.

கலம் வளையும் குயவன்

பழைய நிலவுரிமையைக் குறிப்பின், வேட்கோ குயவன் - குலத்து இளையோா், கலம் வனைதற்குச் சக்கரத்தின் கண் வைத்த பச்சை மண்ணாகிய கனத்த திரள் போலக் குளிா்ந்த தண்பணை நாடு சோழ நலங்கிள்ளி கருத்திற்கொண்ட முடிவையுடைத்து, என்று கோவூா்கிழாா் பாடுகிறாா். (புறம்.32:89)

கூம்பு வடிவ சுடுமான் பானை

இறந்தவர்களை அடக்கம் செய்வதில் பல மரபுகள் உள்ளன. ஒவ்வொரு இனக்குழுவும் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றி இருக்கலாம். தாழிகளையுடையது பெருங்காடு (புறம்.364:15) என்று கூகைக் கோழியார் பகையரசா் பலரை வென்று அகன்ற உலகத்தை இனிமையாக ஆண்டு இறந்த மன்னரைக் கவித்த தாழிகளையுடையது இடுகாடு என்கிறாா். (பதி.44:21-23) மாலைப்பொழுதின் நிலவொளியில் உடன்போக்கு மேவிய மகளை பின்னே சென்று தேடும்படி என்னைக் கொள்ளா தொழிந்த கூற்றம் வலிமையழிந்து பெரிய தாழியிலிட்டுக் கவிக்கும்படி இறந்தொழிவதாக என்று மகட்போக்கிய நற்றாய் கூறினாள். (நற்.271:10-12)

நெடுமாவளவன் தேவருலகத்தை அடைந்தனன் புகழும் பெற்ற அவனைக் கவிக்கும் இடமகன்ற தாழியை வனைய விரும்பும் குயவனே, அவன் புகழுக்குக் ஏற்பப் பெரிய நிலவட்டத்தைத் திகிரியாகவும், மேரு மலையை மண்ணாகவும் கொண்டு பானையை வனைய நின்னால் இயலுமோ? என்று கிள்ளி வளவன் இறந்தபோது ஐயூா் முடவனாா் கையுற்று வினவினாா். (புறம்.228:10-15) இடுகாட்டில் கவிக்கப்பட்ட செய்ய தாழியினது குவிந்த புறத்தேயிருந்து கழுகும், பொகுவல் என்னும் புள்ளும் அஞ்சாவாய்ப் பேயினத்துடன் கூடி இயங்கும். (புறம்.238:1-4)

சகடத்திலுள்ள ஆரத்தைப் பொருந்தி வந்த பல்லி போலச் சுரங்கள் பலவற்றையும் தலைவனோடே சேர்ந்து வந்த எமக்கும் அருள் செய்து யாமும் அவனோடு கூடியிருக்கும் படி ஈமத்தாழியினை அகலியதாக வனைவாயாக? எனத் தலைவனை இழந்த ஒருத்தி குயவனை வேண்டுகிறாள். (புறம்.256) மகட்போக்கிய தாய் மணலில் கிடந்த பாவையை எடுத்துத் தாழியிலுள்ள குவளையில் வாடல் மலரைச் சூட்டி என் அருமகளே என அழுதாள். (அகம்.165:7-13)உயா்ந்த நிலையினையுடைய தாழியில் பனங் குடையால் முகந்த நீரினை ஊற்றி வயலைக் கொடி வளா்க்கப் பெற்றது. (அகம்.275:1-3) என்று கயமனாா் பாடுகிறாா். கிளிகளும் தீம்பாலை உண்கின்றில தாழிகளும் பல மலா்களைக் கொண்டில என மகட்போக்கிய செவிலி வருந்தியுரைத்தாக நக்கீர் பாடுகிறாா். (அகம்.369:4-6) குடிலின் கண்ணிருந்த தாழியிடத்தே சாடியிடத்தே தழைத்த பருத்தியின் ஒங்காய்களை ஆண்பறவை பேடைகட்கு ஊட்டும் என்று குடவாயிற் கீரத்தனாா் பாடுகிறாா். (அகம்.129:6-9)

தாழி

முதுமக்கள் தாழி என்பது பண்டையத் தமிழர்களிடையே இருந்த ஈமச்சின்னங்களில் ஒன்று. இறந்த பின்பு உடலைத் தாழியில் வைத்துப் புதைக்கும் முறையான முதுமக்கள் தாழி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பண்டைத் தமிழர்களிடையே வழக்கத்திலிருந்த பழக்கம். தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் கிடைத்த தாழிகளில் பெருங்கற்காலச் சின்னங்களின் தன்மைகளை உற்று நோக்குவது அவசியமாகிறது. இவ்வகையான ஈமச்சின்னங்கள் இறந்தவர்களின் எலும்புகளை தாழிகளில் கொண்டிருப்பதாகும். தமிழகத்தில் கிடைகப்பெற்ற எல்லாவகையான ஈமத் தாழிகளிலும் சில மனித எலும்புகள் காணப்படுகின்றன. ஒரு சில இடங்களில் மனிதனின் முழு உடல் எலும்புகளும் கிடைக்கின்றன. மனிதன் இறந்தபின் பிணத்தைத் திறந்த வெளியில் சில காலம் விடப்பட்டுப் பிணத்திலிருந்து தசைகள் மறைந்த பின்பு எலும்புகளைப் பொறுக்கியெடுக்கப்பட்டுத் தாழியில் இட்டிருக்க வேண்டும் என்று தொல்லியல் அறிஞர் குருராஜராவ் அவர்கள் குறிப்பிடுகிறார்.

அகன்ற இடத்தையுடைய பானை

பெரிய இடத்தையுடைய குழிசி பானை பாலின்மையால் கவிழ்ந்து நெய்கடைதலை மறந்தது. பரிசிலை விரும்பியிருந்த இரவலரது விருப்பம் பழுதாகும் படி அடப்பட்ட குழிசியினின்றும் சோறின்றி எரி புறப்பட்டாற் போல அறனில் கூற்றம் வெளிமான் உயிரைக் கொண்டது. (புறம்.237:6-9) மறவன் தான் கவர்ந்து வந்த ஆநிரை மிகப் பலவாயினும் பால் முதலியன பெய்யப்படாமையின் சிறிதும் வெள்ளிய முகந்தோன்றாத குழிசியோடு நாட்காலத்தில் உறை தெறிப்பக்கடையும் மத்தொலியும் கேளாதவாறு அவ்வானிரையைப் பிறர்க்குக் கொடுப்பதில் வல்லனாயினான். (புறம்.257:12.13) ஆயமகள் தயிர் புள்ளியாகத் தெறித்த வாயையுடைய குழிசியைப் பூவாற் செய்த சுமட்டின் மேல் வைத்துச் சுமந்து சென்று நாட்காலையில் மோரை விற்பாள். (பெரு.159) ஆண்மாக்கள், கயிற்றால் பிணித்தலையுற்ற குழிசியில் குடத்தில் உள்ள ஓலையை எடுத்துக் கொள்வதற்கு அக்குடத்தின் மேலிட்ட இலச்சினையை ஆய்ந்து நீக்குவர். (அகம்.77:7-8)விளாம்பழம் இட்டு வைத்தலால் மணம் கமழ்கின்ற நிறைந்த குழிசியில் தேய்ந்த தண்டினையுடைய மத்திட்டு வெண்ணெய் தோன்றக் கடைதலின் விடியலில் ஓசை எழும். (நற்.12:1-3)

பானையோடுகள்

கருப்பு, சிவப்பு மட்பாண்டங்கள் சங்ககாலத்தைச்சேர்ந்தவையாக அறியப்படுகின்றன. பழந்தமிழ் மக்கள் புளிப்பான பதனீர் வைத்திருந்த குடம் பற்றி கீழ்க்கண்ட பாடல் வரி சுட்டுகிறது. (அகம்.37) இந்த மண்குடங்கள் ரோமானியப் பாண்டங்கள் அல்லாதவைகளையே குறிக்கின்றன. (அகம்.77) என்ற பாடலில் கயிற்றால் கட்டப்பெற்ற குடத்தினுள்ளே, பெயர் எழுதிய ஓலைகளைப் போடுவர். குடம் இலச்சினையிட்டு மூடப்பட்டிருக்கும். தேர்தல் நடத்தும் ஆவணமக்கள் அந்த இலச்சினையை நீக்கிவிட்டு, உள்ளே கைவிட்டு ஓலைகளை எடுத்து எண்ணி முடிவு கூறுவர். இச்செயலானது ஊர்த்தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையாகவோ அன்றி நிலத்தினை வேளாண்மைக்கு விடுவதற்கான குறியீடாகவோ இருக்கலாம். (அகம்.86) இப்பாடல்வரிகள் சங்ககால தமிழரின் திருமணநிகழ்ச்சியைக் காட்டுவதாகும். பிள்ளைகள் ஈன்ற முதுபெண்டிர் தங்கள் தலையில் நீர்நிறைந்த குடத்தினைச் சுமந்து கொண்டும், மண்டை எனப்படும் அகல்களைக் கொண்வாறும் மணப்பெண்ணை நீராட்ட வருவர்

வலிய வாயினையுடைய சாடி

நெய்தல் நில மக்கள் கொழியலரிசிக் கூழைச் சமைத்து வலிய வாயினையுடைய சாடியில் இட்டு வெந்நீரில் வேகவைத்து நறுங்கள்ளை சமைத்தனர். (பெரும்.274-280) சிறிய வீட்டின் முற்றத்தில் உள்ளதாகிய முதிய வாயையுடைய சாடியில் செம்மண் நிலத்து மடுவில் சிறிதளவாக ஊறிய நீரை முகந்து வைத்தனர். (புறம்.319:1-4) உண்டாட்டின்கண் தானைத் தலைவன் ஒருவன் நாரால் வடிக்கப்பட்டுப் பூக்களையிட்டு முதிர்வித்த சாடியில் உள்ள கள்ளை வாழ்த்தி, சீறூரைப் புரவாக கொள்ளேன், மருதநிலத்தூர்களையே கொள்வேன் என மொழிந்தான். (புறம்.297:4-8) மறவர் ஒருகால் உண்பதன் முன்பே பெரிய ஆனிரையை ஊர்ப்புறமெல்லாம் நிற்குமாறு கொண்டு வரும் வீரன் விடாய் மிகவுடையனாய் வருவான்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஆதலின் முதிர்ந்த மதுவை உடைய சாடியை பாண்டத்தை பேணி வைப்பார்கள் என உலோச்சனார் கள் வழங்குவோனுக்குக் கூறுவது போலப் பாடியுள்ளார். (புறம்.258:6-11) பலநாளும் வடிக்கப் பெற்ற கள் நிறைந்த சாடியைக் கள் முகக்கும் கலம் உடைத்திடின் மழைத்துளி போலத் தெருவெல்லாம் கள் துளிக்கும். (அகம்.166:1-3) நாவாய் வழங்கும் பெருந்துறைக்கண் உள்ள செருக்கு மிகுகின்ற கள்ளையுடைய சாடி போன்றவள் தலைவி (நற்.295:6-7) சோழரது ஆர்க்காட்டு என்னும் பதியிலே கள்ளையுடைய தடவில் சாடியில் வண்டுகள் ஒலித்து ஆரவாரித்தன. (நற்.227:5-7) வேற்று நாட்டின்கண் ஆனிரை கவரச் சென்ற வீரன் மிகுந்த ஆநிரையோடு விரைந்து வருவானாகலின் பிறர்க்கு வார்ப்பதைத் தவிர்த்துக் கள் விருப்பமுடையவனான அவனுக்கு முதுகட்சாடியைக் காத்து வைப்பாயாக என்று உண்டாட்டுகளுக்கிடையே மறவன் ஒருவன் கூறினான். (புறம்.258:9-11) தலைவன் தலைவிக்குச் செய்த தலையளி சோழரது ஆர்க்காட்டிடத்தே கட்சாடியின்கண் வண்டுகள் ஒலித்து நீங்காத தேர் வழங்கும் தெருவில் எழும் ஆரவாரத்தைப் போன்று கௌவையை தோற்றுவித்தார். (நற்.227:6-9) பறம்பே! மட்டு (மதுச்சாடி) வாய் திறப்ப, ஆட்சிக்கிடாயை அறுப்பத், துவை, ஊன் சோற்றுடன், ஈயும் வெரு வளங்கொண்டு நட்டனை, முன் பாரி இறப்ப, நீர்வார்கண்ணேமாய், அவர் மகளிர்க்குரிய கணவரைத் தேடிச் செல்கின்றோம் எனக் கையறுநிலையாகக் கபிலர் பாடுவர். (புறம்.113:1)

உழவர் மகளிர் வெண்ணெல்லை கொடுத்தல்

வேட்டுவன் கொண்டு வந்த மான்தசை சொரிந்த கடகமும் இடைமகள் தயிர் கொண்டு வந்த தசும்பு மிடாவும் நிறையுமாறு உழவர் மகளிர் வெண்ணெல்லை முகந்து கொடுப்பர், (புற.33:1-5) சுடுமண் தசும்பில் மண்ணாற் செய்து சுடப்பட்ட தாழியில் மத்தாற் கலக்கப்பட்ட போது வெப்பம் மிக்க வழி நன்கு திராளாது சிதறிக்கிடந்த வெண்ணெய் போன்ற உப்பும் பூத்த களரையுடையது காடு. (நற்.84:6-8)

மன்னர்களின் கொடை

கரிகாற் பெருவளத்தான் துணையாய்க் கூடின இனத்தோடு கூடித் தசும்பினை மதுக்குடங்களை நுகர்ந்து தொலைத்தப் பாண் சுற்றத்தைப் பாதுகாத்தான். நம்பி நெடுஞ்செழியன் இனிய செறிவையுடையதாகிய தசும்பினைப் பலர்க்கும் வழங்கினான் (புறம்.239:16) இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, கிணைப் பொருநர்க்கு மணியும் பொன்னும் முத்தும் உடையும் கள் நிறைந்த தசும்பும் அவர் வருந்தாது நிற்குமாறு கனவிலே கண்டதுபோல நனவிலே நல்கினான். (புறம்.377:16-20) கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் இஞ்சியும் நறும்பூவும் விரவித் தொடுத்த மாலையினை அணிந்து புறத்தே சந்தனம் பூசப்பெற்ற தசும்புகளை அசைகின்ற இருக்கையில் வைத்து அவற்றில் நிறைந்த கள்ளினை ஓம்பா ஈகையால் வழங்குவான். (பதி.42:10-13) நிரம்புதலையும் குறைதலையும் அறியாத கோக்காலியினிடத்தே நிறைந்து நெடுநேரம் இராத தசும்பில் உள்ள கூத்தர் உண்டும் குறையாத கள்ளை அளித்தலையுடைய வண்கை வேந்தே என்று கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் சிறப்பிக்கப்படுவான். (பதி.33-36)களிப்பு மிகுதியால் அசையும் தசும்பினின்றும் வார்த்த கட்டெளிவைக் கூத்தர் களங்கள்தோறும் பெற்றுண்பர் (மலை.463-464) பரிசில் மக்களின் சமைப்பதற்குரிய கலம் நிறையுமாறு பெறும் உணவுப்பொருட்களின் விலையாக நலங்கிள்ளி வஞ்சி மாநகரைத் தருவான் என கோவூர்கிழார் பாடுகிறார். (புறம்.32:1,2) அதியமான் நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்த போது ஔவையார் அறிவும் புகழும் உடையோர் மாய உலகம் வறிதாகிவிடவில்லை. அதனால் கலன்களை பாண்டங்களை காவினோம். இசைக் கருவிகள் வைக்கும் பையைக் கட்டினோம் என்று புறப்பட்டார். (புறம்.206:8-10) சோற்றையும் கூழையும் வேண்டி உள்ளே ஒன்றுமில்லாத வறுங்கலத்தைத் திறந்து பார்த்து அழும் தன் குழந்தையைத் தாய் மறப்புலி உரைத்தும் மதிலங்காட்டியும் அழுகையை மாற்ற முயன்றார். (புறம்.160:20-23) கலங்கிய நீரைத் தேற்றாவின் விதை கொண்டு கலத்தே மெல்லத்

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தோற்ற அது தெளிதல் போலத் தலைவி நல்லெழில் மார்பசைன் சார்ந்து நலம் பெற்றாள். (கலி.42:64-66)

தரைப்பகுதி கழுத்துபோல் அமைக்கப்பட்ட காடி

காடியை ஊறுகறியை உடைய மிடாவைப் பாரில் வைத்துக் கயிற்றால் வரிந்து கட்டி உமணர் சகடத்தைச் செலுத்தினர் (பெரும்.56-57) பெரும்பாணன் மறைகாப்பாளரின் உறைபதி சேரின் சிறந்த உணவுடன் மாவினது பசிய வடுவினைப் பலவாக இட்ட காடியும் பெறுவான் என்று ஆற்றப்படுத்தப் பெறுகிறான். (பெரும்.310)

வண்ண மட்கலம்

இரும்புக்காலத்து மக்கள் உருவாக்கிய மிக முக்கிய மட்பாண்ட வகையைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கருப்பு சிவப்புப் பானை ஓடு என்று அழைக்கின்றனர். இந்தக் கருப்பு சிவப்பு வண்ணமானது, கவிழ்த்து வைத்துச் சுடுகின்ற ஒரு தனிப்பட்ட சுடுமுறை கொண்டு பெறப்பட்டதாகும். களிமண்ணைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த மட்பாண்டங்களைச் சூளையில் வைத்துச் சுடும்போது, அவைகளைக் கவிழ்த்து வைத்துச் சுடுவதால் காற்று புகாத உட்பகுதியும், வாய்ப்பகுதியும் கருப்பு நிறமாகவும், காற்று படுகின்ற வெளிப்பகுதி முழுதும் சிவப்பு நிறமாகவும் ஆகிவிடுகின்றன. கருப்பு சிவப்பு பானைகளில் உள்ள மினுமினுப்பானது உப்பு சேர்த்து மெருகிடும் ஒரு செய்முறையால் பெறப்பட்டிருக்க வேண்டும். இந்த மட்பாண்டங்களைச் சுடுகையில், சூளையில் அடுக்கப்பட்டுள்ள எல்லா மட்பாண்டங்களும் நான்றாக வெந்து நெருப்புச் சுவாலைகள் அணைந்த நிலையிலும் இரத்தச் சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கும். அப்பொழுது அந்தப் பாண்டங்களின் மீது ஈரப்பசையுள்ள உப்புத் தூள் தூவப்படும். மிகுந்த வெப்பத்தால் இந்த உப்புத்தூள் உருகி மட்பாண்டத்தின் மேற்பரப்பு முழுதும் பரவுவதால் மட்பாண்டம் மினுமினுப்பைப் பெறுகிறது.

வண்ண நிறக் குப்பிகள்

யவனர் நன்கலத்தில் குப்பியில் தண்கமழ் தேறலைக் கொண்டு வந்தனர். (புறம்.56:18) கள் நிறைந்த பெருமையினையுடைய பச்சைக்கலம் வற்றும்படி கள்ளையுண்டு விழுமிடயோரைச் சுற்றமாகக் கொண்டு மன்னர் வாழ்ந்தனர். (மது.227,228) சிறிய வாயினையுடைய சுனை கள்ளைப் பெய்த மணிக்கலம் நீலக்குப்பி போன்றிருந்தது (குறு.193:1,2)கழுகினை உடைய சூல் கொண்ட வயிற்றை யொத்த நீலம் பைங்குடத்தில் குப்பியில் உள்ள கள்ளை முழுதும் குடித்து மகிழலாம் எனப் பெரும்பாணன் ஆற்றுப்படுத்தப் பெற்றான். (பெரு.381-382) மக்களின் தேவைக்கு ஏற்ப மண் பாண்டங்கள் செந்நிறத்திலும் கருப்பு நிறத்திலும் செய்து கொடுத்துள்ளனர். (புறம்.322:5)

தடவு

பழந்தமிழர் குளிர்காலத்தில் நீரை சூடாக்கிட குளித்துள்ளனர். அதற்கென்று பெரிய மண் தாழிகளைப் பயன்படுத்தினர். இதை 'தடவு' என்று குறிப்பிடுகின்றனர். (நெடுநல்.66)

புதுக்கலம்

செம்மண் பூசப்பெற்ற சீற்றில் புதுக்கலம் (அகம்.9) ஆலமரத்தின் கனி புதுக்கலம் போன்ற சிவந்த நிறமுடையது. (ஐங்.303:1)

தாலம்

நிலத்தின்கட் புதைக்கப்பட்டு முற்றிய மட்டாகிய தேறலைப் புல்லாலே வேயப்பட்ட சிறிய மனையின்கண் குடியுள்ள இடந்தொறும் நுகரக் கொடுக்க நுறு நெய்யிலே, கடலை துள்ள அதனோடு சோற்றை அட்டு, ஊட்டுவதற்கு மனையாள் தாலம் பூசுமாறு புதுவரு வாயையுடைத்து முன்பு அது ஆரவாரமுடையது எனக் கையறு நிலையில் கபிலர் பாடுவர். (புறம்.120:12-15) புல்லி நாட்டின் பண்ணை வெண்பழத்து அரிசி போன்ற தீட்டிய வரகரிசியைச் சுனைநீர் பெய்த பானையிலிட்டுக் கல்லடுப்பிலேற்றி ஆக்கிய சோற்றைக் குடநாட்டினர் பசும்பாலோடு பிறருக்கு வழங்கினர் (அகம்.'.393:9-11)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அகல்

மண்ணால் செய்யப்பட்ட மற்றொரு இன்றியமையாத சமூகத்தேவை விளக்கு. விளக்குகள் இல்லமெங்கும், நகரமெங்கும் ஒளிவீசிக்கொண்டிருந்ததை அகப்பாடல்கள் தெரிவிக்கின்றன. பொருளீட்டித் திரும்பும் தலைவன் எங்கும் சுடர்பரப்பும் விளக்குகள் நிறைந்த உயர்ந்த மாடங்களைக் கொண்ட தன் மாளிகை செல்வதாக அதன் இனிமையை விவரிக்கிறது இவ்வரிகள். மங்கல நிகழ்ச்சிகளில் விளக்குகளின் பங்கும், மகளிரொடு விளக்குகள் பெற்றிருந்த இன்றியமையாமையும் தான் பிற்காலத்தில் பாவை விளக்கு என்பதன் வளர்நிலையோ என்ற கருத்தை முன்வைக்கிறது. களிமண்ணால் செய்யப்பட்டு சுடப்பட்ட அகல்களாய் விளக்குகள் நமக்குக் கிடைக்கின்றன. கொடுமணல், போளுவாம்பட்டி, செம்பியன்கண்டியூர், பூம்புகார் ஆகிய அகழாய்வில் கிடைத்த விளக்குகள் சங்ககாலத்தைச் சேர்ந்தவையாகும். கருப்பு, சிவப்பு வண்ணமும், திரியிடும் நிலை ஒருமுகமாகவும், கையால் செய்யப்பட்ட நுட்பமும் சங்ககால விளக்குகளை நமக்கு அடையாளங்காட்டுவதற்கான குறிகளாகும்.

உண்கலன்

இடுபோரின்மையின் கவிழ்ந்த மண்டையை உண்கலனை இட்டு மலர்ந்த வல்லார் யாரெனச் சொல்லிச் சுரத்திடையிருந்த விறலி வறுமையுடைய காலமாயினும் மண்டையில் ஓயாது உண்ணவும் தின்னவும் படப், புரத்தலைவல்லான் அதியமான் என விறலியாற்றுப் படையாக ஔவையார் பாடினார். (புறம்.103:3,9) பாரியின் பறம்பில் ஒருபுறம் அருவி ஆர்ப்ப ஒருபுறம் பாணரது மண்டை நிறைய ஊற்றிய தேறல் கல்லையுருட்டியொழுகும். “பாணர் மண்டை நிறைப் பெய்ம்மார்” (புறம்.115:2) பஞ்சு போன்ற நிணம் நிறைந்த தசையைக் கள்ளோடு மண்டையில் வைத்து மாறி மாறி உண்ணுமாறு நின்னைக் காண வந்தேன் எனத் தேர் வண்மலையனைப் பெருஞ்சாத்தனார் பாடினார். (புறம்.125:3) நெருஞ்சிப் பூ ஏழு ஞாயிற்றை நோக்குவது போல வறுமையுற்றொரது ஏற்கும் மண்டை, கொண் பெருங்கானங்கிழானது மார்பகத்தை மலர்ந்து நோக்கியது. (புறம்.155:6) வண்மையுடையோர் இறந்தாராக, ஏலாது கவிழ்ந்த இரத்தலையுடைய மண்டையை இட்டு மலர்த்த வல்லார் யாரெனக் கேட்டலின் பருந்தின் பலரும் கூறினர். சாத்தனார் பாடுவா (புறம்.179:2) அதியமான் மார்பில் தைத்த வேல், பாணரது மண்டையைத் துளைத்து இரப்பவர் கையைத் கைத்துருவிப், புரக்கப்படுவேராது கண்ணிற்பாவை ஒளி மழுங்க அழகிய சொல்லையும் நுண்ணிய ஆராய்ச்சியையுடைய அறிவினையுடையோர் நாவின்கண்ணே சென்று வீழ்ந்தது, என்று ஔவையார் பாடினார். (புறம்.235:10)

மதுவினால் ஒழியாத மண்டையுடனே வரையாமல் வழங்கும் சோற்றையுடைய வள்ளலின் முற்றம் நீரற்ற ஆற்றலின் ஓடம்போல இயக்க மறக் கண்டேன் என ஆவர் மூலங்கிழார் பாடுவர். (புறம்.261:2) ஆட்டுக்கிடாய் போன்ற இளையர் பலரிருப்ப நீட்டிய மண்டை, என் சிறுவனைக், கால் கழி கட்டிலாகிய பாடையிற் கிடப்பித், தூய வெள்ளிய அறுசுவையினைப் போர் பித்திலது என ஔவையார் பாடியுள்ளார். (புறம்.286:3) பல எருதுகளுள்ளும் நல்லெருது நோக்கும் உழவன் போல, மூதிலாளருள்ளும், பசும்பொன்னாலாகிய மண்டைக் கள்ளை, இவனுக்கீர என்னும் தலைவன் அவனது வல்லாண்மை நோக்கிக் கூறினார். (புறம்.289:6) பாசறையில், பகைவர் தலையாகிய அடுப்பில் வைத்த மண்டையில் துடுப்பினால் துழந்து அட்ட மாக்ளுமுண்ணா உணவைச் செய்துவேட்டோன் நெடுஞ்செழியன் (புறம்.372:7) விழவில்லையாயினும் உழவரது மண்டையில் கொடிற்று மீனும், கள்ளும் தங்கும். (புறம்.384:8) நெய்யில் பொரித்த இறைச்சியையும், அட்ட இறைச்சியையும் மிசையவும் ஊன் கொண்ட மண்டையில் ஆண்பாலை ஊற்றியுண்ணவுமாக, வெய்துண்ட வியர்ப்பல்லது செய்தொழிலால் விளர்ப்பறியாதவாறு ஈந்தோன் வளவன் எனக் கபிலர் கூறினர். (புறம்.3865) விரும்பிய முகத்தனாக என்னரைச் சிதார் நீக்கிப் புகை முகந்தது போன்ற துகிலையுடுத்தி மண்டையில் தேறலை வார்த்து யானுணத் தானுண் மண்டையில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மான்கறியோடு சோற்றை என் சுற்றமுண்ணக் கொடுத்து மார்பின் ஆரத்தையும் வழங்கினான் சேரமான் வஞ்சகன் என்று திருத்தமானார் பாடினார். (புறம்.39821-24)

முழுமதிநாளில் காலையில் புதல்வர் பயந்த மகளிர் நால்வர் கூடி உச்சியில் குடத்தராய்க் கையில் மண்டை உடையராய்த் தலைவியின் வதுவை நிகழ்த்தினர். (அகம்.86.8) கள்ளுண்ட மண்டையைக் கழுவ வடிந்த நீரையுண்ட இறாமீன் செருக்கிப் பூட்டற்ற விற்போல் நெற்கூட்டில் தெரிக்கும் (அகம்.961) மணிபதித்த பொன்னால் செய்த மண்டையில் தேன் கலந்து, பாலை ஏந்திச் செவிலித்தாய் ஊட்டவும் தலைவி உண்ணளாயினார். (அகம்.105:5) உறந்தை யூரினர் மண்டையில் கொழுவிய தசைக் கறியைத் தினைச் சோற்றுடன் வழங்குவதோடு கரும்பின் தீஞ்சோற்றினோடு பாலில் பெய்த அவலைப் பகுத்துக் கொடுப்பர். (அகம்.237:10) பாணரது பசுமீனைச் சொரிந்த மண்டைபோல எமக்கும் வெறுப்பாக நும்மையும் பெறேமாக எம்முயிர் கழிக, எனத் தலைவன் பரத்தமையால் அவனிடம் தலைவி புலந்துரைத்தான். கழுவோடு, சூட்டுக் கோலையும் கொண்ட தோபையினராய் மண்டையை உறியில் கொண்ட வராய்க் கொன்றையந் தீங்குழலை முரல் பவராய்க் கோவலர் வந்தனர். (கலி.106:2) களிமண் குடவர் களிபடு களிமண்ணாற் செய்த பானையைக் கல் அடுப்பில் ஏற்றிக் கொன்றையின் பூந்தாது போலச் சோறாக்கினர். (புறம்.393:14-16)

குறவர் உழாது வித்திய சிறுதிணையை நல்ல நாளில் புதிதுண்ண வேண்டி மான்தடி புழுக்கப்பட்ட புலால் நாறும் குழிசியினது, நிணந்தோய்ந்த வெண்ணிறத் தினையையுடைய பெரிய புறத்தைக் கழுவாது அதில் மரையாவின் பாலை உலை நீராக வார்த்துச் சந்தன விறகான் அவிக்கப் பெற்ற திணைச் சோற்றைப் பலருடன் பகுத்துண்ணுவர். (புறம்.168:5-13) பொருநன் சிதைந்த வாயையுடைய சமைத்தற்கமைந்த குழிசியையுடையவன் (புறம்.371:5-6) கிணைப் பொருநன் குடிமுறைதோறும் சென்று பாடிச்சோறு சமைப்பதில் உள்ள விருப்பத்தை மறந்த குழிசியை நிமிர்த்திச் சமைக்கச் செய்யும் கடனறியாளர் இன்மையின் வருந்தினான். (புறம்.393:3-5) எயிற்றியர் நிலவுரலிலே பெய்த புல்லரிசியை உலக்கையால் ஓச்சிக் கிணற்றில் முகந்த நீரை பழைய ஒறுவாய் போன குழிசியில் உலையாக வார்த்து அடுப்பில் ஏற்றி ஆக்கின சோற்றைப் பாணர் உப்புக் கண்டத்தோடு பெற்றனர். (பெரும்.99) வழிச்செல்கின்ற புதியவர் தமது காய்பசி தீரும்படி சோற்றை ஆக்குகின்ற குழிசி அடுப்பினின்றும் அசைந்து விழும்படி தெங்கின் காய் நிலத்தே வீழும். (பெரும்.366) இடையர் வரகரிசியைச் சுனைநீரோடு முகந்து மண்ணாற் செய்த குழிசியில் இட்டுக் கல்லடுப்பில் ஏற்றிச் சமைத்த அவிழ்சோற்றை ஆறுசெல் புதியவருக்குப் பாலோடு பகுத்துக் கொடுப்பர். (அகம்.393:140) மோருக்கு மாறாக மாங்காயை நறிய கடியாகக் கூட்டி ஆயர் உண்பர். (கலி.109:23)

சேமித்து வைக்கப் பயன்படும் கலம்

தங்கம், வெள்ளி போன்றவற்றை உருக்கும் கலன் ஆகும். இதனை நாட்டுப்புற மக்கள் குவை என்பர். இது சூடு மண்ணால் செய்யப்பட்டது. பொன், வெள்ளி இட்டு உருக்கின்றனர். (நற்.124:7) என் தோழி நலனுண்டு துறத்தல் இனிய பாலை உண்ணுவோர் அதனைக் கொண்டிருக்கும் கலத்தைக் கவிழ்த்து விடுதல் போல்வதொன்று நின்தேர் புரவியைப் பூண்பதாக எனத் தெருட்டி பாங்கி வரைவு கடாயினாள். (கலி.133:15-19) புடம்போட வேண்டிய ஆபரணங்களை முதலில் தகடாகத் தட்டி வைத்துக் கொண்டு பின்னர் மண்சட்டியில் தகடாக உள்ள தங்கத்துடன் புளிகரைசல், உப்புத்தூள், செங்கள்தூள் போன்றவற்றை சேர்த்து வைக்கின்றனர். (பரி.128.7)

தானியங்களை உலர வைக்கப் பயன்படுபவை

குதிர் தொடுகூடு

பாறைகளில் நன்கு உலர வைத்த தானியங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு தொடுகூடு, மற்றும் குதிர் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். இவை மரம் மற்றும் சுடுமண்ணால் செய்யப்பட்டுள்ளன. (அகம்.397:6-7)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மிடா

தலைவன் தலைவியிடம் நின்னை மணந்து கொண்டு விழாக்காலத்தில் குழுமியுள்ள மக்களுக்கு மிடாவின் கண் அகல்வாய்ப் பெருங்கலத்தின் கண் உள்ள சோற்றை இடுமாறு போல நாள்தோறும் நம் இல்லிற்கு வருவோர்க்கெல்லாம் உணவளித்து எஞ்சியதை நீயிட நான் உண்ணும் இல்லற வாழ்வை விரும்புகிறேன். (குறிஞ்சி.201) ஆதிரை நாளில் விரிநூல்ந்தனர் விழாவினைத் தொடங்கப் புரி நூலந்தனர் பொற்காலம் ஏந்த மழைவேண்டி ஆய்தொடிக் கன்னியர் அம்பா வாடல் தொடங்கினர். (பரி.77-81

முடிவுரை

மட்கலம் பற்றிய பதிவுகளை இக்கட்டுரை விளக்குகிறது. தாழி, குழிசி, காடி, கன்னல், மண்டை, தாலம், தடவு, சாடி, தசும்பு, குப்பி போன்ற பெயர்களில் பயன்படும் மட்கலம் சங்க இலக்கியங்களில் உண்பதற்கு பயன்படும் மட்கலங்கள், மதுவை உண்பதற்கு பயன்படுத்தும் சாடிகள் தானியங்களை சேமித்து வைக்கப் பயன்படும் கலங்கள், தானியங்களை உலர வைக்கப்படும் மட்கலங்கள், விழாக்காலங்களில் பயன்படுத்தும் மட்கலங்கள், குவிந்த வாயையுடைய மட்கலங்கள், தரைப்பகுதி கழுத்து போன்ற அமைந்த மட்கலங்கள் அகன்றப் பகுதியையுடைய மட்கலங்கள் வண்ண நிறக் குப்பிகள் பற்றிய பயன்பாட்டை இவற்றின் வழியாக அறியலாம். தற்காலத்தில் நவீன முன்னேற்றத்திற்கு ஏற்ப மட்கலங்கள் பயன்பாடு அதிக அளவு குறைந்துள்ளது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் இவற்றின் பயன்பாடு ஓரளவு உள்ளது. தேறல் பயன்படுத்தும் குடங்கள் அமைப்பு மண்ணால் செய்யப்பட்டும் அதன் குடம்போன்றும் இருந்தது. மக்களின் தேவைக்கு ஏற்ப மண்பாண்டங்கள் செந்நிறத்திலும் கருப்பு நிறத்திலும் செய்து கொடுத்துள்ளனர். கீரை சூடாக்கி குளிக்க பெரிய தாழிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

இத் தாழி தடவு என்று அழைக்கப்படுகிறது. புதுக்கலம் நிறம் ஆலமரத்தின் கனியைப் போன்றிருந்தது. சில பாடல்களில் சுனைநீர் பெய்த பாணை, உண்கலன், களிமண்ணால் செய்தபானை ஒருவாய் போன குழிசி காய்பசி தீரும்படிசோறு ஆக்குகின்ற குழிசி சேமித்து வைக்கப்படும் பானைகள் மண்ணால் செய்யப்பட்டும் இதில் பொன்னையும், வெள்ளியையும் பயன்படுத்தப்பட்டுள்ளமை அறிய முடிகிறது. மண்பாண்டங்கள் பற்றி நெடுநல்வாடை, பட்டினப்பாலை, திருமுருகாற்றுப்படை, போன்ற இலக்கியங்களில் பதிவு இல்லை. மண்பாண்டங்களில் சுடுமண் பாண்டம் உறுதியாகவும் பச்சையான மண்பாண்டம் தேறல் வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் சுடுமண் செங்கலால் வீடு கட்டும் மரபு இருந்தது என்பது புலனாகிறது.

நூற்பட்டியல்

1. Gururaja Rao, The Megalithic Culture in South India,.
2. இராஜன் சங்க இலக்கியமும் அகழாய்வும், 2005,
3. தி.சுப்பிரமணியன், தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2011.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

நாட்டார் தெய்வங்களும் வழிபடும் முறைகளும்

Nattar Deities and the Method of Worship

கோ.ராஜன்தாஸ், முனைவர் பட்ட ஆய்வாளர், நாட்டார் வழக்காற்றியல் துறை,
தூய சவேரியார் கல்லூரி, ம.சு.பல்கலைக்கழகம், திருநெல்வேலி மாவட்டம்.

Abstract

The present article unfurls the mode of worship and the Nattar Deities in Tamil regions of Tamil Nadu.Tamil culture has a pantheon of Gods and Deities. They are categorized as Major and minor deities. There are no any village without the temples of the rural deities and the chief Gods. The deities titled as Ayya, Ayyan, Adiyan, Sami and Amman and having names as Veliappansami, Karuppasami, Urangapulimadan, Panduvansami, Vadivuamman and Eswariamman etc. *Therefore, the study focuses on the deities of the folks and the mode of worship by the Tamil people.*

Keywords: Nattar Deities, Method of Worship, Tamil Life and Culture

முன்னுரை

தமிழ்நாட்டில் தெய்வங்களைப் பெருந்தெய்வங்கள், சிறுதெய்வங்கள் என இருவகைப்படுத்துவர். பெருந்தெய்வங்கள் இந்து சமயத்தைச் சார்ந்தவையாகும். சிறு தெய்வங்கள் தமிழர் சமயத்தைச்சார்ந்தவையாகும். தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான சிறு தெய்வங்கள் உள்ளன. சிறு தெய்வக் கோவில்கள் இல்லாத கிராமமே இல்லை எனலாம். குருக்கள்பட்டி கிராமத்தில் சிறுதெய்வ வழிபாடே வழக்கிலுள்ளது. சிறுதெய்வ ஆய்வு நாட்டுப்புறவியலில் பெரும் பிரிவாகும். சிறுதெய்வம். பெருந்தெய்வம் வேறுபாடு சிறுதெய்வம் - சொல்விளக்கம், வகைகள், பண்புகள் வழிபடுவோர் போன்றவற்றை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

சிறுதெய்வம் பெருந்தெய்வம் வேறுபாடுகள்

இயற்கை வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய இறைவழிபாடு காலப்போக்கில் பலதெய்வக்கோட்பாடு வளர்ந்த நிலையில் சிறுதெய்வம் என்ற பாகுபாடும் தோன்றியது.

சிறுதெய்வம், பெருந்தெய்வ வேறுபாட்டிற்குச் சமூகரீதியான பல்வேறு கருத்துக்கள் உள்ளன. "சமுதாயத்திலேயே உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர், பெரியவர், சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைத் தொடர்ந்து தெய்வங்களும், பெருந்தெய்வங்கள், சிறுதெய்வங்கள் எனப்பகுக்கப்பட்டன" 1 என்பது சமூகத்தின் சமூகப்பொருளாதார சமய வேறுபாடுகளைக் காட்டக்கூடியதாக உள்ளது.

வ.எண்	சிறுதெய்வம்	பெருந்தெய்வம்
1.	மனித உணர்வில் தோன்றியன	அறிவியல் தோன்றியன
2.	பிறப்பு, இறப்பு உள்ளவை	ஆதி அந்தம் இல்லாதவை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

3.	வரையறுத்த வலிமையுள்ளவை	எல்லையற்ற ஆற்றல் படைத்தவை
4.	சக்தி செலுத்தக்கூடிய எல்லைகள் உண்டு	சர்வ வல்லமை பெற்று, உலகம் முழுமையும் செலுத்தக்கவை.
5.	உயிர்பலி ஏற்கக்கூடியவை	உயிர்பபலியை மறுப்பவை
6.	பாமர மக்களின் வழிபாட்டிற்குரியவை	சமய அறிவு பெற்றவர்களின் வழிபாட்டிற்குரியவை
7.	கிராமம், காடு, மலைப்புறங்களிலும் வசிக்கும்	நகரங்களிலே செல்வாக்குப் பெற்றிருக்கும்.
8.	பகையை அடியோடு அழித்தல்	அருள் செய்யும்
9.	குடும்பம், சாதி, தெரு ஊர் ஆகியவற்றிற்குத் தனித்தனியாக அமையும்.	பொதுமை தழுவியது
10.	பெரும்பாலும் பிராமணரல்லாதவர்களே பூசாரிகளாக உள்ளனர்.	பெரும்பாலும் பிராமணர்களே பூசாரிகளாக உள்ளனர்.
11.	அருள்வாக்குக் கூறுவதுண்டு குறிசொல்லல், மச்சம் கூறுதல் முதலிய விந்தைகளும் செய்வதுண்டு.	பூஜை மட்டும் செய்வார்.
12.	மக்களால் உண்டாக்கப்பட்டு, பேணப்படுகின்றன.	மன்னர்கள், அரசியர், அமைச்சர்கள், அதிகாரிகளால் பேணப்படுவன.
13.	சிறு தெய்வங்கள் ஒன்றிற்கொன்று பகைமை கொள்வதுண்டு.	உறவுநிலைகள் கற்பிக்கப்படுகின்றன.
14.	செவிவழிக்கதைகளும் நாட்டுப்புறக்கதைகளும் இதன் சிறப்புகளைக் கூறுகின்றன.	புராணங்கள் இதைப்பற்றி மொழிக்கின்றன.
15.	எண்ணிக்கையில் அடக்க முடியாத அளவு பெருகியுள்ளன.	குறைந்த எண்ணிக்கைகளே உள்ளது.
16.	கிராமப்புற வாழ்க்கையின் உண்மைகளைக் குறியீடுகளாக விளக்குகின்றன.	இயற்கைச்சக்திகள் குறியீடுகளாக விளங்குகின்றன.
17.	சிறுதெய்வங்கள் பெரும்பான்மையும் பெண் தெய்வங்களே	ஆண் தெய்வங்களே பெரும்பான்மையின.
18.	மாடங்கள், சுனதிகள், கற்கள், மரங்கள், புற்றுகள் முதலியவைகளே தெய்வங்கள்.	பெரும்பாலும் கருங்கல் சிலைகள் இருக்கும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

19.	திருவிழா, உத்தரவு கேட்டுத்தனியாக நிகழும்.	குறித்த காலங்களில் நிகழும்.

சிறுதெய்வம் - சொல் விளக்கம்

கிராம மக்களின் வழிப்பாட்டுக்குரியது சிறுதெய்வங்களாகும்.

"மக்கள் தம்குறை நீங்க வழிபடும், (பெரும்பாலும்) அந்தணரல்லாத பூசாரி பூஜை செய்யும் தெய்வம" என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி : பொருள் கூறுகிறது.

சிறுதெய்வம் என்ற சொல்லாட்சி முதன்முதலில் அப்பர் தேவாரத்தில் காணப்படுகிறது. எனவே இப்பெயர் வழக்கு 'மேலோர் மரபு' சார்ந்ததாகும்.

முதன்முதலாக "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்" என்று அப்பர் தேவாரத்தில் பயின்று வருகிறது. இதன் காலம் கி.பி ஏழாம் நூற்றாண்டு.

17ம் நூற்றாண்டில் குமரகுருபரர் "செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாளன்" என்று முருகனைக் குறிப்பிடுகிறார். இப்பாடலில் செத்துப் பிறப்பவனாக அவர் குறிப்பது சிறுதெய்வங்களையே எனலாம்.

"ஆதிக்குடிகள் இயற்கையில் காணும் தீ, இடி. பெருமழை, பூகம்பம் போன்ற அச்சந்தரும் நிகழ்ச்சிகளுக்கும், நோய்களுக்கும் காரணம், உலகின் கண் உலவும் கணக்கற்ற ஆவிகளே என நம்பினர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாகக் கொண்டு வழிப்பட்டார்" என கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

சிறுதெய்வங்களின் பண்புகள்

சிறுதெய்வங்களின் பண்புகளுக்கேற்ப அவைகளைக் கீழ்க்கண்வாறு வகைப்படுத்தலாம்.

1. அச்சந்தரும் இயற்கைப் பொருள்களும், நிகழ்ச்சிகளும் தெய்வங்களாக உருவாக்கப்பட்டன.
2. பருவத்தில் மழை பெய்யவும், பயிர் வளம் செழிக்கவும் தானாக உருவாக்கப்பட்ட சக்திகள்.
3. நீர் நிலைகளைக் காவல்காக்கும் சக்தியாக வழிபடல்.
4. ஒவ்வொரு ஊருக்கும் காவல் சக்தியாக உருவகம் செய்து வழிபடல்.
5. கொள்ளை நோய்களிலிருந்து மனிதனைக் காக்கும் சக்தியாக வழிபடல்.
6. குழந்தைகளைக் காக்கும் சக்தியாக வழிபடல்.
7. கால்நடைகளைக் காக்கும் சக்தியாக வழிபடல்.
8. குலதெய்வ வழிபாடு ஊர்த்தெய்வ வழிபாடாகவும் பரவிச் செல்வாக்குப் பெறும் நிலை.
9. பல்வேறு இனக்குழு மக்கள் தங்கள் இனக்குழுக்குறிகளுக்கு சிறுதெய்வ நிலை கொடுத்துள்ளது.

இந்த சக்திகளுக்குச் சிறுதெய்வம், குலதெய்வம், ஊர்த்தெய்வம், கிராம தேவதை, சிற்றுயிர் வணக்கம், காவல் தெய்வம் எல்லைத்தெய்வம் முதலிய பல பெயர்கள் வழங்கி வருகின்றன. பாமர மக்களின் உணர்வைத் தாக்கும் வலிய அரண் இச்சிறு தெய்வ வழிபாடேயாகும்.

வழிபடுவோர்

பிராணரல்லாத எல்லாச் சாதியினரும் சிறுதெய்வ வழிபாட்டை உடையவர்கள் ஆவர். தேவர், கோனார், நாடார், செட்டியார், இல்லத்துப்பிள்ளை, பள்ளர், பறையர், அருந்ததியர், நாவிதர், புலவர் போன்ற மற்ற சமூகத்தவர் அனைவரும் சிறுதெய்வங்களை வழிபடுகின்றனர்.

கோவில் அடையாளம்

சிறுதெய்வக்கோவில்கள் சிறியவை. சில இடங்களில் அவை கட்டடமின்றி அமைதலும் உண்டு. இன்னும் சில இடங்களில் புற்றுகளும், மரங்களும் தெய்வங்களாக வழிபடப்படுகின்றன. மரங்களுள் பெரும்பாலும் வேம்பு, பனை, உடை, பூவரசு ஆகியவை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வழிபடப்படுகின்றன. பெண் தெய்வக் கோவில்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கியும் அமைந்துள்ளன. ஆண் தெய்வக்கோவில்கள் கிழக்கு நோக்கியே அமைவது பெரும்பான்மை மரபாகும். சிறுதெய்வக்கோயில்களில் பீடங்கள் ஒன்று அல்லது இருபத்தொன்று என்ற எண்ணிக்கைகளைக் கொண்டிருக்கும்.

தெய்வங்களின் பெயர்கள்

சிறுதெய்வங்களின் பெயர்கள் பெருந்தெய்வங்களின் பெயர்களிலிருந்து தெளிவாகவே வேறுபட்டு நிற்கின்றன. சிறு தெய்வங்களில் ஆண் தெய்வங்களின் பெயர்கள் பொதுவாக அய்யா, அப்பன், அடியான், சாமி முதலிய விகுதிகளோடு அமையும் வெளியப்பன்சாமி, கருப்பசாமி, உறங்காபுலிமாடன், பண்டுவன்சாமி, வடிவு அம்மன், ஈஸ்வரி அம்மன் போன்ற பெயர்களில் அமைந்திருக்கும்.

கோயில்கள் அமையும் இடங்கள்

சிறு தெய்வக்கோவில்கள் பொதுவாக ஊர் மந்தை, ஊரின் எல்லை, குள்ககரை, கண்மாய்க்கரை, களத்துமேடு, வயற்புறம், அழிந்த கோட்டைகளின் வாசற்பகுதி இருந்த இடம், நெடுஞ்சாலை ஓரம் முதலிய இடங்களில் அமைந்திருக்கும். அந்த இடங்கள் அனைத்தும் காவலுக்குரிய இடங்கள் ஆகும். எனவே பெரும்பாலான சிறுதெய்வங்கள் காவல் தெய்வங்களாளவே அமைந்திருக்கின்றன.

சூழ்நிலை

மனிதனை மனிதன் மதிக்கும் இயல்பை விடுத்து சாதிவெறி தலைதுாக்கியிருந்த காலத்தில்தான் தீண்டாமை இயல்பு தோன்றியது. இதனடிப்படையில் சாதிவெறி மிகவும் உச்சகட்டத்தில் இருந்தது. மனிதன் தவறு செய்யும்போது தெய்வம் கடுமையாக தண்டிக்கும் என நம்பப்படுகிறது. சமுதாயத்திலுள்ள கட்டுப்பாட்டினை மீறும் போது மனிதன் தண்டிக்கப்படுகிறான் என்று மொழியில் துறை ஆய்வாளர் செல்லமுத்து கூறுகிறார். இச்சூழ்நிலையில் தோன்றிய தெய்வங்கள் வெளியப்பசாமி, உறங்காபுலி மாடன், வடிவு அம்மன், பண்டுவன் கோவில், போத்திமார் கோவில் போன்றவையாகும்.

1. மனிதத்தலைவர் தெய்வமாகக் கருதப்பட்டு அவர்களுக்குக் கோவில் கட்டி வழிபாடு செய்ய முயன்றநிலை.
2. தன்னுடன் தன் காலத்தில் வாழ்ந்தவர்களை சிறப்பிக்கும் பொருட்டு அவர்கள் பெயரில் கோவில் அமைத்து வழிபட்ட நிலை.
3. ஊர்ப்புறங்களில் வீரம் வாய்ந்து ஒருவனால் அவனது உடல்திறமையால் அவனை எதிர்க்க அஞ்சியவர்கள் பின்னாளில் அவன் நினைவாக அச்சத்திற்குட்பட்டு அவனை வணங்கிய நிலை.
    1. உறங்காப்புலி மாடன்
    2. போத்திமார்
    3. வெளியப்பசாமி
    4. பண்டுவன்

போன்ற தெய்வங்கள் கொலை செய்யப்பட்டும், இயற்கை மரணமடைந்தும், தெய்வங்களாக உருவெடுத்தன. இந்த முன்னோர் வழிபாடே சிறுதெய்வ வழிபாடாக அமைந்துள்ளது.

குருக்கள்பட்டியில் அமைந்துள்ள கோவில்களின் தோற்றம் பற்றி பல்வேறு வாய்மொழி வரலாறுகள் கூறப்படுகிறது.

குருக்கள்பட்டியில் அமைந்துள்ள இடங்களைப் பற்றி களப்பணி செய்தபோது பல்வேறு விதமான வாய்மொழி வரலாறுகள் மக்களால் சொல்லப்பட்டதைக் கள ஆய்வின் மூலம் அறியமுடிகிறது.

வெளியப்பசாமி

வெளியப்பர் என்பவர் தேனி மாவட்டத்திற்கு உட்பட்ட “கடலாடி” கிராமத்திலிருந்து ஒரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டு ஊரைவிட்டு வெளியேறி விட்டார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

குருக்கள்பட்டிக்குக் கிழக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் மேலநீலிதநல்லூர் என்ற கிராமம் வரை பெரிய காடுகள் இருந்தன. அங்கு இண்டஞ்செடி, கிழுவை மரங்கள் அடர்ந்து காணப்பட்டதால் அக்காட்டிற்குள் யாரும் செல்லமுடியாது. அதற்கென்று தனிவழி ஒதுக்கித்தான் போக முடியும். அவ்வளவு ஒளிந்திருந்தார்களாம். அந்தப்பெண்ணின் சகோதரர்கள் பெண்ணைக் காணவில்லை என்று கூறி, பல நாள்களாக ஊர்ஊராகத் தேடி அலைந்து கொண்டிருந்தார்களாம்.

ஒரு நாள் குருக்கள்பட்டி கிராமத்தில் வந்து ஆடு மேய்த்துக்கொண்டிருக்கும் இடையர்களிடம் விசாரித்தார்களாம். அவர்கள் அப்படி யாரும் இங்கு வரவில்லை. ஆனால் அதோ அந்தக்காட்டிற்குள் நடுவே ஏதோ புகை போவது போன்று தெரிந்ததாம். அங்கு போய் பாருங்கள் என்று கூற அவர்களும் சந்தேகத்தில் பார்க்கச்சென்றனர். இருவரும் உணவு சமைத்துக் கொண்டிருந்தார்களும், அங்கும், இங்கும் சுற்றித்திரிந்த ஆத்திரத்தில் இருவரையும் கொலை செய்து விட்டார்களாம். இவர்கள் இருவரும் ஊத்துமலையிலுள்ள ஜமீன்தாரிடம் கனவில் போய் நடந்தவைகளைக் கூறிவிட்டு, எந்தப்பாவமுமே செய்யாத எங்களுக்கு இந்தக்கதியாகிவிட்டது. எனவே எங்களைக் கோவில் கட்டி வணங்கினால் நாங்கள் உங்களுக்குக் காவல்காப்பவராக இருப்போம் என்று கூற, ஜமீன்தார் எந்த மறுப்பும் கூறாமல் உடனே 'கோவில்கட்டி' விடுவோம் என்று கோவிலைக் கட்டினார். இதன் மூலம் இக்கோவில் ஜமீன்தாரால் கட்டப்பட்டது என்பது தெரிகிறது.

இக்கோவில் குருக்கள்பட்டி கிராமத்திலேயே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். இது மாசிமாதம், சிவராத்திரி அன்று கொண்டாடப்படும் திருவிழாவாகும். இக்கோவில் விழா அன்று குருக்கள்பட்டி கிராமமே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும்.

இத்திருவிழாவிற்கு மதுரை, தேனி, கம்பம், நாகர்கோவில், கன்னியாகுமரி, கடலாடி, சொக்காடி போன்ற பகுதிகளிலுள்ள அனைத்து சாதியினரும் வழிபட வருவார்கள். ஆகையால் தமிழகத்தில் பரந்துபட்டு எல்லாச் சாதியினரும் கொண்டாடும் விதமாக இத்திருவிழா அமைந்திருக்கும்.

கொடையாகவோ, திருவிழாவாகவோ கொண்டாடப்படும் இத்திருமணங்களில் தெய்வங்களிடம் பக்தர்கள் தங்கள் குறைகளைக்கூறி அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டி நேர்த்திகடன்கள் செய்கின்றனர்.

அவை

- தேங்காய் உடைத்தல்
- அர்ச்சனை செய்தல்
- அபிசேகம் செய்து சூடம் கொழுத்தி ஆராதனை செய்தல்
- சாமியாடி, குறிசொல்லுதல்
- விபூதி கொடுத்தல்
- ஆடு, சேவல் (கோழி) பலிகொடுத்தல்
- பாதையாத்திரையாக வருதல்
- மொட்டையடித்துக் கொள்ளுதல்
- குழந்தைகளுக்கு காது குத்துதல் போன்றவை ஆகும்.
- மேலும் அவ்வூரிலுள்ள இளைஞர் மன்றங்கள், நற்பணிமன்றங்கள், தண்ணீர் பந்தல் அமைத்தல்.
- மோர் பந்தல் அமைத்தல்.
- அன்னதானம் வழங்குதல்

போன்ற சேவைகள் செய்து இத்திருவிழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இக்கோவிலுக்கு அனைத்துப்பகுதிகளிலிருந்து எல்லா சமூகத்தவர்கள் வந்தாலும், உள்ளூரிலுள்ள தேவர் சமூகத்தவர்கள் திருவிழாவைக் கொண்டாடும் உரிமையுடையவர்கள்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திருவிழா தொடங்கிய நாளிலிருந்து முடியும்வரை அல்லது 8 ஆம் நாள் விழா வரை பல்வேறு நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

- வில்லுப்பாட்டு
- கரகாட்டம்
- ராஜாராணி ஆட்டம்
- கோமாளிக்கூத்து
- பாட்டுக்கச்சேரி
- பட்டிமன்றம்
- ரெக்காட் டான்ஸ்
- ஆடல் பாடல்

போன்ற கலை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து கொண்டாடி வருகின்றனர்.

போத்திமார் கோவில்

குருக்கள்பட்டி ஜமீனுக்கு உட்பட்டது மேலநீலிதநல்லூர் கிராமமாகும். அங்கு தேவர், கோனார், பள்ளர், பறையர், அருந்ததியர் போன்ற சமூகத்தவர் வாழ்ந்து வருகின்றனர். அதில் தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களே அதிகம் உள்ளனர். அனைத்துச் சாதியினரும் விவசாயிகளாகவும் விவசாயக்கூலிகளாகவுமே வாழ்ந்து வருகின்றனர். கோடைக்காலங்களில் தொழில் இல்லாததால் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் ஜமீன்தார் அரண்மனைக்குக் காவல்காரர்களாகப் பணிசெய்து கொண்டிருந்தார்கள். அவ்வாறு பணிசெய்து கொண்டிருந்தவர்கள் ஜமீன் அரண்மனையில் உள்ள பெண்களிடம் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். இச்செய்தி ஜமீன்தார் காதுக்கு எட்டவே, ஜமீன்தார் தம் அரண்மனையிலேயே தவறு செய்துவிட்டார்கள் என்று எண்ணி இவர்களை வெளியே அனுப்பினாலும் அசிங்கப்படுத்திவிடுவார்கள், அப்படியே விட்டுவிட்டாலும் மேலும் தவறு செய்வார்கள் என்று எண்ணி அரண்மனைக்குள்ளேயே பெரிய “நிலவறை தோண்டி” (குழிதோண்டி) அதற்குள் உயிருடன் இறக்கி வைத்துப் பெரிய பாறாங்கல்லால் மூடி வைத்துவிட்டார்.

இப்பொழுதும் அரண்மனை ½ ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ளது. அந்த இடத்தை யாரும் பயன்படுத்த முடியாது. அவர்கள் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மேலநீலிதநல்லூர் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் ‘பிடிமண்’ எடுத்துக்கொண்டு போய் கோவில்கட்டி வழிபட்டு வருகிறார்கள். அந்தக் கோவிலில் ஆடு, கோழி பலி செலுத்தியும் குழந்தைகளுக்கு வாரிசுதாரர்கள் அல்லது சந்ததியர்கள் மொட்டையடித்தும் நேர்ச்சை செய்து வருகிறார்கள், சாமியாடியும், குறி சொல்லியும் வழிபட்டு வருகிறார்கள். போத்தி என்றால் “தாத்தா” என்ற பொருளுடையது. எனவே இறந்த தாத்தாக்களை அக்குடும்பத்தார்கள் வழிபட்டு வருகிறார்கள். இத்தெய்வத்தை அக்குடும்பத்தினரே ஆண்டிற்கொருமுறை, நாள்குறித்து விழா கொண்டாடி வருகின்றனர்.

பண்டுவன் கோவில்

நாடார் சாதியைச் சேர்ந்த “பண்டுவர்” என்றொருவர் இருந்தார். அவர் மக்களுக்கு நாட்டுவைத்தியம் செய்து வந்தார். மூலிகைச் செடிகளைப்பிடுங்கி பல பக்குவம்செய்து நோய்களுக்கும் பேய்களுக்கும் மருந்தாகக் கொடுத்து வந்தார். எனவே அவர்செய்த தொழிலை வைத்தே பண்டுவர் என்ற பெயர் வழங்கப்பட்டது.

முடிவெட்டும் சமூகத்தையும் “பண்டுவர்” என்றே கூறுவார்கள். நகர்புறங்களில் அவர்களை முடிதிருத்தும் மருத்துவர் என்று அழைப்பதுண்டு.

இந்த பண்டுவர் என்பவர் நாட்டு மருத்துவம் செய்தும், மை, மாந்தரிகம், வாதம், பித்தம், கபம் போன்ற நோய்களுக்குப் பச்சிலையைப் பக்குவம் பல செய்து மருந்தாகக்கொடுத்துக் குணப்படுத்துவது, பாம்புக்கடி, தேள்கடி, நாய்கடி போன்ற விஷம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நிறைந்த காயங்களுக்கும் பச்சிலை பூசி குணப்படுத்துவது, உணவில் பல பக்குவம் செய்து காயங்கள் ஆறவும், நோய் குணப்படவும், பத்தியம் பல சொல்லி வழியனுப்புவது, குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பது போன்ற தொழில்களைச் செய்து வந்தார். வாலிப்பருவம் முடிந்ததும் வீட்டில் அனைவரும் இவரைத் திருமணம் செய்துகொள்ளக் கட்டாயப்படுத்தினார்கள். அவரோ நான் திருமணம் செய்து கொண்டால் என் குடும்பத்தை மட்டுமே கவனிக்க முடியும் மக்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது என்று கூறி மறந்துவிட்டு பிரம்மச்சாரியாகவே காலம் கழித்தார். 45 வயது முடியும் போது இறந்து விடுவோம் என்று, காலத்தைக் கணித்தறிந்து தன் உயிர் உடலைவிட்டுப் பிரியும் காலத்தை உணர்ந்து தனக்குத்தானே குழி தோண்டி மரணம் நெருங்கும் போது குழிக்குள் இறங்கி அமர்ந்து உயிரைவிட்டார். அப்படிப்பட்டவரை அவருடைய உறவுக்காரர்கள் கோயில்கட்டி வழிபட்டு வருகிறார்கள். ஆண்டுக்கொருமுறை அனைவரும் சேர்ந்து பொங்கல் வைத்துப் படையல்கள் படைத்துச் சாமியாடியும், ஆடு, கோழி பலி செலுத்தியும் வணங்கி வருகிறார்கள்.

இக்கோவிலை வழிபடுபவர்களை இப்பொழுதும் பண்டுவன் கூட்டம் என்றே கூறுவார்கள். இக்கோவிலை அக்குடும்பத்தார்கள் மட்டுமே ஆண்டிற்கொருமுறை நாள் குறித்து வழிபடுகின்றனர்.

உறங்காப்புலி மாடன்

உறங்காப்புலி மாடன் கோவில், தேவர் சமூகத்தில் 50 குடும்பங்களுக்கு மட்டும் சொந்தமானதாகும் இக்கோவிலை வழிபடுபவர்கள் 'பூசாரிக் கூட்டம்' என்று அழைக்கப்படுகின்றனர். ஆண்டிற்கு, இரண்டுமுறை வழிபடுவார்கள் சித்திரை, மாசி சிவராத்திரிக்கு மறுநாள் வணங்குவார்கள். அந்தக்கோவிலைச்சுற்றி விவசாயம் செய்யும் இடம் அதிகமாக உள்ளது. அதனைச்சுற்றி இருக்கின்ற கிணறுகளில் களவு, திருட்டு எதுவும் நடக்காது என்று கூறுவார்கள். அப்படி திருடினால் கண் தெரியாமல் ஆகிவிடும் என்று மக்களால் நம்பப்படுகிறது. காடுகளில் விளைந்த தானியங்களை அடித்துக் காற்றில் பொதிபோட்டிருந்தால் காவலுக்கு யாரும் போகமாட்டார்கள். அப்படி இருக்கும் போது, ஒரு நாள் திருடர்கள் களத்தில் போட்டிருந்த தானியங்களை அள்ளிக்கொண்டு சென்றுகொண்டிருந்தார்கள். செல்லும் வழியில் கண் தெரியாமல் விடிய விடிய மூட்டையைக் கட்டி வைத்துக்கொண்டு அப்படியே நின்றுவிட்டார்கள். அப்படி அந்தத்தெய்வம் உறங்காமல் புலிமாதிரி விடிய விடிய காத்துக்கொண்டிருக்குமாம்.

அதனால் தான் அதற்கு உறங்காப்புலி மாடன் என்று பெயர் வந்தது. அவ்வாறு கண் தெரியாமல் நின்றவர்களைக் காலையில் அந்தத் தெய்வத்தை வழிபடுபவர்கள் 'சரி பிளைச்சிட்டு போகட்டும் பாவம் இல்லாதவன்தானே திருடினான் என்று கூறிவிட்டார்கள். தேவர் சமூகத்திலேயே அப்பாவி, கருணை உள்ளம் கொண்டவர்கள் இக்குடும்பத்தார்கள். எனவேதான் திருடியவர்களைக்கூட ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுவார்கள். அப்படி இருப்பதால் அந்நதக்கோவிலில் யாரும் எதையும் தொடமாட்டார்கள், அது பாதுகாப்பாக இருக்கும் சாமிக்கு பயந்து போய் இப்பொழுதும் அப்பகுதிகளிலுள்ள காடுகளில் திருடுபோகாது என்று நம்புகின்றன. அங்குள்ள மரங்களில் இலை, குழை (தளை) வெட்ட வேண்டுமானாலும் அங்குள்ள தோட்டக்காரர்களிடம் கேட்டுத்தான் வெட்டுவார்கள். தோட்டக்காரர்களும், இல்லை என்று கூறமாட்டார்கள் (முக்கிய நோக்கமே தெரியாமல் எடுக்கக்கூடாது) அந்தக் கோவில் அவர்கள் தவிர வேறுயாரும் பூசை செய்ய முடியாது. அவர்கள் குடும்பத்தில் பெரியவர் யாரோ அவரே பூசை செய்வார்கள்.

அந்தக்கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமானால் பூசாரியே (வேளார்) செய்வார். வேறுயாரும் செய்ய முடியாது. ஆகையால் இக்குடும்பத்தைப் "பூசாரி கூட்டம்" என்று கூறுவார்கள். இக்கோவிலில் பொங்கல், தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம் படையல் வைத்து வழிபடுவார்கள். இக்கோவிலுக்கு பூசை செய்ய புலவர்களும் ஒருசிலர் இருக்கிறார்கள்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வடிவு அம்மன் கோவில்

இக்கோவில் குருக்கள்பட்டிக் கிராமத்தில் வடக்குப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கோவில் 15 ஆண்டுகளுக்கு முன் அனைத்துச் சமூகத்தவராலும் ஒருங்கிணைந்து கட்டப்பட்டது. பல வடிவங்களைக் கொண்டது துர்க்கையம்மன் என்று கூறுகிறார்கள். இக்கோவிலில் திருவிழா ஐப்பசி மாதம் செவ்வாய், புதன் ஆகிய தேதிகளில் விழா நடத்துவர். விழாவில் அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் பொங்கல் வைத்து ஆடு, கோழி. பலிசெலுத்தி வழிபடுவார்கள்.

அண்மைக்காலமாக, தென் தமிழகத்தில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்ட பல ஊர்களில் சாதிக்கலவரம் ஏற்பட்டது. அதில் எண்ணிக்கையில் குறைவானவர்களை ஆதிக்க சாதியினரால் விரட்டிவிட்டார்கள். இதனால் எண்ணிக்கையில் குறைவான தாழ்த்தப்பட்ட சாதியினர் உடைமைகளையும் இழந்தார்கள் அதனால் தெய்வங்களையும் விட்டுவைக்கவில்லை. குருக்கள் பட்டியில் வடிவு அம்மனைத் தேவர் சாதியைச் சேர்ந்தவர்கள் மற்ற சமூகத்தவர்களை வழிபட அனுமதிப்பதில்லை. ஒவ்வொரு சாதியினரும் பிடிமண் எடுத்துக் கொண்டுபோய் அவரவர் வாழ்கின்ற பகுதிகளில் வைத்து வெவ்வேறு பெயர்களில் வழிபட்டுவருகிறார்கள். வடிவு அம்மன் என்ற பெயரில் தேவர் சமூகத்தவரும், ஈஸ்வரியம்மன் என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச்சேர்ந்தவர்களும், வடகாசி அம்மன் என்ற பெயரில் கோனார் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் பெயர்கள் வைத்து வழிபடுகின்றனர்.

இக்கோவில் திருவிழா அந்தந்தச் சமூகத்திற்கு ஏற்றாற் போன்றும், பொருளாதார நிலைக்கு ஏற்றாற் போன்றும், கொண்டாடி மகிழ்கின்றனர். நாட்டுப்புறக்கலைகளாகிய வில்லுப்பாடல், கரகாட்டம், ராஜாராணி ஆட்டம், போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வழிபட்டு வருகின்றனர் பெண்கள் முளைப்பாரி எடுத்தல் விரதமிருத்தல், பிறந்த குழந்தைக்கு முடி எடுத்தல் (மொட்டையெடுத்தல்) காது குத்துதல் போன்ற நேர்சசைகளையும் செலுத்தி கொண்டாடி வருகின்றனர்.

முடிவுரை

குருக்கள்பட்டிக் கிராமத்தில் பெருந்தெய்வங்களே இல்லை என்பதை இந்த ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது. பல சிறு தெய்வங்களும், அவற்றின் கதைகளும், வழிபடும் முறையும் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

நாட்டார் தெய்வங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாக அமைந்திருப்பது மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு காலம், இடம், பொருள் வழிபடும் நாள்களையும் விருப்பத்திற்கு ஏற்றாற்போலும் பணிஓய்வு காலங்களிலும், கொண்டாட்ட நிகழ்ச்சியாக கொண்டாடப்படும் விழாவாகும். பெறு தெய்வங்கள் அனைத்தும் நிறுவனப்படுத்தப்பட்டும் காலம் நேரம், இடம், பொருள்கள் அனைத்தும் வரைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். எனவே இவ்வியலில் சிறுதெய்வம், பெருந்தெய்வம் வேறுபாடுகளும் சிறு தெய்வங்களின் பண்புகளும், கோயில் அடையாளங்களும் ஒவவொரு நாட்டார் தெய்வங்களின் வாய்மொழிக்கதைகளும் கூறப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

குருக்கள்பட்டி கிராமத்தில் ஆய்வாளர் ஆய்வின்போது பல்வேறு வரலாற்றுச் சான்றுகளும், சமூகப்பணியாளர் இறைபணியாளர்களின் கதைகளும் கூறப்பட்டுள்ளது.

துணைநூற்பட்டியல்

1. அகத்தியலிங்கம். ச. இராமநாதன்.ஆறு (ப.ஆ). தொகுதி (2) நாட்டுப்புறவியல் ஆய்வுக்
2. கோவை, இந்திய தமிழ் நாட்டுப் புறவியல், அண்ணாமலை நகர், 1987
3. க்ரியாவின் தற்காலத் தமிழகராதி. 48 எண் 4, 24 கிழக்குத் தெரு, சென்னை, 1972.
4. பரமசிவன்.தொ. பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு, பதிப்பகம், நாகர்கோவில், 2001.
5. கலைக்களஞ்சியம் தொகுதி (5), தமிழ் வளர்சசிக் கழகம், சென்னை, 1959.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

“கற்றாழை” புதினத்தில் காணப்படும் வாழ்வியல் கூறுகள்

Life in the Novel “Katralai” (Cactus)

இ. ரெஜிலா மேரி, முனைவர் பட்ட ஆய்வாளர்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்.

Abstract

The article deciphers the morals of life in the novel “Katralai” (Cactus). The main idea of the study is to decode the way of life from the novel written by Su. Tamil Selvi, a renowned Teacher. The protoganist of the novel is Manimegalai and she is compared to the cactus because as the cactus survives of the fittest, the lady Manimegalai also lives like that in the novel. Thus, the writer wants to show that women are living in very worst circumstances. Therefore, the study focuses on the way of life in the novel.

Keywords: Life in the Novel “Katralai” (Cactus), Su. Tamil Selvi, Tamil Literature

முன்னுரை

சு.தமிழ்ச்செல்வி திருவாரூர் மாவட்டம் கற்பகநாதர் குளத்தில் பிறந்தவர். தமிழில் முனைவர்பட்டம் பெற்றிருக்கும் இவர் ஆசிரியராக பணியாற்றுகிறார். இவர் எழுதிய *கற்றாழை* புதினம் பெண்ணின் பெண்களின் போராட்டமாக அமைந்துள்ளது. எத்தகைய வறட்சியிலும் தன்னைத் தகவமைத்துக் கொண்டு உயிவாழும் இயல்புடையது கற்றாழை. இந்நாவலில் இயங்கும் மணிமேகலையும் கற்றாழை போன்றவள் தான் என்று ஆசிரியரே குறிப்பிடுகின்றார். இப்பதினத்தில் காணப்படும் வாழ்வியல் கூறுகளைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

கற்றாழை

கற்றாழை புதினம் முழுவதும் பெண்ணின் பெண்களின் போராட்டமாக அமைந்துள்ளது. பெண் என்பவள் தொடர்ந்து போராடக்கூடியவள். அவள் ஒரு போதும் சோர்ந்துப் போக மாட்டாள். தம் தேவைகளை தாமே நிறைவு செய்து கொண்டு பெண்கள் கூட்டாக சேரந்து வாழ முடியும் என்பதை வெளிப்படுத்தும் விதமாக இப்புதினம் அமைந்துள்ளது.

குடும்ப வாழ்க்கை

தனியாக வெவ்வேறு சூழல்களில் வளர்ந்த ஆணும் பெண்ணும் திருமணம் மூலம் இணைந்து குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்ப வாழ்வில் பள்ளைகளைப் பெற்று குடும்ப வாழ்வில் முழுமை அடைகின்றனர்.

கற்றாழை’ புதினத்தில் சண்முகம் பாக்கியம் மகள்களான பூர்ணம் மணிமேகலை வளர்மதி என்று குடும்பமாக வாழ்கின்றனர். பின் மகள்களுக்கும் திருமணமாகி குடும்ப வாழ்வில் ஈடுபடுவதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வியில் நாட்டம்

பெண்ணின் வாழ்க்கையில் கல்வி மிக மிக இன்றியமையானது. ஒரு குடும்பத்தில் பெண் கல்வி கற்றால் அக்குடும்பமே நல்லறிவைப் பெற்றிருக்கும் என்பது நாம் அறிந்த ஒன்றாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அக்காவின் பிடிவாதத்தால் மணிமேகலையின் படிப்புக்கு பாதிப்பு வருகிறது. அவள் அம்மா அவள் படிப்புக்கு முடிவுகட்டியதால் சாராயக் கடையில் இருக்கும் அப்பாவைத் தேடிச் செல்கிறாள். அங்கு தான் படிக்க விரும்புவதைத் தெரிவிக்கிறாள். அப்பா பள்ளிக்கூடம் போ என்று சொன்னதால் "நாளையிலிருந்து பள்ளிக்குப் போகலாமென்று வீட்டிற்கு ஓட்டமெடுத்தாள் மணிமேகலை." மணிமேகலைக்கு படிப்பு அன்றே முற்றுப்புள்ளி ஆனது. தன் நிலை தன் மகளுக்கு வரா வண்ணம் செயல்படுகிறாள். கணவன் செல்வராசு குடிகாரன் மட்டுமின்றி சில நாட்களிலேயே அவளை விட்டு வேறொருப் பெண்ணுடன் சென்று விடுகிறான். அவள் தன் மகள் கலாவை படிக்க வைக்கவே முழுவதுமாக யோசனைச் செய்கிறாள். "புள்ளைய பள்ளிக்கொடத்துல சேக்கணுமே என்ன செய்யிறன்னு நெனச்சிட்டுருந்தன்." என்று ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதன் வாயிலாக அறியமுடிகிறது.

பழக்கவழக்கம்

ஒரு சமூகத்தின் பண்பாட்டுக்கூறுகளை அறிந்துக்கொள்வதற்கு அந்த சமூக மக்களின் பழக்கவழக்கங்களை உற்றுநோக்குவதன் மூலம் அறியலாம். 'கற்றாழை' புதினத்தில் பனம்பழம் உண்ணும் பழக்கம் இருப்பதை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். பனம்பழத்தை அடுப்பில் வைத்துச் சுட்டு "மத்தியான சோறு இல்லாத போதும் வேலையில்லாமல் சும்மா இருக்கும்போதும் ஆளுக்கொரு கொட்டையாய் பிய்த்து மணிமேகலையும் பாக்கியமும் சப்புவார்கள். "பனம்பழக்காலத்தில் எல்லோருடைய வீட்டிலும் அடுப்போரத்தில் இரண்டு பழங்களாவது வெந்து கொண்டேயிருக்கும் என்று புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மாடு மேய்க்கும் சிறுவர்கள் பில்லுமுட்டைகள் உண்ணும் பழக்கம் இருந்தது. "தண்ணீரில்லாத ஈரப்பதம் மட்டுமேயுள்ள சற்றுமேடான தரைகளில் படர்ந்து கிடக்கும் உப்பருகம் புல்லின் வேரில் பில்லுமுட்டைகள் இருக்கும்.

புல்லைப் புடுங்கிவிட்டு வேரைத்தோண்டிப் பார்த்தால் உருண்டை உருண்டையாக வெள்ளை நிறத்தில் மிளகு சைசில் பில்லுமுட்டைகள் இருக்கும். வாயில் போட்டு நசுக்கினால் அதிலிருந்து வெள்ளையாய் பால் போன்ற திரவம் வரும். அது ருசியாகவும் லேசாக கவுச்சிவாடை வீசுவது போலவுமிருக்கும். மாடு மேய்க்கும் பிள்ளைகள் பில்லுமுட்டையை நிறைய சேகரித்து கழுவி மடியில் வைத்துக் கொண்டு பட்டாணி தின்பதுபோல் ஒவ்வொன்றாக வாயில் எடுத்துப்போட்டுத் தின்பார்கள்." அதுபோலவே கல்யாணத்திற்குத் தேவையான நெல்லை அவிக்கும் பழக்கமும் இருந்தது. அவளுடைய அக்கா பூரணத்தின் கல்யாணத்திற்கு நெல்லவித்தது இன்னும் நினைவிருக்கிறது மணிமேகலைக்கு. அப்போதும் பாக்கியமும் மணிமேகலையும் அவித்தார்கள். அப்போது நான்கு மூட்டை நெல் அவிக்க வேண்டியிருந்தது. இருவரும் விடிய விடிய அவித்தும் சீக்கிரத்தில் வேலை முடியவில்லை. 'ஆனா இன்னைக்கி நம்ம மட்டுமே அவிச்சுப்புட்டம். அதுவும் விடியிறத்துக்குள்ள' என்று நினைத்தாள்.என்று புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தத்தம் பண்ணுதல்

மணிமேகலை தன் மகளை மாரியம்மனுக்கு தத்தம் செய்கிறாள். தத்தம் செய்த கலாவை மணமுடித்துக் கொடுக்க தத்தம் திரும்ப பெற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. "கலா பிறந்த இருபத்தி இரண்டாம் நாளே இந்த கோவிலுக்குத் தூக்கி வந்து எள், தவிடு இவற்றை மாரியம்மனிடமிருந்து பெற்றுக் கொண்டு அவளை மாரியம்மனுக்கு 'தெத்தம்' பண்ணிக்கொடுத்து விட்டுப் போயிருந்தாள். தத்துக் கொடுத்து பத்தொன்பது வருடங்களாகி விட்டன. தன்னோடு இருந்தாலும் கலா இத்தனை நாட்களும் மாரியம்மனின் பிள்ளையாகவே வளர்ந்தாள். மாரியம்மன் தத்து எடுத்திருக்கும் பெண்ணை யாருடைய விருப்பம் போலவும் யாரும் தாலி கட்டி சொந்தமாக்கிக் கொள்ள முடியாது என்பதால் தத்துத் திருப்பும் சடங்குக்கு கோயில் பூசாரி மணிமேகலையைக் கூப்பிட்டார். வளர்மதி தன் பிடிக்குள்ளேயே

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மணிமேகலையை வைத்திருப்பவளைப்போல மாரியம்மனுக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தினாள். தவிட்டையும் எள்ளையும் வாங்கிக்கொண்டு ஏதேதோ மந்திரங்களைச் சொல்லி கலாவை மணிமேகலையின் கையில் திருப்பிக்கொடுத்தார் பூசாரி" என்பதனைத் தெளிவுறுத்துகிறார் ஆசிரியர்.

காதல்

மணிமேகலை சங்கரனை மனதார விரும்புகிறாள். ஆனால் விதியின் விளையாட்டால் சங்கரன் இறந்து விடுகிறான். "வாலிபனான பிறகு அவனைப் பார்த்ததில்லையே தவிர அவனோடுதான் வாழப்போகிறோம் என்று எவ்வளவு நம்பிக்கைக் கொண்டிருந்தாள்." ஆனால் அவள் விருப்பப்படி எதுவும் நடக்கவில்லை. அவளுக்கு குடிகார கணவன் செல்வராசு கணவனாக அமைகிறான். இதனால் அவள் தன் மகள் கலாவின் காதலை வெறுக்கிறாள். "பெத்து வளத்ததுக்கு அர்த்தமில்லாம பெயிட்டு பாத்தியா. இவ்வள நாளும் நாம் பட்ட கஷ்டத்துக்கு கண்ட பலன் இதுதான் ஒரு நிமிசத்துல தூசிமேரி என்னயத் தூக்கி வீசிப்புட்டு அதோட சொந்தம் சோலிய தேடிக்கிட்டு. நான் தேவையில்லாம பெயிட்டன்" என்று அவள் வருத்தப்படுவதாகவும் அமைந்துள்ளது.

மதுப்பழக்கம்

மதுப்பழக்கம் தன் உடம்பை மட்டுமல்ல தன் குடும்பத்தையே அழிக்கும். மணிமேகலையின் தந்தை சண்முகம் சாராயக்கடையில் சம்பந்தம் பேசி குடிகாரனான செல்வராசுவுக்கு மணிமேகலையைத் திருமணம் செய்து வைக்கிறான். இதன்மூலம் அவள் தந்தை மட்டுமல்ல கட்டியக்கணவனும் குடிகாரனாக அமைந்து இவள் வாழ்வில் துன்பப்படுவதாக புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏமாற்றி திருமணம் செய்து வைத்தல்

சமூகத்தில் ஆயிரம் பொய் சொல்லி திருமணம் செய்து வைப்பார்கள். இதனால் பல இன்னல்கள் ஏற்படுகின்றன.

'கற்றாழை' புதினத்தில் சிவகாமிக்கும் பாண்டுரங்கனுக்கும் திருமணம் செய்து வைக்கின்றனர் .திருமணமாகி ஓராண்டுக்கு மேலாகியும் கர்ப்பம் தரிக்கவில்லை. சிவகாமியின் பெற்றோர் அவளை திருச்சியில் இருக்கிற ஒரு கெட்டிக்கார பெண் மருத்துவரிடம் அழைத்துக் கொண்டுபோய் காட்டினார்கள். குறையொன்றும் இல்லை. பிறகுதான் பாண்டுரங்கன் சொன்னான். "நான் குடும்பக்கட்டுப்பாடு ஆபரேசன் பண்ணிக்கிட்டன் என்று." இங்கு பாண்டுரங்கனின் பெற்றோர் அவனைக் கட்டாயப்படுத்தி சம்மதிக்க வைத்து திருமணம் செய்து வைத்ததை புதினத்தில் குறிப்பிட்டுள்ளார் ஆசிரியர்.

பெண்கள் மேற்கொண்ட தொழில்கள்

'கற்றாழை' புதினம் முழுவதும் பெண்களின் போராட்டமாக அமைந்துள்ளது.மணிமேகலை சிறுவயதிலேயே புல்லறுத்தல், மாடுமேய்த்தல் நெல்அவித்தல், விறகு வெட்டுதல் பனம்பழம் பொறுக்குதல் போன்ற தொழில்களை மேற்கொள்கிறாள். அவள் மணமுடித்துச் சென்ற பின்பும் அவளது வாழ்க்கை மாறவில்லை. குடிகாரக் கணவன் அவளை விட்டுப் பிரிந்து சென்ற பின் மகள் கலாவை வளர்ப்பதற்காக நாற்று நடுதல், விறகு வெட்டுதல் என்று தன் வாழ்க்கையை நகர்த்துகிறாள். பின் தன் மகளோடு திருப்பூர் சென்று பனியன் கம்பெனியில் வேலைப் பார்க்கிறாள். அங்கு அவளோடு பல பெண்களும் வேலை பார்க்கின்றனர்.

வாழாவெட்டி

கணவன் இருந்தும் இவன் மனைவியை விலக்கி வைத்து தனியாக வாழக்கூடிய பெண்களை வாழாவெட்டி என்பார்கள். இப்பெண்களின் வாழ்க்கை பெரும் துயரத்திற்குரியதாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

செல்வராசு மணிமேகலையை விட்டுப் பிரிந்து சென்றதால் இவள் வாழாவெட்டி ஆகிறாள். திருப்பூர் பனியன் கம்பெனியில் இவளுடன் திலகாஇ சென்சிலாஇ கனியா மற்றும் கணவனை இழந்த சிவகாமி என்று ஒருகூட்டாக இருக்கின்றனர். பிறகு மணிமேகலையின் மகள் கலாவும் இவர்களுடன் சேர்ந்து விடுகிறாள். திலகாவும் சென்சிலாவும் “கடசீல நீனும் எங்கள மாதிரிதானா” என்பது போல பார்த்தார்கள் என்று ஆசிரியர் குறிப்பதிலிருந்து அவர்களின் வலியை உணர்ந்து கொள்ள முடிகிறது.

உதவி மனப்பான்மை

மனிதனின் இயலாமையில் உதவிக்கரம் நீட்டுபவனே உண்மையான மனிதர்கள். மனித நேயமிக்கவர்கள். மணிமேகலைக்கு அவள் தங்கை வளர்மதி எப்போதும் அவளுக்கு உறுதுணையாக நிற்கிறாள். கலாவை அவள் வீட்டில் விட்டு படிக்க வைக்கிறாள். பின் அவர்களை திருப்பூர் பனியன் கம்பெனியில் சேர்த்து விடுகிறாள். தன் அக்காவின் பயணச் செலவிற்காக தாலியில் கிடந்த பிராங்காசை விற்றுவிடுகிறாள். பின் கலாவுக்கு திருமணம் நடக்கும்போதும் மணிமேகலைக்கு ஊன்றுகோலாக இருந்து செயல்படுகிறாள். இத்தகைய உதவி மனப்பான்னையையும் குறிப்பிடத் தவறவில்லை ஆசிரியர்.

முடிவுரை

‘கற்றாழை’ புதினத்தில் பெண்களின் போராட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தகைய வறட்சியிலும் தன்னைத் தகவமைத்துக்கொண்டு உயிவாழும் இயல்புடையது கற்றாழை. அவ்வாறே இப்புதினத்தின் முக்கிய கதாபாத்திரமான மணிமேகலையின் வாழ்க்கையும் அமைந்துவிடுகிறது. உணவுப்பழக்கவழக்கம் சிறுவயது வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்துகிறது. குடும்ப வாழ்க்கையில் குடிகாரக் கணவனால் தனது வாழ்க்கையே சின்னாபின்னமாகி விடுவதை புதினத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பெண்கள் மேற்கொண்ட தொழில்கள், உதவி மனப்பான்மை மற்றும் ஒவ்வொரு பெண்ணின் மனநிலை போன்றவை புதினம் முழுவதும் வாழ்வியல் கூறுகளாக உலவவிட்டுள்ளார் ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி என்பதை அறிய முடிகிறது.

நூற்பட்டியல்

1. சு.தமிழ்ச்செல்வி. ‘கற்றாழை’.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நான்மணிக்கடிகை உணர்த்தும் அறம்

Ethics Instructed by "Nanmanikkadikai"

மோ.ரேவதி, உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-11.

Abstract

The present article focuses on the ethics instructed by "Nanmanikkadikai". The meaning of the title reveals it as four pieces of precious stones because as precious like them the verses tells of four valuable quotes. This book contains of 106 verses. The values and the need of it in the elevation of moral human life are instructed in the work. Hence, the study decodes the ethics as told in the work "Nanmanikkadikai".

Keywords: Ethics, Instruction, "Nanmanikkadikai"

முன்னுரை

நான்மணிக்கடிகை என்பது நான்கு இரத்தினத் துண்டங்கள் என்னும் பொருளைத் தரும். ஒவ்வொரு பாடலிலும் நான்கு சிறந்த கருத்துக்களைக் கூறுவதால் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இதனை இயற்றியவர் விளம்பிநாகனார். இந்நூல் 106 பாடல்களைத் தன்னகத்தேக் கொண்டுள்ளது. இது நான்கு வகை மணிகளால் ஆன ஆபரணம் என்று அழைக்கப்படுகிறது.

அறத்தின் நோக்கம்

மனிதனுக்கு மனிதன் அறிவாலும் தொழிலாலும் அனுபவத்தாலும் வேறுபட்டு விளங்குகிறான். அவ்வகையில் ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைச் சூழலுக்கேற்ப அறத்தைத் தனித்தனியே எடுத்துக்காட்டி விளக்குவது இயலாத ஒன்றாகும். இருப்பின் அறத்தின் பொதுத்தன்மையை அறிந்து நோக்கும்போது மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் தீமையைச் செய்யாமலும் இருப்பதனை அறம் எனலாம்.

அறம் செய்தலே அழகு

நெல்லும் கரும்பும் கழனிக்கு அழகு, தாமரைக்குளத்திற்கு அழகு. அதுபோல அறம் செய்தலே மனிதனுக்கு அழகு.

"நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளுத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான்செல் உலகத் தறம்" (நான்மணி. 11)

நெற்பயிறும் கரும்பின் பயனும் நிலத்துக்கு அழகு, செந்தாமரை குளத்திற்கு அழகு அதுபோல தான் செல்லப்போகும் மறுமையுலகத்துக்குத் துணையாகச் செய்யப்படும் அறங்கள் ஒருவனுக்கு அழகானது ஆகும்.

செயல்களில் திருத்தம் வேண்டும்

பிறருக்கு தீமை உண்டாக்கும் செயல்களை விட்டுவிடுதல் வேண்டும்.

"கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல் வேண்டும்- என்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி அடல்வேண்டும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஆக்கஞ் சிதைக்கும் வினை'' (நான்மணி.13)

பிறர் நமக்கு செய்த தீமைகளுக்காக அவரைப் பழி தீர்ப்பேன் என்று இருத்தல் கூடாது அவர் நமக்கு செய்த தீமையை எண்ணி எண்ணி அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மையை மறந்து விடுதல் கூடாது. தீமையை உண்டாக்கும் சினத்தை விட்டுவிடுதல் வேண்டும்.

சினத்தை விட்டொழித்தல் வேண்டும்

சினமானது மற்றவரைத் துன்பப்படுத்தும் செயலாதலால் அதனை விடுதல் வேண்டும்.

"இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக – தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்''

இழிவை ஒருவன் விரும்புவானாயின் இரத்தல் தொழிலை மேற்கொள்ள வேண்டும். இவ்வுலகில் எப்பொழுதும் நிலையாய் இருத்தலை விரும்பினால் அறத்தினை மேற்கொள்ள வேண்டும். அதுபோல, பிறரை வெல்ல வேண்டுமாயின் சினத்தை முற்றிலும் தவிர்த்தல் வேண்டும். இதனைத் திருக்குறள்

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்'' (குறள்.35)

பொறாமையும் பேராசையும் கோபமும் கடுஞ்சொல்லும் ஆகிய நான்கினையும் நீக்கிச் செய்யப்படுவதே சிறந்த அறமாகும்.

கல்வி சிறந்த அறிவை உண்டாக்கும்

பொய் கூறாமை புகழையும் கல்லாமை அறியாமையையும் கல்வியானது அறிவையும் உண்டாக்கும்.

"புகழ் செய்யும் பொய்யா விளக்கம் இகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை காணாக்
குருடனாச் செய்வது மம்மர் - இருள்தீர்ந்த
கண்ணாரச் செய்வது கற்பு'' (நான்மணி.24)

பொய்கூறாமையாகிய ஒளி எங்கும் புகழை உண்டாக்கும். அறியாமை தீமையை உண்டாக்கும். கற்றறியாமை குருடனைப் போலாக்கும். கல்வியறிவு குருடு நீங்கி கண்ணொளியை உண்டாக்கும். இதனைத் திருக்குறள்,

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்'' (குறள்.395)

பொருளுடையார் முன்னே வறுமையாளர் தாழ்ந்து நிற்பது போல ஆசிரியர் முன் விருப்புடன் தாழ்ந்து பணிந்து கற்றவரே உயர்ந்தோர் ஆவர். அவ்வாறு பணிவதற்கு நாணிக் கல்லாதவர் இழிந்தவர் ஆவார். கல்லாதவர் மேன்மையுடையவர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

அறமல்லாத அரசனை சேனைகளே கொல்லும்

அறத்தோடு நில்லாத அரசனை சேனைகளே பொறுக்காது.

"இரைசுடும் இன்புறா யாக்கையுட் பட்டால்
உரைசுடும் ஒண்மை யிலாரை – விரைகொள்ளா
முன்னை ஒருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைந்த சேனை சுடும்'' (நான்மணி.52)

பிணியுள்ள உடம்பில் சேரும் உணவு செருமானம் இல்லாமல் உடலைத் துன்புறுத்தும். அறிவில்லாதவரை அவரின் வாயின் சொல்லே வருத்தும். முன் செய்த வினைகள் இம்மையில் வந்து துன்புறுத்தும். அதுபோல வரையறையில் நில்லாத அரசனை சேனைகளே கொல்லும்.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

முடிவுரை

தமிழ் இலக்கியங்களின் தொன்மையானது இயற்கையினாலும் உவமைகளினாலும் அவ்விலக்கியங்களில் காணப்படும் அறத்தன்மைகளினாலும் சிறப்புற கட்டமைக்கப்பட்டுள்ளது.

பார்வை நூல்கள்

1. நான்மணிக்கடிகை
2. இரா.கனகசுப்புரத்தினம் - ‘திருக்குறள்’, அறிவுநிதி பதிப்பகம், சென்னை, 1996.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

பொன். முருகேசன் நாவல்களில் கலாச்சாரமும் புதுமையும்

Culture and Modernism in the Novels of Pon. Murugesan

முனைவர் கோ. ராஜேஸ்வரி, உதவிப் பேராசிரியை,
தமிழ்த் துறை, உதயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெள்ளமோடி.

Abstract

The article focuses on the showing of culture and modernism in the novels of Pon. Murugesan. Life is mixed of the culture without that everything becomes nothing. A society can come to a top level if it has a rich culture and heritage. Today's world is devoid of culture and is shattering into pieces. It becomes the hurdle for the lingering modernism to attain its fulfilled state. Hence, the study decodes the worst states of ruining culture and the need of modernism.

Keywords: Culture and Modernism, Novels of Pon. Murugesan

முன்னுரை

மனித வாழ்வு பொருளாதாரம் அரசியல் முதலியவற்றோடு தொடர்புடையது போலவே கலாச்சாரத்தோடும் தொடர்பு கொண்டது. கலாச்சார வளர்ச்சிதான் மனிதனை விலங்கினின்று வேறுபடுத்துகிறது. பொருள் வளமும் அரசியல் உரிமையும் பெற்றிருந்தாலும் கலாச்சாரத்தில் வளர்ச்சி நிலையை எய்தாவிட்டால் மனித வாழ்வு நிறைவு பெற முடியாது. இன்றைய உலகம் கலாச்சாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இது புதுமையின் முழுமை நோக்கிய பயணத்திற்குப் பெரிதும் தடையாக அமைந்துள்ளது. இன்றைய கலாச்சாரத்தின் இழிநிலைகள் குறித்தும் புதுமையின் தேவைகள் குறித்தும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலாச்சாரம் விளக்கம்

மனிதனின் அகமும் புறமும் வளர்ந்துள்ள வளர்ச்சி நிலைகளைக் குறிப்பதற்குப் பண்பாடு, நாகரிகம் என்னும் சொற்கள் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் 'culture', 'civilization' என்னும் சொற்களுக்கு இணையான சொற்கள் இவை, இவ்விரு சொற்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுச் சொல்லாக "கலாச்சாரம்" என்னும் சொல்லை அறிஞர்கள் இப்போது பயன்படுத்தி வருகின்றனர்.

கலாச்சாரம் பற்றிய அறிஞர்கள் கருத்து

பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியின் வழியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள் சமூகப் பெருமானங்கள் ஆகியவற்றின் தொகுதியாகும். ஒரு கூட்டத்தினரின் பண்பாடு என்பது அக்கூட்டத்தினரின் தொழில் நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறைகள், உற்பத்தி உறவுகள், கல்வி, அறிவியல், கலை, இலக்கியம், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும் என்று சந்திர சேகரன் கூறியுள்ளார். (சந்திரசேகரன். ச., பண்பாட்டு உருவாக்கத்தில் பத்திரிக்கைகளின் பங்கு ப. VII).

கலாச்சாரம் என்பது, மனித குலம் அதன் சமூக வரலாற்று வாழ்க்கையில் படைத்திருக்கின்ற பொருளாதாரம் மற்றும் ஆன்மீக மதிப்புகளின் மொத்தமாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

கலாச்சாரத்தில் அகக்கூறுகள், புறக்கூறுகள் என இரு கூறுகள் உள்ளன. மக்கள் தங்கள் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருட்களும் கலாச்சாரத்தின் புறக்கூறுகளாகும். இயந்திரங்கள், கருவிகள் வீட்டுப் பொருள்கள், உடைகள், அணிகலன்கள், கட்டடங்கள், சாலைகள், போக்குவரத்துப் பொருட்கள், அழகுப் பொருட்கள், அறிவுப் பொருட்கள் முதலிய அனைத்தும் இதில் அடங்கும். இவற்றைக் கலாச்சாரத்தின் பொருள் சார் கூறுகள் என்பர். கலாச்சாரத்தின் புறக் கூறுகளில் ஒன்றான நட்பைப் பற்றி கூறியுள்ளார்.

ஆண்-பெண் நட்பு

ஆசிரியர் பொன்முருகேசன் கலாச்சாரத்தின் விளைவாக நட்புகள் உருவாக்கப்படுகிறது என்றும், அவ்வாறு உருவாக்கப்படும் நட்பானது ஆண்களும் ஆண்களும் நண்பர்களாக இருக்கலாம். அதே போன்று பெண்களும்-பெண்களும் தோழிகளாக இருக்கலாம். ஆனால் திசை மாறி இருக்கும் ஆண், பெண் நட்பானது தூய்மையான நட்பாக இருக்காது என்றும், அவ்வாறே அவர்கள் நண்பர்களாக உருவாக்கப்பட்டாலும் அது இவ்வுலகிற்கு சாத்தியப்படவேபடாது என்றும் தனது உயிருக்காக நாவலில் விளக்குகிறார்.

“ஆண் பெண்ணுக்கிடையில தூய்மையான நட்புங்கறது சாத்தியப்படவே படாது. டைம் பாஸ்க்காக மெரினா பீச் போற மாதிரிதான் இன்றைய பிரண்ட்ஷிப் இருக்கு ... இதுல ஆண் பெண்ணுக்கிடையில தூய்மையான நட்புங்கறது நினைச்சு பார்க்க முடியாத ஒன்றாக இருக்கு. தூய்மையான நட்பும் இருக்கு.

ஆண்களுக்கிடையில் இருக்கலாம்... ஏன்? ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில இருக்கக் கூடாது.

“முடியாது” அடித்து சொன்னான் ஜித்து (உயிரு.ப.15) ஆசிரியர் ஜித்து என்ற கதாபாத்திரம் வழியாக ஆண்-பெண் நட்பை பொய்யான நட்பு என்கிறார்.

கலாச்சாரம் மாற்றமும் நட்பின் நிலையும்

சங்க காலத்திலிருந்து இன்றுள்ள அறிவியல் காலம் வரை எவ்வளவோ மக்களிடையே பழக்க வழக்கங்களும், கலாச்சார மாற்றமும் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கிறது. இருப்பினும் பழங்காலத்திலிருந்த சிலப் பழக்க வழக்கங்களை நாம் இன்றும் பயன்படுத்திக் கொண்டு தான் இருக்கின்றோம். அப்படிப்பட்ட பழக்கவழக்கங்களில் ஒன்றாக ஆசிரியர் நட்பைப் பற்றி கூறுகிறார். நண்பர்கள் ஒருவருக்கொருவர் தம் மனதில் ஏற்படும் வேதனைகளைப் பகிர்ந்து கொண்டால் மட்டுமே இதயத்திற்கு இதமளிக்கும். வெளிச்சம் தேடும் நிலவு நாவலில் வசந்த் சிவாவிடம் கொண்ட நட்பை சாதாரண நட்பாக ஆசிரியர் கூறவில்லை.

“சாதாரண நட்பா... நட்புக் கென்றே சரித்திரத்தில் ஒரு சாசுவதமான இடம் உண்டே... மகாபாரதத்தில் கண்ணன்-குசேலர், கர்ணன்-துரியோதனன், சங்க இலக்கிய காலத்தில் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார், ஔவையார் அதியமான், கபிலர்-பாரி எனச் சொல்லிக் கொண்டே போகலாமே... வாழ்க்கையில் இடறுகள் வேதனையைத் தான் பதியம்போடும். ஆனால் நட்பு இருந்தால் மட்டுமே இதயத்துக்கு சற்று இறைப்பாறுதல் கிடைக்கும். அத்தகைய நட்பு கொண்ட சிவாவிடம் இதுவரை உண்மையை மறைத்திருப்பதை நினைக்கையில் என் இதயமே வெடித்து விடும் போல் இருக்கிறதே ... தீயிலிட்ட புழுவைப்போல துடித்தான் வசந்த். (வெளிச்சம் தேடும் நிலவு ப.11)

வசந்த் தன் மனைவியைப் பிரிந்து வாழ்வதை நண்பன் சிவாவிடம் கூறவில்லையே என்ற ஏக்க உணர்வு அவனுடைய மனதில் நிலை கொண்டு சூடுபட்ட புழுவைப் போலத் துடிக்க வைக்கிறது. இதன் மூலம் இருவரும் கொண்ட நட்பையும், ஒருவர் மீது ஒருவர் கொண்ட நட்பின் ஆழத்தையும் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஆடம்பரம்

கலாச்சாத்தின் பொருள் சார் கூறுகளில் ஒன்று ஆடம்பரம். ஆடம்பரத்தின் விளைவாக நாடு பலவிதங்களில் சீர்கெட்டு வருகிறது. மக்களில் பெரும்பாலானோரின் கைகளில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

செல்வம் பெருகி உள்ளதால் அவர்கள் ஆடம்பரச்செலவுகளில் ஈடுபட்டு முதலாளிகள் தொழிலாளிகளை அடக்கும் முறையும் நிலவுகின்றது. மேலும் நம் நாடு வறிய நாடு. வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட நாடு. அந்நியக் கடன்களால் அல்லல் கூறும் நாடு. ஆதலால் அனைத்து மாந்தரும் எளிய வாழ்வையும் கட்டுப்பாடான செலவுகளையும் மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளனர். ஆனால் எளிய வாழ்வுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டிய முதலாளிகள் இன்று சுகபோகங்களிலும், அடுத்தவர்களைக் கொடுமைப்படுத்துவதிலும் மூழ்கிக் கிடக்கின்றனர். அத்துடன் அவர்களின் பாதுகாப்புச் செலவுகள், ஆரம்பரம் முதலியவற்றுக்கும் ஏராளமான பணம் விரயம் ஆகிறது. இதுவும் நம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கிறது. முதலாளிகள் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதனை பொன்முருகேசன் “எனக்காக மட்டும்” நாவலில் எடுத்தியம்புகிறார்.

“போர்டிகோவில் விதவிதமான கார்கள் நின்றிருந்தது. எந்த வண்டியில் ராஜேஷ் ஏறுவான் என்று டிரைவர்கள் தயாராக நின்றிருந்தார்கள் “ஒரு வண்டியையே ஒழுங்கா யூஸ் பண்ண முடியலே… இத்தன வண்டி தேவையாடா? ராஜேஷைப் பார்த்து கேட்டான் வினோத் இது எல்லாமே எனக்கு புடிச்சமாடல். அதனால் வாங்கினேன். டிரைவருக்கு தெண்ட சம்பளம் எல்லா காரும் சும்மாவே நிக்கிது. எனக்கும் தனியா ஒரு கார் தர மாட்டெங்கிற…

“புதுசா கேளு … எத்தனை வேணுமின்னாலும் வாங்கிக் தர்றேன். எனக்கு பிடிச்சத மட்டும் கேட்காதே (*எனக்காக மட்டும்* ப. 5) என்று முதலாளிகளின் ஆடம்பரச் செலவுகளையும், அவர்கள் பயன்படுத்துகிற கார் வகைகளையும் பட்டியலிடுகிறார் ஆசிரியர். இப்படிப்பட்ட ஆடம்பரச் செலவுகளுக்குத் தொழிலாளிகள் அடிமைப்படுத்தப்படுகின்றனர் என்பதையும் ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

போதைப் பொருட்கள்

பெரும்பாலான ஆண்கள் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கான காரணம் அவர்களின் மனதில் ஏற்படும் பாதிப்புகளும், கவலைகளுமே ஆகும். ஆண்கள் தம் கவலைகளை மறப்பதற்கும், தாம் நினைத்தது நடக்க வில்லையே என்ற ஏக்க உணர்வும் தான் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதற்குக் காரணம் என்கிறார் ஆசிரியர் பொன்முருகேசன்.

“நான் கல்யாணம் பண்ணி தனியா போய்ட்டா என்ன செய்வே… என்று வினோத் கேட்ட வார்த்தைகள் ராஜேஷின் செவிகளில் பலமுறை பலமாக எதிரொலித்தது. நோ… என்று சத்தமாகக் கத்தியவன் போர்வையை விலக்கி எழுந்தான். இரவு உடைகளை சரி செய்த படியே கீழே வந்தான். விஸ்கி பாட்டிலைத் திறந்து அதை கண்ணாடி கோப்பைக்கு மாற்றி உள்ளே இறக்கினான் (எனக்காக மட்டும் ப.27). போதைப் பொருட்களை பயன்படுத்துவது தன் மனக் கவலையைப் போக்குவதற்காகத்தான் என்பதை ஆசிரியர் இங்கே வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார்.

முதலாளித்துவ ஆதிக்கம்

நாட்டில் நாகரீகம் மேலோங்க மேலோங்கதான் அடக்கு முறையும், பழிவாங்கும் பண்பும், ஏழைகளை விலைக்கு வாங்கும் குணமும் மேலோங்கி வருகின்றது. இங்கு முதலாளியாக விளங்கும் ராஜேஷ் ஏழைகளையும், அன்றாட தினக்கூலிகளையும் தன் வசப்படுத்துகிறான். மேலும் தான் நினைத்த காரியம் நிறைவேற வேண்டுமென்ற நோக்கத்தால் ஒரு ஞவுனு பூத்தையே ஒரு நாளுக்காக விலை பேசுகிறான்.

“கடையை நெருங்கியவன் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு இந்த டெலிபோன்ல உனக்கு தினம் எவ்வளவு வருமானம் வருது என்று கடைக்காரனிடம் கேட்டான். நூறு ரூபாய் கிடைக்குமுங்க.. கடைக்காரன் சொல்ல பாக்கெட்டிலிருந்து கத்தையாய் பணத்தை எடுத்தான்.

இந்தா அய்யாயிரம். இப்பவே கனக்ஷென எடுத்துடு … நான் திரும்பி வர வரைக்கும் இந்த போன்ல யாருமே பேசக் கூடாது. சரிங்க … என்றவன் கனெக்ஷனை கழட்டிவிட்டு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பணத்தை வாங்கிக் கொண்டான் (எனக்காக மட்டும் ப.48) இதன் மூலம் முதலாளித்துவ ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர்.

கலாச்சாரத்தினால் விளையும் சமூக சீரழிவு

மேலை நாடுகளில் ஆண், பெண் இருபாலரும் ஒருவருக்கொருவர் இயல்பாக பழகுவதும், தனியாக ஓர் ஆண் ஒரு பெண்ணுடன் செல்வதும் உணவகங்களுக்குச் சென்று விரும்பிய உணவை உண்பதும் இயல்பான ஒன்று. காலம் செல்லச் செல்ல அக்காலச்சாரமுறைகள் மேலோங்கி அது நம் நாட்டிலும் உருவாகத் துவங்கியது. நண்பர்களாகப் பழகிய சிறிது காலங்களில் காதலர்களாகவும் அறிமுகம் செய்து வாழ்க்கையை சீர்குலைக்கின்றனர் என்பதை ஆசிரியர் தீர்வு நாவலில் கூறியுள்ளார்.

“ஃ.பர்ஸ்ட் டயம் வேண்டான்னு சென்னா சங்கடம்படுவீங்க … ஒ.கே. சுமதியின் வெளிப்படையான பேச்சு வினோத்தை மிகவும் கவர்ந்தது.

வினோத் வழக்கமாக செல்லும் ரெஸ்டாரெண்டிற்குள் சுமதியுடன் நுழைந்தான். தனிமையான இடத்தைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தார்கள். அவர்கள் அமருவதைக் கண்டதும் சப்ளையர் அங்கு வந்தான்.

“என்ன சாப்டறீங்க … சுமதியிடம் கேட்டான்

மசால் தோசை … சுமதி கூற தனக்கும் அதையே கொண்டு வரக்கூறி சப்ளையரை நகர்த்தினான். எனக்கு உங்கள ரொம்பப் பிடிச்சிருக்கு … வினோத் வித்தியாசமாகப் பார்த்தான். அதாவது உங்க வெளிப்படையான பேச்சு என்றாள் சுமதி.

சுமதி நான் கேட்குறனேன்று தப்பா நினைக்காத அந்த தம்பி வினோத் கூட சேர்ந்து போய்ட்டு சேர்ந்தே வர்றியே … பாக்குறவங்க உன்னைப் பத்தி என்ன நினைப்பாங்கன்னு யோசிச்சுப் பாத்தியா (தீர்வு ப.58) என்பதன் மூலம் சமூகம் ஆண்-பெண் தனியாக சென்றாலே தவறான கண்ணோட்டத்துடன் தான் பார்க்கும். இதன் மூலம் சமூக சீரழிவுகள் ஏற்படுகின்றது.

முடிவுரை

இக்கட்டுதரை மூலம் பொன்முருகேசன் நாவல்களில் காணலாகும் கலாச்சாரங்களையும் இதன் மூலம் சமூகத்தில் நிலவும் கலாச்சாரச் சீரழிவுகளையும் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

பார்வை நூல்

1. பொன் முருகேசன். *எனக்காக மட்டும்.*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பூமணியின் 'அஞ்ஞாடி' நாவலில் 'வண்ணார்' தொழில் பாடல்கள்

The Occupational Songs of the Vannar (Washermen) Community in the Novel *Agnaadi* by Poomani

ரா. லிஜி, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரி, களியக்காவிளை.

Abstract

The article provides the matters related to the songs sung by the washermen people in the novel "Agnaadi". Society is a setup of all sorts of people doing their jobs; even by clanship. The labour of all people pressures them and to come out of the crisis they refreshed them with singing songs to rejenuate them with fine songs. The principal character Mari in the novel sings song to relieve the hardships of labour in the novel. It is full of logic and humour. Therefore, the study revolves on the facts regarding songs related to the work and refreshment of the people of washerman community.

Keywords: Occupational Songs of the Vannar Community, Novel *Agnaadi by Poomani*

மனிதன் என்று தன்னுடையத் தேவைகளைப் பற்றி சிந்திக்க தொடங்கினானோ, அன்றே தொழில் தோன்றிவிட்டது. சிந்தனையின் வெளிப்பாடே செயல்வடிவமான உழைப்பாக அமைகிறது. ஒரு சமூகத்தின் நாகரிகம், பண்பாடு வளர்வதற்கு அடிப்படையாக அமைகின்றது. இலக்குகள் இன்றி காடுகளிலும் மலைகளிலும் நாடோடிகளாகத் திரிந்த பண்டைய சமூகத்தினர் தங்களின் நிலைகளை உணரத் தொடங்கியபோது, தொழில் தோற்றம் பெற்றது. தொழிலுடன் இரண்டறக் கலந்த பழந்தமிழ்ச் சமூகம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான தொழில் முயற்சியில் ஈடுபட்டது. இவ்வாறு தொழிலைச் செய்யும் போது உடலை வருத்தி கடினமாக உழைத்தனர். வேலை பளு தெரியாமல் இருக்க பாடல்களைப் பாடிக்கொண்டு வேலை செய்தனர். இத்தகைய பாடல்களை 'அஞ்ஞாடி' நாவலில் சலவைத் தொழில் செய்யும் மக்கள் மத்தியில் வேலைப் பளு தெரியாமல் இருக்க, பதிவு செய்த பாடல்கள் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வண்ணார் தொழில்

சாதாரண மனிதர்களெல்லாம் சரித்திர நாயகர்களாக உருவாகக் காரணமாக அமைவது உழைப்பு. 'உற்சாகமான உழைப்பு' இல்லாமல் உயர்ந்த வெற்றி எதையுமே சாதிக்க முடியாது. 'பாதங்கள் நடக்க தயாராக இருந்தால், பாதைகள் மறுப்புச் சொல்லப் போவதில்லை' என்கிறார் மு. மேத்தா. உழைப்பு என்பது ஒவ்வொரு இனத்தவர்களுக்கேற்பச் செய்யப்படுகின்ற தொழிலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆடை வெளுத்தலை முதன்மையாகக் கொண்டு வாழும் அனைவரும் 'வண்ணான்' என குறிப்பிடுகின்றனர். அவ்வாறு வழங்கப்படுகின்ற இச்சொல் 'மண்ணான்' என்றச் சொல்லிலிருந்து தோன்றியதாகச் 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகராதி' சுட்டுகின்றது. தமிழகத்தின் பட்டியல் இனத்தவர்களில் பெரும்பான்மைப் பிரிவினராக உள்ள ஆதிதிராவிடர் மற்றும் தேவேந்திர குல வேளாளர்களுக்குச் சலவைச் செய்வதை இவர்கள் முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். வண்ணார்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அழுக்கு துணிகளைச் சேகரித்தல், துணிகட்குக் குறியிடுதல், உவர்மண் கண்டறிதல், வெள்ளாவி வைத்தல், வெளுத்தல், நீலம் போடுதல், கஞ்சி போடுதல், தரம் பிரித்தல், கூலி என்ற பல்வேறு நிலைகளில் தொழில் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வகையான கடினமான வேலைச் செய்வதால் பாடல்களை பாடிக்கொண்டு வேலைகளைச் செய்கின்றனர். தொழில்பாட்டு பாடுபவர்கள் வேலையின் துவக்கத்தில் இதனைப் பாடுவதில்லை. உழைப்பில் களைப்பு ஏற்படும் போது, பாடல்களை பாடி, உற்சாகமூட்டும் உயிர் மருந்தாக வண்ணார் தொழில் பாடல்கள் அமைகின்றன.

வண்ணார் தொழில் பாடல்கள்

மனித சமூகம் நாகரிக வளர்ச்சியுற்ற காலம் முதற்கொண்டு சில தொழிற்குடியினரே இன்றளவும் தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி நீண்ட வரலாற்று வளர்ச்சியுடையவர்களாய் வண்ணார்கள் காணப்படுகின்றனர். மிக அரிதாக கிடைக்ககூடிய உவர் மண்ணினைக் கொண்டு ஆடைகளை வெளுத்த காரணத்தினால் இவர்கள் தொடக்கத்தில் 'மண்ணான்' எனவும் பின்பு 'வண்ணான்' எனவும் கூறப்படுகின்றனர். இந்நிலையில் அழுக்குத் துணிகளை துவைக்கும்போது களைப்பு தெரியாமல் இருக்க பாடல்களைப் பாடிக் கொண்டு வேலைச் செய்கின்றனர். 'அஞ்ஞாடி' நாவலில் 'மாரி' ஈடுபடுகின்ற வேளையில் களைப்பு தெரியாமல் இருக்க பாடுகிறார். அத்தோடு தண்ணீர் இருக்கக்கூடிய ஈரமான பகுதிகளில் இவ்வேலை நடைபெறுகிறது. எனவே, விடியற்காலையில் எழும்பி ஆற்றங்கரைக்கு செல்ல வேண்டும் என்பதை,

"அடிவானம் வெளுத்துருச்சு
அடஞ்சபொழுது மொளச்சிருச்சு
வெயிலேறிக் காயுமுன்னே
வெள்ளாவித் துணியெடுத்து
கழுதையிலே பொதியேத்தி
கம்மாய்க்குப் போக வேண்டும்" (ப.45)

இதிலிருந்து ஆடை வெளுத்தல் தொழிலில் அனைத்து வகையான பணிகளையும் நீர்த் துறையிலே மேற்கொண்டதோடு, வண்ணான் தொழில் செய்பவர்கள் வெயில் வரும் முன்னரே, கழுதையின் மேல் பொதிகளை ஏற்றி ஆற்றங்கரைக்குச் சென்று, விடிவதற்கு முன்னரே தங்கள் தொழிலில் ஈடுபட்டனர் என்பதை அறிய முடிகின்றது. வண்ணார்கள் ஆடைகளை தூய்மைப்படுத்த நீர் முக்கியமானது. நீர் இல்லாமல் உயிரினங்கள் வாழ முடியாது என்பது போல், இங்கும் தூய்மையான ஆடைகளை உடுத்தவும் முடியாது. இந்நாவலில் கோடைக்காலம் வந்ததால் மழை பொழியவில்லை. இதனால் பரம்பரைத் தொழில் நின்றுவிடுகிறது. மீண்டும் பஞ்சம் மறைந்து மழை பொழிகிறது. தொழிலும் தழைக்கிறது. இதனை,

"காலமழ பொழிஞ்சது
காடுகரை நனஞ்சது
கொணிகொளம் மறஞ்சது
நஞ்சபிஞ்ச வெளையுமாம்
நம்ம பஞ்சம் தொலையுமாம்
நெறைய வேல இருக்குமாம்
நெதமும் வுலி கெடைக்குமாம்" (ப. 249)

இப்பாடல் மூலம் மழை இல்லாத நேரங்களில் தொழில் இல்லாமல் அவதிக்குள்ளாகின்றனர். மழை பெய்தால் மட்டுமே தங்கள் தொழிலைச் செய்து, பொருளாதாரத்தை பெருக்க முடியும் என்ற மகிழ்ச்சியில் பாடியதை உணர முடிகிறது. வண்ணார்கள் தங்களின் அடிப்படைத் தேவையான உணவிற்காக ஒவ்வொரு நாளும் காலை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மற்றும் இரவு வேளைகளில் பறையர்களின் வீடுகளுக்கு சோற்றிற்கும் குழம்பிற்கும் பாத்திரங்களை எடுத்துச் செல்கின்றனர். உணவு கேட்கும் போது, சில வீடுகளில் உணவுக் கொடுக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். மாறாக உணவு கேட்கும் போது இழிச்சொற்களுக்கும் ஆளாக வேண்டியுள்ளது. உணவு கொடுக்கும்போதே சோற்றை அமிழ்த்தி வைக்காமல் பூ போன்று மேலோட்டமாக வைத்துக் கொண்டு பாத்திரத்தில் தட்டிக் கொடுக்கின்றனர். இதே போன்று இந்நாவலில் வண்ணார்கள் உண்ட உணவினை பாடலாக வடிக்கின்றார்கள் என்பதை,

“கம்மாங்கஞ்சி குடிச்சுக்கோ
காரமொளகா கடிச்சுக்கோ
கொமரிப் பொண்ணப் புடிச்சுக்கோ
குருரக் கொஞ்சம் கொறச்சுக்கோ” (ப. 104)

இப்பாடல் இருந்து கம்மாங்கஞ்சியும், கார மிளகாயும் உணவாக உட்கொண்டனர். இதன்மூலம் அவர்களின் வறுமை நிலையினை அறிந்துக் கொள்ள முடிகிறது. மருதனும் அவன் மனைவியும் ஆடைகளைச் சலவைச் செய்ய ஆற்றங்கரைக்குச் செல்கின்றனர். துணிகளை சலவைச் செய்து முடித்த பின்னர் காயவைத்து ஓய்வு எடுத்துக் கொள்கின்றனர் என்பதை,

“கரையோரம் தொறையிருக்கு
தொறையோரம் தொனையிருக்கு
இருபேரும் துணி வெளுத்து
எதமாக காயவச்சு
மரந்தேடிப் பசியாறி
மனம் போலக் கதபேசி
தர மேலதலசாயும்
தலகாணி கெயாகும்” (ப.105)

என்ற பாடலின் மூலம் அவர்கள் துணிகளை துவைத்துக் காயப்போட்டு, காயும் வரை கணவனும் மனைவியும் மரநிழலில் அமர்ந்து தங்களுடைய மனக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர் என்பதை உணரமுடிகிறது. ஆற்றங்கரையில் மீன்கள் வந்துச் செல்வது இயற்கை. இவைகள் காலைச் சுற்றி மீன்கள் கடிக்கின்றது என்பதை,

“காலச் சுத்தி மீனுதான்
கதை கதையாப் பேசுதாம்
கொக்குமீனப் புடிக்குதாம்
விக்கிவிக்கி விழுங்குதாம்
கழுத ஒண்ணு கனைக்குதாம்
கணக்குப் பண்ண நெனைக்குதாம்
பொழுது கீற எறங்குதாம்
பொண்ணு மனசு கெறங்குதாம்
ஆ சோ... ஆ சோ... ஆ சோ...” (ப.259)

இதன் மூலம் சூரிய கதிர்கள் உள்வாங்கி, பொழுது சாய்கின்றது. வீட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை உணர்த்துகிறது. விடியற்காலையில் தொழிலை தொடங்கியவர்கள் நடுஇரவு வரை தொடர்ந்து தொழிலை செய்கின்றனர் என்பதை,

“ஓரத்துல ஒரு வெளக்கு
ஊருக்கெல்லாம் பொதுவெளக்கு
பொதுவெளக்கு வெளிச்சத்துல
பொதி சொமப்பென் சாமத்துல

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சாமத்துல பொதி சொமந்து
சடுதியில் எனம் பிரிச்சு
விடியாமத் துணிகுடுத்து
வெதவெதமாச் சோறெடுப்பேன்" (ப.76)

என்பதன் மூலம், பொதுவிளக்கில் துணிகளை துவைக்கும் தொழிலும், துவைத்த துணியை வெள்ளைப் பிரித்தலும், வெள்ளைப் பிரித்ததை எடுத்துக்கொண்டு இரவு நேரங்களில் வீடுகளில் கொடுத்து உணவை வாங்கியும் உண்டனர். பழையச் சோற்றைப் பிழிந்து அதன் மேற்பரப்பில் சூடாக உள்ள புதிய சோற்றை எடுத்து வந்து கொடுப்பதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். பழையதும் புதியதுமாகக் கலந்த உணவைச் சாப்பிட்டு வண்ணார்களுக்கு உடல்நலம் பாதிக்கப்படுவதும் உண்டு. இந்நிலையில் சின்னமாரியின் மருமகன் வெளுப்புதுறையில் பாடல் பாடுகிறார்.

"அன்னம் போடுங்கம்மா
அழுக் கெடுக்க நேரமாச்சு
அன்னம் போடுங்கம்மா
தண்ணியில குடியிருந்து
தளந்து வாற மனுசருக்கு
அன்னம் போடுங்கம்மா
கஞ்சி போடுங்கம்மா
கழுதபத்த நேரமாச்சு
கஞ்சி போடுங்கம்மா
நெஞ்சுவலிக்கத் துணிவெளுத்து
நீலம் புழியத் தெம்புவேணும்
கஞ்சி போடுங்கம்மா
சோறு போடுங்கம்மா
தொறைக்குப் போக நேரமாச்சு
சோறு போடுங்கம்மா
விடிஞ்சு போயிவெல செஞ்சு
அடஞ்சவாற சீவனுக்கு
சோற போடுங்கம்மா" (ப. 634)

இதிலிருந்து, ஆரோக்கியம் என்பது தன்னைச் சாந்து வாழ்பவர்களை மையமாகக் கொண்டுள்ளதை அறிய முடிகின்றது. தங்களின் முதன்மைத் தொழிலாக விளங்ககூடிய ஆடை வெளுத்தலைச் செய்த கூலியாக ஆண்டுக்கொரு முறை தானியங்களையும் பெற்றுக் கொள்கின்றனர். ஒவ்வொரு வேளை உணவையும் கையேந்தி பெறுவதையும், அதை உண்டு மகிழ்ச்சியாக வாழ்வை மேற்கொள்வதையும் அறியமுடிகின்றது.

இவ்வாறு பழந்தமிழர்கள் காலக்கட்டம் முதல் இன்றுவரை வண்ணார்கள் துணி வெளுத்தலையும், வெள்ளைச் பிரித்தமையும், அதற்கு கஞ்சியிடுதலும், அதை உரியவரிடம் கொண்டு போய் சேர்த்தலும், இவ்வேலைகளை செய்யும் போது, இரவு பகல் பாராமல் நடைபெற்று வருகின்றன. இவ்வேலைச் செய்வதால் ஏற்படுகின்ற களைப்பு போக்க பாடல்களை பாடிக் கொண்டு தொழில்களை வண்ணார்கள் செய்ததை மேற்கண்ட பதிவுகள் எடுத்துக் கூறுகின்றன.

பார்வை நூல்கள்

1. பூமணி. *அஞ்ஞாடி*

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கொங்கணரின் *வாலைக்கும்மி* காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

Life Principles in Konkanar’s *Valaikummi*

முனைவர் சு.லோகிதா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
திருமுருகன் கலை மற்றும் அறிவியல் பெண்கள் கல்லூரி, திருவள்ளூர்.

Abstract

The article propagates to decipher Konkanar’s “Valaikummi”. Konkanar is one of the eighteen Siddhars. They are considered and revered for their spiritual attainment. Their verses are totally collected and commonly called as “Sidhar Padalkai”. Konkanar’s verses are called titled as “Valaikummi”. Valai is the deity of the spiritual power; without her permission one cannot attain the raja yoga or the spiritual fulfillment. Konkanar sang many songs and it were recorded as these songs have fine virtues in it. Therefore, the study focuses on the ethics of life enunciated in the Siddar songs.

Keywords: Life Principles, Konkanar’s *Valaikummi*

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மக்கள் வாழவேண்டிய வாழ்வியல் நெறிமுறைகள் குறித்த கருத்துகள் கொட்டிக்கிடக்கின்றன. அவ்வழி தமிழ் இலக்கியங்களுள் ஒன்றான சித்தர் இலக்கியத்திலும் வாழ்வியல் நெறிமுறைகள் காணக்கிடைக்கின்றன. சித்தர் இலக்கியம் என்பது மனிதன் தன் நிலையைத் தாண்டி மேல்நிலை அடைய எவ்வாறு வாழ வேண்டும் என்று வாழ்ந்துக்காட்டியவர்களால் வார்க்கப்பட்டது ஆகும். எனவே பிற இலக்கியங்கள் காட்டும் நெறிமுறைகளைக் காட்டிலும் சித்தர் இலக்கியங்கள் கூறும் வாழ்வியல் நெறிமுறைகளை ஆழ்ந்து நோக்குவது மனித இனத்தை அடுத்த படிநிலைக்குக் கொண்டு செல்லும் வாய்ப்பாகும். அதன்வழி கொங்கணச்சித்தர் இயற்றிய வாலைக்கும்மியில் அமைந்துள்ள வாழ்வியல் நெறிமுறைகளைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கொங்கணரின் வாலைக்கும்மி

வேங்கடத்தில் சமாதி அடைந்ததாகக் கொண்டாடப்படுபவர் கொங்கணர் ஆவார். அவர் கும்மி எனும் பெண்களின் இசைப்பாடல் வடிவில் தம் கருத்துகளை நூலாக்கியுள்ளார். 111 பாடல்கள் கொண்ட இந்நூல் அரு.இராமநாதன் அவர்கள் பதிப்பத்து பிரேமா பிரசுரத்தால் வெளியிட்டுள்ள ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள் எனும் தொகுதியில் அமைந்துள்ளது. அதுவே இவண் ஆய்வுக்குரியதாகும்.

வாலைக்கும்மி காட்டும் வாழ்வியல் நெறிமுறைகள்

சித்தர்கள் குண்டலினி சக்தியை வாலை எனப் போற்றுவர். கொங்கணரும் வாலைச்சத்தியைப் போற்றியே வாலைக்கும்மி பாடியுள்ளார். வாலையின் சிறப்பைக் கூறி அதை உணர்ந்து செயல்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட முற்படுங்கால் அதற்கு அடித்தளமாக மனிதர்கள் கொள்ள வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துக் கூறியுள்ளார். அவற்றை,

1. அறிய வேண்டியவை,
2. தவிர்க்க வேண்டியவை,
3. கடைபிடிக்க வேண்டியவை

என்ற பிரிவுகளின் கீழ்க் காணலாம்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

அறிய வேண்டியவை

மக்கள் வாலையை அறிந்து தெளிய வேண்டுமெனக் கருதிய கொங்கணர் அதற்குத்தடையாக இருக்கும் சிலவற்றை மக்கள் அறியவேண்டுமென ஆங்காங்கே குறித்துள்ளார். அவையாவன.

1. உடலின் சிறப்பு
2. உறவின் இழிபு
3. குரு ஞானியர் தெரிவு

ஆகியனவாகும்.

உடலின் சிறப்பு

கொங்கணர் மக்கள் இந்த உடலின் சிறப்பையும் அதில் பொருந்தியுள்ள இறையின் இருப்பையும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார்.

“ஊத்தைச் சடலமென்று எண்ணாதே இதை
உப்பிட்ட பாண்டமென்று எண்ணாதே
பார்த்த பேருக்கே ஊத்தைஇல்லை” (24)

என உடலின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார்.

உறவின் இழிபு

மனிதன் தாய், தந்தை, மனைவி, மக்கள் எனத் தன் உறவுகளின் பின்னல்களில் சிக்கிக்கொண்டு வாழ்வில் பல தவறுகளைப் புரிகின்றான். அதுவும் இந்நாளில் தன் பரம்பரைக்கே சொத்து சேர்த்து வைப்பதற்காகப் பல தவறான வழியில் சென்று பாவங்களைச் சேர்த்துக் கொள்கிறான். ஆனால் கொங்கனர் உறவுகள் அனைத்தும் பொய்மையானது என அழுத்தி கூறுகிறார்.

“பொண்டாட்டி ஆவதும் பொய்யல்லவோ பெற்ற
பின்ளைகளாவதும் பொய்யல்லவோ
கொண்டாட்டமான தகப்பன் பொய்யே முலை
கொடுத்த தாயும் நிசமாமோ?” (80)

எனவே மனிதர்கள் உறவுகளின் நிலையாமையை உணர்ந்து அக்கட்டுகளில் கட்டுண்டாமல் வாழ வேண்டும் என்பதையும் இறையின் உறவே நிலைத்த தன்மை வாய்ந்தது என்பதையும் கூறும் சித்தரின் வாழ்வியல் நெறியை அனைவரும் பின்பற்றுதல் நன்மையாகும்.

குரு – ஞானியர் தெரிவு

மனித நிலையிலிருந்து சித்த நிலை நோக்கி செல்ல ஞானியரின் தொடர்பும் குருவின் உதவியும் தேவையானதொன்றாகும். அத்தகைய ஞானி மற்றும் குருவினைத் தேர்ந்தெடுக்கும் போது அறிந்து கொள்ளக் கூடியவற்றைத் தெளிவுப்படுத்துகிறார் சித்தர்.

“எல்லாம் அறிந்தவரென்று சொல்லி இந்தப்
பூமியிலே முழு ஞானி என்றே
உல்லாசமாக வயிறு பிழைக்கவே
ஓடித் திரிகிறார் வாலைப்பெண்ணே” (103)

என்ற பாடலில் கொங்கணர் பொய்மைஞானியரின் தன்மையை எடுத்துக்காட்டுகின்றார். அதேபோல் குருவிலும் பொய்மை கலந்த குரு உள்ளனர் என்பதை,

“பூரண நிற்கும் நிலையறியான் வெகு
பொய்சொல்வான் கோடிமந்திரம் சொல்வான்
காரண குரு அவனும் அல்லன் இவன்
காரிய குரு பொருள்பறிப்பான்” (102)

என்ற பாடல்வழி தெளிவுப்படுத்துகிறார். பொருள் பறிப்பவனும் உல்லாசமாக இருப்பவனும் ஞானி மற்றும் குரு ஆகாதார் என விளம்புகிறார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தவிர்க்க வேண்டியவை

இப்பூமியிலே உழலாமல் மேற்கொண்டு முன்னேற வாழ்வில் தவிர்க்க வேண்டியவற்றை மிகத்தெளிவாக எடுத்துக் கூறுகிறார் கொங்கணர். அவையாவன.

1. ஆசையைத் தவிர்த்தல்
2. பொய்மை தவிர்த்தல்
3. வஞ்சனைதவிர்த்தல்
4. தீயன தவிர்த்தல்
5. சாதி, மத பேதங்களைத் தவிர்த்தல் ஆகியனவாகும்.

ஆசையைத் தவிர்த்தல்

மனிதக்குலம் வீடுபேற்றை நோக்கி செல்வதற்குப் பெரும்தடையாக இருப்பது ஆசை ஆகும். பெண்ணாசை போன்ற ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார் சித்தர்.

“ஆசைவலைக்குள் அகப்பட்டதும் வீடு
அப்போதே வெந்து அழிந்திட்டதும” (51)
“வீணாசை கொண்டு திரியாதே இது
மெய்யல்ல பொய்வாழ்வு பொய்க்கூடு” (79)

என்று பாடியுள்ளார்.

பொய்மை தவிர்த்தல்

மனிதன் பொய் சொல்லக்கூடிய தருணங்களை ஆராய்ந்து அச்சமயங்களில் பொய் கூறாதீர் என எச்சரிக்கிறார் சித்தர்.

“வழக்கு அழிவுகள் சொல்லாதே (90)
கூடிய பொய்களைச் சொல்லாதே” (91)

என்ற வரிகளில் வழக்குகளில் பொய் சொல்வது, ஒரு பொய்யை மறைக்க பல பொய்களைச் சொல்வது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

தீயன தவிர்த்தல்

மனிதன் வாழ்வில் பல தீமைகளைப் புரிகின்றான். அவற்றையெல்லாம் தவிர்ப்பது அவசியமாகும் என்பதைக் கொங்கணர் வலியுறுத்துகிறார். தவிர்க்க வேண்டிய தீமைகளைப் பட்டியலிட்டும் காட்டுகிறார்.

“பஞ்சைபனாதி அடியாதே அந்தப்
பாவஞ் தொலைய முடியாதே
தஞ்சமென்றோரைக் கெடுக்காதே யார்க்கும்
வஞ்சனை செய்ய நினையாதே (87)
கண்டதும் கேட்டது சொல்லாதே கண்ணில்
காணாத உத்தரம் விள்ளாதே (88)
தன் வீடிருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே” (94

தம்மைக் காட்டிலும் சிறியோரை வதைத்தல், தஞ்சமென வந்தோர்க்கு வஞ்சம் செய்தல், எதையும் ஆராயாமல் கண்டதையும் கேட்டதையும் சொல்லுதல், காணாததை ஊகித்து கூறுதல், பிறர் பொருளை விரும்புதல், தாய் தகப்பனை வைதல் ஆகியவைப் பாவத்தைச் சேர்க்கும் தீய்ச் செயல்களாகும் எனவே அவற்றைத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

மேலும் சிலர் வெளியில் அல்லாமல் மனத்திற்குள்ளாகத் தீமை புரிவர். அதையுத் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

“சிவனடியாரை வேதியரைச் சில

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சீர்புல ஞானப் பெரியோரை
மவுனமாகவும் வையாதே அவர்
மனத்தை நோகவும் செய்யாதே'' (89)

சிவனடியார், வேதியர், ஞானியர் போன்றோர்களை மவுனமாக மனதினுள்ளும் திட்டாதே என்கிறார். மேலும் இப்பாடலில் இறுதி வரியாக மனதை நோகச் செய்யாதே என்கிறார். அதனால் மவுனமாகத் திட்டினாலும் அது அவர்களுக்குத் தெரிந்துவிடும். அவர்கள் மனம் நொந்துவிடும். எனவே அதைச் செய்யாதே என்கிறார்.

சாதி மத பேதம் தவிர்த்தல்

சாதி, மத வேறுபாட்டினைக் கொண்டு மக்கள் தம்முள் வேறுபட்டு பல தவறுகளைப் புரிகின்றார்கள். அத்தகைய மனிதர்களுக்குப் புரியும்படியாகப் பால் என்ற ஒன்றிலிருந்து தயிர், மோர், நெய் போன்ற பல பொருள்கள் வருகின்றன. அதுபோலவே இறைவன் என்ற ஒன்றிலிருந்து அனைத்தும் தோன்றியுள்ளது என உவமையின் வாயிலாக எளிதாகத் தெளிவுபடுத்துகிறார்.

''சாதிபேதங்கள் சொல்லுகிறீர் தெய்வம்
தானென்றொரு உடல் பேதமுண்டோ?'' (95)

கடைபிடிக்க வேண்டிவை

கொங்கணர் வாசிப்பழக்கம் அறிய வேணும், மண்டல வீடு கட்ட வேணும் (28) என மூச்சுப்பயிற்சி மற்றும் குண்டலி யோகத்தை அறிந்து கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் வாலைக்கும்மி எனும் நூலில் மனிதன் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய அடிப்படைப் பண்புகள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவையாவன

1. ஐம்புலன் அடக்கம்
2. பெண்மை போற்றுதல
3. தருமம் செய்தல் ஆகியனவாகும்.

ஐம்புலன் அடக்கம்

கொங்கணர் உடலிலுள்ள ஐம்புலன்களை அடக்கி ஆள வேண்டும் என்கிறார்.

''ஒன்பது வாயில்கொள் கோட்டையுண்டே அதில்
உள்ளே நிலைக்காரர் அஞ்சுபேராம்
அன்புடனே பரிகாரர்கள் ஆறுபேர்
அடக்கம்தானடி வாலைப் பெண்ணே'' (38)

ஐம்புலகளை அடக்கி ஆறுஆதாரங்களைக் காண வேண்டும் என்கிறார்.

பெண்மை போற்றுதல்

மனிதர்கள் பெண்மையைப் போற்றி பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தை கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார் கொங்கணர்.

''பெண்ணுமில்லாமலே ஆணும் இல்லை இது
பேணிப் பாரடி வாலைப்பெண்ணே'' (72)

பெண்கள் இல்லாமல் ஆண்கள் இல்லை என்பதை உணர்ந்து பெண்களைப் பேண வேண்டும் என்கிறார்.

தருமம் செய்தல்

கொங்கணர் தருமம் செய்தலைத் தம் வாழ்வில் அனைவரும் கடைபிடிக்கவேண்டும் என்கிறார். இச்சித்தர் மனிதர்களின் மனநிலையை அறிந்து,

''பாக்கியமும் மகள் போக்கியமும் ராச
போக்கியமும் வந்த தானாக்கால்
சீக்கிரம் தருமம் செய்யவேண்டும் கொஞ்சம்
திருப்பணிகள் முடிக்க வேண்டும்'' (83)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

எனும் பாடல் பாடியுள்ளார். பொதுவாக பாவம் போக்கவே பரிகாரம் எனும் பெயரால் மக்கள் தருமம் செய்கின்றனர். அவ்வாறல்லாது பாக்கியம் பெற்றிருந்தாலும் குழந்தைப்பேறு முதலாய பேறு பெற்றிருந்தாலும் மன்னன் என்ற செல்வப்பேறு பெற்றிருந்தாலும் தருமமும் திருப்பணிகளும் செய்யவேண்டும் என்கிறார். அதுவும் சீக்கிரம் தருமம், கொஞ்சம் திருப்பணி என்கிறார். நேரம், காலம் பார்க்காமல் உடனடியாகத் தருமம் செய்ய வேண்டும் என்றும், கோயில் திருப்பணிகள் கொஞ்சம் செய்தல் வேண்டும் என்ற சொல்லால் குறிக்கிறார். ஆக சித்தர் கோயில்களுக்குச் செல்வதைக் காட்டிலும் பிறருக்குத் தருமம் அதிகமாகச் செய்ய வேண்டியதை வலியுறுத்தியுள்ளார்.

கொங்கணர் ஏனைய சித்தர்களைப் போலவே மனிதர்கள் தம்மை அடுத்த வளர்ச்சி நிலைக்கு அழைத்துச் செல்லும் யோகங்களை அறிந்துக் கொள்ள வேண்டும் எனக் கூறி அதை விவரிக்கும் நூலில் அவ்யோகங்களைக் கற்பதற்கு முன்பு தேவையான வாழ்க்கை நெறிமுறைகளைக் குறித்துள்ளார். அவற்றைப் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வில் மேல்நிலைக்கு முன்னேறுவது உறுதியாகும்.

நூற்பட்டியல்

1. கொங்கணர். *வாலைக்கும்மி.*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சங்க இலக்கியத்தில் அரசனின் பண்பு

The Quality of the King in Sangam Literature

முனைவர்.அ.வசந்தி, உதவிப்பேராசியை, தமிழ்த்துறை,
போப் கல்லூரி, சாயர்புரம்.

Abstract

The research article tries to cater down the virtues of the kings of the Ancient Tamil Kingdom. The Chera, Chola and the Pandia triumvirate is the glory of the Tamil Nadu. Among them some are very notable for their quality and are recorded in the ancient Tamil Literary works. Some of the kings like Imayavaramban, Cheran Chenguttuvan, Pandian Nedunchelian and Karikala Cholan are very notable for their virtues. Minor chieftains and dukes such as Began, Pari, Adiyaman, Oori, Nalli and Kadiyaneduvetuvan are also famous for their good qualities. Their valour and good qualities are glorified in some literary works of the Sangam Period. Therefore, the study focuses on the qualities of the kings enunciated in the Sangam Literature.

Keywords: Quality of the King, Sangam Literature

பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் அகம் புறம் என்னும் இரு கூறுகள் போற்றப்பட்டன. அகம் இல்வாழ்க்கைக்கும், புறம் இல்வாழ்க்கை அல்லாத பிற ஒழுக்கங்களுக்கும் பற்றுக் கோடாக அமைந்தன. சங்ககாலப் புறப் பாடல்களும் அகப்பாடல்களும் வீரத்தையும் காதலையும் மட்டுமே இரு கண்களாகப் போற்றாமல் சமூகத்தில் உள்ள அனைத்துக் கூறுகளையும் சிறப்பித்துக் கூறுவதில் முன் நிற்கின்றன.

சங்க இலக்கியங்கள் கூறும் அரசியல் கருத்துகள் புற இலக்கியங்களேயன்றி அக இலக்கியங்களிலும் நிரம்பியிருக்கின்றன. அரசியல் - நாட்டை ஆளும் அரசனின் ஆளுமைப் பற்றிப் படிக்கும் ஒன்றாக அரசியலைக் கொள்ளலாம். நாடு சிறப்புற்றிருப்பதை அரசனின் ஆட்சிச் சிறப்புத் தான் உணர்த்தும். அதனால் தான் பண்டையபுலவர்கள் அரசனதுஆட்சிச் சிறப்பின் பெருமைகளைக் கூறிப் பாடல்கள் பல புனைந்துள்ளனர். பல பாடல்களின் உரையை அரசனின் பண்பாக இக்கட்டுரை விளங்குகிறது.

அரசனின் பண்பு

ஒருநாட்டின் வாழ்வும், வீழ்வும் ஆட்சித் திறனில் இருக்கின்றது. மக்களைக் காக்கும் முறை, ஆட்சிசெய்யும் முறை முதலியவை அரசன் எத்தகைய தன்மை உடையவன் என்பதைக் காட்டிவிடும். அதனால் அரசன் சிறந்தவனாக இருத்தல் நாட்டிற்கு நலம் பயப்பதாகும். கொடைத் தன்மை மிக்கவனாக இருக்கின்ற போதும், எளியவர்களை ஆதரிக்கின்ற போதும் அரசனின் குணம் வெளிப்படுகின்றன. நல்லாட்சி மிக்க நாட்டில் தான் அனைத்து அறங்களும் சிறந்து விளங்கும்.

மன்னர்களின் பட்டியல்

பண்டைத் தமிழகத்தை ஆண்ட 15 பாண்டிய மன்னர்களையும், 18 சோழ வேந்தர்களையும், 18 சேர அரசர்களையும், தலை சிறந்தவர்களாக கொள்ளலாம். இமயவரம்பன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன், கரிகாலன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஆகியோர் வாழ்ந்த பெருமைமிக்க பேரரசர்களாவர். மேலும் பழனி மலையை ஆண்ட பேகன், பறம்பு மலையை ஆண்டபாரி, குதிரை மலையை ஆண்ட அதியமான், கொல்லிமலையை ஆண்டு ஓரி, பொதியை மலையை ஆண்டநள்ளி, கோடைமலையை ஆண்ட கடிய நெடுவேட்டுவன் போன்ற குறுநில மன்னர்களின் வீரத்தையும், வெற்றிப் பெருமிதத்தையும் விளக்கிப் பேசுகிறது என்று அடைக்கலசாமி அவர்கள் புறநானூற்றின் சிறப்பைக் கூறுவார். இக்கருத்துகள் சங்ககால மன்னர்களின் அரசியல் திறத்தைக் கூறுவதாக அமைந்திருக்கிறது.

நெடுநல்வாடையில் மன்னனின் பண்பு

நல்ல அரசனானவன் தன்னுடைய இன்பத்தைப் பெரியதாக நினைக்காமல் தன்னைச் சார்ந்தவருக்கு உறுதுணையாக இருந்து ஆற்றுவிக்க வேண்டும். அத்தகையதொரு நிலையை நெடுநல்வாடை எடுத்துக் கூறுகிறது.

“நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான்
சிலரொடுதிரிதரும் வேந்தன்’’

போர் புரியும் பொருட்டுப் பாசறை அமைத்துத் தங்கியுள்ள பாண்டியன் தன்னுடைய இன்பத்தைப் பாராது இரவிலும் துயில் கொள்ளாமல் தன் வீரர்களுக்கு ஆறுதல் சொல்வதாகவும், மறுநாள் போர்த்திட்டத்தை வகுப்பதாகவும் இருப்பது அவனது பண்பட்ட, ஆளுமைத் தன்மையை வெளிக்காட்டுவதாக அமைகின்றது.

பட்டினப்பாலையில் மன்னனின் பண்பு

பட்டினப் பாலையில் சோழன் கரிகாலனின் சிறப்பைப் பாடவரும் புலவர்,

“காடுகொன்றுநாடுஆக்கி,
குளம்தொட்டுவளம்பெருக்கி
பிறங்குநிலைமாடத்துஉறந்தைபோக்கி,
கோயிலொடு குடி நிறீ,
வாயிலொடுபுழைஅமைத்து
ஞாயில் தொறும் புதைநிறீ,’’

என்கிறார். காடுகளை அழித்து நாடாக்கி, நிலத்தை வளப்படுத்தி குளங்கள் வெட்டி, பாசனவசதி செய்து கோவில்கள் கட்டி மக்கள் நிறைந்து வாழும் பொருட்டு உறையூரை விரிவு செய்தவன் கரிகாலன் என்னும் கருத்துகள் அரசன் செயல்பட வேண்டிய முறையினை எடுத்து இயம்புகிறது.

மன்னர்களின் உயர்வு

அரசியலில் உள்ளவர்கள் தவறு செய்யக்கூடாது. ஆறநெறி நிரம்பிய மனதுடன் பெரியோர்களாகிய முன்னோர்கள் சென்ற வழியில் சென்று உலகம் தோன்றிய காலம் தொட்டு, நிலவு பிறையாய் இருந்துவளர்வது போல உன் குலமும் சிறக்கட்டும் என்று மாங்குடி மருதனார் போற்றிப்பாடும் திறம் சிந்திக்கத்தக்கது, இதனை,

‘‘அரசியல் பிழையாதுஅநெறிகாட்டி
பெரியோர் சென்றஅறவழிப் பிழையாது
குடமுதல் தோன்றியதொன்றுதொழுபிறையின்
வழிவழிச் சிறக்கநின்வலம் படுகொற்றம’’

என்னும் பாடலடிகளால் அறியலாம். நாடு எவ்வளவு வளம் பெற்றதாக இருந்தாலும் அதனால் பலனில்லை. நாட்டை நல்வழியில் நடத்திச் செல்ல நல்ல தலைமை வேண்டும். அதனால் தான் மோசிகீரனார்.

‘‘நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தேமலர்தலைஉலகம்
அதனால்,யான்உயிர் என்பதுஅறிகை
வேன் மிகுதானைவேந்தற்குக் கடனே”

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நாட்டுமக்களின் உயிரைக் காப்பது நெல்லும் நீருமன்று, அந்நாட்டை ஆளும் மன்னனே எனக் குறிப்பிடுகின்றார்.

சிறந்த அரசனை மனதில் கொண்டு வள்ளுவர்,

"முறைசெய்துகாப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்றுவைக்கப்படும்."

நீதிப்படி அரசாட்சி நடத்தி மக்களைக் காப்பவனே சிறந்த அரசன் எனக் குறிப்பிடுகின்றார்.

குடை

அரசனை அலங்கரிக்கும் வெண்கொற்றக் குடை தூய்மை, கொற்றம், வெற்றி முதலியவற்றின் சினனமாகப் போற்றப்படுகின்றது. மக்களைத் துயரின்றித் தண்ணியதாகக் காப்பதால்,

"காவல் வெண்குடை"
எனப் பெயர் பெற்றது. முழுமதியின் ஒளிகுளுமைதரக்கூடியது.
"உவவுமதிஉருவின் ஓங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மண்ணகம் நிழற்ற"

முழுமதியினது வடிவத்தைக் கொண்ட உயர்ந்த வெண்கொற்றக் குடையை உடையவன் அரசன் எனக் கூறப்பெறுகின்றது. மன்னனின் காவல் திறனை உணர்த்தும் வகையில்,

"கடனறிமன்னர் குடைநிழல் போல"

என்னும் பாடலடிகையாளப் பெற்றிருக்கிறது.

மன்னனின் வெண்கொற்றக் குடையானது மன்னனை இயற்கைச் சீற்றங்களில் இருந்து காப்பதற்கன்று. அது தம் ஆட்சியின் கீழ்வாழும் மக்களைக் காப்பதையே கடமையாகக் கொண்டதாகும்.

மன்னனது வெண்கொற்றக் குடைய அவனது அரசாட்சியின் சிறந்த சின்னமாகவும், தன்மையான ஆட்சியின் அமைப்பாகவும் திகழ்கின்றது. நல்லாட்சியின் சின்னமாகக் குடை விளங்குகிறது.

குற்றமும், தண்டனையும்

பண்டைக்காலத்தில் குற்றம் புரிந்தோருக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. சட்டமும், நீதியும் சிறந்திருந்ததால் நடுவு நிலைமை தவறாமல் நீதிவழங்கப்பட்டது. மன்னின் உரிமைக்குரிய பகுதியில் விளைந்த மாங்கனியை உண்டைக்காகப் பெண்ணொருத்திக்குத் தண்டனை வழங்கப்பட்டமையைக் *குறுந்தொகை* குறிப்பிடுகின்றது. பெண்களைக் காதலித்து ஏமாற்றியோர்க்கும் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

"கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதற்குறுமகள் அணிநலம் வௌவிய
வறனிலாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூளிறிகரிகடாஅய்
முறியோர் பெருங்கிளைசெறியப் பற்றி
நீறுதலைப் பெய்தஞான்றை"

ஏமாற்றியவனை மரத்தில் கட்டிவைத்துச் சுண்ணாம்பு நீரை ஊற்றிய கருத்து இப்பாடலடிகளில் கூறப்படுகின்றது.

"குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்றுவேந்தன் தொழில்"

என்னும் குறள் அரசனது தண்டனை தவறாகக் கருதப்படாத தன்மையை எடுத்துக் கூறுகின்றது.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பண்டைய அரசியல் அறத்தன்மைமிக்கவனாகத் திகழ்ந்தமைக்குப் பல்வேறு சங்கப்பாக்களும் சான்று பகர்கின்றன. நாட்டை எப்படி வேண்டுமானாலும் ஆளலாம் என்னும் நிலைமாறி இப்படித்தான் ஆளவேண்டும் என்ற வரைமுறைப்படுத்தப்பட்ட அமைப்பை உடையதாகப் பண்டைய அரசியல் இருந்தது, மக்களைக் காப்பதும் அவர்களின் நல்வாழ்விற்கு அடிப்படையான அமைதியை நிலைநாட்டுவதும் மன்னனின் நோக்கமாக இருந்தது. அரசியல் தொடர்பான நிகழ்வுகள், அனைத்தும் அறவழிச் சிந்தனை உடையனவாகவே மேற்கொள்ளப் பெற்றன. நாட்டைக் காக்கும் பணிதொடங்கி அன்றாடச் செயல்பாடுகள் வரை கவனம் செலுத்திய பண்டைய அரசியலறம் பிற்கால அரசியல் சார்ந்த செயல்களுக்குக் காரணமாக அமைந்தன.

முடிவுரை

1. மன்னன் நாட்டின் உயிராகக் கருதப்பட்டான்.
2. நாட்டைக் காப்பதில் வீரம் மிக்ககாவலனாகவும், மக்களையும் தன்னைச் சார்ந்த சுற்றத்தையும் காப்பதில் தாய் போலவும் விளங்கினான்.
3. நேர்மையான ஆட்சியின் சின்னமாகச் செங்கோல் போற்றப்பட்டது.
4. மன்னர்கள் குடிமக்களைக் காப்பதைத் தம் தலையாய அறமாகக் கொண்டிருந்தனர்.
5. மன்னனின் குடை மக்களைக் காக்கும் சின்னமாகக் கூறப்பெற்றது.
6. குற்றங்களுக்கு நடுவுநிலையோடு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பெற்றன.

துணைநூற் பட்டியல்

1. ஆடைக்கலசாமி. எம்.ஆர். *தமிழ் இலக்கியவரலாறு.* இராசி பதிப்பகம்-2000.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019

Available at: www.ijtlls.com

திருக்குறள் கூறும் குடிசெயல் வகை

Nobility as Told in *Thirukkural*

முனைவர் ஜ. வள்ளி, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
சி.டி.டி.இ மகளிர் கல்லூரி, செம்பியம், பெரம்பூர், சென்னை – 600011.

Abstract

The article traces down the glory of nobility of families. Keeping a good name to the family is the key to attain social repute. Without gaining genuineness among the people of the society, one cannot live with fame and glory. Thiruvalluvar gave very good suggestions in his couplets to make a man of God by keeping virtues in the family and to retain the virtues through his successors. His path of nobility is the present need of the modern people; especially Tamil people because they amply get devoid of such valuable virtues that their ancestors once hsd. Hence, the article finds out codes of nobility through the couplets from "Thirukkural".

Keywords: Nobility, *Thirukkural*, Ethical Life

மனித சமுதாயத்தின் கூடி வாழ்கின்ற உணர்வின் வளர்ச்சி நிலையே குடும்பம் என்னும் அமைப்பாகும். இவ்வமைப்பு தமிழ்ச் சமுதாயத்தின் மிகப்பெரிய அடையாளமாகத் திகழ்கிறது. ஒரு மனிதரை நோக்கி நீர் எதற்காக வாழ்கிறீர்? யாருக்காகப் பொருளீட்டுகிறீர்? என்று வினவினால் அவர் தம் பதிலில் குடும்பமும் உறவுகளும் அவசியம் இடம்பெற்றிருக்கும். பெரும்பாலும் மனிதர்களின் வாழ்வியக்கம் தம் குடும்ப மேம்பாடு குடும்ப உறுப்பினர்களின் நன்மை மகிழ்ச்சி ஆகியவற்றை மையமிட்டு இருப்பதையே நடைமுறையில் காணலாம். மனிதவாழ்வினைப் படம்பிடிக்கும் இலக்கியங்களும் இவற்றையே பிரதிபலிக்கின்றன எனவே தான் மனித சமுதாயத்தின் ஆணிவேராக அமைந்துவிட்ட 'குடும்பம்' என்னும் அமைப்பு சிறக்கப் பல வழிமுறைகளை நம் முன்னோர் தம் வாழ்வுப் பதிவுகளிலும் இலக்கியங்களிலும் கூறிச் சென்றிருக்கின்றனர். உலக வாழ்வில் மனிதர்கள் அறிந்து கொள்ளவேண்டிய அனைத்து நீதிகளையும் கற்பிக்கும் நூலாகத் திகழும் திருக்குறளில் இடம்பெற்றுள்ள குடி செயல்வகையினைத் தற்கால வாழ்வியலுக்குப் பயன்படும் வகையில் எடுத்தாய்கிறது இக்கட்டுரை.

குடி – குடும்பம் அமைப்புப் பின்னனியும் ஆய்வுத் தேவையும்

மனிதன் கூடி வாழும் சமுகப்பிராணி என்பார் அரிஸ்டாட்டில் மனித சமுதாயம் தொடக்கத்தில் கூட்டம் கூட்டமாக இடம் பெயர்ந்து குழு வாழ்க்கை மேற்கொண்டது. காலப்போக்கில் இவை ஆண்கள் தலைமையிலான இனக்குழுக்களாகிப் பின் குடிகளாக வளர்ந்தன. ஒவ்வொரு குடியும் தத்தம் குடிக்கெனச் செல்வங்களை அடையாளங்களைத் தனிச்சிறப்புகளை ஏற்பபடுத்தத் தொடங்கின. மேலும் குடியில் உள்ளோர் அறவழியில் உருமாற்றி அன்பையும் வீரத்தையும் வாழ்வின் பொருளாக்கித் தாம் உருவாக்கியக் குடிப்பெருமையும் குடிச்செழுமையும் தக்கவைத்தும மேம்படுத்தியும் வாழ்ந்து வந்தனர். இதன் அடிப்படையிலேயே அடுத்தடுத்தத் தலைமுறைக்கு வாழ்வியலைக் கற்பித்தும் வந்தனர் கால ஓட்டத்தில் மனிதத் தேவைகளின் வேறுபாட்டினாலும் மனித மன விகாரங்களின் விளைவினாலும் பல்வேறு அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டன. குழுக்கள் குடும்பங்களாகவும் உறுப்பினர்கள் உறவுகளாகவும் உருமாற்றம் பெற்றன. அன்பும் அறனும் பின்னுக்குத் தள்ளப்பட்டும் பொருளை முன்னிறுத்தம் சமுதாயத்தேவை உருவாகின. இருப்பமினும் ஒவ்வொரு மனிதரின் மனதிலும் இன்றும் குடும்பத்தின் உறவுகளின் மேம்பாட்டிற்காக மகிழ்ச்சிக்காகத் தாம் வாழவேண்டும் என்ற நோக்கம் மட்டும் நீங்காமல் அடிநாதமாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வொலிப்பினைப் பலர் நல்லமிசை பாட நல்வழியில் வாழ்கின்றனர் சிலர் தீய வழியில் பலர் வசை பாட வாழ்கின்றனர் குடும்ப மேம்பாடே அவர்களின் நோக்கமாக இருப்பினும் அவர் மேற்கொள்ளும் வழிமுறை அறத்தின் பால் இருப்பது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இன்றியமையாதது இப்பின்னனியில் அன்றைய மாந்தர்க்கு குடிசெயல்வகை குறித்து குறள் கூறும் வழிமுறைகளை நினைவுறுத்துவது தேவையான ஒன்றாகும்.

நற்குடி செய்ய முனைவோர் கடைபிடிக்க வேண்டியத் தலையாய பண்பு

ஆணும் பெண்ணும் சமம் என்னும் கருத்தும், நிலைப்பாடும் வலுப்பெற்று வரும் இன்றையச் சமுகத்தில் குடி காப்பது ஆணு் பெண் இருவரின் பங்கெடுப்பும் குறைவில்லாமல் காணப்படுகிறது இச்சூழலில் ஒரு குடும்பத்தில் இருக்கும் ஆணும் பெண்ணும் தன் குடிக்காக் கருமமாற்றும் போது எந்தநிலையிலும் அறத்தினைக் கைவிடாத நிைப்பாட்டினையே முதலில் அவா் தம் மனதில உறுதியாய் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் உறுதியான அறமே எண்ணிய கருமத்தினை ஈட்டித்தரும் கூர்மைமிக்கது இவ்வுயா்நத கருத்தை மாந்தர்க்கு வலியுறுத்துவதற்காகவே வள்ளுவா் குடி செயல் வகை அதிகாரத்தின் முதல் குறளாக,

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடு உடையது இல" (குறள் 1021, அதி. 103 குடிசெயல்வகை) என்னும்

குறளை படைத்துள்ளாா். மனிதா் அவராற்றும் கருமத்தின் படி வாழ்கின்றனா். கருமம் என்பது வினை அல்லது செயல் என்னும் பொருளிலேயே இங்கு எடுத்தியம்பப்படுகின்றது. கருமத்தினைச் சிந்தித்து ஆற்றல் மானுடத்திற்குரிய சிறப்பான தன்மைகளில் ஒன்று மேலும் அக்கருமம் தனக்கானதாக அன்றி தன்குடி காக்க எனும் நிலையில் அது மிக்க ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் அமைய வேண்டியது இன்றியமையாதது ஏனெனில் ஒரு செயலினைச் செய்யப் பல வழிகள் உண்டு. தற்காலத்தில் எவ்வழியிலேனும் அதாவது குறுக்கு வழி அல்லது தவறான வழி எதிலாவது சென்று எளிதில் விரைவில் காரியமாற்றமிட வேண்டும் என்னும் மனநிலை பெரும்பாலோரிடம் காணப்படுகிறது. இந்நிலையைப் பெருகி வரும் லஞ்சம், ஊழல் ஆகிய நடப்பியல் நமக்கு உணர்த்துகிறது. முறையற்ற வழியில் இயங்கினாலும் செயல் நிறைவுறும் ஆனால் பெருமை தராது இவ்வுண்மையை இத்தகைய வழியில் செல்வோா் உணா்வதில்லை குற்றமில்லாத நோ்மையான வழியில் கருமமாற்றும் போது காலமும் சிரமமும் கூடலாம் இருப்பதினும் சிரத்தை எடுத்துக் கருமத்தை நோ்மையுடன் செய்து முடித்தல் பெருமையைத் தேடித்தரும் அதுமட்டுமல்ல அச்செயலைப் புரிந்தோா் தலை நிமிா்ந்துப் பெருமையுடன் தன் குடி முன்னும் சமூகத்தின் முன்னும் பீடுநடை போட வழிவகுக்கும் இதை மக்கள் உணரவேண்டும் என்னும் பெருமையின் பீடுடையது இல் என உறுதியாகக் கூறுகிறாா்.

பழங்காலத்தில் இனக்குழுக்கள் குடிகளாக உருப்பெற்றதிலிருந்து சமுதாயத்தில் ஒருவரின் மரியாதையும் சிறப்பும் அவா் சாா்ந்தக் குடிப்பெருமையினைப் பொறுத்து அமையத் தொடங்கியது சிலம்பில் கண்ணகி தான் யாா் என்பதை மன்னனுக்கு எடுத்தியம்பும் போது 'ஏகாச் சிறப்பின் இசைவிளங்கும் பெருங்குடி' எனப் பெருமையாக எடுத்துரைக்கின்றாள் அதைப்போன்றே ஒரு குடியில் உள்ளவா்கள் ஏதேனும் ஒரு அறமற்ற செயலைச் செய்ய நோ்ந்தாலும் அது வெகுகாலத்திற்கு அக்குடிக்கு அவப்பெயரை ஏற்படுத்தியும் வந்துள்ளது. இதே சிலம்பில் பாண்டியன் தவறான நீதி உரைத்ததால் பெரும்பேறு பெற்ற தன் குடிக்கு தீரா களங்கம் விழைவித்துவிட்டேனே. என மனம் நொந்து மாண்டுபோயினான். இவற்றிலிருந்து தொன்று தொட்டு ஒரு குடியின் பெருமையும் சிறுமையும் அக்குடியில் உள்ளோரின் செயல்பாட்டினை பொறுத்து அமைவதை உணரலாம். எனவேதான் நல்வழியில் கருமம் மற்றும் மேன்மக்கள் வாழ்வின் எச்சூழலிலும் அறம்பிறழாா் என்பதை,

"கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே"
"சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" (மூதுரை பாடல் - 4)

என்றும், இத்தகையோரால் மழையே பொழிகிறது என்பதை

"தொல்லுலகில் நல்லாா் ஒருவா் உளரேல்
அவா் பொறுத்து எல்லாருக்கும் பெய்யும் மழை" (மூதுரை பாடல் - 10)

எனவும் அவ்வை பிராட்டி உயா்த்திக் கூறியுள்ளாா். வள்ளுவரும் அறவழியில் வாழும் முறையறிந்து வாழ்ந்தவா் தெய்வ நிலைக்கு உயா்ந்து நிற்பான் என்பதை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (இல்வாழ்க்கை அதிகாரம் குறள் - 50)

எனச் சிறப்பித்துக் கூறுகின்றாா். இங்ஙனம் புலவா் பெருமக்களால் தொடா்ந்து உலகோா்க்கு அறம் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது இடைப்பட்டக் காலத்தில் தான் குடும்பப் பெருமையைத் தாங்கும் நங்கூரமாகப் பெண்ணொழுக்கம் முன்னிறுத்தப்பட்டது. இருப்பினும் இன்றைய சமத்துவக் காலத்தில்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பெண்ணை மட்டுமே மையமிட்ட ஒழுக்கக் கருத்தேந்தல்கள் பலமிழந்து வருகின்றன. ஒரு குடும்பத்தில் ஆடவர் பெண்டிர் என யார் ஒழுக்கத்தில் சீர்குலைந்தாலும் அக்குடும்பமே திண்டாடி நிற்பதை நடப்பியல் நமக்கு உணர்த்துகிறது. எனவே குடும்ப மேம்பாட்டிற்குக் கடமையாற்ற முனையும் ஒவ்வொருவரும் அறவழியில் வினையாற்றலையே முதலில் மனதில் நிறுத்துவது அவசியமாகிறது.

நற்குடிச் செய்ய முனைவோர் வெற்றி பெற உத்திகள்

ஒரு செயலை செய்ய விரும்பினால் மட்டும் போதாது எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும் அறிந்திருத்தல் அவசியம் எனவேதான் அய்யன் வள்ளுவன் எது சிறப்பானச் செயல் என்று கூறியதோடு நில்லாமல் அதற்கான வழிகளையும் கூறிச் சென்றுள்ளார். அவைதான் ஆள்வினையும் ஆன்ற அறிவும் என்னும் இவ்விரண்டுமாகும்.

“ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி”

தளர்ச்சி இல்லாத முயற்சி, மேற்கொண்ட வினையை நிறைவுறச் செய்யும் என்பதால் அடைவிடாது வினையாற்றுவதை முதல் வழியாக உரைக்கிறார். மேலும் “நன்றதன் பால் உய்த்துணர்வது அறிவு” எனப் போதிக்கும் வள்ளுவர் தன் குடியை உணர்த்தும் உன்னத கருமத்தில் ஈடுபடுவோர்க்கு வெறும் அறிவு மட்டுமல்ல ஆழ்ந்த. அனைத்தையும் உணர்ந்த. ஆக்கப்பூர்வமான அறிவு அவசியமாகிறது என்பதால், அறிவின் அடுத்தக்கட்ட நிலைக்கு இயங்கும் மனநிலைக்கு மானிடரை இட்டுச் செல்வதற்காக ஆன்ற அறிவினை இரண்டாவது உத்தியாகப் போதிக்கின்றார் அதுமட்டுமன்று, மனித இனம் மிக்க ஆசையும், அவசரமும் படக்கூடியது என்பதாலோ வள்ளுவர், ஒருவர் ஓரிரு ஐயமுற அறவழியில் கருமமாற்றி விட்டு நிரந்தரக் குடிப்பெருமையினை எதிர்பார்க்கக்கூடாது. தமது வாழ்வு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கூறியனவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலமே குடிப்பெருமை நிலைத்திருக்கும் என்பதை நினைவுறுத்தி, மனித மனத்தை நன்கு பயின்றவராய், “நீள்வினையால் நீளும் குடி” எனக்கூறி அக்குறளை முடிக்கின்றார்.

அறவழியில் குடிசெய்பவருக்குத் துணை நிற்பவை

திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை என்பது முதுமொழி வள்ளுவரும் இதைப் போன்றே

“குடிசெயல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்” (குடிசெயல்வகை - குறள் 1023)

என உரைக்கின்றார். குடியை உயர்த்த வேண்டும் எனும் நல்நோக்கோடு நல்வழியில் செல்பவர் திக்குதிசை தெரியாமல் அவதியுறும் சமயத்தில் அவருக்குத் தெய்வமே. முதல் துணையாகத் தானே முன்வரிந்துக் கட்டிக் கொண்டு துணைபுரியுமென உறுதிபட கூறுகின்றார். தெய்வம் மட்டுமன்று அவர் மேற்கொண்ட கருமமும் அவர்க்குத் துணையாகச் சாதகமாகவே முடியும் என்கிறார் மேலும்,

“குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு” (குறள் -1025, அதி. 103)

உலகத்தாரும் உறவினரும் அத்தகையோரைச் சுற்றி வந்து சூழ்ந்து கொள்வர் அவருக்கு உடனிருப்பர் என்றும் உறுதியாய்க் கூறுகின்றார்.

குடிசெய்வார் கவனத்தில் கொள்ள வேண்டியது

இவ்வுலகில் தோன்றிய ஒவ்வொரு மாந்தர்க்கும் தான் சார்ந்தக் குடியின் பெருமை காப்பது மட்டுமல்ல வறுமை ஒழிப்பதும் மிக முக்கியக் கடமையாகும். இச்செயலைச் செய்யும் போதுதான், பெரும்பாலும் மானுடம் பிறழ்கிறது. அறம் பிறழா வழியில் குடியைச் செழுமை நோக்கி இட்டுச்செல்வது தான் நல்லாண்மை. என்கிறார் வள்ளுவர் பொருளீட்டலை ஆண்மைக்கு உரித்தாக்கிப் பணிப்பங்கீடு இருந்த காலகட்டத்தை, நாம் கடந்து விட்டதால் இக்காலத்திற்கு ஏற்றார்போல் “நல்பெண்மை” என்பதாகவும் நாம் கருதல் வேண்டும். ஒரு நாட்டின் குடிமகன் தன் நாட்டைக் காப்பதில் கண்ணும் கருத்துமாகப் போர்க்களத்தில் ஒரு போர்வீரனுக்குரியப் பொறுப்புடன் உள்ளதைப்போல், ஒரு குடியில் தோன்றியோருக்குத் தன் வீட்டைக் காக்கும் பொறுப்பு உள்ளது என்பதைப் பின்வருமாறு உரைக்கின்றார்.

“அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்து
ஆற்றுவார் மேற்றே பொறை” (குறள் 1027 அதிகாரம் 103)

போர்வீரர் எவ்வாறு தன் முழுவலியுடன் எதிரியிடம் போராடுகின்றாரோ அதைப் போல், குடிசெய்வார் அறவழியல் செல்லத் தீயவழிகளை எதிர்த்துப் போராட வேண்டிய மனவலி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வேண்டியிருப்பதாலேயே, அவரைப் போர்வீரர்களோடு ஒப்பிடுகிறார். அதுமட்டுமன்று அவர்க்கு மிக்பபெரிய எதிரியாகக், கருமாற்றத் தடையாக இருப்பது சோம்பல் தன்மை என்றும் இச் சோம்பலை அண்டவிட்டால் அது குடிமானம் அழிய வழி வகுக்கும் என்றும் கவனப்படுத்துகின்றார். குடிசெய்வர் வினையாற்றும்போது பல்வேறு துன்பங்களைத் தாங்கிக் கொள்வதால் துன்பத்தின் கொள்கலனோ, அவரென வியந்துரைக்கின்றார் வள்ளுவர். எனவேதான் நல்வழியில் குடிசெய்வர் இல்லாதக் குடும்பங்கள் துன்பமாகிய காலன் சூழ வீழும் எனவும் எச்சரித்து, அறவழியில் குடும்பத்தினை மேம்படுத்தத் தவறினால் என்ன நிகழும் என்பதை உணர்த்துக்கின்றார் வள்ளுவர்.

நற்குடி மக்களிடம் காணப்படும் இயல்புகள்

மிகச் சிரத்தையுடன் பல்வேறு தியாகங்கள் செய்து, அறவழியில் குடிசெயல்வகை புரிந்தோர்க்குத் தோன்றிய பிள்ளைகள் நல்லோராக வாழ்வர். அவர்களிடம் சிறந்த பண்புகள் மேலோங்கி நிற்கும். மிக முக்கிய பண்பு யாதெனில், தீமை புரிய நாணுவர். ஏனெனில் அறிவியலில் வாழ்ந்து குடிசெயல் புரிந்தோரின் வழித்தோன்றல்களின் ஒவ்வொரு அணுவிலும் அறம் பதிந்திருக்கும். எனவேதான் அவ்வைப் பிராட்டியும் கூட "குலத்தளவே ஆகும் குணம்" என்கிறார். வள்ளுவரும், நற்குடி பிறந்தவர். அறமல்லாதவற்றைத் தீமை என உணர்ந்து அச்செயல் புரிய நாணுவர் என்பதை,

"ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கம் குடிப் பிறந்தவர்" (குடிமை அதிகாரம், குறள் 952)

என்னும் குறளின் மூலம் உரைக்கின்றார். புறநானூறு, உலகையே விலையாகக் கொடுத்தாலும் நல்லோர் தீச்செயல் புரியார். நல்லோரின் இத்தகைய தன்மையினாலேயே இவ்வுலகம் இன்னும் உயிர்ப்பித்திருக்கிறது என்பதை,

"உண்டாலம்ம இவ்வுலகம்"
"புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்." (புறநானூறு - பாடல் 182)

எனும் பாடல் வழி எடுத்தியம்புகிறது. மேலும் இத்தகைய நற்குடியில் தோன்றியோர், ஒழுககத்தோடு வாய்மையும் கைவரப்பெற்று சிறப்புற வாழ்வர் அதுமட்டுமன்று அவர்களிடத்தில் கை எவரிடத்தும் இன்சொல் பேசுதல், பிறரை இகழாமை, போன்ற சீரிய குணங்களும் நிறைந்து காணப்படும். அதனாலேயே அவர் தாமும் மகிழ்ந்திருப்பர் தம்மைச் சுற்றியுள்ளவரையும் மகிழ்வோடு இருக்கச் செய்வர் என வள்ளுவர் நற்குடிப் பிறப்பின் இயல்புகளைத் திடமாக எடுத்துரைக்கின்றார். ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகள் மகிழ்ச்சியாக, சிறப்பாக வாழ வேண்டும் என்னும் வேட்கைக் கொண்டவரே. அதனால் வள்ளுவர் கூறுவதைப் போல் அறவழியில் குடிசெயல்வகை புரிந்தால் நற்குடிமக்கள் சாத்தியமே ஆகும்.

முடிவுரை

ஒரு மனிதன் தான் விதைத்ததை தான் அறுவடை செய்கிறான். அறம் குடும்பங்களில் விதைக்கப்பட்டால், நற்பண்புகள் மிக்க சமுதாயம் அறுவடையாகும். அரிதினும் அரிதான மனிதப்பிறவி பெறும் மாந்தர், தம் மானுடப் பண்புகளால் உயர்ந்து வாழ்வதே, பிறவிப்பயன் என்பதை உணர்ந்து வாழ்ந்தால் அவர்தம் குடி சிறக்கும். அவர் வழித்தோன்றல் சிறப்பர். மானுடம் தழைக்கும். வள்ளுவர் வாய்ச்சொல்லை உணர்வோம். நற்குடி செய்வோம்.

துணைநின்ற நூல்கள்

1. *திருக்குறள்.* பரிமேலழகர் உரை, விசா பப்ளிகேஷன்ஸ், 55, வெங்கட்நாராயணாசாலை, தி.நகர். பதிப்பு : மார்ச் 1992
2. *புறநானூறு.* உ.ஃ.பெ. இரா. இளங்குமரன், கோவிலூர் மடாலயம் கோவிலூர், பதிப்பு – ஏப்ரல் 2004.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் நெறிமுறைகள்
Principles of Life in the Literature of Tamil

ந.வாசுதேவன், நாமக்கல்.

Abstract

The research article is to provide the details of the principles of life in the literary works of Tamil. Life full of principles and the way is a difficult one to achieve. To follow principles in every aspect of life is a needed one for an individual to redeem his life from all clutches. Literature helps us in curbing such pressures. Tamil Literature is a source of diadactic wisdom. Sangam literature is a first on the list to quote and teach virtues of life. Therefore, the study concentrates on the facts regarding the principles of life in Tamil Literature.

Keywords: Principles of Life, Literature of Tamil, Sangam Literature

முன்னுரை

பண்டைத் தமிழகத்தின் பழமையையும், சிறப்பையும் அந்நாளில் வாழ்ந்திருந்த புலவர் பெருமக்களின் பாடல்களே பறைசாற்றி வருகின்றன. அவை, மக்களின் உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்கின்றன. முற்காலத் தமிழகத்தையும், அக்காலத்தில் சிறப்பாக வாழ்ந்த தமிழ் மக்களையும், அவர்கள் தம்மகத்தே கொண்ட ஒழுக்கத்தையும் இலக்கியங்கள் சிறப்பாய்க் காட்டுகின்றன. தமிழர்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் இன்றைய மக்களும் அறிந்து கொள்ளத் துணை செய்பவை இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்களின் பாடுபொருள்கள், அக ஒழுக்க இலக்கணங்கள், எட்டுத் தொகையுள் ஆய்வுக்குரிய அக இலக்கியங்கள் ஆகியவற்றை இவ்வியல் ஆய்வு செய்கிறது.

இலக்கியத்தின் குறிக்கோள்

காலந்தோறும் படைக்கப்படும் இலக்கியங்கள் மனிதன் வாழ்வாங்கு வாழ உயரிய கருத்துகளை சமூகத்துக்கு தரவேண்டும். இதுவே இலக்கியத்தின் குறிக்கோளாகும் ‘இலக்கியம்’ என்பது தூய தமிழ்ச்சொல் இதனை ‘இலக்கு - இயம்’ எனப் பிரிக்கலாம் இது குறிக்கோளை இயம்புவது என்னும் பொருளைத் தருவது வாழ்வின் குறிக்கோளை எடுத்து இயம்புவதே இலக்கியமாகும். ஆகவே, இலக்கியத்தின் துணைகொண்டு அவ்விலக்கியம் எழுந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை அறிதல் கூடும். தமிழ் இலக்கியத்தின் துணைகொண்டு தமிழ் மக்களின் வாழ்வியலை அறியலாம்.

இலக்கியத்தின் பாடுபொருளாக வாழ்க்கை அமைகின்றது. சிறந்த வாழ்க்கை இலக்கியத்தில் இருந்து பெறப்படுகின்றது.

இலக்கிய வாழ்வியல்

மனித வாழ்வியல் படைக்கப்பட்ட இலக்கியங்கள் வாழ்வியல் இலக்கியங்களாக தகுதி பெறுகின்றன ஒத்த சிந்தனைகள் ஒருமித்த ஆற்றல் வெளிப்படும் போது நல்ல மாற்றங்களை சமூகம் எதிர்கொள்கிறது. அவற்றை காலத்தின் தேவைக்கேற்ப தெளிந்து பயன்படுத்தும்போது அவை சிறப்பான நெறி முறைகள் பின்பற்றப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கருத்தோட்டங்களை ஆய்வாளர்கள் பல்வேறு நிலையில் வெளிப்படுத்தியுள்ளனர். வாழ்க்கையின் உண்மை நிலையை பிரிதொரு விதமாக

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

உணர்த்த இலக்கியம் ஒரு நாட்டில் இலக்கியங்கள் என்பது அந்நாட்டு மக்களின் பண்பாட்டு நெறிமுறைகளை வழிபடுத்துவனவாக அமைதல் வேண்டும். சங்க இலக்கியங்கள், மனிதனின் அடிப்படையான சமுதாய கட்டமைப்பையும் சங்ககால மக்களின் பண்பாட்டு நெறி முறைகளையும் ஒழுங்கு முறைகளையும் சமூகத்திற்கு விளக்கிக் காட்டுகின்றன

சங்க இலக்கியக் காலம்

பண்டைத் தமிழ் இலக்கிய காலத்தை சில கணிப்பின் வரலாறாகத்தான் பதிவு செய்ய இயலும் இரண்டாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த இலக்கியங்களின் காலத்தை சங்கம் கொண்டு ஆய்வாளர்கள் ஆராய்ந்தனர். பண்டைக் காலத்தில் தமிழ் வளர்த்த சங்கங்களாக தலை இடை கடை என்ற மூன்று சங்கங்கள் இருந்தன முதல் இரண்டு சங்கங்கள் கடல்கோள்களால் அழிந்ததாக வரலாறுகள் கூறுகின்றன சங்கமிருந்து தமிழாராய்ந்தது சிறுமேதாவியார் சேந்தம்பூதனார் அறிவுடையார் இளந்திருமாறன் மதுரையாசிரியர் நல்லந்துவனார் மருதனிள நாகனார் நக்கீரனார் நாற்பத்தொன்பதின்மர் (49) என்பவர் நானூற்று நாற்பத்தொன்பதின்மர் (449) பாடினார் என்ப அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறு நற்றிணை நானூறும் புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன அவருக்கு நூல் இலக்கணம் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப.

மேற்கூறிய செய்திகள் மூலம் அகத்தியமும் தொல்காப்பியமும் கடைச்சங்க காலத்தில் இருந்தன என அறியலாம் அகத்தியம் அழிந்து போன நூல்களுள் அடங்கும். கிடைக்கும் இலக்கண நூல் தொல்காப்பியம் மட்டுமே ஆகும். இதனால் தொல்காப்பியத்தை இலக்கண நூலாகக் கொண்டு சங்க இலக்கியங்கள் உருவாக்கப்பட்டன என ஊகிக்கலாம். இடைச் சங்க காலத்தின் இறுதியில் கடைச்சங்க காலத்தின் தொடக்கமுமாக அமைந்த இலக்கண நூலான தொல்காப்பியம் விளங்குகிறது தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் கால இடைவெளி இடைச்சங்கம் கடைச்சங்கத்திற்கும் இடைப்பட்ட பகுதி ஆகும் அதாவது தொல்காப்பியம் தோன்றி 3700 ஆண்டுகளுக்கு பின் சங்க இலக்கியம் தோன்றி இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கணக்கிடப்படுகின்றனர்.

சங்க இலக்கியமும் தமிழர் வாழ்வியலும்

சங்ககால மக்களின் வாழ்வியலை சங்கப் புலவர்கள் படைத்த பாடல்களின் வழி அறியலாம்.இலக்கியம் நேரிடையாகவே பிரதிபலிக்கின்றது. இதற்கு நேரெதிர் நிலையில் இலக்கியம் பிரதிபலிக்கும் உலகமானது யதார்த்தமான உலகமே அன்று மாறாக அது ஒரு இணை உலகமே.

சங்க இலக்கியத்தில் கூறியுள்ளபடி தமிழர், தங்கள் வாழ்க்கை முறையைப் பெரும்பாலும் சிறப்பாக அமைத்துக் கொண்டனர் எனலாம். சங்க காலத்தில் எதிர்மறை வாழ்க்கை வாழ்ந்தவர்களும் இருந்தனர் என்பதையும் அக்கால இலக்கியங்கள் வழி அறியலாம்.

வாழ்வியல் நெறிமுறைகள்

வாழ்வியல் நெறிமுறைகள் என்பது மனிதன் மனிதனாக வாழ வழி முறைகளாகும் தமிழர்களுடைய வாழ்வியல் நெறிமுறை வழியில் பொருளீட்டி இன்பம் அடைந்து அதன் வாயிலாக வீடுபேற்றினை பெறுவதாகும். பக்குவப்படுத்தப்பட்ட நிலத்தில் விதை விதைத்தால் அதை நன்றாக முளைக்கும். அதுபோல மனிதன் தன் மனதை பக்குவப்படுத்தி அறமாக விதையை விதைத்தால் அவனது மனதில் அறம் நன்றாக வளரும் உலகில் தோன்றிய ஒவ்வொருவரும் தான் வாழும் காலத்தில் ஒழுக்க நெறிகளை பின்பற்றி சமுதாயத்திற்கும் உலகில் எந்த அளவு முடியுமோ அந்த அளவு உதவ வேண்டும் அவ்வாறு வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர் உலகில் தோன்றிய அதற்கு அர்த்தம் உடையவனாக இக்கருத்தையே வள்ளுவம்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

எனக் கூறுகிறது. ஒழுக்க நெறியை உலக மக்கள் ஒருங்கே பின்பற்றினால் ஏழ்மை, பொய்மை, பிரச்சனை,ஏமாற்றம், கொலை போன்ற போன்றவை இல்லாமலாகும் ஒழுக்க நெறிகளுக்கு பெருந்துணையாக அமையும் என ஆன்றோர் வழங்கிய இலக்கியங்களையும் அனுபவம் பெற்ற புலவர்கள் தாம் படைத்த இலக்கியங்கள் மூலம் மனித இனம் நல்ல நெறிகளோடு வாழ உயரிய கருத்துகளை தந்துள்ளனர். சங்க இலக்கியங்கள் வாழ்வியல் நெறிமுறைகளை வெளிப்படையாகவும் சிறப்பாக கூறுகின்றன.

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாங்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

பொருண்மைச் சிறப்பு

சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளும் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் "எல்லாப் பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட்ச் சிறப்பபை உணர்த்துவன.

வாழ்வியல் பதிவு

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்றுவிடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்றுவிடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது. இதனை சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. வள்ளுவத்தில்உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன. மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் - வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் என்னும் முத்தமிழ் அறிஞரின் கருத்தும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப்படுத்துகிறது.

முதன்மைப் பயன்

உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது. எதிலும் விரைவும், ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மைத் தெளிவு பெறவும் வள்ளுவர் வாக்கு ஊன்றுகோலாய் இருக்கிறது.

பன்முகப் பார்வை

தனி மனிதநிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டியபண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள் எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த மரபுத்தளைகளை உடைத்து மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனிமனிதத் தூய்மையை உருவாக்க வள்ளுவர் முயன்றுள்ளார்.

மரபுகளைத் தகர்த்தல்

மது அருந்துதலும், புலால் உண்ணுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலையை மாற்றி மனித மனத்தினை, வாழ்வின் பயனைத் தடம்மாற்றும் தவறுகள் என வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

'இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய மனம் கமழ் தேறல் மடுப்ப நாளும் மகிழ்ந்து இனிது உறைமதி பெரும' எனவும் 'சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே பெரியகட் பெறினே யாம்பாடத் தான் மகிழ்ந்தது உண்ணும் மன்னே' என்றும் கள்ளுண்டுகளித்தலையும், கள்ளுண்ணல் பெருமித வாழ்வாக இருந்த மரபுகளையும் பின்பற்றக் கூடிய ஒழுக்கமாய்க் காட்டும் வழக்கினை மாற்றி அதனைச் சமுதாயத் தீமையாக உரைத்தவர் வள்ளுவர்.

'உண்ணற்க கள்ளை' என்றும் அது 'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதது' எனவும் 'நஞ்சுண்பார் கள் உண்பவர்' என்றெல்லாம் மது அருந்துதலின் தீமையை உணர்த்தித் தனிமனித வாழ்வு சிறக்கும் நெறியைக் காட்டியுள்ளார் வள்ளுவர் எனலாம்.

புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்களின் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுனர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். தெய்வப் புலவர் வள்ளுவர் 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார்.

"கல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும"

என்னும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகிறது. இன்றைய தமிழக அரசு உயிர்க்கொலை, உயிர்பலி கூடாது எனச் சட்டம் கொண்டுவந்துள்ள நிகழ்காலச் சூழலில் வள்ளுவரின் வாழ்வியல் நெறி வெற்றி பெற்றுள்ளதாகவே கருதலாம். அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனித மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனி மனித வாழ்க்கையை வள்ளுவர் பண்படுத்தியுள்ளார்.

அறநெறிப்பட்ட வாழ்க்கை

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண்டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகவும் உள்ளது. மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடையது. அதுவே அறங்களில் முழுமை. மனித வாழ்க்கை நெறி என்கிறார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்னும் குறட்பா இதனை உணர்த்துகிறது. அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக்கிறார். "அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும், உடையும் உறையுளும் அல்லது கண்டது இல" என்னும் காப்பியக் கருத்தினை மறு ஆய்வு செய்து அறத்திற்குப் புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர். மனத்தூய்மை,ஈகை, காதல் என்னும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதன் தேவையை உணர்த்தியுள்ளார்.

வாய்மை

திருக்குறள் அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனித மாண்புகளை விளக்குகிறது. இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும் ஒதுக்கியவர் அடையும் இழிவினையும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

திறம்படக் காட்டுகிறது. வாய்மை என்பதே தலையாய அறம் என்கிறது வள்ளுவம். பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு வள்ளுவர் கருத்துக்கள் மலர்ச்சியை உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம். அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்புடையது என்பதை

“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று”

என்னும் குறட்பாவால் அறிய முடிகிறது.

சங்க இலக்கியப் பாடுபொருள்கள்

சங்க இலக்கியங்கள் காதலும் வீரமும் கொடையும் போன்ற நிகழ்வுகளை பாடுபொருளாக கொண்டுள்ளன காதல் வாழ்வை அகம் என்பதும் போர் முதலிய நிகழ்வுகளை புறம் என்பதும் தமிழர் வழக்கு. சங்க இலக்கியங்களில் தொடர்பான செய்திகள் 50 சதவீதமாக இருக்கின்றன சமுதாய வாழ்வின் ஒரு கூறாகிய இல்வாழ்க்கையும் தலைவன் தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையை சித்தரிக்கும் பாடல்களை அவனிடமிருந்து நாட்டைக் காக்கும் பொறுப்புடைய மாந்தரது கடமைகள். அவர்களுடைய செயல்பாடுகள் மன்னர்களுடைய கொடைச்சிறப்பு போன்றவற்றை விவரிக்கும் பாடல்கள் புறப்பாடல்களாகும்.

அக இலக்கியங்கள்

சங்க காலப் புலவர்கள், வாழ்க்கையின் இருகூறுகளாகிய அகக்கூறையும், புறக்கூறையும் தம் வாழ்வில் கண்டு வந்தனர். வாழ்க்கையை பிரதிபலிக்கும் பாடல்கள் என்றும் புறப்பாடல்கள் என்று வகைப்படுத்தினார் அகமும் புறமும் சங்க இலக்கியத்தில் இரு கண்களாக உள்ளன தமிழ் அகப்பொருள் என்பது வெறும் பாடுபொருள் பற்றிய பெயர் என்று பாடுபொருளும் இணைந்து இயங்கும் ஓர் இலக்கிய வடிவம் பெற்ற இலக்கிய வடிவம் உடையது (Literary Genre). அவ் இலக்கிய வடிவம் தனக்கெனப் பொருட்சிறப்பும் (Meaning) உடையது.

அகம் என்பது, மனிதனுடைய அக உணர்வுகளை பற்றிக் கூறும் அடிப்படையில் அமையும் சித்திரம் எனலாம். அகப்பொருள் பாடல்கள் தனித்து இல்லாமல் அறிவு சார்ந்த நிலையில் புலநெறி தன்மையில் படைக்கப்பட்டுள்ளன. அரசனைப் பற்றியும், போரைப் பற்றியும் பாடி பரிசு பெற்றவர்கள் பலர். அந்நோக்கமின்றி தங்கள் வாழ்க்கை அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு போரற்ற பெரு வாழ்வை விரும்பிய புலவர்கள், புறப்பாடல்களை பாடினர். பிறருக்கு எடுத்துரைக்க முடியாமல்தானே உணரக்கூடியதை, மனதில் அனுபவிக்கக்கூடிய சிந்தனைகளையுடையதை அகப்பாடல்களுக்குள் அடக்கினர். அகப்பாடல்கள், நட்பியல் சார்ந்தவையாகவும், நாடக வடிவமைப்பு உடையனவாகவும் உள்ளன. சங்க கால இலக்கியங்கள் ஆண் பெண் உள்ளங்களில் உள்ள காதலையும் அதனால் எழும் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துகின்றன.

அக இலக்கிய மரபு

அகப்பாடல்களில் புலவர்களால் தொடர்ந்து பின்பற்றப்படும் செய்திகள், அக இலக்கிய மரபாக அமைகின்றன. அகப்பொருள் செய்யுளைப் பாடுவோர் மனதினுள் முதன்மைக் கருத்தாகக் கொள்ளக்கூடியவை கூடுதலும் அது தொடர்பான நிகழ்வுகளும் பிரிதலும் அது தொடர்பான நிகழ்வுகளுமாகும். ஒவ்வொரு பாடலிலும் செய்யுள் பாடுவோரது மனநிலைக்கேற்ப இதன் வகைகள் அமையும். அக இலக்கியம் சிறப்புப் பெற, அகப்பொருள் மரபுகள் முறையாகச் சுட்டப்பெறல் வேண்டும். திணை, துறைக்கோட்பாடு, கூற்றுமுறை, அகமாந்தர் பெயர் சுட்டாமை ஆகியவை அகப்பொருள் மரபாகக் கருதப்படுகின்றன.

தொல்காப்பியல் கூறும் அகம்

அகவொழுக்கத்திற்கு முதன்முதலில் இலக்கணம் வகுத்த பெருமை தொல்காப்பியரைச் சாரும். தொல்காப்பியர், பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல்,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பொருளியல் என அகத்திற்கு நான்கு இயல்கள் கூறினாலும், ஏனைய மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் ஆகியவற்றிலும் அகப்பொருள் பற்றிய செய்திகளைக் கூறுகிறார்.

தொல்காப்பியர், அகத்திணையியலில் அன்பின் ஐந்திணைக்குரிய தலைமக்களைக் கூறிவிட்டுக் கைக்கிளைக்கும், பெருந்திணைக்குமுரிய தலைமக்களை,

"அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினுங்
குடிவரை இலபுறத் தென்மனார் புலவர்" (தொல்., பொரு., அகத்., நூ.25)

எனக் கூறுகிறார். அடிமைத் தொழில் செய்வாரும், ஏவிய தொழிலைச் செய்வாரும் அகத்திணைப் பாடல்களில் நீக்கப்பட்டவராவர். அவர்கள், ஐந்திணையின் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணை பாடலின் கண் இடம் பெறுவர் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். பழந்தமிழ்ப் பாடல்களில் காணும் காதல் பற்றிய மரபு, 'அகம்' என்ற பிரிவில் அடங்கும். இது அன்பிணைந்திணை என்னும் ஒரு கூறாகவும், கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டும் பிறிதொரு கூறாகவும் வகுக்கப்பட்டது. தொல்காப்பியத்தில் காணப்படும் பாகுபாடு பின்னர் வந்த நூல்களிலும் போற்றப்படுகின்றது. எடுத்துக்காட்டாய், நம்பி அகப்பொருள் கூறும்,

"ஐந்திணை யுடைய தன்புடைக் காமம்" (அகப்பொருள் விளக்கம், நூ.4)
"கைக்கிளை யடைய தொருதலைக் காமம்" (மேலது., நூ.3, வ.-2)
"பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்" (மேலது., நூ.5)

என்னும் இலக்கணச் செய்திகளைக் கூறலாம்.

'அன்புடை', 'ஒருதலை', 'பொருந்தா' என்னும் அடைமொழிகளை நோக்குமிடத்து, அன்பு பொருந்திய காமம் சிறப்பு என்பதும், மற்றைய இரண்டும் ஏதாவதொரு வகையில் குறைபாடுடையன என்பதும் எளிதில் புலனாகும். இதன் அடிப்படையில் பிற்காலச் சான்றோர் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டையும் 'அகப்புறம்' என வகுத்து ஒதுக்கி வைக்கலாயினர். சுருங்கக் கூறின், அன்பின் ஐந்திணையே தூய அகம் எனப்பட்டது. தொல்காப்பியம் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளது. களவியல் முதற் சூத்திரத்திலேயே காமப்புணர்ச்சியின் தன்மையும் ஐந்திணையும்,

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை" (தொல்., பொரு., கள., நூ.89, வரி 1-3)

எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

பெயர்கள் குறிக்கப்படாமை

அகப்பாடல்களில் தலைவன் இயற்பெயர் கூறுதல் மரபாகாது. இதனைத் தொல்காப்பியர்,

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறா அர்" (தொல்., பொரு., புறத்., நூ.57)

என்ற நூற்பாவில் கூறுகிறார். அகத்திணையின் அரிய நூற்பாக்களுக்குள் இது ஒன்று. முதலடி, அகத்திணைக்கு உரிய நிலக்களத்தையும், பின்னடி, அகத்திணை பாடும் இலக்கிய முறையையும் கூறுகின்றன. ஐந்திணைக் காதலொழுக்கங்கள் எல்லா மக்களையும் கருதியதாதலின், ஆதலின் இவற்றைத் தனியொருவர் பெயர் சுட்டிப் புலாவர்கள் பாடவில்லை. தலைவன், பாங்கன், பாகன், பாணன், தந்தை, அண்ணன்மார் எனவும், தலைவி, தோழி, செவிலி, தாய், பரத்தை, ஊரார் எனவும் ஐந்திணையில் ஆண், பெண் மாந்தர்கள் இடம்பெறுவர். இவர்களைத் தலைவன், தலைவி, தோழி என உறவுப் பெயராற் கூறலாம். நாடன்,துறைவன், ஊரன் என நிலப்பெயராற் கூறலாம். உழவன், உழத்தி, ஆயன், ஆய்ச்சி எனத் தொழிற் பெயராற் கூறலாம். ஆடவன், நம்பி, சிறுமி, நங்கை எனப் பாற்பெயராற் கூறலாம். அவன், அவள், அவரெனச் சுட்டுப் பெயராற் கூறலாம். இவ்வாறு யார்க்கும் ஏற்கும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பொதுமையாகக் கூறுதலின்றி, இட்டு வழங்கும் பெயர்களாற் கூறுதல் ஆகாது. காவிரிபூம்பட்டினத்து மாசாத்துவான் மகன் கோவலன் என்பான், மாநாய்கன் மகள் கண்ணகியை காதலித்தான், மணந்தான். பின்னர்க் கணிகைக் குல மாதவியை நாடினான் என்றவாறு இயற்பெயரோடு மொழியலாகாது என்பது அகமுறை. இம்முறையை விடுத்துக் கூப்பிடுபெயர் சுட்டிக் காதல் புனையப்படுமாயின் அக்காதல், எத்துணைச் சிறந்ததாயினும் அகத்திணைப் பாற்படாது. தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் அகத்திணைப் பாடல்களில் பெயர் குறிப்படப்படுமாயின் அவை, புறத்தின் பாற்படும் எனத் தெளிவிக்கிறார்.

அகத்திணைப்பிரிவுகளின் அடிப்படை

1. கைக்கிளை, 2. குறிஞ்சி, 3. முல்லை, 4. மருதம், 5. நெய்தல், 6. பாலை, 7. பெருந்திணை எனப்பட்ட ஏழும் அகத்திணைப் பாகுபாடாம். இவற்றுள் குறிஞ்சி முதல் பாலை இறுதியாகிய இடைநின்ற ஐந்தும் ஐந்திணையென ஒரு கூட்டாக வழங்கப்படும். இப்பிரிவுகளுக்கு அடிநிலைக் காரணம் யாதெனில் கைக்கிளையாவது ஒருதலைக் காமம் என்றும், யாவரும் ஏற்றுக் கொள்ளும் தன்மை பெற்ற ஐந்திணையாவது ஒத்த காமம் என்றும், பெருந்திணையாவது ஒவ்வாக் காமம் என்றும் அமைவதாகும். இங்ஙனம் காமத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஐந்திணையை ஒரே பிரிவாகக் கொண்டு அகத்திணைப் பிரிவுகள் வகுக்கப்பட்டன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்வகைத் திணைகளுக்கே நிலப்பாங்குகள் உள்ளன. இதனால், நானிலம் என்பது உலகிற்கு ஒரு பெயராக மாறியது. பாலைக்கு இயல்நிலைம் இன்றேனும், திரிநிலம் உண்டு. காடும் மலையும் கோடைத் தீ வெப்பத்தால் தத்தம் பசுமை இழந்த திரிநிலையே பாலையாகும். (சிலம்பு., காடுகாண்., வரி.64-66). இங்ஙனம் பாலைத்திணைக்கு ஒருவகையான நிலம் உண்டென்று கொள்ளினும் கைக்கிளை, பெருந்திணைக்கு நிலம் இல்லை.

ஐந்திணையுள் அடங்கிய ஒவ்வொன்றும் தனித் தனித் திணையகக் கருதப்பட்டமையின், புலவர்கள் ஐந்திணையும் ஒருவர் பாடாது, ஆளுக்கு ஒரு திணையாக இலக்கியம் கண்டனர். இவ்வுண்மையை

“மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன்-கருவதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு”

என ஐங்குறுநூற்றை வேறுவேறு புலவர்கள் பாடியதையும் கலித்தொகையை,

“பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்-அருஞ்சோழன்
நல்ருத்திரன் முல்லை நல்லாத் துவனெய்தல்
கல்வி வலார்கண்ட கலி”

என வேறுவேறு புலவர்கள் பாடியதுமாகிய செய்திகளைப் பழம்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. புலவர்கள் பற்றிய பட்டியலைத் தந்தோர் அறியுமாறில்லை. தமிழிலக்கிய வரலாற்று நூல்கள் இப்பாடல்களைத் தருகின்றன.

பாட்டும் தொகையும்

சங்க இலக்கியங்களுள் ‘பத்துப்பாட்டு’, புலவர் எண்மர் பாடிய பத்துப் பெரும் பாடல்கள் சேர்ந்த தொகுப்பாதலின் இதனையும் எட்டுத் தொகை போன்றதொரு தொகைநூல் என்றே கருதவேண்டும். பாட்டு, தொகை நூல்களில் அடங்காத வேறு பல பாடல்களும் அந்நாளில் இருந்திருத்தல் வேண்டும். நமக்குக் கிடைத்தவை பாட்டு, தொகை எனப் போற்றப்பெறும் நூல்களே. “பாட்டு-தொகை நூல்களில் பாடல்களை அடுத்துக் காணப்பெறும் குறிப்புகள் அப்பாடல்கள் தொகுக்கப்பட்ட காலத்து எழுதப்பட்டனவாகும். இவை முற்றும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பாடல் பாடிய ஆசிரியர்களாலேயே எழுதப்பெற்ற குறிப்புகள் என்று துணிய இடமில்லை. இக்குறிப்புகளால் பாடலின் பொருள் தெளிவுற விளக்கமாகின்றது. திணை, துறை பற்றிய குறிப்புகளும் பொருள் உணர்ச்சிக்கு அவசியமானவையே பாடினோர், பாடப்பட்டோர் வரலாறுகளை இவை புலப்படுத்துகின்றன. எனினும், இக்குறிப்புகள் முதன்மைச் சான்றாக எடுத்துக் கொள்ளத் தக்கனவல்ல. பழைய உரைகாரர் தரும் கருத்துக்களும், பொருள் விளக்கத்திற்குரிய துணைச் சான்றாகவே கருதத்தக்கன.

தொகை நூல்களின் உருவாக்கம்

தொகை நூல்கள் ஒவ்வொன்றும் பலவகையான அடிவரையறையைக் கொண்டவை. பாடினோர், அடிக்கணக்கை மனதில் வைத்துப் பாடவில்லை. அடியெல்லையை வகுத்துக் கொண்ட திறம், தொகுத்தோர்க்கு உரியது. “கடலால், கறையானால், அயல் நாகரிகத்தால், தமிழ்மக்களின் பேணாப் பெரும்பேதைமையால், ஐயகோ! அழித்து போன நூல்கள் அளவிலவே, எஞ்சிய சில நூற்பாடல்களையேனும் தேடித் தொகுக்க வேண்டும்,தொகுத்துக் காக்க வேண்டும் என்னும் துடிப்பு அன்றொரு நாள் எழுந்தபோது இத்தொகை, நூல்கள் உருவாகின. சிதறிக் கிடந்த தனிப் பாக்களுக்கு நூல் வடிவருளிய நன்மக்கள், அனைத்துப் பாடல்களையும் ஒரு தொகையாக்கின், பெரிதாய் விரிந்து பரவலற்று மீண்டும் அழியினும் என்று அஞ்சிய நல்லச்சமே, தொகை பலவாயதற்குக் காரணம் என்று கருதலாம்.

தொகை நூல்களில் அகஇலக்கியங்கள்

எட்டுத் தொகை இலக்கியங்களுள் அகவாழ்வு அடிப்படையிலான செய்திகளைத் தருபவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என்னும் ஐந்து நூல்களாகும். இந்நூல்கள் சங்க மக்களின் காதல் வாழ்வையும், கற்பு வாழ்வையும் பல்வேறு நிலைகளில் சித்தரிக்கின்றன.

நற்றிணை

நல் + திணை ஸ்ரீ நற்றிணையாகும். நல்ல ஒழுக்கத்தைக் கூறுவதென்பது இதன் பொருள். எட்டுத் தொகையுள் ஒன்றாகிய நற்றிணை 9 முதல் 12 அடி வரையிலான 400 அகவற்பாக்களின் தொகுப்பாகும். 3 முதல் 6 அடிவரையுள்ள குறுந்தொகை, 13 முதல் 31 அடிவரையுள்ள அகநானூறு அல்லது நெடுந்தொகை ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட அளவிலான அடிகளை உடையதாகையால் இது நற்றிணை என வழங்கப்பட்டதென்பர். இந்நூல், ‘நற்றிணை நானூறு’ என்றும் அழைக்கப்பட்டது.

இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி என்பது பழங்குறிப்பு. தொகுத்தாரது பெயர் தெரியவில்லை. நற்றிணைப் பாடல்களில் 234 ஆம் பாடல் முற்றும் கிடைக்கவில்லை. இது குறித்து ஆராய்ச்சியாளர்,‘சான்றோர் வருந்திய வருத்தமும்’ எனத் தொடங்கும் பாடலோ, ‘நெடுநலும் முன்னாள் எல்லையும் ஒரு சிறை’ எனத் தொடங்கும் பாடலோ, மறைந்த நற்றிணைப் பாடலாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். 385 ஆம் பாடலின் பிற்பகுதியும் மறைந்து போயிற்று. 56 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப்படவில்லை. ஏனைய பாடல்களைப் பாடியவர்கள் 187. இந்நூலைப் பாடியாவர்கள் 175 புலவர்கள். இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் தம்முள் மாறுபட்ட எண்ணிக்கையைக் கூறுவது கருதிடத்தக்கது.

திணைப்பாகுபாடு பற்றிய கருத்துக்கள் ஆய்வுக்குரியனவாய் அமைகின்றன. “நற்றிணைச் செய்யுட்களுக்குக் குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்திணைப் பாகுபாடு ஏட்டுப் பிரதிகளில் காணப்பெறவில்லை. இவை பதிப்பாசிரியர்களால் ஊகித்துக் கொடுக்கப்பெற்றனவே. ஆகப் பொருட் பாடல்களின் பொருள் விளக்கத்திற்கு இத்திணை விளக்கம் இன்றியமையாதது என்னும் கருத்தாலும், அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவற்றில் திணைப்பாகுபாடு பழமையாக உள்ளமையாலும், இந்நூலுக்கும் திணைப் பாகுபாடு கொள்வது பொருத்தமே. பாடல்களின் அடியில் கொடுக்கப் பெற்றுள்ள கருத்துக்கள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பழமையானவை. அவை இந்நூலைத் தொகுத்தவரோலேனும், பிற்காலத்தவராலேனும் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறுந்தொகை

குறுந்தொகைப் பாடல்களின் சிற்றெல்லை 4 அடி, பேரெல்லை 8 அடி, நீண்ட பாடல்கள் அடங்கிய அகநானூற்றை நெடுந்தொகை என்று குறித்தல் போல, அகவற்பாவின் அமைப்பில் சுருங்கிய அடி வரையறையைக் கொண்ட பாடல்களையுடைய இத்தொகுப்பு, குறுந்தொகை என்ற பெயர்பெற்றது. அடி அளவில் குறுகியதால் *எட்டுத்தொகை* நூல்களில் முதலில் தொகுப்பட்டதாக எண்ணலாம். குறுந்தொகை நூலில் அமையும் கடவுள் வாழ்த்தை விடுத்து *நற்றிணை, அகநானூறு* போலவே இதும் 400 செய்யுட்களைக் கொண்டது. குறுந்தொகை நானூறு என்றே இந்நூலை இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் குறிப்பிடுகிறார். எட்டுத்தொகை நூல்களின் பெயர்களைத் தொகுத்து உரைக்கும் வெண்பா இந்நூலை,'நல்ல குறுந்தொகை' என்று பாராட்டுகின்றது. பண்டைய உரையாசிரியர்கள் தத்தம் உரைநூல்களில் இந்நூற் செய்யுட்களை மிகுதியாக மேற்கோள் காட்டியுள்ளனர்.

இத்தொகையினைத் தொகுத்தவன் பூரிக்கோ. இதனைத் தொகுப்பித்தவர் பெயர் தெரியவில்லை. 10 பாடல்களின் ஆசிரியர் பெயர்கள் காணப்பெறவில்லை. பாடல்களின் அடியில் கொடுக்கப் பெற்றிருக்கும் கருத்துக்கள் பழமையானவை. ஆனால் பாடல்களின் தலைப்பில் இடம் பெற்றுள்ள திணைக்குறிப்புகள் பழமையானவை அல்ல.

ஐங்குறுநூறு

ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும் குறைந்த அடிவரையறையைப் பெற்ற நூறு நூறு பாடல்களைத் தனித்தனியாகப் பெற்றுள்ளமையினால், இந்நூல் ஐங்குறுநூறு என்னும் பெயர் பெற்றது. இதில் அமைந்த பாடல்கள் 3 அடி சிற்றெல்லையையும், 6 அடி பேரேல்லையையும் கொண்டவை. கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசையில் ஐந்து திணைப்பகுதிகளும் உள்ளன. இவற்றைப் பாடியவர்கள் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்னும் ஐவராவர். *அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு,* என்னும் ஐந்து நூல்களுள் ஐங்குறுநூறு தக்க ஒருவரால் துறைகள் சுவைபட வகுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நூலும் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளாக உள்ளன. இவை ஒவ்வொன்றும் பத்து என்னும் தலைப்பைப் பெற்றுள்ளது. பொருளமைப்பினாலேயோ, இதில் அமைந்த பாடலின் சொல்லமைப்பினாலேயே இவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுக்களால், கள்வன் பத்து, மஞ்ஞைப் பத்து, தெய்யோப்பத்து முதலியன சொல்லாட்சியினால் பெற்ற பெயர்களாய் அமைந்திருப்பதையும் பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து, தோழி வற்புறுத்திய பத்து, அன்னாய்ப்பத்து முதலியன சொல்லாட்சியாலும், பொருளாட்சியாலும் பெற்ற பெயர்களாய் அமைந்திருப்பதையும் கூறலாம்.

இத்தொகையைத் தொகுத்தவர் புலத்துணை முற்றிய கூடலூர் கிழார் என்றும் தொகுப்பித்தவர் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிம்பொறையார் என்றும் நூலிறுதியில் உள்ள பழங்குறிப்பினால் தெரியவருகின்றது. இந்நூலின் 500, 129, 130- ஆம் செய்யுட்கள் காணப்படாது மறைந்தன. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. உரையின் ஆசிரியர் அறியப்படவில்லை. ஆயினும், அவ்வாசிரியரது உரைப்போக்கிலிருந்து பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்களை ஒத்த பெருமை உடையவராக அவர் இருக்கலாம் எனத் தெரிகிறது.

கலித்தொகை

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு போன்ற நான்கும் அகவற்பாவில் அமைய, கலித்தொகை மட்டும் முழுவதும் கலிப்பாவில் அமைந்துள்ளது. தரவு, தாழிசை, சுரிதகம், தனிச்சொல் எனும் அமைப்பினால் ஆனது. மொத்த பாடல்கள் 150 ஆகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தொகுத்தவர் நல்லந்துவனார் இந்நூலை, பெருங்கோன், கபிலன், மருதனிளநாகன், நல்லுருத்திரன், நல்லந்துவன் ஆகிய புலவர்கள் முறையே பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் திணைகளைப் பாடினர் எனப் பழம் வெண்பா ஒன்று கூறுகிறது. இதிகாசப்புராணச் செய்திகள் மிகுதியாய் இடம்பெற்றுள்ளன. இவை உவமையாகவும் கையாளப்பட்டுள்ளன. இதன் ஒவ்வொரு பாடலும் தொடக்கம், விளக்கம், முடிவு என்னும் அமைப்பை உடையது. சில பாடல்கள் உரையாடல் தன்மையுடனும் ஓரங்க நாடகம் போன்றும் அமைந்துள்ளன.

கலித்தொகை முழுமைக்கும் நச்சினார்க்கினியரின் சிறந்த உரை அமைந்துள்ளது.

“கற்றவர் மெச்சும் கலித் தொகையாயம் - இன்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே – காதல்
மூழ்கும் துறை – கண்டு வாழ்வோமே” (மலரும் மாலையும், பா.55)

என்று இத்தொகை நூலைச் சிறப்பித்துப் பாடிய கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை இதனை, ‘இன்பக் கற்பனை சேரும் களஞ்சியம்’ எனச் சிறப்பிக்கிறார். பிற நான்கு தொகை நூல்களிலும் காணப்பெறாத தனிக்கூறு, கலித்தொகையில் அமைந்துள்ளது. அகம் சார்ந்த ஐந்திணைகளும் கைக்கிளையும் பெருந்திணையும் எனத் திணைகள் ஏழு வகைப்படும். ஐந்திணைக்குரிய பாடல்களே, கலித்தொகை தவிர்த்த ஏனைய தொகைகளில் உள்ளன. ஏழு தினைகளுக்கும் உரிய பாடல்களைப் பெற்றிருப்பது கலித்தொகை மட்டுமேயாகும். கைக்கிளை, பெருந்துணைச் செய்யுட்கள் சங்க இலக்கியங்களில் மிகச் சிலவாகும். அவையும் கலித்தொகையில்தான் காணப்படுகின்றன. அகத்திணை மாந்தர்களுக்குரிய இனிய, இன்னா உணர்ச்சிகளையும், உரையாடல்களையும் உள்ளம் கிளர்ச்சியடையுமாறு செய்யக் கலிப்பாவின் துள்ளலொலி மிகவும் பொருத்தமுடையதாகும். அவ்வொலி, இசையொழுக இந்நூலுள் அமைந்துள்ளது. ஏறு தழுவி, மணம் கொள்ளும் சங்க கால மரபை இந்நூல் முல்லைத்துறைப் பாக்கள் மூலம் வெளிப்படுத்துகிறது.

அகநானூறு

அகம்,அகப்பாட்டு எனப்படும். எட்டுத்தொகை நூல்களுள் அகம் என்னும் பெயரையே இத்தொகை நூல் பெற்றிருத்தல் இதன் சிறப்பாகும். அகவற்பாவில் அமைந்த ஏனை நூல்களிலும் இதன் கண் அமைந்த பாடல்கள் அடி அளவால் மிகவும் நீண்டவை. இப்பாடல்கள் 13 அடிச் சிற்றெல்லையும், 31 அடி பேரெல்லையும் கொண்டவை. எனவே இதனை நெடுந்தொகை எனவும் வழங்குவர்.

“ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டுகள்
நேடிய வாகி அடிநிமிர்ந் தொழுகிய
இன்பப் பகுதி யின்பொருட் பாடல்
நானூ றெடுத்து நூல்நவில் புலவர்
முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்கு” (அகம்., பாயிரம்., வாரி. 6-14)

என வரும் இறுதியிலுள்ள பாயிரப் பாடல் அடி இதனைக் குறிக்கின்றது. இதனைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிக்குடிக்கிழார் ஆவார். தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியார் ஆவார். இதன் பாடல்கள் 400 ஆகும். உத்திரசன்மனார் நுண்மதியால் இந்நூலுக்கு ஐவகைத் திணைப்பாங்கு வகுத்துத் தந்துள்ளார். வேறு வேறு காதல் துறைகளில் பாடிய பல புலவர்களின் திறம், இந்நூலுக்குச் சுவை செய்கின்றது.

இந்த நானூறு பாடல்களும் களிற்றுயானை நிரை (1 முதல் 120 பாடல்கள்) மணிமிடைப்பவளம் (121 முதல் 300 பாடல்கள்), நித்திலக்கோவை (301 முதல் 400 பாடல்கள்) என மூன்று பகுப்புகளை உடையன. இந்நூலை முதலில் உரை எழுதிப் பதிப்பித்தவர் வே. இராஜகோபால் அய்யங்கார் ஆவார். இவற்றின் பாடல்களின் வைப்பு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

முறையாக, ஒற்றைப்படை எண்களையுடைய பாடல்கள் (1,3,5,7,9,11 முதலியன) பாலைத் திணை பற்றியனவாகும். 2,8 என்ற எண்களையுடைய பாடல்கள் (2,8,12,18 முதலியன) குறிஞ்சித் திணை பற்றியனவாகும். 4 என்ற எண்ணம் பெற்று வரும் பாடல்கள் (4,14,24 முதலியன) முல்லைத்திணை பற்றியனவாகும். 6 என்ற எண்ணைப் பெற்றுவரும் பாடல்கள் (6,16,26,36 முதலியன) மருதத்திணை பற்றியனவாகும். (10, 20, 30) என பத்துப் பத்தான எண்கள் நெய்தல் திணைக்குரியனவாகும்.

முடிவுரை

பண்டைய புலவர்கள், மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்து, இலக்கியத்தின் வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். மனிதனின் வாழ்வுக்கு காவலாகத் தரப்பட்டுள்ள இலக்கியங்களே வாழ்வியல் இலக்கியங்களாகத் தகுதி பெறுகின்றன. சங்க காலத்தில் தோன்றிய சங்க இலக்கியங்களே சமுதாயத்தின் கட்டமைப்பினை விளக்கும் ஆதாராமாகவும், மனிதனின் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் களமாகவும் அமைகின்றன.

சங்கநூல்கள் பொருள் வகையில் அகம், புறம் என இருவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அகப்பாடல்களில் பின்பற்றப்பட்டுவரும் செய்திகள் அனைத்தும் அக இலக்கியமரபாக அமைகின்றன.

தொல்காப்பியர் அகத்திணையியலில் அன்பின் ஐந்திணையையும், ஐந்திணையின் புறத்தவாகிய கைக்கிளை, பெருந்திணையையும் கூறுகிறார். சமுதாய மக்களின் வாழ்வின் ஒரு பகுதியான இல்வாழ்க்கையையும் தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையையும் சித்தரிக்கும் பாடல்களே அகப்பாடல்கள் ஆகும். அகப்பொருள் இலக்கியத்தில் தலைவனின் இயற்பெயர் சுட்டப்படுவதில்லை.

சங்கப் பாடல்கள், 'பத்துப்பாட்டு' என்றும் 'எட்டுத்தொகை' என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. பத்துப்பாட்டில் 5 ஆற்றுப்படை நூல்களும், 3 அகப்பாடல்களும், 1 புறப்பாடலும், 1 அகப்புறப் பாடலும் காணப்படுகின்றன. எட்டுத் தொகையில் 5 அகப்பாடல்களும், 2 புறப்பாடல்களும், 1 அகப்புறப்பாடலும் காணப்படுகின்றன.

துணைநூற்பட்டியல்

1. வ.சுப. மாணிக்கம் (உ.ஆ) - திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மறுபதிப்பு-2000.
2. இளம்பூரணர், (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, முதல்பதிப்பு - 1970.
3. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர். கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், பத்துப்பாட்டு, சாரதா பதிப்பகம், சென்னை - 600014.
4. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர்.கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், அகநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை - 600014.
5. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர்.கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், ஐங்குறுநூறு, சாரதா பதிப்பகம், சென்னை - 600014.
6. ஔவை சு. துரைச்சாமிப்பிள்ளை, முனைவர்.கதிர்முருகு - சங்க இலக்கியம் மூலமும் உரையும், நற்றிணை, சாரதா பதிப்பகம், சென்னை - 600014.
7. உ.வே. சாமிநாதையர் - புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.பதிப்பு, சென்னை, ஆறாம் பதிப்பு - 1963.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வளையாபதி உணர்த்தும் வாழ்வியல் நெறிமுறைகள்

Principles of Life Instructed in *Valayapathi*

த.விஜி , முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி – 8

Abstract

The research article provides the details of the principles of life in the literary work "Valayapathi" one of the Five Epics of Tamil Nadu. Life is one that has deep impact on the human society that is reflected through literatures. Epics are the ones that reveal the national character of the people. "Valayapathi" is an epic full of moral virtues based on the Samana sect, lots of the fragments are demolished and through the remaining sources we find life principles are widely seen in it. Therefore, the study concentrates on the facts regarding the principles of life.

Keywords: Principles of Life, Five Epics of Tamil Nadu

முன்னுரை

தமிழர்கள் தம் வாழ்வை அறம், பொருள், இன்பம் எனும் மூன்று கூறுகளாகப் பகுத்து வாழ்ந்தனர். எனினும், பண்டையத் தமிழர்கள் இன்பத்தை முதலாவதாக எண்ணி, இன்பம் சார்ந்த வாழ்வையே வாழ்ந்து வந்தனர். இதனைத் தொல்காப்பியத்தில் தொல்காப்பியரும் கூறியுள்ளார். தொல்காப்பியத்தை அடுத்து தோன்றிய நீதி இலக்கியமானத் திருக்குறளை எழுதிய திருவள்ளளுவர் அறம் சார்ந்த வாழ்வே நிலையானது, அதுவே மனிதப் பிறவியின் பயன் என்றெண்ணி, தம் நூலை அறம், பொருள், இன்பம் எனும் முறையில் அமைத்தார். பிற சமயங்கள் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கினாலும் அவையும் அறம் சார்ந்த வாழ்வையே வலியுறுத்தின. குறிப்பாகச் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் இயற்றிய நூல்களுள் பல நீதி நூல்களாக அமைந்து, தனி மனித ஒழுக்கத்தைப் பேணி பாதுகாக்கத் துணை புரிகின்றது.

ஐம்பெரும் காப்பியங்களில் *வளையாபதி*

சமணக்காப்பியங்களில் ஒன்று வளையாபதி இந்நூல் முழுமையாகக் கிடைக்கப்பெறாவிட்டாலும், புறத்திரட்டில் காணப்பெறும் 72 பாடல்கள் இந்நூலைச் சார்ந்ததெனத் தொகுக்கப் பெற்றுள்ளது. இந்நூலை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. இந்நூல் பழம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகவும் அமைந்துள்ளது. இந்நூல் மக்களால் கூறப்பெறும் கதைக்கும், இதனுள் காணப்பெறும் பாடல்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மேலும், இக்கதைக் குறித்த ஏதேனும் சிறு குறிப்பு கூட இப்பாடல்களுள் காணப்பெறவில்லை, இக்காப்பியத்தில் வரும் அனைத்துப் பாடல்களும் மனித் வாழ்விற்குத் தேவையான நல்லறங்களை எடுத்து விளக்கிக் கூறப்படுகின்றது.

மனிதனாகப் பிறப்பதின் பயன்

உலகத்தில் அனைத்து உயிர்களைக் காட்டிலும் மனிதப்பிறவி தான் மிகவும் அருமை உடைத்தது. ஏனெனில் பிறவி நீக்கத்திற்கு மனிதப்பிறவி கொண்டோர். அதன் சிறப்பை உணர்ந்து நடத்தில் வேண்டும் என வளையாபதி அறிவுறுத்துகிறது.

"வினைபல வலியினாலே
வேறுவேறு யாக்கை யாகி

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நனிபல பிறவி தன்னுள்
துன்புறூஉம் நல்லுயிர்க்கு
மனிதரின் அரியதாகும்
தோன்றுதல்" (வளையாபதி-5)

இவ்வாறு வளையாபதி மனித வாழ்வை செம்மைப்படுத்தி உயர்த்தி மேன்மைப்படுத்துகின்றார்.

மக்கட்பேறின் சிறப்பு

உயிரினங்கள் அனைத்துக்கும் மக்கட்பேறு சிறப்பதாகவும் கூறப்படுகின்றது. அதிலும் மனிதனுக்குப் பெறுகின்ற எல்லாப் பேறுகளைக் காட்டிலும் சிறந்தது மக்கட்பேறேயாகும் எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். இத்தகைய மக்கட்பேறு எத்தகையச் சிறப்பு வாய்ந்தது என்பதை வளையாபதி நமக்கு உணர்த்துகின்றது.

"பொறை யிலா அறிவுஈ போகப்
புணர் விலா இளமை, மேவத்
துறை யலா வசை வாவி
துகில் இலாக் கோலத் தூய்மை,
நறை யிலா மாலை, கல்வி
நலமி லாப் புலமை, நன்னீர்ச்
சிறை யிலா நகரம் போலும்
சேயி லாச் செல்வம் அன்றே," (வளையாபதி-12)

இப்பாடல் ஒவ்வொன்றிற்கும் அமைய வேண்டிய சிறப்பினை எதிர்மறையாக உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இப்பாடல் வாயிலாக அறிவுக்குப் பொறுமையும், இளமைக்குப் போகமும், தாமரைத் தடாகத்திற்குப் படித்துறையும், ஒப்பனைக்கு நல் ஆடையும், புலமைக்குக் கல்விச் செல்வமும், நகரத்திற்கு நீர் வளமும் இன்றியமைதனப் செல்வமாகும் என வினக்குகிறது.

பிறர் மனையை நோக்காமை

திருவள்ளுவர் தம்முடைய நூலில் ஒழுக்கமுடைமை எனும் அதிகாரத்தை அடுத்து பிறனில் விழையாமை எனும் அதிகாரத்தைப் படைத்துள்ளார். இதன் நோக்கம், ஒழுக்கங்களில் எல்லாம் தலை சிறந்தது பிறன் மனையாளை விரும்பாமையேயாகும் என்பது நமக்கு தெளிவுற விளங்குகின்றது. இத்தகைய ஒழுக்கப் பண்பை வளையாபதி நமக்குத் தெளிவாக விளக்குகின்றது.

"பெண்ணின் ஆகிய பேர் அஞர் பூமியுள்
எண்ணம் மிக்கவர் எண்ணினும் எண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்னது ஆயினும் எதில்பெண் நீக்குமின்" (வளையாபதி-15)

எனும் பாடலின் வழி, பிறர் மனைவியை விரும்பும் தீவினையாளர்கள் நரகத்தில் சென்று இடர்படுவர். இவர்களது எண்ணிக்கையும் எண்ணில் அடங்காது. எனவே, துன்பத்தை வேண்டாதவர் எத்தகைய தன்மை இருந்தாலும் பிறர் மனையை விரும்பாது இருத்தல் வேண்டும் என்று கூறப்படுகிறது.

இல்லற வாழ்வின் சிறப்பு

இல்லறத்தில் வாழும் ஒருவன், இல்லற நெறிகளைக் கைக்கொண்டு தம் மனைவியுடன் ஊரும், நாடும் போற்ற வாழ்வனாயின, அவனைத் தேவர்கள் பெருமைப்படுத்தி மறுமையில் எதிர்கொண்டு வரவேற்பார்கள் என இல்லறத்தினால் எய்தும் சிறப்பினை எடுத்தியம்புகிறது வளையாபதி. இதனை,

"தாரம் நல்தவம் தாங்கி தலைநின் மின்
ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வீர வென்றி விறல்மிகு விண்ணவர்
சீரின் ஏத்திச் சிறப்பெதிர் கொள்பவே" (வளையாபதி-4)

இவ்வாறு வளையாபதியில் இல்லறத்தின் மேன்மையை சிறப்பாகப் புலப்படுகின்றது. மேன்மையை சிறப்பாகப் புலப்படுத்துகின்றது. இக்கருத்தை வள்ளுவர் திருக்குறளில் கூறுகின்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" (திருக்குறள்-50)

என்னும் குறள் வழியாக அறங்கள் செய்வது காட்டிலும் இல்லறவாழ்வில் சிறப்பாக வாழ்ந்தால் மேன்மையாக வாழ்விற்கு வழிகாட்டும் என்ாதை வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

அறப்பண்பின் சிறப்பு

மனிதன் தன் வாழ்நாளில் கைக்கொண்டு ஒழுக வேண்டிய அறப்பண்புகள் எவையவை என்பதை வளையாபதி நமக்கு உணர்த்துகிறது. இதனை,

"கள்ளன் மின், கள வாயின யாவையும்
கொள்ளன் மின், கொலை கூடி வருமறம்
எள்ளன் மின், இலர் என்றெண்ணி யாரையும்
நள்ளன் மின், பிறர் பெண்யொடு நண்ணன்மின்" (வளையாபதி-17)

இப்பாடல்கள் களவு செய்யாதீர், களவினால் உண்டாகும் ஆக்கத்தைக் கொள்ளாதீர், வெள்விக்காக உயிர் கொலை புரியாதீர், இல்லாதவர் என்று எண்ணி யாரையும் இகழாதீர், பிறர் மனைவியின் பால் இச்சைக் கொண்டு செல்லாதீர் என உணர்த்துகிறது வளையாபதி. இவை போன்ற பல்வேறு அறக் கருத்துக்களையும், காமத்தால் விளையும் சீர்கேட்டையும் நிலையாமைக் கருத்துக்களையும் வளையாபதி எடுத்துரைக்கின்றது.

முடிவுரை

ஐம்பெருங்காப்பியத்தில் ஒன்றான *வளையாபதி* குறித்து வழங்கும் கதைக்கும், அதனுள் காணப்பெறும் பாடல்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது தெளிவாக உணரப்படுகின்றது. அறக்கருத்துக்களையும் ஒழுக்கப் பண்புகளையும் கூறுவதால் தான் வளையாபதி ஓர் நீதி இலக்கிய பெட்டகமாகவே விளங்குகிறது. ஐம்பெரும் காபியங்களில் முழுக்க முழுக்க நீதியை மட்டுமே கூறுவது *வளையாபதி* ஒன்று மட்டுமே ஆகும். கிடைத்திருப்பவை 72 பாடல்களே ஆயினும், அவை மனித இனம் போற்ற வேண்டிய நெறிகள் குறித்த ஆசிரியரின் உள்ளக்கிடக்கையை நமக்கு தெள்ளத் தெளிவாக விளக்கி எடுத்துரைக்கப்படுகிறது.

பார்வை நூல்கள்

1. ரமேஷ்.த., *நடுநாட்டுச் சமணக்கோயில்கள்*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2005.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வில்லவன் கவிதைகளில் ஒடுக்கப்பட்டோர்

The Oppressed in the Poetry of Villavan

தே. வேதராஜ், முனைவர் பட்ட ஆய்வாளர், **முனைவர். இரா. சுதமதி,** நெறியாளர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி - 8.

Abstract

The purpose of the article is to show the state of the oppressed people in the poetry of the poet Villavan. Poetry is a powerful medium that envisages many rational views and finds solutions and suggests boldly overcoming them. These qualities are the vital need of poems to be written in every society. Villavan is a rational humanist. All of his poems and works are based on the human inequalities prevailing in the society. He concentrated his views on the oppressed, unemployees, women, poor and the socially deprived ones. Therefore, this article, gives way to understand the life of the oppressed people as shown in the works of Villavan.

Keywords: Oppressed in the Poetry of Villavan, Tamil Poetry

'உள்ளத்து உள்ளது கவிதை: இன்ப உருவெடுப்பது கவிதை' எனும் கவிமணியின் கூற்று கவிதைக்கு இலக்கணம் கூறுகிறது. ஆம் உள்ளத்தில் உள்ள உணர்வுகள் இன்ப உருவெடுத்து வருவதே கவிதை. இது காலந்தோறும் மொழிகள் தோறும் கோலோச்சியுள்ளது. காலத்தின் கண்ணாடியாகிய இலக்கியத்தின் ஒரு கூறே கவிதை ஆகையால் இதுவும் சமூகத்தின் பிரதிபலிப்பாகவே உள்ளது. மன்னர்களையும், கடவுளர்களையும் பாடிய இலக்கியங்கள் மக்களையும் பாடத் தொடங்கின. கூடவே புதுக்கவிதை எனும் புதிய வடிவினையும் ஏற்றன. 'சங்க இலக்கியம் முடியாட்சியின் குழந்தை. அது முடியரசின் புகழ் பாடுகின்றது. புதுக்கவிதை குடியாட்சியின் குழந்தை. இந்தக் குழந்தை குடியாட்சியால் மக்களுக்கு நேர்ந்துவிட்ட விபத்துக்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது' எனும் சாமுவேல் தாசனின் வரிகள் இங்கு நினைக்கத்தக்கன. கவிதை என்பது சமுதாய மேம்பாட்டிற்கு உதவுவதாக அமையவேண்டும். இலக்கியத்தைக் குறிப்பாகக் கவிதையைச் சமுதாயப் பண்பாட்டுக் கண்ணோட்டத்தோடு ஆய்வு செய்த முதல் மேலைநாட்டு அறிஞர் பிளேட்டோவும் இதனையே வலியுறுத்துகிறார். சமுதாயத்தில் புரையோடிப்போன காயங்களுக்குக் கவிதைகள் மருந்தாக வேண்டும். இந்தப் பணியினைக் கவிஞர் வில்லவனின் கவிதைகள் தாராளமாய்ச் செய்கின்றன.

கவிஞர் வில்லவன்

இவர் குமரிமாவட்டத்தில் கீழ்குளம் எனும் ஊரில் 1952 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14- ஆம் நாள், திரு. வே. சின்னையன், திருமதி சோ. கமலம் கண்ணம்மா தம்பதியரின் மகனாகப் பிறந்தார். கீழ்குளம் வில்லவன் எனும் பெயராலேயே அறியப்படுகிறார். இவர் மார்த்தாண்டம் நேசமணி கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பண்யாற்றி நிறைவு பெற்றவர். இரண்டு கவிதை நூல்கள், இரண்டு கட்டுரை நூல்கள், குறு நாடகங்கள் என இவரது படைப்புலகம் விரிந்து செல்கிறது. இவரது படைப்புகளின் கதாநாயகர்கள் பெரும்பாலும் விளிம்புநிலை மக்கள் தான். சமூகத்தின் காயங்களுக்கு மருந்திடும் மிகப்பெரும் பணியை இவர்தம் படைப்புகள் மூலம் செய்து வருகிறார். "புலன்களை வருடிக் கொடுப்பது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மட்டுமல்ல புதுக்கவிதை என்பதைப் புரிந்து கொண்டு எழுதுகிற புதுக்கவிஞர் கூட்டத்தில் வில்லவன் குறிப்பிடத்தக்கவர்" எனக் கவிபேரரசு வைரமுத்துவால் பாரட்டப்பட்டவர் இவர்.

ஒடுக்கப்பட்டோர்

ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூக அமைப்பில் மனிதர்கள் பல அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். கல்வி, பொருளாதாரம், பால், தொழில், சாதி, மதம், மொழி, நாடு என இது போன்ற பல காரணிகளால் பிரிவினைகள் மலிந்துள்ளதும், இவை காரணமாக ஒருசாரார் ஒருசாராரை ஒடுக்குவதும் காலங்காலமாக நிகழ்ந்துவரும் ஒன்றாகும். இதனால் ஒடுக்கப்பட்டோர் என அடையாளம் காணப்பட்டுச் சமூக அடையாளத்தைத் தொலைத்தவர்கள் ஏராளம். அத்தகையோரை இந்தச் சமூகம் மறந்தாலும் சமூக உணர்வுடைய மனிதர்களால் மறக்கப்படுவதில்லை. அவர்கள் படைப்பாளிகளின் இலக்கியங்களில் முதன்மை பெறுகிறார்கள். கவிஞர் வில்லவனின் கவிதைகளில் ஒடுக்கப்பட்டோர் தான் பெரும்பாலான இடங்களைப் பிடித்துள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டு அவர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருபவர் கவிஞர் வில்லவன்.

வேலையில்லாப் பட்டதாரிகள்

படித்த இளைஞர்களுக்குத் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு இன்மையால் ஒட்டுமொத்தச் சமூகமும் மன உளைச்சலுக்குள்ளாகிறது. இன்றைய மிகப்பெரிய பிரச்சினை இது. பல சமூக விரோதச் செயல்களுக்கும் இது காரணமாகிறது. அதிக பணச் செலவு செய்து கல்வி கற்ற பின் வேலைவாய்ப்பு இன்மையால் தங்கள் எதிர்காலம் குறித்த நம்பிக்கையற்ற இளைஞர்களின் மனக்குமுறல்கள் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. கவிஞர் தனது கவிதைகளில் இத்தகைய இளைஞர்களின் நிலையினை உணர்வுபூர்வமாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

"எங்களுக்கும்
பிச்சைக்காரர்களுக்கும்
ஒரே ஒரு வேறுபாடு
அவர்கள்
பகலில்
பட்டினிக் கோலம் போட்டுவிட்டு
இரவில்
இளவரசர்கள் ஆகிறார்கள்
நாங்களோ
பகலில்
ராஜா போல நடக்கிறோம்
இரவில்
பட்டினிமீது பள்ளி கொள்கிறோம்" (கிழக்கு சிவக்கும், ப. 9)

எனப் புலம்பும் பட்டதாரிகளின் மனக்குமுறல் படிப்பவர்களையும் கண்ணீர் வடிக்க வைக்கிறது.

ஏழைகள்

பொருளாதார ரீதியாகச் சமூகத்தால் ஒடுக்கப்பட்டோர்களே ஏழைகள். சமூகத்தில் ஏழைகள் பொருட்படுத்தப்படாத நிலையினைக் கவிஞர் 'பயணங்கள்'எனும் கவிதையில் பக்குவமாகச் சொல்லிச் செல்கிறார். சாலைகளில் கார்கள் செல்வதும், மக்கள் நடந்து செல்வதும் இயல்பான ஒரு நிகழ்வு. ஆனால் கவிஞரின் பார்வை சற்று வித்தியாசமானது.

"மழைக்காலம்-
சாலைகளில் பயணம் செய்யும்
பணக்காரக் கார்கள்
ஓரமாய் ஒதுங்கிப் போவோர் மீது

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சேறுகளை அடித்துவிட்டுப் போகின்றன'' (உழைப்பின் நிறம் கறுப்பு, பக்.38 - 39)

எனக் கூறும் போது சாலைகளில் மட்டுமல்ல வாழ்க்கைப் பாதையிலும் இந்த நிலைதான் என்பதைச் சொல்லாமல் சொல்லும் கவிஞரின் கவித்துவம் பாராட்டிற்குரியது.

உழைப்போர்

உழைப்போர் சுரண்டப்படுவதும், முதலாளிகள் செழித்திருப்பதும் தொடர்ந்து நடப்பதுதான். காலங்காலமாக இது குறித்து ஏராளமாகப் பாடியுள்ளனர். கவிஞரும் உழைப்பவர்களின் உள்ளக் குமுறல்களை பல கவிதைகளில் கொட்டித் தீர்க்கிறார். தேன் கூடுகளைச் சான்று காட்டி உழைப்புச் சுரண்டலைக் காட்சிப்படுத்துகிறார் இவர்.

“தேன் நிறைந்து வரும் காலத்தில் - அவன்
கூட்டைத் திறக்கின்றான்;
தேனைக் கறக்கின்றான்...
தடுப்பதற்கும் கேட்பதற்கும் யாரும் இல்லை என்ற
தைரியம் அவனுக்கு !
உழைப்பதற்கும் வாழ்வதற்கும் வேறு வழியில்லை
என்ற அவலம் ஈக்களுக்கு'' (உழைப்பின் நிறம் கறுப்பு, பக். 31 - 32)

எனும் வரிகள் மூலம், பிறர் உழைப்பைச் சுரண்டி கோடிகள் குவிக்கும் நிறுவனங்களையும் கல்விகூடங்களையும் நம் கண்முன் கொண்டுவருகிறார். உழைப்போர் வாழ்வில் வறுமையும் அதன் மூலம் பசியும் எப்போதும் ஒட்டிக்கொண்டே இருக்கின்றன. 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' எனக் கவிஞன் ஆசை கொள்வதும் 'பசிப்பிணி எனும் பாவியது தீர்த்தோர் இசைச் சொல்லளவைக்கு என் நா நிமிராது' எனப் புலவன் வெளிப்படுத்தும் உணர்வும் சமூகத்தில் வறுமை நிகழ்த்திய கொடுமைகள் ஏற்படுத்திய தாக்கமாகும். மாட்டுவண்டி ஓட்டும் தொழிலாளர் நிலையினை அவர்கள் கூற்றாகவே வடிக்கிறார் கவிஞர்.

“வண்டியைப் போலவே
எங்கள் வாழ்க்கையும்
வீதியில்தான் நிற்கிறது'' (கிழக்கு சிவக்கும், ப.65)

எனப் புலம்புகிறார் தொழிலாளி ஒருவர். உழைப்போர் வாழ்க்கை தொடர்ந்து வீதியில் தான் நடக்கிறது என்பதை தம் கவிதை வரிகள் மூலம் சமூகத்தின் கவனத்திற்குத் கொண்டுவருகிறார் கவிஞர் வில்லவன்.

பெண்கள்

மாற்றங்கள் எத்தனையோ நிகழ்ந்தாலும் சில மட்டும் மாறாமலே உள்ளன. பெண்கள் குறித்த இந்தச் சமூகத்தின் சிந்தனையும் இந்த வகையில் தான் அடங்கும். காலங்காலமாகப் பெண்களைக் குறித்த சிந்தனையில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. காரணம் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமே உள்ளன. வரதட்சணையால் இன்னும் பெண்கள் ஒடுக்கப்படும் நிலை மிகவும் வேதனை தருவதாக உள்ளது. இதனைக் கவிஞர்,

“இவர்களுக்கெல்லாம்
அவள்
வரதட்சணைக் கப்பல் வந்து சேராததால்
வாழ்க்கைப் பயணம் தொடங்க
வழியில்லாமல் தவிப்பது
எங்கே தெரியப் போகிறது?'' (கிழக்கு சிவக்கும், ப. 46)

எனும் கேள்வியின் மூலம் புலப்படுத்துகின்றார்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

"உனது
பழைய வரலாறு
பாறைகளின் அடியில்
புதிய வரலாறு
புற்றுகளின் அருகில்
எதிர்கால வரலாறு
சிகரங்களின் உச்சியில" (சூரியக் கனவுகள், ப.32)

என நம்பிக்கையூட்டும் கவிஞரின் வரிகள் பெண்களை எழுச்சிப் பாதையில் நடத்தக்கூடியவை.

முடிவுரை

கவிஞர் வில்லவன் சூரியக் கனவுகள் நூலின் முகப்பில், 'இருட்டில் உரசப்படும் ஓர் ஒற்றைத் தீக்குச்சி - தவித்து வருவோருக்குச் சிறிது நீர் - அடித்தட்டிலிருந்து எழுந்து வருவோருக்கு ஒரு சின்ன படிக்கட்டு - சிறகு விரித்து எழுவோருக்கு ஓர் எளிய வாழ்த்து - இப்படி ஏதேனும் ஒரு வகையில் பயன்படும் என்ற நம்பிக்கையில் வாசகர் கரங்களில் இதனைத் தவழ விடுகிறேன்' என எழுதுகிறார். இது முற்றிலும் உண்மை. இவரது படைப்புக்கள் அடித்தட்டு மக்களுக்குப் படிக்கட்டாகவே உள்ளது. ஒடுக்கப்பட்டோர் மீதிருந்து தனது கவனத்தைச் சிறிதும் விலக்காத கவிஞர் இவர். இவரது எழுத்துப்பணி பணி மிகவும் பாராட்டிற்குரியது.

பயன்பட்ட நூல்கள்

1. உழைப்பின் நிறம் கறுப்பு
2. கிழக்கு சிவக்கும்
3. சூரியக் கனவுகள்

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இலக்கியம் இயம்பும் இல்லறம்

Family Life as Evinced by Literature

கே.எம்.வேலு, வழக்கறிஞர், திருவள்ளுர்.

Abstract

The article is to clear down the ethics of family life as seen in the vast ocean of Tamil Literature. Tamil Literature is a 'well defiled' and it will be an ever flourishing fountain of the portrayal of culture and moral principles. The focus of the paper decodes the virtues and values found in the Sangam and modern didactic treatises. The role and individuality of woman as the home maker of family, man and his quality, hospitality, caring parents and treating relatives is the subject of the study. Therefore, the article focuses on the related facts from the literary sources.

Keywords: Family Life, Evinced by Tamil Literature

அன்பு இருக்கும் இதயத்தில் தான் இன்பம் பிறக்கும். அன்புமயமாக இருவர் இதயம் அமைந்தால் இன்பமயமாக இல்லற்ம நடக்கும். இல்லற வீணையின் இனித நாதமே அன்புதான். எந்த நரம்பை வருடினாலும் அதிலிருந்து வந்து விழும் அமரகாவியம் அன்பு ஒன்றுதான். ஈரம் இல்லாத இடத்தில் பயிர் வளர்வதில்லை உண்மையான அன்பு இரண்டு இதயங்களில் இல்லாமல் இல்லறம் சிறப்பதில்லை. தேனாய் இனிக்கும் அன்பும், மெழுகாய் உருகும் மனமும் இருவருக்கும் இருந்துவிட்டால் இறக்கும் வரை பிரிவில்லை. அது மட்டும் இல்லாது இல்லறம் சமூகத்தின் ஓர் அங்கம். வானத்தில் இருந்து நீலத்தை எப்படி பிரிக்க முடியாதோ அதை போன்று குடும்பம் என்பதை சமூகத்தில் இருந்து பிரிக்க முடியாது. தான் உண்டு தன் மனைவி, பிள்ளை உண்டு என்று வாழ்வதில்லை வாழ்க்கை உற்றார் உறவினர், நண்பர்கள் சேர்ந்தது தான் வாழ்க்கை. இல்லறத்தின் கடமைகளில் தலையாய கடமைகளில் ஒன்று ஏழைக்கும், பாழைக்கும், அனாதைக்கும், அகதிக்கும் உதவுவதே இல்லறம்.

உலகில் எந்த மொழி இலக்கியமும் இல்லறத்தை இத்துணை ஆழமாகவும், அகலமாகவும் இயம்பவில்லை அனைத்திலும் அறத்தோடு வாழ வேண்டும் என வானம் போல வழிகாட்டுகின்றது தமிழ் இலக்கியம்.

தலைவி (மனையாளின் பங்கு)

'அருளும், ஆண்மையும்' 'பண்பும் - பாசமும்', 'பாவும் - பாவலரும்' இசையும் - இசைப்போரும்', 'அரசும் - நாடும்' 'மக்களும் - மன்னரும்' 'அன்பும்-பண்பும்' பேணிய 'தமிழ் சுரங்கம்' புறநானூற்றில் 191 பாடலில் நட்பின் இலக்கணமாக திகழ்ந்த பிசிராந்தையார் பாடிய பாடல்.

"யான்டு பல வாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்என வினவுதீர் ஆயின்
மாண்டயென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கன்டனையர் என் இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம்-191)"

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தன் உற்ற, உயிர் நண்பன் கோப்பெரும்சோழன் வடக்கில் இருந்தான். அவனை பார்க்க சென்றார் பிசிராந்தையார். அவரை கண்ட சான்றோர் பலர் கேட்ட கேள்விக்கு பதிலாக இந்த பாடல் பாடப்பட்டது.

இத்துணை வயதுகளையும் கடந்து ஒரு “நரை” மயிர் கூட வரவில்லையே ஏன் என்ற கேட்பீர்கள் ஆயின் “மாட்சிமையுடையவள்.” என் மனைவி, என் மக்களோ அறிவு நிரம்பியவர்கள், ஏவலரோ நான் காண்பது போன்றே எதனையும் காணும் இயல்புடையவர்கள் எம் அரசனும் அறத்தை உயிர் போல் காத்து வருபவன் அனைத்திற்க்கும் மேலாக கல்வியால், கேள்வியால், அறத்தின் வழியே நடப்பவர்கள் சான்றோர்கள். என் ஊரில் வாழுகின்றார்கள் அதனால் இன்று வரை எனக்கு நரையில்லை.

இதிலே முதல் வரி “மாண்ட என் மனைவியோடு” “மாண்ட” என்ற வார்த்தை இறந்துவிட்ட என்று புரிந்து கொள்ள கூடாது. மாண்ட என்ற சொல்லுக்கு ‘மாட்சியுடையவள்’ என்ற பொருளில் பாடப்பட்டுள்ளது. அன்பை அருவியாய் பொழிபவள் என்னை எப்போதும் இன்பத்தோடு வைத்திருப்பவள். அறிவுடையைமை பெற்றவள். விருந்தோம்பலில் சிறந்தவள், மூத்தோர்களை மதிக்கும் பாங்கு உடையவள் என் மனைவி.

ஒரு கணவனுக்கு இல்வாழ்க்கையில் ‘மனைவி’ தான் முதல் ஆதாரம். மனை வாழ்க்கையின் இன்ப நலன்களுக்கெல்லாம் மனைவியின் அன்பே மூலக்காரணம். அந்த அன்பின் கனிவே எல்லா இன்பங்களையும் நன்கு கனியச் செய்து மனிதவுலகத்தை இனிமைப்படுத்தி வருகின்றது. அனைத்து செல்வங்களையும் வழி முறையில் அடையலாம். ஆனால் அறிவுடைய மனைவி, குணமுடைய மனைவி வாய்த்தால் அறிவுடைய வாழ்க்கையில் ஒரு நாளும் துன்பம் இல்லை, என்று விளக்குகின்றது இந்த புறநானூறு பாடல். ஒரு தனிமனிதனை சீர்படுத்துவது மட்டும் இல்லாமல் அவன் வழியே மனித குலத்தை மாற்ற கூடியவள். அறிவுடைய பெண். அறிவுடைய பெண் வாய்த்தால் ‘இல்லறம்’ என்றும் ‘நல்லறம்’ என்று இயம்புகின்றது இலக்கியம்.

புறநானூறு (மூலமும், உறையும்) - புலியூர் கேசிகன்

தலைவன் (கணவன்)

ஆண் மகனது, தகைமை, உறுதி, ஊக்கம், அறிவாற்றல், அஞ்சாமை என அனைத்து பண்புகளையும் பெற்று இருந்தாலும் ‘இல்லறம்’ நல்லறமாக நின்று நிலைக்க வேண்டும் என்றால் தன் எண்ணங்களில் அளவே மனிதன் உயர்கின்றான் என்னும் உண்மையை உணர்ந்து இருக்க வேண்டும்.

அறத்தொடும், அறிவோடும் சான்றோர் முன் தலைநிமிர்ந்து வாழவேண்டும். பழி பாவத்திற்க்கும் அஞ்சிவாழவேண்டும் மனைவிக்கு நம்பிக்கை நாயகனாகதிகழவேண்டும் மனையாள் என்னும் விழியை இமைபோல் இணை பிரியாமல் காக்க வேண்டும் என இயம்புகின்றது இலக்கியம்

“தன் மனை யாளைத் தாய் மனைக் கதற்றிப்
பின்பவட் பாராட் பேதையும் பதரே” (69) (நறுந்தொகை)
தன் மனை யாரைத் தனிமனை யிருத்திப்
பிறள் மனை கேடும் பேதையும் பதரோ (70) (நறுந்தொகை)

இல்லற வாழ்வில் கணவனும், மனைவியும் இணைந்த பின்பு ஒருவருக்கொருவர் அன்பும், பண்பும், பாசமும் நம்பிக்கையும் உடையவராக இருக்க வேண்டும் கணவனின் குணம் நன்றாய் அமையபெற்றால் வாழ்க்கை இன்பமுடையதாயிருக்கும், மனைவியை அவருடைய தாய் வீட்டிற்க்கு அனுப்பிவிட்டு, நீண்ட நாட்கள் அவளை காணாமல் இருப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். பிரிவு மன மாற்றத்தை ஏற்படுத்தும் அப்படி ஒரு நிலையை ஏற்படுத்துபவன் அறிவற்றவன் ‘அறம்’ இல்லாதவன்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தான் மணம் செய்து கொண்ட மனையாள் வீட்டில் இருக்கும்போது அவளுடன் இன்பமாக, இனிமையாக இல்லறம் நடத்துவதை விடுத்து தன் மனம் போன போக்கில் மாற்றான் மனைவியை அடைந்து நேசம் கொள்ள நினைத்தால் தவறாகும், அதனால் பழியும். பாவமும் வந்து சேரும் அதுமட்டுமில்லாது சான்றோர்கள் முன்னால் தலை கவிழ்ந்து நிற்க நேரிடும என இயம்புகின்றது "நறுந்தொகை"

பிற்கால நீதி இலக்கிய வரலாறு – டாக்டர் கதிர் முருகு

பெற்றோரை பேணல்

'ஈன்றாளின் என்னக் கடவுகளும் இல்' - நான்மணிக்கடிகை

அம்மா என்ற சொல் அன்னை, அவ்வா, அவ்வெ, அம்மே, அமா, அவ்வை, தன்னை, ஆத்தாள், யாய், ஞாய், தாய், தாயி, தமிழில் (திராவிடமொழி) எத்தனை வார்த்தைகள் இருந்தாலும் 'கடவுள்' என்ற வார்த்தைகள் சால பொருந்தும் அன்பு மயமான அருமை தாய் போல் மக்களுக்கு தெய்வம் இல்லை என்கின்றது. தமிழ் இலக்கியம் தாய் அன்பிற்க்கு அனுவளவும் குறையாது தந்தை அன்பு.

"அன்னையும், பிதாவும் முன்னறிவு தெய்வம்"

என்றது" "கொன்றை வேந்தன்" தாய், தந்தையை பாதுகாத்தல் என்பது காணாத கடவுளை விட கண்கண்ட தெய்வங்கள் தாயும், தந்தையும் என்கின்றது கொன்றை வேந்தன். தாய் தந்தையை பேணி ஒழுகும் பிள்ளைகள் உலகத்தில் உவந்து பேருவார். மறுமையிலும், இன்பம் பெறுவார். உணவும், உடையும், உதவிப் பெற்றோரை பேணிவருதல் மட்டும் போதாது பிறந்த பிள்ளைகள் சிறந்த ஒழுக்கமுடையராக ஓங்கி உயர வேண்டும்

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன்என கேட்ட தாய்-" குறள்
குறள் மட்டும் இல்லாது
"சான்றோர் என் கை ஈன்றோட்கு அழகு" - ஔவையார்
தன் மகனை "சான்றோன் "என கேட்பதை விட
பெற்றோருக்கு இதைவிட சிறப்பு ஏதுமில்லை

"கொண்ட குடல் குளிர்ந்தால் அண்டமெல்லாம் குளிரும்" என்பது பழமொழி தாயும், தந்தையும் பேணுவது என்பது மக்களின் தலையாயக் கடமை! அவர்கள் உள்ளம் உவந்தால் மட்டும் பிள்ளைகளுக்கு புகழ் மருவும், புண்ணியம் பெருகும். எண்ணிய இன்ப நலங்கள்யாவும் எளிதில் வந்தடையும் என இயம்புகிறது இலக்கியம்.

உறவுகளைப் பேணல்

சிறகுகள் சுமையென்று பறவை நினைத்தால் பறக்கமுடியாது உறவுகள் சுமையென்று தனித்து வாழ்ந்தால் வாழ்க்கை சுவைக்காது

"வாயவும் வருத்தமும் ஈன்றக்கால் நோயும்
கவா அன் மகன் கண்டு தாய் மறந்தா அங்கு
அகா அத்தான் உற்ற வருத்தம் உசா அத்தான்
கேளிரைக் கானக் கெடும்"

ஒரு பெண்ணானவள் கருவுற்றிருகின்ற காலத்தில் இயற்கையான பல விதமான வலிகளை எதிர்கொள்கின்றாள் அதனால் வருகின்ற துயரங்களையும் பிரசவ காலத்தில் வலிகளையும் தன் மடியின் மீது தன் மகளை இருத்தியதாக கண்ட அளவிலேயே ஒரு தாயின் அனைத்து வலிகளையும் மறந்துவிடுவாள் அதனை போலவே பல வகையான தளர்ச்சிகளையும் ஒருவன் அடைந்து துன்பங்கள் எல்லாம் அதனைப்பற்றி கேட்க வரும் தன் உறவினர்களைக் கண்ட அக்கணமே அவளை விட்டு நீங்கி போய்விடும். உறவுகளுடன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உண்டு, உறவாடி, உண்மையான அன்புடன் வாழ்ந்தால் இல்லறம், நல்லறம் "கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்" என இயம்புகின்றது இலக்கியம்.

விருந்தோம்பல்

'விருந்து' என்றல் 'புதுமை' என்று பொருள். நமக்கு எந்தவிதத்திலும் இதற்கு முன்பு அறிமுகம் இல்லாத மனிதர்கள் நம் வீடு தேடி வந்தால் புதியவர்களுக்கும் மகிழ்வுடன் உணவு பரிமாறும பண்பே விருந்தோம்பலாகும்.

வழி போக்ககர்கள் இளைப்பாறுவதற்காகவே வீட்டின் முகப்பில் "திண்ணை" கட்டி வைத்த இனம் தமிழினம்.

"இல்வாழ்க்கை" என்ற அதிகாரத்தில் வள்ளுவர் ஒருவன் தான் பெற்ற ஊதியத்தை ஐந்து பங்குகளாக பிரித்து முன்னோர் வழிபாடு, இறைவழிபாடு, விருந்தினரை உபசரித்தல், குடும்ப உறவுகளின் தேவைகளை நிறைவேற்றுதல். தன்னுடைய சுய தேவைகளை பூர்த்தி செய்தல் எனது திட்டமிட்டு செலவழிக்க வேண்டும் என வழி வகுக்கின்றார் வள்ளுவர்.

"இல்லறத்தின்." நோக்கமே இல்லம் தேடி வந்தவர்களை உபசரித்தல் என்று விருந்தோம்பல் அதிகாரத்தில் வலியுறுத்துகின்றார் வள்ளுவர்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" - இல்வாழ்க்கை – குறள்
செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு - விருந்தோம்பல் - குறள்

இல்லறம் இனிய நல்லறமாக மகிழ்ச்சியோடும், நெகிழ்ச்சியோடும் திகழ ஒரே வழி மற்றவர்கட்கு உதவியாக இருப்பதுதான்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உயிர்க்கொண்ட பூண்டி உறவோம்" - (மணிமேகலை)

நோக்கம்

இருப்பது ஒரே ஆடையாகிலும் வேறு ஆடைக்கு வழியின்றி வறுமையில் வாடிக்கிடப்பினும் அந்த ஓராடையை இரு கூறாக்கி இருவரும் அணிவது இணைந்து வாழ்வதும், ஒன்றிக் கலந்து இன்புற்று மகிழ்வதும் அல்லவா மிகச்சிறந்த வாழ்க்கை, என்று வலியுறுத்துகின்றது இலக்கியம்.

"ஈன்றால் பசிகான்பால் ஆயினும்
செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை – குறள்

உலகத்தில் எந்த மொழி இலக்கியம் இப்படி இயம்பவில்லை பெற்ற தாயே பட்டிணி கிடந்தாலும் 'அறத்தை' மீறாதே. அறத்தோடு வாழ் என்கிறது நம் தமிழ் இலக்கியம்.

ஒருவருக்கொருவர் உருகுவதும், தாயையும், தந்தையும் பேணுவதும், உறவுகளை பேணுவதும், விருந்தோம்பலை, விரும்பு செய்வது இவை நான்கையும் கடமையும், கண்ணியத்துடன், நாள் ஒரு மேனி பொழுதொரு வண்ணம் கடைபிடிக்க வேண்டும். இவைகளை தொடர்ந்து செய்யும் நெறிசார்ந்த, அறம் சார்ந்த இல்லறமே இன்பமும், இனிமையும், வளமையும், செழுமையும் வாயக்கும் என இயம்புகின்றது தமிழ் இலக்கியம்.

"இல்வாழ்வான் என்பவன் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை" - குறள்

இன்றைய இளைய தலைமுறை நல்லறம் காக்க, இல்லறம் சிறக்க, இனிமையான இணையளை பெற்று, நன் மக்களைப் பெற்று, விருந்தோம்பி, உறவுகளை பேணி வீடும் நாடும் சிறக்க வாழ வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies

A Bi-Yearly Peer-Reviewed International Journal

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பயன்பட்ட நூல்கள்

1. இரா.கனகசுப்புரத்தினம் - ‘திருக்குறள்’, அறிவுநிதி பதிப்பகம், சென்னை, 1996.
2. தொல்காப்பியம். முனைவர் ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ) மணிவாசகர் பதிப்பகம் 2006.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வள்ளுவம் வகுத்த வாழ்வியல் நெறிமுறைகள்

Principles of Life Created by Valluvam

து.ஜெமிலா, தமிழ்த்துறைப் பேராசிரியர்
மார்கிரிகோரியஸ் கல்லூரி, சென்னை - 37.

Abstract

The paper provides a brief scrutiny of life oriented principles created by Valluvar's "Thirukkural". "Thirukkural" is a cascade of moral source. The importance of writing seems that it wants to create the moral virtue in the individual and shows the quality had existed from the past ages. It has been instructed and been instructing to the successors of Tamil origin and the learned men to inculcate the knowledge of "Thirukkural". Therefore, the study focuses on the facts related to the virtual ideas as evinced by the universal didactic treatise "Thirukkural".

Keywords: Principles of Life, Created by Valluvam, Thiruvalluvar

முன்னுரை

சமூகம் முழுமையும் ஒத்திசைவுடன் இயங்க அச்சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை முறையை நெறி எனலாம். மனிதன் சமூகமாக வாழத்தொடங்கிய போது சமூக உறுப்பினர்கள் அனைவருக்குமான அறம், ஒழுக்கம், நன்மை, தீமை, என்பன அவர்களது வாழ்க்கை ஓட்டத்தில் உருவாயின. அவற்றை அனைவரும் மதித்து நடக்க வேண்டும் என்று தவறாமல் வலியுறுத்தப்பட்டு வந்தது. அதே போன்று நடைமுறையில் கடைபிடிக்க வேண்டியவை எனச் சில செயல்கள் கட்டாயமாகக் கருதப்பட்டன. இவையே நெறிமுறைகள் (ழேசஅள) என்று அழைக்கப்பட்டன. இத்தகைய நெறிமுறைகள் வள்ளுவத்தில் கூறப்பட்டுள்ள விதத்தினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திருக்குறள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் மத்தியில் உருவாகிய ஒரு இலக்கியம். இது திருவள்ளுவரின் அறிவுத் திறனால் உருவாக்கப்பட்டதெனினும் அதற்குப்பின்புலமாக அமைந்தது அவரது சமூக வாழ்வு. அவ்வாழ்க்கையில் காணப்பட்ட நெறியியல் கூறுகள் திருக்குறள் முழுவதும் விரிந்துள்ளது. அக்கூறுகளை ஆராயும் போது அக்கால மக்களின் பண்பாட்டு நிலையையும் அதிலிருந்து வளர்ந்த தற்காலச் சமூகத்தில் அப்பண்பாட்டுநிலை எவ்விதம் இழையோடுகிறது என்பதையும் அறியலாம். இது ஒரு தொடர் நிகழ்வாகும். இன்றைய சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்கு மட்டுமன்றி வீழ்ச்சிக்குமானக் காரணங்களை அறிய பண்பாட்டு நெறியியல் கூறுகளில் எவற்றைப் பின்பற்றியது எவற்றைக் கைவிட்டது என்பதனை அறிந்தாலே போதுமானது.

பண்பாடு-நெறிமுறை-விழுமியம்-வேறுபாடு

பண்பாடு → உலகின் ஒழுங்கான, சீரான அமைதியான மனித வாழ்விற்கு அடிப்படை பண்பாடேயாகும்.

நெறிமுறை → நெறிமுறை (Norms) என்பது ஒருவர் வாழ்வில் எவற்றைச் செய்ய வேண்டும் எவற்றைச் செய்யக் கூடாது என்பதேயாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இது புதிய சூழலுக்கு ஏற்ப மாறக்கூடிய நெகிழ்திறன் உடையது. உதாரணமாக பெண்கள் தலைவிரி கோலமாக வருவது துர்க்குறி என நம்பிக்கைக் கொண்ட தமிழ்ச் சமூகம் இன்று பெண்கள் தலை விரித்துச் செல்வதை (குசநந ர்யசை) அழகு என்ற கண்ணோட்டத்துடன் பார்க்கத் துவங்கியிருக்கிறது.

விழுமியம் → விழுமியம் என்பது ஒரு இனத்தின் அடையாளம் இதனை அந்த இனம் தொடர்ந்து இறுக்கமாக கடைபிடிக்க வேண்டும். ஏனெனில் விழுமியங்கள் எப்போதும் உலகில் உள்ள பிற இனங்கால் மதிக்கப்படுபவை. (எ.கா - கற்புநெறி, மனத்துய்மை, அன்பு).

நெறிமுறைகள்

மக்களின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைப்படுத்தக் கூடிய விதிகளே நெறிமுறைகள் (ழேசஅள) எனப்படும். நெறிமுறைகள் இவற்றைச் செய்யக் கூடாது. இவை சரி இவை தவறு, இவை நல்லவை, இவை கெட்டவை என உறுதிப்படக் கூறும் அல்லது நெறிப்படுத்தும் தன்மை பெற்றவை". (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல் பக் 160) நெறிமுறைகளைக் கடைபிடிக்காத மக்கள் சமூகத்திற்கு எதிரான மக்களாகக் கருதப்படுவர். அங்ஙனம் அவனைச் செல்லவிடாமல் தடுத்துச் சமூகத்தின் செயல்பாடுகளுக்குள் கொண்டுவரும் செயல்களை நெறிமுறைகள் செய்கின்றன.

திருக்குறளில் காணப்படும் நெறிமுறைகளை

1. இல்லற நெறிமுறைகள்
2. தனிமனித நெறிமுறைகள்
3. சமூக நெறிமுறைகள்

என்னும் நிலைகளில் ஆராயலாம்.

இல்லற நெறிமுறைகள்

பண்பாட்டு நிறுவனங்களுள் முக்கியமானது குடும்பமாகும். இல்லற வாழ்வே குடும்பத்திற்கு அடிப்படையாகிறது. தானும் அறநெறியில் வாழ்ந்து, பிறரையும் அறநெறியில் வாழ வழிகாட்டும் இல்லற வாழ்வின் நெறிமுறைகளாக வள்ளுவர் குறிப்பிடுவனவற்றை கீழ்காணலாம்.

அறம் → வள்ளுவர் கருத்துப்படி அறம் என்பது பிறருக்குத் தீமை தராதவகையில் ஒருவர் ஒழுகும் ஒழுக்கம் எனலாம். பிறன்பழித்தல் இல்லாத இல்வாழ்க்கை அறம். மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம். அன்போடு இருத்தலே அறம். பிறன் மனை நோக்கா பேராண்மை அறம். புறம் கூறி வாழ்தலின் சாதல் அறம் என பல நிலைகளில் அறத்தை வலியுறுத்துகிறார்.

விருந்தோம்பல் → விருந்து என்பது புதுமை. வீட்டிற்கு வரும் புதியவர் விருந்தினர் எனப்பட்டனர். முறையோடு இல்வாழ்க்கை நடத்துபவன் ஐம்புலன்களையும் அடக்கி துறவு மேற்கொள்கிற துறவியைக் காட்டிலும் சிறந்தவன் என்கிறார். தம்மிடம் அமிழ்தமே இருந்த போதிலும் விருந்தினரை விட்டு உண்ணுதல் முறையன்று என்பதனை

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" (குறள் 82)

என்று குறிப்பிடுகிறார். மேலும் வானவர்க்கு விருந்து என விருந்தோம்புபவனை உயர்வுபடுத்துகிறார். விருந்தோம்புதல் வேள்வியின் பயனை அளிக்கும் (86) விருந்தோம்பலை இகழ்வது உடைமையுள் இன்மை (89) என்கிறார். தமிழ்ச் சமூகத்துக்குச் சிறப்பான வகையில் உடைமையாக இருக்கக்கூடிய ஒரு பண்பாட்டுக் கூறு விருந்தினரைப் பேணுதல் ஆகும்.

ஈகை → வள்ளுவர் காலச் சூழலில், பெரும் செல்வம் உடையவனும் உணவு கூட இல்லாமல் துறவியானவனும் என இரு மக்கள் பிரிவுகள் தென்படுகின்றனர்.

"இரத்தலின் இன்னாது மன்ற நிரம்பிய
தாமே தமியர் உணல்" (குறள் 229)

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

என்று தம்மிடம் உள்ள செல்வத்தைத் தாமே உய்த்தலின் இழிவை மேற்கண்ட குறளில் விளக்குகிறார்.

தனிமனித நெறிமுறைகள்

ஒவ்வொரு தனிமனிதனும் உயர்ந்த மேம்பாடுடைய பழக்கவழக்கங்களைப் பின்பற்றினால் சமூக அநீதி தவிர்க்கப்படும். எனவே வள்ளுவர் தனிமனிதன் தன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய விழுமியங்களாக பல பண்புகளைக் கூறுகிறார்.

ஒழுக்கம்

மனிதனின் நற்செயல்களின் கூட்டுத் தொகுதியை ஒழுக்கம் எனலாம். எனவே ஒழுக்கத்தை உயிரைவிட சிறந்தது, ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வில்லை, ஒழுக்கமுடையவன் மேன்மை எய்துவான் என்கிறார் வள்ளுவன்

“ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழந்த பறப்பாய் விடும்”. (குறள் - 133)

ஒழுக்கமுடையவராகவே வாழ்தல் நற்குடிப் பண்பாகும் என்கிறது வள்ளுவம்.

புலால் மறுத்தல்

வாழ்வியல் நெறிமுறைகளில் ஒரு பகுதி உணவு முறை, தொடக்க காலம் முதல் தற்காலம் வரை தமிழ்ச் சமூகத்தில் புலால் உணவு நடைமுறையில் உள்ளது. இத்தகைய உணவு முறையை வள்ளுவர் மறுக்கிறார். ஓர் உயிரைக் கொன்று அதன் ஊனினை உண்ணுதல் பாவம் என்ற கருத்தை வள்ளுவர் முன்வைக்கிறார்.

“தன்னூன் பெருக்கற்குத் தான்பரிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.” (குறள்-251)

அருளுக்கு தடை புலால் என்கிறது வள்ளுவம்.

கள்ளுண்ணாமை

கள் ஒரு உணவுப் பொருள் என்ற போதும் குறிப்பிட்ட நிலைக்கு மேல் அது போதைப் பொருள் என்ற நிலைக்குச் சென்று விடுகிறது. இந்நிலையில் இது மனிதனின் மனதிற்கு தீங்கை விளைவிக்கிறது இதன் காரணமாக வள்ளுவர் கள்ளையும் புலால் போன்று விலக்கி விடுமாறு கூறுகிறார். கள்ளுண்ணுதலை சான்றோர் ஏற்க மாட்டார்கள். கள்ளுண்ணுதல் நாணைக் கெடுக்கும் கள்ளுண்ணுதல் நஞ்சுண்ணுதலுக்குச் சமம்.

“களித்தானைக் காரணம் கூட்டுதல் கீழ்நீர்
ஒளித்தானைத் தீத்துரீஇயற்று” (குறள்-929)

என்று கள் என்பது கைவிட வேண்டிய ஒழுக்கம் என்பதைக் கற்பிக்க முயலுகிறார் வள்ளுவர்.

வாய்மை

உலக மக்கள் எல்லாரும் பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நெறி வாய்மை. எந்தச் சமூகத்திலும் பொய் கூறுதல் சரி என்று கருதப்படவில்லை. வள்ளுவர் வாய்மை குறித்து கூறும் செய்திகள் மனித வாழ்விற்கு இன்றிமையாதவை.

“யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.” (குறள்-300)

யாருக்கும் தீமை விளைவிக்காத சொல்லையே வள்ளுவர் வாய்மை என்கிறார்.

பிறர்மனை நோக்காமை

வள்ளுவர் இல்லறமாண்பின் மேன்மையையும் பொது பெண்டிர் விழையாமையையும் பிறர்மனை நோக்காமையையும் வலியுறுத்துகிறார். பிறன்மைமனை நோக்காமை பேராண்மை, பிறன்மனை நோக்குவார் பேதை, பிறன்மனை நோக்காதவர் எல்லா நன்மைகளையும் எய்தும் சிறப்புடையவர் என்ற வரிகள் தமிழர் பண்பாட்டில் பிறன்மனை நோக்காமை என்னும் நெறிமுறைக்கு அளிக்கப்பட்டு வந்துள்ள சிறப்பினை ஏந்தி நிற்கின்றன.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சமூக நெறிமுறைகள்

சமுதாயம் மேன்மை உடையதாகவும் ஒற்றுமை உடையதாகவும் நல்லுறவு உடையதாகவும் அமைய ஒட்டுமொத்த சமூகத்திற்குமான நெறிமுறைகளாக வள்ளுவர் சிலவற்றை வலியுறுத்துகிறார்.

கல்வி

வள்ளுவர் கூறும் சமூக வாழ்வியலுக்கு இன்றிமையாதது கல்வியேயாகும். கல்வியை பணிவாகவும் தெளிவாகவும் மீண்டும் மீண்டும் முயன்றும் நுண்கருத்துக்களை ஆராய்ந்தும் கற்க வேண்டும். சமூகம் இயங்கிக் கொண்டிருப்பதால் அது மாறிக் கொண்டிருக்கிறது. இதனைப் புரியச் செய்வது கல்வியாகும். உலகில் அனைத்தும் மாறிக் கொண்டே இருக்கின்றன. அதனால் தான் இயக்கத்துவத்தின் தந்தையான ஹெராக்கிளிட்டிஸ் மாற்றமே நிலையானது (வுாநசந ளை ழெவாபைெ "நசஅயநெெவ நஒஉநிவ உாயபெந) என்கிறார். இதனையே வள்ளுவரும் பின்வரும் குறளில் விளக்குகிறார்.

"எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு" (குறள்-426)

என்ற குறட்பாவில் மாறுகின்ற உலகிற்கு ஏற்ப மாறிக் கொள்வதே அறிவு என்ற கார்ல் மார்க்ஸ்சின் கோட்பாட்டின் சாரத்தைக் காணமுடிகிறது.

நல்லவை நன்மை பயக்கும்

நன்மை செய்தால் நன்மை விளையும் என்ற நெறிமுறை தமிழ்ச் சமூகத்திற்கு மட்டுமல்லாமல் பொதுவான உலகப் பண்பாட்டிலும் காணப்படும் ஒன்றாகும்.

"அறனறிந்து வெ‡காமை அறிவுடையார்ச் சேரும்
திறன் அறிந்தாங்கே திரு". (குறள் 179)

இதன் மூலம் வெ‡காமை என்ற நன்மையின் மூலம் திரு என்ற நன்மை விளைவதாகக் கூறுகிறார்.

பெண்ணை இழிவ படுத்தாமை

பொதுவாக எல்லாச் சமூகத்திலும் பெண்ணைப் போற்றுதல் மரபாக இருந்து வந்துள்ளது. குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தில் பெண்களை இயற்கை அன்னையாகப் பார்க்கும் தன்மையைக் காணமுடிகிறது. பெண்ணை இல்லாளாகவும், ஆணின் காரியங்களுக்குத் துணையானவளாகவும் ஊடல் கொண்டு காதல் புரியும் காதலியாகவும் மேன்மையான நிலையிலேயே வள்ளுவர் காட்டியுள்ளார்.

"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை உண்டதாகப் பெறின்". -(குறள் 54)

கற்புடைய பெண்மையை விடப் பெருமை உடையவை எதுவுமில்லை என்கிறார் வள்ளுவர். மேலும் மங்கலம் என்ப மனைமாட்சி (60) வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51) புத்தேள் வாழும் உலகு (58) இல்லவள் மாணாக் கடை (53) என்பன போன்ற வரிகள் பெண்களை பெருமைப் படுத்துவதாக உள்ளது.

முடிவுரை

- உலகப் பொதுமறை என்று அழைக்கப்பட்டாலும் திருக்குறள் ஒரு குறிப்பிட்ட நிலபரப்பில் வாழ்ந்த மக்கள் மத்தியில் உருவாகிய நீதிஇலக்கியம்.
- உலக மக்கள் அமைதியாக ஒழுக்கமாக வாழ்வதற்கு அடிப்படை பண்பாடு ஆகும்.
- வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்த செயல்கள் நெறிமுறைகள் எனப்பட்டன.
- விழுமியம் என்பது ஒரு இனத்தின் அடையாளம் பிற இனங்களாலும் மதிக்கப்படுபவை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

- வள்ளுவர் குறிப்பிடும் நெறிமுறைகளை இல்லற நெறிமுறைகள், தனி மனித நெறிமுறைகள், சமூக நெறிமுறைகள் என்று வகைப்படுத்தலாம்.
- அறம், விருந்தோம்பல், ஈகை, உள்ளிட்டன இல்லற நெறிமுறைகளாகவும், ஒழுக்கம், புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை வாய்மை, பிறர்மனை நோக்காமை, போன்றன தனி மனித நெறிமுறைகளையும், கல்வி, நல்லவை நன்மை பயக்கும், பெண்ணை இழிவுபடுத்தல் கூடாது போன்றன சமூக நெறிமுறைகளாகவும் வள்ளுவர் வகுத்த திருக்குறளில் முக்கியத்துவப்படுத்தப் படுகிறது.

துணைநூற்பட்டியல்

1. புலியூர்க்கேசிகன், திருக்குறள் பொழிப்புரை, 1986.
2. கு.ப. அறவாணன், திருவள்ளுவம், 2006.
3. சு. தண்டபாணி தேசிகர், திருக்குறள் அழகும் அமைப்பும், 1969.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019
Available at: www.ijtlls.com

ஆசாரக்கோவையில் உடல்நலம் காக்கும் நெறிமுறைகள்

Norms on Keeping Physical Hygiene in “Aasarakkovai”

முனைவர் ஜெ. ஜெயசாந்தி, இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, மகளிர் கிறித்தவக் கல்லூரி, சென்னை 600006.

Abstract

The article provides brief ideas on the norms of keeping physical hygiene in “Aasarakkovai”. “Sound body has a sound mind”, it is an English proverb. Thirumoolar, one of the eighteen Siddhas says “Maintained the Body; Maintained the life” in his “Thirumanthiram”. So it seems that keeping the physical health is a vital one for an individual. It can aid him with everfressness and confidence in all of his pursuits. Tamil Literature has lots of works which deals with the physical hygiene of an individual. In the work “Aasarakkovai”, it is widely seen and therefore the study focuses on the facts related to the norms of keeping physical hygiene in “Aasarakkovai”

Keywords: Norms on Keeping Physical Hygiene, *Aasarakkovai*

தமிழ்மொழியில் அமைந்த அற இலக்கியங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துவனவாகும். அத்தகைய அறநூல்களுள் ஒன்று ஆசாரக்கோவை. இந்நூலை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார். ஆசாரம் என்றால் ஒழுக்கம் என்று பொருள்படும். இந்நூலாசிரியர் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல ஒழுக்க நடைமுறைகளை எடுத்தியம்பியுள்ளார். வாழ்க்கையில் செய்ய வேண்டிய செயல்கள், தவிர்க்க வேண்டிய செயல்கள் எனப் பகுத்துக் கூறியுள்ளார். மக்கள் முக்கியமாகக் கைக்கொள்ள வேண்டிய உடல்நலம் காக்கும் நெறிமுறைகள் குறித்த செய்திகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

அடிப்படை நெறிகள்

மக்களுடைய நல்லொழுக்கத்திற்கு அடிப்படையான பண்புகள் இவைதாம் என்று ஆசாரக்கோவை முதல் பாட்டிலேயே கூறுகின்றது. ஆசாரத்திற்கு விதை எட்டு குணங்கள். அவற்றைப் பின்பற்றுபவரே ஒழுக்கம் தவறாமல் வாழ முடியும். அவைகள் தாம் நல்லொழுக்கத்தை வளர்க்கும் என்று இந்நூல் கூறுகிறது. பிறர் தனக்குச் செய்த நன்மையை மறவாதிருத்தல், பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வது, யாரிடமும் கடுஞ்சொற்களைக் கூறாமல் இருத்தல், எல்லாரிடமும் இனிமையாகப் பேசுதல், எந்த உயிர்களுக்கும் அவை வருந்தும்படி தீமை செய்யாதிருத்தல், சிறந்த கல்வியை மறக்காமல் கற்றல், உலக நடையை அறிந்து அதைத் தவறாமல் பின்பற்றுதல், எதைப் பற்றியும் தானே சிந்தித்து உண்மை காணும் அறிவுடைமை, கல்வியறிவும் நல்லொழுக்கமும் உள்ள கூட்டத்தோடு சேர்ந்து வாழ்தல் ஆகிய எட்டு குணங்களும் நல்லொழுக்கத்தை வளரச் செய்யும் விதைகளாகிய அடிப்படை நெறிகளாகும். இதனை,

“நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சொல்லிய ஆசார வித்து" 1

என்ற பாடல் வழி அறியலாம்.

இறைவனை வணங்குதல்

மனித மனத்திற்கு அமைதி கிடைக்கும் ஓர் இடம் இறைவன் சந்நிதி தான். எனவே ஒவ்வொரு நாளும் இறைவனை வணங்க வேண்டும். காலையில் எழுந்தவுடன் நேராகச் சென்று இறைவனை வழிபடக்கூடாது. முதலில் ஒரு கொம்பாலே பல்லைத் துலக்கி, முகத்தையும், கண்களையும் கழுவிய பின்னர் தான் வணங்க வேண்டும். அதன் பிறகு பிற செயல்களைச் செய்தல் வேண்டும். அதே போல மாலை நேரத்திலும் இறைவனை வழிபட வேண்டும். அப்போது அமர்ந்து வணங்க வேண்டும் என்பது,

"நாளந்தி கோல்தின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறியும் ஆற்றால் தொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி." 9

இவ்வடிகளால் புலனாகிறது.

நீராடுதல்

புறந்தூய்மை நீரான் அமையும் என்பது திருக்குறள். உடல் தூய்மையாக இருக்க தினமும் குளித்தல் வேண்டும். எனவே, காலை மாலை என இருவேளைகளில் நீராடுகின்ற வழக்கமான தருணங்களுடன் மேலும் நீராட வேண்டிய தருணங்களையும் ஆசாரக்கோவை எடுத்துக் கூறுகிறது. தெய்வ வழிபாட்டின் போது, தீக்கனா கண்டவிடத்தும், தூய்மை குன்றிய காலத்திலும், உண்டது கான்ற போதும், முடி களைந்த போதும், பொழுதேற உறங்கியவிடத்தும், புணர்ச்சியான காலத்தும், மலங்கழித்த பின்னரும் ஐயங்கொள்ளாமல் நீராட வேண்டும். மழை மற்றும் குளிர் காலங்களிலும் கூட குளிர்ந்த நீரில் நீராடலாம். இதனை,

"தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது
வைகு துயிலொடு இணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்
ஐயுறாது ஆடுக நீர்." 10

என்ற பாடலடிகளால் அறிய முடிகிறது. இதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யலாம்.

பொதுவிடத்தில் உள்ள நீர்நிலைகளில் குளிக்கும் போது உடுத்துக் கொண்ட ஆடையை நீருக்குள் பிழியக் கூடாது. ஏனெனில் தீங்கு விளைவிக்கும் கிருமிகள் அந்த ஆடையில் இருக்கலாம். அதனால் சுகாதாரக் கேடு ஏற்படக்கூடும்.

"உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத்து உண்ணார்
உடுத்தாடை நீருள் பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத்து என்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை." 11

எண்ணெய் தேய்த்தல்

தலையில் அதிகப்படியான எண்ணெய் இருந்தால் அது வீணாகப் போகிறது என்று கைகளிலும் கால்களிலும் தடவுவது, தலையில் உள்ள அழுக்கு எண்ணெயுடன் கலந்து உடம்பிலே படியும். பிறர் அழுக்கு ஆடையை அவசரத்தில் தொடுதல், உடுத்துதல், பிறர் நோய் நம்மையும் பற்றுவதற்கு வாய்ப்பு அதிகம். மறந்து பிறர் காலணியைப் பயன்படுத்துவதால் அச்செருப்பில் பதிந்திருக்கும் அழுக்கு நமது காலிலும் படியும். இவை உடலுக்கு மிக மிகத் தீங்கிழைக்கக் கூடியவை. ஏனெனில் நோய்க்கிருமி தொற்றுவது இப்படிப்பட்ட பொருள்களால் தான். இதனை,

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

“தலையுரைத்த எண்ணெயால் எவ்வுறுப்பும் தீண்டார்
பிறர்உடுத்த மாசுணியும் தீண்டார் செருப்புக்
குறையெனினும் கொள்ளார் இரந்து.” 12

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

நீருள் நிழலைப் பார்ப்பது, செல்வத்துக்கு அழிவை ஏற்படுத்தும். நிலத்தைக் காலால் கீறுதல் தோற்றுப்போனவர் செய்யும் செயலாகும். மரம் இரவில் கெட்ட காற்றை வெளியிடும். எண்ணெய் தேய்த்துக் கொள்ளாத நாட்களில் எண்ணெய் தேய்த்துக் கொள்ள நேர்ந்தால் கஞ்சி, நெய், நீர் ஆகியவற்றுள் ஒன்றைக் கலந்துவிட்டால் குற்றம் ஏற்படாது என்பதனை,

“நீருள் நிழல்புரிந்து நோக்கார் நிலம்இராக்
கீறார் இராமரமும் சேரார் இடர்எனினும்
நீர்தொடாது எண்ணெய் உரையார் உரைத்தபின்
நீர்தொடார் நோக்கார் புலை.” 13

என்ற பாடலாம் அறியலாம்.

நோய்வாய்ப்பட்டு துன்பம் அடைந்தவரானாலும் நீரைத் தொடாது எண்ணெய் பூசிக் கொள்ளார் என்று ஆசாரக்கோவை கூறுகிறது. ஏனெனில் நோயினாலும், மருந்துப் பொருள் அதிகம் உண்டதாலும் உடல் அதிக வெப்பத்தில் இருக்கும் போது குளிர்ச்சியான எண்ணெய் உடலைப் பாதித்து மரணத்தை ஏற்படுத்தும். எனவே ஒழுக்கநெறியில் நின்றவர்கள் தினந்தோறும் குளிக்கும் போது, தண்ணீரிலே நீந்த மாட்டார்கள். நீரை வாயில் கொப்பளித்து உமிழ மாட்டார்கள். நீரைக் கலக்க மாட்டார்கள். உடம்புக்குக் காய்ச்சலாய் இருந்தாலும் தலைமுழுகாமல் உடம்புக்கு மட்டும் குளிக்க மாட்டார்கள்.

“நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்
காய்ந்தது எனினும் தலைஒழிந்து ஆடாரே
ஆய்ந்த அறிவி னவர்.” 14

இரவில் மரம் கெட்ட காற்றை வெளியிடுவதனால் மரத்தடிகளில் நிற்கக் கூடாது. உறங்கக் கூடாது. ஆறு, குளம், ஏரி போன்றவற்றில் நீராடுபவர்கள் அவசியம் தலையையும் முழுகிக் குளிக்க வேண்டும்.

இவ்வாறு உடல் தூய்மையைக் காக்கும் முறையை ஆசாரக் கோவை மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

நீர் குடிக்கும் முறை

இரு கைகளாலும் தண்ணீரை முகர்ந்து குடிக்கக் கூடாது. பெரியோரிடம் ஒரு பொருளை ஒரு கையால் வாங்கவும் கூடாது. அதே போல் அவர்கட்கு ஒரு கையால் கொடுக்கவும் கூடாது. உடலில் இரு கைகளைக் கொண்டு சொரியக் கூடாது.

“இருகையால் தண்ணீர் பருகார் ஒருகையால்
கொள்ளார் கொடாஅர் குரவர்க்கு இருகை
சொறியார் உடம்பு மடுத்து.” 28

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

உணவு உண்ணும் நிலை

உணவு உண்ணும் போது கிழக்கு நோக்கி அமர்ந்து, ஆடாமல் அசையாமல் இருந்து, வேறொன்றையும் மனதில் எண்ணாமல், பேசாமல், உண்ணுகின்ற உணவைத் தந்த இறைவனுக்கு நன்றி சொல்லிக் கையால் எடுத்து, சிந்தாமல் நன்றாக உண்ண வேண்டும். மேலும் நின்று கொண்டோ, படுத்துக் கொண்டோ, வெளியிடையிலிருந்து உண்ணலோ, மிகுதியாக உண்ணலோ, கட்டில் மேல் அமர்ந்து உண்ணுதலோ ஆகாது.

“கிடந்துண்ணார் நின்றுண்ணார் வெள்ளிடையும் உண்ணார்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்
இறந்தொன்றும் தின்னற்க நின்று'' 23

என்று பெருவாயின் முள்ளியார் நெறிப்படுத்தியுள்ளார்.

அளவுக்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சு என்பது முதுமொழி. அமிழ்தத்தைக் கூட அளவாகத் தான் உண்ணல் வேண்டும். அளவினை மீறி உண்ணுதல் உடலுக்குத் தீங்கை விளைவிக்கும். விரும்பிய பொருளை மிக அதிகமாக உண்ணலும், அதன் நெறியைக் கடந்து உண்ணுதலும் கூடாது. இவ்வாறு நெறிப்படி நடந்து கொண்டால், நோயிலிருந்து விடுதலையும் பெறலாம். நோய்க்குத் தடையும் ஏற்படுத்தலாம்.

"..........மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி.'' 30

உணவு உண்ணும் முறைகள்

குளித்துக் காலைக் கழுவி, வாயைப் பூசி, உண்ணுமிடத்தை மண்டலஞ் செய்து உண்பவரே உண்டவராவார். இல்லையெனில் அவரது உணவை அசுரர் எடுத்துக் கொள்வர்.

"நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்து
உண்டாரே உண்டார் எனப்படுவர் அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வர் அதுவெறுத்துக்
கொண்டார் அரக்கர் குறித்து'' 18

வாயில் கொண்ட நீர் உள்ளே புகாமல் நன்றாய் உமிழ்ந்து எச்சில் ஊறும்படி வாயையும் அடியையும் நன்றாக துடைத்து அழகாக மூன்று முறை குடித்து, துடைத்து முகத்தில் உள்ள கண் முதலான உறுப்புகளை அவற்றிற்குத் தக்கவாறு விரல்களைச் செலுத்தி வாயைத் துடைத்தலே சிறந்தது என்பதை,

"இழியாமை நன்குமிழ்ந்து எச்சில் அறவாய்
அடியோடு நன்கு துடைத்து வடிவுடைத்தா
முக்கால் குடித்துத் துடைத்து முகத்துறுப்பு
ஒத்த வகையால் விரலுறுத்தி வாய்பூசல்
மிக்கவர் கண்ட நெறி.'' 27

இப்பாடலடிகள் விளக்கியுள்ளன.

கறி வகைகளை உண்ணும் விதம்

உணவுக்குரிய சுவைகள் இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு ஆகிய ஆறு சுவைகள். இவற்றை நம் முன்னோர் பகுத்து உண்டுள்ளனர். கசக்கும் சுவையுடைய உணவுப்பொருள்களைக் கடைசியிலும், இனிப்பு சுவையுடையவற்றை முதலிலும், மீதமுள்ள சுவையுணவுகளை இடையிலும் முறைப்படி உண்ண வேண்டும். இதனை,

"கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்'' 25

என்ற பாடலாம் அறியலாம்.

பகிர்ந்துண்ணல்

பிறருக்கு உணவு கொடுத்த பின்னரே தாம் உண்ண வேண்டும் என்ற கொள்கை உடையவர்களே நல்லொழுக்கம் கொண்ட பெரியவர்கள். இவர்கள் தாம் உண்பதற்கு முன் விருந்தினர், வயதில் முதியவர், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள் இவர்களுக்கு உணவு கொடுத்து, பின்னர் தான் உண்பார்கள்.

"விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.'' 21

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தம்மிற் பெரியார் தம் பந்தியிலிருந்து உண்ணுமிடத்து அப்பெரியவர் உண்பதற்கு முன்பே தாம் உண்ணக் கூடாது. உண்டபின் அவர்க்கு முன்பாக எழுந்திருக்கக் கூடாது. அவர்களை நெருங்கியிருக்கக் கூடாது. உண்ணுமிடத்து மிகுதியாக யாதாயினும் பெற்றாலும் வலமிருந்து உண்ணக் கூடாது என்கிறது ஆசாரக்கோவை.

"முன்துவ்வார் முன்னெழார் மிக்குறார் ஊணின்கண்
என்பெறினும் ஆற்றவலம் இரார் தம்மிற்
பெரியார்தம் பாலிருந்தக் கால்." 24

தமக்குப் புதிய இளைய உறவினர் உண்ணும் பொழுது, சான்றோர்கள் உயர்ந்த இடத்தில் இருக்க மாட்டார். முறை கடந்து அந்த இளைய உறவினர் துன்பத்தைச் செய்த போதும் அவர்கள் உள்ளம் வருந்தும் செயல் செய்யமாட்டார். தம்மை விட இளையவர் உண்ணும் பொழுது அவரிடம் அன்பு வார்த்தைகளைக் கூறி, உண்ணச் செய்யும் வழக்கமும் உள்ளது.

"உயர்ந்ததன் மேலிரார் உள்ளழிவு செய்யார்
இறந்தின்னா செய்தக் கடைத்தும் குரவர்
இளங்கிளைஞர் உண்ணு மிடத்து." 40

தூங்கும் முறை

நல்ல விதமாக நிம்மதியாக தூங்க வேண்டும் என்று எண்ணுபவர்கள், கடவுளைத் தொழுது, வடதிசையிலும், கோண திசையிலும் தலை வையாது படுத்துத் தூங்குதல் வேண்டும். மேலே போர்வை ஒன்றைப் போர்த்துக் கொண்டு படுத்தல் முறையாகும். இதனை,

"கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வம் தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார்" 30

என்ற பாடலால் அறியலாம்.

முடிவுரை

முதலில் காலையில் எழுந்ததும் இறைவனை வணங்குதல், உடல் தூய்மையாக இருக்க தினமும் குளித்தல், நீராடுகின்ற பொழுது உடுத்த உடையை நீரில் பிழியாதிருத்தல், மற்றும் நீர் குடிக்கும் முறைகள், உணவு உட்கொள்ளும் முறைகள், உண்ணும் முறைகள், உணவைப் பகிர்ந்து உண்ண வேண்டிய அவசியம் ஆகியவற்றை *ஆசாரக்கோவை* விளக்கியுள்ளது. உடல் ஆரோக்கியமாக இருக்க ஓய்வு மிக முக்கியம். எனவே தூங்குகின்ற முறைகளையும் *ஆசாரக்கோவை* எடுத்துரைத்துள்ளது. *ஆசாரக்கோவை* கூறும் ஒழுக்கங்களையும் அறங்களையும் கடைப்பிடித்தால் உடல் நலம் காத்து மகிழ்ச்சியுடன் வாழலாம்.

துணைநூற் பட்டியல்

1. எம்.நாராயணவேலுப்பிள்ளை. *பதினெண் கீழ்க்கணக்க நூல்கள்*, நர்மதா பதிப்பகம், தி.நகர், சென்னை-1.
2. தி.இரா. அண்ணாமலை. *திருவள்ளுவர் மருந்து* 1957.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இலக்கியங்களில் - வாழ்வியல் அறம்

Moral Codes of Life in Literature

த.ஜெயசித்ரா, உயர்நிலை ஆசிரியை,
அரசு மேல்நிலைப் பள்ளி, திருவளர்சாலா.

Abstract

The article decodes the moral codes of life seen in Tamil Literature. The value of codes in life is very vital to one and all to cope up with the people of the society. Without morals, no one can be the attainer of perfection. Civil Life, love, hospitality, friendship, self-esteem, occupation and war ethics are seen widely in the classic literary works of Tamil Literature. These traits are those make people capable of becoming an individual. "Kurunthokai", "Thirukkural", "Nattrinai", "Purananooru" are famous the works that speak of such morals. Hence, the article finds out codes of life through the literary facts.

Keywords: Moral Codes of Life, Tamil Literature

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு"

என்ற நாமக்கல் கவிஞரின் பாடலுக்கு ஏற்ப வாழ்ந்தவர்கள் தமிழர்கள். தர்மத்தை உலகுக்கு எடுத்துரைத்து அழியாதப் புகழ் பெற்றவர்கள். ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக்கருதி வாழ்ந்தவர்கள். பழந்தமிழர் வாழ்வு அகம், புறம் என இருதிறப்பட்டதாக இருந்தது. திருமணத்திற்கு முன் களவியலாக காதலித்து மகிழ்ந்த தலைவனும், தலைவியும் திருமணத்திற்குப் பின்னர் இருவரும் கருத்தொருமித்து இன்பத்துடன் வாழ்ந்துள்ளனர். இலக்கியங்களின் வழி நம்மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையையும், அவர்களிடம் சிறந்திருந்த வாழ்வியல் அறத்தையும் கீழ்வரும் செய்தியின் மூலம் காணலாம்.

இல்லறம்

மக்கள் இல்வாழ்வைப் பெரிதும் விரும்பி வாழ்ந்துள்ளனர். அன்பும், அறனும் இல்வாழ்க்கையின் பண்பும், பயனுமாக இருந்திருக்கிறது. தலைவனும், தலைவியும் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி மகிழ்வதை,

"யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்தொகை-40)

என்னும் குறுந்தொகைப் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

"நல்லொழுக்கம் தான் அறத்திற்குச் சான்றாகும்" (குறள் -138) என்று கருதி ஒழுக்கத்துடன் வாழ்ந்தனர். எக்காலத்தும் மற்றவர்களுக்கு ஆதரவோடிருப்பதற்கு இல்வாழ்க்கையே சிறந்தது எனக் கருதினர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

இல்லறம் நிகழ்த்துதற்கு அடிப்படை திருமணம். மணநிகழ்வின்போது பெண்ணுக்கு மணமகன் பரிசு அளிக்கும் வழக்கம் இருந்துள்ளது. மணமுழவு ஒலிக்க, மணமகளைத் தலைவனிடம் தந்து, மூத்தோர் வாழ்த்துரை வழங்க மணவிழா நடைபெற்றிருக்கிறது.

இம்மை மாறி மறுமை ஆயினும் நீயாகியர் என் கணவர் என மனைவியும், நரைமுடி வரினும் தலைநாள் போன்ற அன்போடு மனைவியைப் போற்றுவதைக் கணவரும் தம் கடமையாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர்.

அறிவறிந்த மக்களைப் பெறுவதே இல்லறத்தின் நற்பேறாய் அமைந்து இருந்துள்ளது. இதனை,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு" (திருக்குறள் - 60)

என்ற குறட்பாவின் வழி அறியமுடிகிறது.

அன்பு

கணவன் மனைவியிடத்துக்கொண்டுள்ள அன்புப் பிணைப்பை,

"உடம்பொ டுயிரிடையென்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு" (திருக்குறள் - 1122)

என்று குறிப்பிடுகிறான்.

"நீரின்றி அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நம்நயந்து அருளி" (நற்றிணை-1)

எனும் பாடலடிகளின் வழி மனைவி, கணவனிடம் கொண்டிருக்கும் அன்புநிலை வெளிப்படுகிறது.

அலுத்து வந்த ஆருயிர்க்கணவனுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்வது மனைவியின் முதற்கடமை. தான் சமைத்ததை இனிது! இனிது! எனக் கணவன் சுவைத்து உண்பதைக்கண்டு அம்மகள் மட்டிலா மகிழ்ச்சியடைகிறாள். இக்காட்சியை,

"தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" (குறுந்தொகை-167)

என்னும் குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

"செல்வச் செழிப்புடைய இல்லத்தில் பிறந்த பெண்ணும் கூடத் திருமணத்திற்குப் பிறகு எக்காரணத்தாலோ கணவனது பொருள்வளம் சுருங்கிவிடத் தந்தை கொடுத்தனுப்பிய கொழுஞ்சோற்றையும் கொள்ள விரும்பாது, தற்கொண்டான் வளத்திற்கு ஏற்ப நாளுக்கு ஒரு வேளை உணவே உண்டு தலைவி இல்லறம் நடத்தும் பாங்கை" (நற்றிணை-110) நற்றிணை நயம்பட உரைக்கிறது.

ஆடவர் சிலர் பரத்தையர்பால் சென்று வந்த போதும் மனைவியர் அவர்களை நல்வழிப்படுத்தி உள்ளனர். தமது உண்மையன்பினால் வன்மைமிக்க ஆடவரையும் மாற்றி, திருத்தி அமைத்திருக்கின்றனர்.

விருந்தோம்பல்

விருந்தோம்பல் இல்லறத்தின் இன்றியமையாத கடமைகளுள் முதன்மையானது விருந்தோம்பல். வாணிபம் பற்றியோ, வேறு வினை பற்றியோ, வீடு தேடி வரும் விருந்தினர்க்கு வயிறார உணவளித்து, உடலாற உறைவிடங் கொடுத்தனர். உள்ளம் குளிர புன்முறுவல் பூத்த இன்முகங்காட்டி இனியவை கூறி விருந்தோம்பினர்.

"செலவிருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்" (திருக்குறள்-86) என்று தமிழனின் விருந்தோம்பல் பண்பை திருக்குறள் உரைக்கிறது.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

தம் இல்லம் நாடி வரும் விருந்தினரை வீட்டின் வாசல் வரை வெளியே வந்து வழியனுப்பும் வழக்கம் இருந்துள்ளது. இரவில் வாயிற்கதவை தாழிடுவதற்கு முன்பு யாராவது திண்ணையில் அமர்ந்துள்ளனரா என பார்த்து அவர்களை வரவேற்கும் உயரிய பண்பு உள்ளதை,

“புள்ளும் மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலைப்
பலர்புகு வாவில் அடையக் கடவுநர்
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழிநம் காதலோரே” (குறுந்தொகை -118)

எனும் குறுந்தொகைப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

விருந்தினர், கணவன்-மனைவிக்குமான ஊடலைத் தீர்க்கும் வாயிலர்களாக விளங்கியிருக்கின்றனர்.

மானம்

மனித வாழ்வின் முக்கிய பங்காய் தலைசிறந்து நிற்பது மானம். மானம் என்பது ஒருவன் தன்நிலையிலிருந்து தாழாதிருப்பது. தாழ்வு வரும் போது உயிர்வாழாதிருப்பது. சேர மன்னன் கணைக்கால் இரும்பொறைக்கும், சோழமன்னன் செங்கணானுக்கும் இடையே போர் மூண்டது. போரில் சேர மன்னன் சிறைப்பட்டான். விழுப்புண் பட்ட அவன் உடலோ வலியால் துடித்தது. சேர மன்னன் நீர் வேட்கையால் குடிக்க நீர் கேட்க, சிறைக் காவலாளி காலம் தாழ்த்தி நீர் கொண்டு வந்து தரையில் வைத்துச் சென்றான். ஏளனத்துடன் கொடுத்த நீரைப் பருகி உயிர் வாழத்தான் வேண்டுமா என மனம் கலங்கினான். நீரைப் பருகாமல் மானம் தோன்ற பேசிய உரை,

“குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளில் தப்பார்!
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாம் இரந் துண்ணும் அளவை
ஈன்மரோ? இவ்வுலகத்தானே” (புறநானூறு – 7)

எனும் புறநானூற்றின் பாடல்வழி அறியலாம்.

“சிறுசொல் சொல்லிய சினம்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்கு அகப்படேன் ஆயின்” (புறம் 72)

என்ற பாடல் அடிகளில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினம் அவன் மானத்திற்கு இழிவு நேர்ந்தபோது உரைக்கப்பட்டது.

பழந்தமிழரின் வீரமும், மானமும் பிரிக்க இயலாத பண்புகளாக விளங்கியுள்ளன. திருவள்ளுவரும்,

“மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்” (திருக்குறள்- 969)

என்று கூறியுள்ளார்.

பழந்தமிழர் இரத்தலை இழிவாகக் கருதினர். ஆவுக்கு நீர் வேண்டுமென்று இரத்தலையும் இழிவாகக் கருதினர்.

நட்பு

தமிழர் எல்லோரும் ஒருவருக்கொருவர் கலந்த உறவோடு வாழ்ந்தனர். தம்மோடு

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பழகியவர்கள் தமக்கு நஞ்சு ஊட்டினும், தம்மவர்கள் என்னும் கண்ணோட்டத்தால் மறுக்காமல் உண்டு அவர்களோடு வாழ்ந்து இருந்தார்கள். இதனை

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" (நற்றிணை – 355)

எனும் பாடல்வழி அறியமுடிகிறது.

ஔவையாரின் தமிழ்மீது அளவுகடந்த பற்றுக் கொண்டவன் அதியமான். ஒரு சமயம் கிடைத்தற்கு அரிய நெல்லிக்கனி ஒன்றை ஔவைக்கு பெருமையையும் உணர்ந்த ஔவை, சாவதற்குக் காரணமான விடத்தை உண்டும் அச்சிவபெருமான் நிலைபெற்றிருந்தான். அதுபேல அதியமான் சாவாதிருத்தல் வேண்டும்" (புறம் - 91). தமிழ் வளர்ச்சிக் கனியைத் தனக்குத் தந்த அதியமானை ஔவை போற்றுகிறார்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்" (திருக்குறள் - 785)

என்பதற்கு உதாரணமாக கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு திகழ்ந்திருக்கிறது. புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர். பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர். ஈந்து உவந்து இன்பம் கண்டனர்.

போர் அறம்

தமிழன் அறத்தை வழுவிப்போர் செய்துள்ளான். "ஆவும் ஆனிய ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும் பார்ப்பன மாக்களும்" (புறம் - பார்ப்பன மாக்களும் 9) எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் வழி, ஒற்றன் வழி முன்னறிவிப்பு செய்தே போர் நிகழ்ந்திருக்கிறது.

பொதுமக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களைப் போர்க்களமாக அமைத்துக்கொண்டு வீரர்கள் போரிட்டுள்ளனர். போர்க்களத்தில் முதற்கண் அடிபிறக்கிட்டோர், படையிழந்தோர் முதலானவருடன் போர் செய்யா மாண்பு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

போர் வீரன் ஒருவனுக்கு தாழ்வு வந்ததாயின், அதைத் தீர்க்க ஓடிச் சென்று உதவுகின்ற மாண்பும் நிகழ்ந்திருக்கிறது. இதனை

"பேராண்மை என்ப தறுகண்; ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்று அதன் எ.்கு" (திருக்குறள் - 778)

எனும் குறள்வழி அறிய முடிகிறது.

தொழில்

பழந்தமிழர் அவ்வவ்விடங்களுக்குத் தக்க தொழிலை மேற்க்கொண்டிருந்தனர்.
குறிஞ்சி நில மக்கள் - தேனெடுத்தல், தினை விதைத்தல்,
முல்லை நில மக்கள் - வரகு விளைத்தல், நிரைமேய்த்தல்,
மருத நில மக்கள் - உழவு செய்தல், நகரமைத்தல்,
நெய்தல் நில மக்கள் - உப்பு விளைத்தல், முத்துக்குளித்தல், வாணிகம் செய்தல். முதலான தொழில்களைச் செய்துள்ளனர்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" (திருக்குறள் - 1032) என்பதை மக்கள் உணர்ந்து, உழவுத் தொழிலை உயிர் எழில் தொழிலாய் போற்றினர். தமிழ் மக்கள் அறத்தின் வழியே வாணிகம் செய்தனர்.

"கொள்வதும் மிகைகொளாது, கொடுப்பதும்
குறைபடாது வாணிகம் செய்தனர்."

முடிவுரை

தமிழரின் வாழ்வு அன்பையும், அறத்தையும் சார்ந்து அமைந்திருக்கிறது. கணவனும், மனைவியும் தூய அன்பு உடையவர்களாகத் திகழ்ந்திருக்கின்றனர். மானத்தை உயிரெனக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

கருதி ஒழுக்கத்துடன் வாழ்ந்துள்ளனர். ஒருவருக்கொருவர் ஆதரவாக நட்புடன் திகழ்ந்து, தன்னை நாடி வரும் இரவலர்க்கு விருந்தோம்பி மகிழ்ந்திருக்கின்றனர். அறவழிப்பட்டே போரும், தொழிலும் நடைபெற்று இருக்கிறது. இவ்வாறு தமிழரின் வாழ்வு தனக்கு ஒப்பார் யாருமிலர் என்று கூறுமளவிற்கு தலைசிறந்து நிற்கிறது.

துணைநின்ற நூல்கள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, விசா பப்ளிகேஷன்ஸ், 55, வெங்கட்நாராயணாசாலை, தி.நகர். பதிப்பு : மார்ச் 1992
2. குறுந்தொகை - உ.ஃ.பெ. முனைவர் தமிழண்ணல் கோவிலூர் மடாலயம் கோவிலூர், பதிப்பு – ஏப்ரல் 2004.
3. நற்றிணை - உ.ஃ.பெ. கதிர் - மகாதேவன் கோவிலூர் மடாலயம் கோவிலூர், பதிப்பு – ஏப்ரல் 2004.
4. புறநானூறு உ.ஃ.பெ. இரா. இளங்குமரன், கோவிலூர் மடாலயம் கோவிலூர், பதிப்பு – ஏப்ரல் 2004.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

மணிமேகலை சுட்டும் வாழ்வியல்

Life Ethics Indicated by "Manimekalai"

முனைவர் சு.ஜெயசீலா, உதவிப் பேராசிரியர்
பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி.

Abstract

The article gives details on the life ethics as depicted in "Manimakalai", one of the five great epics of Tamil Nadu. It is also a national identity of the Tamil people whom of them mostly accepted the ways of Buddhism. Even it is now alien to the people, the good ideas in it are very useful for the development of the society in ethical means. The birth of Manimekalai, her psyche, her friend, belief, religious trust, and her arguments with other sects, nature and natural exploitation are widely spoken through this paper to understand the way of life in the epic. Therefore, the article concentrates on the facts registered in it.

Keywords: Life Ethics, Indicated in *Manimekalai*

சங்ககால கட்டத்தின் இறுதிப் பகுதியில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தோன்றியுள்ளன. தமிழ் மொழியை மூல நூலாக கொண்டு எழுந்த காப்பியங்கள் இவை. இதில் மணிமேகலை பௌத்தமதக் கருத்தை வலியுறுத்த எழுதப்பட்ட காப்பியமாகும். ஒரு மதக்கருத்தைக் கூறுவதற்காக எழுதப்பட்ட காப்பியமாயினும் அக்கால கட்டத்தின் தமிழகத்தின் வாழ்வியலைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

மணிமேகலையின் பிறப்பு

கோவலன் மாதவிக்குப் பிறந்தவள் மணிமேகலை. கணிகை குலத்தில் பிறந்தாலும், கோவலனின் மறைவுக்குப் பின் தன் குலத்தாழ்வைச் செய்ய விரும்பாது பௌத்த மதத் துறவியாவதுடன் தன்மகளையும் துறவியாக்குகிறாள். இயல்பானப் பெண்ணாக வாழமுடியாது என்பதால் இங்கு துறவு மேற்கொள்ள வேண்டியவளாகிறாள். சிறுமியான மணிமேகலையும் துறவியாகிறாள்.

சித்ராபதி இருவரையும் தன்னுடன் அழைத்துக் கொள்ள விரும்புகிறாள் வயந்தமாலை அழைத்து வரும்படிக் கூறுகிறாள். உடன் செல்ல மறுத்து விடுகிறாள் மாதவி.

அன்றைய சமூக அமைப்பில் பரத்தையர் பிரிவு இருந்ததைத் தொல்காப்பியரும் சுட்டுகிறார். நான்கு வகையாகவும் பிரித்துக் கூறியுள்ளார். மணிமேகலை தொல்காப்பியம் தோன்றியக் காலத்திற்கு 5, 6 நூற்றாண்டிற்குப் பிந்திய வகையாக இருந்தாலும், கணிகைகுலம் எனப் பெண்களின் ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்துள்ள தன்மையை உணரலாம். இங்கு ஒரு இனமாக ஒதுக்கப்பட்ட கணிகை குலத்தில் பிறக்கும் பெண்கள் அதே தொழிலில் ஈடுபடுத்தப்படுவதைக் காணமுடிகிறது. தொல்காப்பியம், சங்க இலக்கியம் சிலம்பு, மணிமேகலை இவற்றின் தரவுகளில் அக்குலத்தில் பெண்களைப் பற்றிய பதிவுகள் மட்டுமே காணப்படுகின்றன. அக்கணிகைகளுக்கு ஆண்குழந்தைகள் பிறக்க வில்லையா? பிறந்த ஆண் குழந்தைகள் என்னவானார்கள்? போன்ற கேள்விகளுக்கு அவ்விலக்கியங்களில் பதிவில்லை.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

ஒரு வேலை போர்ப் படைப்பிரிவுகளில் சேர்க்கப்பட்டிருக்கலாம். அல்லது கொலை செய்யப்பட்டிருக்கலாம், அக்குலத்திலேயே திருமணம் புரிந்து வளர்த்தனரா என்ற யூகத்திற்குத்தான் இடமுள்ளது.

மணிமேகலையின் உளநிலை

மணிமேகலை தன் தாய் தந்தையரின் துயரநிலை அறிந்து மிக வருந்துகிறார். அத்துயரைத் தாங்க மாட்டாதவளாக அழுகிறாள். புத்தருக்கு வழிபாடு செய்வதற்குரிய மாலை புனிதத் தன்மை இழந்து வீணாகிறது. அதனால் வேறு மலர் கொண்டு வருவதற்கு மலர்வனம் செல்கிறாள்.

அங்கு இளவரசன் உதயகுமரன் கருகிறான். அவள்மேல் காதல் கொள்கிறான். அச்சமடைந்து பளிக்கறையினுள் செல்கிறாள். தோழி சுதமதியின் அறிவுரையினால் திரும்பிச் சென்று விடுகிறான். இருப்பினும் மணிமேகலையின் மனம் உதயகுமரனின்பால் செல்கிறது.

"இதுவோ அன்னாய்! காமத்து இயற்கை?
இதுவே யாயின் கெடுகதன் திறம்" (மணிகேலை-40-91)

எனக் கூறுகிறாள். இங்கு மணிமேகலையின் மனம் உதயகுமரனின் மீது தன்னை அறியாமல் செல்வதை நினைத்து வருந்திக் கூறுகிறாள்.

துறவுபூண்ட இளம் துறவியாக மணிமேகலை இருக்கிறாள். புத்தக் கொள்கைகள் அனைத்தையும் ஏற்று துறவினை மேற்கொண்டாலும் அவளின் மனம் இளவரசனை விரும்புவதை உணர்கிறாள். அதனால்தான் இயல்பாக எழும் காதல் திறத்தினை வீழ்த்த தன் மனதிற்கே கட்டளையிடுகிறாள்.

கணிகை குலத்தில் பிறக்காதிருந்தால் மாதவியும், மணிமேகலையும் துறவு மேற்கொண்டிருந்திருக்க மாட்டார்கள். மணிமேகலை உதயகுமரனின் காதலை ஏற்று அவனுக்கு ராணியாயிருப்பாள். துறவு மேற்கொள்ளாதிருந்தாலும் உதயகுமரனின் காதலை ஏற்றிருந்திருப்பாள்.

முன்பிறப்பு. பழவினை உணர்ந்து, அட்சயப்பாத்திரம் பெற்று அனைவருக்கும், பசிநீக்கி பௌத்தக் கருத்துக்களைப் போதித்துக் கொண்டிருந்த வேளையிலும், மணிமேகலை, புகாருக்கு வந்தபொழுது உதயகுமரனின் கண்களில் இருந்து மீளவே காயசண்டிகை உருக்கொள்கிறாள். இருப்பினும் உதயகுமரன் மணிமேகலை அவள் என்பதை உணர்ந்து அவளிடம் செல்கிறான்.

காயசண்டிகை உருவிலிருந்ததால் அவளது கணவன் காஞ்சனனும், காயசண்டிகை என நினைத்து அவளை வர்ணிக்கின்றான். இதைக்கேட்ட விரும்பாத மணிமேகலை உதயகுமரனின் அருகிலே செல்கிறாள். அவனுக்கு யாக்கை நிலையாமை உலக நிலையாமை பற்றி எடுத்துரைக்கிறாள்.

"விழையோ உள்ளாமா டவன்பால் நீங்கி
உதைய குமரன் தன்பாற் சென்று
நரைமூ தாட்டி யொருத்தியைக் காட்டி" (உ.த.கா.38-40)

என்ற வரிகள் காயசண்டிகையாக உதயகுமரனின் அருகில் சென்ற மணிமேகலையின் நிலையை உணர்த்துகின்றன. அதே நேரத்தில் காயசண்டிகை உருவை விடுத்து, மணிமேகலை உருவிற்கு மாறி காஞ்சனிடம், உன் மனைவி பசி நீங்கி சென்று விட்டாள் எனக் கூறியிருந்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. தன் மீது காதல் கொண்ட உதயகுமரனுக்குத் தன்னை வெளிப்படுத்தாது பேசுகிறாள். இந்நிகழ்வு உதயகுமரனின் மீது அவளுக்கிருந்த ஈடுபாட்டைக் காட்டுகிறது.

காஞ்சனனால் உதயகுமரன் வெட்டப்பட்ட பின்பு கிடந்த உடல் முன் மணிமேகலையாகச் சென்று புலம்புகிறாள்.

"அறந்தரு சால்பும், மறந்தரு துன்பமும்
யானினக் குரைத்துநின் னிடர்வினை யொழிக்கக்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

காயசண் டிகைவடி வாணன் காதல!" (ம.கத்-வரு-20-22)

இவ்வரிகள் மணிமேகலை உதயகுமரனின் மீது கொண்ட காதலை விளக்குவதாக உள்ளன. போன பிறவியில் இராகுலனாகப் பிறந்த பொழுது பாம்பு கடித்ததால் உயிர் போனதால் இலக்குமியாகப் பிறந்த அவளும் உடன்கட்டை ஏறுகிறாள். இப்பிறவித் துன்பம் நீக்குவதற்காகவே காயசண்டிகை வடிவில் அறநெறியை போதித்ததாகப் புலம்புகிறாள். துறவு மேற் கொண்டிருந்தாலும் அவளது உள்மனம் உதயகுமரனின் மீது கொண்டிருந்தப் பற்றினைப் புலப்படுத்துகிறது.

தான் கடைப்பிடித்த தவநெறியினாலும் கொள்கையினாலும் தன் காதலை உதயகுமாரனிடம் வெளிப்படுத்தாவிடினும், அவனின் இறந்த உடலின் அருகில் சென்று புலம்பி விடுவதில் அவள் மனம் நிறைவடைகிறது.

"வைவான் விஞ்சையன் மயக்குறு வெகுளியின்
வெவ்வினை யுருப்ப விளிந்தனை யோ! வென
விழுமக் கிளவியின் வெய்துயிர்த்துப் புலம்பி
அழுதவள் ஏங்கி, அயாவுயிர்த் தெழுதலும்"

இவ்வரிகளால் சாத்தனார் மணிமேகலை மனதிலிருந்தக் காதல் வெளிப்படுத்துமாறு புலம்படுத்துகிறார். (கார்:24-27)

நட்புநிலை

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்ற குறளுக்கு ஏற்புடையதாக மணிமேகலை - சுதமதி நட்புத்திகழ்கிறது. மலர் வனத்திற்குச் செல்லும் போது எந்தப் பாதையில் சென்றால் மணிமேகலைக்குப் பாதுகாப்பாக இருக்கும் எனத் தேர்ந்தெடுத்து செல்கிறார். உதயகுமரன் மணிமேகலையின் மீது ஆசைகொண்டு அவள் பின் சென்றபொழுது, அவளின் துறவரத்தை எடுத்துக்கூறித் திரும்பிச் செல்லச் செய்கிறாள். வந்திருப்பவன் இளவரசன் அவனுக்கு உடன்பட்டு செல்ல வேண்டுமென்று நினைக்காது தன் தோழியைக் காப்பாற்றுவதற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறாள். மணிமேகலையின் பாட்டி சித்திராபதியை விட அவளது தோழி உயர்ந்த வளாகிறாள்.

நம்பிக்கை

மக்களிடம் அன்று தோன்றியதிலிருந்து இன்றுவரை பலவித நம்பிக்கைகள் கண்முன் காண்பவற்றிலும், காணாதவற்றிலும் கொண்டுள்ளான். மணிமேகலையில் சில நடைமுறை நம்பிக்கையும், அற்புதம் (fantasic) வகையான நம்பிக்கையும் காணப்படுகின்றன. மணிமேகலை அழுததால் இறைவனுக்குரிய மலர்கள் பூ வீணாகி விட்டதாகவும், அதனால் வேறு மலர்கள் கொய்து வருமாறு மாதவி கட்டளையிடுகிறாள். இதை,

"தூநீர் மாலை தூத்தகை இழந்தது
நிகர்மலர் நீயே கொணர்வாயென்றலும்" (மணி.மலர்:44-45)

இச்செய்யுள் வரிகள் புலப்படுத்துகின்றன.

மணிமேகலையில் காணப்படும் முக்கியமான நம்பிக்கை மறுபிறப்பு. போன பிறவியில் செய்த நன்மை, தீமைக்குத் தக்கதானப் பலன் அடுத்த பிறவியில் கிடைக்கும் என்பது மணிமேகலையின் சுட்டப்பெறும் முக்கியச் செய்தியாகும்.

முற்பிறப்பில் இரவிவர்மன் எனும் மன்னனுக்கு தாரை, வீரை, இலக்குமி மூவரும் மகள்கள், மூன்று சகோதரிகளுள் தாரை மாதவியாகவும், இலக்குமி மணிமேகலையாகவும் வீரை சுதமதியாகவும் பிறந்துள்ளனர்.

இலக்குமியின் கணவன் இராகுலன்-திட்டிவிடம் என்ற பாம்பு தீண்டுவதால் இறந்து விடுகிறான். இப்பிறவியில் இராகுலனே உதயகுமரானாகப் பிறக்கிறான். இராகுலன்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பானப்பிறவியில் சோற்றுக்கலத்தை உடைத்த விஞ்சயனை வாளால் வெட்டி வீழ்த்தினான். அதன் வினைப் பலனாலே இப்பிறவியில் விஞ்சயனால் வாளால் வெட்டி வீழ்த்தப் படுகிறார்.

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' போன்ற சிலம்பின் கூற்றும், முற்பிறவிய குறித்த நம்பிக்கையையும் அறியலாம்.

"படைக்கலஞ் சிதைய வீழ்ந்த மடையனை
உடற்றுணி செய்தாங் குருத்தெழும் வல்வினை
நஞ்சுவிழி யரவின் நல்லுயிர் வாங்கி
விஞ்சையன் வாளால் வீட்டிய தன்றே" (மணி. சிறைவிடு 82-85)

என்ற மணிமேகலையின் செய்யுள் வழி உணர்த்துகிறது. காப்பியக்கதையின் திருப்பங்களுக்கு முக்கிய காரணமாக முற்பிறவி குறித்த நம்பிக்கை கதையாகக் கூறப்பட்டுள்ளது.

இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களால் கயவெயளஉ முறைகளால்தான் காப்பியக் கதைக்கு நிகழ்வுகள் நிகழத்தப்படுகின்றன. மணிமேகலை தெய்வம் தோன்றுதல், புத்தப்பீடிகை அறம் உணர்திறம், முற்பிறவி உணர்த்தல், பசிதீர்க்கும் மந்திரம், வானத்தில் செல்லுதல், வேறு உருவம் எடுத்தல் அட்சயப்பாத்திரம் எனக் காப்பியக் கதையின் நகர்வு இயற்கையில்லாத, ஆனால் மக்கள் மனம் விரும்பும் நிகழ்வுகளே அதிகம் நிகழத்தப் பெறுகின்றன.

இறைக்கோட்பாடு

புத்தமதக் கருத்துக்களை வலியுறுத்தப்படுகின்றன. மணிமேகலை மீது ஆசை கொண்டு பின் தொடர்ந்த உதயகுமரனிடம் புத்தமதக் கருத்துக்களை எடுத்துரைத்து திருப்பி அனுப்புகிறார். உதயகுமரன் கொலை செய்யப்பட்ட குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப்படுகிறார் மணிமேககலை. சிறைக் கைதிகளுக்கு அறம் வாதிக்கிறார். நல்வினை, தீவினை, உடல்நிலையாமை, நிலையான இற்பிறப்பு-மறுபிறப்பு வினைப்பயன் போன்றவற்றை விளக்குகிறாள்.

"கொலையே களவே காமத் தீவிழைவு
உலையா உடம்பிற் தோன்றுவ மூன்றும்" (மணி ஆபுத். 25-26)

என்பனப் போன்ற பலவித அறக்கருத்துக்களைப் போதிக்கிறார். அரசனும் இவளது போதனைகளைக் கேட்டு சிறைச்சாலையை அறச்சாலையாக மாற்றுகின்றார். இராசமாதேவியும் முற்பிறப்புக் கதையைக் கேட்டு மணிமேகலையின் மீதிருந்த கோபத்தைத் தனித்து சிறையிலிருந்து விடுவிக்கின்றாள்.

சமயவாதிகளுடன் வாதம்

வைசேடிகவாதம், அளவை வாதம், சைவவாதம், பிரம வைணவ வேதவாதம், ஆசீவகவாதம், நிகண்டவாதம், சாங்கியவாதம், வைசேசடிகவாதம், மிமாஞ்சகம் - என ஒவ்வொரு சமயக் கணக்கர்களுடனும் வாதிட்டு புத்தமதமே உயர்ந்தது என நிருவுகிறாள். ஒவ்வொரு சமய வாதிகளுடனும் போராடும் அளவிற்குத் திறனும், அறிவும் - ஆளுடையும் உடையவளாக இருக்கிறாள்.

சமயக் கணக்கர்களிடம் வாதிடும் பொழுது ஆண்வேடம் பூண்டிருந்ததை,

"மெய்யுணர்வு இன்றி மெய்ப் வொருளுனர்வரிய
ஐயம் அல்லது, இது சொல்லப் பெறாய் என
உள்வரிக் கோலமோ டுன்னிய பொருளுரைத்து
ஐவகைச் சமயமும் அறிந்தனர்" (மணி.சமயக்..286-289)

எனும் செய்யுள் உணர்த்துகிறது.

ஆண்களுடன் வாதிக்கும் பொழுது ஆணாகயிருந்து கூறினால் தான் ஏற்றுக் கொள்வர் எனும் மனநிலையில் ஆண் உருவமாயிருப்பாள். சமய வாதிதன் யாரும் இவள்

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

பெண்ணாகயிருந்து வாதிட்டிருந்தால் இவள் கூறுவதை யாரும் கேட்டிருந்தீருப்பிர்களா? ஏற்றிருப்பார்களா? என்பது ஐயத்திற்கிடமானது.

இயற்கை வளம்

புத்தக் கோட்பாடுகளே அதிகம் சொல்லப்படுவதால் இயற்கை வளம் வர்ணனை அதிகம் இடம் பெறவில்லை. மலர்வனம் புக்ககாதையில் தாம் இயற்கையின் எழிலைக் காணமுடிகிறது.

இயற்கையின் அழிவு

பல்வேறு காலக்கட்டங்களைக் கடக்கும்பொழுது பல நாடு, நகரங்கள் அழிவுற்ற செய்திக் காணப்படுகிறது. நாவலந்தீவு அழியப் பெற்றதை பதிவு செய்துள்ளது. நாவலந்தீவு மன்னனிடம் ஏழு நாளில் இத்தீவு அழியுமெனக்கூறி அவர்களை அங்கிருந்து வெளியேறும்படி கூறுகிறாள்.

“தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
இன்றேழ் நாளில் இருநில மாக்கள்
நின் றுநடுச் செய்த நீனில வேந்தே
பூமி நடுக்குறூஉம்” (மணி பீடிகை 17-20)

எனக்கூறி எச்சரித்து அத்தீவினை விட்டு வெளியேற்றுகின்றனர்.

“புகார் நகரம் அழிந்து விட்ட செய்தியும் காணப்படுகிறது.

“மடல் வரல் நல்லாய் நின்றன் மாநகர்
கடல் வயிறு புக்கது” (ஆபுத் மணி: 176-177)

இவ்வரிகள் புகார் அழித்துள்ளதைச் சுட்டுகின்றன.

நாவலந்தீவு, புகார் அழிந்ததை பல்வேறு வரலாற்று செய்திகள் மூலம் அறிந்திருக்கிறது. பல்வேறு வரலாற்று ஆவணங்கள் சுட்டுகின்றன. புகார், நாவலந்தீவு இரண்டும் மணிமேகலை எழுதப்பட்ட காலக்கட்டத்தில் தாம் அழிந்துள்ளன என்பதை அறியமுடிகிறது.

நூற்பாட்டியல்

1. ந.மு. வேங்கடசாமி நாட்டார், உரைவேந்தர் ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை. *மணிமேகலை.* அமிழ்தம் பதிப்பகம், சென்னை - 17.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வள்ளுவமும் வாழ்வியல் நெறிகளும்

Principles of Moral Life and Valluvam

முனைவர் ந.ஜெயவசந்தி, உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, கீதாஜீவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குறுக்குச்சாலை, தூத்துக்குடி.

Abstract

The article provides details of good and moral life presented in Valluvam. 'Valluvam' is the title word for the diadactics evinced by Thiruvalluvar in "Thirukkural". It is a fine treasure to all individuals of the world. It must be a pleasure in grasping the ideas of Valluvam which can elevate our soul to greater heights. The moral treatise deals with nearly 133 themes related to humanity and serene and rational ideas are inculcated there for the one who aspires in becoming an individual. Therefore, the study focuses on the facts related to the Principles of Moral Life and Valluvam.

Keywords: Principles of Moral Life, Valluvam, "Thirukkural", Thiruvalluvar

முன்னுரை

மனித வாழ்க்கையினை செப்பனிடுவதற்கும் செழிப்படையச் செய்வதற்கும் நீதி இலக்கியங்கள் தோன்றின. அவற்றில் திருக்குறள் இந்நூற்றாண்டு வரை நிலைத்து நிற்பதற்கும் இளையோர் மனதில் பதிந்து கிடப்பதற்கும் இதனுள் பொதிந்து காணப்படும் வாழ்வியல் நெறிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

வள்ளுவம்:

காலத்திற்குக் காலம், சூழலுக்குச் சூழல் எந்த இலக்கியம் தன்னைப் புதுப்பித்தும் தக்கவைத்துக் கொள்கிறதோ அவ்விலக்கியமே கொண்டாடப்படும் இலக்கியமாக மாறுகிறது. அதில் சாதி, மதம், இனம், மொழி, நாடு என்று பல எல்லைகள் கடந்து மனித வாழ்க்கையைப் பண்படையச் செய்யும் முயற்சியில் திருக்குறள் முதன்மையாக விளங்குகின்றன.

இந்நூலில் குறிப்பிடப்படாத கருத்தாக்கங்களென்று எவையுமில்லை. அறம், பொருள், இன்பம் இவை மூன்று இயல்களுக்குள்ளும் மூவாயிரம் கோடி தமிழர் நெறியிட்டுச் சொல்லியிருக்கின்றார் என்றால் காலச் சிறந்தவையல்ல. காதல், களவு, பொய்கூறாமை, பெண்மை, ஒழுக்கம், இயற்கை இன்னும் பல இவையுள் அடங்கும். இவை காலங்காலமாகப் புதுப்பித்துக் கொண்டுதான் இருக்கிறது. மேலும் வள்ளுவம் தமிழனுக்குரியது என்னும் நிலை கடந்து அவை உலகிற்கு உரியது என்பதை இப்படிச் சொல்கிறான் பாரதி.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

"எல்லாப் பொருளும் இதன்பால் உள" என்கிறார் மதுரை நாகனார், இவையனைத்தும் வள்ளுவத்தின் காலமும் எல்லையையும் கடந்து அதன் பொருட்ச் சிறப்பை உணர்த்துவனவாகும்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

வாழ்வியல் நெறி

வள்ளுவம் தான் வாழ்ந்த காலத்திற்கும் தற்போது வாழும் சமூகத்திற்கும் மனித வாழ்வியல் நெறியினை, வாழ்க்கை முறையினைச் சொல்கிறது. மேலும் சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நெறிமுறைகளாக வரையறுக்கப்பட்டுள்ளது. முதலில் இயற்கையின் தகைமையில் வாழுதல் வேண்டும் என்பதையும் கடவுளோடு இயைந்து வாழ்வது தான் வாழ்க்கை என்பதையும் தன் முதல் அதிகாரத்திலே வலியுறுத்துகிறார். இதனை,

“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்” (குறள்.3)

இக்குறள் வழியாகவும்,

‘‘கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்’’ (குறள்.2)

என்பதில் தூய அறிவு வடிவான திருவடிகளை தொழாதவர்க்கு அவர் கற்ற கல்வியினால் பயன் ஒன்றும் இல்லை என்கிறார். எச்செயல் புரினும் அச்செயலுக்குத் துணையாக நிற்கும் அவனுக்கும் அப்பாற்பட்ட சக்தியாக விளங்கும் இயற்கையை போ, இஷ்ட தெய்வத்தையோ, தன் மூதாதையர்களையோ அல்லது தாய் தந்தையையோ வணங்கித் தொடங்குதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அவன் கற்றறிந்தவராயினும் கல்லாதவர்க்கு ஒப்பாவார். அதனால் வரும் பலன் கிட்டாது என்கிறார் வள்ளுவர்.

வள்ளுவமும் மரபுகளும்

தன் மனநிலைக்கேற்பவும், சமுதாய நெறிகளுக்கேற்பவும் வாழ்ந்து கொண்டிருந்த சங்ககால மனிதனை சான்றாண்மையுடனும், ஒழுக்கத்துடனும் நெறிபடுத்த வேண்டும் என்பதற்காகவே நீதி இலக்கியம் தோன்றிது. ஆரியர் வருகைக்குப் பின் இவை பெரும் சூறாவளியாய் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தது. கள்ளுண்ணாமை, மங்கயைரை சேராதிருத்தல், மாமிசம் உண்ணாதிருத்தல், உயிரைக் கொல்லாதிருத்தல், உற்றாறை வெறுக்காமல் இருத்தல் என்று பல்வேறான வாழ்க்கை முறையினைச் சுட்டிக் காட்டியுள்ளார் வள்ளுவர் கள் உண்பது தமிழர் வாழ்வில் ஓர் அங்கமாக இருந்ததை,

“சிறயகட் பெறினே எமக்கீயும் மண்ணே
பெரியகட் பெறினே (புறம்)
உண்ணற்க கள்ளை”
“நன்றாள் முகத்தேயும் இன்னாதது”
நஞ்சுண்பார் கள் உண்பார்”

போன்ற பாடல்கள் வழியாக மதுவின் தீமைகளை உணர்த்திக் காட்டுகிறார் வள்ளுவர்.

உயிரினை அறநெறியின்றி கொன்று புலால் உண்பது மனித நெறியன்றோ, இவ்வுலகில் படைக்கப்பட்ட உயிர்கள் யாவும் கொல்லப்படுதற்காகவோ, அழிக்கப்படுவதற்காகவோ அல்லது அதனால் வரும் செல்வப் பயன்பாட்டிற்காகவோ படைக்கப்பட்டதல்ல, சைவ உணவே மனிதனின் சிறந்த உணவு என்பதை உணர்ந்த வள்ளுவர் புலால் மறுத்தல் தன்மையினைப் பற்றி எடுத்துரைக்கிறார். இதனை,

“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி
எல்லா உயிரும் தொழும்” (குறள் 260)

குறிப்பிட்டுச் சொல்லும்போது எவனொருவன் புலாலை மறுத்து கைவிடுகிறானோ அவனை எல்லா உயிர்களும் கைக்கூப்பித் தொழும் எனும் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை வள்ளுவர் விதைக்கிறார். இக்கருத்தினைத்தான் பல சமூக ஆர்வலர்களும் ஆன்மிக நெறியாளர்களும் இன்றைய நூற்றாண்டில் முன்வைத்து போராடுகின்றனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

அறமும் அறநெறியும்

அறநெறிப்பட்ட வாழ்க்கையே சிறப்புடையது எவ்வுயிர்க்கும் இல்லாதது இம்மனித உயிர்க்கு உண்டோம் என்று சொன்னோம் எனில் அன்பும் அறனும் இரு கண்கள். மேலும் அறவழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவதே வள்ளுவரின் நோக்கமாக இருந்திருக்கக் கூடும். ஆதலால் தான் அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரத்தை வகுத்துக் காட்டுகிறார். ஒருவனுடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நம்மை பயப்பது வேறோன்றுமில்லை அவ்வறத்தை மறந்தோமெனில் கெட்டொழிந்து போவோம் என்பதனை,

“அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு” (குறள் 32)

இக்குறள் வழியாகப் பறை சாற்றுகின்றார்.

முதுமைக்கு வலு சேர்ப்பவையாக இளமையில் செய்யும் அறமே துணைநிற்கும். ஆகவே உடல் அழியும் காலத்தில் அழியாமல் காத்து நிற்பது அறமே ஆகும்.

“அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்னுங்கால் லொன்றாத் துணை” (குறள் 36)

‘அறம் செய விரும்பு’ இவ்வாறாக அறத்தையும் அறம் சார்ந்த கருத்திய லையும் முன்னிறுத்தி மனித சமூகத்தை வாழ்வியல் நெறிக்குள் வரவழைத்து செக்கிறார்.

அன்பு நெறி

அன்போடு இயைந்த வாழ்க்கை அறத்தோடு புனைந்த வாழ்க்கை என்று சொல்லலாம். இத்தகைய நிலையில் அன்பில்லா உயிர்கள் பாலைவனத்தில் இருக்கும் மரங்களுக்கு ஒப்பாகும் என்பதனை,

“அன்பகத் தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று” (குறள். 78)

“அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை” (குறள். 76)

அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று எண்ணுதல் வேண்டா, ஒருவனின் வீரத்திற்கும் அன்பு துணை நிற்கும் என்கிறார் வள்ளுவர்.

முடிவுரை

வாழ்க்கையை வளமுடையதாகவும் ஒழுக்கமுடையதாகவும் நெறிப்படுத்துவதற்கு திருக்குறள் அடிப்படையாக அமைகின்றது. இவையின்றி எல்லா காலத்திற்கும் எல்லா மனிதருக்கும் ஏற்றவையாகவும், மனித மனங்களை செம்மைபடுத்துவதாகவும் உள்ளது.

துணைநூற்பட்டியல்

1. வ.சுப. மாணிக்கம் (உ.ஆ) - திருக்குறள், 2000.
2. ஞா. தேவநெயப்பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுகள், 1969.
3. டாக்டர் தமிழணணல், திருவள்ளுவர் அருளிய தீருக்குறள், 1999.
4. சுாலமன் பாப்பையா, திருக்குறள் உரைக்கனிகள், 1999.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நெய்தல் நில மக்களின் தொழில்கள்

The Occupation of the Neithal (Sea-Faring) People

மு. ஜோதி, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி-17.

Abstract

The paper provides valuable messages regarding the occupation of the Neithal (Sea-faring) people in the Tamil Society. The Fishing men are the people, lives on the costal areas of Tamil Nadu. The former capital Korkai of the Pandian Kingdom is known for sea faring men for their livelihood. Cutting Pearls, catching fishes and other sea oriented jobs are the main occupation of the Neithal people. Therefore, the study focuses on the mode of life and occupation of the coastal area people of the Sangam times.

Keywords: Occupation, Neithal (Sea-Faring) People

சங்க காலத்தில் நிலத்தை ஐவகையாகப் பாகுபாடு செய்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவையாகும். ஒவ்வொரு நிலத்தின் அடிப்படையில் வெவ்வேறு தொழில்களை மக்கள் செய்து வந்தனர். இங்கு நெய்தல் நில மக்களின் தொழில் பற்றியக் கருத்துக்களை இக்கட்டுரை ஆராய்கிறது. தொழில் பற்றி தொல்காப்பியம்

"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" (மரபி. 78)

என வாணிகம் செய்யும் தொழிலை வைசியன் பெறுவான் என்றும்,

"மெய்தெரி வகையின் என்வகை உணவின்
செய்தியும் வரையார் அப்பா லான" (மரபி. 79)

வணிகர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்துடன் தானியங்களை விளைவிக்கும் தொழிலையும் மேற்கொள்வர் என்றும் இந்நூற்பாவால் அறியலாம். எட்டு வகையான தானியங்களையும் (பயறு, உளுந்து, கடுகு, கடலை, எள், கொள், அவரை, துவரை) போன்ற தானியங்களை விளைவிக்கும் தொழிலையும் செய்துள்ளனர். மேலும் அனைத்துப் பொருள்களையும் வாணிகம் செய்து எங்கும் ஒரே மாதிரியான வாழ்க்கையை வாழ்ந்தப் பெருமை வணிகரையே சாரும்.

நெய்தல் நிலம்

நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த நிலம். பரதவர்கள் மூங்கிற் கோலை நட்டு, அதன் மேலே தருப்பைப் புல்லால் வேயப்பட்ட குடிலில் வாழ்கின்றனர். வலை, ஈட்டி, கட்டுமரம், படகு, திமில், அம்பி, தோணி போன்ற கருவிகள் இவர்களின் குடியிருப்புகளின் முற்றத்தில் காணப்படும். இவர்கள் வாழும் பகுதியில் புலால் நாற்றம் வீசிக்கொண்டே இருக்கும். கடற்கரைப் பகுதிகளில் முதியவர், இளையவர், மகளிர், சுற்றத்தார் இவர்களின் ஆரவாரம் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கும். இங்கு பனை, புன்னை போன்ற மரங்கள் மிகுதியாக காணப்படும். இப்பகுதியில் மணல்நீர், கடல் நீர் போன்ற நீரைப் பயன்படுத்த உள்ளன. கடற்கரை காகத்தை நெய்தல்நிலப் பறவை என்பர். இங்கு எருது, கழுதை போன்ற விலங்குகளை உப்பு விற்பதற்காக பரதவர்கள் மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

நெய்தல் நிலத்திற்கே உரிய தலைமக்கள் சேர்ப்பன், துறைவன், புலம்பன் ஆவர். இந்நிலக் குடிமக்கள் நுளையர், தமிலர், பரதவர், நுளைத்தியர், பரத்தியர் என அழைக்கப்படுகின்றனர்.

நெய்தல் நில ஆண்மக்களின் பெயர்கள்

"கடலர் திமிலர் சலவர் நுளைர்
பரதவர் வலையர் அந்நில மக்கள்" (நம்பியகப்பொருள், சூ.135)

நெய்தல் நில பெண்களின் பெயர்கள்

"நுளைச்சியர், பரத்தியர்" (நம்பியகப்பொருள், சூ.138).

நெய்தல் நில மக்களின் உணவாக பலவகையான மீனையும், நண்டையும் உட்கொண்டனர். இம்மக்கள் கடலில் பிடித்த மீனையும், விளைவித்த உப்பையும் கொடுத்து தனக்கு தேவையான உணவுப் பொருளை பெற்றுக்கொண்டனர்.

நெய்தல் நிலத்தொழில்கள்

கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல் நிலப் பகுதியில் மீன் பிடித்தல், உப்பு விற்றல், மீனை உலர்த்தல், உப்பு விளைவித்தல், பண்டமாற்றுதல் போன்ற தொழில்கள் இந்நிலத்திற்கு உரியவையாகும்.

மீன் பிடித்தல்

இரவில் பரதவர்கள் விளக்குகளை ஏற்றிக் கொண்டு, தன் சுற்றத்தாரோடு கடலில் மீன்பிடிக்கச் சென்றனர் என்பதை,

'எல் இமிழ் பனிக்கடல், மல்கு சுடர்க் கொளீஇ
எமரும் வேட்டம் புக்கனர்' (நற். 67:8-9)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

பரதவர் குடியில் பிறந்த சிறுவர், மீன் பிடிப்பதற்காகவே திமிலில் ஏறிச் சென்று சுறா, கெண்டி என பலவகையான மீன்களையும் கொணர்வர். இங்கு சிறுவர் மீன்பிடித்தல் தொழிலில் உள்ளார் என்பதை,

"வெந்திறல் இளையவர் வேட்டு எழுந்தாங்கு
திமில் மேற்கொண்டு திரைச் சுரம் நீந்தி
வாள் வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி" (நற். 111:5-7)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

என் தந்தை இரவில் பிடித்து வந்த பலவகையான மீன்களை என் அண்ணன் மார்களுக்குக் காட்டுவதற்காக இரவில் வீட்டிற்கு வருவார் என்பதை,

'பல்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய
எந்தையும் செல்லுமார் இரவே' (அகம். 240:6-7)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

பரதவர்கள் அறுத்த சுறா, இறா போன்ற மீன்களை வெய்யிலில் உலர்த்தினர். மீனை உண்ணவரும் பறவைகளை உண்ணவிடாமல் விரட்டுகின்றனர் என்பதை,

"நிணச் சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப் புள் ஒப்பும் எமக்கு" (நற். 45:6-7)

வெய்யிலில் காய வைக்கப்பட்ட சுறாமீனை உண்ண வருகின்ற பறவைகளை விரட்டுகின்ற தொழிலை பரதவர்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதை,

"பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கலின்
இருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு
நிலவுநிற வெண்மணல் புலவ பல உடன்" (குறுந். 320:1-3)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

உப்பு விளைவித்தல்

நெய்தல் நிலப் பரதவர்கள் வெண்ணிறமான உப்பை, பாத்திகளில் விளைவித்து வைத்திருந்தனர். மருத நில உழவர்கள் நெல் அறுத்து, அதைத் தூற்றும் போது, துரும்புகள் காற்றில் பறந்துபோய் உப்பளத்தில் பரவியது. இதனால் பரதவர்கள் சினந்து உழவர்களுடன் சண்டையிட்டனர் என்பதை,

"நீர்சூழ் வியன்களம் பொலிய, போர்பு அழித்து
கள்ஆர் களமர் பகடுதலை மாற்றி
கடுங்காற்று எறிய போகிய துரும்பு உடன்
காயல் சிறுதடிக் கண்கெடப் பாய்தலின்,
இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதவர்
தீம்பொழி வெள்உப்புச் சிதைதலின், சினைஇ,
கழனி உழவரொடு மாறு எதிர்த்து, மயங்கி
இருஞ்சேற்று அள்ளல் எறிசெருக் கண்டு
நரைமூ தாளர் கைபினி விடுத்து" (அகம். 366:2-10)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

பரதவர்கள் நிலத்தை உழாமல் விளைவிக்கும் உப்பினை வணிகர்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். பரதவர்கள் உப்பிற்கு காவலாக மகளிர்களை வைப்பார். அம்மகளிர் கடலில் வரும் படகுகளை சுட்டிக்காட்டி அவற்றையெல்லாம் எண்ணிக்கொண்டிருப்பாள் உப்புக் குவியல்களின் ஏறி நின்று,

"உவர் விளை உப்பின் உழாஅ உழவர்
ஒழுகை உடணர் வருபதம் நோக்கி
கானல் இட்ட காவற் குப்பை" (நற். 331:1-3)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

உப்பு விற்றல்

பரதவர் சுறா மீனால் தாக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட புண்ணுடன் வீட்டில் இருந்தார். அப்புண் ஆறியவுடன் மீண்டும் மீன் பிடிக்கச் சென்றான். அவளது தாய் உப்பை எடுத்துக் கொண்டு அதை விற்று வெண்ணெல் வாங்கி வந்தாள் என்பதை,

"உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்புவிளை கழனிச் சென்றனள்" (குறுந். 269:5-6)

எனும் அடிகள் சுட்டுகின்றன.

"தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து,
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி,
நெடு நெறி ஒழுகை நிலவு மணல் நீந்தி,
அவண் உறை முனிந்த ஒக்கலொடு புலம் பெயர்ந்து
உமணர் போகலும்" (நற். 183:1-5)

என்பதை, உப்பு விற்குத் உமட்டியர் உமணர்களின் பெண்கள் நெல்லுக்கு இணையான அளவு உப்பு என்று கூவியவாறு தம் கைவளையல்கள் ஒலிக்க கைவீசி விற்றுச் சென்றாள் என்பதையும், உப்புவிற்கும் உமணர்கள் பாதுகாப்புக் கருதியே கூட்டமாகவே தம் பயணத்தை மேற்கொண்டனர். உமணர் ஓரிடத்தில் நிலையான வாழ்க்கையை வாழ முடியாதவர்.

பண்டமாற்றுதல்

பரதவர்கள் தாம் பிடித்து வந்த மீனை கள்ளிற்கு விலையாக விற்றனர் என்பதை,

"மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்
இனிது பெறுபெரு மீன் எளிதினின் மாறி" (நற். 239:2-3)

உமணர்கள் உப்பினை விற்று அதற்கு விலையாக நெல்லினைப் பெற்றுக் கொண்டனர்.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

“உமணர் தந்த உப்பு நொடை நெல்லின்” (நற். 254:6)

“உப்பை நெல்லுக்கு விற்றலை
நெல்லும் உப்பும் நேரே ஊரிர்” (அகம். 390:8-9)

நெய்தல் நில மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த மீன்பிடித்தல், மீன் விற்றல், உப்பு விளைவித்தல், உப்பு விற்றல், பண்டமாற்றல் போன்ற தொழில்களைச் செய்து வந்துள்ளனர். இறுதியாக நெய்தல் நில மக்களுக்கு முக்கியத் தொழில் மீன்பிடித்தலாகும். கடலிலும், உப்பங்கழிகளிலும் வலைகளைப் பயன்படுத்தியும், கட்டுமரங்கள், படகுகள் நாவால் எனும் மரக்கலங்களின் உதவியாலும் இத்தொழிலை மேற்கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி வந்துள்ளனர் என்பதை அறியலாம்.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600014.
2. தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் காலமும் கருத்தும், பெ.மாறையன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098.
3. குறுந்தொகை, வி.நாகராசன்., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், மு.ப-ஏப்-2004.
4. நற்றிணை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18.
5. கோபாலையர் தி.வே. தமிழ் இலக்கணப் பேரகராதி எழுத்து (தொகுதி.1,2,) தமிழ்மண் பதிப்பகம், சென்னை. 2003.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

Teachers Instructional Role Perception Scale (Standardization of the Research Tool)

Dr. K. Ratheeswari, Assistant Professor, Department of Value Education
Tamil Nadu Teachers Education University, Chennai-97.

Abstract

The Present investigation has been under taken in order to study the teacher's instructional role perception in Tamil Nadu. Teachers Instructional Role Perception scale was constructed and validated by the investigator (2010) with help of the guide Dr.G.Visvanathan has been administrated to a stratified random sample of 120 school teachers. The tool consists of 52 items with five point scale. The scoring in the scale ranges from 1 to 260 in the direction of the low level perception to high level perception. The reliability of the tool is found to be 0.86 which is highly reliable. The tools also have content validity and face validity. So the tool can be used in Educational Research.

Key Words: Teachers Instructional Role Perception, Pilot Study, Reliability Validity.

Introduction

Education is a never ending process of growth and development of personality from womb to tomb. The process of education must be open, free and flexible. It should be possible for the learners to have freedom to choose courses in line with their interests and aptitudes so that they can continue their studies without any difficulty and have the satisfaction of becoming high achievers. Education should make each and every member of the society academically sound and socially efficient so as to enable them to contribute considerably to national development UNESCO Commission on education (1972) declared education is a lifelong process and its purpose is to establish a learning society

The Role of the Teacher

The teacher as information provider - (Lecturer) The teacher as role model - (on-the job role model, teaching role model) The teacher as facilitator - (Learning facilitator) The teacher as assessor - (Student Assessor, Curriculum evaluator) The teacher as planner - Curriculum planner, Course Organizer (Teaching expertise) The teacher as resource developer - Study guide producer Resource material creator. It refers to the teacher centered style as one in which the responsibility for directing the learning environment is the instructor. Jarvis (1995) suggests that this style of teaching relies on strategies aimed at transmitting knowledge to the learners.

Good teaching is charged with positive emotion. It is not just a matter of knowing one's subject, being efficient, having the correct competencies or learning the right

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

techniques. Good teachers are passionate beings who connect with their students and fill their work and their classes with pleasure, creativity and joy. (Hargreaves, 1998, p. 835).

Methodology

The present study aims at finding out the Teachers Instructional Role Perception. Therefore, the normative survey method has been used in the study.

Tools

Teachers Instructional Role Perception scale was constructed and validated by investigators (2010) with the help of the guide Dr. Visvanathan was used in the present study. The tool consists of 52 items with five point scale. The Investigator selected 120 statements for Instructional Role Perception. These were given to the expert in the field of education to delete or modify the statement. 92 statements were selected finally for Pilot study.

Sample for the Pilot Study

The sample for the pilot study was conducted in government, aided and private B.Ed., collegesThe conducted in the ten revenue districts of Tamilnadu viz., Dindigul, Madurai, Chennai, Thanjur, Pudukottai, Karur, Salem, Villupuram, Chidambaram, Vellore and Trichy. A total of 820 Education college teachers are selected for this study.

Construction of the Instructional Role Perception Tool

Pilot Study

The Investigator selected 120 statements for Instructional Role Perception. These were given to the expert in the field of education to delete or modify the statement. 92 statements were selected finally for Pilot study.The Investigator conducted Pilot study with a random sample of 120 teachers working in college of education in Tamilnadu.

Table

Statement	No. of Statements	Points (Weight ages)				
		Strongly agree	Agree	Undecided	Disagree	Strongly disagree
Positive	68	5	4	3	2	1
Negative	24	1	2	3	4	5

Item Analysis

The Investigator calculated the "t" values for all the 92items. The items were selected using the norms mentioned in Allen Edwards. The following table shows the t values of each statement and selection of the items. The "t" value is below than the 3.00 were not selected.

Table

Statement	Nature of the	't'	Statement

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

no.	Statement	Value	Selected
1	Positive	1.00	Not selected
2	Negative	2.29	Not Selected
3	Positive	2.22	Not Selected
4	Negative	1.99	Not Selected
5	Positive	1.66	Not selected
6	Positive	5.77	Selected
7	Positive	4.50	Selected
8	Negative	4.68	Selected
9	Positive	3.71	Selected
10	Positive	5.36	Selected
11	Positive	1.83	Not selected
12	Positive	1.01	Not selected
13	Negative	2.08	Not Selected
14	Positive	3.81	Selected
15	Positive	4.98	Selected
16	Negative	1.95	Not selected
17	Positive	-1.35	Not selected
18	Positive	3.85	Selected
19	Negative	5.13	Selected
20	Negative	-0.67	Not selected
21	Positive	4.48	Selected
22	Negative	3.35	Selected
23	Positive	1.97	Not Selected
24	Positive	4.10	Selected
25	Negative	3.10	Selected
26	Negative	4.70	Selected
27	Positive	-0.55	Not selected
28	Negative	1.41	Not selected
29	Positive	2.28	Not Selected
30	Positive	6.26	Selected
31	Negative	2.47	Not Selected
32	Negative	-0.17	Not selected
33	Negative	4.41	Selected
34	Negative	6.98	Selected
35	Positive	-0.37	Not selected
36	Positive	5.12	Selected
37	Positive	1.72	Not selected

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

38	Positive	4.48	Selected
39	Negative	3.70	Selected
40	Positive	6.00	Selected
41	Positive	3.63	Selected
42	Positive	4.68	Selected
43	Positive	1.56	Not selected
44	Positive	5.05	Selected
45	Negative	2.39	Not Selected
46	Positive	3.48	Selected
47	Positive	1.14	Not selected
48	Positive	1.46	Not selected
49	Negative	0.54	Not selected
50	Negative	3.28	Selected
51	Negative	1.81	Not selected
52	Negative	3.05	Selected
53	Negative	3.01	Selected
54	Positive	0.74	Not selected
55	Positive	4.97	Selected
56	Positive	4.42	Selected
57	Positive	3.50	Selected
58	Negative	2.72	Not Selected
59	Positive	6.52	Selected
60	Positive	4.25	Selected
61	Positive	1.97	Not Selected
62	Positive	0.46	Not selected
63	Negative	0.15	Not selected
64	Negative	2.15	Not Selected
65	Positive	-0.54	Not selected
66	Positive	1.45	Not selected
67	Positive	2.65	Not Selected
68	Positive	5.09	Selected
69	Positive	5.76	Selected
70	Positive	4.63	Selected
71	Positive	2.57	Not Selected
72	Positive	0.54	Not selected
73	Negative	-1.38	Not selected
74	Positive	3.02	Selected
75	Positive	-0.37	Not selected

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

76	Positive	-1.93	Not selected
77	Negative	0.27	Not selected
78	Positive	4.62	Selected
79	Positive	4.12	Selected
80	Positive	4.17	Selected
81	Positive	4.76	Selected
82	Positive	3.99	Selected
83	Positive	4.02	Selected
84	Positive	4.08	Selected
85	Positive	5.60	Selected
86	Positive	4.86	Selected
87	Positive	5.28	Selected
88	Positive	4.61	Selected
89	Positive	3.96	Selected
90	Positive	3.53	Selected
91	Positive	6.23	Selected
92	Positive	6.48	Selected

Teachers Instruction Role Scale

The job involvement Scale was constructed and validated by the investigator. The scale contains 63 items. Each item was given five point scale (1) Strongly agree (2) Agree, (3) Undecided, (4) Disagree, (5) Strongly disagree type answers. Responses were obtained on the answer booklets. There is no time limit but 30 minutes have been found sufficient for responding it.

Reliability of the Tool (Instructional Role Perception)

This scale was developed by the investigator. It consists of 41 Positive and 11 Negative statements. The candidates are required to respond to the words of the scale on the five point scale in such a way as to describe the way in which they generally perceive the teaching profession. The positive statements are to be scored 5, 4,3,2,1 and Negative items are reversed. Generally four procedures are common for computing the reliability coefficient of a test. These are:

1. Test-retest 2. Alternate or Parallel 3. Split-half technique 4. Rational equivalence

The investigator used the Split-half method to find the reliability of the tool which was found to be 0.86 this is reliable at 0.01 level.

Validity of the Tool

The validity of any measuring instrument depends upon the fidelity with which it measures what it purports to measure (Garrett, 1966). The research tools are given to experts in the field of education and educational psychology. The experts ascertain the face validity of the tool.

E-ISSN: 2581-7140

Special Issue 2 : Vol. 2, May-2019 **Available at: www.ijtlls.com**

Conclusion

Teachers Instructional Role Perception scale was constructed and validated by investigators (2010) with the help of the guide Dr. Visvanathan. The reliability of the tool is found to be 0.86 and this is reliable at 0.01 level which is highly reliable and can be used for further research. The tool also have content validity and face validity. So the tool can be used in Educational Research.

References

1. Garrett, Henry, E (1961): General Psychology, Eurasia Publishing House Pvt. Ltd., Bombay.
2. Gupta, N.L (1986): Value Education: Theory and Practice, Krishna Brothers, Ajmeer.
3. Hargreaves, A. (1998): The emotional practice of teaching, Teaching and Teacher Education, 14(8), 835–54.
4. Squires G. (1999): Teaching as a professional discipline. London, Flamer Press.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

Position of Women in Sangam Age

Dr. J.V. Santha Jayakumari, HOD of History,
Government College for Women, (Autonomous), Kumbakonam, Thanjavur (Dt), Tamilnadu.

Abstract

This article depicts the position of Women in Sangam age. The Period from B.C.3 to A.D.3, 600 years, is called as Sangam age in Tamil History. Tholkappiam, Aganaanuru, Kurunthogai, Pura-Nanuru, Madurai Kanji, Nartrinai, Nedunelvadai, Tirukural, Naladiyar and Silapathikaram are some of the pieces of Sangam literature. These works have shown a clear picture about Sangam women and their status. There was no equality between men and women legally as well as socially. It chiefly focuses upon their lifestyle, position, role they played in family and Society. It also speaks about their marriage, education, faith and love for a husband, and widowhood. Thus, this article gives a clear portrayal of Women in Sangam Age.

Keywords: Position of Women, Sangam Age, Tamil Women

Tolkappiam, Iraiyanar Ahapporul and the twin epics were the great monuments in giving clear accounts of the status and nature of women in the Society. The Position of women in the sangam age was not attractive. The Women were not treated equally with men. The legal and social equality between the sex were rare. Likewise, the duties of a woman in the society was different from those of a man. Probably, women spent their times in the house as housewives. They Possessed certain natural feminine qualities such as nanam, madam, achcham and payirppu. These qualities revealed the pious nature of women. But Purananuru mentioned the heroic deeds of women. But they never participated in any of the wars in the sangam period.

Women of the Sangam age had much responsibility. Though husband earned money, it was her duty to preserve it for the maintenance of her family. Patriarchal society was there in Sangam age. The Sangam literature says that women had the status not equal to men. They had to follow lots of rules, which were not meant to men. There was no evidence for punishing a man who left his wife and went to prostitute. There were evidences, which show that during the Sangam age women were treated worst. For example, in *Naladiyar,* a Tamil king named *Nannan* imprisoned his enemy's wives in a war. He shaved their hairs and made it as a rope to tie the elephant.

Sangam age was an age of war. Even though they needed more men to fight in the war, they did not hate the birth of the female child. They expected eagerly for the birth of male child. Sangam age did not determine the marital age for the women. The parents arranged their girl's marriage with brave men. A history says that bridegroom paid for the

bride's price of which half of the amount would go to the bride and another half would go to her father. The bride had the right to keep that money for her own purposes.

According to *Tholkapiam,* frightening, understanding, bashfulness and learning are good characteristics of a woman and also humility, peace, truthfulness, speaking good words are also included in this list. In Sangam age, women played an important role but there was no evidence that women were the ministers in king's court. The Sangam literature said that queens were with kings and supported them to rule the country wisely. Loyalty and virtuousness were considered as good virtues of women and they were praised. *'Kalithogai'* says that loyal women could bring rain through their virtuousness.

They were spiritual too. Virgins worshipped Lord Muruga to get a good husband. Married women worshipped Lord Siva for their husband's good health and long life. They worshipped Lakshmi for wealth. They also worshipped '*Kotravai*' the goddess of war to get victory in the war. So there was goddess worship in the Sangam age.

'*Aganaanuru'* says that during Sangam age, women somewhat had the right to choose their husbands. They enjoyed the freedom. Women were good in education. For example, Sangam literature says that there were 26 poetesses in that period. *'Avvaiyar'* was the famous poetess of this age. There were 58 poems written by Avvaiyar in the Sangam literature. She also wrote many ethical works, chief of them being *Atti Chudi, Konrai Ventam, Ulaka-Niti, Muturai, Nalvazhi, Nanneri, Niti-Neri Vilakkam, Niti-Venba and Aranericharam.* Sangam women were good at singing, dancing and music. Those who were good at music were called 'paanini'.

In Sangam age, female beauty was described as something that kindled the fire of love in the heart of the lover. Her arms were like the round bamboos, she wore fragrant hair in different style, she had the gait of a peacock, the ankles that twinkled with pebbles, the brilliant jewels that swayed like a creeper lightening and shining like golden valley, the beauty of waist that kept one mesmerized. Her eyes like flowers and forehead shone like a bright curved moon. Tholkappiyar laid down ten dispositions among the young lovers. They are aptnesses in birth, status, virtues, conduct, knowledge, age, physical charm, manifestation of love, attainment of knowledge and wealth.

The *Kurinji* girls lived amidst cereals and grain fields. They protected these fields from birds. They were talented in stringing different floral garlands. Kapilar mentions 99 varieties of flowers in *Kurinji Pattu*. They used to be mostly with their companions cheerful, inspiring lively and have a love, for plunging in beautiful streams. In Ain-Kurunooru, Poet Kapilar mentions that the chieftain of the hill, prayed to God for a daughter. This shows that during the Sangam period a female child was welcomed.

Sangam Education

In Sangam period, the king gave first place to the learned men. When the mother heard that her son was a great learned man, she would be happier than the day on which she gave birth to him. It is said that it was the duty of the father to give education to his son.

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

In the matter of education, women were given equal importance. Women were taught Iyal (literature) *Isai* (music) and *Natakam* (Drama) and men were given training for developing their physical stamina. Women who were proficient in Iyal, Isai and Natakam were known as *'Mudukkuravai'*. Ilango Adigal in his famous Tamil epic, *Chillapathikaram* characterizes Kannaki as Mudukkuravai.

Some of the educated women counselled the kings in the battlefield. They were brave and equal to men in many other aspects. Some of the famous sangam poetesses were *Avvaiyar, Kakkai Pattiniyar, Okkur Masathiyar, Natchellaiyar, Nappasalaiyar, Nannagaiyar, Anjil Anjiyar, Adi Manthi, Paari Mahalir, Kopperum Pendu, Pon Mudiyar, Mudanthama Kanniyar, Vennikuyathiyar and Velliveedhiyar.*

In Sangam age, mothers were brave enough to send their sons happily to the battle field. '*Purananuru'* mentions the brave woman as *'Mudin Magalir'* or '*MaraikudiMagalir'*. Sangam mothers wanted their sons to be brave enough to die as soldiers with a great name. In Purananuru, Okkur Masathiyar a poetess of Sangam age mentioned that a woman was ready to cut off her breasts, if her son ran away from the battle field. Tholkapiyar says that a brave mother was happy and proud when she saw her dead son in the battle field with a wound on his chest. Sangam literature says that a Tamil king, *'Athiyaman'* gifted a rare precious gooseberry (which could give long life) to Avvayar, who was a welleducated poetess. This is an evidence for the respect the educated women had from the society.

The Sangam temple dancers were variously called Manikatar and Gopitai. They were proficient in music and dance. On account of their special attainments, they were accommodated in special residences near temples. During the Pallava, and the Chola ages, the temple dancers of the Tamil land occupied an honourable place in society for their skill in dancing and their liberal endowments to the temples. Even princesses were proficient in this art. Rajasimha's favourite queen was Rangapataka, a name which suggested that she was an expert dancer.

The *Kuktesvara* temple at *Kanchi* and the *Tiruvortriyur* temple maintained a large number of women for the performance of singing and dancing at the time of divine services and festivals. According to the Kuktesvara temple inscription, a number of women, as many as 44 were attached to the temple as dancers. Those who were attached to the
Siva temples were called *Rudra Kanikaiyar.*

Marriage

Sangam literature divides the life of women into seven stages. They are ***Paedai*** (first 5 years), *Pedumai* (5-10 years), *Mangai* (1016 years), *Madanthai* (16-25 years), *Arivai* (25-45 years), *Therivai* (45-60 years), *Perilam pen* (above 60years). The marriage was conducted after the girl's puberty.

The wedding day was to be fixed on the basis of horoscope. There would be worship on the previous day of the wedding function. The bride would wear a garland of *'Sirissaleaves'* and '*Arugampul tuber'* (a kind of grass). There was no evidence for *'Thali'* in

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

the Sangam literature as well as in Chilapathigaram. There was no evidence of fire or appraiser to conduct the wedding ceremony.

In Sangam age, there prevailed a custom that the bridegroom had to offer price to the bride. It was called '*Mulai Vilai*. Love marriages were very common in Sangam age. The rich men gave their daughters in marriage to the winner of the Bullfight. There were child marriages too. Kannagi and Kovalan marriage was an example for this. Chilapadigaram says that sixteen year old Kovalan married twelve year old Kannagi. This marriage was arranged by their parents. Megasthanis, author of the book 'Indica', mentioned a marriage held in the country of Pandyas. It was a marriage conducted to a six or seven year old girl by her parents.

The terms *'Manaivi'* and *'ManaiMutal'* also denote a wife. Thiruvalluvar explains the married woman as a woman of deserving chastity and "life's companion". His wife Vasuki was admired for her chastity and fidelity.The Brahmins of the Pallava period were polygamous and married more than one wife. They did not confine themselves to their own caste for the purpose of marriage. The Brahmin girls married kshatriya, vaisya and sudra men too. This was called '*pratiloma marriage',* while the marriage of Brahmin boys with non Brahmingirls was called *'Anuloma marriage'*. The children born out of these weddings were accepted by the society and assigned certain professions.

Sati

If the wife survived her husband, her position became deplorable. She could either perish with him on the funeral pyre or survive him to lead the humiliating life of a despised widow. The term *Sati* is not used in sangam works, though the practice was there. It is referred to as Tippaidal in Tamil. *Tolkappiyam* mentions the custom of *Tippaidal* and describes it as an action of a good woman. The wife who perished along with her husband was described as *Nallol* which means a good woman. *Perunkoppendu* committed *Sati* and *Adirai*, the wife of Saduvban, attempted it. There is no instance mentioned of an unwilling widow being compelled to perform *sati* in the Sangam age. The number of Women who performed *sati* must have been small.

Widowhood

The life of a Widow, which was to be that of an ascetic, was called ***nonbu.*** She was prescribed a particular kind of diet. Her head was clean – shaven and her bangles were removed. *Alli* with rice was her food. The removal of ornaments was probably a device to render her unattractive and save her from falling a victim to temptation. The pure white cloths worn by her represented purity. Since they wore no ornaments, they were called *Kalikala Magalir*. Women in early Tamilaham could no inherit property. So widows were supported by their brothers or Sons. Widows who were destitute were said to have earned their living by spinning yarn.

This article depicts the image of Women in Sangam age. It focuses upon their lifestyle, Position, role they played in family and Society. It also deliberately express the qualities of good Women, either they were single or Married. It also speaks about their

E-ISSN: 2581-7140
Special Issue 2 : Vol. 2, May-2019 Available at: www.ijtlls.com

marriage, Education, faith and love for a husband, and Widowhood. And thus, this article gives a clear portrayal of Women in Sangam Age.

References

1. Swaminathan, A., *History of Tamil Nadu*, Chennai, 2004, p.71.
2. Vijaya Lakshmi, R., *Tamilaka Makalir Totaka Kalamuthal Arai Nuttandu Varai* (Tamil), Chennai, 1997, p.7
3. SaminathaIyer, O.V., (Ed), *Purananuru*, VII Edition, Chennai, 1971, p.3.
4. Shanmuga Pillai, M., (Ed), *Kurunthogai*, Tanjour, 1985, p.396.
5. Samy and Sivam, *Indian History upto 1707* (Tamil), Madurai, 1994, p.159.
6. Devanesan, A., *History of Tamil Nadu upto 2000 A.D* (Tamil), Marthandam, 2004, p.67.
7. Raj Kumar, *Woman and Leadership*, New Delhi, 2000, p.30.
8. Pandit, S.K., *Women in Society*, New Delhi, 1998, p.14.